# முகவுரை

மஹாராஷ்ட்ர தேசத்தில், பூர்வகாலத்தில் அவதரித்து, புகவத்பக்தி செய்து முக்தியடைந்த பரமபாகவதர்கள் அநேகராயினும், அவர்களுள் மிகச் சிறந்த விளங்குகிற துக்காராம ஸ்வாமிகள் முதலான இரண்டு மூன்று பக்தர்களுடைய சரித்திரங்கள் மாத்திரம் தமிழில் வசனரூபமாகவும், ஐம்பத்திரண்டு பக்தர்களுடைய சரித்திரங்கள் மாத்திரம் தெலுங்கில் வசனரூபமாகவும் ஏழுதி அச்சிடப்பட்டு வழங்கி வருகின்றது யாவரு மறிந்தவிஷயமே. இப்படியிருக்க, சற்றேறக்குறைய இருபது வருடத்துக்குமுன், தஞ்சைமாகரத்திலிருந்த புலவர் திலகரும, ஸ்ரீமானும, ஸ்ரீபகவத் பக்த சிரோமணியு மாகிய ராஜாராம கோவிந்தராவ் சூரியவமிசியவர்கள், மஹராஷ்ட்ரதேசத்தில் ப்ராக்ருத பாஷையிலிருந்த மேற்படிபக்தருடைய சரித்திரப புத்தகங்களெல்லாவற்றையும வருவித்து ஆராய்ந்து, பெருமை வாய்ந்த புண்டலீகர் முதலாகத் துக்காராம ஸ்வாமிகள் ஈறுக வுள்ள எனபத் திரண்டு பக்தர்களுடைய சரித்திரங்களைச் சொந்தமிழ்விருத்தப பாக்கள் ஐயாயிரத்து சானூற்றி லடகிய பாடி யருளினர். அந்தக கிரந்தம "பக்தலீலாம்ருதம்" எனனும் பெயர் பூண்டு விளங்குகின்றது. இது மேற்குறிக்கபபட்ட தமிழ் தெலுங்கு வசனங்கள்போலாது, மஹராஷ்ட்ரதேச தஇலிருந்து வருவிக்க மூல கிரந்தங்களைத் தழுவிச செய்யபபட்டதாகையாலும, அதிக சரித்திரங்களைக் கொண்டிருத்தலாலும, இதைத் தழுவி ஒரு வசனரூபமான கிரந்தம எழுதி யசகிட்டால் லோகோபகாரமாயிருக்குமெனறு,சனனியிலுள்ள பல பகதிமான்கள் தமது சருததை வெளியிட, அதுவே பறறுகோடாகக் கொண்டு, மேற்படி பகதலீலாமருதாதிகளை யதுசரித்தது இதக 'பக்தலீலாம்ருதவசனம்" எனனும கிரந்தம எழுதி முடிதததென. இது ஸ்ரீயஃபதியாய், அவாபத ஸமஸ்தகாமனுய், அகிலஹேயபரதயகீகனுய், ஸ்ரீவைகுண்ட நிகேதனனுய், நிதய ருக்தாநுபாவனுய், நிரதிசயாநந்த யுகதனுய், நிரங்குஸ ஸ்வதந்த்ரனுயிருக்கிற ஸாவேஸவரனைத தமது பக்திவலியாற் பிணிதத்துத் தமக்குக் கையாளாய்ப பரிமாறுவித்துகொண்ட பரமபாகவத சரித்ராலயமாதலாலும, இலக்கிய விலக்கணஙகள் குடி யிருந்த வூரிலு மிருந்தறியாத சிற்றறிவினை லெழுதப்பட்டதாதலாலும் இதிற் குற்றங்க ளுளவேலும் அவற்றைக் குணமாகக் கொண்டாதரிபபது, முத்தமிழ்த் துறையின் முறைபோகிய வுத்தமரும், சாந்த சீலரும ஆகிய பெரியோர்களுக்குக் கடமையாகும்.

இங்ஙனம்:

காஞ்சீபுரம் ராமஸ்வாமி நாயடு

மகாமகோ பாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090

# இப்புஸ்தகம்

மதராசு க்வர்னமெண்டிலும்,
புதுச்சேரி கவர்னமெண்டிலும்

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

---

இப்புஸ்தகத்தின் விலை ரூபா 3—0—0
வி. பி. போஸ்டில் அனுப்ப ,, 3—6—0

வேண்டுவோர் சென்னை முத்தியாலுப்பேட்டைத் தம்புசெட்டிவீதிக் கிழண்டவாடை 273 - வது கதவிலக்கமுள்ள மதராசு ரிப்பன் அச்சுக்கூடத்திலும்,

மை. சென்னைப் பெத்துநாயகன்பேட்டைக் குஜிலிக்கடுத்த தேவராய முதலிவீதி 234 - வது வீட்டின் மெத்தையில் ஜவுளிக்கடை சை. இரத்தின செட்டி கம்பெனியிலும் வாங்கிக்கொள்ளலாம்.

# ஸ்ரீ பக்தலீலாம்ருத பக்தர்களின்
# சரித்திர அட்டவணை


| இலக்கம் | பக்தர்களின் பெயர். | | | பக்கம். |
|---|---|---|---|---|
| க | புண்டலீகர் சரித்திரம் | ... | ... | உ |
| உ | ஜயதேவர் | ... | ... | கச |
| ங | துளசிதாசர் | ... | ... | உங |
| ச | நாமதேவர் | ... | ... | ஙச |
| ஞ | கபீர்தாசர் | ... | ... | சஞ |
| ட | ஞானதேவர் | ... | ... | ஞட |
| ண | கூர்மதாஸர் | | ... | டண |
| த | ராகாகும்பார் | ... | ... | அத |
| ந | கோராகும்பார் | ... | ... | அந |
| ப | பரிசாபகவதர் | ... | ... | நப |
| பக | ஜகமித்திரர் | ... | ... | பங |
| பஉ | ஜோகாபரமானந்தர் | ... | ... | பஞ |
| பங | நரஹரிபக்தர் | ... | ... | பஸ |
| பச | ஜனாபாயி | ... | ... | ப0க |
| பஞ | மக்தேசுந்திராதர் | ... | ... | ப0ட |
| பண | கோபிசந்த ராஜன் | ... | ... | பஙஉ |
| பள | சாங்கதேவர் | ... | ... | பஉச |
| பஅ | சோகாமேளர் | . . | ... | பஞஉ |
| பங | பத்மநாபவேநியர் | ... | ... | பஙச |
| உ0 | ரோஹிதாஸா | ... | ... | பஙஞ |
| உக | பிம்பாஜி பக்தர் | ... | ... | பஙண |
| உஉ | நரஸிம்மமேதா | ... | .. | பஙங |
| உங | இராமதாசர் | ... | ... | பசள |
| உச | பிரமசாரி | ... | ... | பசக |
| உஞ | சூரதாசர் | ... | | ... | பஞங |
| உண | சேனநாபிகர் | ... | ... | ... | ணஞண |
| உள | சாதவீகராஜன் | | ... | .. | பஞள |
| உஅ | கருமாபாயி | | ... | ... | பஞக |
| உங | ஜயவந்தபக்தர் | ... | ... | ... | பண்ட |
| ங0 | சூரதாசர் | ... | ... | ... | பதங |
| ஙக | நரிகமூராரிபக்தர் | ... | ... | . . | பண்ண |
| ங உ | மீராபாயி | ... | .. | ... | பளக |
| ஙங | தாரிகான்ஹே பாத்ரா | ... | ... | ... | பளங |
| ஙச | தாமாழிபண்டிதர் | ... | ... | ... | பளள |
| ஙஞ | மிருத்யுஞ்சய பக்தர் | ... | ... | ... | பஅங |
| ஙண | பானுதாசர் | ... | ... | ... | பஅண |
| ஙள | ஏகநாதசுவாமிகள் | ... | ... | ... | பபப |
| ஙஅ | மாண்கோஜிபோதலே | ... | ... | ... | உஉஉ |
| ஙங | பஹிரம்பட்டர் | ... | ... | ... | உஉள |
| ச0 | கணேசநாதர் | . . | ... | ... | உசங |
| சக | கேசவசுவாமி | . | ... | ... | உஞஉ |
| சஉ | கோமாயியம்மாள் | ... | ... | ... | உஞச |

| இலக்கம் | பக்தர்களின் பெயர். | பக்கம். |
|---|---|---|
| ௧ | லதிப்ஷாபக்தர் .. | ௨௱௯ |
| ௨ | சந்தோபாபக்தர் ... ... ... | ௨௱௭ |
| ௩ | லீலோபாபக்தர் ... ... ... | ௱௯௯ |
| ௪ | உத்தவசித்தனர் ... ... ... | ௨௯௱ |
| ௫ | நாபாஜிபக்தர் ... | ௨௯௯ |
| ௬ | நாணக்தாசர் ... ... ... | ௨௯௰ |
| ௭ | பிரேமாபாயி ... ... | ௨௭௬ |
| ௮ | னொபாயி .. ... | ௨௭௨ |
| ௯ | சமர்த்தராமதாசசுவாமிகள் ... ... | ௨௭௱ |
| ௰ | மண்டலீகராஜன் ... ... ... | ௬௨ ௦ |
| ௰௧ | பினாபாயி ... ... ... | ௯௰ ௫ |
| ௰௨ | ராமாபாயி . . . ... | ௯௨௫ |
| ௰௩ | ராமராஜர் ... ... .. | ௫ ௯ ௬ |
| ௰௪ | ஒருசாவ்கார் ... ... .. | ௯௨ ௱ |
| ௰௫ | ஹரிஅனந்தலவஷ்ணவர் ... ... | ௯௨ ௯ |
| ௰௬ | ராமசந்திரபட்டர் ... ... | ௫௨ ௰ |
| ௰௭ | சுஹக்ஷாபக்தர் ... ... ... | ௫௨ ௰ |
| ௯௦ | பன்னஹாஜிரசபுத்திரர் . ... ... | ௯௯ ௦ |
| ௯௫ | ஜயமல்லராஜர் . ... ... | ௫ ௫ ௫ |
| ௯௨ | ஸ்ரீதரபண்டிதர் ... ... ... | ௯௯ ௯ |
| ௯௬ | ஹரிபாளதாசர் ... . ... | ௫ ௬ ௮ |
| ௯௮ | ஜம்புதாசர் ... ... ... | ௯ ௯ ௯ |
| ௯௱ | தஞ்சாடர் ... ... ... | ௫ ௬ ௭ |
| ௯௯ | சுகாகந்தர் ... . ... | ௯ ௯ ௰ |
| ௯௭ | மாதவதாசர் .. ... ... | ௬ ௮ ௦ |
| ௯௰ | ஹரிவியாசர் ... ... ... | ௬ ௮ ௫ |
| ௯௰௧ | திரிபுரதாசர் ... ... ... | ௫ ௮ ௮ |
| ௨ ௦ | லாபோவா ... | ௫ ௮ ௯ |
| ௨ ௧ | திரிலோசனதாசர் | ௯ ௮ ௭ |
| ௨ ௨ | சஜ்ஜனகசாருகர் ... ... ... | ௫ ௮ ௯ |
| ௨ ௩ | அங்கதபூபதி ... ... ... | ௯ ௱ ௨ |
| ௨ ௪ | குணவந்திபாயி ... ... | ௫ ௱ ௮ |
| ௨ ௱ | குபராபாயி ... ... ... | ௫ ௱ ௭ |
| ௨ ௯ | கிரிதரலால் ... ... ... | ௫ ௱ ௯ |
| ௨ ௭ | பலக்புகார் ... ... ... | ௯ ௯ ௦ |
| ௨ ௰ | ஷேக்பரீத்தாசர் ... ... ... | ௯ ௯ ௯ |
| ௨ ௯ | சக்குபாயி ... ... ... | ௫ ௯ ௯ |
| ௩ ௦ | குபாகும்பர் ... ... ... | ௫ ௭ ௦ |
| ௩ ௧ | கமலாகரர் ... ... | ௯ ௭ ௨ |
| ௩ ௨ | தக்காராம்சுவாமிகள் ... ... ... | ௯ ௭ ௮ |

மதுரை தமிழ்ச் சங்கம்
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600 090.

ஓம்.

பரப்ரஹ்மணேநமஃ.

# ஸ்ரீபக்தலீலாம்ருதவசநம்.

## கடவுள் வாழ்த்து.

உலகம்பூத்தவொருமலருந்தியான்
நிலகமேற்றதுதற்றிருச்சேர்ந்தெழில்
மலரமாலைவணங்கிகழ்மார்பினன்
சலசீமாமலர்த்தாளுளஞ்சார்த்துவாம். (க)

பத்தர்காதைப்பரப்பினேப்பாடுதற்
கொத்தஞானமுதவியருளுமே
நித்தன்பூவைநிறத்திருமாலடி
கைத்தலங்கொளுதுமன்கழல்களே. (உ)

மாணிபாய்நிலம்வாங்கினவன்ஞெண்டர்
கோணிலாக்கதைகூறக்குழலிருள்
நீணிலாவீனிலாநிறத்தொண்கலே
வாணிதன்னைவணங்கிவழுத்துவாம். (ங)

மருத்தமாமகளாரருள்வாய்த்துசீர்
திருத்தவந்தருள்செய்யுஞ்சமர்த்தரரம்
ஒருத்தருத்தமவாரியரொண்கழல்
கருத்துங்கண்ணுங்கொண்டிக்கதைகூறுவாம். (ச)

## வணக்கம்.

இல்லாதவர்க்குத்தமரில்லைமற்றேதுதானும்
செல்லாதவர்க்கத்திறமபோல்வணக்கஞ்சிறக்கச்
சொல்லாதவர்க்கத்தொகைநூனகைதோற்றுவிக்கும்
கல்லாதவர்க்குக்கரையில்லையென்கற்றுளோர்க்கே. (ஞ)

நன்னுவலர்க்குநகைதோன்றுதற்கேநயந்திங்
கென்னுலியற்றப்படுநூலிலேதுகுற்றம்
சொன்னுலமையாதரிபோர்சொலுத்தாய்மையொன்று
தன்னுலலலோகமனுங்கடைசாரவஞ்சும். (ட)

## வருபொருளுரைத்தல்.

எனப்பண்டரியின்வரலாறுமங்கேய்க்தகண்ணன்
தனக்கன்புறுதாசர்கடம்வரலாறுமாமன்
மனத்தின்புறவாழ்த்துதர்தம்வரலாறுமற்றும்
தனத்தண்டமிழ்ச்செஞ்சொலினுங்கவிசொல்லலுற்றேன். (எ)

தூற்பயன்.

அரிகாமமகிமையைச்சற்றேனுந்தேரா
அஜாமீளனெருவிதஞ்சொல்லியதனாலே
விரிசோதிப்பரமபதமேவலானன்
விமலநாமந்தெரிந்தவிடாமலோதித்
தெரிதீதரன்றனைத்தம்வசஞ்செய்துற்ற
தேசிகர்தஞ்சரித்திரத்தைப்படிப்போர்கேட்போர்
பெரிதாகவவர்களிடத்தன்புசெய்வோர்
பெறும்பலனையினைத்தெனயாம்பேசலாமோ. (அ)

நூல்.

# முதலாவது - புண்டலீகர்சரித்திரம்.

உலகத்தாரெல்லாரும் புகழ்கின்ற பெருமைபெற்ற பதுமபுராணத்தில் உமாதேவியின் அறிவு பிரகாசிக்கும் பொருட்டுத் திரிபுராசகனுகிய சிவபெருமான் சொல்லியருளினதை, கல்வியறிவொழுக்கங்களிற்சிறந்த ஸ்ரீதரர் விஸ்தரித்த இக்கதையைச் சிரத்தையோடு யாவரும் கேட்டு உஜ்ஜீவிக்கவேண்டும். கதையின் வரலாறு யாதெனின், மலைகளெல்லாவற்றுள்ளும் மேன்மை பெற்று விளங்குகின்ற ஸ்ரீ கைலாசபர்வதத்தில் நிலைபெற்று விளங்குகின்ற மாணிக்க மணிமண்டபத்தில் ஸ்ரீசிவபெருமான் திருவோலக்கமாயெழுந்தருளியிருந்த வோர்காலத்தில், உமாதேவியார் தமதுபிராணநாயகராகிய சிவபெருமானே நோக்கி, நிலவுலகத்தில் நிலைபெற்றுப் பிரகாசிக்கிற பண்டரிபுரத்தில், ஸ்ரீலக்ஷ்மீகாதனுகிய திருமால் நித்தியவாசம் செய்வது யாது காரணத்தால், அதை யெனக்கு விவரமாய்ச் சொல்லியருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அந்தக் கைலாசபதியாகிய சிவபெருமான், உமாதேவியாரை நோக்கி, அலங்கரிக்கப்பட்ட பொற்கொடிபோல்பவளே, திருத்துழாய்மாலையையணிந்த திருமாலானவர், ஸ்ரீவைகுண்டத்தில் வீற்றிருந்த திருக்கோலமாயெழுந்தருளி யிருக்குங்காலத்தில், யாவரும் வியந்து துதிசெய்தற்குரிய கட்டழகியாகிய இந்திராணி, அவ்விடத்திற்கு வந்தாள். வந்தவள், ஸ்ரீமந்நாராயணனைக் கண்களிகூரக் கண்டு, சேவித்து மிகுதியாகிய அன்போடு பல வகையான தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டு நின்று, அந்தத்திருமாலின் பேரழகாகிய கடலில் மூழ்கி, அவனதுதிருவடிகளை வணங்கிநின்று ஒருவார்த்தையைச் சொல்லலுற்றாள். அதென்னென்றால், இறைவனுகிய உனது மடியின்மே லிருக்கவேண்டுமென்று அபேக்ஷித்தேன்; ஆதலால் அப்படியே எனக்குத் தயை செய்யவேண்டும்; பெருங் கருணைக்கடலே யென்று தோத்திரம்பண்ணிக்கொண்டு நின்றாள். இவ்வாறு தோத்திரம்பண்ணுகிற இந்திராணியின் பிரார்த்தனையின்படியே திருமாலானவர் அவளிடத்தில் மிகவும் இரக்கமடைந்தவராய்ச் சிறுநகை செய்து, அவ்விந்திராணியை நோக்கி, வாராய், சசி தேவியே, நீ பூலோகத்திற்போய், அறுபகியிரவருஷம் அரியகவும் செய்

தாயானால், நான் ஸ்ரீதுவாரகாபுரியில் க்ருஷ்ணவதாரம் செய்து உன் விருப்பத்தின்படியே உன்னை என் மடியின்மேல் வைத்துக்கொள்வேன் என்றருளிச் செய்தார், அதைக்கேட்ட இந்திராணியானவள், இறைவன் திருவடியை வணங்கி, தேவரீர் ஆஜ்ஞாபித்தபடியே செய்கிறேனென்று சொல்லி விடைபெற்றுக்கொண்டுபோய், நில வுலகத்தில் ஒரு பரிசுத்தமான இடத்தில் சேர்ந்து, மனம் முதலாகிய திரிகரணங்களையும் அசையாமலிருத்தி, அறுபதினாயிர வருஷம் அருந்தவம் செய்யவே, அந்தத் தவத்தின் பலன் அவளைக் கோகுலத்தில் ராதையாய்ப் பிறக்கச்செய்தது. அவ்வாறு அவள் பிறந்து இளமைப் பருவமா யிருக்கும் காலத்தில், ஸ்ரீ கண்ணபிரானோடு கூட விளையாடிக் கொண்டிருக்கையில், ஸ்ரீகண்ணபிரான் அந்தக்கோகுலத்தைப் பிரிந்தபிறகு இந்த ராதையானவள் அவனது பிரிவினால் மனமயங்கி உடலும் மெலிந்தாள். இப்படி அநேக காலங்கழிந்த பிறகு, ஸ்ரீகண்ணபிரானை நினைத்துப் பூர்வகாலத்தில் தனக்கு அவர் கொடுத்திருந்த வரமானது தன்னை விரைவாய் நடத்த நடந்துபோய்த் துவாரகாபுரியை அடைந்து வேற்றுருக்கொண்டு அந்த மேக வண்ணனாகிய ஸ்ரீகண்ணபிரான் எழுந்தருளியிருக்கும் கோயிலிற் பிரவேசித்து, அவனது பாதாரவிந்தத்தை நோக்கி, சந்நிதிக்கெதிரேநின்று வணங்கின மாத்திரத்தில், அந்தமேகவண்ணனாகிய பகவான் அந்தக்ஷணமே அவளைத் தன்கிருபைநிறைந்திருக்கண்களால் குளிரக்கடாக்ஷித்துப் பூர்வரூபம் மாறியிருக்கிற ராதையைவாரி யெடுத்துத் தன் மடியின்மேல் நிலைபெற்றிருக்கும்படி வைத்துக்கொண்டான். அதைக்கண்ட ஸ்ரீருக்மிணி பிராட்டியாரவள், தன் மனம்பொறுக்காதவளாகி, ஸ்ரீகண்ணபிரான்மேல் மிகவும் கோபங்கொண்டு, நிஷ்டுர வார்த்தைகள்சொல்லி, இறைவன் எவ்வளவு தாழ்ந்தாலும் கோபம் செய்தும் கோபம் நீங்காதவளா யிருக்க, இதைக் கண்ட ராதையானவள் ஸ்ரீகண்ணபிரானை விட்டு நீங்கி, லோகதண்டம் என்று சொல்லப்படுகிற நிண்டீரவனத்தில், ஒப்பற்றவனுகிய ஸ்ரீகண்ணபிரானைத் தன் மனத்தி லிருத்தி, எல்லாத் துன்பங்களும் நீங்குதற்கேதுவாகிய அருந்தவம் செய்துகொண்டிருக்கையில், துவாரகா நகரத்திலிருந்த ஸ்ரீகண்ணபிரான் ஸ்ரீருக்மிணி பிராட்டியைவிட்டு நீங்கி, ராதையின் பிரிவைப்பொறுக்காதவனும், அவள் எவ்விடத்தில் இருக்கிறாளோவென்று, மரங்கள் நெருங்கின காடுகளிலெல்லாந் தேடிக் காணுமல், மறுபடியும், கோகுலத்தை யடைந்து, பசுவர்க்கத்தையோட்டுகிற கோலைதண்டமாகவும், சங்கமே கமண்டலமாகவும் கையிற்கொண்டு, திருத்துழாய் மாலையைக் கழுத்திலணிந்து, குண்டலத்தைக் காதில் தரித்து ஒரு துறவியைபோல வெளிப்பட்டு, எவ்விடத்திலும் தேடி, நிண்டீரவனத்தை யடைந்து, அத்தவனத்தில் மலர்களின் அழகையும், இனிய கனி காய்களின் கூட்டம் தழைத்திருப்பதையும், மயில், குயில், கிளி, நாகணவாய்ப் புள் முதலான பறவைக்கூட்டங்களின் அழகையும், தடாகங்களின் அழகையும்; அத்தத் தடாகங்களிலுள்ள தாமரை மலர்களின்மீது அன்னங்கள் அழ

காயமர்ந்திருப்பதையும் நோக்கி, அதிசயித்து, இவ்விடத்தில் கமலாசனையா னவள் தங்கியிருந்தாலும் இருக்கலாம் என்று நினைத்து, என் பிராணநாயகி யே என்று பலகாற் கூவிக்கொண்டே சண்பகம், புன்னை, அசோகு முதலான மரங்கள் நெருங்கின சோலையையடைந்து, அவ்விடத்தில் தவஞ் செய்துகொ ண்டிருந்த ராதையைக்கண்டு, அவளுக்கெதிரில் வந்துநின்று, கமலாலயத்தி லுள்ள பொன்னே, என் அரியவுயிரே, என் மார்பைவிட்டு நீங்கி என்னை வெற்றிடம்பாக்கி, இவ்விடத்தில்வந்து வீற்றிருந்ததற்குக் காரணமென்னை? மநுஷ்ய சஞ்சாரமில்லாததாய், துஷ்ட மிருக சமூகங்களுக்கிடமாயிருக்கிற இத்தக் கானகத்தில் எவ்வாறு பிரவேசித்தாய்? இப்படிப்பட்ட வனத்தில் பிர வேசிப்பதற்கு உன் மனம் எவ்வாறு துணிந்தது? நீ தனியே தைரியங்கொ ண்டுஎவ்வாறுவந்தனை? எனவினவ, அந்த ராதையானவள், ஸ்ரீகண்ணபிரானை நோக்கி, நீயாவன்? கோலைக் கைக்கொண்டு இவ்விடத்தில் யாது செய்ய வந் தாய்? என்று வினவுக்கேட்ட ஸ்ரீகண்ணபிரான், அவளை நோக்கி, சேல்போ ன்ற கண்களையுடையாளே! நான் உன்னைத் தேடிக்கொண்டே இங்கு வந்தே னன்றி வேறெந்த காரணமுமில்லை. நீ யாவன் என்று என்னை வினவினையல் லவா? நான் உனக்குக் கணவன் என்று சொல்லியருளினன். அதைக்கேட்ட ராதையானவள், ஸ்ரீகண்ணபிரானை நோக்கி, என் கணவனுக்கு அநேகம் தேவி யர் உளர்; அவர்களை விட்டு என்னிடத்துக்கு வரமாட்டானென்று துணி ந்து நான் தனியே வந்து அருமையாகிய தவஞ்செய்யாநின்றேன்; இவ்விடத் தில் நீ உன் உருமாறி என் கணவனென்று சொல்லிக்கொண்டு வந்தாய்; உன்னை மதித்துப் பார்க்குங்காலத்தில் வஞ்சகனென்று தோன்றுகின்றது; அதன்றியும் மாதர்தனியேயிருக்கிறவிடத்து அச்சமில்லாமல் நீவந்ததுதகாத காரியமாகும்; ஆதலால் சற்றுயினும் இங்கு நில்லாமல்உன்னிடத்திற்குப்போ வென்று சொல்ல, மேகவண்ணனை ஸ்ரீகண்ணபிரான் மதிமயங்கிக் கண்களை யிமைக்காமல் தன் கையிலிருந்த தடியைத் தன் முழங்கால்களினால் இடுக்கி க்கொண்டு, இடுப்பில் கையைவைத்து, காசிமுனையில் தன் பார்வையைவை த்து, விருப்பத்தோடு இக்காலத்தளவும் ராதையின்முன் நிற்கின்றான். அப் படிநின்ற காலத்தின் அளவு எவ்வளவென்றால், இருபத்தெட்டு துவாபரயுக மாகும் என்று சொல்லக்கேட்ட பார்வதி தேவியானவள், தன் கணவனாகிய சிவபெருமானை நோக்கி, என் பிராணநாதா! அதன்பின் நடந்த செய்தியை அன்போடு எனக்குச்சொல்லியருளவேண்டுமென்று திருவடியை வணங்கிப் பிரார்த்திக்கச் சிவபெருமான் சொல்லத் தொடங்கினார்.

ஓ என் பிராணநாயகி! அசுரனாகிய திண்டிரனென்றுசொல்லப்படுவோன் மிகுந்த அந்தகாரத்தை நீக்கி உலகத்தை ரக்ஷிக்கின்ற சூரியன் தன்தேர்மீது ஏறிச் செல்லவொட்டாமல் அவனைக்கட்டி உலகத்திலுள்ளபிராணிகளெல் லாவற்றையும் பிடித்துக்கொண்டிருந்தான். அப்படி யிருந்தகாலத்தில், அரிய தபோதனர்களும் தேவர்களும்ஒன்றுகூடித் திருமாலின்திருவடியை யடை

ந்து, இத்தச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய, அந்தக்கண்ணபிரான், திருவருள் சுரந்து, அவர்களை நோக்கி, நான் "மல்லிகார்ஜுனன்" என்னும் பேருடையவனாக அவதரித்து உங்களுக்குள்ள துன்பத்தை நீக்குவேன் என்று வரந்தந்தருளினன். இது பூர்வகாலத்தில் நடந்தசெய்தி. இப்படியிருக்கையில், ஸ்ரீசந்த்ரன் என்னும் பெயருள்ள ஓரரசன் என்னை நோக்கிப் பெருந்தவம் செய்தான்; நான் அவனுக்கு ப்ரத்யக்ஷமாகி, உன் விருப்பம் என்னவென்று கேட்டேன்; அவன் திருமார்பில் நிகர்த்த ஓர் புத்திரன்வேண்டுமென்றான். அதற்கு நான், ஸ்ரீ கண்ணபிரானே உனக்குச் சிறந்த புதல்வனாய்ப் பிறப்பான் என்று விருப்பத்தோடு வரம் தந்தேன். அவ்வாறுகவே ஸ்ரீ லக்ஷ்மீபதியானவன் ஸ்ரீ சந்த்ரன் என்னும் அரசனிடத்தில் அவதரித்தான். மேலும் அப் புதல்வன் மல்லிகார்ஜுனன் என்னும் பெயரைப்பெற்றான். அவன் ஒரு காலத்தில் வேட்டையாடும்பொருட்டுத் திண்டீரவனஞ் சேர்ந்தான். அந்த ராஜகுமாரனை அந்த அசுரவேந்தனுடைய திண்டீரன் பார்த்து, நான் இருக்கிறவனத்தில் நீ வேட்டையாடும்பொருட்டு வரலாமோ? நான் உண்ணும் உணவுக்குச் சமானமானவனேயென்று கடுஞ்சொற் கூறிவந்து போர்செய்யத் தொடங்கி, ஆயிர வருஷத்தளவும் தமது சரீரத்திலுள்ள தசைகள் சிந்தும்படி போர்செய்தார்கள். அப்படி போர்செய்த காலத்தில், ஒருவருக்கொருவர் தோற்காமலிருக்க, மல்லிகார்ஜுனன் என்பவன், இவன் பலகாள் யுத்தம்செய்தும் தோற்காமலிருக்கிறான், இவன் உயிர் நீங்குவது எப்படி? நாம்என்செய்வோமென்று ஆலோசித்து, லோகதண்டமென்று சொல்லப்படுகிற கதாயுதத்தைக் கைக்கொண்டு அந்த அசுரனை யடித்து, அவனுடைய உயிரைவாங்கி, அவனுடம்பைப் பூமியில்வீழ்த்தினன். அந்த அசுரன் உயிர்விடும்போது "ஸ்ரீஹரி" யென்று உச்சரிக்க, அதனைக் குற்ற மற்ற நெறியில் ஒழுகாநின்ற மல்லிகார்ஜுனன் தெரிந்து பிரகாசம் பொருந்திய தன் திருமேனியோடு அவனுக்கெதிரே தோன்றி அசுரவேந்தனே, உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்டுக்கொள்ளென்று நியமிக்க, அந்த அசுரன், உன் கையிலுள்ள கதாயுதத்தால் யான் உயிர்விட்டேன்; ஆகையாலே, நீ கைக்கொண்ட கதையின்பேர்கொண்டு இந்த வனமானது லோகதண்டமென்று விளங்கும்படி செய்து, அழகிய நகரொன்றையு முண்டாக்கி, அந்த நகரத்தில் நீயும் நித்தியவாசம் செய்துகொண்டிருக்கவும், உன்னை அவ்விடத்தில் வந்து தரிசித்தோர்களுடைய சகலபாபங்களையும் போக்கி விளங்காநின்ற பாதுதீர்த்தத்தை யடைந்து, இவ்வுலகத்தில் பெருமைபெற்று விளங்குகிறதாய், நானிறந்த இடத்தில் என்போல் ஒருதீர்த்தமுண்டாக்கி, அதனிடத்தில் உன் கதாயுதத்தை நிறுத்தவும்வேண்டும்; அந்தத் தீர்த்தத்தில் முழுகிவந்து இந்தக் கதாயுதத்தை ஆலிங்கநம் செய்வோர்களுடைய சகல பாபங்களும் நிவர்த்தியாகக் கிருபை செய்யவேண்டும் என்று பிரார்த்திக்க, திருமாலானவர் அந்த வரத்தை அன்போடு கொடுத்து, தனது வைகுண்ட லோகத்தை அந்த

என்று நினைத்து மனத்தில் அச்சங்கொண்டனர். அப்படியிருக்க, வந்த மூவரும் அந்த ஆசிரமத்திலுள்ள குப்பைகளைச் சீத்து நீக்கி, தரையை மெழுகி, கோலமிட்டு, அலங்கரித்து, ஒரு க்ஷணகாலத்தில் தாம் அடைந்துவந்த கோர ரூபம் நீங்கி, சௌந்தரிய வதிகளாயும் ஒளியுருக்கொண்டும் ஆசிரமத்தினின்றும் வெளியே வரக்கண்ட புண்டலீகர், பயந்து, ஆச்சரிய மடைந்து, அம்மாதர்களிடத்து வந்து, மலிரூபமாய் ஆசிரமத்தில் தழைந்த நீங்கள் ஒளியுருவாய்ப் புறப்பட்டீர்கள்; இப்படிப்பட்ட இருள் மிகுந்த இராக்காலத்தில் இங்குவந்த நீங்கள் யாவர்? சொல்லுங்கள் என்று கேட்க, அவர்களுள் கங்கையானவள் மறுமொழி சொல்லலுற்றாள். எக்காலத்திலும் தொலைக்கக் கூடாத பாவத்தைச் செய்த பதிதனுகிய தாதாமாவே, நீ, குற்றமற்ற எங்கள் முன்னே வரவுத் தகுமோ? இவ்விடம் விட்டு விலகிப்போடாவென்று கோபித்துக் கொண்டாள். கங்கையானவள் இப்படி கோவித்துக்கொண்டதைப் பார்த்த புண்டலீகர், அத்தக் கங்காதேவியின் பாதத்தைக் கிட்டி, தமது இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு, என் தாயே, என் பாவங்களை நீயே நீக்கியருள வேண்டும் என்று பிரார்த்திக்க, அவரைநோக்கி, கங்கையானவள் சொல்லுவாள்:—அடா பாவீ, என் காலிலிட்டு எழுந்திரு, நீ இப்பிறப்பிலே மிகவும் தீவினைகளையே செய்திருக்கிறாய், ஆனலும் முற்பிறவிகளில் நீ செய்த நல்வினைப் பயனே உன்னை இத்தக் குக்குடமுனிவரிடத்துக்குக் கொண்டு வந்து விட்டது; அவுரைக்கண்ட புண்ணியத்தால் எங்களையும் கண்டாய், ஆகையால் இனி நீ எத்தப்பாவமும் தொடரப் பெறுதவனுய்ப் பரிசுத்தனுகக் கடவை, நான் கங்கை, இவள் காளிந்தி, அவள் சரசுவதி. எங்களை விரும்பிப் பரிசித்தும் எம்மிடத்தில் மூழ்கியும் மூவுலகத்தாரும் பிறவி நீங்கிப் பேரின்ப வாழ்வைப் பெறுகின்றார்கள்; அப்படி வந்து மூழ்குவோருடைய பாவங்களை யெல்லாம் நாங்கள் ஏற்று, அதனுல் மலிரூபங்கொண்டு, அந்த ரூபத்தை, இதப் பரிசுத்தாத் மாவாகிய குக்குட முனிவருக்கு ஜாழியம்செய்து மாற்றி, நல்ல புதுமையான ரூபங்கொண்டு போகிறோம். இப்படியே தினந்தோறும் செய்து வருகிறோம்; எதிர்ப்பட்ட நம்முடைய பாவங்களை ஒரு நிமிஷகாலத்தில் போக்கத்தகுந்த சிறப்பையுடைய இந்த முனிவருடைய பெருமையைச் சொல்ல வல்லவர் யாருளர் என்று சொல்லுதலும், புண்டலீகர் எழுந்து நின்று, கங்கை முதலானவர்களை நோக்கி, உங்களுடைய பாவங்கள் யாவையும் நீக்கச் செய்கிற புண்ணியத்தை இவர் எப்படி செய்தார் என்று வினவ, கங்கையானவள் புண்டலீகரை நோக்கி, இவர், தமது தந்தை தாயரை வழிபடுகிற புண்ணியமே யன்றி வேறில்லை. கோடி யாகங்களைச் செய்த பலனும், பூவலஞ் செய்தும் புண்ணிய நதிகளில் மூழ்கியும் பெறுகின்ற பலனும், ஒப்பற்ற காசி க்ஷேத்ரத்தை இரண்டுலக்ஷம் தரம் வலம் வந்து பெறும் பலனும், தாயை நமஸ்கரித்தலாகிய ஒன்றினுலே சித்திக்கும். தந்தையை ஒருதரம் வணங்கினுல், மேன்மையாகிய ஞான முண்டாகும். இந்தத்

தாய் தந்தையரது வழிபாட்டினுலே ஸ்ரீமந் நாராயணனும் ப்ரத்யக்ஷமாவார் என்று பெரியோர் சொல்லுவர். இந்தக் கருத்தை இந்த முனிவர் தமது மனத்திற்கொண்டு, தந்தை தாயரையன்றி வேறு தெய்வ மில்லையென்று தணிந்து, இரவும் பகலும் அவர்கள் சேவையைச் செய்கிறார். நாள்தோறும் தன் தாய் தந்தையரை நிந்திப்பவன் நீயொழுக்கத்திற் சேரும் புலையனுவான்; கற்ப முடிவிலும் மீள வொண்ணுத கோர நரகத்தில் அழுந்தி வருந்துவான்; எத்தனை ஜந்மங்கள் எடுத்தாலும் பெரிய வியாதிகளால் பீடிக்கப்படுவான். அவனைக் கண்டவர்களும் மிக்க பாவிகளாவார்கள் என்று சொன்னமாத்திரத்தில், புண்டலீகர் பயந்து, ஆ ஐயோ என்றிரங்கி, மிகவும் துன்பமடைந்து, எல்லாப் பாவங்களையும் ஒழித்து ஈடேறத் தகுந்த இந்த நர ஜந்மமாய்த் தோன்றியும் இதை வீணுக்கிப் புண்ணியத்தைக் கைக்கொள்ளாமல் பாவத்தைக் கைக்கொண்டேன்; இதற்கு நான் என்ன வுபாயம் செய்வேன் என்றேங்கி யிருந்தார். மேலும், தாய் தந்தையருடைய பணிவிடை செய்வதையும் நீங்கி, அவர்களை மனம் வருந்தவும் செய்தே னல்லவா? இந்தப் பெரும் பாவத்தை எப்படி நீக்கிக்கொள்வேன் என்று பலவாறுகப் புலம்பிக் கொண்டு, அந்த மாதர்களுடைய பாதங்களில் விழுந்து அழுதார். இப்படி இவர் அழுவதைக் கங்கையானவள் கோக்கி, மனமிரங்கிப் பாவி! இனியாகிலும் மனந் தெளிந்து, உன் தந்தையும் தாயுமே பெருந் தெய்வங்களென்று நம்பி, அவர்களுக்கு ஊழியம் செய்வாயானுல், உன்னைச் சேர்ந்த பழிபாவங்களும் கழியும்; மூவுலகத்திலும் உள்ளவர் வந்து நிறைந்து சூழ்ந்திருப்பார்; விளங்குகின்ற பெருங் கீர்த்தியும் உண்டாகும்; சக்ரபாணியாகிய திருமாலின் இனிய அருளும் உன்னிடத் தண்டாகும் என்று தாய் தந்தையரை வழிபடுதலால் உண்டாகிற பயனை விஸ்தரித்துச் சொல்லிக் காளிந்தி, வாணி என்னும் இருவரோடும் கூடிச் சென்றாள். பின்பு, புண்டலீகர், இத்தக் கங்கை சொன்ன புத்தி மிகவும் நன்றேயாமென்று அன்புடன் போய், குக்குடர் பாதத்தைச் சேவித்து, பிறகு தமது தாய் தந்தையரைத் தேடினார். தேடிக் கண்டு, அவர்களைக் குதிரைமே லேற்றிக்கொண்டு காசிக்குப்போய்க் கயை பிரயாகைமுதலான புண்ணியதீர்த்தங்களில் மூழ்குவித்து, அவர்கள் செய்யுங் கர்மங்களெல்லாவற்றையும் செய்வித்து, தமது மனைவியும் தாமுமாகச் சிறிதும் சோர்வில்லாமல் அவர்களுடைய பணிவிடைகளைச் செய்துகொண்டு தம் ஊர்க்குவந்து, அந்தத் தாய் தந்தையரைத் தமது வீட்டிலிருத்திக்கொண்டு, நாள் தோறும் அவர்களுக்கு எந்தச் சமயத்தில் எந்தப் பொருள் வேண்டுமோ, அந்தச் சமயத்தில் அந்தப் பொருளைத் தருவித்துக்கொடுத்து, பரிசுத்தராகியவராகிய குக்குடர்போலப் பணிவிடை செய்துகொண்டிருந்தார். இப்படி யிருக்க,

பூர்வயுகத்தில், விருத்திரன் என்பவன் தேவராஜனுகிய இந்திரனைப் பகைத்து அவனைக்கொல்ல நினைத்து, பாதாளலோகத்தை யடைந்து, ஒரிட

தத்திலிருந்துகொண்டு அருமையாகிய தவத்தைச் செய்தான்; அந்தச் செய்தி யை இந்திரன் கேட்டறிந்து அவ்விருத்திரன் இருக்குமிடத்திற்போய் அவன் தலையைத் தன் வச்சிராயுதத்தால் சேதித்து வீழ்த்தினான். அப்பொழுது அந்த விருத்திரன் இந்திரனை நோக்கி, நான் தவஞ் செய்யுங் காலத்தில் என் தலை யை அறுத்தபாவத்தால், நீ செங்கல்லாய்ப் பூமியில் விழக்கடவை என்றான். அவன் தந்த சாபத்தினால் இந்திரன் செங்கல்லாகி விழுமுன்னே, லக்ஷ்மீநாத னாகிய திருமால் திருவுள்ளம் மகிழும்படி பற்பல தோத்திரம் செய்ய, ஸ்ரீமந் நாராயணன் அவனெதிரே யெழுந்தருளி, வாராய் தேவராஜனே, நான் புண் டலீகாசிரமத்தில் வந்து, செங்கல்லுருவாய்க் கிடக்கிற உன்மேல் அடிவை த்து, உன்னைப் பூர்வ ரூபமாகச் செய்து, என் பாதத்தின்மீதே கிடக்கும்படி செய்கிறேன், நீ அஞ்சவேண்டாம் என்றனன். அப்படியே அன்று முதல் இந்திரன் செங்கல்லுருவாய்த் திண்டீரவனத்தில் கிடக்கிறான். கிடத்தலால் அந்த வனம் திண்டீர நகராக, அதில் புண்டலீகர்க்கும் ஒரு திருமாளிகை அமைந்தது. அதில் புண்டலீகர் இனிதாக வாழுங் காலத்தில், அவரிடத்தி ற்கு எழுந்தருளவேண்டுமென்று எண்ணி, தன் தேவியைத் திருத்துதற் பொருட்டு அவளுக்கெதிரே நிற்கிற ஸ்ரீமந் நாராயணன் எழுந்தருளும் வித த்தைச் சொல்லுவோம். திருவடியில் நூபுரம் தழைத்தொலிக்கவும், சிற்றி டையில் கிண்கிணிகள் கலகலவென்று சத்திக்கவும், இரண்டு தோள்களிலும் கங்கணங்கள் விளங்கவும், இரண்டு கைகளிலும சங்க சக்ரங்கள் மிகவும் ஜொலிக்கவும், திருமார்பில் கவரத்நஹாரம் பிரகாசிக்கவும், திருச்செவியில் குண்டலங்கள் மின்னவும், நெற்றியில் நெறிகுழல் அசைந்து தோன்றவும், ரத்நச் சுட்டியும் பட்டமும் விளங்கவும், சங்கம், இடபம், யானைக் கன்று, இம்மூன்றின் நடைபோல நடந்து, நீலரத்நகிரி வருவதுபோல வழியில் பூமி யெல்லாம் ஸ்ரீ பாதத்திலுள்ள சங்க சக்ர ரேகைகள் அழுந்திக் தோன்றவும் எழுந்தருளி, புண்டலீகர், தமது தந்தை தாயரை வழிபடுஞ் சமயத்தில், அவர் பார்க்கும்படி அவர்க்குப் பின்புறத்தே வந்து நின்றார். அப்படி வந்து நின்றபோது ஸ்ரீ கண்ணபிரானது பசுமையாகிய ஒளியை, தந்தையின் பாத ங்களைத் தீண்டி நமஸ்கரித்துக் கொண்டிருந்த புண்டலீகர் கண்டு, இந்த ஒளியாதென்று முகத்தைத் திருப்பி, ஸ்ரீ கண்ணபிரான் அருகில் நிற்பதைப் பார்த்து, கங்காதேவி நமக்குக் கொடுத்த வரம் இன்றுதானே வாய்த்த தென்று மிகவும் மனமகிழ்ந்து, தலைவணங்கி, தமக்கு அருகில் கிடக்கிற செங்கல்லை எடுத்தெறிந்து, இதன்மீது சற்று நேரம் நிற்பாயானால், என் வேலையை முடித்துவருகிறேன் என்று சொல்லிவிட்டுத் தமது தாய் தந்தை பரது பணிவிடையைச் செய்துகொண்டிருக்க, ஸ்ரீ கண்ணபிரானுமவர், இந் திரனுகிய செங்கல்லின்மீது ஏறி, இரண்டுகைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு, புண்டலீகர் தாய் தந்தையருடைய சேவை செய்துகொண்டிருப் பதை நோக்கிக்கொண்டே நின்றருளினார், புண்டலீகர், தமது தாய் தந்

தையர் சேவைசெய்து முடித்தபிறகு, பிதாம்பரம் மிகவும் ஒளியைவீசும்படி, பசுக்களை மேய்த்துக் கோலைத் தோளினிடையில் வைத்துக்கொண்டு நிற்பவனுகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்திற்கு வந்து, செங்கல்லின்மேல் சமசரணமாய் நிற்கிற அழகைக் கண்டு சாஷ்டாங்கமாகப் பணிந்து பேராநந்தக் கடலில் மூழ்கினர். சற்றுநேரங் கழிந்த பிறகு எழுந்துநின்று பலவகையாய்த் தோத்திரம் செய்துகொண்டு நிற்கிறதை, கருணைக் கடலாகிய பகவான் நோக்கி, புண்டலீகனே, உன்னைப்போன்ற பத்திமான்கள் இவ்வுலகத்திற் கண்டதில்லை; நீ வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்ளக் கடவா யென்று நியமிக்க, புண்டலீகர், பகவானே நோக்கி, தாமரைக் கண்ணனுகிய சுவாமீ! மும்மூர்த்தி யுருவங்களும் நீயேயாகி விளங்குவதனுலும, மூடர்களைக் கடைத்தேற்றுகிற லீலைலபய குணத்தாலும், தேவரீர் விட்டலன் என்னுந் திருநாமம பூண்டு, எக்காலத்திலும் இவ்வண்ணமாகவே எழுந்தருளியிருந்து, உன்னை வந்தடைந்து வணங்குவோர் யாவரும் சர்வ பாப விமோசநராகச் செய்து, என் பெயர்ச்சார்பினுல் இந்த க்ஷேத்ரம் பண்டரிபுரமென்னும் பெயரையுடையதாகச் செய்து, இத்தத் தலச்சார்பினுல் தேவரீரும் பாண்டுரங்கன் என்னுந் திருநாமத்தையேற்று நித்யவாசம பண்ணவேண்டும். மேலும் இந்தத் தலத்தில், எல்லாத் தீர்த்தங்களிலும் சிறந்த தீர்த்தமொன்றை உண்டாக்கி, அதில் மூழ்கினோர் யாவரும் பரிசுத்த ராகும்படி அமைத் தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, பகவானும, புண்டலீகரை நோக்கி, உத்தமனுகிய புண்டலீகா, நீ விரும்பினபடியே எல்லாம் அமையும், த்ரிலோகங்களிலுள்ள தீர்த்தங்கள் எல்லாம இன்று கடப்பகலிலே வரும் என்றருளிச் செய்தார். அப்படியே எல்லாத் தீர்த்தங்களும் அன்று மத்தியாநத்திலே வந்து அந்தத் தலத்தில் புஷ்கரிணியுண்டாக்கப்பட்ட தீர்த்தத்திற் சேர்ந்தன. மேலும் ஹே பார்வதீ, நான் பூர்வகாலத்தில் திரிபுரதகனஞ் செய்ததனுல் மிகவும் வருந்தின வருத்தம் நீங்கும்பொருட்டுப் பீமாசங்கரித்தலத்தில் தவஞ் செய்துகொண்டிருந்தபோது, என் உடம்பில் வேர்வை யுண்டாகிப் பெருகி, பீமா என்னும் பேர் பூண்டு விளங்கிக்கொண்டிருந்தது. அது என் ஞான சக்தியைக்கொண்டு, பேரொலியுடையதாய், புண்டலீகர் மனைவரையும் வந்து அலையறிவதாயிருந்ததை அத்தலத்தில் வாசம்பண்ணிக்கொண்டிருந்த பீமசேநபைரவன் இந்தப் பேரொலியைக்கேட்டு மனம் பொறுக்காதவனுய் ஸ்ரீகண்ணபிரான் இங்கு எழுந்தருளி யிருக்கக் கண்டும், இந்த நதியானது சற்றும் அஞ்சாமல் இத்தனை வேகங்கொண்டு வருதல் தகுதியாகுமோவென்று, தன் கையிலுள்ள கதாயுதத்தை யெறிந்து, ஓ நதியே! இந்தத் தலத்தில் உன் வேகத்தை யடக்கிக்கொண்டு வரவேண்டும் என்று சொல்ல, அந்த நதியானது அப்படியே தன் வேகத்தையடக்கி ஊமைபோல இரைச்ச லில்லாமல் தன்னைக் கண்டவர்களுடைய பாவங்களையெல்லாம நீக்கிக் கங்கா நதிபோலவந்து, ஸ்ரீ கண்ணபிரானைக் கிட்டி இடதுபக்கமாகச் சூழ்ந்து பிறைபோலத்

தென்திசையிற் பொருந்திக் கீழ்த்திசையை யடைந்து செல்லுதலால், சந்திரபாகையென்னும் பெயரை யுடையதாகி, முற்காலத்தில் சந்திரனுவன், தனக்கு வியாழபகவானுல் கொடுக்கப்பட்ட சாபம் நீங்கும்பொருட்டு மூழ்கிச் சாபவிமோசநத்தையடைந்ததாகிய பாதுதீர்த்தத்துக்கெதிரில், புண்டலீகர் இட்ட செங்கல்லின்மேல் நின்றருளின ஸ்ரீ கண்ணபிரானது திருவடித் தாமரையைத் தரிசித்து வணங்கிப் பரிசுத்த மடையலாமென்று மனத்திற் கொண்டு, இப்போதும் பிரவாகிக்கின்றது. அந்த நதியில் எவர்களாகிலும் ஸ்நாநம் செய்து, பகவானுகிய விட்டலனைத் தரிசித்த மாத்திரத்தில், அவர்கள் பூர்வ ஜந்மங்களில் செய்த அநேக பாவங்களினின்று நீங்கி, அந்த ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு அடிமையாகப் பெறுவார்கள். இந்தச் செய்தி நிற்க;

கமலாசநத்தை யுடையவளாகிய திருமகள், தனக் கெதிரே நின்றிருந்த கண்ணபிரான், உன் கண்ணுக் கெதிரே, புண்டரீகர்முன் சேர்வேன் என்று சொல்லிப் பிரிய, அதற் குடம்படாதவளாய்த் தன்னியற்கையாகிய அவயவ சௌந்தரியத்தோடும், சர்வாபரண தாரணத்தாலுண்டாகிய செயற்கை யழகோடும் கூடி, ஒரு களிற்றியானையைப் பிடியானை தொடர்ந்து வருவதுபோல, விட்டலனைப் பின்தொடர்ந்து வந்து, கற்பகமரத்தின்மீது படர்ந்த ஒப்பற்ற காமர்வல்லிக் கொடிபோல அவனைப்பற்றி, முல்லையரும்புபோன்ற நகை யரும்பும்படி அவனது இடது பக்கத்தில் நின்றனள். அப்போது, கற்பதவியடைந்தயர்ந்த இந்திரனுவன், தெய்வத் தச்சனை நோக்கி, குவலயாபீடம் என்னும் யானையின்கொம்பை முறித்தவனுகிய ஸ்ரீகண்ணபிரானுடைய அருளினுல், ஒளி நிறைந்த சக்ரத்தின்மேல் பண்டரியின் அழகையும், அதனிடையில் பிந்துதீர்த்தம் என்று பெயருள்ள தீர்த்தத்தின் நடுவில் மூழ்குகின்றதாகிய திரிகுட ரூபமாய்ச் சொல்லப்பட்டதில், அர்த்தமாத்திராவென்று சொல்லுதற்குரிய, வலிமைபெற்ற ஒப்பிலாத பீடத்தின்மேலிட்ட செங்கல்லின் மீது விளங்குகிற விட்டலனை மகிழ்விக்கத் தகுந்த ஒருவிமாநத்தையும், விளங்கும்படி அமைத்து, பொற்கோபுரம் மதில் முதலாகிய பிறவற்றையும் அழகுபெறச் செய்து, ஒரு பட்டணம் உண்டாக்கக்கடவாயென்று கட்டளையிட, அந்தப் பிரகாரமாகவே அந்தத் தெய்வத் தச்சன் மதில், கோபுரம், விமாநம் முதலிய யாவும் பொன்னினும் நவமணிகளாலும் அழகுபெறச் செய்து, இப்படி எங்கும் இல்லையென்னும்படி ஒருபட்டணமும் நியமித்து ஸ்ரீகண்ணபிரான் திருவுளமுவக்குமாறு செய்தான். அந்தப் பட்டணம் தேவலோகத்தினுஞ் சிறந்து விளங்கிற்று. அந்தப் பண்டரி நகரமானது க்ருஷ்ணு நதிக்கும் கோதவரி நதிக்கும் மத்தியில் இருக்கின்றது. அதின் நடுவில், ஜயவிஜயர்கள் காக்கும்படி கோயில் விளங்கிக்கொண்டிருக்கும். அதில் முநிவர், தேவர் முதலியோர் பகவானுடைய சேவைக்கு முற்பட்டுவந்து நன்றுகச் சேவிக்கத் தகுந்த சமயம் பார்த்துக்கொண்டிருப்பார்கள். தும்புரு நாரதர்கள் வீணுகாநம் செய்துகொ

ண்டிருப்பார்கள். யக்ஷகாந்தருவர்கள் பலவகையாகிய வாத்தியங்களோமுழங்கிக்கொண்டிருப்பார்கள். அரம்பை, மேநகை, திலோத்தமை முதலிய தெய்வப் பெண்கள் வகை வகையாய் நாட்டியம் செய்துகொண்டிருப்பார்கள். பரம பாகவதர்கள் நெடிதாகிய கருட ஸ்தம்பத்தினருகிலிருந்து அன்போடு ஹரிபஜனே செய்வார்கள் என்று கைலாசபதியாகிய சிவபெருமான் உமாதேவியாருக்குச் சொல்லியருளினர். இதனைப் பரிசுத்தாத்மாக்கள் அறிவதன்றி, மற்றையோருடைய மநோவாக்குகளால் அறியப்படாது. திருமகளே இத்தப்பண்டரிபுரத்தில் ரகுமாயியாய் வந்து, ஸ்ரீகண்ணபிரானோடு அமர்ந்து களித்துக்கொண்டிருக்கிறாள்.

கேசியென்னும் அசுரனைக் கொன்றவனும், பதின்மராழ்வார்களும், மங்களா சாசநம் செய்யப்பெற்றவனும், தேவர்களெல்லாரும் நாள்தோறும் வந்து சேவிக்கும்படியான பெருமையுள்ளவனும், பாண்டுரங்கன் என்னுந் திருநாமத்தை யுடையவனும், பழமையாகிய வேதங்களாலும் அறியவொண்ணாதவனும், முற்காலத்தில் வேய்ங்குழலை ஊதினவனும், செங்கல்லின்மேல் நில்லென்றவுடனே நின்றவனும் ஆகிய ஸ்ரீகண்ணபிரானுக்கு நித்யவாஸஸ்தாநமாயிருக்கிற இத்தப் பண்டரிபுரத்துக்கு நிகராகிய பட்டணம் வேறொன்றுமில்லை. இந்த நகரத்தின் ஒரு பக்கத்தில் சந்திரபாகையென்னும் நதி, தன்னிடத்தில் வந்து சூழ்குவோருடைய பாவங்களையெல்லாம் நிவர்த்திசெய்துகொண்டு விளங்காநிற்கும். இத்தலத்தில் திருமகளாகிய ரகுமாயிக்கும் பொன்மயமான ஒரு கோயி லுண்டு. இதிலுள்ள பாண்டுரங்கப் பெருமானுடைய கோயிலின் சிறப்பை வருணித்துச் சொல்வதற்கு ஆதிசேஷனாலும் முடியாது. இதில் எழுந்தருளியிருக்கிற விட்டலப்பெருமான், தம்மைச் சேவிக்க வருவோரெல்லாரும் தம்மைத் தழுவிக்கொண்டு, சகல பாவங்களையும் நிவர்த்தித்து மோக்ஷலாபத்தை யடையும்படி கோயிலின் முகப்பில் எழுந்தருளியிருப்பார். இந்த நகரத்திலுள்ளோ ரெல்லாரும், தத்தம் வர்ணாசிரம தருமங்களில் வழுவாமல், பகவத்சேவையில் நிரந்தரமான விருப்பமுள்ளவர்களாய், விட்டலனுடைய திவ்ய விக்ரஹத்தின் திவ்ய ஸௌந்தர்யத்தைப் பாதாதிகேசமாக அநுபவித்துக்கொண்டிருப்பார்கள். இதில் வேத ப்ரதிபாத்யனை பகவான் திருமகள்கண்டு களிக்கும்படி இடையிற் சேர்த்த இரண்டு திருக்கரங்களோடு, ஒரு மரகத மலைபோல, உலகத்துயிர்களெல்லாம் உஜ்ஜீவிக்கும்பொருட்டு எழுந்தருளியிருக்கிறார். இந்த நகரத்தின் பெருமையும், இதில் எழுந்தருளியிருக்கிற விட்டலப் பெருமானுடைய ப்ரபாவத்தையும் இன்னும் விஸ்தரித்துச் சொல்ல என்னால் முடியாதென்று ஸ்ரீபார்வதிதேவியாருக்குக் கைலாசபதியாகிய சிவபெருமான் சொல்லி, மேலே ஜயதேவர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினார்.

புண்டலீகர் சரித்திரம் முற்றிற்று.

# உ-வது ஜயதேவர் சரித்திரம்.

ஸ்ரீவேதநாயகராகிய பிரமதேவரானவர், ஸ்ரீவேதவியாசமுநிவரை நோக்கி, ஓ முநிசிரேஷ்டரே, நீர் பூலோகத்தில் பிறந்து அங்குள்ளாரெல்லார்க்கும் ஸ்ரீ ஹரி பக்தி யுண்டாகும்படி போதிக்க வேண்டுமென்று நியமிக்க, வியாசமுநிவரும் அவ்வாறே செய்கிறேனென்று அவரை வணங்கி விடை பெற்றுவந்து ஆகாயத்தையளாவிய சோலைசூழ்ந்த ஜகந்நாதக்ஷேத்திரத்திற்குப் பக்கத்திலுள்ள, திந்துபில்வபுர் என்னும் நகரத்தில் குற்றமற்ற வேதியர் குலத்தில் அவதரித்து ஜயதேவர் என்னும் பெயர் சூடப்பெற்று விளங்கினர். இவர்க்குத் தாய்தந்தையர், அன்போடு உபநயந முடித்து வைத்தலும் வேதசாஸ்திர புராணேதிஹாஸங்களைத் தாமாகவே கற்று, அந்தக் கல்விக்குப் பயனாகிய ஹரிபக்தியைப் பெற்று, உடுக்கூட்டத்தில் சந்திரனும், படைத்தொழிலில் பீஷ்மாசாரியும், முனிவர்களில் சிவனும், ஆகாயத்தில் சூரியனும் சிறந்து விளங்குதல்போல, வேதியர் குலத்தில் சிறந்து விளங்கினர். இப்படியிருக்குங்காலத்தில், பதுமபுராணத்திலும் பாரதமாகிய இதிஹாசத்திலும் சொல்லப்பட்ட மேன்மைபொருந்திய, ராதாவிலாசம் என்கிற பழையகதையைக் கோவிந்தகீதம் என்னும் பெயர் பூண்டு விளங்கும்படி செய்து போதிக்க, எல்லாரும் இது மிகவும் புதுமையாகிய நூலென்று கற்றுப் புகழ்ந்து கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். இப்படியிருக்கையில், ஸ்ரீ க்ருஷ்ணபகவான் நித்யவாசம்பண்ணிக்கொண்டிருந்த ஸ்ரீஜகந்நாதம் என்னும் நகரத்தை ஆண்டு, நான்கு வேதங்களையும ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த ஸாத்விகராஜன் என்பவன், ஒரு அலங்கார சாஸ்திரத்தைச் செய்து, அந்த நாட்டிலுள்ளவர் யாவர்க்கும் அதைப்போதிக்க வேண்டுமென்றுஎண்ணி, அறிஞரைஅழைத்து, நான் செய்த நூலும், ஜயதேவர் பாடின இனிதாகிய கீதமும் சமானமாகும் ஆதலால், என்னால் செய்யப்பட்ட நூலை நீங்கள்எல்லோரும் படிப்பீர்களாகவென்றுசொல்ல, அந்தச்சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் அறிஞர்கள், யானென்கிறஅகங்காரத்தோடு நீர்செய்தநூல் பரமசாத்விகராகிய ஜயதேவர் நூலோடிணையாகுமென்று சொல்லுதல் அன்றியும் என்நூலை எல்லாரும் ஒதக்கடவீர் என்று நீர் சொல்லுவதை ஆலோசிக்கும்போது, எக்காலத்திலும் எப்பொருளையாயினும வலாத்காரமாய்க் கொடுத்தால் கொடுக்கப்படுகிற அந்தப் பொருளின் பெருமை குறையுமென்று பெரியோர் சொல்லுவார். உன் கவியும், உன் சொல்லும் உனக்கு எதிரே எழுந்தருளியிருக்கிற ஸ்ரீகண்ணபிரானுக்கு ஏற்குமா என்று சொன்ன மாத்திரத்தில், அரசன் இரண்டு நூல்களில் திருமால் ஏற்றுக் கொள்வது எதுவோ, அதுவே சிறந்த நூல் என்று சொல்லி, அந்த அறிஞர் கூட்டத்துடனே அரசனுனவன் ஸ்ரீ கண்ணபிரானது ஆலயத்தில் பிரவேசித்து, பகவான் இந்த இரண்டுநூல்களுள் முக்கிய

மான நூலே யேற்றுக்கொண்டு, மற்றதைப் பக்கத்தில் ஒதுக்கிவிடக் கடவ ரென்று சொல்லிக் கோயிலே மூடினர்கள். மறுநாள் காலையில் கோயிலுக் குரிய அர்ச்சகர் முதலியோர் வந்து கோயிலைத் திறந்து பார்த்து, ஜயதேவர் செய்தகீதம் உள்ளிலும் அரசன்செய்த அணிநூல் புறத்திலுமிருக்கக் கண்டு அரசனிடத்துக்குச் சென்று, அத்தப் பரம பாகவதராகிய ஜயதேவர் நூலு க்கு உமது நூல் இணையாகுமா? அவர் நூலுக்கு எதிரே உமது நூல் சூரியனு க்கெதிரே மின்மினி போன்றதே யன்றி வேறன்று. ஆகையாலேயே உமது நூலைக் கைக்கொள்ளாமல் பகவானுனவர் புறத்தே ஒதுக்கிவிட்டனர்என்று சொன்னர்கள். அதைக் கேட்ட அரசனுனவன் பகவானுடைய சக்கிரியை யடைந்து, ஓ கருணைநிதியே! புலியும், பசுவும் ஒருதுறையில் நீருண்ணும்படி செய்யத் தகுந்த சர்வ சக்தனுகிய நீ, இப்போது ஜயதேவர்நூலே யேற்றுக் கொண்டு அடியேனது நூலை இகழ்ந்தது உன்னுடைய பேரருளுக்குத் தகுதி யாகுமோ! இப்படி நீயே செய்தால் யான் என்செய்வேன்! இவ்வாறு வருந்து தலைப்பார்க்கிலும் உயிரைவிட்டு எனது அகங்காரத்தை விடுவதே கண்ணுமா மென்று துணிந்து சொன்னமாத்திரத்தில், பிரமதேவன் தலையிலும் எழுதத் தகுந்த திருக்கையையுடைய ஸ்ரீமந்நாராயணன், அரசனது நூலினில், ஜய தேவர் கீதங்களின் தாத்பர்யமும் அமைந்திருக்க எழுதினர்; இதைக் கண்ட அரசன் ஸ்ரீஜகந்நாதனைப் புகழ்ந்து வாழ்ந்திருந்தான். இப்படி யிருக்குங் காலத்தில், அந்த ஜகந்நாத க்ஷேத்ரத்தில் அக்னி கார்யங்களைச் செய்கிற ஒரு வேதியனிடத்தில் ஒரு கன்னிகை அவதரித்தாள். அவளுடைய சவு ந்தரியத்தைக் கண்டு அவளுக்குப் பத்மாவதியென்று பெயரிட்டு அதிக பிரீதியோடு வளர்க்க, அவளுக்குத் தகுதியாகிய பருவம் கோர்த்தமையால் முன்னிலும அதிக சௌந்தரியவதியாய்ப் பிரகாசிப்பதை நோக்கி, அவளை ஸ்ரீஜகந்நாதப் பெருமானுக்கே மணமுடித்துக்கொடுக்க வேண்டுமென்று நிச்சயித்திருக்குங் காலத்தில், சுற்றத்தா ரெல்லாரும் அப்பெண்ணின் அழகு, குணம், ஒழுக்கம் முதலியவற்றையறிந்து, அவளைத் தமக்கு மண முடித்துக் கொடுக்கவேண்டுமென்று வினவ, அவளது தகப்பனுகிய அந்த வேதியன், என் பெண்ணை ஸ்ரீ ஜகந்நாதப் பெருமானுக்கன்றி அயலாருக்கு மணமுடித்துக் கொடுக்கமாட்டே னென்று மறுத்துச் சொல்லி, பெண்ணை மிகுந்த அன்போடு பாதுகாத்து வருகாளில், ஸ்ரீஜகந்நாதப் பெருமான் அவ் வேதியனுடைய கனவில்வந்து உன் பெண்ணுக்குத் தகுந்த கணவன் ஜயதே வனே யாவன்; ஆதலால் உன் அருமைத் திருமகளை அவனுக்கே மணமுடித் துக்கொடுத்தால் கன்மையாமென்று அருளிச்செய்ய, வேதியன் விழித்தெழு ந்து மிகுமகிழ்ச்சியோடு ஜயதேவரை நாடிப்போய் அழைத்துவந்து அவருக் கே மணமுடித்துக் கொடுத்தான். ஸ்ரீஜகந்நாதப்பெருமானது திருவுருவாகிய ஜயதேவர், பத்மாவதியுடனே கூடி அந்த ஜகந்நாதக்ஷேத்திரத்திலே ஹரிநாம சங்கீர்த்தனம் செய்துகொண்டு சுகமாகவாழ்ந்திருந்தார். அக்காலத்தில், சூரிய

னையே விரும்பும் தாமரைமலர்போலஇறைவனது திருவடியையே விரும்பும் கருத்தைபுடையகசுகாரவிக்தன் என்னும்வணிகனெருவன்வந்து,ஜயதேவரை பிக்க அன்போடு வழிபடக்கண்டு, ஜயதேவர் இவன் பரிசுத்தமான மனத்தை யுடையவன்என்று அறிந்து, அவனுக்கு நன்மையாகியஹிதோபதேசங்களைச் செய்து,தவஞ்செய்வோரைப்பார்க்கிலும்மேலானசிறப்படைந்திருந்தார்.குரு சேவையில் திரிகாணங்களையும்உபயோகப்படுத்தி காளுக்குநாள்அன்புமிகுதி யாகச் செய்கின்ற அவ்வணிகனுனவன், ஒருநாள் ஜயதேவரை வணங்கி, எனது வீட்டிற்குத் தேவரீர் எழுந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, ஜய தேவரும் அப்படியே வருகிறேன் என்று சொல்ல, இவரை வணிகனுனவன் தேர்மேலேற்றிக்கொண்டு போய்த் தன்னூரை யடைந்து, தன் வீட்டில் பிர வேசித்து, இவரைப் பரிசுத்தமான ஆசனத்தின்மேலிருத்தி,ஷோடசோபசார ங்களையுஞ் செய்து ஆதரித்து, அவரது அருளினுல் சமதமாதி ஆத்மகுணங்க ளைப்பெற்று, காள்தோறும் ஹரிநாமசங்கீர்த்தனஞ் செய்துகொண்டு இருக்க, ஒருமாதமளவும் ஜயதேவரானவர் அவ்வூரில் அவ்வணிகன் பணிவிடையை யேற்று, அவ்விடத்தில் வாசஞ்செய்து, அவனேநோக்கி, அன்புருவமாகிய சுக நாரவிக்தனே, யாம் இனி இங்கிருக்கவொண்ணுது, ஸ்ரீஜகந்நாதப்பெருமானே ச்சேவிக்கவேண்டுமென்னும் ஆசை அதிகரித்திருக்கிறது. ஆதலால் நீ இவ்வி டத்திலேயே யிருக்கக்கடவாய் என்று பிரயாணசித்தமாக, அவ்வணிகன் இவ ரை நோக்கி, ஜ்ஞாந ப்ரதாநம்பண்ணுகிற சிறந்த சுற்பகத்தருவே, தேவரீரு டையதிருவடிகளை மறவாமையாகிய பெருமையை அடியேனுக்குப் பிரசாதி க்கவேண்டுமென்று பிரார்த்திக்க, ஜயதேவரானவர் தமது தாமரைமலர்போ ன்ற திருக்கரத்தை அவன் தலைமேல் வைத்தருள, அவ்வணிகனுனவன் இவர் விரக்தராதலால் நாம் சமர்ப்பிக்கும் தக்ஷிணையை யேற்றுக்கொள்ளமாட்டா ரென்று அறிந்து, அவர் காணுதபடி ஆடையாபரணுதிகளை விசேஷமாக ஒரு வணிடத்திற் கொடுத்துத் தேரிலேற்றி, இவைகளைக்கொண்டுபோய் எனது குருவின் மனைவியினிடத்திற்கொடுத்து, எனது நமஸ்காரமும் சொல்லுவா யாகவென்று சொல்லி, அத்திசையைநோக்கிப் பணிந்துவிடுக்க,அவனும் அப் படியே இவரைத் தொடர்ந்துவர, இருவருமாகவரும்போது அந்த வணிகனு லிவருக்கு வழித்துணையா யனுப்பப்பட்டவன், இவரை வணங்கி, ஸ்வாமீ! அடியேன் வீட்டில் சில முக்கியமான காரியங்கள் நேர்ந்திருக்கின்றன; ஆதலால் அடியேனுக்கு விடை கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தி க்க, ஜயதேவரானவர், அவனது பிரார்த்தனைக்கிரங்கி அப்படியே போய்வா வென்று அனுப்பி, தாம் தனியாகச் சென்றனர். அப்போது கங்காதீரியைத் தரிசிக்கச் சென்ற கொக்குப்போலக் கொடிய துஷ்டராகிய இருவர், விசுவாஸ முடையவர்கள்போலத் தேரின் இருபுறத்திலும் தொடர்ந்து வருவதை ஜய தேவரானவர் கண்டு சந்தேகித்து இவர்கள் வருவதை நோக்குமிடத்து நம க்கு ஏதாகிலும் தீங்குசெய்வார்களென்று தோன்றுகிறது. ஆகையால்

இவர்களுக்கு இத்தத் திரவியத்தைக் கொடுத்துவிடுவதே நலமென்று நிச்சயித்து, அத்தச் சோரர்களைப் பார்த்து, தேரிலுள்ள பொருள்களை யெல்லாம் நீங்கள் கைக்கொள்ளலாமென்றுசொல்லி, தேரைவிட்டிறங்கி, பூமியிலே தனியாய் நடத்து போவதைப்பார்த்து, அந்த த்திருடர்கள் சற்றும் இரக்கமில்லாமல், இவரைப் போகவிட்டால் இவர்போய் அவ்வணிகனிடத்துச்சொல்லுவர், அதனால் பெரிய கலகமுண்டாகுமென்று ஆலோசித்து, இவரைத்தொடர்ந்து வந்து கொலைசெய்ய மனத்துணியாமல் கால் கைகளை மாத்திரம் சேதித்து, அங்கு படர்த்திருந்த ஓர் புதரில் கிடத்திவிட்டுத் தேரைக்கொண்டு போனார்கள். பிறகு, ஜயதேவரானவர் பூமி நடுங்கும்படி வீழ்ந்து இடைவிடாமல் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்துகொண்டு சரீரத்தை வெறுத்து ஸ்ரீ கண்ண பிரானது திருவுருவத்தைத் தமது மனதிற்கொண்டு ஞரகாசுரதாரபவத்தில் அசைவற இருந்தனர். அந்தத் தினத்தில், கிரௌஞ்சனென்னுமரசன் அந்த வனத்தில் வேட்டையாடவந்து, சூரியன் அஸ்தமித்து இருள் மூடிக்கொள்ளவே, தன் ஊருக்குப்போகக் கூடாமல் அன்றிரவில் அவ்வனத்திலேயே தங்கியிருக்கும்படி நேர்ந்ததினால் அவ்விடத்திற்றங்கி, புதரில் ஒளியுருவாய்க் காணப்படுகிற ஜயதேவரைக் கண்டு அவ்விடத்திற் போய், இப்புதரில் இவ்வொளி யுண்டாயிருக்கக் காரணமென்னவென்று ஆச்சரியப்பட்டு உற்றுநோக்கி, ஜயதேவர் ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தனம் செய்துகொண்டிருப்பதைக் கண்டு, இவரைப்பேரன்போடு வணங்கித்துதித்து, இவரது கால் கைகள் சேதிக்கப்பட்டிருப்பதையும், அதனால் அவர் ஒருதுன்பமில்லாமலிருப்பதையும்அறிந்து, ஒஸ்வாமீ! தேவரீரை இவ்வாறு வருந்தச் செய்தவர் யாவரென்று வினவ, ஜயதேவர் எனக்கு வருத்தத்தை ஒருவருஞ் செய்யவில்லை, என் வினைனேயே செய்தது என்று மறுமொழி சொல்லக்கேட்ட அரசன், மனமிரங்கி, இவரைத் தன்சிவிகைமேல் ஏற்றிக்கொண்டு தன் ஊருக்குப்போய், நவமணிகள்பதித்த பொன் ஞசனத்தில் இருத்தித் திரிகரணங்களாலும் வழிபட்டு, அன்போடு, ஓ ஞானசூரியனே என்று துதித்து வலம் வந்து, அவரது அருள்பெற்று, ஆதிசேஷன் மீது அறிதுயிலமர்ந்த பரஞ்சோதியாகிய எம்பெருமானைத் தோத்திரஞ்செய்து, தன் பரிஜனங்களைப்பார்த்து, நீங்கள் இவரது திருவடித்தொண்டு சற்றும் வழுவாது செய்துகொண்டிருங்களென்று நியமிக்க, அவர்களும் அரசனது கட்டளையின்படியே நாம் பெரும்பாக்கியத்தை யடைந்தோமென்று மனமகிழ்ச்சியோடு இவரது திருத்தொண்டினைச்செய்துகொண்டு வருகாளில், அந்த அரசன் வந்து, ஜயதேவருடைய திருவடியை வணங்கி, தேவரீரது திருவடியைப் பூசிப்பதிலும் சிறந்தபொருள் வேறொன்றில்லை யெனத் தெளிதறிந்தேனுயினும் தேவரீரது திருவுள்ளத்தக்குவப்பதாகிய வேறொரு கைங்கரியத்தைச் செய்யவேண்டுமென்று விரும்பினன். ஆதலால் அப்படியே தேவரீர் இதை செய்யவேண்டுமென்று இனியசொற்களால் பிரார்த்திக்க, ஜயதேவரானவர், அவ்வரசனை நோக்கி, அன்பனே! நீ திருமாலடியாரது திருவடி-

யை வணங்கிப்பூசிப்பதே எனக்கு விருப்பம் என்று அருளிச்செய்ய, அவ்வ ரசன் எழுந்து அவரது திருவடியைவணங்கி, அவ்வாறே செய்கிறேன், ஆனால் திருமாலடியாரை அடியேன் அறிந்துகொள்ளுதற்குரிய அடையாளங்களைத் தேவரீர் சொல்லி யருளவேண்டுமென்று பிரார்த்திக்க, ஜயதேவரானவர், அருளிச் செய்வாராயினர்.

எப்படி யென்றால், துளவமணி மாலையையும், தாமரைமணி மாலையை யும் கழுத்திற் பூண்டு, நன்மையைத் தருவதாகிய கோபீசந்தனத்தோடு துவா தச நாமங்களையும் நெற்றி முதலாகிய இடங்களில் தரித்து, அல்லும் பகலும் ஸ்ரீ ஹரியின் திருநாமங்களையே உச்சரித்துக்கொண்டிருப்பவர்கள் எவர்க ளோ, அவர்களே திருமால் அடியாரென்று சொல்லப்படுவார்கள். அவர்களைக் கண்டு அவர்கள் திருவடிகளை ஆசிரயித்து பரிசுத்தமாகிய பூசணையைச் செய் வாயானால் வேதநாயகனுகிய திருமாலுக்கு ஸ்ரீபெரிய பிராட்டியின் மீதுள்ள விருப்பத்தினும் அதிகமான விருப்பம் உன்மீது உண்டாகும் என்று அருளி ச்செய்ய, அரசனும் அதற்கிசைந்து, ஜயதேவருடைய கட்டளையைச் சிரசா வஹித்து, திருமாலடியார்களாகிய சாதுஜநங்களை எப்பொழுதும் தரிசிப்பதும் பூசிப்பதுமே நமக்கு உறுதிப்பொருளென்று நிச்சயித்து அவ்வாறே நடத்தி வருங் காலத்தில், அரசனுனவன், திருமா லடியாரைப் பூசிக்கின்ற அற்புதத் தைக் காணவேண்டுமென்று ஜயதேவர் எழுந்தருள, அவரது ஆத்ம குண பூர்த்தியைப் புகழ்ந்து, பூஜித்துப் பலவகையாக அவ்வரசன் வழிபட்டு அவரு க்கு விசேஷமான திரவியங்களைச் சமர்ப்பிக்க, ஜயதேவர் அத்திரவியத்தைக் கொண்டு தமது வறுமைதீர்ந்து சுகமாக வாழ்ந்திருந்தனர். இவ்விடத்தில் இவ்வாறு நடவாநிற்க; முன்னே, ஜயதேவரிடத்தில் திரவியத்தைக் களவு செய்துகொண்டுபோன இரண்டு திருடர்களும் இச்செய்தியை யறிந்து, அரசனுனவன் நமக்கும் மிகுதியாகிய திரவியத்தைக் கொடுக்கும்படி நாமும் அவனிடத்திற்குப் போவோம் எனத் தணிந்து, கபட வைஷ்ணவ வேஷம் பூண்டு, தம்மால் கைகால்கள் அறுபட்ட ஜயதேவரானவர் திருமால் அருள் பெற்று அவ்வரசனது நகரத்தில் வாசம்பண்ணிக்கொண்டிருப்பதை யறியா மல், மீனைக் கருதிக்கொண்டு அசையா நிலையாய் நிற்கிற கொக்குப்போலத் தம் கையில் ஜபமாலையைத் தரித்துக்கொண்டு விரைந்து நடந்து தம் மனத் தில் உள்ள ஜ்ஞாநக் கருத்தை வெளியிட்டுக்கொண்டு, அரசனது அரண்மனை யில் பிரவேசித்து, அறுபட்ட கை கால்களோடு சிம்மாசநத்தின் மீது இருப்ப வராகிய ஜயதேவரைக்கண்டு, பசுவானது புல்லுள்ள இடத்தில்போக, அதன் மீது பாய்கின்ற புலிபோலக் கொலைசெய்ய எண்ணித் தமக்குள்ளே ஒருவர் க்கொருவர் செய்யத் தகாத ஜாடைகளைச் செய்துகொண்டார்கள். அப்பொ ழுது அந்த நீசர்களை ஜயதேவரானவர் அறிந்து, சுற்றமற்ற உபசாரங்களைச் செய்யும் பொருட்டு, சிம்மாசநத்தை விட்டு நிலத்தில் இழிந்துவந்து, அவர் களை வணங்கி, முன்னேவந்து, அன்போடு தழுவிக்கொண்டு, அருகே நின்று

சொன்னதைத் தடுக்காமல் செய்கின்ற குற்குணமுடைய லெனை நோக்கி, இவர்களை அரசனிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய், அவர்கள் விரும்பிக் கேட்கின்ற பொருளைத் தரும்படியாக யான் சொன்னேனென்று அரசனுக்குச் சொல்லுவீராகவென்று அனுப்பினர். அந்த ஏவலாளர்கள் ஜயதேவர் சொன்னபடியே அந்தத் திருடர்களை அரசனிடத்திற்கு அழைத்துக்கொண்டு போய், அவர்கள் வந்தகாரியத்தைச் சொல்ல, அரசன் அவர்களை வணங்கி அதிக வகையாகத் துதித்து, அர்க்யமுதலாகிய பல உபசாரங்களையுஞ் செய்து, அத்திருடர்களைநோக்கி, நீங்கள் இருக்க மனமுள்ளளவும் என்னிடத்திலிருக்கலாம் என்று சொல்ல, அந்தக் கொடியோர்கள் அப்படியே செய்யச் சம்மதித்து, அவ்வரசன் தமக்குச் செய்யும் பெருமை முழுதையும் விரும்பாதவர்களாய், இவன் இப்படிச்செய்ய நாம் இங்கிருப்பது வஞ்சகம்செய்பவன் வீட்டில் அறியாமையுள்ள ஆடுகள் சேர்ந்து வாழ்வதுபோன்றிருக்கின்றது என்று நினைத்தார்கள். அப்படி நினைத்தது மல்லாமல் அரசன் அறியும்படி ஜயதேவர் நமது உண்மையைச் சொன்னால் அவரது சொல்லை ஏற்றுக்கொண்டு, நம்முயிரை நீக்கிவிடுவன், அதனை நம்மால் தடுக்க முடியாது என்று ஆலோசித்து, அஞ்சி, மிகுந்த துன்பங்கொண்டு, மனஞ் சோர்ந்திருந்தார்கள். பிறகு உண்பதும் உறங்குவதும் மனத் தெளிவும் இல்லாமல் தினந்தோறும் இவர்கள் வருந்துகின்ற நிலைமையை அங்குள்ளவர்கள் அறிந்து அரசனுற் பூஜிக்கப்பட்டு அங்கு வாசஞ்செய்கிற ஜயதேவரிடத்து விண்ணப்பஞ்செய்ய, அவர் அவர்களை நோக்கி, இச்செய்தியை அரசனுக்கு அறிவித்து, அவர்களுக்கு வேண்டும் பொருளுதவிசெய்து, அவர்கள் விருப்பத்தின்படி போக விடைகொடுத் தனுப்பினால் நன்மையாமென்று சொல்லுங்களென்று நியமிக்க, அவர்க ளவ்வாறே சென்று அரசனுக்குச் சொல்ல, அதைக்கேட்ட அரசன் அந்தச் சோரர்களிடத்துக்குப்போய், நீங்கள் சுகமாய் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களோ என்று வினவ, அவர்கள் அரசனே, நீ எங்களை மிகவும் உபசரித்து வைத்திருந்தாலும் எங்களுடைய மனமானது பல புண்ணிய தீர்த்தங்களின் மேலே செல்லாநின்றது, ஆதலால் நீ எமக்கு விடை தருவாயானால் யாம் போவோம் என்று சொல்லுதலும், அரசன், அவர்களை நோக்கி, நீங்கள் அவ்வாறு தீர்த்தயாத்திரை செய்வதற்கு வேண்டியது யாதோ அதனைச் சொல்லுங்களென, அவர்கள் இரண்டு தேர்கள் நிரம்பும்படியான திரவியம் தந்து எங்களை யனுப்பவேண்டும் என்று சொல்லுதலும், அவ்வாறே அரசனும் அவ்விருவருக்கும் ஆடையாபரணங்கள் வேண்டியவளவுந் தந்து இரண்டு தேரிலும் பொருளை நிரப்பி, அவர்களையும் ஏற்றி, தேர் நடத்தும் பாகர்களையுமமைத்து அனுப்பினன். அவர்கள் அரசனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு ஜயதேவரிடத்திற்குப்போய் அவரை வணங்கி விடைகேட்க, அவரும் போய் வாருங்களென்று சொல்லியருளத் திருடர்கள் சென்றார்கள். செல்லும்போது பாகர்கள் அவர்களை நோக்கி, எங்கள் அரசனிடத்தில் வந்த பேர் அதிகருள்

ரும் 'ஜயதேவர் உங்களைப் புகழ்ந்து மிகுந்த உபசாரஞ் செய்ததற்குக் காரணம் யாதென்று வினவ, அத்திருடரும் அந்தப் பாகருக்குச் சொல்லுற்றார்கள்:—துஷ்டகர்மா என்று சொல்லப்படுகிற ஓரரசன் இருந்தான்; அவனிடத்தில் இந்த ஜயதேவன் பிரதானியாயும் இஷ்டனுயும் இருந்தான். யாமும் அந்த அரசனது ஏவற் பணிவிடைசெய்துகொண்டிருந்தோம். இந்த ஜயதேவன் அரசனுக்கு அதிகஷ்டத்தையுண்டாக்கினதனால், இவனைச் சிரச்சேதம் பண்ணும்படி அரசன் எமக்குக் கட்டளையிட, நாங்கள் அப்படி செய்யாமல் நாள்கைகளை மாத்திரம் சேதித்துக் காட்டில் ஒரு புதலினிடையிலே கிடத்திவிட்டு, அந்த அரசனது ஏவற்றொழிலுக்கு உடம்படாமல் மனவெறுப்போடு வந்தோம். இப்பொழுது உங்களுரில் வர, தன் உயிருக்கு உதவிசெய்த நல்லவர்களென்று எங்களை உபசரித்து மிகுதியாகிய ராஜ சம்மானமும் செய்வித்தான் என்று சொன்னவுடனே, அசத்தியமல்லாமல் கொடிதாகிய பாவம் வேறுண்டுளதோ? இல்லியாதலால் இவர்கள்சொன்ன பொய்வார்த்தையைப் பூமிதேவியானவள் பொறுக்காமல் படீலென்று வெடிக்க, அந்த வெடிப்பில் இந்தத் திருட்டு வஞ்சகர்கள் ஏறியிருந்த தேரோடு வீழ்ந்து அழுந்திவிடக் கண்ட தேர்ப்பாகர்கள், தாமும் அவர்களோடு வீழ்ந்து இறக்காமல் மெல்லத் தேரினின்றுங் குதித்து, உயிர்பிழைத்து, இனி யாதுசெய்வோமென்று மனமயங்கி, இந்தத் தீமை சம்பவித்ததெய்வச்செயலல்லவா? இந்தச்செய்தியை அரசனுக்குச் சொல்லுவோமென்று எண்ணி மீண்டு வந்தவர்கள் அரசனிடத்துள்ள பெரியோர்களை வணங்கிச் சொல்லினர். இதனைக் கேட்ட சாந்தமூர்த்தியாகிய ஜயதேவர், தமது கண்களில் நீர் தளும்பும்படி தூக்கித்து, மாயனே! பாண்டவசகாயனே! சத்தியபாமைக்கு நேயனே! உலக முண்டசெவ்வாயனே என்று தோத்திரஞ்செய்து, உனக்குப் பகைவராகிய சஞ்சன் முதலான அதிக துஷ்டர்கள் மேற்கதியடையச் செய்து எனக்குப் பகைவரான திருடர்களை கீழ்க்கதி யடையச்செய்தது உன்னுடைய கிருபைக்குத் தகுதியோ! ஆதிமூலமேயென்று அழைத்த கஜேந்திராழ்வானுக்கு முன்னே அபயங் கொடுத்து ற்கதி யடையச் செய்ததுபோல அவருக்குப் பகையாகிய கொடிய முதலைக்கும் அந்த ற்கதியைக் கொடுத்தாய்; அவ்வாறு யான், அன்பனென்றிருக்க, என்பகைவர், ற்கதியை யடையும்படி செய்யாமல் இப்படி கவிழ்த்து விட்டது உனக்கு நீதியாமோ? என் ஐயனே என்று கைத்து வருந்தும்போது, திருமாலானவர் திருவுளமிரங்கித் தமது சகுண ரூபங்கொண்டு இவருக் கெதிரே யெழுந்தருளினர். அப்படி எழுந்தருளின மாத்திரத்தில், அவரது கடாக்ஷவீக்ஷணத்தால் இவரது அறுபட்ட கை கால்கள் பருத்து நீண்டுவளர்ந்தன. நஞ்சுபோன்ற கொடியவரான அந்தத் திருடரும் சொர்ணவிமானத்தின்மே லேறி விண்ணுட்டை யடைந்தனர். அப்பொழுது உலகமுண்ட பெருவாயனுகிய இறைவன், ஜயதேவரைத் தழுவிக்கொண்டு உன்னுடைய அன்புக்கு அளவில்லை; என் மனம் மிகுதியும் களிப்படைந்தது

என்று அருளிச்செய்து பரமபதத்துக் கெழுந்தருளினன். பிறகு பெருந்தகை மையுள்ள அந்த அரசன், அந்த ஜயதேவரை வணங்கித் தேவரீருடைய கால் கைகள் வளர்ந்ததெப்படி, சொல்லவேண்டுமென்று கேட்க, ஜயதேவரும் தமது வரலாற்றையெல்லாம் தவறாமல் சொல்ல, அரசன்கேட்டுச் சந்தோஷித்து, பத்மாவதியாரை நம்மூருக்கு அழைத்துக்கொண்டு வாருங்களென்று சிலர்க்குச்சொல்லி, சிவிகையையும அனுப்பினன். அரசனது ஏவலால் வந்த சிவிகைமேல் பத்மாவதியார் ஏறி, நமமுடைய பிராணநாதனை வணங்குவதற்குரிய நல்லநாள் இதுவேயாமென்று விசாரித்து சென்று, ஜயதேவருடைய திருவடியை வணங்கும்போது, அந்த அரசன் அவ்விடத்துக்குத் தன் மனைவியோடு வந்து தன் மனைவியை நோக்கி, உத்தமியாகிய பத்மாவதிக்குத் தினந்தோறும் ஏவல் செய்வாயாக என்று கட்டளையிட்டான். அவ்வாறே ராஜபத்தினியானவள், பத்மாவதியாரை அழைத்துக்கொண்டுபோய், சொர்ணமயமான அரண்மனையிற் பிரவேசித்துப் பொற்பீடத்திலிருத்தி, அவரது மலரடியை வணங்கினாள். அப்படி ராஜபத்தினியால் வணங்கப்பெற்ற பத்மாவதியார், நதிகளில் கங்காநதிபோலவும், கற்பில் சாவித்திரிதேவிபோலவும், வேதத்தில் காயத்திரி மந்திரம் போலவும், ஆபரணங்களில் மங்கல சூத்திரம்போலவும், மாதர்களுக்குள் சிறந்து விளங்கினாள். இப்படி ராஜபத்தினி ஏவற் பணிவிடை செய்யப் பத்மாவதியார், சுகமாக வாழ்ந்திருக்கு நாளில், ஒரு தூதன்வந்து, ராஜபத்தினியை நோக்கி, உன் தமபியாகிய சுஜாணன் என்பவன் மரணமடைந்தான் என்று சொன்னான். அந்தச் சொல்லானது ராஜகிருகத்திலிருந்த சுஜாணன் மனைவிகேட்டு, அவனோடு உடன்கட்டையேறத் துணிந்து, புறப்பட்டதை அறிந்தவர்கள் இது மிகுந்த ஆச்சரியமென்று மனம் வருந்தினார்கள். பத்மாவதியார் மாத்திரம சொர்ணசனத்தின்மேல் வருத்தமின்றி வீற்றிருக்க, தன்பக்கடலிலழுந்தினவர்கள், இது என்னவென்று பணிவாய்க்கேட்க, ராஜபத்தினியானவள், பத்மாவதியாருக் கெதிரில் நின்று இதைச் செய்தியைச சொல்லக்கேட்ட பத்மாவதியார், ராஜபத்தினியை நோக்கி, சுஜாணன் மனைவி இப்படிப்பட்ட அற்புதமான செய்கைக்கு உடன் பட்டது ஏழு பிறவியிலும் தன் பிராணநாதனை இடையறாமல் தழுவிக்கொண்டிருப்பதற்கே யாகும். ஆயினும் சூரியனிடத்தில் கிரணங்கள் அடங்குவதுபோல, கணவனது மரணத்தைக் கேட்டபொழுதே உயிர்விடாமல் இவள் இங்கு வாழ்ந்திருக்கின்றனள். கற்புக்கழகு இதுதானே என்று பத்மாவதியார் சொன்னமாத்திரத்தில், கேட்ட சுஜாணன் மனைவியானவள் விரைந்து சென்று, கணவனோடு உடன்கட்டையேறினபிறகு, ராஜபத்தினி, இதனைப் பத்மாவதியாரிடத்தில் பரிசோதனை செய்வோமென் றெண்ணி, மந்திரியை யழைத்து, ஒரு பொய்சொல்லும் படி கற்பித்தாள். மந்திரியும் ஜயதேவர், அரசனுடனேகூடி வனத்திற் பிரவேசிக்கச் செய்து அங்கிருந்துவந்து ஜயதேவர் மரணமடைந்தாரென்று சொன்னான். அதைக்கேட்ட பத்மாவதியார் அவர் புலியினால் மரணமடைந்தாரென்

பது உண்மைதானே என்று கேட்க, இத்தப் பொய்யை மந்திரிசொல்லும்படி கற்பித்த ராஜபத்தினியானவள், மெய்தான் என்று சொன்னாள். இப்படிசொல்லுவதற்கு முன்பே, பத்மாவதியார், தன் உயிர் நீங்கினள். இதைக்கண்ட வேந்தன் மனைவி, தனக்கெதிரில் வணங்கி நிற்பவரை நோக்கி, நான் பொய்யாய் விளையாட அவ் விளையாட்டு மரணவிளையாட்டாயிற்றே யென்று துக்கக்கடலில் அழுந்தினள். அதைக்கண்டு அவ்விடத்துள்ள யாவரும் இரக்கமுற்றார்கள். இப்படியிருக்க, வேட்டையாடச்சென்ற அரசனும் கூடப்போனவர்களும் மீண்டுவக்தார்கள். அப்பொழுது அரசன் இந்தத் துன்பத்தின் காரணம் யாதென்று விசாரித்துத் தன்தேவியால் நிகழ்ந்தவரலாற்றை மந்திரிசொல்லக்கேட்டு இதற்கு நான் என்னசெய்வேனென்று, கூக்குரலிட்டு நடுநடுங்கி அழுதான். இப்படியழுது இவள் என்னகாரியஞ் செய்தாள்? இவளை உயிர்வாங்குவேனுயின் பெண்கொலைப்பாவம கேரிடும்; ஆதலால், விரைவில், என்னுயிர் நீங்கும்படி செய்துகொள்வேனென்று துணிந்து, தன்னகரின் பக்கத்தில் அக்கினிகுண்டமொன்று ஏற்படுத்தும்படி மந்திரிக்கு நியமித்துப் பத்மாவதியார் மரணமானதையறிந்த ஜயதேவர்க் கெதிரில் வந்து அவரை வணங்கி, தேவரீரது மனைவியார் என்னால் உயிர் நீங்கினரென்று அறிவித்தனன். அதைக்கேட்ட ஜயதேவர், மிக்க அன்போடு அரசனைத்தழுவிக்கொண்டு என்மனைவி இறந்தது உம்மாலன்று, நீர்போம் என்று சொல்லித் தம்முடைய தேவியாராகிய பத்மாவதியாரிடத்துக்குப்போய் அவரைக்கண்டு, ஸ்ரீகண்ணபிரானைத் தமது கண்களுக்குச் சாக்ஷாத்காரமாக்கிக்கொண்டு, தாளத்தையும் வீணையையும் கைகளிற்பற்றி, பூர்வத்தில் ஸாத்வீகராஜன் சொன்ன அறுபத்து நான்கு பாடலாகிய அஷ்டபதியைக்கொண்டு வாழ்த்தி, ராதா விலாசத்தை ஸ்ரீ ஹரி கீர்த்தநத்தோடு சேர்த்துப் பாடுதலும், அந்தப்பாட்டினைசை எம்பெருமானுகிய ஸ்ரீஹரியின் திருச்செவிகளில் சென்று நுழைந்தவுடன், அன்பராகிய ஜயதேவருக்கெதிரில் எழுந்தருளி, அவரைத் தழுவி, இந்த அஷ்டபதியைப் பாராயணம் பண்ணுவோரும், கல்லதென்று சொல்லிக்கேட்போரும் எல்லாத் துன்பங்களினின்றும் நீங்கும்படி அவரிடத்தில் அல்லும் பகலும் போய் தங்கியிருப்பேன் என்று அருளிச்செய்து, பத்மாவதியார் உயிர்பெற்று எழுந்திருக்கும்படி தம்முடைய கிருபா திருஷ்டியை அவர்மீது செலுத்தினமாத்திரத்தில், அந்தப்பத்மாவதியார், தேவர்கள் பூமழைசொரிய எழுந்து, தமது பிராணநாதராகிய ஜயதேவரை யெதிரே யிருக்கக் கண்டார்; இந்த அதிசயத்தைக் கண்ட வைஷ்ணவர்கள் யாவரும் வாழிகூறி, சக்ரபாணியாகிய ஸ்ரீஹரியின் திருவடியை வணங்கித் துதித்தார்கள். வேந்தனும் தன் பரிஜநங்களோடு கூடி, ஜயதேவரது திருவடியின்கீழ் நின்று வணங்கிப் புகழ்பெற்று விளங்கினன் என்று சொல்லி முடித்து, மேலே துளசிதாசர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

ஜயதேவர்சரித்திரம் முற்றிற்று.

# ஈ - வது துளசிதாசர் சரித்திரம்.

ஸ்ரீ லக்ஷ்மீ ரமணனாகிய பகவான், பரிசுத்தராகிய வால்மீகி முனிவரை நோக்கி, உலகத்தில் பாவமாகிய கெருப்பு மூண்டெரியாகின்றது; ஆகையால் அந்த கெருப்பை, நீர் அந்த உலகத்தில் அவதரித்து, ஸ்ரீஹரி பக்தியாகிய நீரினாலே தணிவிப்பீராக என்று அருளிச் செய்தலும், அம்முனிவர், இறைவனது திருவடித்தாமரை மலரைத் தமதுசிரமானது நிலத்திற் படும்படி சாஷ்டாங்க தெண்டனிட்டுப் பூலோகத்துக்குப் போனார்; போய் அத்தினாபுரத்தில் வரசம் பண்ணுகிற கனோஜா என்னும் பெயர் பூண்ட உத்தம குலத்தினராகிய ஆத்மாராமர் என்பவருக்குப் புதல்வராய் அவதரிக்க, தந்தையாராகிய ஆத்மாராமரும் அவர் மனைவியாரும் மிகவும் களிப்பை யடைந்து, தமது புதல்வருக்குத் துளசிதாசர் என்று பெயரிட்டு அன்போடு வளர்த்து, ஏழாம் வயதில் உபநயனம் செய்து, பன்னிரண்டு வயதுக்குள்ளே, லௌகிகவைதிக கர்மங்களையும் தமக்குரிய வேத சாகையையும் கற்பித்த பிறகு, மமதா என்னும் கன்னிகையை மணம்புணர்வித்தார்கள். பிறகு துளசிதாசர் தமதுமனைவியாராகிய மமதையோடு கூடி இல்லறம் நடத்தி, அந்த நகரத்துக்கு அரசனாகிய அகபரன் கட்டளையி லமைத்து, பெருஞ் செல்வராகி, சகல போகங்களையும் அநுபவித்துக்கொண்டிருக்கும் காளில், மேகம்போல முழங்குகின்ற பெருஞ் சேனையையுடைய அரசனுடனே காட்டுக்குப் போகும்படி நேரிட்டது. அப்போது ஒரு தூதன் வந்து மமதையை நோக்கி, அம்மா, உமது தாயார் உம்மைப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பத்தால் உம்மை யழைத்து வரும்படி என்னை யனுப்பினார் என்று சொல்ல, மமதையும் தமது மாமியாரிடத்திற் போய், நான் என் தாய்வீட்டுக்குப் போய் வருகிறேனென்று சொல்லி வணங்கி விடைபெற்றுப் போய், க்ஷேம லாபங்களை விசாரித்து அங்கேயிருக்க, அரசனுடனே சென்ற துளசிதாசர் மீண்டும் வீட்டுக்கு வந்து, தமது மனைவியைக் காணாதவராய், தமது தாயாரை வினவித் தெரிந்துகொண்டு, மனம் வாடி, அஞ்சாமல் இராக்காலத்தில் போய், மாமியார் இருக்கிற ஊரை யடைந்து, அவர் வீட்டுக்கதவடைத்திருப்பதைக் கண்டு, வீட்டின் மேல்முகட்டிலிருந்து இழிந்துவருகிற பாம்பைப் பற்றி, அதையே கயிறாகக்கொண்டு வீட்டின்மேல் ஏறி, வீட்டு முற்றத்தில் விரைந்து பாய்ந்தவுடனே, இவர் பாய்ந்த வொலியினால் யாவரும் பயந்து, விழித்து வெளியே வர, மமதையும் வெளியில் வந்து, மதிமயங்கித் தெளிவடைந்து, இவரைக் கண்டு, என் பிராணநாதரே, நீர் இந்த இருள் செறிந்த இரவில் எவ்வாறு வந்தீர், விட்டின்மேல் எப்படி யேறினீர் என்று வினவ, நான் வருவதற்கு நீ விட்ட கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஏறினேனென்று தாசர் சொல்ல, மனைவி அந்தக் கயிற்றைக் காட்டுமென்று கூட வந்து, அவர் சொன்ன கயிறு பாம்பாயிருக்கக் கண்டு, ஐயோ, இதைக் கையாற் பிடித்தகாலத்

திலும் உமது காமமயக்கத்தால் பாம்பென் றறியவில்லீயே, இந்திரனும் இராவணனும் காமக்கடலில் அழுந்தி வருந்தினதை அறிந்திலீர் போலும்; இப்படி செய்யலாமாவென்று கையைப்பற்றி, வாருமென் றழைத்துப்போய், தமது விடுதியிலுள்ள ஆசனத்திலிருத்தி, மமதையானவள் இன்சொற்கள் கூறி மாதராசையாகிய கடலில் முழுகினவர்கள் மிகவும் கண்கலங்குவார்கள்; ஆகையால் ஸ்ரீராமபிரானுடைய திருவடியின்மேல் அன்புசெய்து, பேரின்பக் கடலில் இறங்கி, அவரது காமசங்கீர்த்தநம் என்னும் அமிர்தத்தை யுண்ணக் கடவீர் என்று இவ்வாறு சொன்ன மமதையின் வார்த்தையைக் கேட்ட துளசிதாசர், இவள் சொல்லுவது உண்மைதானென்று மதித்து, பரிசுத்த ராகிய இறைவனது திருவடியை மனத்திற் பதித்து, சந்த்ரபிமபம்போன்ற முகத்தையுடைய மமதையை நோக்கி, நெருப்பில் விழுகின்ற குழந்தை யைத் தாயானவள்பார்த்து அதின் ஆபத்தைத் தீர்ப்பதுபோல, நீ என் காமத் துன்பத்தை நீக்கினயாகையால், நீ எனக்கு மனைவியல்லை, எனக்குத் தாயே யாவாய் என்று சொல்லி, அந்த மமதையின் பாதங்களில் விழுந்தெழுந்து, நன்று சொன்னயென்று கொண்டாடி, நீ செய்த நன்றிக்கு ஒப்பாகிய பொ ருளானது இவ்வுலகத்தில் ஒன்றுமில்லையென்று சொல்லி, இல்வாழ்க்கையை யொழித்துக் காட்டிற்போய், திவ்யமான கங்காநதியின் நீரில்முழுகி, கொடிய குணம் நீங்கப் பெற்று, நான் வால்மீகன் அல்லவா, நான் யாதுகாரணமாக இவ்வாறுயினேன் என்று தெளிவடைந்து, சர்வேசுவரன் இவ்வுலகிலுள்ள பத்தாத்மாக்களைத் திருத்துமபொருட்டு நம்மை நியமித்தனுப்ப, அதை விட்டு, பாசக்கடலில் அழுந்திப் பரிதபிக்கிறேன், இனியாயினும் இதுதீரும் வகைசெய்வேன் என்றெண்ணி, கல்லவுணவுகளை யொழித்து, உதயகாலத்தி லே யெழுந்து, புண்ய நதிகளில் மூழ்கி, நாள்தோறும் செய்யவேண்டிய கர்மங்களை விரைவாய் முடித்து, உதிர்ந்த காட்டுச் சருகை யுண்டு, அளவு படாத அரியதவஞ் செய்துகொண்டிருந்தார். இப்படி அருந்தவம் செய்வோ ராகிய துளசிதாசர், தினந்தோறும் தமது கையிலுள்ள கமண்டல நீரைக் கொண்டு, கைகால் முதலியவற்றைச் சுத்திசெய்து, மிச்சமான நீரை அங் குள்ள ஒருமரத்தடியில் கவிழ்த்துவிடுவார். இப்படி, ஸ்ரீராமநாமஸ்மரணையை ஒருபோதும் மறவாத துளசிதாசர் பன்னிரண்டு வருடம் வரையில் கடத்தி வருகையில், ஒருநாள், அந்த மரத்தில் வாழ்ந்திருந்த பேயானது இவருக் கெதிரில் வந்து நின்று, தனது கோரரூபத்துடனே கைகுவித்து வணங்கி, தாசரே, நீர் பரமபாகவதராகையால் உம்மைக் காணவேண்டுமென்று வந் தேன், உமக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்ளலாம் என்றுசொல்ல, துளசிதாசரானவர் அந்தப் பேயை நோக்கி, நீ யார், உன் பேர் என்ன, எனக் கெதிரில் வந்தகாரணம் யாது, சொல்லென்று கேட்க, பேயானது நான் அலகை, இந்த மரத்தில் நெடுநாளாயிருந்தேன். நான் ஆறு, கிணறு, குளம் முதலியவற்றில் நீருண்ணும் வழக்கமில்லாமையால், மிகுதியாகிய தாகத்தி

னுள் வருத்த மடைந்திருந்தேன். அப்படி யிருந்த எனக்குப் பன்னிரண்டு வருடகாலமாய் நீர் வார்த்துக் காப்பாற்றி வருகிறீர். ஆதலால் எனக்கு உம் மீது கருணை உண்டாயிற்று, நீர் விரும்பின வரத்தைத் கேட்கலா மென்று சொல்லக் கேட்ட துளசிதாசர், அப்படி வரங்கேட்க விருப்பமில்லாதவராய் இது என்ன, கருடனைத் தேடும்போது காகம் எதிர்ப்பட்டதுபோலவும், கற்பக மரத்தை விரும்பக் கள்ளிமரம் எதிர்ப்பட்டதுபோலவும், புண்ணியத்தை விரும்பி யொரு காரியத்தைச் செய்ய, அது பாவமாய் முடிந்தது போலவும் யான் அழிவற்றவனுகிய பகவானை நினைந்தபோது ஒரு அலகை யெதிர்ப்பட்டது, இனி என்செய்வேன் என்று மனந் தளருங் காலத்தில், பேயானது இவர் நம்மை வெறுத்தது யாதுக்கோவென்று, மறுபடியும் இவரை நோக்கி, நீர் சிறந்த புத்திமானென்று நினைந்தேன், இனி என் தகுதிக்கேற்ற வரமொன்றை உமக்குத் தர விரும்பினேன் என்று சொல்ல, தாசரானவர், பேயை நோக்கி, அப்படி உனக்கு விருப்பமிருந்தால், திருத்துழாய் மாலையை அணிந்த ஸ்ரீராமமூர்த்தியானவர் எனக்கெதிரே யெழுந்தருளும்படியான வரம் தரக் கூடுமானுல் தரலாம், அந்த வரத்திலல்லாமல் வேறொன்றிலும் எனக்கு விருப்பமில்லை யென்று சொல்ல, பேயானது பயந்து, தான்நின்ற நிலைவிட்டுத் தூரமாய் விலகி, தாசரே, நீர் விரும்பும் சுவாமியைக் காட்ட எனக்குச் சக்தியில்லை. ஆயினும் காட்ட வல்ல பரிசுத்தாத்மாவை உமக்கு அறிவிக்கிறேன், அவரால் உமது மநோரதம் நிறைவேறும் என்றுசொல்ல, தாசர் அவரைக் காட்டவேண்டுமென்ன, பேய், அவர் வாயுபுத்ரராகிய அநுமான் என்று சொல்ல, அவர் எங்கேயிருப்பார் என்று தாசர் கேட்க, நீர் தினந்தோறும் விஞவும் பெருங் கதையைச் சிரவணஞ் செய்ய வந்து சேர்பவர்களுக்கு முந்திவந்து சிரவணஞ் செய்வதும், அவர்கள் போகும்போது அவர்களுக்குப் பின் தொடர்ந்துபோவதுமாகிய தொழிலை யுடையவராய், தலையில் அணிந்த குல்லாவோடு, கிழிந்த வஸ்திரத்தையும், கையில் ஒரு தடியையும், அழகாகிய கோவணத்தையும் கொண்டு விளங்குவார். அன்றியும் வேதியரில் மூப்படைந்தவர போலத் தோன்றுவார். அவர்தான் மாருதி யென்று பேயானது சொல்லி நீங்கினவுடனே, ஸ்ரீ ஹரி பக்தியிற் சிறந்த தாசர், மறுநாள் வழக்கம்போலவே ஸ்ரீ விஷ்ணு புராண காலக்ஷேபத்தைத் தொடங்கு முன்னமே, மாருதியானவர் காலக்ஷேபங் கேட்க வருகிற மற்றையரைப் பார்க்கிலும முந்திவந்து காலக்ஷேப கோஷ்டியில் எழுந்தருளியிருந்தார். அங்குப் புராண காலக்ஷேபம் முடிந்தவுடனே, மெய்த் தவத்தையுடையோராகிய தாசர்கள் தமது இருப்பிடம் போகாநிற்க, மாருதியும் அவரைப் பின்தொடர்ந்து போவதைக் கண்ட துளசிதாசர், சுவாமீ! எனக்கு அருள்புரியவேண்டும் என்று மாருதியாகிய வயோதிக வேதியரை வணங்க, முதியராயிருக்கிற மாருதியானவர் நீர்என்பாதத்தைத் தீண்டுதல் தகுதியல்ல வேகயன, ராம தூதராகிய உமது பாதங்களே வணங்குதல் தகுதியேயா மென்று துளசிதாசர் வணங்குதலும், மாருதியானவர், இவர் சதாகாலமும்

ஸ்ரீராமநாமஸ்மரணையை விடாத பரமபாகவதர், அன்றியும், இவர் வால்மீகி முனிவரே யாமென்று நினைத்து, உள்ளன்போடு துதித்து, அவரைத் தழுவி, தாசரை நோக்கி, உமக்கு வேண்டியதைச் சொல்லுமென்று கேட்க, ஸ்ரீதுளசி தாசர், நீர் சதாகாலமும் சேவை செய்கிற ஸ்ரீ ராமபிரான் எனக்குச் சேவை தந்தருளும்படி செய்யவேண்டும் என்று சொல்ல, மாருதியானவர் அப்படியே செய்கிறேனென்று சொல்லி, மறைந்திருந்த ஸ்ரீ ராமபிரானை நோக்கி, வந்தனை வழிபாடுகள் செய்து, சுவாமீ! உன் திருவடிக் கன்பனான வால்மீகியானவன் உன்னைச்சேவிக்க, மிகு விருப்பங்கொண்டிருக்கிறான், ஆகையால் அவனுக்கு அருள்செய்வது உனக்குக் கடமையாகும் என்று மாருதிசொல்ல, ஸ்ரீராமபிரான் அந்தச் சொல்லைக் கேட்டு, நல்லது அப்படியே யாகட்டும் என்று, வாகரங்கள் தம்மைத் தொடர்ந்து வர, தமது கோதண்டம் என்னும் வில்லுடனே, துளசிதாசருடைய ஆசிரமத்தின் வழியாய்ச் செல்ல, தாசர் பார்த்து, இவன் யாரோ துலுக்கனென்று நினைத்து, அவருக்கு வந்தனை வழிபாடுகள் செய்யாமலிருக்க, மாருதியானவர் தாசரிடத்திற்கு வந்து, ஸ்ரீராமபிரானைத் தரிசனம் செய்திரோவென்ன, தாசரானவர், இவ்வழியாக ஒருதுலுக்கன் சில வாகரங்களோடு போனான், அவனையன்றி வேறொருவரையும் நான் கண்டிலேன் என்று சொல்ல, அதுமானனவர் ஆச்சரியப்பட்டு, இவர் சொல்லுவதை யோசித்தால், வலியவந்த காமதேனுவை ஒரு சாதாரண ஆடென்று நினைத்தாற்போலவே யாயிற்று என்று சொல்லுதலும், அயோத்யா நகரத்தை யாளுகின்ற சக்ரவர்த்தித் திருமகனார், முனிவர் சொன்னபடி, கோதண்டத்தை யேந்திவராமைக்கும், இலக்குவரோடு கூடிவராமைக்கும் காரணம் யாதோ அறிகிலேன்; அதுநிற்க, என் சந்தேஹம் தீரும்படி இப்பொழுது சீதாபிராட்டியோடு எழுந்தருளப்பண்ணினால் உனக்குப் பெரும்புண்டாகும் என்று சொன்ன தாசரது சொல்லைக்கேட்டு, மாருதியானவர், உன் மநோரதத்தை ஸ்ரீராமபிரான் முடிப்பாரென்று சொல்லித் தேற்றி, மறைவாய் ஆசிரமத்துள்ளேபோய், ஸ்ரீராமபிரானை அன்போடு தோத்திரஞ்செய்ய, பகவானுடையஸ்ரீராமமூர்த்தியானவர், ப்ரத்யக்ஷமாகி, நீ என்னைநினைத்துப் பலவகையாய்த்தோத்திரம்பண்ணினதற்கு மிகவும் சந்தோஷமடைந்தேன்; உன் மநத்தென்ன சொல்லென்று கேட்க, மாருதியானவர், சுவாமீ! தேவரீரைத் தரிசிக்க விரும்புகிற துளசிதாசருக்கெதிரே, ஸீதாபிராட்டியோடு கூடிச் சேவை சாதிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, பகவானுனவர், அநுமானே நோக்கி, அநுமானே! இது கலிகால மாகையால் அப்படி எனது நிஜரூபத்தோடு காணப்படுதல் கூடாதுஎன்றுசொல்ல, அநுமானுனவர், உன்தொண்டராகிய துளசிதாசருக் கெதிரே சேவைசாதிப்பதனால் உமக்கு என்ன குறை புண்டாகும் என்று கேட்க, பகவானுனவர், அநுமானே, உன் விருப்பத்தின் படியே செய்கிறேனென் றருளிச்செய்ய, மாருதியானவர் இத்தச் செய்தியைத் துளசிதாசருக்கறிவித்தார். உடனே பகவானும் சீதாசமேதராய் எழுந்தருளக்கண்ட துளசிதாசர், சுவாமியைப் பலவகையாய்த் தோத்திரஞ்செய்து

வணங்கினவுடனே, ஸ்ரீராமபிரான், அந்தத் துளசிதாசரை நன்றாய்த் தழுவிக் கொள்ள, மாருதி, தாசரை நோக்கி, பகவானுடைய குணாதிசயத்தை இடை விடாமல் செய்துகொண்டிருந்ததனால் உனக்கெதிரில் பகவான் ப்ரத்யக்ஷமா னார், இனி இந்தப் பூலோகத்தில் ஸ்ரீராம சரிதாம்ருதமேஉமக்குத் தாரகமென் றாரு சொல்லி, பிறகு ஸ்ரீராமமூர்த்தியை நோக்கி, தாசரதே, இந்தமெய்யன்ப ராகிய துளசிதாசருக்குத் தேவரீர் பூர்ணக்ருபைசெய்யவேண்டும் என்று வேண்ட, அந்த வேண்டுகோளுக்குப் பகவானுனவர் இரங்கி, துளசிதாசரு டையதலையின்மேல் தமது திருக்கரம் வைத்து உண்மைப்பொருளை உப தேசித்து மறைந்தார். பிறகு பகவானுடைய நியமனப்படியே அதுமான் சொன்னதையே நிர்மலரான துளசிதாசர் மேற்கொண்டு, பரிசுத்த க்ஷேத்ர மாகிய காசிக்குப்போய், ஸ்ரீவிஷ்ணுகதாப்ரவசனம் செய்துகொண்டு, அநேகம் பாகவத கோஷ்டியோடு அவ்விடத்திலேயே எழுந்தருளியிருந்தார். இப்படி யிருக்கும் காலில், காசி க்ஷேத்ரத்திலுள்ளவர் இவர்மீது மிகவும் அன்பு பாரா ட்டி, ஒருமடம் கட்டுவித்து, அதில் இவர்வசிக்கும்படியான ஏற்பாடுசெய்து யாவரும் அங்கு வந்து பிக்ஷைசெய்யும்படியாகவும் அமைத்தார்கள். பொன் னினாலும் வெள்ளியினாலும் பாத்திரங்கள் அமைத்து, அங்கு வருவோரெல் லாருக்கும் சகலமான இனிய உணவுகளுண்பிக்கத் தகுந்தபரிசாரகர் முதலி யோரையும் அமைக்க, தாசரும் தினந்தோறும் அநேக பாகவதரோடு கூடி உண்டு சுகமாய் வாழ்ந்திருந்தார். இப்படி இவரிருக்குங்காலத்தில், இவரது கீர்த்தியானது உலகெல்லாம் பரவுதலால், யாவரும், தத்தமக்கிசைந்த பண் டங்களோ அந்த மடத்துக்கு அனுப்ப, தனியாராதனம் குறைவுபடாமல் நாளுக்குநாள் அபிவ்ருத்தியடைதலுவந்தது. இந்தமடத்தில் வேதியர் இடை யறாமல் வருவதும் போவதுமாயிருக்கையால், இந்தமடத்தின் வாயில்கள் இர வினும் பகலினும் மூடாமலிருப்பது வழக்கம். இதில் நுழைந்து திருடிக்கொ ண்டுபோகிறவர்கள் இல்லாத குறையேயன்றி வேறொன்று மில்லை. இப்படி யிருக்கையில், ஒருநாளிரவில் இரண்டு திருடர்கள் உள்ளே நுழைந்து எல்லா ரும் உறங்குவதைக்கண்டு, தமக்கு விருப்பமுள்ளளவும் அங்குள்ளபொருள் களை வாரிக்கட்டிக்கொண்டு போகும்போது, வாயிலில் இரண்டு காவற்சேவ கர்கள் காணப்பட்டார்கள். அவர்களைக் கண்டவுடனே திருடர்கள், இங்கே காவற்சேவகர்கள் இருக்கிறார்கள் என்று வேறொரு வாயிலின் வழியாய்ப் போக, அங்கு இரண்டு வில்வீரர்கள்தோன்றினார்கள். இங்கும் காவலிருக்கிற தென்று வேறொரு வாயிலின் வழியாய்ப்போய் அங்கும் காவல்வீரரைக்கண்டு திரும்பி அந்த ராத்திரி முழுதும் மடத்தினுள்ளே மறைந்திருந்து காவல் வீரருக்கு அஞ்சி, தாம் எடுத்த பொருள்களையெல்லாம் மடத்திலே வைத்து விட்டு வெளியே வர, அப்பொழுதும் காவல்வீரர் அதட்டக்கண்டு, திரும்பி உள்ளே யிருந்து, எந்த வழியாற் போகலாமென்றாலும் சரிப்படவில்லையே, என்ன செய்வோமென்று மனந்தளர்ந்திருக்கையில், இரவும்விடிந்தது. விடி ந்தவுடனே, பாகவதரெல்லாரும் ராமநாமசங்கீர்த்தனம் செய்துகொண்டே

யெழுந்திருந்தார்கள். துளசிதாசரும் எழுந்திருந்து பாகவதரிடையிலே வர, திருடர்கள் கண்டு அவர் திருவடியில் வீழ்ந்து வணங்க, தாசர் நீங்கள் யாரென்றுவினவ, திருடர்கள், சுவாமீ, வாயில்கள் சுதவடையாமலிருந்ததனால் உள்ளே நுழைந்துவேண்டுமளவும் பொருள்களைக் கவர்ந்துபோகப்பார்த்தபோது, நாங்கள் வருங்காலத்தில் இல்லாத காவல் வீரர்களும் வில்வீரர்களும் வாயில்கள்தோறும் இருக்கக் கண்டு திரும்பிவந்து மடத்துக்குள்ளே யிருந்தோம், பொழுதும் விடிந்தது, இதுதான் நடந்த செய்தியென்று சொல்லி வணங்கினர்கள்; இவர்களைக் கண்டு உண்மையான செய்தியைத் தெரிந்துகொண்ட தாசரானவர், தமது சீடர் எல்லாரையும்அழைத்து, இதுவரையில் நமது மடத்தின் வாயிலில் போவதும் வருவதுமாகியசெய்கைக்கு யாருந்தடைசெய்வாரில்லையே, இப்போது தடைசெய்த காவல்வீரர் யார் என்றுவினவ, சீடர்கள், சுவாமீ, நமது வாயில் காவற்காரரை யாம் நியமிக்கவில்லையென்று சொல்ல, தாசர், அத்தத் திருடர் ஒவ்வொரு வாயிலிலும் காவல்வீரரும், வில்வீரரும் இருந்ததாகச் சொல்லுகிறார்களே, நான்கு வாயில்களிலும் போய்விசாரியுங்களென்றுசொல்ல, சீடர்கள்போய் விசாரித்து வந்து, அப்படிப்பட்ட சங்கதி ஒன்றுமில்லை யென்று சொல்ல, தாசரும சீடரும் எங்கியிருந்தார்கள். அப்போது, தாசரானவர், பகவானைக் குறித்து, சுவாமீ, திருடர்வந்து களவுசெய்தார்களென்று தேவரீர் திருத்தமியாரோடும் எழுந்தருளினால், தேவரீர் முற்காலத்தில் திருவாய்ப்பாடியில் வெண்ணெய்திருடினீர் என்றுநினைக்கவுங் கூடுமோ? வேதமும் தீண்டுதற்கு நாணுகின்ற உம்முடைய பாதாரவிந்தத்தை இத்தலிவாயில் தீண்டப்பெற்றதோ? தலிவாயிலில் எழுந்தருளின தேவரீருடைய திருவடிக்கு யான் என்ன கைம்மாறு செய்வேன் என்று சொல்லி அவ்விடத்திலிருந்த திருடர்மேல் சிறிதும் கோபங்கொள்ளாமல் அத்தத் திருடர்களை நோக்கி, உம்முடைய மனம் விரும்பின அளவு திரவியம் எடுத்துக்கொண்டு நாணமில்லாமல் போகலாம் என்று சொல்லினர். அதைக் கேட்ட திருடர்கள் தாசரை நோக்கி, சாதுக்களுக்குத் தலிவராயிருப்பவரே, உம்மால் பகவானுடைய திருவடியை யாம் காணப்பெற்றோம், பரிசவேதியானது படுமிடந்தோறும் பொன்னுக்குதல் போலவும்,சூரியன்தோன்றுமுன்னே இருள் விலகுவதுபோலவும், உமது திருவடியை யடைதலால், எங்களுடைய தீவினையும் அஜ்ஞானமும் நீங்கப்பெற்றோம்; இனி உமது திருவடித் தாமரையை வணங்கும்படி செய்வதே எமது வேண்டுகோள் என்று சொன்னர்கள். சொல்லிப்பணிதலிக்கண்டு, நீங்கள் பகவானைச் சேவிக்கும்படியான பாக்கியம் பெற்றிருக்கிறீர்கள், ஆதலால் எப்போதும் உங்களோடுகூடியிருப்பதே என்தனிவென்று சொல்லி, அத்தத் திருடர்களை அவ்விடத்திலே யிருக்கச் செய்தார். இப்படி இவர் பாகவதகோஷ்டியோடுகூடி. ஸ்ரீஹரிநாமசங்கீர்த்தனத்தாலே காலங்கழிக்கையில், ஒருநாள் ஒருவேதியன் இவரது மடத்தின்வாயிலிற் உட்கார்ந்து, ஸ்ரீஜாநகிராமா என்று உச்சரித்து,அங்குள்ளாரை நோக்கி, நான் ப்ரஹ்மஹத்தியை செய்தவன், எனக்குக் கொஞ்சம், பிரசாதம் தரவேண்டும்

என்று கேட்க, அந்தச் சமயம் வேதியர் யாவரும் ஸ்நபாசமம்முடித்து, க்ருஷ்ணர்ப்பணஞ் செய்து, போஜநஞ் செய்யப்போகிற சமயமாயிருந்ததனால் இவரது சத்தத்தைக் கேட்டவுடனே தாசரானவர் வெளியேவந்து, அங்கிருந்த வேதியனை அன்போடு தழுவிக் கைப்பற்றி, அழைத்துவந்து, தாம் உண்ணும் பந்தியில் உட்காரவைத்து, வேதியரே, நீர் ஜாகரோமா என்று உச்சரித்ததனால், நீர் செய்த ப்ரஹ்மஹத்தியை முதலான பாவங்கள்வெந்து நீறுய்விட்டன; இந்த வேதியரோடிருந்து அமுது செய்யீராகவென்று சொல்ல, அந்தப் பந்தியிலிருந்த வேதியர் தாசரை நோக்கி, இவரது வினைகள் தீர்ந்தது எப்படியென்று வினவ, தாசர் பூர்வம் நடந்த வேடன் கதை முதலான வைகளைச் சொல்ல, அவ்வேதியர், எங்களுக்குக் கதைகள் அவசியமில்லை, இந்த க்ஷேத்ரத்தில் விசுவநாதஸ்வாமி சந்நிதியிலிருக்கிற கல்கத்தியானது இந்த வேதியன் முன்வைத்த அந்தத்தைப் புசிக்குமானால் நாங்கள் இவனோடிருந்து புசிப்போம் என்றார்கள். அவர்கள் சொன்ன சொல்லைத் தாசர் கேட்டு, அவ்வேதியனுக்குப் படைத்த அந்தத்தைக் கல்கத்திக்கெதிரில் வைத்து, விசுவநாதா! தேவரீர் ஆதியில் தேவர்களைக் காக்கும் பொருட்டு நஞ்சுண்ட வேகத்தை, ஸ்ரீராமநாமாம்ருதத்தால் தணிவித்தீர் என்பது உண்மையானால், ஸ்ரீராமநாமத்தை உச்சரித்த இந்தவேதியனது ப்ரஹ்மஹத்தியையாலுண்டான பாவம் நீங்கினதென்பதற்குச் சாக்ஷியாக இந்தக் கல்கத்தியானது இந்த அன்னத்தைப் புசிக்கச்செய்தருளவேண்டும் என்று துதிக்க, அந்தக் கல் கத்தியானது, வாலியசைத் தெழுந்து, காதாட்டி, எதிரே நிற்போருடைய முகங்களைப் பார்த்து, சுவாசம்விட்டுக்கொண்டே, தாசர் தந்த அந்தத்தைப் புசித்துவிட்டு, முன்போலவே கல்கத்தியாகி நின்றது. இந்த அற்புதத்தைக் கண்ட வேதியர் யாவருங் களித்து, ஸ்ரீ ஹரிதாசர் கொண்ட பக்தியின் பெருமை எம்மால் அளவிடப்படாது என்று, துளசிதாசருடைய திருவடியை வணங்கி, ஜயஜய வென்று ஆநந்தக் கூத்தாடி, ஸ்ரீ ஹரியின் திருநாமத்தை நினைந்து, கக்ஷத்ர சமூஹத்தினிடையே பிரகாசிக்கிற பூர்ண சந்திரன்போலத் துளசிதாசர் விளங்கும்படி அவரைச் சூழ்ந்து துதித்து, அவரைப் பின்தொடர்ந்து மடத்துக்கு வந்து, முன்னே தம்மால் மறுக்கப்பட்ட வேதியனோடிருந்து அமுதுண்டு, சலனமில்லாமல் ஸ்ரீராமருடைய கல்யாண குணங்களாகிய அகாதமான கடலில் ஆடினார்கள். இப்படி இவர்கள் ஸ்ரீராமநாமாம்ருத பாநஞ் செய்து பரமத்ருப்தர்களாய் வாழ்ந்திருக்கையில், ஜயத்து பாலன் என்னும் பெயரையுடைய ஒரு வணிகனுனவன், தனது ஆயுள் நிரம்பி மாணத்தையடைந்தான். அவன் மனைவியானவள் அருந்ததிபோன்ற கற்புடைய ளாதலால், தன்கணவனோடு உடன்கட்டை யேற நினைந்து, கங்காநதிக் கரையில் தீயைமூட்டி, அதிலிறங்கவேண்டுமென்று போகிறவள், அந்த வழியிலுள்ள துளசிதாசருடைய மடத்தைக் கண்டு, இதில் வசிப்பவராகிய பெரியோரை வணங்கிச் செல்லவோமென்று உள்ளே நுழைந்து, அங்குள்ள தாசரைச் சாஷ்டாங்கமாக வணங்க, துளசிதாசரும், அந்தக் கர்ப்பிணியை நோக்கி, உன

க்கு அஷ்ட புத்ரர்கள் உண்டாவார்கள், அந்தப் புத்ரபாக்கியத்தால், இவ்வுலகத்தில் சிரஞ்ஜீவியாய் மகிழ்ச்சியோடு கூடி வாழக்கடவாயென்று ஆசீர்வதிக்க, அவள், தாசரை நோக்கி, என் கணவரானவர் பரமபத மடைந்தார், அவருடைய பிரிவுக்கு ஆற்றாதவளாய், அவரோடு உடன்கட்டை யேறப்போகிறவள், இத்தமடத்தைப் பார்த்து, இதில் வாசம் செய்வோர்களாகிய பெரியோர்களைக் கண்டு வணங்கிச் செல்லுவோமென்று நினைந்து உட்புகுந்து தேவரீருடைய திருவடியை வணங்கினேன், எனக்குப் புதல்வருண்டாகும்படி ஆசீர்வதித்தருளினீர், அது பொய்யாகுமா, இந்த ஆசீர்வாதத்தின் பயன் எப்படியாகுமோ அறிகிலேன் என்றுசொல்ல, தாசரானவர், பெண்ணே, உன் கணவன் மரணமடைந்த செய்தி எனக்குத் தெரியாமல் இப்படி ஆசீர்வதித்தேன், ஆனாலும் ஸ்ரீஹரியானவர் இந்த ஆசீர்வாதத்தைப் பலிக்கச் செய்தருளுவார் என்று சொல்லக் கேட்ட கங்கையானவள், பின்னும் சாஷ்டாங்கமாய்ப் பணிந்து, தீமூண்டெரியுமிடத்தில் பிரேதத்தைக் கண்டு அதனருகே வந்து நின்றவுடனே, பிரேதமாயிருந்த தன்கணவன் பிழைத்து எழுந்து நிற்கக் கண்டு மகிழ்ந்தாள்; கூட வந்தவர்களும் பார்த்து அதிசயித்தார்கள்; பிறகு கங்கையானவள், கணவன் கையைப் பிடித்தழைத்துக்கொண்டு மடத்திற்குப் போய்த் துளசிதாசருடைய திருவடியை வணங்க, அவரும், ஸ்ரீஹரியானவர் க்ருபைசெய்தாரென்று மிகவும் சந்தோஷித்து, இருவரையும் வாழ்த்தினர். அவ்வாழ்த்துதலைப் பெற்றுத் தம்பதிகள் தமது வீட்டுக்கு வந்து சுகமாய் வாழ்ந்திருக்குங் காலத்தில், துளசிதாசருடைய ஆசீர்வாதம் வீணாகாமல் அஷ்ட புத்ரரைப் பெற்றுச் சுகித்திருக்க, இந்தச் செய்தியை அந்த ஊரிலுள்ளோர் யாவரும் அறிந்து, திருடவந்த கள்ளர் அகப்பட்டுக்கொண்டதும், கல் கந்தி சோறுண்டதும், பிணம் உயிர்பெற்றெழுந்ததும், இந்த விஷ்ணு பக்தருடைய ஆணையினாலே யன்றோவென்று புகழ்ந்திருந்தார்கள். இந்தச் செய்திகளை யெல்லாம், சிலர் சொல்லக் கேட்ட ஹஸ்திநாபுரத்தை யாளுகின்ற அரசனுகிய அக்பர் என்பவன், தன் மந்திரியை நோக்கி, அந்தப் பரமபாகவதராகிய துளசிதாசரை வரவழைக்கவேண்டுமென்று நியமிக்க, மந்திரியும் அப்படியே சிவிகை, தேர், யானை முதலியவைகளோடு காசியைக் குறித்துப் போய்த் துளசிதாசருடைய மடத்தை யடைந்து, தாசரை வணங்கி, சுவாமீ, எங்கள் அரசன் தேவரீருடைய பெருமையைக் கேட்டு, தேவரீரைத் தேர்மேலேற்றிக்கொண்டு வரும்படி எனக்குக் கட்டளையிட்டான், ஆதலால் தேவரீர் எழுந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, துளசிதாசர், எமக்கு அரசனிடத்துக்குப் போகவேண்டிய காரியம் ஒன்றுமில்லையாயினும், அவனை வைஷ்ணவனுக்கலாமென்று நினைத்து, அந்த மந்திரியோடு தேர்மேலேறி, ஹஸ்திநாபுரத்தை யடைந்து, அரசன் எதிர்கொண்டு வந்து அழைத்துப் போகப்போய், அவனிட்ட சிங்காதனத்தில் எழுந்தருளினார். இவருக்கு ஷோடசோபசாரங்களும் செய்து கைகூப்பி வணங்கித் தோத்திரஞ்செய்து, ஐயரீர், நீர் செய்த அற்புதங்களைக் கேட்டு இவ்வுலக முழுதும் புகழ்கின்றது. ஆகை

யால் நான் உம்மையன்றி வேறொரு தெய்வ மிருப்பதாக மதித்திலேன் ஆனால், இந்தஅற்புதங்களை எனக்கெதிரே செய்யவேண்டுமென்று சொல்ல தாசரானவர், எனக்கொரு சக்தியுமில்லை, ஸ்ரீராம நாமமே பல அற்புதங்களை யும் செய்யும்என்றருளிச்செய்ய,அரசனுனவன்,ஸ்ரீராமமூர்த்தியைக் காட்டா மற் போனீரானல் உம்மை விடமாட்டேனென்று சொல்லி, அருகிலிருப்பவ ராகிய சிலரை யழைத்து, இந்தத் தாசரை விடாதேயுங்களென்று கட்டளை யிட்டு, மேல்மாளிகையை யடைந்தான். பிறகு தாசரை அரசன் ஜாக்கிர தை படி காவல்செய்துவைத்தார்கள். அப்போது தாசரானவர் ஸ்ரீ ஹநுமந்தரியிற் சிறந்தவராகிய ஸ்ரீ ஆஞ்சநேயரை நினைத்துத் தோத்திரம்பண்ண,மாருதியான வர் இவருக்கு ப்ரத்யக்ஷமாகி நின்றார். அவரைத் தாசர் நோக்கி, ஐயனே உன்னிடத்தில் அன்பில்லாதவனுகிய அரசன், ஸ்ரீ ராமபிரானைக் காட்டுவ தாகவென்று என்னைக் காவற்படுத்தி மிகவும் துன்பம் விளைத்தான், ஆகை யால், இப்பொழுதே என் துன்பத்தை யொழித்தருளவேண்டுமென்று பிரா ர்த்திக்க, மாருதியானவர் தமதிடத்துக்கு வந்து, தமது சேனையை நினைத்த மாத்திரத்தில், பதினுயிரம் வானரவீரர் அந்த க்ஷணமே வந்து நிற்க, மாருதி யானவர் அவர்களை நோக்கி, இத்தலத்தைச் சுற்றுநேரத்தில் அதம் பண்ணுங்க ளென்று கட்டளையிட, உடனே அவர்களும் கட்டளையிட்டதே போதுமென் று மரங்களாலும், கற்களாலும் அடித்தும் எறிந்தும் வீடுகளைப் பொடி செய்து, அரசன் மாளிகையைப் பேர்த்துக் கடலிலெறிந்து, வீதிகளில் ஜன ஜங்கள் சஞ்சரிக்க இடமில்லாமல் கல்லாலும், மரத்தாலும் வழியடைத்து ஊராரையும் பலவகையாய்க் கொல்ல, ஊர்முழுதும் கோவென்றலறி யழுங் கூக்குரல் அதிகரிக்க, ஸ்திரீ புருஷர்கள் யாவரும் அரசனிடத்திற் போய் நி ழ்ந்த செய்தியைச் சொல்லிப் புலம்பினர்கள். அங்கும் வானரங்கள் வந்து அகர்த்தம் செய்வதைக் கண்டு, அரசன் முதலான யாவரும் கலங்குங் காலத் திற், தாசரை அழைத்துக்கொண்டு வந்தவன் முதலான ராஜபரிசாரகர்கள் அரசனை நோக்கி, ஐயனே, இங்கே வந்திறங்கியிருக்கிற சாதுவான தாசருக்குத் தேவரீர் செய்த துன்பத்தினுல் இவ்வாறு நேரிட்டது போலும் என்று சொல்ல,அரசனும் அப்படியிருக்கலாமென்று ஆலோசித்து, இன்னம் சிறிது நேரத்தில், இந்த வானரப்படைகள் இவ்வூரைத் தலைகீழாகச் செய்வதற்கு சந்தேக மில்லையென்று சொல்லி, காசியில் வாழ்வோராகிய தாசரை இங்கே வரவழைத்தது நமக்கு அடாதகாரியம் என்று தன்னை நொந்துகொண்டு மனந்தளர்ந்து, உடல்நடுங்கி, அச்சத்தால் நாவுலர்ந்து,மெய்த்தவத்தையுடை யவராகிய துளசிதாசரைப் பிரார்த்திக்கும் பொருட்டு வந்தான்; வந்து ஆதி காலத்தில் துரியோதனன் துர்வாசருக்குச் செய்த தீமையும், துர்வாச ரிஷி அம்பரீஷ ராஜனுக்குச் செய்த தீமையும், ஸ்ரீஹரி பஜனத்தாலல்லவோ நீங்கி னது என்று அவர்களுடைய புகழையெடுத்துப் பேசி, அத்தன்மைபோலவே [illegible]டியேன் செய்த தீமையையும் பொறுத்தருளவேண்டுமென்று பிரார்த்தி க்க, அவர் மாருதியைப் பிரார்த்திக்க, அவர் வானரவீரர்களை நியமிக்க, வானர

வீரர்கள் மறைந்தார்கள்; மறைந்ததைப் பார்த்து வேந்தனுனவன் பயபக்தி யோடு வணங்கி, அந்த நகரில் வாழ்வோராகிய ஜடமூடர் என்பவரைத் தொண்டராக்கி, ஒருவருஷகாலம் அவ்விடத்தில்தங்கியிருந்தார். பிறகு உச்சயினி புரத்தில் போய்த் தங்கியிருக்குங் காலத்தில், அங்கே ஒரு தனவானுகிய சௌதாகிரி யென்னும் வணிகன் இருந்தான்; அவனுக்கு ஒரு மகளிருந்தாள்; அவள் அறிரூபவதியாய் வளரும் நாளில், தாய்தந்தையர் அவளுக்குத் தகுந்த கணவனைத் தேடி மணம்புரியத் தம் உறவினரோடு உசாவி, அந்தப் பெண்ணினுருவத்தை ஒரு படத்திலெழுதி, அதைத் தகுதியானவரிடத்திற் கொடுத்து, நமது குலத்துக்கேற்ற புருஷன் எந்தத்தேசத்தி லிருந்தாலும், உமது மனத்துக்குச் சம்மதியானுல் கொண்டுவாருங்களென்று சொல்லியனுப்பினன்; அனுப்பப்பட்டவர்கள் ஆறுமாசகாலம் அநேக தேசங்களில் தேடியும் தகுதியாகிய கணவன் கிடைக்காமல், எமது வணிகனுக்குச் சௌந்தர்ய வதியாகிய ஒரு பெண் பிறந்ததனுல் எமக்கு இந்தத் துன்பம் நேரிட்டது என்று மனஞ் சலித்து, பரணபூரில் வாசம் செய்வோனுகிய ஒரு சௌதாகிரிக்கு மக்களாகப் பிறந்தவர்களுள்ளே, ஒரு கண்ணில்லாத ஒரு மகனும் ஒரு மகளும் பிறந்திருந்தார்கள். அப்போது மணமகனைத் தேடிவந்தவர்கள் அந்த வணிகன் வீட்டையடைந்து, அவன் மக்களுடைய குணமும் நல்ல அழகும் பார்த்து, அவன் பார்க்கத் தான் கொண்டுவந்த படத்தை அவன் கையில் கொடுக்க, அழகுமிகுந்த அந்தப் படத்தை நோக்கி, அதில் எழுதப்பட்டிருந்த பெண்ணினது அழகைப் பார்த்து மதித்து, மணமகனைத் தேடி வந்த பெரியோர்களே, என் மகனுக் கொரு கண்ணில்லை, அவனுக்குப் பெண் கொடுக்க உங்கள் வணிகனுக்குச் சமமதியாகுமா, விசாரித்து அபிப்பிராயம் சொல்லுங்கள் என்று சொல்ல, அவர்கள் வணிகனை நோக்கி, உமது பெண்ணுக்கு ஆணுடை யுடுத்து அவ்வூருக்கு அழைத்துக்கொண்டுபோய் அங்குள்ளவர்களுக்குக் காட்டி, அவர்கள் சம்மதித்து மணஞ்செய்கிற காலத்தில் ஆணும் பெண்ணுமாக நெருங்கிக் கூடுங்கூட்டத்தில், இருவர்க்கும் தெரியாமல் உமது புதல்வனைக்கொண்டு மங்கலியம் பூட்டுவிக்கிறேமென்று சொல்ல, அப்படியே சௌதாகிரி சம்மதித்து தன்மகளை ஆணுடை யுடுக்கச் செய்து, சுற்றத்தாருடன் உச்சயினிபுரத்துக்குப் போய், பெண்ணினுடைய சுற்றத்தாரால் அமைக்கப்பட்டிருந்த விடுதியில் இறங்கியிருக்க, பெண்ணின் தாய் தந்தையரும் சுற்றத்தாரும் அங்குவந்து மணமகனது அழகைப்பார்த்து மனமகிழ்ந்து, நமதுபெண்ணுக்குத் தகுந்தகணவன் கிடைத்தானென்று மணத்துக்கு வேண்டும் பொருள்கள் யாவும் சேகரித்து, சுப முகூர்த்தம் பார்த்து, மங்கலியம் பூட்டுதற்குரிய மங்கல ஹோரை வந்தவுடனே, பலவகையாகிய வாத்தியங்கள் முழங்கவும், சுமங்கலிகள் மங்கலவாழ்த்துப் பாடவும், கன்மையாகிய வேதியரும், சுற்றத்தாரும், அவ்வூரிலுள்ள மற்றையோரும் அந்த மணப்பந்தலில்வந்து நெருங்கியிருக்க, மாப்பிள்ளையின் தந்தையானவன் அந்தக்கூட்டத்தில் தன் புத்ரனுல் தாலிகட்டுவிக்கக்கூடாமல்என்செய்வோமென்று

சும்மாவிருந்தான். அப்படியிருக்க, முன் வந்த மாப்பிள்ளையை யழைத்துப் போனவர்கள் வேடங்கொண்ட மாப்பிள்ளையைக்கொண்டு மங்கலகாண் தரிப்பித்தார்கள். அதன்பிறகு செய்யவேண்டிய சடங்குகள் யாவும் குறைவறச் செய்து மணமுடிவு பெற்றபின்பு மங்கலஸ்நாகம் செய்விக்கும்போது, வேஷ மாப்பிள்ளையைப் பெற்றவன், தனது வஞ்சகவியாபாரம் வெளிப்படுமென்று பயந்து பெண் வீட்டாரை நோக்கி, என் புதல்வனுக்குச் சரீர சௌக்ய மில்லை யாகையால் இன்று நிறுத்தி நாளையதினம் மங்களஸ்நாகம் செய்விக்கலாமென்று சொல்ல, பெண்வீட்டா ரெல்லாரும் அப்படியே யாகட்டு மென்று இசைந்திருந்தார்கள். இதையறிந்து, மாப்பிள்ளை வீட்டாரெல்லாரும் ஒருவருக்கும் தெரியாமல் ஒளித்துப்போய்விட்டவுடனே, பெண்வீட்டார், வந்த மாப்பிள்ளைவீட்டாரைக் காணாதவர்களாய், மாப்பிள்ளைவீட்டார் ஒளித்துக்கொண்டுபோவதற்குக் காரணம் யாது என்று ஆலோசித்து, ஒன்றும் தோன்றாமல், வேஷம் பூண்பித்து அழைத்துக்கொண்டுவந்த மாப்பிள்ளைக்கு ஸ்நாநம் செய்விப்பதற்காக, பூண்டிருந்த ஆடை யாபரணங்களைக் கழற்றிப் பெண்ணென்றறிந்து காரணமடைந்து மிகவும் துக்கித்து, ஈ யவ்வுரப் பெண்ணைப்பிரிக்க, உன்னை மணமகனுக அலங்கரித்து அழைத்துக்கொண்டு வர நீயும் சம்மதித்து இங்குவந்து, எம்மை யெல்லாரும் பரிஹசித்து நகைக்கும்படி அவமாநம் செய்யலாமா என்று கேட்க, அவள் பேசாமல் மௌனமாயிருக்கக்கண்டு, எல்லாரும் அவளை யடித்துத் துன்பப்படுத்தி, பஹிரங்கமாகக் கொண்டுவந்து கழுதைமேலேற்றி ராஜக்ருஹத்தைப் பிரதக்ஷிணம் செய்வித்து, கெடிய மூஞையையுடைய கழுவிலேற்றத் துணிந்து, அரசனது கட்டளையை மேற்கொண்டு விரைந்து வரும்போது, அந்தப் பெண்ணவள், என்தந்தையிப்படிச் செய்தானேயென்றும் நடுவுநிலைமையையுடைய தெய்வமேயென்றும் அழுதுகொண்டு வரும்போது, அந்த வழியில் துளசிதாசர் வரக் கண்டு, அவர் சிறந்த பாகவதர் என்று தெரிந்து, இவர் திருவடியை வணங்கினால் நமது துன்பமுழுதும் நீக்குவாரென்று, விரைந்து அவ்விடத்தில் இறங்கி அந்தத் தாசருடைய திருவடியை வணங்க, அவர் இவளை மாப்பிள்ளையென்றெண்ணி, நீயும் உன் மனைவியுமாக நெடுநாள் வாழ்ந்திருக்கக் கடவீர்கள் என்று வாழ்த்த, அவளோடுகூடி வந்தவரெல்லாரும் மிகவும் நகைக்க, இவர்கள் நகைப்பதற்குக் காரணம் என்னென்று தாசர் வினவ, அந்தப் பெண்ணவள் தன் வரலாற்றையெல்லாம் சொல்லி, தான் பெண்ணென்பதை வெளிப்படுத்தினள். வெளிப்படுத்தித் தாசரை வணங்கின மாத்ரத்தில், மெய்த்தவத்தினராகிய தாசரானவர் இது என்னபுதுமையாயிருக்கிறதென்று ஆலோசித்து, பெண்ணே, நீ அஞ்சவேண்டியதில்லை, நான் சொன்னபடியே விட்டலன் உன்னை ஆண்மகனுகவே செய்வானென்று சொல்ல, தக்ஷணமே அந்தப் பெண்ணவள் ஆணுருவம்கொண்டு விளங்கக்கண்டோரெல்லோரும் அதிசயித்தார்கள். இந்தப் புதுமையை அந்த நகர்க்கு அரசனவன் கேள்விப்பட்டு, தாசர் சரித்திரம் மிகவும் நன்றாயிருக்கிறதென்று

வந்து அவர் திருவடியை வணங்கிப் புகழ்ந்து, அவ்விதமாகப் பெண்ணைபிருந்து பிறகு ஆண்மகனுகிய மாப்பிள்ளையை அழைத்துப்போய், தன் அரண்மனையில் கலியாணப்பெண்ணை முன்போலவே மணமுடித்த பிறகு, நல்லோர் யாவரும், அவ்வேந்தன்செய்த பூஜையையேற்று, அன்போடு கோகுலத்தை யடைந்து, யமுநாநதியில் மூழ்கி, ஸ்ரீ கண்ணபிராணைச் சேவித்து, பிருந்தாவனத்துக்கு வந்து, சார்ங்கபாணிஸ்வாமியைத் தரிசித்து, ஒரு மாதம் அங்கு வாசம்செய்து, மதுராபுரிக்கு வந்து, யமுநையில் மூழ்கி, அங்குள்ள ஸ்ரீ கண்ணபிராணை வணங்கி அவ்விடத்தில் தங்கியிருந்தார். இருந்தவர், நான்கு யுகங்களிலும் அடியார் புகழையே பேசி நின்ற புண்ணியத்தால், புண்யாத்மாவாயிருக்கிற "பிரியர்" என்னும் தாசர் வாழ்கிற வீட்டில் வந்து, நீர் விரும்பிச் செய்யும் புத்தகம் வேண்டுமென்று கேட்க, இவர் வைபவம் அதில் இல்லாமையால், துளசிமாலையைத் தரித்த ஸ்ரீ கண்ணபிரான், ஒருவருக்குந் தெரியாமல் வந்து, அதுவும் செய்திருப்பதாக அமைத்துவைத்தார். புதிதாய்ப் புணைந்துவைத்த புத்தகத்தைக் கொண்டுபோய், ஆலயத்தில் ஓதி முடித்து, நான் அறிந்து எழுதாததை ஆலோசித்து, ஸ்ரீராமபிரான் இன்று தானே யெழுதினதைப் பாருங்களென்று சொல்ல, பெரியோர்கள் அதை ஆராய்ந்து பார்த்து, மேல், நாம் சொல்லத் தகுந்ததுண்டோவென்று மெச்சுகின்றவர்களானார்கள், ஸ்ரீராமபிரான் எழுதத் தகுந்த சிறப்புப்பெற்ற நாதரைத் தரிசிப்போரும், இவரது வைபவத்தைஅலங்கரித்துத் தோத்திரஞ் செய்வோரும், இவ்வுலகத்தில் சகல பாக்யங்களையும் பெற்று வாழ்ந்து, பிறகு ஸ்ரீ ஹரிபக்தியைப்பெற்றுப் பகவத்கருணாபவமாகிய இன்பத்தை அநுபவித்து, சரீர நீக்கத்தில் எக்காலத்தும் அழியாததாகிய பரம பதத்தையும் அடைவார்கள் என்று சொல்லி, மேலே நாமதேவர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

துளசிதாசர் சரித்திரம் முற்றிற்று.

## ச-வது நாமதேவர் சரித்திரம்.

ஸ்ரீ லக்ஷ்மீநாதராகிய பகவான் உத்தவரையும், சுகரையும் நோக்கி, நீங்கள் இருவரும் பூலோகத்தில், மாநுஷ புத்ரர்களாகப் பிறக்கக் கடவீர்களென்று நியமிக்க, அவர்கள் பகவானைநோக்கி, கூரீராப்திநாதனே, உமது திருவுளப்படியே செய்கிறோம், எங்களை அயோநிஜர்களாய்ப் பிறக்கும்படி அருள் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, கருணைக்கடலாகிய பகவானும் அவர்களைப் பாலகர்களாக்கி, கிளிஞ்சிலினுள்ளே யமைத்து, மேகமானது கங்காநதியிலும் பீமாநதியிலும் விளங்குவதாக மழைத்துளிகளுடன் விழுவிக்க நியமித்தார். அப்போது பீமாநதியில் தோன்றி, மேன்மேலும் வளர்கின்றி பெருக்கிலே மிதந்து கிளிஞ்சில்கள் வர, அவற்றினுள்ளே வாழ்கின்ற மெய்யன்பர்,

விட்டலனுடைய நாம ஸ்மரணை செய்துகொண்டு சந்தோஷமிருந்திருக்தார் கள். இப்படி யிருக்கையில், ஞானத்தினால் உயர்ந்து, பண்டரிபுரத்தில் குணயி என்கிற மனைவியோடு கூடி வாழ்கின்ற தாமாஜிச் செட்டியானவன் தினந்தோறும் பீமாகதியில் மூழ்கி, ஸ்ரீ ஹரியாகிய விட்டலனைச் சேவித்து வருகிற நியதியில் மாறுபடாமல், இல்லற நடத்தி வருகாளில், ஒருநாள் அவன் மனைவி, கணவனைநோக்கி ஒரு வார்த்தை சொல்லுகிறாள்; என்னெஞ் நால், உயிர்த்துணைவரே, நமக்குப் புத்திர லாபம் உண்டாகவேண்டுமென்று விட்டலனை வணங்கி வரம்பெறக் கடவீரென்று சொல்ல, செட்டியானவன் மனைவியைநோக்கி, வயதுமுதிர்ந்த வுன் கர்ப்பத்தில் இனிப பிள்ளைபிறக்கு மோ, உனக்குச் சற்றியினும அறிவில்லையென்றுசொல்ல, மனைவியானவள் கணவனைநோக்கி, சிருஷ்டிகர்த்தாவாகிய பரப்ரமதேவனும் ஒருகாலத்தில் கன்றைபோ காலையரை மறைக்குமபொருட்டுச் சேயாசவும கன்றுகவும் தோன்றினன். இதைச் செய்தியை நீர் அறியாமல் பேசுகின்றீர் என்று சொன்ன பிறகு, தாமாஜியானவன், திருமாலின் கோயிலுக்குப்போய், உன் வேண்டு கோளைப் பகவானுக்கு விண்ணப்பஞ்செய்கிறேன். அவர் அருள் செய்வாரா யின், பெற்றுக்கொள்வாயாக வென்று கோயிலுக்குப் போய், பகவானை வணங்கித் தன் மனைவியின் கருத்தை நிறைவேற்றவேண்டுமென்று பிரார்த்திக்க, பகவானுனவர் அந்தக்ஷணமே நித்திரை வருமபடி பண்ணி, அவர் கனவிலெழுந்தருளி, பீமாகதியில் கிளிஞ்சில் வயிற்றில் அமைந்திருக்கிற குழந்தையை நாளைக்காலையில்போய் எடுத்துக்கொள்ளலாமென்று அருளிச்செய்ய, செட்டியார் தமது மனைவியிடத்தில் வந்து இந்தச் செய்தியைச் சொல்லி, மறுநாள் உதயத்தில் நதிக்குச் சென்று மூழ்கும்போது, கிளிஞ்சில் மிதக்கக் கண்டு, அதை யெடுத்துவந்து திறந்து, அதற்குள்ளே குழந்தை யிருப்பதைப்பார்த்து, அந்தக் குழந்தையை அன்போடு கொண்டுவந்து மனைவியிடத்தில் கொடுக்க, அவள் விருப்பத்துடன் வாங்கினவுடனே, தனங்களில் பால் மிகுதியாகச் சுரக்கவே, அந்தக் குழந்தைக்கு மனமகிழ்ச்சியோடு ஊட்டினாள். குழந்தைகள் இல்லாத காலத்திலே புதல்வனைத் தந்து, ஊட்டப் பாலும் தந்தருள்செய்த பகவானுடைய கருணையை மிகவும் கொண்டாடி, அந்தக் குழந்தைக்கு விட்டலனுடைய பெயர் விளங்கும்படி நாமதேவர் என்று பெயரிட்டு, நாளொருவண்ணம் பொழுதொருமேனியாய் வளர்த்துவரும் நாளில் ஒருநாள் தந்தையாகிய செட்டியார் சந்தைக்குப்போயிருந்ததனால், தாயானவள் இந்தப் புதல்வரை நோக்கி, இந்தப் பிரசாதத்தைக் கோயிலுக்குக் கொண்டுபோய்ப் பகவானுகிய விட்டலனுக்கு நிவேதித்துக்கொண்டுவாவென்றனுப்ப, நாமதேவரானவர் அப்படியே கோயிலுக்குப்போய்ப் பகவானுக்குத் திருமஞ்சனம் சமர்ப்பித்து, பீதாம்பரம் உடுத்தி, புஷ்பமாலைசூட்டி, திருவாபரணங்கள் சமர்ப்பித்து, தூபதீபாராதனம் செய்து, மற்றுமுள்ள உபசாரங்களையும் செய்து, வணங்கினின்று, இந்தப் பிரசாதத்தை அமுது செய்தருளவேண்டுமென்று விட்டலபகவானைப் பிரார்த்தித்து, அர்ச்சாரூபமாயெழுந்தருளி

யிருக்கிற பகவானுனவர் அமுது செய்தருளாதிருக்கக் கண்டு, என் தந்தை யானவர் தினந்தோறும் கொண்டுவந்து நிவேதிக்கிற பிரசாதத்தை அமுது செய்கிற தேவரீர், இன்று அவர் சந்தைக்குப்போன தனுல் அடியேன்கொண்டு வந்த பிரசாதத்தை, அமுது செய்யாமலிருப்பதை நோக்கினுல் என்னிடத் தில் ஏதாயினும் குற்றமிருக்கலாமென்று தோன்றுகின்றது; அடியேன் என் செய்வேனென்று மனம் வருந்தி, அர்ச்சாவிக்ரஹங்கள் அமுது செய்யுமென் கிற எண்ணமுள்ளவராதலால், மறுபடியும், சுவாமீ, அடியேன் இப்படி பிரார்த்தித்தும் தேவரீர் அமுது செய்யாதிருக்கிறீர், இந்தச் செய்தியை என் தாயினிடத்தில் சொல்லுவேனுனல், நீ யென்ன குற்றஞ் செய்தாயென்று என்னே அடிப்பாளே, இதற்கு அடியேன் என்செய்வேன், என்ன பிழை செய்திருந்தாலும் பொறுத்துக்கொண்டு இந்தப் பிரசாதத்தை அமுது செய்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, விட்டலப்பெருமான் திருவுளம் இரங்கி, நிஜரூபமாய் எதிரே எழுந்தருளி, இவர் அழுதகண்ணீரைத் தமது திருக்கரத்தால் துடைத்து, முகவாட்டத்தை நீக்கி, இவரைத் தழுவிக்கொ ள்ள, இவர் பிரசாதத்தை யெதிரே வைக்க, பெருமானும் திருவுள மகிழ்ச்சி யோடு அமுதுசெய்து, இந்தச் செய்தியை ஒருவரிடத்திலும் சொல்லவேண் டாமென்று நியமிக்க, நாமதேவரும் பெருமானே வணங்கி விடைபெற்று வீட்டுக்கு வந்தவுடனே, தாயானவள் இவர் வெறுங்கையோடு வந்ததை நோ க்கி, அப்பா, பிரசாதத்தை யாருக்குக் கொடுத்துவிட்டு வந்தாயென்று கேட்க, ஒருவருக்கும் கொடுக்கவில்லை, விட்டலப் பெருமானே அமுது செய் தார் என்றனர். இதைக்கேட்ட தாயானவள் அதிசயித்து, செட்டியார் வந்த பிறகு உண்மையை யறியலாமென்றிருந்து, வந்தவுடனே அறிவிக்க, அவ ரும் ஆச்சரிய மடைந்து, இதன் உண்மையை அறியவேண்டுமென்று மனத் தில் யோசித்து, நாமதேவரை நோக்கி, நமது பிரசாதத்தை ஏற்று அமுது செய்த விட்டலப்பெருமான் இன்றும் அப்படி செய்யக் காட்டு என்று, பிரசாதத்தை யேந்திக்கொண்டு கோயிலில்போய், தாம் பக்கத்திலே நின்று, நாமதேவரை நோக்கி, நீ போ யிந்தப் பிரசாதத்தை நிவேதிக்க வேண்டு மென்று கையிற் கொடுக்க, இவர் பகவானுக்குச் செய்யவேண்டிய உபசார ங்கள் யாவும் செய்து முடிந்தவுடனே, அமுது செய்தருளவேண்டுமென்று பிரசாதத்தைக் காட்ட, விட்டலப் பெருமான் சந்தோஷித்து, உன் தந்தை க்குத் தெரியும்படி நான் வெளியாகமாட்டேனென் றருளிச்செய்ய, நாம தேவர், பின்னும் கைகூப்பி, நீயோ கபடன், என் தந்தைக்கு உன்னுருவை விளங்கக் காட்டி இந்தப் பிரசாதத்தையும் அமுது செய்யாவிடில், உன்னை விடமாட்டேன் என்றார். இதைக் கேட்ட பகவானுனவர் மகிழ்ந்து நகைத்து, அன்போடு பிரசாதத்தை அமுதுசெய்து, விடைகொடுக்க, தாமாஜிச்செட்டி யார் அதிசயித்து, இவரிடத்தில் அன்பைப் பெருகச் செய்து, நீ எனக்குப் புதல்வனுக வந்தமையால் பகவானே ப்ரத்யக்ஷமாகக் கண்டேன், மேலும் வாவென் றழைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்து, கடந்த சங்கதிகள் எல்லாம்

மனைவிக்குச் சொல்ல, மனைவியானவள் கணவனைநோக்கி, இத்தச் சிறுவனை காம தேவனென்று நினைக்கவேண்டுமே யன்றிப் புதல்வனென்று நினைக்க லாகாது, இவன் அயோநிஜன், ஆகையால் பகவானுக்கு மெய்யன்பனுவான் என்று தினந்தோறும் பூஜித்து வந்து தகுந்த பருவம் வாய்த்தவுடனே மணஞ் செய்வித்துச் சில நாளின் பின்னே இவர்க்கு ஒரு புதல்வன் பிறந்த அழ குள்ளவனுய்த் தோன்ற, அச் சிறுவனைப் பார்த்து மகிழ்ந்து, சௌளஞ் செய்யவேண்டிய காலத்தில் செய்ய, அப்பொழுது கருடக்கப்பெருமான் வரி கைகொண்டுவரக் கண்டு, பேரனுக்குச் சிறந்த பெயரிடவேண்டு மென்று சொல்ல, நாராயணன் என்று பெயரிட்டான். பின்பு, மருமகளை மகனுடு சேர்த்து, செய்யவேண்டியவற்றை விதிப்படியே செய்து, பகவான் அருள் செய்த ஆடை ஆபரணங்களையும் தரிப்பித்து, கருடக்கன் போய்விட, குணவி யானவள், மகனை நோக்கி, ஐயனே, உன் தாய்தந்தையாராகிய நாங்கள் இரு வரும் மூப்புப் பருவத்தை யடைந்தோம், நீயோ சதாகாலமும் ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தனம் செய்துகொண்டு விட்டனய் பெருமானையே ஆசிரயித்திருக் கிறுய், நாங்கள் உன் மனைவி மகன் என்பவர்களுடன் வறுமையால் வருந்து வதைப் பார்த்து, அயலா ரெல்லாரும் நகைக்கிறார்களே, என் செய்வோம், சொல் என்று கேட்க, நாமதேவருக்கு அநுதாப முண்டாகி, கோயிலுக்குப் போய், அங்கே எழுந்தருளியிருக்கிற பகவானை நோக்கி, பாண்டுரங்கா, என் என்னைக் குடும்பத்தி லிருத்தினுய், உனக்கு இரக்கமில்லையா, எங்கள் துயர த்தை அறிந்திலையோ என்று சொல்லி, மனம் கலங்கிக் கண்ணீர் வடித்துக் கொண்டு நின்றார். இவரை ஸ்ரீ லக்ஷ்மீநாதன் நோக்கி, இன்று உனக்குத் தன்ப முண்டாக்கினவர் யாரென்று கேட்டு, கண்ணீர் துடைத்து மார் போடு அணைத்துக்கொள்ள, நாமதேவர் சொல்லுகின்றார்:—வேதப்ரதிபாத் யனே, உன் திருவடியை என் மனமானது மறவாதிருப்பதைக் குறித்து, என் தாயானவள் குறை கூறுகின்றுள். அத்தக் குறையை உன் திருவருளை க்கொண்டு களைந் தருளவேண்டுமே என்று பிரார்த்திக்க, பகவானுனவர் கேட்டு, நாமதேவா, நீ என் பக்கத்தில் அமர்ந்திரு, இருப்பாயானுல், பவ வினையானது இனி உன்னைத் தொடராது என்றருள்செய்ய, பகவானுடைய திருவடியைத் தொழுதுகொண்டு இங்கே யிருப்பது நன்மையென்று நினைத் திருப்பவராகிய நாமதேவர், கருணைநிதியாகிய பகவானுடைய திருமை பெரு கும்படி வணங்கி, நிர்மலனே, உனது அருள்வடிவம என் மனத்தில் விளங் கும்படி செய்வதுமல்லாமல், நான் எத்தப் பிறவி பிறந்தாலும் உன்பெயரை மறவாமல் உச்சரிக்கும்படி எனக்குக் கிருபை செய்ய வேண்டும் என்று சொன்னவுடனே, அன்பர்க்கு அருள்செய்பவனுகிய விட்டலப் பெருமான், திருமகளை நோக்கி, நீ இவனது நிலைமையை நன்ரு யறிந்துகொள்வாயாக என் றருள்செய்தவுடனே, பிராட்டியானவள் நாமதேவரை நோக்கி, உன் வீட்டின் நிலைமையைச் சொல்லென்று கேட்க, இவர், எம்பிராட்டி, என் வீட்டினது நிலைமையை, எல்லாம் அறிந்த நீ அறிந்திலையோ, என்னைக்கேட்க

வேண்டுமோவென்று சொல்ல, இவர் சொன்னசொல்லே எம்பிராட்டிகேட்டு, பின்னும் நகைத்து, நீ இவ்விடத்தே தங்கியிருப்பாயானால், மனிஷி மக்கள் தாய் தந்தையர் ஆகிய எல்லாரும் வெறுப்படைந்து பலவகையாய் நிந்தித் பார்கள் என்று சொல்ல, பண்டரிபுரத்திறைவனுகிய விட்டலப்பெருமான் நகைத்து, கருடவாஹநாரூடராய் நாமதேவர் மனைக்கு எழுந்தருளத் திருவுளங்கொண்டும் அவர் மனை முழுதும பொன்மணி முதலியவை நிறைந்திருக்கத் திருவுளங் கொண்டும, வருகிற பகவானுனவர், நாமதேவர் வீடு எங்கேயென்று வினவ, எதிர் வருவோர், அடையாளஞ் சொல்ல, வாஹநத்தை விரைவாய்ச் செலுத்தி, இவர் மனைக்கு எழுந்தருளி, அங்குள்ள நாமதேவர் மனைவியை நோக்கி, நீர் யார், நான் புதியவன், ஆசநம கொடுமென்று கேட்க, மனைவியானவள், இங்கே பெரியோரில்லை, நீர் திரும்பிப போய்விடும என்று சொல்ல, பின்னும் பகவானுனவர், அவளை நோக்கி, நான், நாமதேவனுக்கு உறவினன், அந்த நாமதேவனுக்கு வேண்டிய பொருள்களைக் கொண்டுவந்தேன் என்று சொன்னவுடனே, முன்னேபோவென்று சொன்னவள் ஆசநமிட்டு இதில் எழுந்தருளும் என்று சொன்னுள். அப்போது பகவானுனவர் அவளை நோக்கி, நான் புதியனென்று சொன்னவுடனே போவென்று சொன்ன நீ, இப்போது பொருள் கொண்டு வந்தேனென்று சொன்ன வுடனே, ஆசநம் கொடுத்து உபசரித்தனை. இது நிறை; நாமதேவன், எனனிடத்தில் அன்புள்ளவன், பொருளின் மேல் விருப்ப மிலலாதவன், ஹரிபஜனையில் விருப்பமுள்ளவன், ஆகையால் அவனை நீ வருத்தவேண்டாம், இது அவன செல்வமாகும் என்று பொருட் பொதியைக் கொடுத்து இது செலவாகிவிட்டால் இன்னமும் கொடுபேன் என்று சொல்லுதலும, அவள் சொல்லுகிறுள்:—ஐயனே, உன் மனதில் கோபமுண்டாகுமபடி முனனே சொன்ன கடுஞ் சொற்களைப பொறுக்கவேண்டும, கோவிக்க வொண்ணுது, இங்கே யெழுந்தருளினு யாதலால், அழுதுசெய்து போவென்று பிராத்திக்க, அந்த நாமதேவனில்லாத காலமாதலால் அழுதுசெய்ய மாட்டேனென்று சொல்லி, பகவான் அவ்விடத்திலிருந்து எழுந்தருளி, குன்றுகள்போலே யுயர்ந்து தோன்றுகின்ற கோபுரங்களை, மதில் நிலைகளையுடைய கோயிலிற் போய், திருமகளோடு கூடந்தசெய்தியைச்சொல்லி, அவ்விடத்தே இனிதாகத் தங்கியிருக்க, நாமதேவருடைய மனைவியானவள், இங்கே, பெரு மகிழ்ச்சியோடு, என் கணவரானவர், திருமாலிடத்தில் செலுத்துகின்ற பக்தி அதிகரிக்க, அந்தப் பத்தியின் பயன இப்பொழுது கிடைத்தது என்று, அஞ்சலிசெய்து அந்தப் பொதியை அவிழ்த்து, அதிலே சில பொன்னை மாத்திரம் கைக்கொண்டு, மணிதர் நிறைந்திருக்கிற கடைத்தெருவில்சென்று, தனக்கு வேண்டிய பல பொருள்களை வணிகனிடத்தில் பெறுதத் தன்வீட்டுக்குச் சுகமாய்வந்து, அறுசுவையோடு கூடிய போஜநத்தை அமைத்து வெளிப்பட்டவளாகிய குணியி, தன் மைந்தனது அன்புக்கு, லக்ஷ்மீநாதன் மகிழ்ந்து இந்த அற்புதங்களைச் செய்ததையறியாமல் விரைந்து, அந்த நாளின் உணவுக்காகவேண்டியவற்றை

ஆராய்ந்து வரும்போதே தன் மகனை நினைத்தாள்; நினைத்து, மைத்தனோக்கி, பொருள் சம்பாதிக்காமல் இருக்கிறாயே என்று கோபித்துக்கொண்டதை நினைத்து, மனம் வாடிப் போனவர் கோயிலில் தங்கி யிருப்பதைக் கேள்விப் பட்டு, கோயில் வாயிலிலுள்ள கோபுரத்தருகில்வந்து, சேவித்துக் கைகூப்பி, கோயில் வாயிலிற் போகும்போது, அவள் வருவதை யறிந்த பகவான், அன் புள்ள புதல்வனைத் தமக்குப் பின்புறத்தில் நிறுத்தி யிருந்தபோது, வந்த தாயானவள், பகவானே, என் மகன் உன்னிடத்தில் எக்காரணம் அன்பு மிகு ந்தவனும், குடும்ப வாழ்க்கையை வெறுத்து, உன் கோயிலிலே வந்து, தன் பம என்பது இன்னதென் றறியாமல், நெடுங் காலமாக உன்னையே ஆசிரய மாய்ப் பற்றி நின்றால், வறுமையால் உண்டாகிற துன்பத்தால் மெலிந்து யாம் ஆற்றதவர்களாய் வருந்துகிறோம், யாம் தளர்வடையும்படி இப்படிச் செய்வது தருமியாகுமோ, இவனை அன்புமிகுதியோடு வளர்த்தது இப்படி யிவன் செய்வதற்கல்லவே, எம்மைக் காப்பாற்றுவானென்று நினைத்துத் தானே வளர்த்தோம், உன்னால் எங்கள் குடி கெடலாகுமோ, உன்னை நம் பின அன்பரிடத்தில் நீ பெறவேண்டுமென்ற எண்ணமே உனக்குள்ளது. பருக்கை, நொய், அவல் முதலான பொருள்களை யேற்றுக்கொண்டு அதற்கு ப் பதிலாகப் பேரின்ப வாழ்வைத் தருகிறாய், அப்படிச் செய்வதற்கும் எமக்குச் சக்தி யில்லையே, எம்மிடத்தில் வறுமையே யன்றி வேறு பொரு ளில்லையே, மாவலியினிடத்திலே மண்ணை யாசித்தாய், நீ யெப்பொழுதும் ஒன்றைப் பெறுவதற்கே இசைந் திருக்கிறாய், உன்னிடத்தில் கொடைத் தன்மை எப்படியுண்டாகும்? ஆதிசேஷனும் உன்செய்கையைச் சொல்ல முடியாது. நான் உன்னைத் தெய்வமென் றெண்ணி நிற்பதனால், உனக்குத் தெய்வத்தன்மை யுண்டாயிருக்கின்றது, இல்லாவிட்டால் உன் ஒளி குறை யும், என்னைக் கண்டமாத்திரத்தில் என்மகனை உன் பின்புறத்தில் ஒளித்து வைத்தாய், இது உனக்கு இஷ்டமோ! பகவானே சொல்லுவாயாக வென்று கேட்க, பகவான் அவளைநோக்கி, உன் மகனை நான் கெடுக்க விருமபமாட் டேன், மரத்திலிருக்கிற கனியானது பிருதியாய்க் கனிந்தால் விழுவது ஒரு புதுமையோ! அதுபோலவே, உலகமென்னும் மரமாயமைந்த என் பாதங்க ளில் விழுந்து வணங்குகின்ற இவனை உன் மகனென்று சொல்லுகிறாய், அவன்பொருட்டே நானும் நாமரூபங்களோடு விளங்கி, நாமதேவன் என்னி டத்துக்கு வரும்படி இங்கு வாழ்கிறேன், அவன் என்னிடத்திற்கு வருவதை விலக்குவது உனக்குத் தகாதகாரியம், மகனை அழைத்துக்கொண்டே போக வேண்டும் என்கிற நினைப்பு உனக்கு உண்டாயிருந்தால், என் மனம் மிக வும் வருந்தும் என்று சொல்ல, குணபி சொல்லுவாள்:—நிலத்தை உழுது பயிர்செய்த உழவனை வருத்தி, அரசன் கப்பம் வாங்குவதுபோல, நான் வள ர்த்த மைத்தனை நீ உன் பொருளென்று எழுதுவது உனக்கு நீதியாகுமோ என்று சொன்னபோது, பரமகாருணிகனுகிய சர்வேசுவரன் அவள்மீது இர க்கங்கொண்டு, பெண்ணே, உனக்குச் சமானமானவர்கள் உலகத்தில் ஒரு

வருமில்லை; நீ செய்த தவத்தின் பெருமையைச் சொல்லுதற்கு ஒருவருக்கும் முடியாது; ப்ரஹ்மதேவனிடத்தில் நாரதமுனிவரும், அஞ்சநாதேவியினிடத்தில் அநுமானும், உத்தாநபாதனிடத்தில் துருவனும், அத்திரிமுனிவரிடத்தில் தத்தாத்திரேயரும் அவதரித்ததுபோல, உன்னிடத்தில் இந்த நாமதேவன் தோன்றினனன் என் றருளிச்செய்ய, குணையியானவள் பகவானே நோக்கி, மாயனே, என் மகனுகிய நாமதேவன் உன் திருவடியை விடானுயினும், தாயாகிய என்னையும் என் குடும்பத்தையும் காப்பாற்றும்படியாய்ப் போதித்து என்னிடத்துக்கு வரும்படி செய்யவேண்டும் என்று சொல்ல, எமபெருமானுக்கு அப்படி செய்யத் திருவுள மில்லாமையால் திருமகள் முதலானேராகிய தமது மனைவியரை நோக்கி, நீங்களாயினும் இந்தக்குணுயினையத் தேற்றி விட்டுக்குப் போகும்படி செய்யுங்கள் என்று நியமிக்க, அவர்களும் அப்படியே குணுபிக்கு அநேக விதமாகச் சொல்லியும் கேளாமல் அந்தத் திருமகள் முதலானேரை நோக்கிச் சொல்லுகிறுள். உமக்குத் தலைவராகிய பகவானே வேதங்களும் நீதகயாளன் என்றுசொல்லாநின்றன. அந்தத் நீதகயாளத்வம் நீராகிய எம்மிடத்தில் இல்லாமற்போகுமா, வறுமையால் வருந்துகிற நாங்கள் இந்த மைந்தனுல் சௌக்கியத்தை அடையலாமென்று அன்போடுவளர்க்க வளர்த்து பிரயோஜனப்படப்போகிற சமயத்தில் எங்களுக்கு உதவவொட்டாமல் அவன் மனதைத் தன்னிடத்தில் பதியச்செய்த இந்த விட்டலனுடையசெய்கையை நீங்களும் கண்ணுல் பார்க்கிறீர்களல்லவா? உங்களுக்கும் இரக்கமில்லையா? உலகமுழுதுமதெய்வங்கள்உண்டு. அந்தத்தெய்வங்கள் தம்மை வழிபடுவோர்க்குச் சுகங் கொடுப்பதுண்டு. இந்த விட்டலன் போல நிலேதகமுங்கொண்டு, என் மகனேத் தனக்குப் பின்புறத்தில் ஒளிப்பதும் இல்லறத்துக்கு உதவாமற் செய்வதும் ஆகிய செயல்கள் ஒருதெய்வத்தினிடத்துங் கண்டதில்லை; ஆதலால், விட்டலன் திருத்தேவிமாரே, நீங்கள் அருள்செய்து உமது ஆசைநாயகனுக்குத் திருவுள மிரங்கும்படி சொல்லி என்புதல்வனே என்னிடத்துக்குவரச்செய்யுங்கள், நான் போகிறேன் என்று சொல்லி, புதல்வனே நோக்கி, உலகத்தை யெல்லாம் மோஹிக்கச் செய்பவனுய்ச் சம்ஸாரத்தை யொழித்தற்காகவே எழுந்தருளி யிருப்பவனிடத்தில் நீ எந்நேரமும் இருத்தற்குக் காரணம் என்ன, கமதுகுடும்பம் வறுமையால் படுகிறதுன்பத்தையும் பாராதிருக்கிறுய், இனிநான்பலவார்த்தைகள் சொல்லமாட்டேன், நீ என்னேடு வராமற்போனுல் இவர்கள் எல்லாரும் பார்த்திருக்க, உன்னே வலிந்திழுத்துக்கொண்டு போவேன், அப்படி நான் உன்னே வருத்தப்படுத்துவதற்கு முன்னே நீ யெழுந்து வாவென்று சொல்லி, விட்டலனே நோக்கி, ஐயா, நான் சொல்லுஞ் சொற்களுக்குச் சிறிதும் மறுமொழிசொல்லாதிருக்கிறுய், நீ எமதுகுடியைக்கெடுத்தற்பொருட்டேதோன்றியிருக்கிறுய் என்று சொன்னதைக்கேட்ட பாண்டுரங்கன், குணையியை நோக்கி, உன் மகனேயழைத்துக்கொண்டு போ, என்னே வெறுக்கவேண்டாம் என்றுசொல்லி நாமதேவரை நோக்கி, நீ உன் தாயுடன் வீட்டுக்குப் போவென்று சொல்லி,

அவள் கையிற்கொடுத்தார், அவரும் புதல்வனையழைத்துக்கொண்டு போகிற போது அவனை நோக்கிச் சொல்லுகிறாள்:—நாமதேவா, இத்தப் பண்டரிநாத ரை விரும்பி மனைவாழ்வை வெறுத்தாய், நீயிப்படிச் செய்தற்காகவோ நாங் கள் உன்னை வளர்த்தது என்று கடிந்து பேச, நாமதேவர் மறுமொழி சொல் லாமல், விட்டலனைப் பிரிந்ததற்காக மனந்தளர்ந்து அழுதுகொண்டே வர, அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாள். அப்போது, நாமதே வர் தன் மனைவியால் அமைக்கப்பட்ட போஜ வகைகளையும், பாத்திர வகை களையும், செல்வத்தையும் பார்த்து, பிரமித்து, தாயே, இவ்வகையான பல வளங்களும் நமது வீட்டில் எப்படி அமைந்தன என்றுகேட்க, தாயானவள், அமைதவிதம் எனக்குத் தெரியாதென்று சொல்ல, நாமதேவர் மனைவியா கிய ராஜாயி, தன் கணவனை நோக்கி, நீபோய் நீராடிவாரும் என்று சொல்ல, இவள் நமமிடத்தில் வெறுப்பில்லாமற் பேசுகிறது ஆச்சரியமா யிருக்கின் றது என்றெண்ணி, மனைவியை நோக்கி, இந்தச் செல்வம் நமது வீட்டில் நிறைந்ததெப்படி யென்று கேட்க, மனைவியானவள் இவர் செல்வத்தை விரு ம்பமாட்டாரென்று நினைத்து, மறுமொழி சொல்லாமலிருக்க, அதைக்கண்ட ஜாயி, ஐயனே, நேசவசெட்டியார் உன்னிடத் தன்புகொண்டு ஒரு பொதி நிறைந்த செல்வத்தைக் கொண்டுவந்து நமது வீட்டில் நிறைத்தார், அவரை உன் மனைவியானவள் நோக்கி, செட்டியாரே, இத்தப்பொதி யேதென்றுகே ட்க, அவர் பெண்ணே, உன் கணவன் எனக்கு மனங்கலந்த நண்பன் ஆகை யால் அவனுடைய வறுமை நீங்கும்பொருட்டுப் பொதி நிறையப் பொருள் கொண்டுவந்தேன், இத்தப்பொருள் செல்வானபிறகு வேண்டுமானால் இன்ன மும் கொடுப்பேன், இனி உன் கணவனை வருத்தவேண்டாம், அவனை அல் போடு உபசரித்து வாவென்று சொல்லி இப்பொழுது தான் போனார் என்று சொல்லித் தனக்கு ஊழியஞ் செய்துகொண்டிருப்பவள் சொல்லுவதைக்கே ட்டு, பரிசுத்தமான மனத்தையுடையவராகிய நாமதேவர், நன்றுநன்று, இது செய்தவன் விட்டலப்பெருமானே யாவன்என்று துணிந்து, அருவிநீர்போலக் கண்ணீர் ஒழுக மனம வருந்தி, ஓ மாயவனே, இத்தப் பொருளால் என்னை மயக்கி, இந்த உலகவாழ்க்கையில் அழுத்தத் திருவுளக்கொண்டோ இச்செல் வத்தைத் தந்தாய், ஓய் சுவாமி! பல யாகங்கள் செய்தும், தவங்கள்செய்தும் யோகஞ்செய்தும் உன்னைப் பெறமாட்டாமல அகேகர் அலைந்துகொண்டிரு க்க, அடியேனுக்குப் பொருள் தரும் பொருட்டு நீ வந்தருளினை, இதற்கு அடியேன் என்ன தவஞ்செய்திருந்தேனோ தெரிவதுண்டாகாதனை, உன்னை யன்றி வேறொருபொருளையும் மதிக்கமாட்டேன், இப்படி நீசெய்தது தகுதி யல்ல என்று பகவானைவெறுத்துக்கொண்டு, திரவியம் எல்லாம் வைதிகருக்கு க்கொடுத்து, தன்பஞ்செய்கிற பிணியை நீங்கப்பெற்றவர்போல மகிழ்ந்து, வீட்டுக்குள்ளேபோய், அழுதுசெய்து சுகமாயிருந்தார். இத்தப்பிரகாரமாகச் சிலகாலம் நாமதேவர் முன்போலவே, விட்டலப்பெருமான் எழுந்தருளியிருக் கிற கோயிலில்போய் அத்தப் பகவானை பூஜனைசெய்துகொண்டிருந்தார். இப்

படி யிருக்குங்காலத்தில், பெருமான் ஒருநாள் அவரைக் கிட்ட அழைத்து, காமதேவா, எல்லாப் பொருள்களுள்ளும் நான் நிறைந்திருக்கிறேன் என்ப தை அறிந்திருக்கிறயல்லவா? ஆகையால் என்னிடத்தில அன்பு செய்வது போல, எல்லா உயிர்களின்மேலும் நீ அன்புசெய்யவேண்டுமென்று நியமித்த வுடனே, காமதேவர், தேவரீர் சொல்லவேண்டியதில்லை, உயிர்களின்மேல் மிகுதியாகிய அருளுடையேன் என்றார். அவரது கருத்தை உலகத்தார் அறியும் படி செய்யவேண்டுமென்னும் திருவுள்ளமுடைய பகவான், அபபொழுது, கோரிட்ட துவாதசியில் யாத்திரையாய் வருதவர் போஜனம செய்யும்போது அங்கே ஒரு நாய்போலத்தோன்றி, சோற்றை விரும்பி உலாவும காலத்தில், அந்த யாத்திரைக்காரர் மாறுகொண்டு அடித்து வெருட்ட, மற்றொருவனு டையகட்டமுதையெடுத்துக்கொணடோட, அவன் அடித்தும்பாடியும்அதை பறித்துக்கொண்டான். உடனே அங்கே நீராடுவோருடைய மடியைத் தீண் டின மாத்திரத்தில் அவர்கள் அதட்ட அஞ்சி ஒருபக்கத்தில் சோர்ந்துநிற்க, யாத்திரை செய்வோர் இதைக்கண்டு நாம இதற்குச் சோறிட்டால் நம்மோடு தொடர்ந்துவரும் என்றுகோபித்து அதட்ட, இங்கேயுள்ளவர்களில் ஒருவர்க் காயினும் கருணையில்லையென்று, தன்னிடத்தில் அன்புள்ளோர்தங்கியிருக்கும் இடத்தில்வந்து, அவர்கள் உண்ணுகின்ற அப்பத்தை வாயிற் கவ்விக்கொண்டு எல்லாருங்காணும்படி வெளியேவர, காமதேவர் அதைத்தொடர்ந்து, ஓசுணங் கனே! நெய்யில்லாத அப்பத்தை நீ யுண்ணவேண்டாம், நான்பாத்திரத்திலே கொண்டுவருகிற நெய்யில் துவைத்துத் தருகிறேன், கண்டத்தில்விக்கிக்கொ ள்ளாமல் உண்பாயாகவென்று சொல்லி, நாயின் சமீபத்தில் போக, அதுவும் நின்றது; இவர் விரைந்துபோய் அப்பத்தைநெய்யில்தோய்த்து வயிறுநிறைய வூட்ட, அந்த நாய் மென்று உண்ணக்கண்ட மற்றையோர், காமதேவருக்குப் பித்துப் பிடித்தது என்று பேசிக்கொண்டார்கள். அன்றியும் இவர் ஜீவ காருண்யத்தில் தவறுதவா யிருக்கிறார், இவர் சிறந்த ஞானவான் என்று சிலர் பேசுந்தருணத்தில், நாயுருவங்கொண்டுவந்த ஸ்ரீமந் நாராயணன் நகைக்க, காமதேவர், நீ நாயுருவங்கொண்டோவந்தாய், பகவானேயென்றுசொல்ல, பகவான் காமதேவரை நோக்கி, என்னை யெப்படி கண்டுகொண்டாய் என்ற வுடனே, கோபாலா, உன்னை யறிந்த விசோபாகேசர் சொல்லத் தெரிந்து கொண்டேன் என்று சொல்ல, ஸ்ரீ ஹரியானவர் மனமகிழ்ந்து சென்றனர். அதன்பிறகு சிலகாள் கழிய, திருமகள் நாயகனுகிய பகவான், ஏகாதசியில் அமுதுசெய்ய வரவேண்டுமென்று சொல்ல, காமதேவர், ஏகாதசி ஹரிதின மாகையாலுண்ணத்தகாதென்றுசொல்ல, பகவான், நீ ஹரிதினத்தைத் தகாத நாளென்றாய், முற்காலத்தில், ருக்மாங்கதன் அம்பரீடன் முதலியோர்விரதங் காத்தநாளாதலால் இது சிறந்தநாளென்றருளிச்செய்ய, காமதேவர் சொல்லு கிறார், தெய்வநாயகனே! உன்னருளுக்கு விரோதமான காரியத்தை என்னுஞ் செய்யமாட்டேன் என்றார் இதைக்கேட்ட பகவானவர், நிவரைச்சோதனை செய்யநினைத்து, முதுமைப் பருவமுள்ள ஒருவேதியனைப்போய், காமதேவ

ரைச் சோறிடவேண்டுமென்றுகேட்க, இது ஹரி நிர்மாலையால் சோறுண்ணவெண்ணுதென்று சொல்லி, கந்த மூலாதிகள் வேண்டுமானால் உன் பசி தீரத் தருவேன் என்றார். அதைக்கேட்ட வேதியர் அன்னமில்லாவிடில் என் உயிர் நீங்கும் என்றார்; அதுவன்றியும் நாமதேவா, நீ பூலோகத்திலுள்ள ஜீவராசிகளுக் கெல்லாம் அவ்வவ்வசருக் கேற்றபடி அன்பு செய்கிற அன்பனென்றுலகத்தார் சொல்லக்கேட்டு, உன்னிடத்துக்கு வந்தேன், நீ விரோதமாகச் சொல்லுதல் நியாயமாகுமோ வென்று சொல்ல, இவர் இதனால் எனக்குப் பாவம் சேரிடாதென்ன, மறையோன் தலைமீது விழுந்து, நான் இறப்பது மெய்யென்று சொல்ல, நீ செத்தால் உன்னோடு நானும் சாவது நிச்சயம என்றவுடனே, வேதியன் உயிர் நீங்கினான். அங்குள்ள பெரியோர்கள் இறந்த வேதியனைச் சந்திரபாகை நதியின் கரையில் சேர்த்தார்கள். அவ்விடத்தில் பலருங்கூடி, நாமதேவா! நீ நல்லவனென்று பேரெடுத்து, இப்போது சோறிடாதவன் என்கிற கெட்ட பெயரெடுத்தாய் என்று நிந்தித்துப் பேசவும், தாம் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்து, அவ்வேதியச் சவத்தைச் சுடத்தகுந்த விறகு அமைத்து தாமும் அதனோடு படுத்து கொருப்பையும் தாமே மூட்டினார். ஜனங்களெல்லாரும் பார்த்து யாவரும் இப்படிச் செய்யமாட்டாரென்று வியப்படைய, பகவான் மூண்டெரிகின்ற கொருப்பில் கிடக்கவேதியன் முன்னே எழுந்தருளி, அம்பலத்தை நீண்டியெடுத்து, உன்னை நிகர்த்தவர் மூன்றுலகத்திலும் இல்லையென்று நாமதேவரைப் புகழ்ந்து சென்றனர். பிறகு, ஒருநாள் தன்னிடத்தில் அன்புள்ள ருக்மிணியைப் பாண்டுரங்கர் பார்த்துச் சொல்லுகிறார், எலும்போடுகூடிய சரீரமுழுதும் நோவாதின்றது, ஆனகையாலே, உன் கையினால் நீ பிடிக்கவேண்டுமென்று சொல்லக் கேட்ட ருக்மிணி பிராட்டி லக்ஷ்மீகாதனை, உனக்கு உடம்பு நோவதற்கு நீ யென்ன கஷ்டமான வேலை செய்தாய் சொல்லென்று கேட்க, பகவானுனவர், பெண்ணே, நாமதேவர் வீட்டுக்குச் சில சாதுக்கள் வந்தார்கள், அவர்களெல்லார்க்கும் வஸ்திரம் தோய்த்துத் தரவும், அவர் தாகத்துக்குண்ண நீர் மொண்டுகொடுத்தும், வேறு பல வூழியங்கள் செய்தும், தாசிக்கு மாவரைத்துத் தந்தும் என்னுடம்பு அயர்வடைந்தது என்று சொல்லக் கேட்ட இந்திரை கைகளித்து, தன் நாயகனை மெல்லிய சயனத்தின்மேல் சாயப் படுக்கவைத்துத் தன்மலர்க்கையால் பிடித்து, பகவானுக்குச் சந்தோஷம் உண்டாக்கினாள். அதன் பிறகு மற்றொரு நாள் மாதவனுக்கு அன்பரானவர் பூஜை செய்பவராய்த் தனியேயாடக்கண்ட பகவான், அவர்பின்னே நின்று, தாளங் கொட்டுவதைத் தொண்டரெல்லாரும் பார்த்து, ஆநந்தக் கடலில் மூழ்கினார்கள். தேவரெல்லாரும் பூ மழை பொழிந்தார்கள். பின்னும், பாண்டுரங்கன் மிகவும் மனமகிழ்ந்து, தனது அரைக்கிசைந்த பீதாம்பரம் அவிழ்ந்து தொங்குவதையும் அறியாமல் கூத்தாடத் தொடங்கினார். இப்படிப் பகவான் கூத்தாடுவதை ஞானதேவர் கண்டு, தோத்திரம்பண்ணிக் கையைப் பிடித்துக் கொண்டு, சர்வஜ்ஞனை பரந்தாமனே, தாமரைக்கண்ணனே, தேகப்பற்றும்

அபிமாகமும் மில்லாமல் இப்படிக் கூத்தாடுவதற்குக் காரண மென்ன வென்று வினவ, பகவான் அவரை நோக்கி, அருள்செய்கிறார். பற்றொன்று மில்லாதவனுமும், காமதேவனுடைய பஜனையால் அவசமடைந்தேன் என்று அருளிச் செய்ய, ஞானதேவர், பீதாமபரத்தை யெடுத்து இடையிற் சுற்றினர். அப்போது கபீர் தாசர் அங்கே வர, எல்லாரும் அவரைத் தழுவிக்கொண்டு மனமகிழ்ந்தார்கள். அந்தச்சமயத்தில் திருமகள் ஆலாத்தி யேந்திவர, அதை காமதேவர் வாங்கி, பகவானுடைய திருமுகத்தைச் சுற்ற, பாண்டுரங்கன் அன்போடு ஒன்றைச் சொல்லுகிறார்:—ஞானதேவா, இன்று இங்கே நடந்த பஜனை நன்றாயிருந்தது என்று சொன்னபோது, ஞானதேவர், சுவாமியை நோக்கி, தேவரீர் தாளங்கொட்டி யாடினால் அந்தப்பஜனை நன்றாயிருக்காதா, நான் சொல்லவேண்டியதென்ன என்றார். பகவானும் மகிழ்ந்து, அங்கே வந்திருந்தவர்களுக்கெல்லாம் தன் பிரசாதம் தர, எல்லாரும் பெற்றுச் சுகதேஹ வித்துப் பகவானைப் பலவகையாய்த் தோத்திரம் பண்ணித் தத்தம் இடங்களுக்குப் போனார்கள். நாமதேவர் ஒரு தொழிலு மில்லாமல் ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணை செய்துகொண்டிருந்தபோது, குணாயி அதைத் தெரிந்துகொண்டு, மகனே, நமக்குச் சுகமுண்டாகும் பொருட்டுப் பொருள் சம்பாதிக்காமலிருந்தால், எப்படி இல்லறம் இனிதாய் நடக்கும் என்று சொல்ல, நாமதேவர், பொருளில்லாமல் தொழில்செய்வது எப்படியென்று கேட்க, குணாயியானவள், உடனே பண்டரிபுரத்துக்குப்போய், சற்றும் இரக்கமில்லாதவனும், மலிந்த தானியத்தை வாங்கிச் சமைத்து, ஒரேவேளை அரைவயிற்றுப் போஜனம்பண்ணிப்,பொருள் சேர்த்து, அதிகவட்டிக்குக் கொடுத்து அளவற்றபொருள் சேர்த்துவைத்துக்கொண்டிருக்கிறவனுமாகிய தாதா என்னும் பெயரையுடையவனிடத்திற் போய், என் புதல்வன் ஒரு ப்ரயோஜகமும் இல்லாமல் திரிகிறான், தொழில்செய்யப் பொருளுமில்லை, சுகமில்லை, ஆகையால் இந்தத் தருணத்தில் ஆயிரம் விராகன் உதவி செய்தால் நன்மையாமென்று வேண்டிக்கொள்ள, விட்டலப் பெருமான், அவன் மனத்திற் பிரவேசித்திருந்து பொருள் தருவதற்குச்சம்மதிக்குமபடிசெய்தார். அவனும்ஆறுமாச காலத்துக்குள் பொருள் சேர்ப்பதாக இவர்கள் கைப்பட்டக் கடன் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டு கொடுத்தான்; அந்த ஆயிரம் விராகனை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்து, புதல்வனுகிய நாமதேவரிடத்தில், நடந்த செய்தியைச் சொல்லிப் பொருளைக் கொடுத்து, இந்தப் பொருளைக்கொண்டு வியாபாரம் செய்து அதிக லாபம் பெற்று இல்லறத்தை நடத்தக்கடவா யென்றார். அந்தப்பொருளைப் பெற்றுக்கொண்ட நாமதேவர், சிலவேதியரோடுகூடி ஆலோசித்து, எந்த வியாபாரம் செய்தாலும் குற்றமே யுண்டாகின்றது, ஆதலால் பகவத் பாகவத சமாராதநத் தொழிலே உத்தமமானது, இது இக பர பலன்களைத்தரும் என்று தணிந்து,காசிப்பட்டணத்துக்குப்போய்,கங்காதடிக்கரையிலுள்ள ஒருமடத்தில் தங்கி,சூரியோதயமுதல் அஸ்தமகம்வரைக்கும் அந்நதாகம் செய்வதும்,இராக்காலமுழுதும் ஹரிநாம பஜனை செய்துகொண்டிருப்

பதுமாகிய தொழிலே மேற்கொண்டு நடத்திவருவதைக் கேள்விப்பட்டு, அதே கம்மவேதியர்கள் தங்கள்மனைவிமக்களோடு இவரிடத்துக்கு வந்தார்கள். நாமதேவருடையபுகழ் எங்கும் பரவினதனால் பண்டரிபுரத்திலுள்ள வேதியர்கள் பலரும கூட்டமாய் வந்து இவர் கொடுக்கும் உணவையுண்டு, தக்ஷிணை வாங்கிக் கொண்டுபோவதைக் கண்ட தாதா என்னும் சாவகார் அவ்வேதியரை விஜயவி அழிந்துகொண்டு, துன்பமடைந்து, மனைவியாகிய நாமதேவருக்கு இந்த அக்கிராரம்முதலாகிய ஆடம்பரம் செய்வதற்கு என்னுடைய பொருள் காரணமாயிருந்தது என்று அதிகதூத்திரத்துடன் விபரத்துபோய்க் காசியையடைந்து, இவர் செய்யும் அந்நதாக முதலியவற்றைக் கண்டு, மனம் கொந்து, உண்மையாக இவர் வர்த்தகத்தொழில் செய்வாரென்று நம்பிக்கொடுக்க, அந்தப் பொருளை யெல்லாம் இப்படிச் செலவுசெய்கிறீரே, இனி நமக்குப் பொருள் சேர்வது அருமையென்று மனம் வருந்தி, கடனுக்கீடான காணி பூமிகளுமில்லை, வீடில்லை, உடைமையில்லை, கடனை யேற்றுக்கொள்ளத் தகுந்த சுற்றத்தாருமில்லை, இத்தோடே என் குடி முழுகிப்போயிற்று என்று எண்ணி அயர்வதை நாமதேவர் பார்த்து, துன்பங்கொண்டு வந்து, சாவ்காருடைய பாதத்தில் விழுந்து தோத்திரம் செய்தார். அப்போது இவரை வந்து சூழ்ந்துகொண்ட வேதியரை நோக்கி, இவர் பொருமை பொருந்திய வள்ளல், நீங்கள் உண்ணுங் காலத்தில் இவருடைய திருக்கரத்தால் க்ருஷ்ணார்ப்பணமென்று விடுகிற நீரை யேற்று உண்ணுங்கள், கல்லசமயத்தில் இவர் வந்தாரென்றும் இவர் பெருமையைச் சொல்லுவதற்கு நமக்கு முடியாதென்றும் புகழ்ந்து சொல்லி, சங்கற்பம் கூறி, நீர் வார்த்தருள்வீர் என்று சொன்ன சொல், வார்த்தகருடைய காதில் தழைத்தவுடனே, மிகவுங் கோபித்து, நாம தேவரை நோக்கி, வர்த்தகம் செய்வதற்கென்று என்னை மயக்கி வாங்கிவந்த பொருளை இப்படிச் செலவு செய்யலாமா, படுபாவி, உன் மனம் கல்லா, மரமா, இப்படிச் செய்ததன்றி என்னைத் தகுந்த நீருமை வார்த்துக்கொடுக்கச் சொல்லுகிறாயே, உன்னைப்போன்ற திருட்டை நான் எங்குங் கண்டிலேன், நான் உனக்குக் கொடுத்த பொருளை மறுபடியும் கேட்காதிருக்கவேண்டி என்னை நீர் வார்த்துக் கொடுக்கச் சொன்ன சூதை நான் அறிந்துகொண்டேன், பட்டுப் போன மரம் மறுபடியும் தளிர்க்கக் கண்டாலும் நான் தத்தநீர் வார்த்துக் கொடுக்கக் காணமாட்டாய் என்று வணிகன் சொன்ன போது, நாமதேவர் வேதியரை நோக்கி, நீர் வார்ப்பதற்கு இவ்வணிகருக்கேயன்றி எனக்கு அதிகாரமில்லை, ஆகையால் அவரைப் பிரார்த்தித்து நீர் வார்ப்பித்து உண்ணுங்கள், என்ன லொரு தடையு மில்லை யென்று சொல்ல, வேதியரெல்லாரும் சாவகாராகிய வணிகரைச் சூழ்ந்துகொண்டு, ஐயா, தாங்கள் நீர் வார்த்தால் நாங்கள் உண்டு பசியாறுவோம், நெடுந்தூரத்திலிருந்து இந்த அன்னத்தின் பொருட்டாகவும் தக்ஷிணையின் பொருட்டாகவும் வந்தோம், எங்கள் பசியை நீக்காமற் போவீரானால் உமக்கு நரகலோகப்ராப்தி யுண்டாகும் என்று பலவகையாய் நிந்திக்கக் கேட்ட வணிகன் துக்கித்து, நான் தாந தர்மம் செய்யா

மனும் நல்லவுணவை யுண்ணுமனும், தெய்வவிஷயத்தில் உபயோகிக்காமனும், தாய் தந்தையருக்குச் சிரார்த்தம்முதலியவற்றைச் செய்யாமனும் சேகரித்த பொருளை இவனுக்குக் கொடுத்ததுமல்லாமல்இந்த வேதியரெல்லாரும் நிந்திக்கவும் உடம்பெடுத்தேனே, தென்னமரத்தின் அடியில் நீர்வார்த்தால், அது அந்த நீரைத் தலையிற் சுமந்து தருவதுபோல, இவர்க்குப் பொருளுதவி செய்தால்இவர் நன்றியறிதலோடு செலுத்திவிடுவார்,அதனால் என் பொக்கசக்குறை நீருமென்றெண்ணிப் பொருள் கொடுத்தேன், அது பாலைநிலத்திற் பெய்த மழைபோலாயிற்றே, வேதியர்கூட்டமோ நம்மைவிட்டுநீங்குவதில்லை, நிந்தனையோ ஒழிவதில்லை, அவர்கள் உணவையோ உண்பதில்லை, நீர் வார்க்காமற்போனால் அவர்கள் நம்மை விடுவதில்லை என்று பலவகையாய் ஆலோசித்து, இவர்கள் புசித்தால் என்னைச சேர்வது என்ன குறை யென்று தனக்குள்ளே ஒருஆலோசனை செய்துகொண்டு, வணிகன் சொல்லுகிறான், வாரும் வேதியரே, எண்மேல் பழிசொல்லுதல் நீங்கும்படி நீர் வார்க்கிறேன், ஏற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்னவுடனே, வேதியர் அப்படியே செய்யவேண்டுமென, வணிகன் இதனால் உண்டாகும் லாப நஷ்டங்களெல்லாம் நாமதேவரைச் சேருமேயன்றி எனக்கு ஒன்றுமில்லை யென்று தத்த நீர் வார்க்க, வேதியர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஏற்றுக்கொண்டு நகைத்து, வேதியர் கூட்டம் உண்டபிறகு, புஷ்ப சந்தன தாம்பூலாதிகளும் தக்ஷிணையும் பெற்று ஆசீர்வதித்துப் போனபிறகு, வணிகன் செய்த செய்தி யென்னவென்றால், நான் கடன் கொடுத்த பொருளை இப்பொழுதே தரவேண்டும், கொடுக்குமளவும் உன்னை வேறொரு காரியத்தில் பிரவேசிக்க வொட்டேன், இல்லை யென்பாயானால் உயிர்விடுவேன் என்றுசொல்ல, நாமதேவர் காளியமர்த்தகனுகிய க்ருஷ்ணபக்தனை நினைத்துப் பல வகையாகத் தோத்திரஞ் செய்து, வணிகன் செய்யுந் துன்பத்தை நீக்கியருள வேண்டுமென்று பிரார்த்திக்க, பகவானுனவர் இவர்க்கெதிரே யெழுந்தருளி, அந்த வணிகன் இங்குள்ள தீர்த்தத்தில் மூழ்கினால், அந்த க்ஷணமே அவன் கடன் தீரும்படி செய்கிறேன் என்று கருணையுடனே சொல்ல, நாமதேவர் ஜ்ஞானதிருஷ்டியால் நோக்கி, மாநஸத் தொண்டுசெய்ய, பகவான் உடனே மறைந்தருளினார். உடனே நாமதேவர் வணிகனை நோக்கி, இங்குள்ள இத்தீர்த்தத்தில் மூழ்கிவந்தீரானால் உமது கடன் முழுதும் கொடுத்துவிடுகிறேனென்று சொல்ல, வணிகன், நீரில் அமிழ்த்திக் கொல்லவோ இந்த வுபாய மெடுத்தாய், நான் மூழ்கமாட்டேனென்று வாதுசெய்ய, அவ் வணிகனை நாமதேவர் மறுபடியும் தோத்திரம்பண்ணி, ஐயனே, உன்னைப் போலப் புகழடைந்தவர் இவ் வுலகத்தில் யார்? என்னால் செய்யப்படுகிற இந்த அந்தராபலன் உன்னதேயாம்; தவப்பயன் முழுதும் இதனால்கிடைக்கும்;இதைப்பார்க்கிலும் சிறந்த வர்த்தகம் வேறிருன்றுமில்லை; யுகாந்தகாலம் வரைக்கும் செலவு செய்தாலும் பொருள் குறைவு படாது. நற்குணமுள்ள வணிகனே! துன்பத்தை யொழிப்பாயாக என்று நாமதேவர் சொல்லக்கேட்ட வணிகன், நீயென்ன தந்திரஞ் செய்தாலும் உன்னை விடமாட்டேன்; நான்

கொடுத்த பொருளைக் கொடுத்தே தீரவேண்டும் என்று சொல்ல, காமதேவர் அப்படி நீர் பிடிவாதம் செய்தால் கங்கா ஸ்நானம் செய்து வாரும், உடனே உமது பொருளைக் கொடுத்துவிடுகிறே னென்று சொல்ல, வணிகன், காமதேவர், என்னைக் கங்கையிலமிழ்த்திக் கொல்வதற்கோ இந்த ஏற்பாடு செய்தாய்; நான் மூழ்கமாட்டேன், பொருளைக் கொடுத்துவிடு என்று சொல்ல, காமதேவர் மறுபடியும் அப்படியே சொல்ல, வணிகன்சம்மதித்து, அரையளவு நீரில் மூழ்கினவுடனே, துளசிமாலையை யணிந்த ஸ்ரீமந் நாராயணனுடைய மாயையினால் பாதாளலோகத்தை யடைந்தான். அவ்விடத்தில் சுவர்ணமயமான மண்டபத்தில், சிம்மாசனத்தின்மேல் கருடக்கொடியையுடைய விஷ்ணுமூர்த்தியானவர் தருக்க வேதாந்தம்போல எழுந்தருளியிருந்தார்; அவரை நாரதாதி முனிவர் யாவரும் மிகவன்ச வுருவமாய்ச் சூழ்ந்திருந்தார்கள். அவ்விடத்தில் பலா, மா, தெங்கு முதலான மரங்களும், மல்லிகை முல்லை முதலான கொடிகளும் நெருங்கி மிகவுஞ்சிறப்புப்பெற்றிருந்தன. கிளி, மயில், சாதகம், புறு முதலியனவகள் பாடுதலும் ஆடுதலும் குறையாதிருக்கும் எக்காலத்திலும் கார்ந்த காட்சியை இன்று கண்டோமே யென்று, வணிகன் மனமகிழ்ந்து உடல் புளகித்து நிற்கையில், அந்த மண்டபத்திலிருந்தவர்கள் இவனை யழைத்து, நீ இங்கு வந்த வரலாறென்னவென்று கேட்க, இவனும் தன் வரலாறு முழுதுஞ் சொல்ல, எங்கள் அரசன் உன்னைப் போஜநத்துக்கழைத்தா னென்று சொல்லி, கொழுத்த மாமிசத்தைச் சமமாகக்கூட்டிய முல்லையரும்பு போன்ற சோறும், நெய்யில் தோய்த்தெடுத்த முக்கனி முதலியவும், பாலும் இருக்கின்றன, வருவாயாகவென்று அழைக்கவே, வணிகன் திகைத்து, தமது பொருளும போயிற்று, சாதியும் ப்ரஷ்டமாவதற்குரிய காலமும் நேரிட்டது, துருக்கரோடிருந்துண்ணப் பிடித்திழுக்கிறார்கள், உண்ணமாட்டேனென்றால் என்ன தீங்கு செய்வார்களோ என்று மனங் கலங்கி, காமதேவரை மனத்தில் நினைத்து, இவ்விடத்தில் என்னைக்காப்பதற்கு ஒருவருமில்லை, அங்கே உமக்குக் கடன் கொடுத்து, லாப மடையும்பொருட்டு இங்கே வந்து துருக்கரோடுண்ணவும் நேர்ந்திருக்கின்றது, இந்தச் சமயத்தில் என்னைக் காப்பதற்கு உம்மையன்றி வேறொருவரு மில்லையென்று சொல்ல, காமதேவர் இதையறிந்து, நாய்போல் அங்கே வந்து, விசுவாசமடைவது தகுதி யன்று, எல்லார்க்கும் பிறவா முத்தி தருவோன் இந்தப் பாண்டுரங்கனே யன்றி வேறொருவரு மல்லர், இவரோ பரமபாகவதர், இவர்களோடு கூடியிருந்து உண்பதைப் பார்க்கிலும் வேறு ப்ரயோஜநம் வேண்டுவதில்லை, பிரமன் முதலிய தேவர்களுக்கும் கிடைத்தற்கரிய ப்ரஸாதம், ப்ரபலமாகிய இந்தச்சமாராதனை செய்கையால் உமக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் கிடைத்தது; அதை விலக்குவீரானால் இதற்கு மேற்பட்ட பொருள் ஒன்றுமில்லையென்று மதித்து உண்ணக் கடவீர் எனறு சொன்னர். அதைக்கேட்ட வணிகன் தேவியரை நோக்கி, யாவரையும் மயக்கத்தகுந்த மோஹநமந்திரத்தால் என்னை வசியம்பண்ணிக் கொண்டீர்; கடனென்று பெரும்பொருள் வாங்கிக்கொண்டு வெள்ளோலை

யொன்றெழுதி என்னிடத்திற் கொடுத்து, அதை தாஞ்செய்து பொருள் முழுதும் பாழாக்கினீர்; அன்றியும் மிலேச்சரோடுகூடி உண்ணச்சொல்லி என் குலமுழுதும் தாழ்வடையும்படி செய்யத்துணிந்தீர்; இது உமக்குத்தகுமோ, என் சொல்லைத் தடுக்காமல் இத்தக்ஷணமே இந்த எல்லையைத் தாண்டுவித்து என்னை என் ஊரில் கொண்டுபோய் விட்டுவிடும், இனி உம்மைப் பொருள் கேட்கமாட்டேன், இது உண்மையாகும் என்று காமதேவரை நோக்கிச் சொல்ல, காமதேவர் வணிகனை நோக்கி, ஐயா, இந்த வேதியரோடிருந்து உண்ணுதற்கு நீர் மயங்கவேண்டியதில்லை, தடுக்காமல் உண்பிரானுல், பகவான் அருள்செய்வார், பொறுக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, வணிகன், காமதேவரை நோக்கி, நீர் அடம்செய்ய வேண்டாம, அரிசியும் பருப்பும் என்னிடத்திற் கொடுத்தால், நானே சமையல்செய்து உண்டு செல்லுவேன் என்று சொல்ல, காமதேவர் சரியென்றித்து, அப்படியே கொடுத்துச் சமையல செய்வதற்கு வேண்டிய எருமுட்டைகளையும் கொடுத்தார். அவற்றைப் பெற்றுக்கொண்ட வணிகன், காமதேவரை, இந்த யவனரை வெளிப்படுத்த வேண்டுமென்று சொல்ல, காமதேவர் வணிகனை நோக்கி, ஐயா, நீர் சற்றுநேரம் கண்மூடிக் கொண்டிரும் என்றவுடனே, வணிகன் அப்படியே மூடிக்கொண்டிருந்தான். அப்போது, பண்டரிபுரத்திலுள்ள பெரியதாகிய சந்திரபாகை நதியில் மூழ்கியெழுந்தவன்போல ஈரவஸ்திரத்தோடும் எழுந்தனன். அங்கே வேதியர்கூட்டமும், அன்போடு பகவானை பஜனம்செய்வோரும் கூடி, விட்டலப்பெருமானைத் துதிபடுவதை வணிகன் கண்டு சொல்லுகிறான்: காசியில் கங்கைக்கரையிலிருந்த நான் சந்திரபாகையை அடைவதற்குச் சொப்பகங் கண்டீரோ, அப்படிச் சொப்பகங் கண்டிருப்பீரானால், காமதேவர் கொடுத்த பதார்த்தங்கள் இருக்கின்றனவே, இது என்ன அதிசயம் என்று காமதேவரைப் புகழ்ந்து, அந்த நதிக்கரையில் வரும்போது, வஸ்திரத்தில் முடிந்த எருமுட்டையை மாத்திரம அவிழ்த்து அந்த நதியில் விழும்படி உதறிவிட்டு, தன்னை வஸ்திரத்துடன் வீட்டுக்கு வர, மனைவி கண்டு, காமதேவருக்குக் கொடுத்த பணமுழுதும வாங்கிக்கொண்டு வாதிரோவென்று கேட்க, வணிகன், தன் மனைவியை நோக்கி, என் உயிர் பிழைத்துவந்ததே பெரிதாயிற்றென்று சொல்லி, ஈரவஸ்திரத்தைப் பிழியும்போது ஒருஎருமுட்டை அந்த வஸ்திரத்தில் ஒட்டிக்கொண்டிருக்கக் கண்டு, அதை உற்றுப் பார்க்கும்போது, அது உயர்ந்த தங்கமாயிருக்கக் கண்டு, சரீரம புளகித்து, காமதேவர் இந்த லோகத்திலுள்ள நரர் அல்லர் என்னும, தேவரேயனனும மதித்து, விட்டலப்பெருமான், காமதேவர் பொருட்டு எனக்குக் கொடுத்த மிகுந்த திரவியத்தையெல்லாம் நதியில் போட்டுவிட்டேன், அதுவும் என் அதிருஷ்டமே யாகுமென்று மனம் வருந்தி, காமதேவரை நான் வீணாய் நிந்தித்தேன், பாகவதரை நிந்தித்த அபராதத்தை க்ஷமித்தருளவேண்டுமென்று பகவானைப் பிரார்த்தித்து, அது முதல் இரவும் பகலும் விட்டலபகவானைத் தோத்திரம்செய்வதும் ஏழைகளுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பதும் ஆகிய செயல்களை மேற்கொண்டு சுக

மாய் வாழ்ந்திருந்தான். காமதேவரும் பகவானே வணங்கிக்கொண்டும், தேசத் திரஞ் செய்துகொண்டும் நிற்க, விட்டலப்பெருமான், காமதேவரை இருகரத்தாலும எடுத்து மார்போடு தழுவி, உச்சிமோந்து பல இன்சொற்களைச் சொல்லி, பண்டரிபுரத்தில் காமதேவரோடு எழுந்தருளி யிருந்தார். இந்த காமதேவர் சரித்திரத்தைச் சொல்லுவோரும, கேட்பவரும், நியமமாய்ப் புத்தகம் வைத்துப பூசிப்போரும, இம்மையில தர்மார்த்தகாமங்களை யண்டாது புகழையும பெறறு, மறுமையில் ஸ்ரீவைகுண்டநாதனது திருவடியை யடைந்து நித்தியராய் வாழ்வார்கள். என்று சொலலி, மேலே கபீர்தாசர் வைபவத்தைச சொல்லத் தொடங்கினர்.

காமதேவர் சரித்திரம் முற்றிற்று

# ஈ-வது கபீர்தாசர் சரித்திரம்.

புண்ணியநதிகளிற் சிறந்ததென்று எல்லாராலும புகழப்பெற்ற கங்கா நதியில, மேகம நீரைபபொழிய,ஒருமஹான் அதின் வழியாயிறங்கிவந்த ஒரு கிளிஞ்சிலில், பகவானது அநுக்ரஹர்திஞல் அமைக்கபபட்டு அயோநிஜராய் கிளிஞ்சிலோடு மிதந்துகொண்டு,நன்மையைத் தருவதாகியஸ்ரீராமமந்ரத்தை விடாதவராய்த தியானஞ் செய்துகொண்டிருந்தார். அபபோது அங்கே, நுணிசலை மெய்பவனுகிய தமாலமோமி யெனபவன், கையிலே நூலை யேந்தி வருது அநத நதியில் தூவைத்துக்கொண்டிருக்கையில், இந்தக் கிளிஞ்சில் மிதந்து வருவதைக் கண்டு, நீரி லிறஙகி அதை யெடுத்துக்கொண்டு கரையில் வருது வகிருது அதனுள்ளேயிருந்த குழநதையை மிக்க அன்போடு தன் கையிலேநதி, வறுமையால் வருநினவனுக்குப பெருந் தநம் கிடைத்தாற்போல மகிழ்ந்து, தனவீட்டுக்குவநது மனைவிகையிற் கொடித்துக் குழநதை கிடைத்த வரலாற்றையுஞ் சொல்ல, அவள் ஆசையோடு வாங்கித் தன் இரண்டு தநகளிலுஞ சுரக்கிற பாலை யூட்டி, பகவானைத் தியாநம் பண்ணி, அநதக் குழநதைக்குக் கபீர்தாசர் என்று பெயரிட்டு வளர்த்தான், அது நன்றாய் வளர்நது, ஸ்ரீராம நாமத்தை இடைவிடாமல் உச்சரிப்பதைக் கண்டு, சாகியிலுள்ளோர், குருக்களுக்கு இபபடிப்பட்ட நன்மகன் பிறந்தானே, இநதத் குருக்கள் செய்த புண்ணியமே புண்ணியம் என்று புகழ்நது கொண்டாடினர்கள். பிறகு, தாசருக்கு வயது வநதவுடனே, தாய் தந்தையர் இவர்க்குத் தகுதியாகிய பெணணை மணஞ் செய்வித்தார்கள். மணஞ் செய்துகொண்ட கபீர் தாசரானவர், இநதப பிரபஞ்சவாழ்க்கையில் சிறிதும் மனம பற்றாதவராய், ஸ்ரீராமநாம ஸங்கீர்த்தநத்திலேயே மனஞ் செலுத்து கிறவரா யிருப்பதைக் கண்ட தநதையானவர் துன்பமடைந்து, வாழைத்தோட்டத்தில் ஒரு இலநதைமரம் நின்று தழைப்பதுபோல, நீரில் மிதந்தவன் நமது குலத்தில்வந்து சேர்ந்துபிரகாசித்துக்கொண்டிருக்கிறனென்று சிந்தி

த்திருக்க, தாயானவள் இவரை நோக்கி, அப்பா, நீ இவ்வாறு ராம பஜனே செய்துகொண்டே திரிந்தால் நமது இல்லறம் எப்படி நடக்கும், தறியைத் தொட்டுத் துணிகளே நெய் யென்று சொல்ல, அச்சொல்லைக் கேளாதவராய் பகவானைத் தியானித்துக் கொண்டிருந்தார். தன்னே மறந்து தியானத்தி லிருப்பவரைத் தாயானவள் அதட்டி, என்னடா, மரமபோ லிருக்கிறாய் என்று கோவித்து, இனி அடிக்க வருவாள்போ லிருப்பதைத் தாசர் தெரிந்துகொண்டு, மன மஞ்சி எழுந்து, ஒரு முழக் துணியை நெய்து முன் போலவே தியானத்திலிருக்க, இவருடைய மனத்தில் அமர்ந்திருக்கிற பகவான், இவர் நெய்யாம லிருந்தால் தாய் கோவிப்பாளென்று தறியினிடத்தில்வந்து, இவர் நெய்வதுபோல நெய்துகொண்டும, இவர் விழித்து நெய்யுமபோது தாம் சுமமா இருந்தும் இப்படி ஒரு புடவை நெய்து முடிந்தவுடனே, தாசர் அதை மடித்தெடுத்துவந்து தாயினிடத்திற் கொடுக்க, அவள், அப்பா நீ இதைக் கடையிற் கொண்டுபோய் விற்றுப் பணம கொண்டுவா வென்றாள். இவர் அவ்வாறே கடை வீதியிற் போய்த் தியானத்தில் அழுந்தின மனத்துடன் ஓரிடத்தில் அசைவற்று நின்றார். வஸ்திரம வாங்க வந்தவர்கள் இவர் கையி லிருப்பது அதிக விலையுள்ளது என்று விலைபேசுக, சூரியன அஸ்தமித்தபிறகு எல்லாரும் நீங்கினார்கள். தாசரும் விழித்து, அங்குள்ளாரைக் கேட்டு ஒருவரும் அந்த வஸ்திரத்தைக் கொள்ளாமைமையக் கண்டு, இதை விற்காமல் நாம் போனால் தாய் கோவிப்பாளென்று துன்பமடைந்து, சற்று நேரம அங்கே நின்று மனஞ சலித்து, ஒரு பாழ் வீட்டைக் கண்டு அதில் தங்கினார். அப்போது பகவான் அவர் மனத்தை யறியவேண்டு மென்று ஒரு மூது வேதியனாகிவந்து, தாசரைநோக்கி, அப்பா, எனகு அதிக குளிராயிருக்கின்றது, எனக்குக் குளிர் தீருமபடி ஒரு வஸ்திரம் கொடு என்று கேட்க, தாசர் தமது கையிலிருந்த வஸ்திரத்தை இரண்டுதுண்டாக்கி, ஒரு துண்டத்தைக கொடுக்க வாங்கிக் கொண்டுபோய், மறுபடியும ஒரு பக்கிரி வேடங கொண்டுவந்து இவரைக் கிட்டிநின்று, இது என்ன, நீ குதாவின்மீது நினைவில்லாமல், ராமா வென்று சொல்லிக்கொண்டிருக்கிறாய், உனக்கு நான் சொல்லவேண்டிய தொன்றுமில்லை, எனக்கொரு வஸ்திரம கொடு என்று கேட்க, நீர் சொல்லுகிற குதாவே இந்த ஸ்ரீஹரி யென்று சொல்லி, மற்றொரு துண்டு வஸ்திரத்தைக் கொடுக்க, வாங்கிக் கொண்டு போன பகவானவர், பக்கிரி வேஷத்தை விட்டு, வேதிய வேஷம கொண்டு, தாயினிடத்தில் வந்து, உன் மகன் ஆடையை விற்காமல், ஒரு பாழ் வீட்டுக்குள்ளே இருந்துகொண்டு ஸ்ரீராமநாம பஜனே செய்துகொண் டிருக்கிறான். நீ விற்கச்சொல்லி யனுப்பின ஆடையை விற்காமல், வேதியனுக்கும் பக்கிரிக்கும பாகித்துக் கொடுத்துவிட்டான் என்று சொல்லக்கேட்ட தாயானவள், அவன் வரட்டும் தண்டிக்கிறேனென்று சொல்ல, வேதிய வேஷம் பூண்ட பகவானவர், உனக்கு அவன் அகப்படமாட்டான், துன்புஞ்செய்கிற தேள் வெளிப்படுமோ, நான் அவனைக் காட்டுகிறேன், என்பின்னே வாவென் றழைத்து

ப்போய்த் தாசரிருக்கும் வீட்டைக் காட்டித் தாம் வெளியே நிற்கத் தர்மான வள் உள்ளே போய்த் தன் மகனைக் கண்டு, சேலை எங்கே காட்டு, இந்த இரு ட்டில் என் வந்து நிற்கிறாய் என்று கேட்க, தாசர் மறு மொழி சொல்லாம லிருக்க, தாய், என்னடா நான் கேட்டதற்கு மாறுத்தரம் சொல்லாம லிருக் கிறாய் என்றாள். அப்போது வெளியேநின்ற வேதியன், ஓ அம்மே, இப்படிக் கேட்டால் அவன் வழிக்கு வரமாட்டான், நன்றாய்த் தண்டித்தால் உண்மை சொல்லுவானென்று சொல்லக்கேட்டு, அடிக்கக் கோல் தேடுகையில், வேதி யன் ஒரு கோலைக் கையிற்கொடுத்து அடியென, அவள் அடிக்க, அந்த அடி தனது முதுகிற்பட்டு வேதனை யுண்டாக, அவளைநோக்கி, நீ அவனை அடித்த அடி என் முதுகிற்பட்டு வேதனையுண்டாயிற்று, அவனை யடிக்கவேண்டாம், விட்டுவிடு என்று சொல்லக் கேட்டுமை அவள் விடாமல் மோதிமோதி யடிக்க, பகவானுனவர் ஸ்ரீ ஜாதி பிராட்டியாரோடுகூடி, கையிற் கோதண்டம் தாங்கி வந்து எதிரே நின்றருளினர். ஸ்ரீ பகவான் எழுந்தருளினதைக் கபீர்தாசர் அறிந்து, அன்போடும அவருடைய திருவடியில் வீழ்ந்து வணங்க, இறை வன், அன்பினை உன்னை விடேனென்றார். தனைக்கண்ட தாயும் பகவானை வணங்க, அவளைநோக்கி நீ இத்தப் புதல்வனைப்பெற்றதனால், உன் புண்ணிய த்துக்கு நிகரான புண்ணியம வேறொன்றில்லை யென்று சொல்லி மறைந்த வுடனே தாயானவள், தன்மகனை மார்போடணைத்துக்கொண்டு, என் அருமை மகனே, உனதுல் ஸ்ரீ ராமபிரானைத் தரிசிக்க நேர்ந்தது என்று மிகு மகிழ்ச்சியாகி அழைத்துக்கொண்டு போனாள். போனபிறகு முன்போலப் புதல்வனைக் கோவிக்காமல் ஹரிபஜனையை விரும்பித் தானும இனிதாயிரு க்குங் காலத்தில், கபீர்தாசர் மனைவிக்குக் கர்ப்பமுண்டாகி, ஒரு புதல்வனைப் பெற்றாள். அவனுக்குக் கமால்தாசர் என்று பெயரிட்டு வளர்த்துவர, அவனு க்கு ஏழாவது வயது நிரம்பினவுடனே, அவர், தகுதையைநோக்கி ஐயனே, அடியேனுக்குத் துவாரகையைக் காணவேண்டுமென்கிற ஆசை மிகுதியா யிருப்பதனால், எனக்கு விடை கொடுக்கவேணுமென்று கேட்க, கபீர்தாசர் குமாரனைநோக்கி, இந்த வயதில் உனக்குக் கோபால ஸ்வாமி திருவடியில் விருப்பமுண்டானதற்குக் காரணம யாதோ அறிகிலேன் என்று சொல்லி, கமலனுக்கு உத்திரவு கொடுத்தார். விடை பெற்றுக்கொண்ட கமால் தாசர், தகதையின் இரண்டு திருவடிகளையும வணங்கி, தாம் செல்லும் வழிக ளெல்லாம் ராமநாமத்தை மிகவும் கொண்டாடுதலை நோக்கி, வழியிலுள்ள ஊர்களில் இருப்பவர்கள் இவர் செய்யும் ராமநாம சங்கீர்த்தனத்தைக் கேட்டு மகிழ்ந்திருக்க, விரைந்துபோய்த் திருத்துழாய் மாலையை யணிந்த ஸ்ரீகண்ண பிரான் வாழ்கின்ற திருத் துவாரகையை அடைந்து கோமதி நதியைக்கண்டு வணங்கி அதில் மூழ்கி ஸ்ரீ கோபீ சந்தனத்தை நெற்றியில் தரித்து ராமநாம த்தை உச்சரித்துக்கொண்டு, கையில் ஜபமாலையைத் தரித்துப் பத்மாசனரா கிய பகவானைத் தமது மனத்தில் நிறுத்தி, ஆலயத்தினுள்ளே பிரவேசித்து அர்ச்சாவிக்ரஹத்தைச்சேவித்து, பலவகையாய்த் தோத்திரஞ்செய்து, சான்று

# ஸ்ரீ பக்தலீலாம்ருதவசநம்

மரீச காலம் அவ்வூரில் தங்கியிருந்தார். பின்பு ஒருநாள் ஸ்ரீ கண்ணபிரா னுடைய ஆலயத்திற்போய் வணங்கி,ஓ பகவானே, என் மனமானது என்றும் உன்னுடைய திவ்ய சௌந்தரிய விக்ரஹத்தை மறவாதிருக்குமபடி அமை த்தருளவேண்டும் என்று பிரார்த்தித்துப் புறப்பட்டச்சித்ரகூடத்தைச் சேர் ந்தார். இவர் அவ்விடத்தில் வந்திருப்பதைக் கேட்ட விஷ்ணுதாசர் எதிர் கொண்டுவந்து தோத்திரம் செய்து வணங்கி, இவரைத் தமது வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய், பாத பூஜை செய்து, உபசார வார்த்தைகளைப் பேசி, போஜனம் செய்வித்து, அன்றிரவில் இவர் ஹரிபஜனை செய்யக்கேட்டு விஷ்ணுதாசர் முதலிய எல்லோரும அன்போடு இருந்தக் குழந்தையின் செய் கை மிகவும் புதுமையா யிருக்கின்றதென்று சொல்லிக் களிக்க, விஷ்ணு தாசரானவர் இவருக்கு எவ்வளவு பொருள் கொடுத்தாலும் சிறுது விளங் காது என்று நினைத்து ஒரு மாணிக்கத்தைக் கொணடுவந்து இவர் சந்நிதி யில் வைத்து இந்த மாணிக்கம் இராகாலத்தில் திருடு நீங்கும் ஆகையால் இதனைக் கொண்டுபோம என்று சொல்ல, கமல்தாசரானவர் இதை என் தந்தையானவர் விரும்பமாட்டார்என்று சொலலிப் பின்னுமசொல்லுகின்றார். நீர் தந்த மாணிக்கமும் கல்லும எங்களுக்குச் சரிதான். வேதியர்களுக்குத் தன மும், வேந்தனுக்கு மாணிக்கமும,வறியோர்க்கு அன்னமும்,விதவாஸகருக்கு வஸ்திரமும யாத்திரை செய்பவர்க்கு உணவும் கொடுக்கவேண்டும். கபீர வைஷ்ணவர்கள் எதனையும விரும்பமாட்டார்கள் என்று சொல்ல, விஷ்ணு தாசரானவர் எழுந்து இவரை வணங்கி, இவர் அறியாமல் இவரது வஸ்திரத் தில் அந்த மாணிக்கத்தை முடிந்து வைத்தார். பிறகு கமல்தாசர் அங்கே இருந்து புறப்பட்டுத் தம் மூர்க்குவந்து தகதையாருடைய பாதத்தை வண ங்கி நிற்க, தகதையாராகிய கபீர்தாசர் இவரது வஸ்திரத்தில் உள்ள முடியை நோக்கி அவிழ்த்து,மாணிக்கத்தைபபார்த்து,இதைக்கொடுத்தவர் யாரென்று கேட்க, இவர்என்னையறியாமல் விஷ்ணுதாசர் முடிந்துவைத்தார் என்று சொ ன்னார். அதுகேட்டு கபீர்தாசர் மிகவும துன்பமடைந்து அழுதுதொடங்கினர். அவர் அழுமோசையை மனைவி கேட்டு, வந்து நீர் அழுதற்குக்காரணம யா தென்று வினவ, மனைவியைநோக்கி,நமதருமை மருமகன் கமல்செய்த காரியத்தை என்னவென்று சொல்லுவேன்,நமதருமை க்குப பழியுண்டாகும்படி ஹரிநாம த்தை விற்று மாணிக்கத்தைக் கொணடுவந்தான் என்று சொல்ல, அதைக் கேட்ட கமல்தாசர்,அவ்விடம விட்டுநீங்கி,சித்ரக்கூடத்தையடைந்து மாணி க்கத்தைக்கொடுத்தவர்கையில் தாம்கொண்டுவந்துகொடுத்து தம்மிடத்துக்கு வந்து, தாய்தந்தையரை வணங்கி, தாம் முன்போய்ச் சஞ்சரித்த இடங்களில் நிகழ்ந்த செய்தியெல்லாம் சொல்லக்கேட்டித்தகதையானவன் பெருமகிழ்ச்சி யடைந்தான்.மகிழ்ச்சி யடைந்தபின்பு கமல்தாசரைத் தழுவிக்கொண்டு அன்பு பாராட்ட, இவரும தம் பிதாவின்பாதங்களைச்சேவித்துத் தோத்திரஞ செய்து ஹரிபஜனைசெய்திருந்தகாலத்தில்,ஒருநாள் அஸ்தமன காலத்தில், நீர் த்த யாத்திரையாய்வந்த மூவர், இவருடைய வீட்டுக்குவர, கபீர்தாசரும் சக

தோஷத்துடன் அவர்களைக்கண்டு, ஆதரித்து ஆசனம் கொடுத்து உபசரிக்க, தீர்த்தவாசிகளும் மகிழ்ந்திருந்தார்கள். சகுனாதிகளைப் பார்த்து ஸ்ரீராமபிரான் சந்தோஷித்ததுபோல, கபீர்தாசர் அன்புமிகுந்து, தம்முடைமனைவியை யழைத்து, மூவர்வந்தமதுவீட்டிலுண்ணுதிருப்பது கூடாது, ஆகையால் அவர்களுக்கு அமுதூட்டி மகிழ்விக்கக்கடவை யென்று சொல்ல, மனைவியாளவள் இப்போது அரிசியில்லை, அயல்வீட்டில் கேட்டாலும் இல்லையென்பார்களே, விலை கொடுத்து வாங்குவதற்கும ஒருகாசும கையில் இல்லையே யென்று சொல்லி, தன் மகனை யழைத்து, வருந்தப்படுதற்குக் களவு செய்யும் பொருட்டு, ஒரு கடையின் சுவரைத் தொளைத்து அதனுள்ளேபோகவிட, கமலதாசரானவர் தமக்கு வேண்டுவனவாகிய அரிசிமுதலிய பொருள்களை மாத்திரம எடுத்துக் கொண்டு, வேறுபொருள்களைத் தொடாமல், நீர்மக்கள்போலத் திருடுதல் குற்றமென்றெண்ணி, வணிகனுக்குச் சொல்லிப் பின்தொடர்ந்து வரச் செய்து, விரைந்து வெளியிலவர, வணிகன் இவர்காலைப் பிடிக்க, தொளைக்கு வெளியில் வருந்தி நிறகும் தருதையை நோக்கி, கொண்டுவந்த பொருள்களைக் கொடுத்து, செட்டியின் பொருள்களை வலிமையாய்க் கவர்ந்ததனால், அடையாளந தெரியாமல் என்தலையை அறுத்துக்கொண்டு வீட்டுக்குப்போவென்று சொல்ல, கபீர்தாசர் கொஞ்சமும் நிரக்கமில்லாமல், தலையை யறுத்துக்கொண்டுவந்து, நிகழ்ச்செய்தியை மனைவிக்குச் சொல்ல, மனைவியானவள், மகனை யிழந்ததறும் மனமிரங்கி, வந்தவர்களுக்கும் உணவை யுண்பித்துத தூங்குவிக்கத் தூங்கி, மறுநாள காலையில் நீராடப்போனார்கள். அப்போது செட்டியானவன் இங்குமும அங்குமாக வோடிக் கூக்குரலிடக் கேட்டு வந்து கூடினவரெல்லாரும் அடையாளம தெரியாமல் தலையை அறுத்துக் கொண்டு போனதிருடர் அருகிலிருந்த வன்னைத் தலையை யறுக்காமலும், மறறபபொருள்களை யெடுத்துக்கொண்டு போகாமலும்போனது உன்தவமே யென்று சொல்ல, நன்றாய் விடிந்தவுடனே வணிகன் வேந்தனிடம் போய் நிகழ்ச் செய்தியைச் சொல்ல, அரசனுனவன், அருகில் நிற்பவரை நோக்கி, அந்தத் திருடரைத் தேடிக்கண்டு பிடித்துக கழுவேற்றுங்கள் என்றான். அப்படியே அந்தக்கொலையாளிகள் விசாரித்துந திருடினவன் தலையில்லாதிருக்கக் கண்டு, உடலமாத்திரம் கழுவேற்றினார்கள். இந்த அர்த்தத்துக்குஹேதுவாக வந்த மூவரும நீராடிவந்து, விடைபெற்றுப் போகும்போது, சலனமில்லாத மனத்தையுடைய கபீர்தாசரானவர், மனைவியும் தானுமாக அவர்களை உபசரித்து, பெரியோராகிய அவர்களுடனே நகர்ப்புறத்தேவந்து, கழுமரத்தில் முண்டம் நிற்கக் கண்டு, தீர்த்தவாசிகள் தலையற்ற முண்டத்தைக் கழுவில் ஏற்றுவார்களோ வென்று வியந்துநிற்க, அவர்களைக் கண்டு சவமானது கைகுவித்து வணங்கக் கண்டு சவம வணங்குகிறஅதிசயமஎன்னவென்று தீர்த்தவாசிகள் கேட்க, கபீர்தாசர், அவர்களை நோக்கி பகவத்தாசர்களே! சவம் உம்மைக் கண்டு வணங்குதலாலே, இவன் ஹரிதாசனுகவேண்டும என்று தோற்றுகின்றதுஎன்றுசொல்ல அவர்களும பகவானுடையதாசனுகியஇவன்

யாரென்று கேட்க, கபீர்தாசர் நடந்த செய்தியெல்லாம் சொன்னார். அவர்கள் கபீர்தாசரைப் பிரார்த்தித்து, எமக்கு அமுது ஊட்டும்பொருட்டு மகனை உயிரிழக்கும்படி செய்தாயே யென்று இரங்கிநிற்க, கபீர்தாசர் அவர்களைப் பார்த்து ஐயரே! எவராகிலும் ஹரிதாசர் பொருட்டு உயிரிழந்தால் அது நன்றேயாகுமென்றார். அதைக்கேட்ட மூவரும் கபீர்தாசருடைய மனைவியை நோக்கி, உன் மகன் தலையைக் கொண்டுவந்து எமக்கெதிரே வையென்று சொல்ல, அப்படியே அவள் கொண்டுவந்து வைத்தவுடனே, அந்தத் தலை மேல் தமது தண்டத்தை வைத்து, உடம்பின்மேல்படும்படி பரிசித்து, எழுந்திரு என்று சொன்னவுடனே, கமால்தாசர் தூங்கி விழித்தவர்போல் எழுந்து எதிரே நின்ற மூவரையும் வணங்கி நிற்கக்கண்டு, அவ்வூரி லுள்ளோர் யாவரும் ஆச்சரியமடைந்து, பகவத் பக்தர்களாகிய மூவரையும் வணங்கித் தோத்திரம் செய்ய, அவர்கள் விடை பெற்றுக்கொண்டு போனபிறகு, கபீர்தாசர் தமது வீட்டையடைந்து சுகமாக வாழ்ந்திருந்தார்.

அப்படியிருக்கையில் ஓர்நாள் ஹரிபஜனைசெய்துகொண்டு கடைத்தெருவின் வழியாகப் போகும்போது, அவ்விடத்தில் ஒருமாதானவள் திரிகையில் அரிசியைப்பெய்து மாவாகஅரைத்துக்கொண்டு இருக்கப்பார்த்து, தமதுபிறவித்துன்பத்தை நினைந்து அழந்தொடங்கினர். அப்போதுஎதிரில் உள்ள ஜனங்கள் நீர் அழுதற்குக் காரணம் யாதென்று வினவ, அவர்களுக்கு மறுமொழி சொல்லாதிருந்த தாசரிடத்தில் சில தபோதனர்கள் வந்து வினவ, பரிசுத்த மனத்தினையுடைய தாசரானவர் அவர்களை நோக்கி, திரிகையினல் அரைபட்டு அரிசி சிந்தவதுபோல் பிறவித் துன்பமாகிய திரிகையில் அகப்பட்டு இந்த உயிர் வருந்துகின்றதே என்பதை நினைத்து அழத் தொடங்கினேன் என்றுசொல்ல அத்தபோதனர்கள் தாசரைநோக்கி ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தம் பண்ணுகிற வைஷ்ணவர்கள திரிகையின் மூலையை அடுத்துசெந்துகிற அரிசிக்குஇகராக துன்பத்தில்நின்று நீங்குவார்கள் என்று சொல்லக்கேட்ட தாசரானவர்மனமகிழ்ந்து அவர்களைத் தழுவிக்கொண்டு தமதுவீட்டுக்கு அழைத்துவந்து சகலமான உபசாரங்களையும் செய்து வாழ்ந்தனர். அப்படி வாழுங்காலத்தில்ஸ்ரீஹரிநாமசங்கீர்த்தனம செய்வதிலேயே மிகவும் விருப்பமுள்ளவராய்ப் பகவத்விஷயமாகிய பிரபந்தங்கள் பலவற்றைச் செய்து, கருணைநிதியாகிய சர்வேசுவரனது காமஸ்மரணையே நமது பிறவித்துன்பங்களை நீக்குமென்னும் ஞானம் பெருகப்பெற்றவராய், உத்தமமாகிய ஆசாரியரிடத்தில்போய் ஞானோபதேசம் பெறவேண்டுமென்று எண்ணி, பரிசுத்தராகிய ராமாநந்தர் என்னும் பரமபாகவதருடைய திருமாளிகையிற்போய், அவரைச் சேவித்து, தரவிகலெல்லாருக்கும் தெய்வம்போல் விளங்குகின்றவரே! அடியேனுக்கு ஞானநிலையைஉபதேசித்துஅடியேனைக் காத்தருளவேண்டுமென்று அவரதுதிருவடிகளைவணங்கி நிற்க, அந்த ராமாநந்தர் கபீர்தாசரை நோக்கி, இழித்தத் தருக்கருக்கு வேதியர் ஞானோபதேசம் செய்வது தகுதியல்லவென்று சொல்லக்கேட்ட தாசரானவர், திரிகரணசுத்தியை யடைந்து உம்மாலே ஞானத்தைப்

பெற விரும்பி வந்தேன், அருள்சுரக்கவேண்டும் என்று சொல்ல, அதைக் கேட்ட ராமாநந்தர், நான் உனக்குஞானோபதேசம் செய்யவேமாட்டேனென்றார். பிறகு தாசர் நாம் என்செய்வோமென்றுமனம்வருந்தி வீட்டிற்குவந்து ராமாநந்தருடைய திருவடிகளுக்கு அடிமையாவதற்கும், அவர் திருவாயால் ஸ்ரீராமநாம மந்திரோபதேசத்தைப் பெறுவதற்கும் தகுந்த உபாயத்தை ஆலோசித்து, ராமாநந்தர் தீர்த்தமாடப்போகும் வழியில் ஒருகுழிதோண்டி அதில் இறங்கி இருக்க, அந்தராமாநந்தர், சூர்யோதயத்திற்கு முன்னே எழுந்து அந்த வழியாய்ப்போகும்போது, தமது பாதம் குழியில் இருக்கிற கபீர் தாசருடைய சிரத்தில்பட்டதே, ஐயோ, நமது பாதம் யார்தலையின்மீதோ பட்டது என்றுபயந்து ''ராமா'' என்று உச்சரித்தார். உடனே கபீர்தாசரானவர் ஐயா! ஸ்தாசார்யரே, தேவரீருடைய திருவடி என்தலைமீது படப்பெற்றேன்; ஸ்ரீராம மந்திரத்தையும்உமதுதிருவாக்கால்உபதேசிக்கப்பெற்றேன்; அடியேனுக்கு ஈடேறுங்காலம் நேர்ந்தது என்று சொல்லி ஆனந்த பரவசராய்ப் பள்ளத்தில் நின்றும்எழுந்துநின்று பலவகையாய்த் தோத்திரம்செய்ய ராமாநந்தர் இந்தத்தருக்கனுக்கு இன்னும் சில நாள் தாமதித்து, வருத்தம் மிகச் செய்து, பிறகு உண்மை நிலையை உபதேசிக்கவேண்டுமென்று எண்ணி, ஒன்றும சொல்லாமல் நீராடப்போய்விட்டார்; கபீர்தாசரும் தமது வீட்டிற்கு வந்து ஹரிபஜனைக்குரிய கீர்த்தனங்கள் பலவற்றைச் செய்து ஒவ்வொரு கீர்த்தனத்தின் முடிவிலும் ராமாநந்தருடைய தாசன் என்று அங்கிதம் அமைத்து அவற்றை எவ்விடத்திலும் பாடிக்கொண்டு திரிகிற நிலையைக் கண்ட ராமாநந்தர் எழுந்தருளி, தாசருடைய சிரத்தின்மீது தமது பாதுகையினால் மோதி, நான் உனக்கு உபதேசம் செய்யாமலிருக்க, நீ பாடின பாடல்களில் என் தாசனென்று அமைத்துப் பாடத்தகுமோ என்று கேட்க, கபீர்தாசரும அவரை நோக்கி, ஸ்வாமி! தேவரீருடைய திருவடி என் தலையில் பட்டதுண்டு; அதன்மேல ராமாஎன்னும் மொழியை தேவரீர்உச்சரிக்கஎன் செவியில் பட்டதுமுண்டு. அதுவுமன்றி உமது ஸ்ரீபாதத்தைத் தாங்குகிற மரவடியை எல்லாரும் காலும்படி மோதுதல்போல என் சிரத்தில் ஏற்றினீர். அப்படியிருக்க, என் பாடலில் உமது தாசனென்று அமைத்துக்கொள்வதற்கு எனக்கு என்ன பயம என்றுசொல்லி தலையில் நின்றும் உதிரம் ஒழுகிக்கொண்டிருக்க வீழ்ந்துவணங்கினார். அப்படி வணங்குவதைக்கண்ட ராமாநந்தர், தாசருடைய சிரசின்மேல் தமதுதிருக்கையை வைத்து, உண்மைப்போல் ஞானபக்திகளே யுடையவர் இவ்வுலகத்தில் ஒருவரு மில்லையென்று சொல்லி, இவர் செவியில் ஸ்ரீ க்ருஷ்ண நாமத்தைப் பொருந்தச் சொல்லி, ராமாநந்தர் தமது வீட்டுக்குப்போனார்; தாசரும் தாம்வாழ்கின்ற இடத்துக்குப்போனார். இவரைச் சில கல்லோர்மாத்திரம் தூஷிக்க, மற்றைத் தீயோரெல்லாரும் சேர்ந்து பிள்ளையைக்கொன்ற பாவியாகிய இவன், நல்லவன்போல ஸ்ரீஹரி நாம ஜபம் பண்ணுகிறான், இவன் இப்படிவேஷம்பூண்டு வாழ்வது வஞ்சகமேயாகுமென்று, பல வகையான நிந்தனை வார்த்தைகள் சொல்லிப்பழித்து அவமா

களஞ்செய்ய, பகவானுனைவர் ஆலோசித்து ஈரன்கு திக்கிலும் கிறைநதிருக்கிற சாதுக்க ளெல்லாரும வந்துகூடி, என்வீட்டில் ஒரு பந்தியாயிருந்து புசிக்க வேண்டுமென்று கபிர்தாசரே எழுதினதாக, எவ்விடத்திலும் ஓலைஎழுதிவிட் டார். அநத ஓலைகளைப் பார்த்த சாதுக்களெல்லாரும, அவர் நியமித்த தினத் திலே வநது சேர்ந்தார்கள். அவர்களைக் கபிர்தாசர் கணடு, இப்படிச் சாதுக் கள் யாவரும நமது வீட்டில் ஒருமிக்க வநது சேருமபடி நாம்செய்த புண் ணியம யாதோவென்று மிகவும மனமகிழ்நது, ஒவ்வொருவரையும் தனித்த னியே சேவித்துத் தோத்திரஞசெய்ய, திருமகள் கொழுநனுகிய பகவான், இக்கே உண்மையாய் விருநதெனறு நம்பிவநதவர்களுக்கு விருநதிடாதிருந தால் நிந்தையுணடாகும என்று கபிர்தாசருடைய உருவங் கொண்டுவநது, ஒவ்வொரு சாதுவுக்கும் ஒவ்வொரு கபிரதாசர்போலத தோன்றி அவர்களுக் குவேண்டிய ஊழியங்கள் எல்லாவற்றையும்செய்து, அவர்களுக்கு அமுது ஊட்டுமபோது அங்கே கூடியிருநத நீயோர்கள் கண்டு, அகக கபிரதாசர்கள் காணப்படுகிறார்களே! இது என்ன அதிசயம் என்று களிபபடைநது நிற்க, தாசரூபங்கொண்ட பகவான் மூன்று நாளளவும, வநத சாதுக்களுக்கு நல்ல வுபசாரஞசெய்து அவர்களைக் களிபபமடையபண்ணி, பொன், ஆபரணம், ஆடை முதலானவற்றைக் கொடுதது தோததிரம செய்ய, சாதுக்கள யாவ ரும பெற்றுக்கொண்டு விடைபெற்றுத் தமது இருபபிடங்களுபோய்ச்சேர நதார்கள். பகவானும் போனார். பலவகையாயிசழநத நீயோரெல்லாரும அஞசி வநது,மெய்யன்பராகிய கபிர்தாசாஸ்ரீபாதங்களைத்தாழ்நதுவணஙகிசசொல்லு கின்றார்கள்! எப்படியென்றால், ஐயா கபிர்தாசரே! தேவரீருடைய பரிசுத்த மான மனத்தை நாங்கள் அறியாமல் செய்த பிழையைப பொறுக்கவேண்டு மென்று பிரார்த்தித்துப் பலவிதமாகத தோத்திரம்பண்ணித் தமது இருப பிடம் போனார்கள் கபிர்தாசரும மேகவண்ணனுகிய ஸ்ரீகணணபிரானை நினை த்து, ஓபகவானே! என்னை அவமானஞசெய்யலெணடுமென்றெண்ணி வநத துஷ்டர்கள் நாணும்படியாக, வநத சாதுக்களெல்லாருக்கும எல்லாப பொரு ள்களையும அமைத்து அவர்களை மகிழ்வித்தாய், உன் பெருநத கருணையை என்னென்று புகழ்வேன் என்று வாழ்நதிசை சிலகாள் கழிநத பிறகு, ஸ்ரீபண் டரிபுரத்தை யடைந்து அநதத் திவ்ய தேசத் தெமபெருமானைப புகழ்நது வாழ்த்தி, சேதுவுக்குபபோக நினைத்து, விட்டலனிடத்தில் விடைபெற்றுக் கொண்டு, வழிநடநது போகுமபோது, வழியிலுள்ள ஒருரில் ஒரு ராத்திரி ஹரிபஜனைசெய்ததை எல்லாரும் அறிநது, மிகவும மனமகிழ்நதார்கள். அவ் விடத்தில் ஜிவா, தத்துவா என்னும இரண்டு பக்தர்கள்வநது இவர் ஸ்ரீபாதத் தைவணஙகி, தோத்திரம செய்து எஙகளுககு ஞானோபதேசம செய்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, கபிர்தாசர் அவர்கள் மனக்கருத்தை யறிந்து கொண்டு, அவர்கள் சிரததில் தமது கையைவைத்து உபதேசமும் செய்து, சேது முதலாகிய ஸ்தலங்களைச் சேவித்து, காசிகஷேத்ரத்தை யடைந்தார். இவர்உபதேசிக்கபபெற்ற இருவருடைய ஊரிலுள்ள வேஷியர் பலரும்,இவர்

மனைவி மக்கள் தமையன் தம்பிமார் முதலாகிய எல்லாரையு மிகழ்ந்து, ஒரு குருக்கணையடைந்தார் என்று நிந்தித்துப்பேசிச் செய்யும் நிந்தையை யெண்ணுமல், இவ்விருவரும் பெற்ற மக்களுக்குத் தகுந்த பெண்ணும் பிள்ளையும் வாய்க்காமல், மிகவும் மனம் வருந்திக் காசியை யடைந்து, கபீர்தாசரை வணங்கி, ஐயனே! எம்மூரிலுள்ள அகதணர்கள் யாவரும் பரிசுத்தராகிய வும்மையாம் அடிதொழுதற்கு மனமிசையாமல் எமதுமனம்கையும்படி நிந்தித்தார்களென்று சொல்ல, உண்மை நிலையை யறிந்த கபீர்தாசர், அவர்களை நோக்கி, மறுமொழி சொல்லுகின்றார். உன் மகளை உன் மகனுக்கு மணஞ்செய்வித்துக்கொள்ளுமென்று சொல்ல, அப்படியே செய்யத்துணிந்து, தமது ஊருக்கு வந்து மண முகூர்த்தமிட , அதை யறிந்த அவ்வூர் வேதியர் யாவரும் வந்து, நீங்கள் மிருக சாதியின் முறைபோலச் செய்கிற மணம் நன்று யிருக்க வில்லை யென்று சொல்லி, அவர்களுக்குப் பிராயச்சித்தம் செய்வித்து, உறவாக்கிக்கொணடு, நீங்கள் குருக்களைக் குருவென்று ஆசிரயித்ததற்கு ஸ்ரீலக்ஷ்மீநாதன் திருவுள்ளமுவப்படையமாட்டார் என்று சொல்லி, மகனுக்குத்தகுந்த மகளையும், மகளுக்குத் தகுந்த மகனையும் தமக்குள்ளே யமைத்து மணபபித்தார்கள்; பிறகு இந்த இருவரும் போய்க் கபீர்தாசரை வணங்கி, மணச்செய்தியையுஞ் சொல்ல,கபீர்தாசரும் மகிழ்ந்தார்.இவ்விருவரும் அவரை வணங்கிச் சென்று தமது ஊரையடைந்தார்கள். இப்படியிருக்க, ஒருநாள் துளசிமணிமாலையையும் துவாதசநாமங்களையும் உடையவர்களாகிய வைஷ்ணவர்கள் பதினயிரம்பேர் ஒருமிக்கக் காசிக்ஷேத்ரத்தை யடைந்து, இங்கு வந்தவர்களுக்கு உணவாதிகளைக் கொடுத்து உபசரிப்பவர்களாகிய உத்தமர்கள் இருக்கிறார்களோ வென்று விசாரிக்க, அங்குள்ளவர்கள் கபீர்தாசரென்ற வொருகுருக்க வைஷ்ணவர் இருக்கிறார்.அவர் அந்தகாலஞ் செய்கிறரென்று சொல்ல, அவரிடத்திற்போய், சீதா ராமாவென்று உச்சரிக்க, வீட்டுக்குள்ளே யிருந்த தாசர் வெளியே வந்து, இத்தப் பெருங்கூட்டமாகிய பாகவதரைக் கண்டு அடிவணங்கினர். வந்தவர்கள் இவரை நோக்கி, எமக்கு உணவமைக்க வேண்டுமென்று சொல்ல, கபீர்தாசரும் அப்படியே யாகட்டுமென்று, அவர்களை யழைத்துக்கொண்டு துளசிதாசன் என்னும் ஓர் வணிகனிடத்திற்போய், ஐயா வணிகசிரேஷ்டரே! என்னை நாடிவந்த இருநதப் பதினயிரம பேருக்கும் மனமகிழும்படி உணவாதிகளைக் கொடுத்து உபசரிப்பீராஞல் உமக்குப் பெரும் புண்ணிய முண்டாகும் என்று சொல்ல, மேல்விளை வதையறியாத அவ்வணிகன், தாசரை நோக்கி, நீ கேட்டுக்கொண்டபடியே நான்நடத்தினுல், உன்மனைவியை ஒருநாளிராமுழுதும் என்னைக் கூடியதுபோல்விக்கும்படி அனுப்புவாயோ வென்று கேட்க,தாசரும் அப்படியேசெய்கிறேனென்று உறுதி கூறினர். இவ்வுறுதி மொழியைக் கேட்டு வணிகன், இவர் வேண்டுகோளின்படி பதினயிரம் பேருக்கும் வேண்டிய உணவு முதலியவற்றைக் கொடுத்து மகிழ்வித்த பிறகு, தாசரானவர் தமது மனைவியைநோக்கி, வணிகனுக்குத் தாம் சொன்னவுறுதிமொழியைச் சொல்லி, அவ்வாறுநடந்து

கொண்டால் நன்மையாமென்று சொல்ல, அதற்குமனைவியும் சம்மதித்ததின் பேரில், அவளை யழைத்துக்கொண்டு போய், வணிகன் வீட்டின் வாசற்படியில் விடுக்க, வணிகனும் செய்தியை யறிந்துகொண்டு, வெளியே வந்து பார்த்து மனமகிழ்ந்து நெருங்கும்போது, ஸ்ரீ பகவானுனவர் அந்த நகர்க்கு அதிகாரியின் உருவங்கொண்டுவந்து வில்வளைத்துக்கொண்டு, வணிகனுக்கெதிரில் நின்று, தன மதம் மிகுந்த புலியனே, என் தங்கையானவள் உன்னை யணைய விரும்பினுயாதலால் உன்னை ஒரு அம்பைக்கொண்டு தலையை யறுப்பேனென்று அதட்டிச் சொல்ல, வணிகன் பயந்துஅடிவணங்கி, சுவாமீ! என் குற்றத்தைப் பொறுத்து என் உயிருக்கு அபயங்கொடுத்தால் என் பொருள் எல்லாம் தருவேன் என்று சொல்ல, அதிகாரி வேஷம்பூண்ட பகவான் வணிகனை நோக்கி, இனி இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வாயானுல், உன்தலையைத் தப்பாமல் அறுப்பேன் என்று சொல்லி, வணிகனே! இந்தக் கற்புடையாளையும் வணங்கென்று சொல்ல, அப்படியே வணங்கின பிறகு, அவளை யழைத்து வந்து, தாசர் மனையில் விடுத்து மறைந்து போனுர். பிறகு கபீர் தாசரானவர் தமது மனைவியை நோக்கி, பெண்ணே! என் பேசசைக் கடந்து இவ்விரவில் அங்கே யிருக்காமல் வந்துவிட்டாயே, இது உனக்கு நன்மையோவென்று கேட்க, மனையியானவள் தாசரை நோக்கி, உம்முடைய வார்த்தையின்படியே நான்அந்த வணிகன் வாசற்படியில் நிற்கும்போது, வணிகன் வெளியேவந்து என்னைநெருங்கினன்;அப்போது, இவ்வூர்க்கு அதிகாரியென்பவன் கையில் வில்லும் அம்புமாக வந்து, வணிகனைத் தலையறுப்பேனென்று பயமுறுத்தி என்னையழைத்து வந்து இவ்விடத்தில் விட்டுப்போனன் என்று சொல்ல, தாசரானவர் ஊர்க்கதிகாரியா யிருப்பவன் வீட்டிற்குப்போய்க் கதவைத்தட்டி, தூங்குகிறவனை யெழுப்பி, என் இப்படிச் செய்தாயென்று வினவ, அவன் எனக்கு இந்தச் செய்தி யாதொன்றும் தெரியாதென்றுன். அவன் சொன்ன சொல்வன்மையால், இப்படிச் செய்தவன் ஸ்ரீமந் நாராயணனேயென்று துணிந்து, வணிகனிடத்திற் போய், வணிகோத்தமனே! வேதங்கள், வேதியர்கள், முனிவர்கள் ஆகிய எல்லாராலும் அறிய வொண்ணாத ஸ்ரீமந் நாராயணனே ஊரதிகாரிபோல வேஷம் பூண்டு உனக்கு ப்ரத்யக்ஷமானுர் என்று சொல்ல, வணிகன் தாசரைவணங்கி, பாகவதோத்தமரே! உம்முடைய பெருங்கருணையாலல்லவோ எனக்குப் பகவானுடையசேவை கிடைத்தது என்று சொல்லி, அன்றுமுதல் ஹரிநாமசங்கீர்த்தநம் பணணிக்கொண்டிருந்தான்.தாசரும் தாம்இருக்குமிடத்தையடைந்து ஸ்ரீஹரிபஜநமசெய்துகொண் டிருந்தார் என்று சொல்லி மேலே ஞாநதேவர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

கபீர்தாசரிசரித்திரம் முற்றிற்று.

# சு-வது ஞானதேவர் சரித்திரம்.

கங்காநதிக்கரையில் ஆப்கா என்னும் ஊரில் கருணிககுலத்தில், விஷ்ணு பக்தராகிய கோவிந்த பண்டிதர் என்பவர் ஒருவர் வாழ்ந்திருந்தார். அவருடைய பத்தியாகிய கிருபாயி என்பவள் கற்பிற் சிறந்தவளா யிருந்தாள். இவ்விருவருக்கும் நெடுநாளாய்ப் புதல்வர் இல்லாமலிருந்து, பிறகு, பகவானுடைய பேரருளால் ஒரு புதல்வர் அவதரித்தார்; அந்தப் புதல்வருக்கு விடோபாவென்று பெயரிட்டுஅன்போடு வளர்த்துவந்தார்கள். அப்படி அந்தப் புதல்வர் வளர்ந்துவரும்போது, பருவங்கண்டு உபநயனஞ்செய்து கல்வி கற்பிக்க, அந்தப் புதல்வர் சகலகலைஞானமும் கற்று அறிவிற் சிறந்தவராயிருந்தார். அப்படி யிருக்கும்போது, ஒருநாள் பகவதநுக்ரஹத்தால் அவருக்குத் தீர்த்தயாத்திரை செய்யவேண்டுமென்கிற விருப்பமுண்டாக, தாய்தந்தையரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, அவ்வூரைவிட்டு, ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தனஞ செய்துகொண்டேபோய்த் துவாரகாபுரியை யடைந்து, கோமதி நதியில் முழுகி, ஸ்ரீ கண்ணபிரான் எழுந்தருளியிருக்கிற கோயிலுக்குப் போய், அவரை வணங்கி, அவ்வூரைவிட்டு, முற்காலத்தில் மச்சரூபியாய்ச் சங்காசுரனுக்கு மோக்ஷத்தைக்கொடுத்த எம்பெருமானிடத்திற்போய், அவரை வணங்கி, தர்மபுரியைக் கண்டு, மூலமாதவமடைந்து, அப்பால் பாலுகாதீர்த்தம், சோமநாதம், தவளபுரி என்னும் க்ஷேத்ரங்களெல்லாம் சேவித்து, அவ்வழியிலுள்ள தீர்த்தங்களிலெல்லாம் நீராடி, அளகாவதியென்னும் ஊரைச்சேர்ந்து சக்கரதீர்த்தத்தில்முழுகி, அந்தத் தீர்த்தக்கரையி லெழுந்தருளியிருக்கிற பகவானேவணங்கி அங்கே வாசம்பண்ணுங்காலத்தில், அவ்வூரில் வாழ்வோராகிய சித்தோ பண்டிதர் என்னும் வேதியர், இந்த விடோபாவைக் கண்டு, உமது பேர் யாது? எங்கேயிருந்து வந்தீர்? என்றுவினவ,இவர், எம்மூர் ஆப்காமூர், என் பெயர், விருத்தாசாரிகளுக்குப் பிறந்த விடோபா, நான் இத்தத்திசையி லுள்ள நதிகளில் முழுகவேண்டுமென்கிற விருப்பமுடையவனாய் வந்தேன் என்று சொல்ல, சித்தோபண்டிதர் கேட்டு மனமகிழ்ந்து, இதுசுதிகமென்று இவரைக் கொண்டாடித் தமது மனைக்கு அழைத்துக்கொண்டு போய், அறுசுவைப் பதார்த்தங்களோடு கூடின உணவை யுண்பித்து, பிறகு, இருவரும் கண்ணுறங்கும்போது,சித்தோபண்டிதர்கனவில்,பாண்டுரங்கன்எழுந்தருளி, பண்டிதரே! உமது புதல்வியை இந்த ப்ரஹ்மசாரிக்கு மணம் புணர்வித்தால் உமக்கு நன்மையுண்டாகுமென்று சொல்ல, சித்தோபண்டிதர் உடனே விழித்தெழுந்து விடோபாவுக்கு இந்தச் செய்தியைச் சொல்ல, விடோபாவானவர், உமக்குக் கனவில் வந்து சொன்ன பாண்டுரங்கன் என் கனவில் வந்து சொல்லலாகாதோ வென்ன, பண்டிதர் விடோபாவை நோக்கி, இன்றிரவும் இவ்விடத்தில் தங்குவீரானால் அப்படியே பகவான் க்ருபைசெய்வாரென்று சொல்ல, அப்படியே தங்கி யிருந்து உறங்கும்போது, பாண்டுரி நாதன் இவர்

கண்விலெழுந்தருளி நீர் இந்தப் பண்டிதருடைய புதல்வியை மணம்புரிந்து கொண்டால், அவள்வயிற்றில் நன்மக்கள்நால்வர் பிறப்பரென்று சொன்னது கேட்டு, விழித்தெழுந்து பண்டிதருக்குத் தமது கனவின் செய்தியைச் சொல்ல, பண்டிதர் புரோகிதரை யழைப்பித்து, சுபமுஹூர்த்தத்தை ஆராய்ந்தமைத்து, அந்தச் சுபமுஹூர்த்தத்தில் தமது புதல்வியை மணம்புணர்வித்து, நான்கு நாள் கழிந்த பிறகு, விடோபாவானவர் பண்டிதரை நோக்கி, இது கடகமாச மாதலால், பண்டரிபுரத்துக்குப் போய், பகவானைச் சேவிக்க வேண்டும் என்று சொல்ல, பண்டிதரும் அப்படியே செய்யலாம்; உமது மனைவியையும் அழைத்துக் கொண்டு போமென்று சொல்ல, அழைத்துக் கொண்டு பண்டரிபுரத்தையடைந்து, அங்குள்ள சந்திரபாகைநதியில் நீராடிப் பண்டரிநாதன் கோயிலிற்போய் வணங்கி ப்ரதக்ஷணம்செய்து, கருடஸ்தம்பத்தையடைந்து சேவித்து, எம்பெருமானுகிய ஸ்ரீ கண்ண பிரானை நின்றும் விழுந்துதொழுதுநிற்க, ஸித்தோபண்டிதரும்அவ்விடத்துக்கு வந்தார். வந்தவரை வணங்கி, நான் சேதுவுக்குப் போய்வரவேண்டுமென்று சொல்ல, இவருடையமனநிலையைக்கண்டுஅப்படியே போய்வாருமென்று சொல்லி பண்டிதர் அளகாபுரியைச் சேர்ந்தார். விடோபவானவர் பண்டரிநாதனிடத்தில் விடைபெற்றுப்போய், ஸ்ரீசைலம், மல்லிகார்ஜுநம் முதலாகிய ஊர்களைக் கண்டு சேவித்து, சேது ஸ்நாநமும்செய்து, பிறகு அளகாபதியையடைந்து மாமனாரை வணங்கி, நான்குநாள் கழிந்த பிறகு மாமனாரை நோக்கி, என் தந்தை தாயரைக் கண்டு வணங்கி வரவேண்டும், ஆகையால் விடை தரவேண்டுமென்று கேட்க, பண்டிதர் நானும் உமது தந்தை தாயரைக் காணவேண்டுமென்று சொல்லிப் பிரயாணமாகித் தம்பதிகளோடுவந்து, தந்தை தாயாருக்குத் தண்டம் சமர்ப்பித்து, எம்பெருமான் நியமித்தபடியே மணமுடிந்ததென்று விண்ணப்பஞ் செய்ய, அவர்களும் மகிழ்ந்தார்கள். பிறகு தம்மகளையும் மருமகனையும் அங்கேவிட்டுப் பண்டிதர், தம்மூருக்குப் போய்விட்டார். பிறகு விடோபாவின் தாய் தந்தையர்க்கு மரணம்சம்பவிக்க, அவர்களுக்குச் செய்ய வேண்டிய க்ரியைகளெல்லாவற்றையும் செய்து, சற்றும் மனம் வருந்தாமலும் குடும்பத்தில் பற்றில்லாமலும் இருப்பதைப் பண்டிதர் கேள்விப்பட்டுப் புறப்பட்டு வந்து, மருமகனுக்கு ப்ரியவசநங்கள் சொல்லி, குடும்பத்தில் மனமில்லாமலும் பொருள் தேடாமலும் இருப்பீராஞல் இல்வாழ்க்கை நடவாது, ஆகையால் எம்மூர்க்கு வாரும் என்று அழைத்துக்கொண்டுபோய், எல்லாரும் ஒருமித்து வாழ்ந்திருந்தார்கள்.

இப்படி யிருக்கும் நாளில், அவ்வூரில் பஜநம செய்துகொண்டும், ஆடி மாசவதாதசியில்தவறுமல் விட்டலனைச் சேவித்துக்கொண்டும் தங்கியிருந்து, சிலநாள் கழிந்த பிறகு, ஒருநாள் மனைவியைநோக்கி, பெண்ணே! இந்த இல்வாழ்க்கையில் எனக்கு மிகவும் வெறுப்புண்டா யிருக்கின்றது, ஆகையால் நான் காசிக்குப் போய்ச் சந்நியாசம் பெற்றுக்கொள்ளுகிறேன் என்று சொ

ல்லி, நீ வினைகொடுத்தனுப்பவேண்டுமென்று கேட்க, மனைவியானவள் மறு மொழி கொடாமல் சென்று இந்தச் செய்தியைத் தாய் தந்தையருக்குச் சொல்ல, சித்தோபண்டிதர், தம்மகளைப் பார்த்து, புத்திரனில்லாதவர் சங்கி யாசம் பெறுதல் விதியல்லவென்று சொல்ல, மனைவியானவள் விடைகொடுக் காதிருக்க, தாசராணவர் யாம் கங்கா ஸ்நானத்துக்குப் போய்வருவோமென்று சொல்லிப் போனார். வலியில் நின்றும் விடுபட்ட மான்போலத் திரிவேணி சங்கமம் போய், பிரயாகையில் நீராடி, விஷ்ணு பத்தர் சொல்லும் புராணங் கேட்டு, நிலையில்லாத சம்சாரமானது ஜனன மரணங்களைக் கொடுக்குமென் றறிந்து, ஸ்ரீபாதர் என்னும் தமோபாதகரைச் சத்பாவத்துடன் வணங்கி, உன்னை நாடிவந்த எனக்குத் துறவில் விருப்பமுள்ளது, அதனை அடியேனுக்கு க்ருபை செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அந்த ஸ்ரீபாதர் இவரை நோக்கி உனக்கு, மனைவி மக்கள் உளரோவென்று வினவ, இல்லை, நானொருவனாகவே யிருக்கிறேன் என்று சொல்ல, ஸ்ரீபாதர் இவர்க்கு, தீக்ஷை செய்து ஸந்யாஸ ஆசிரமத்தையும் கொடுத்தார். பிறகு விடோபாவானவர் காசி க்ஷேத்ரத்தில் நான்காம் ஆசிரமத்தை யடைந்திருப்பதை அறிந்து, சித்தோ பண்டிதராணவர், பிள்ளை பெறுதவர்க்குத் துறவு கொடுப்பது நன்மை யல்லவென்று சொல்லி, அதனாலே துயரத்தை யடைய, மனைவியுங்கேட்டுத் துன்பமடைந்து, தெளிந்து, அரசமரத்தை நாள்தோறும் வலம் வருதலே வ்ரதமாகக் கொண்டு, கடந்திவருங்காலத்தில், ஒருநாள் தன் கணவனுக்குத் துறவுகொடுத்த ஸ்ரீபாதர் அந்த அரசமரத் தடியில் வந்திருப்பதை விடோபாவின் மனைவி பார்த்து, அவரை வணங்க, ஸ்ரீபாதர் அவளை நோக்கி, நீ நான்கு மக்களைப் பெறுவா யென்று ஆசீர்வதிக்க, அந்தப் பெண்ணானவள் நகைத்தாள்; நகைத்தலும் ஸ்ரீபாதர் அவளைநோக்கி, ஏன் சிரிக்கிறாயென்ன, அவள் சுவாமீ, என் கணவன் காசியிற்போய்த் துறவுபெற்றுக் கொண்டார்; அப்படியிருக்கக் கணவனில்லாமல் புத்திரப்பேறுண்டோ வென்று கேட்க, அந்தக் குருவும், பிள்ளையில்லாதவர்கள் துறவு பெறுதல் பாவம், அவர்களுக்குத் துறவு கொடுக்கும் குருவுக்கும் பாவமே யென்று அடையாளங் கேட்டுத் தெரிந்துகொண்டு, பெண்ணே, உன் தந்தையை யழைத்து வரவேண்டுமென, விரைந்துபோய்த் தந்தைக்குச் சொல்ல, உடனே அவர் வந்து ஸ்ரீபாதரை வணங்க, ஸ்ரீபாதர் சொல்லுகின்றார். உன்மகளை ஒரு வாஹநத்தில் லேற்றிக்கொண்டு நீகாசிக்கு வாவென்று துறவினரை யழைத்துக்கொண்டு மகிழ்ச்சியுடனே விரைந்துபோனார். போனபின்பு, ஸ்ரீபாதர், சைதன்யர் என்னும் பெயர்பூண்ட சீடருடைய முகத்தைநோக்கி, உனக்கு மனைவி யுண்டோ இல்லையோ வென்று வினவ, ஞான குருவின் அடியை வணங்கி, விடோபா, உள்ள சங்கதியைச் சொல்ல, நல்லதென்று நீ மனைவியோடு போய் ஊரில் வாழக்கடவா யென்று சொல்ல, அப்படியே அவரும் போய் மனைவியோடு சேர்ந்தபிறகு, ஊரிலுள்ளோர், துறவுபூண்டவன்மறுபடியும் இல்வாழ்க்கைக்கு வரலாமோவென்று பழித்துக்கூற, விடோபாவானவர்,

திருமாலின் திருநாமங்களை உச்சரித்துக் கொண்டிருக்க, அவ்வூரிலுள்ள வேதியரெல்லாரும் தம் குலத்தினின்றும் விலக்கிவிட, ஊரைவிட்டு நீங்கி, காட்டிற்போய் ஒரு குடிசை யேற்படுத்திக்கொண்டு அதில் தமது பத்தினி யோடு வாழ்ந்திருந்தார். இப்படிப் பன்னிரண்டு வருஷகாலம், யாசித்துக் காலங் கழித்துக் கொண்டிருக்கையில், இவர்க்கு மூன்று ஆண்குழந்தையும், ஒரு பெண்குழந்தையும் பிறக்க, அவர்களுள் முதற் குழந்தைக்கு நிவர்த்தி என்றும், இரண்டாங் குழந்தைக்கு ஞானதேவென்றும், மூன்றாங் குழந்தைக்குச் சோபாநர் என்றும், பெண்ணாகிய நான்காங்குழந்தைக்கு முக்தாயி என்றும் பெயரிட்டு வளர்க்க, அவருலத்திற் பிறந்த மக்களாகையால் இவர்கள் முகத்தையும் பார்க்கலாகாதென்று யாரும் பழித்துச் சொல்லக் குழந்தைகள் வளர்ந்துவரும்காளில் உபயநயம்செய்யத்தகுந்த பருவம் வந்தவுடனே மஹாவி யானவள் கணவனைநோக்கி, நமது புதல்வருக்கு உபயநயம் கடத்தவேண்டு மென்று சொல்ல, அதைக்கேட்ட ஞானவாரூகிய விடோபாவானவர், வேதி யரை வரவழைத்து, நான்செய்த பிழைகளைப் பொறுத்து, ப்ராயச்சித்தநூல் களில் விதித்தபடி ப்ராயசித்தம்செய்து,உபயநயசடங்குசெய்தருளவேண்டு மென்று ப்ரார்த்திக்கும்போது, மூத்த பிள்ளையானவன் வந்து, பெரியோர்க ளே, உங்களுடைய முகங்களைக் கண்டபோதே நாங்கள் பரிசுத்தராய் விட் டோம், ஆகையால் நாங்கள் ஆறுபேருக்கும் ப்ராயச்சித்தம செய்தருள்வீ ரென்று ப்ரார்த்தித்து நிற்க, வேதியர், உங்களுடைய உடம்பை நீறுக்குத லே யன்றி வேறு ப்ராயச்சித்தமும் உபாயமு மில்லையென்று சொல்ல, ஞான தேவர் அவ் வேதியரை வணங்கித் திரும்பிப்பாராமல் காட்டுக்குப் போய்த் தனியே யிருந்தார். இப்படிப் போனவரைக் கண்டு அநுதாப மிகுந்த வேதி யர்கள், நீங்கள் எங்கள் அநுதாபமாகிய கொடுப்பினை சுடப்பட்டீர்கள், இது வேபோதும், வேறு கொடுப்பினை சுடவேண்டிவ தில்லை என்றார்கள். அப் போது நிவர்த்தியென்கிற பெரியபிள்ளை வந்து, வேதியரே, எங்களுக்கு எப் படி விதிக்கிறீர்களோ, அப்படிச் செய்வோமென்று சொல்ல, அந்த வேதி யர்கள், இவர்களைநோக்கி, நீங்கள் உங்களுடைய ஊருக்குப்போய், உங்களு டைய சுற்றத்தாரைக்கொண்டு உங்கள் குல முறையைத் தெரிக் தெழுதிக் கொண்டு வாருங்களென்றுசொல்ல, நிவர்த்திதேவரானவர், நமது குலம் நம க்கு நன்றாய்த் தோன்றும்போது நாம் ஒருவரைக் கேட்கவேண்டிய தென்ன வென்றார்.ஞானதேவரானவர்,ஜீவன்முத்தபதம்தோன்றினாலும்ஸ்வதர்மத்தை விடலாகாதென்று சொன்னார். இப்படி இவர் சொன்னபோது, சோபாநர் வந்து, சாதியினால் ஒரு ப்ரயோஜநமுமில்லை, யாராயிருந்தாலும் பக்தியில்லா மல் ஸ்ரீஹரி பாதத்தை அடையமாட்டார்கள், வசிஷ்டர் முதலானவருடைய பிறப்பின் வகையென்ன, ஆலோசிக்குமிடத்தில் தாழ்ந்த குலத்தினனு யிருந் தபோதிலும் கடவுளிடத்தில் அன்புடையனாயிருந்தால், அவனுடைய தீமை கள் யாவும் நசித்துப்போகும் என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட வில்லை யாவென்று சொல்லி நின்றார். அப்போது அந்த வேதியர் இவர்களுடைய

குல முறைமை எழுதித் தந்தாரே யன்றிப் பிராயச்சித்தம் நியமிக்கவில்லே. அதைக் கண்டு, இவர்கள் கோதாவிரி நதியில் நீராடி, அப்பாற்போய்ப் பிரம புரத்தை யடைந்து, அங்கிருக்கும் வேதியரைச் சேர்த்து, பொறுமையுடைய வர்களே என்று வணங்கிப் பத்திரத்தையும் கொடுத்து, உள்ள சங்கதியை யும் சொல்லி நின்றார்கள். அவர்களும் ப்ராயச்சித்த மில்லையென்று சொல்ல, அவர்களிற் சிலர் உங்களுக்குத் திருமாலிடத்தில் அன்புண்டானால் அதுவே போதும், வேறொன்றும் வேண்டியதில்லே என்று சொல்ல, இவர்களும், ஐய ரே, நாங்கள் நினைத்தபடியே சொன்னீர்களென்ன, அவ் வேதியர் ஞானதே வரை நோக்கி, உமக்குத் தெரியாதது என்ன இருக்கின்றது, நீர் ஞானதேவர் என்கிற பெயரையும் படைத்திருக்கிறீர் என்று சிலர் சொல்லும்போது, அங்கேயிருந்த ஒருவன், இதைப் பொறி யெருதுக்கும் ஞானதே வென்னும் பெயருண்டு, இதனால் என்ன ப்ரயோஜநம என்று சொல்ல, ஞானதேவர் அறிந்து, நல்ல வார்த்தைசொன்னாய், நானும அதுவும் சரியே என்று சொ ல்ல, அவன் நீயும் அதுவும் சமமானால், அதற்கு நேரிட்டதெல்லாம் உனக் கும் நேரிடுமோ வென்ன, அப்படியே நேரிடும் என்றார். அவன் அதைப் பார்க்கிறேனென்று அந்தக் கடாவைத் தடியா லடித்தான், அந்த அடி ஞான தேவர் முதுகிற்பட்டுத் தடித்ததை வேதியர் பார்த்து, இந்தக் கடா உன்னைப் போல நான்கு வேதங்களேயும ஓதுமோ வென்ன, ஞானதேவர் எழுந்து இந்த க்ஷணமே பாருங்கள்என்று கடாவின் தலைமேல் கையைவைத்து, வேத த்தை ஓதுவாயாக வென்று சொல்ல, அந்தக் கடாவானது வேத வ்யாஸரை ப்போல நான்கு வேதங்களேயும ஓத, வேதியரெல்லாருங் கண்டு, அதிசயி த்து, ப்ரஹ்மதேவன் முதலானோர் செய்தற் கரிதான செயலே இவர் செய்த லால், இவர் நரர் அலர், அவதார புருஷரே யாவர், இவர்க்கு எவர்களே நிகரெனச் சொல்லலாம், பொருளாசை யுடையோமா யிருக்கிறோம்வேதிய ராய்ப் பிறந்ததன்றி, நல்லொழுக்கம், பக்தி, பரிசுத்தமனம் என்கிற இவற் றுள் ஒன்றையாயினும் உடையோ மல்லோம், ஆகையால் இவரைப்போல் வாராகிய வேதியர் இவ்வுலகி லில்லே, இவரை நன்றவர்கள் என்னதவஞ் செய் தார்களோ என்று சொல்லிப் புகழ், இவர்களும் அவ்வேதியரைப் புகழ்ந்து தோத்திரம்பண்ணி, எல்லாம் உமதுடைய பெருமையே யாகுமென்று சொ ல்ல, அவ்வூரிலுள்ளவ ரெல்லாரும் இவர்கள் மிகவும் நல்லோர்களும் ஹரி பக்தர்களுமா யிருக்கிறார்களென்று பேசிக்கொள்ள, நால்வரும் போய் ஒரு வேதியன் வீட்டி லிறங்கி, புராண சிரவணஞ செய்துகொண்டும, ஹரிநாம ஸங்கீர்த்தநம செய்துகொண்டும், தங்கி யிருக்குங் காலத்தில், இவர் தங்கி யிருந்தவீட்டுக் குடையவனுகிய வேதியன், தன் பித்ருசிராத்தம் வந்ததென்று, சூழ்ந்திருக்கிற வேதியரை போஜநத்துக் கழைக்க, அவர்கள், இவ்வே தியனை நோக்கி, நீ துறவியின் மக்களே உன்வீட்டில் சேர்த்துவைத்திருக்கிறா யாதலால், உன் வீட்டில் நாங்கள் போஜநம் செய்யமாட்டோம் என்றார்கள். அதைக் கேட்ட ப்ராஹ்மணன், இதற் கென்ன செய்வோமென்ன எண்ண

யிட்டுக் கொண்டிருக்கையில், அவனே ஞாநதேவர் பார்த்து, நீ மனம் வாடி யிருப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்க, அவ்வேதியன், இன்று என் பிதுருக்குச் சிரார்த்தநிமித்தம் மாதலால் சில ப்ராஹ்மணரை போஜநத்துக் கழைத்தேன், அவர்கள் உன்வீட்டில் தாமே மக்களை வைத்துக் கொண்டிருப்பதனால் நாங்கள் உன்வீட்டில் போஜநம செய்யமாட்டோம் என்றார்கள், இதுதான் என் வாட்டத்துக்குக் காரணம என்றான். ஞாநதேவர் அவனைநோக்கி, நீ அஞ்சவேண்டாம், அழகுசுவப் பதார்த்தங்களோடுகூடிய போஜநம் அமைத்து வை, உன் பிதுர்க்கள் தேவரேவந்து உண்ணும்படி செய்கிறேனென்று சொல்லக்கேட்ட வேதியன் அதிசயங்கொண்டு, நீராடி வந்து எல்லா உணவுகளையும் சித்தப்படுத்தி, வாழை இலையிற் பரிமாறி, உண்பதற்குப் பிதிரரை அழையுமென்று சொல்ல, ஞாநதேவர் அக்ஷதையை இலைமேல் பெய்தமாத்திரத்தில் பிதிரரெல்லாரும் வர, அவர்களுக்கு அர்க்கிய பாத்யாதி உபசாரங்கள்செய்து, ஆசநம தந்து, ஆடை ஆபரணங்களோடு தக்ஷிணையும் தந்தான். பிறகு தூபதீபங்களோடு, பித்ருரூப ஜநார்த்தந வாசுதேவ மூர்த்திக்கே ப்ரீதியாகக் கடவதுஎன்று சொன்னவுடனே பிதிரரெல்லாரும் அழுது செய்தார்கள். அவ்வேதியன் இந்த அதிசயத்தைப் பார்த்து, மஹாதாநந்தத்தை அடைந்தான். இந்த அற்புதத்தை அவ்வூரிலுள்ள வேதியரெல்லாரும் சாலரங்களிலும் இறப்புக்களிலும் பதுங்கிப் பார்த்தார்கள். பிதிரரெல்லாரும் போஜநம செய்தானவுடனே, ஞாநதேவர் அவர்களைநோக்கி, பாபராசியைக் கடந்தவர்களே, நீங்கள் போகலாம் என்று சொல்லவே மறைந்துவிட்டார்கள். அதைக்கண்ட மறையோரெல்லாரும், இது என்ன புதுமை, பிதிரரை வரவழைத்ததை நோக்கினால் இவர்கள் நரர்களேயல்லர் என்றும், த்ரிமூர்த்தி ஸ்வரூபிக ளென்றும தோன்றுகின்றது, இவர்களுடைய மகிமையை அறியாமல் நாம் இவர்களை ஏழைக இகழ்ந்தோம், அப்படி நமது குலமதத்தால் இகழ்ந்தது நமக்கு நன்மை யல்லவென்று சொல்லிக்கொண்டு போனார்கள். பிறகு, பகடானது வேதாபிப்ராயத்தை யாவரும் அறியும்படி சொல்லுவதை ஞாநதேவர் அறிந்து, வியாசமுனிவர் சொன்னமுறை தவறுகுமென்று பகட்டைப்பார்க்க,அது முன்போலப் பிரகாசித்தது. தமக்கு ஹிதஞ் செய்துநின்ற வேதியனைப்பார்த்து வணங்கி, எமக்கு இனி விடை தர வேண்டுமென்றுகேட்டு விடைபெற்றுக்கொண்டு, அவ்வூரைவிட்டு மஹாலயம் என்னும் ஊரை நால்வரும் வந்தடைந்து, பிரவரா என்னும் தீர்த்தத்தில் மூழ்கி, அங்கே தங்கியிருக்க,ஞாநதேவர் த்ருடதர ப்ரமாணமாகிய கீதைக்கு, யாவரும் எளிதில் உணருமபடி வியாக்கியாநம் செய்ய, அதனைச் சோபாநதேவர் எல்லாருக்கும் போதித்துக் கொண்டிருக்குங் காலத்தில், இவர்கள் செய்தியைக் கைனியர் வேத்தன் கேட்டு வந்து, நீங்கள் சுவாநுபவத்தை யடைய வேண்டும் என்று சொன்னவுடனே, கேட்ட நால்வரும் திருவடியில் விழுந்து, நாதனே, எமக்கு நீரே ஞானத்தை உபதேசிக்கத் தகுந்த சற்குருவாயிருக்கிறீர். இப்போது எங்களுக்கு உபதேசஞ் செய்யவேண்டும் என்று

ப்ரார்த்தித்தவுடனே, கைனியர் வேத்தனும் உபதேசஞ் செய்ய, இவர்கள் பெற்றுக்கொண்டபிறகு,சாதுவாகிய சற்குருவே சொல்ல,ஞானதேவர் அம்ருதாநுபவம் என்னும் நூலைச் செய்தனர். பிறகு, மாளசாதேவியின் ஆலயத்தில் நமஸ்காரம் என்று சொல்லி, ஸ்ரீ ஹரிநாமத்தை உச்சரித்துக்கொண்டேபோய், ஓர் ஆலயத்தினருகே இறந்துகிடந்த கரும பகட்டைச் சமாதி செய்ய, அந்த இடம் மைசோபா என்னும் பெயர்கொண்டு விளங்குகின்றது. முத்தாயி சொன்ன சொல்லின்படி முன்னே இவர் வாழ்ந்திருந்த இடமாகிய அளகாபுரியை அன்போடு சேர்ந்து ஸ்ரீஹரிநாமசங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்தார். அந்த ஊரிலுள்ளார் யாவரும் அவருடைய சக்திய வசனத்தையும், செய்கிற அற்புதச் செயல்களையும நன்றாகக் கேள்விப்பட்டு வந்து இவரைத் தழுவிக்கொண்டார்கள். தழுவி இவரால் நமக்குண்டாயிருக்கிற பாவங்களெல்லாந தீரும் என்றெண்ணி வசிக்கும்போது, விசோபன் என்னும் ஒரு ப்ராஹ்மணன்மாத்திரம் வராமல் வேறுபட்டிருந்து, தூறவடைந்தவனுக்கு இவர்கள் மக்களாகி முறைதப்பியிருக்கிறார்கள், இவர்கள் முகத்தையும பார்க்கலாகாது, பார்த்தால் மஹா பாபம நேரிடும் என்று அநேகமான பழிமொழிகள் சொல்லிநிந்தித்தான். இப்படியிருக்கையில் ஒருநாள் நிவர்த்தியென்பவர் தனக்கிளையவளை நோக்கி, தங்கையே எனக்கு மதுரமாகிய அப்பம் முண்ணவேண்டுமென்கிற ஆசையுண்டாயிருக்கின்றது, ஆகையால் எனக்கு அப்பஞ் சுட்டுத் தரவேண்டுமென்று கேட்க, அவள் அதற் கிசைந்து, அப்படியே சுட்டுத் தருகிறே னென்று சொல்லி, மா முதலிய யாவும் சேகரித்து வைத்துக்கொண்டு, அப்பம சுடுதற்குத் தகுந்த ஓடு வாங்கிவரும் பொருட்டுக் குயவன் வீட்டுக்குப் போகும்போது, அந்த வழியில் விசோபன் எதிர்ப்பட்டான். இவள் அவனைக் காண விருப்பமில்லாதவளாய், ஒரு பக்கத்திலொதுங்கக் கண்ட விசோபன், இவளை நோக்கி, எதிரே வராமல் ஒரு பக்கமாக ஏன் விலகினாய், நீ எங்கே போகிறாய் சொல்லென்று கேட்க, அடை சுடுதற்குத் தகுதியான ஒரு ஓடு வாங்கிவரும்பொருட்டுக் குயவன் வீட்டுக்குப் போகிறே னென்றாள். அதைக் கேட்ட விசோபன், நீ யெனக் கெதிரே வந்ததனால் நான் நீராடாமல் ஒரு காரியத்தையும் செய்யமாட்டே னென்று கோவத்தோடு சொன்னான். அன்றியும், இனி யெனக் கெதிரே வர வேண்டாமென்று சொல்லி, இவளை யெற்றிவிட்டு, விரைவாகக் குயவனிடத்திற் போய், இவளுக்கு என் உத்திரவில்லாமல் ஓடு கொடுப்பாயானால், உன்னை நன்றாய்ச் சிக்ஷிப்பேன் என்று சொல்ல, குயவன் மனம் வருந்தியிருக்க, இவளும் போய் ஓடு வேண்டுமென்று கேட்க, அவன் கொடுக்கமாட்டேனென்று சொல்லிவிட்டான். பிறகு இந்தப் பெண் தன்வீட்டுக்கு வந்து அழுதுகொண்டிருந்தாள். அப்போது நீராடி வந்த ஞானதேவர், இவளை நோக்கி, நீ அழுதற்குக் காரணம் யாதென்று வினவ, இவளும் நடந்த செய்தியைச் சொல்ல, இவை யாவும் சாளர வாயில்வழியாய்ப் பதுங்கியிருந்து விசோபன் கேட்டுக்கொண்டிருந்தான். ஞானதேவர், விசோபன் இப்படிச் செய்வது அவ

னுக்கு இயற்கையென்று சொல்லி, தமது முதுகை அப்பஞ் சுடுஞ் சட்டி யாகவும், உதராக்நியைப் புறத்தே வரும்படிசெய்து அதை நெருப்பாகவும் அமைத்து, அந்தப் பெண்ணைப்பார்த்து, இதில் அப்பம் சுட்டுக்கொள் என்று சொன்னர். அவளும் அப்படியே ஞானதேவர் முதுகிலே அப்பம் சுட்டுத் தன் தமையனேடிருந்து உணணும்போது, பார்த்திருந்த விசோபன், இவர் மனிதர் அல்லர், தேவரேயாவர் என்று அதிசயபபட்டு, இப்படிபபட்டவர் களை அறியாமல் நாம் வீணுகவே தூஷித்தோம், அந்தப் பாவத்தை எப்படித் தொலைக்கப்போகிறோம் என்று எண்ணி, இவரையே சரணமடைவோமென்று போகும்போது இவன் வருவதையறிந்த ஞானதேவர், தாம் அமுதுசெய்த இலை க்கலத்தை வீட்டின் புறத்தே யெறிய, விசோபன் அதைப்பற்றிப் பிடிசோறு அதிலிருந்தெடுத்துண்டான். அதைப் பார்த்த ஞானதேவர், அடா விசோபா, நீ பருந்துபோல இச்சோற்றையுண்டாயாதலால் நீ கழுதையை நிகர்த்திருக் கிறாய் என்று கடிந்து சொல்ல, விசோபன் பயந்து அவர்பாதத்தில் விழுந்து வணங்கி, எனது அஜ்ஞானம் நீங்கும்படி அருள் செய்யவேண்டும் என்று ப்ரார்த்திக்க, ஞானதேவரும் இவனுடைய பரிபக்குவத்தை யறிந்து, இவனு க்கு ஞானோபதேசம் செய்தார் இப்படியிருக்குங்காலத்தில், ஞானதேவர் பண்டரிபுரத்துக்குப் போய், பாண்டுரங்கனைச் சேவித்து வணங்கின பிறகு, நாமதேவர் வீட்டுக்கு வரும்வழியில் நாமதேவர் எதிர்ப்பட்டு, கைகுவித்து வணங்கி, எல்லாரையும் உய்விக்கும்பொருட்டு அவதரித்த தேவரீரைத் தரிச கம் செய்வதற்கு நான் என்ன தவம் செய்தேனோ என்றுபுகழ, ஞானதேவர், நாமதேவரை நோக்கி, கன்று சொன்னீர், உம்மை நிகர்பபவர் இவ்வுலகத் தில் யாரிருக்கிறார், ஒருவரு மில்லை, ஞானத்தால் ஜீவர் முக்திபதம் திடைத் திருந்தாலும் உலகத்திலுள்ள புண்ய தீர்த்தங்களிலெல்லாம நீராடிப் புண்ய க்ஷேத்ரங்களெல்லாவற்றையும் தரிசிக்கவேண்டும்; ஆதலால் உம்மோடுகூடித தீர்த்தயாத்ரை க்ஷேத்ர யாத்ரைகளைச் செய்யவேண்டுமென்கிற ஆசையால் வந்தேன், நீர் இதற்கிசையவேண்டுமென்று ப்ரார்த்திக்க, நாமதேவர் நான் என் அதீநத்தி லிருக்கவில்லை, பாண்டுரங்கனுடைய அதீநத்தி லிருக்கிறேன் என்றார். அதைக்கேட்ட ஞான தேவர், பாண்டுரங்கனைக் கேட்டே அவர் கர உம்மைப் பெற்றுக்கொள்ளுகிறே னென்று நாம தேவரையும் அழைத்துக் கொண்டு, பகவானுடைய சாந்நித்யையடைந்து, திருவடியை வணங்கிநின்று சுவாமீ! அடியேன் இந்த நாமதேவரோடு கூடிச்சென்று தீர்த்தயாத்ரை செய்துவரவேண்டும, ஆதலால் இவர் என்னோடு வரும்படி இவர்க்கு விடை தரவேண்டுமென்று ப்ரார்த்திக்க, பாண்டுரங்கன், ஞானதேவா, நாமதேவன் எல்லாத் தீர்த்தங்களும் நானேயென்றுறுதிகொண்டிருக்கிறான், நான்சொன் னாலும் அவன் உன்னோடு வரமாட்டான், ஆனாலும் உனக்குத் தீர்த்தமாட வேண்டுமென்கிற அவசர மென்னவென்று கேட்க, ஞான தேவர், இவர் நீர் மலராயிருத்தலால் இவரோடுகூடிச் சஞ்சரிக்கவேண்டு மென்றும், அவசியம் தீர்த்தயாத்திரை செய்யவேண்டுமென்றும் மிகுந்த ஆசையுண்டாயிருக்கை

யால் இவரைத் தந்தருளவேண்டுமென்றார். பாண்டுரங்கபகவானுனவர் ஞான தேவர! என் ப்ராண நாயகியாகிய திருமகளே விட்டாலும் நாமதேவனே விட மாட்டேன், உன் மநோரதத்தையும் பூர்த்திசெய்ய வேண்டியிருப்பதனால் என்னைவிட வேறொரு திக்கில்லாத நாமதேவனே யழைத்துக்கொண்டுபோய் மறுபடியும் விரைந்துகொண்டுவந்து என்னிடத்தில்சேர்க்கவேண்டும் என்று சொல்லி, நாமதேவனே நோக்கி நீர் என்னை மறவாமல் மனத்தில் நினைத்துக் கொண்டேபோய்த்தீர்த்தயாத்ரைசெய்துவாருமென்றுசொல்லி,நாமதேவரை த்தமது திருக்கையாலே பிடித்து ஞானதேவர்கையிற் கொடுத்து நாமதேவரு டைய பிரிவுக்குச்சகியாதவராய்த் தமது திருக்கண்களில் நீர்தளும்ப இரங்கி, திருவுள்ளம்நைந்து புலம்பினர்;பிறகு ஞானதேவர் பகவானைவணங்கி, சந்த்ர பாகா நதியில் ஸ்நாநம்செய்து வருது தாமும் நாமதேவருமாக இருவரும் பக வானை வணங்க, பகவானும் இவர்களை வழிவிடப்போய், விடுத்தபிறகு மீண்டு வந்துகோயிலையடைந்தார்.அடைந்தபகவானுடைய திருவடிமுழுதும்சென்னா ள் படிந்து,திருமேனிவாடி, கண்களில் நீர்தளும்ப,தாமரைமலர்போன்ற திரு முகம்வாட்டமடைந்திருப்பதைக் கமலாஸநையாகிய பெரியபிராட்டிநோக்கி, ஸ்வாமீ! தேவரீர் இவ்வாறிருத்தற்குக் காரணம் யாதென்று வினவ, பகவா னுகிய பாண்டுரங்கர் சொல்லுகிறார். பெண்ணே! என் உயிர்போல என்னைச் சேர்ந்திருந்த நாமதேவனுடைய பிரிவென்கிற பாணம் தாக்குதலால் இப்படி வருந்தலாயிற்றென்று சொல்லி, திருமகள்முதலானோர் காணும்படி நிலத் தில் மூர்ச்சித்துவிழக்கண்டு, இதென்ன ஆச்சர்யம் என்று எல்லாரும்கூடிப் பகவானுக்குச் செய்யவேண்டிய வுபசாரங்கள் யாவும் செய்து தேற்ற, ஒரு வாறு தேறிவரும்போது பக்தரெல்லாரும் இறைவனை நோக்கி, தேவரீருக்கு இவ்வளவு வருத்தம் வந்ததற்குக் காரணம் யாதென்றுகேட்க, பகவான் ஓ அன்பர்களே! நாமதேவன் பிறந்த காள்முதல் என்னிடத்தில் மிகுந்த அன்புள்ளவனுயிருந்து பிரிந்ததனால், அவனது பிரிவு எனக்கு இவ்வளவு வருத்தத்துக்கு ஹேதுவாயிற்று, அன்றியும் பசிதாகங்கள் உண்டாகிறபோது அவன் என்னசெய்வான் என்றும், என் மனம் பதைக்கின்றது என்றுஞ் சொல்லி, அடியார்கள் தேற்றிக்கொண்டிருக்க எழுந்தருளி யிருந்தார். இப் படி யிருக்க, ஞான தேவருடன் போன நாமதேவர், பின்னே திரும்பிப் பார்த்துப்பார்த்து, தாயைப்பிரிந்த குழந்தைபோல மனங்கரைந்துருகி வண ங்கி, என் குலதெய்வமே! என் உயிர்த்துணையே, ஆநந்த ரூபமே, என்னைப் பிரிந்து எழுந்தருளியிருக்கிறீயோ என்று மனத்தளர்ச்சியோடு ஞான தேவ ரை நோக்கி, பாண்டுரங்க பகவானுடைய பிரிவைச் சகிக்கமுடியவில்லை; ஆத லால் இப்பொழுது அடியேன் பாண்டுரங்கனைச் சேவிக்கும்படிசெய்யவேண்டு மென்று ப்ரார்த்திக்க, ஞானதேவர் பகவானை நாம் மனத்தினுள்நினைக்கலாமே யன்றிச் சேவித்தல் கூடாதே, இவ்விடத்தில் எழுந்தருளி யிருக்கவில்லையே, ஆதலால் மனத்தினுள் நினைத்துக் கொண்டே வாரும் என்றார். அதைக் கேட்ட நாமதேவர் இறைவனைச் சகுணமாக நாடுதலேயன்றி வேறுவிதமாக

காலவத்திற்கு என் மனமிசையவில்லை என்று சொல்ல, ஞானதேவர் அப்படி யானால் பாண்டுரங்கனை நீர் வசியஞ்செய்து வைத்திருப்பதுபோலச் செய்யு முபாயத்தை எனக்கும் உபதேசித் தருளவேண்டும் என்ன, நாமதேவர், ஞானதேவரை நோக்கி, ஸ்வாமீ, தேவரீர் என்னைக் கேட்பது, கற்பக மரமானது ஒரு லோபியை ப்ரார்த்திப்பதுபோலிருக்கின்றது. ஆனாலும் தேவரீர் கேட்க அடியேன் சொல்லாதிருத்தல் தகுதியன்று, ஆகையால் அறிந்த மட்டும் சொல்லுகிறேன் கேளும், உலகத்தில் மானுடப்பிறவியாய்ப் பிறந்தவன், தன் சரீரத்தில் வெறுப்பும் அந்ய சரீரங்களில் விருப்பமும் உள்ளவனாய், நான் என்னும் அஹங்காரத்தை முழுதும் நீக்கி, ப்ரபஞ்சத்திலிருந்தும் ப்ரபஞ்ச வாசனை சிறிதும் தாக்காமல், திருமாலினிடத்தில் அன்பு செய்தலே பரிசுத்தமான பஜனையாகும், அத்தப் பகவான் விஷயமாகிய பாடலைக் கேட்பதே சிரவணமாகும், அவனை நெஞ்சில் உறுதியா யிருத்திக்கொள்வதே மனனமாகும், அவனன்றி வேறு தெய்வமில்லையென்று விரும்புவதே தெளிவாகும், அவனது திருநாமத்தை உச்சரிப்பதோடு அவனது திருவடியை யடைவதே பரமானந்தமாகும். இத்தச் செய்கைகளை யன்றி வேறு செய்கைகளைச் செய்வதெல்லாம் பக்த ஹேதுவாகும் என்று இவ்வாறு சொல்லி, ஞானதேவர் திருவடியில் வீழ்ந்து வணங்கினர். அம்ருதவர்ஷமபோல நாமதேவர் சொன்னவற்றை யெல்லாம் ஞானதேவர் கேட்டு, மூன்று லோகத்திலும இந்த நாமதேவரைப்போன்ற ஹரிபக்தியுள்ளோர்ஒருவருமில்லை. இவருடையபக்தியின் ப்ரபாவத்தைப் பகவானே யறியவேண்டு மல்லது எம்போல்வார் அறியவொண்ணாது என்று பலவாறுகப் புகழ்ந்து பேசின பிறகு, இருவரும் சேர்ந்து, தீர்த்தங்களோடும், அன்போடு மூழ்கி, அஸ்திநாபுரியில் வந்து தங்கின பிறகு நாமதேவர்ஹரிபஜனைசெய்யத்தொடங்கினர். இவரை அவ்வூரிலுள்ளபக்த ரெல்லாரும்வந்து மொய்த்துக்கொண்டார்கள். இந்தச்செய்தியைஅவ்வூரையாளுகின்ற துருக்க அரசன் கேள்விப்பட்டு இவரிடத்துக்கு வந்து, என்ன பாட்டுப் பாடுகிறீரென்று கேட்க, நாமதேவர், நான் திருமகள் நாயகனுகிய பகவானைப் பஜனை செய்கிறேனென்று சொல்ல, அவ்வரசன், இறந்துபோன பசுவுக்கு உயிர் வரும்படி செய்வாயானால் நீ ஹரிபஜனை செய்தல் உண்மை, அதைப் பிழைப்பிக்காத பக்ஷத்தில் உன்னை உயிர் வாங்குவேன், நீ அந்தப் பசுவைப் பிழைப்பிப்பதற்கு எத்தனை நாள் செல்லும், ஆராய்ந்து சொல்லென்று கேட்க, நாமதேவர் நாலுநாள் செல்லுமென்று சொல்ல, அரசன் கேட்டுத் தன் அரண்மனையிற் புகுதலும், நாமதேவரானவர், ஸ்ரீஹரியை த்யானித்துப் பலபடியாகத் தோத்திரஞ் செய்துகொண்டிருந்தார். இவர் இப்படி நாலு நாளாகப் பசுவின் தலையைத் தமது தொடையின்மேல் வைத்துக் கொண்டு துன்பப்படுவதைப் பாண்டுரங்கன் அறிந்து, நாமதேவர் மனத்தில் தோன்றி, நீ பசுவுக்காக வருந்தவேண்டாம், பசுவானது உயிர்பெற்றெழுந்து நிற்கின்றது, பார்க்கக் கடவாயென்று சொல்ல, நாமதேவர், பிழைத்து நிற்கும் பசுவைப் பார்த்து வியந்து, பகவானை நோக்கி, இந்த நாலு நாளாய்

நான் துன்பப்படுவதைப் பார்த்திருந்தும் சற்றும் இரக்கமில்லாமல் என்னை மறந்தே யிருந்துவிட்டீரே யென்று சொல்ல, பகவானுரைவர், காமதேவா, நான் மறந்திருக்க வில்லை, இத்தப் பசுவை அந்த கூணமே பிழைக்கச் செய்வேன், நீ நாலு நாள் செல்லுமென்று அரசனுக்குச் சொன்னதனால், உன் வார்த்தை பொய்யாகாமல் நாலுகாளும் கழித்த பிறகு பிழைக்கச செய்தேனென்று சொல்லி, இதுபற்றி என்னை நிந்திக்கவொண்ணுதென்றும், நீ சந்தோஷத்துடன் இருப்பாயாக வென்றும் கூறி, மறைந்தவுடனே, காமதேவர் தமக்கெதிரே நிற்கிற பசுவைப் பார்த்தார். இவர் பார்த்துச் சந்தோஷித்தது போலவே அவ்வூராரும் பார்த்துச் சந்தோஷித்து, அரசனிடத்தில் இந்த அத்புதத்தைச் சொல்ல, அரசனும், அறுபட்டுத் துண்டாய்க் கிடந்த பசுவின் தலை உயிர் பெறுவது உலகத்திலுண்டோ, இது என்ன அதிசயமாயிருக்கிறதென்று புகழ்ந்து, இதைப் போய்ப் பார்ப்போமென்று விரைந்து வந்து, உயிர்பெற்று நிற்கிற பசுவைக்கண்டு, இவர் தெய்வமே யென்று நிச்சயித்து, இவருடைய திருவடியில் தாழ்ந்து வணங்கி வாழ்த்துதலும், அவ்வூரிலுள்ளாரெல்லாரும் காமதேவருடைய ப்ரபாவத்தைக் குறித்து மிகவும் கொண்டாடினார்கள். பிறகு காமதேவரும் சிலநாள் ஹரிபஜனை செய்துகொண்டிருந்து, அவ்வூரை விட்டு, அங்கங்கே ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டும், அவ்வவ்வூர்களின் பாஷைகளில் கீர்த்தனங்கள் பாடிக்கொண்டும், வழியில் உள்ள தீர்த்தங்களிலெல்லாம் மூழ்கியும், காசீக்ஷேத்ரத்தையடைந்து, கங்கா ஸ்நானம் செய்து, ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகன் விஷயமாய்க் கீர்த்தனங்கள் பாடிக்கொண்டிருக்கிற விசுவநாத ஸ்வாமியையும் ப்ரார்த்தித்து, நாலுமாசகாலம் அங்கே தங்கியிருந்தார். அப்போது, அவ்வூரில் தங்கியிருக்கிற கபீர்தாசர்வீட்டில் ஒருநாளிரவில், ஹரிதாசர்கள் மிகுதியாய்வந்துசேர்ந்தார்கள். அவர்களுக்கு அந்தமிடவேண்டுமென்கிற அன்புடையவளான கபீர்தாசர் மனைவியானவள், கடைத் தெருவெல்லாம் திரிந்தும் எல்லாக் கடைகளும் மூடப்பட்டிருந்ததைக் கண்டு, மனவருத்தத்துடன் வருகையில், ஒரு வணிகன் கடைமாத்திரம் மூடாம லிருப்பதைக் கண்டு, அந்த வணிகனிடத்தில் போய், எங்கள் வீட்டுக்குச் சில ஹரிதாசர்கள் வந்திருக்கிறார்கள், அவர்களுக்கு அந்தமிடவேண்டியிருக்கிறது, அதற்கு வேண்டிய அரிசி பருப்பு முதலிய பொருள்களைத் தடையில்லாமல் கொடுப்பாயானால் அந்தப் பொருள்களின் கிரயத்தை நாளை யுதயத்தில் தருகிறேனென்று சொல்ல, அந்த வணிகன், பெண்ணே, நீ என் இஷ்டத்தை நிறைவேற்றினால் நீ விரும்பும் பொருள்களெல்லாம் தருகிறேன் என்றான். அதைக்கேட்ட தாசர் மனைவியானவள், பகவானிருக்கிறார் என்று தன் மனத்தில் நினைத்துக்கொண்டு, அப்படியே செய்கிறேனென்று வணிகனுக்கு உறுதிமொழி சொல்லி, அவனால் தரப்பட்ட பொருள்களைப் பெற்றுத் தன் வீட்டுக்கு வந்து, சமையல் செய்வோரிடத்தில் கொடுத்து, தன் கணவரிடத்தில் வந்து, வணிகனிடத்திற்குப் போனபோது நடந்த செய்திகளைச் சொல்லி, அவனிடத்திற்கு நான் போக

ವೇಂಡುಮ್, ಎನಕ್ಕು ವಿಡೈ ತರುವೀರಾಕ ಎನ್ರು ಕೇಟ್ಕ, ದಾಸರ್, ಮನೈವಿಯೈ ನೋಕ್ಕಿ, ಹರಿದಾಸರ್ ಪೊರುಟ್ಟು ನೀ ಯಿವ್ವಾಱು ಸೆಯ್ದತೈಕ್ ಕುಱಿತ್ತು ಮಿಕವುಂ ಸಂತೋಷಮಡೈಂದೇನ್ ಎನ್ರು ಸೊಲ್ಲಿ, ಇಂದ ಇರುಳ್ ಮಿಕುಂದ ರಾತ್ತಿರಿ ಕಾಲತ್ತಿಲ್ ನೀ ತನಿಯೇ ಪೋಕಮಾಟ್ಟಾಯ್, ನಾನ್ ಉನ್ನೈಕ್ ಕೊಂಡುಪೋಯ್ ಅಂದ ವಣಿಕನಿಡತ್ತಿಲ್ ವಿಡುಕಿಱೇನ್ ಎನ್ರು ತಮದು ತೋಳಿನ್ಮೇಲೇಱ್ಱಿಕ್ಕೊಂಡು, ಮನೈವಿಯೈ ನೋಕ್ಕಿ, ಪೆಣ್ಣೇ, ನಮಕ್ಕು ಇಪ್ಪಡಿಪ್ಪಟ್ಟ ಸಮಯತ್ತಿಲ್ ಉದವಿ ಸೆಯ್ದ ಅಂದ ವಣಿಕನಿಡಮ್ಬೋಲ ನೀ ನಡನ್ದುಕೊಳ್ವದೆ ತರ್ಮಮ, ಆಕೈಯಾಲ್ ಅವನೈಚ್ ಸಂತೋಷಪ್ಪಡುತ್ತಿವಾವೆನ್ರು ಸೊಲ್ಲಿಕ್ಕೊಂಡೇ ಪೋಯ್, ವಣಿಕನ್ ಕಡೈಯಿಲ್ ನಿಱುತ್ತಿಮೀಂಡಾರ್. ವಣಿಕನ್, ಎಪ್ಪೋದು ಕಾಣ್ಬೋಮೆನ್ನುಂ ಆವಲೋಡು ಎದಿರ್ಪಾರ್ತ್ತಿರುನ್ತವನುದಲಾಲ್, ದಾಸರ್ವಿಡ್ಡು ಮೀಂಡವುಡನೇ ವನ್ದು ತನ್ ಕಡೈಯಿಲ ನಿಱ್ಕಿಱ ದಾಸರ್ ಮನೈವಿಯೈಕ್ ಕಂಡು, ಪೆಣ್ಣೇ, ನೀ ಸೊನ್ನ ಸೊಲ್ ತವಱುಮಲ್ ವನ್ದಾಯ್, ಆನಾಲ್ ಇನ್ತ ಮೞೈತ್ ತೂಱಲಿಲ್ ಕಾಲಿಲ್ ಸೇಱು ಪಡಾಮಲ್ ಎಪ್ಪಡಿ ವನ್ದಾಯ್ ಎನ್ರು ಮಿಗಿೞ್ಚ್ಚಿಯೋಡು ವಿನವ, ಐಯಾ, ನೀರ್ ಸೆಯ್ದ ಉದವಿಕ್ಕಾಕ ಎನ್ ನಾಯಕರ್ ಮಿಗಿೞ್ನ್ದು ತಮದು ತೋಳಿನ್ಮೇಲ್ ಎನ್ನೈ ಯೇಱ್ಱಿಕ್ ಕೊಂಡು ವನ್ದು ಇವ್ವಿಡತ್ತಿಲ್ ವಿಟ್ಟುಪ್ಪೋನಾರ್ ಎನ್ರು ದಾಸರ್ ಮನೈವಿ ಸೊಲ್ಲ, ಇದು ಮಿಕವುಂ ಆೞಕಾಯಿರುಕ್ಕಿಱದು ಎನ್ರು ಅದಿಸಯಿತ್ತು, ಪಯನ್ದು, ಅನುದಪಿತ್ತು, ವರುನ್ದಿ, ಐಯೋ, ಅಳವಱ್ಱ ಪಿಱವಿಕಳಾಯ್ಪ ಪಿಱನ್ದ ವೀಣುಕಕ್ ಕಾಲಂ ಕೞಿತ್ತದು ಮಲ್ಲಾಮಲ್, ಕಿಡೈತ್ತಱ್ಕರಿದಾಕಿಯ ಇನ್ತ ಮನುಷ್ಯ ಜನ್ಮ ಮೆಡುತ್ತುಂ ಉಜ್ಜೀವಿಕ್ಕ ವೞಿತೇಡಾಮಲ್ ಇಪ್ಪಡಿಪಟ್ಟ ಕೊಡುಮೈಯಾಕಿಯ ಪಾವಞ್ ಸೆಯ್ಯ ಮನಂ ತುಣಿನ್ದೇನೇ, ಇನ್ತ ವುಲಕ ಮುೞುವದುಂ ತೇಡಿ ನುನ್ನುಂ ಎನ್ನೈಪ್ಪೋನ್ಱ ಪಾವಿಕಳುಂ ಕಿಡೈಪ್ಪಾರ್ಕಳಾ, ಇಪ್ಪಡಿಪಟ್ಟ ಪರಮಸಾತ್ತ ಮೂರ್ತ್ತಿಯಾಕಿಯ ದಾಸರುಕ್ಕು ನಾನ್‌ಸೆಯ್ತ ಅಪರಾತತ್ತಾಲ್ ನೇರಿಟ್ಟ ಪಾವತ್ತೈ ಎವ್ವಾಱು ನೀಕ್ಕಿಕ್ಕೊಳ್ವೇನ್ ಎನ್ರು ಮಿಕವುಂ ಮನಮ ಪದೈತ್ತು, ಅಮ್ಮಾ, ನೀ ತೆಯ್ವಮೆನ್ಱೇ ನಿನೈಕ್ಕಿಱೇನ್. ನೀಯೆನಕ್ಕುತ್ತಾಯ್, ಉನ್ನಾಯಕರಾಕಿಯ ದಾಸರತ ತಿರುವಡಿಯಿಲ್ ಎನ್ನೈ ವೀೞ್ತ್ತಿ,ಅವರ್ ಎನ್ನೈಕ್ಕಟಾಕ್ಷಿತ್ತು ಎನಕ್ಕು ಅಬಯಮಕೊಡುಕ್ಕುಂಪಡಿ ಸೆಯ್ಯ ವೇಂಡುಮೆನ್ರು ಮಿಕವುಂ ಪ್ರಾರ್ತ್ತಿತ್ತು ವಣಂಗ, ದಾಸರ್ ಮನೈವಿ ವಣಿಕನೈ ನೋಕ್ಕಿ, ಐಯಾ, ನೀ ಸೆಯ್ತ ಪಿೞೈಯೈ ನೀಯೇ ಯಱಿನ್ದು ಅನುತಾಪಪ್ಪಟ್ಟಪೋದೇ ಉನ್ ಪಾವಮೆಲ್ಲಾಂ ತೊಲೈನ್ತನ; ಆಯಿನುಂ, ದಾಸರುಂ ಉನ್ಮೀದು ಅನ್ಬುಸೆಯ್ಯುಂಪಡಿ ಸೆಯ್ಗಿನ್ರೆನೆನ್ರು ಅೞೈತ್ತುಕ್ಕೊಂಡುಪೋಯ್ನ್ ದಾಸರುಕ್ ಕೆದಿರೇ ವಿಡ, ವಣಿಕನುಂ ದಾಸರೈ ಅಡಿ ವಣಂಗಿ, ಸ್ವಾಮೀ, ಅಡಿಯೇನ್ ಸೆಯ್ತ ಪಿೞೈಯೈಪ್ ಪೊರುತ್ತರುಳವೇಂಡುಂ ಎನ್ರು ಪಲವಕೆಯಾಯ್ತ್ ತೋತ್ತಿರಂಪಣ್ಣ, ದಾಸರುಂ, ವಣಿಕನ್ ಮನತ್ತೈತ್ ತೆರಿನ್ತುಕೊಂಡು, ಅವನೈ ಅನ್ಬೋಡು ತೞುವಿ, ತಾಮರೈ ಮಲರ್‌ಪೋನ್ಱ ತಮದು ತಿರುಕ್ಕೈಯಅವನ್ ತಲೈಮೇಲ್ ವೈತ್ತುಕ್ ಕರುಣೈಯೋಡು ಉಪದೇಸಂಸೆಯ್ತರುಳಿನಾರ್. ವಣಿಕನುಂ ಅನ್ರುಮುದಲಾಕ ಹರಿ ಪಜನೆಸೆಯ್ವತಿಲ್ ಮಿಕವುಂ ಆವಲುಳ್ಳವನಾಯ್ಚ್ ಸೆಯ್ದುವನ್ತಾನ್. ಇನ್ತಚ್‌ಸೆಯ್ತಿಕ ನೆಲ್ಲಾವಱ್ಱೈಯುಂ ಕಾಮದೇವರ್‌ಕೇಟ್ಟು,ಞಾನದೇವರಿಡತ್ತಿಱ್ಕುಪ್ಪೋಯ್, ಕಬೀರ್ ದಾಸರುಡೈಯಪರಮಪಕ್ತಿಯೈಯುಂವೈಪವತ್ತೈಯುಂಸೊಲ್ಲಿ,ತಾಮುಂಞಾನದೇವರುಮಾಕಕ್ ಕಬೀರ್‌ದಾಸರ್ ಇರುಕ್ಕುಮಿ_ತ್ತಿಱ್ಕು ವನ್ದು ಅವರೈಕ್ ಕಂಡವುಡನೇ, ಕಬೀರ್

தாசர் அவ்விருவரையும் வணங்கித் தோத்திரம்பண்ணி, ஆசனத்திலிருத்தினர். அப்போது, ஞானதேவர், கபீர்தாசரை நோக்கி, இவ்வுலகத்தில் நிறைந்திருக்கிற பாவ முழுதும் நீங்குமபடி சுகரும், உத்தவரும் ஆகிய இருவருடைய அமிசமாக நீங்களிருவரும் அவதரித்தீர்களல்லவா என்று புகழ்ந்து சொல்லக் கேட்டு மனமகிழ்ந்த கபீர் தாசரும் நாமதேவரும் ஞானதேவரை வணங்கி நிற்க, ஞானதேவர் கபீர்தாசருடைய திருமுகத்தை நோக்கி, பண்டரிபுரத்தில் பாண்டுரங்கப் பெருமான், புண்டலீகரிடத்தில் அன்பு வைத்து, அவர் சொன்னபடியே செங்கல்லின்மேல் திருவடியைப் பதித்து நிற்பதை ஒருதரம்போய்க் கண்டு வணங்கி வாரும் என்றுசொல்ல,கபீர்தாசரும் அப்படியே கார்த்திகை மாசம் ஏகாதசி தினத்தில் போய்ச் சேவித்து வருகிறேன் என்றார். பிறகு கபீர்தாசரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு நாமதேவரும் ஞானதேவரும் ஆகிய இருவரும்போய்க் கயை பிரயாகை என்னும் புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, ஸ்ரீ ராமபிரான் எழுந்தருளியிருக்கிற திருவயோத்தியை, வடமதுரை, கோகுலம் என்னும் திவ்ய க்ஷேத்திரங்களையடைந்து அவ்விடங்களிலுள்ள எம்பெருமான்களையும் சேவித்துத், திருத்துவாரகையை யடைந்து ஸ்ரீ கண்ணபிரானைச்சேவித்து மீண்டுவரும்போது, பிக்க செல்வம நிறைந்து விளங்குகின்ற மார்வாடர் வசிக்கிற தேசத்தையடைந்தபோது,இருவரும் அதிக தாகத்தால் ஒருகிணற்றினருகே சென்று, இறங்கி நீருண்பதற்கு வழிகிடைக்காமல் மனமவாடிக் களைத்திருக்குங் காலத்தில்,ஞானதேவர், நாமதேவரை நோக்கி, லகிமாவென்னும் சித்தியை நான் பெற்றிருக்கிறேன ஞகையால் இக்கிணற்றில் இலேசாக இறங்கி நீருண்பேன், நீர் அறிகின்றிலீ ராதலால், இதற்கு என்செய்வேன் என்று பரிதபித்த போது, நாமதேவர் பண்டரிநாதனுடைய திருவடிகளைத் தமது கருத்தில் திருத்தி, ஹே மதுசூதனா! ஹே ராமா! ஹே நீதயாநிதி ! எனக்கு அருள்செய்யும சர்வேசுவரா! தேவரீர் விரைவது எழுந்தருளி எனது தாஹத்தைத் தீர்த்தருளவேண்டும் என்று பலவாறு தோத்திரமபண்ணி நிற்க, எல்லாச் சிவராசிகளிலும் அந்தர்யாமியாய் வியாபித்து நின்று எல்லாவற்றையும் அறிய வல்ல பண்டரிநாதன், தமது திருத்தேவியாராகிய பெரிய பிராட்டியார்மேல் திருநோக்கம் வைத்து, பெண்ணே! ஒப்பற்ற பரமபாகவதஞகிய நாமதேவனைக்காணுமையால் இன்று எனது இடத்தோளானது துடிக்கின்றது; ஆகையால் அவனுக்கு அவ்விடத்தில் என்ன தொல்பம் நேரிட்டதோவென்று வினவ, பிராட்டியார் அந்தநாமதேவன், தாகத்தால் வருந்துகிறான் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவருக்கு எதிரில் பெரு வெள்ளமான நீர் உண்டாகிப் பொங்கி வழிந் தோடக் கண்ட நாமதேவர், தமது தாஹம் முழுதும் நீங்கும்படி அப்பெருக்கில் நீருண்டு மகிழ்ந்திருந்தார். இதைக் கண்ட ஞானதேவர், நாமதேவர் முகத்தை நோக்கி உம்மை விட்டலப் பெருமான், ஒரு சிறிதும் நீங்காதிருக்கிறார். ஆதலால் உமது மகிமைக்கு உலக முழுதும் புகழ்ந்தாலும் ஒரு முடி வுண்டாகாது என்று புகழ்ந்தார். அந்த

சீர்ப்பெருக்கு அன்றுமுதல் இன்றளவும் அப்படியே பெருகி வழிக்தோடா நின்றது. அதில் ததூர் மாசத்தில் போய் நீராடுவோர் தாம் விரும்பின மனோ ரதங்களெல்லாம் சித்திக்கப் பெறுவார்கள். அந்தத் தீர்த்தத்தைவிட்டு ஞான தேவரும் காமதேவரும் அவ்விடங்களிலுள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நா னஞ் செய்து பதரிகாசிரமத்தை யடைந்து, அதன்பிறகு ஜகந்நாத க்ஷேத்திர த்தை யடைந்து, அங்கெழுந்தருளியிருக்கும ஸ்ரீகண்ணபிரானைச் சேவித்து இனிதாகிய பேராநந்தக்கடலில் மூழ்கினவராய், அங்குநின்றும் புறப்பட்டுப் பூர்வகாலத்தில் ஸ்ரீராமபிரானால் நிறை செய்யப்பட்ட சேது தீர்த்தத்தில் மூழ்கி, பிறகு சிவராத்திரி காலத்தில் காகேசுவரத்தில வந்தடைந்து ஹரிபஜ னம் செய்துகொண்டிருக்க, எல்லாரும வந்து அந்த ஹரிபஜநத்தைக் கேட்டு ப் பேரானந்த மடையுங் காலத்தில், அங்கே சிவபூசை செய்கிற வேதியர்கள் வந்து போக வழி யிலலாமல் பாகவதர் நிறைந்திருக்கிறதைக் கண்டு, மனம் வருந்தி, அந்தப் பாகவதர் எல்லாரும பக்கத்தில் விலகிபோகுமபடி அதட்டினார்கள். அப்படி அதட்டின சொல்லைச் செவியேற்காமல் ஸ்ரீஹரி பஜனஞ் செய்துகொண்டிருக்க, அவ்வேதியர்கள், மறுபடியும் வந்து சூத்திர ராகிய நீங்கள், இவ்வாறுமிகப பலராகி வந்து இவ்விடத்தில் கூக்குரலிடுவது தகாதகாரியமென்றும், பிராமணராகிய எங்களைத் தீண்டாதீர்களென்றும், இவ்விடம் விட்டு இப்போழுதே போய்விடுங்களென்றும் பல கடுஞ் சொற்க ளைச் சொல்ல, வாயில் காப்பாளர் ஐயரே! ஆலயத்துள்ளே தீண்டுதலால் ஒரு தீங்கு மில்லை என்று சொல்ல, வேதியர், நாமதேவருக் கெதிரில் வந்து நீங்கள் பின்னே போங்கள் என்று சொல்ல, அப்படியே இவர்களும் போய் ஸ்ரீ ஹரிநாமஸ்மரணம் செய்துகொண்டிருக்க, அவ்விடத்தில் நிறைந்திருக் கிற பாகவதரெல்லாரும் காணுமபடி அவ்வாலயத்தில் ஒன்பதுலக்ஷம கருட க்கொடிகள் காணப்பட்டு பூமியில் அழுந்திவிட்டன. இந்த அற்புதத்தைக் கண்டு நாமதேவர் முதலாயினோர் ஸ்ரீ லக்ஷ்மீ நாதனை ஸர்வேசுவரனை ஸ்தோத்திரஞ் செய்யக் கண்ட தேவர்கள் யாவரும் புஷ்பமாரி பொழிந்தார் கள். நாமதேவரும், எனக்கு ஒப்பற்ற பகவான் இருக்கிறபோது, ஒரு தீங் கும் என்னை யணுகமாட்டாது என்று சொல்லிச் சுடலையே தமக்கு நட ஸ்தாநமாகக் கொண்டிருக்கிற சிவபிரான் சந்நிதியில் நின்று பின்னே போம படி சொல்லி நமமை ஸ்ரீஹரிபஜநம செய்ய நியமித்தனர், இதுவும பகவா னுக்குத் திருவுள்ளம்போலும என்று பிரஸ்தாபித்துக்கொண்டிருக்க, அப் போது நாகேசன் பெருமையைநத தமது கோயிலில் எழுந்தருளியிருக்கிற திசையை விட்டு, நாமதேவருக்கு எதிராகத் திரும்பி, மேற்குத் திசையில் முகம்மாறி, ஸ்ரீஹரிபஜந சந்தோஷத்தால் நர்த்தநஞ்செய்துகொண்டிருக்கிற நாமதேவரை மிகவும புகழ்ந்து நிற்பதை அவ்வூரிலுள்ள சாதுஜநங்களெல் வாரும் கண்டு நாமதேவரைச் சூழ்ந்து புகழ்கின்றவராயினர். அப்போது நாமதேவர், அடியேன் விரும்புவன எல்லாவற்றையும் விட்டலப் பெரு மான் அருள் செய்கிறார், இதற்கு யான் செய்யும் கைம்மாறு யாதுளது

என்று மிகவும் மனமகிழ்ந்து, பொழுது விடியுமளவும், மனைதிடத்துடனிருந்து ஸ்ரீஹரியை ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டிருந்தனர். விடிந்த பிறகு, சிவபிராமீன வழிபட்டுக் கொண்டிருந்த வேதியர்கள் வெளியே வந்தார்கள். அப்படி வந்தவர்கள், சூரியன் மேற்றிசையிலும் உதிப்பானே, அன்றி இராத்திரி முழுதும் நாம் கண் விழித்திருந்ததனால் உண்டாகிய மயக்கம் நமது அறிவை மயக்குகின்றதோ, அன்றி நாம் ஓதின மந்திரங்களெல்லாம் நாம தேவன் பொருட்டு மாறுபட்டனவோ என்று மயங்கி, தான்கு திசைகளிலும் கண் வைத்து, நோக்கிக்கொண் டிருந்தார்கள். அப்படி யிருக்கும் போது தேஜோமயமான ஒன்பது லக்ஷம் கொடிகள் மேலே காணப்பட்டுப் பிறகு மறைந்தன. இதைக் கண்டு வேதியர் முதலான எல்லோரும் அதிசயித்து, இந்த நாம தேவரைப் புகழ்ந்து ஸ்தோத்திரம் பண்ணுவதற்குப் பிரமதேவனுக்கும் முடியாது என்று பயந்து, இவரது திருவடியை வணங்கி, நாங்கள் செய்த பிழைக ளெல்லாவற்றையும் க்ஷமித்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, நாம தேவர் அவர்களுக்குத் தக்க உபசாரங்கள் செய்து நமஸ்கரித்து அவர்களிடத்தில் விடை பெற்று, நாக நாதனைப் பிரார்த்தித்து, அவ்விடம் விட்டுப் போகின்றவர்களாகிய இருவரும் தாயை நினைத்துச் செல்லுகின்ற கன்றுபோல அதிக விரைவோடு சென்று பண்டரிநாதனுடைய திருக்கோயிற் கோபுரத்தின் சிகரம் தோன்றக் கண்டு நமஸ்கரித்து வாழ்த்தி, அதன் பிறகு திருக்கோயில் முன்னே சென்று நின்று, பண்டரிநாதனைப் புகழ்ந்து நிற்கும்போது, நாமதேவர், தமது மெய்மறந்து பூமியில் விழக்கண்ட ஞான தேவர், உபசரித்து அவருக்குத் தெளிவு வரப் பண்ணித் தழுவிக்கொண்டு பகவானுடைய சந்நிதிக்குக் கொண்டுவந்தார். வருதலும் நாம தேவரானவர் பண்டரி நாதனே அன்போடு வணங்க, பண்டரி நாதர், எழுந்து எதிர்கொண்டுவந்து மிகுந்த அன்போடு நாமதேவரை இறுகக்கட்டித் தழுவிக்கொண்டார்; அப்போது நாமதேவர்வணங்குந்தோறும் பகவானுடைய தாமரைமலர் போன்ற திருவடியின்மீது தமது கண்ணீர் மழையைச சொரிந்து, ஸ்வாமீ! இனிமேல் அடியேன் தேவரீரைப் பிரியும்படியான காலம் நேரிடச் செய்யாதேயும என்று பிரார்த்திக்க, விட்டலப் பெருமான் இவரை நோக்கி, நாம தேவா! உன்னைப் பிரிந்தகாள் முதல் இதுவரைக்கும் எனக்கு அதிக மனவருத்தமாகவே யிருந்தது. அந்த வருத்தம் இப்பொழுது உன்னைக் கண்ட பிறகு தொலைந்தது. ஆகையால் இனி எக்காலத்தும் என்னைப் பிரியாமல் இவ்விடத்திற்றானே தங்கியிரு என்று அருள்செய்து, தமது திருத்தோளில் விளங்குகின்ற குளிர்ச்சி பொருந்திய திருத்துழாய் மாலையைக் கழற்றி, அவர் தோளில் அணிந்து, அவரது கண்ணீரைத் துடைத்து, தமது திருக்கைகளால் அவரது மேனியைத் தடவி, அவர்மீது மிகுந்த க்ருபாதிருஷ்டிவைத் தருளினர். இப்படி யிருக்க, மேன்மை பொருந்திய நிவர்த்தி யென்பவரோடு விசோபாவும், பண்டரிநாதர் தமது திருக்கோயிலினுள்ளே நாம தேவரிடஞ் செய்த அற்புதமான காரியங்களை யெல்லாம் தெரிந்து, அந்தப்பகவானை

த்துதித்து நாம தேவரையும் ஸ்தோத்திரம் பண்ணினார்கள். அப்போது ஸ்ரீருக்மிணிபிராட்டி திருவாலாத்தி யேந்திக்கொண்டு வந்து நாமதேவருக்கு ச் சுற்றினாள். தேவர்கள் பூ மழை பொழிந்து ஆசீர்வதித்தார்கள். பிறகு நீலமேகவண்ணனுகிய பகவான் நாமதேவரை நோக்கிச் சொல்லலுற்றனர். நீ தீர்த்தயாத்திரைசெய்து வந்தாய், அந்ததீர்த்த யாத்திரைக்கு முடிவான காரியம் யாதோ அதனைச்செய்ய முயலுவாயாகவென்றுநியமிக்க, நாமதேவ ரும் அப்படியே செய்கிறேன் என, விட்டல பகவானுனவர், இவரையழைத்து க்கொண்டு பிராட்டியிடஞ் சேர்ந்து இச் செய்தியைச் சொல்லலுற்றார். அதாவது நாம தேவன் செய்த தீர்த்த யாத்திரையாகிய கல்ல விரதத்தை முடிவுசெய்தல் நன்றுகுமென்றுசொல்ல, பிராட்டியானவள், எனது பிராண நாதா ! பரிசுத்த மனத்தையுடையவனுகி ஸர்வசங்க பரித்தியாகஞ் செய்து உம்மையே ஆசிரயித்து இருப்பவனுகிய நாமதேவன் யாது செய்வன், நீரே அதனை முடித்தருளவேண்டும், ஆதலால் பெருமை பொருந்திய வேதாத்தி யாயஞ் செய்த மறையோர்கள் வந்து உண்ணும்படி தரியாராதனத்துக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் அமைத் தருள்வீராக என்று பிரார்த்தி க்க, விட்டலப் பெருமானுனவர், நாமதேவருடைய திருவடியை யாசிரயித்த சில பாகவதர்களுக்குப் பின்னே ஒரு வேதிய ரூபங்கொண்டுபோய், சந்திர பாகா நதியின் கரைமேல் விளங்குகின்ற வேதியரிடத்தில் வந்து, அவர்களை வணங்கி நிற்க, அந்த வேதியர்கள், நீ வந்த காரியம் யாதென்று வினவ, நான் நாமதேவரிடத்தில் அன்புள்ளவன்; அவன் செய்விக்கிற போஜனத்தை நீங்க ளெல்லோரும் வந்து புசிக்கவேண்டு மென்று சொல்ல, அந்த வேதிய ரெல் லாரும் நாம் முந்திச் செல்வோமென்று மறுமொழி சொல்ல, அம் மொழி யைக் கேட்ட பகவானுனவர், தமது திருக் கோயிலை யடைந்தனர். இப்படி பகவான்போய் வேதியர்களைப் போஜநத்துக்கு வரும்படிசொல்லிவந்தசெய்தி யைப் பிராட்டியார் கண்டு, அஷ்டமா சித்திகளையும் வரும்படி நியமிக்க, அவைகள், எட்டும் ஒன்றுபட்டு வந்து தரியாராதநத்துக்கு வேண்டிய பொ ருள்களை யெல்லாம் அமைத்த பின்பு, அஷ்டலக்ஷ்மிகளும் நாம தேவருக்கு முந்திச் செய்யவேண்டியதாகிய மங்களஸ்நாநம் செய்வித்து, வேத சாகைக ளால் சொல்லப்பட்டமந்திரங்களையோதி, மற்றவரிசைகளையும் செய்தார்கள். அதன்பிறகு, பகவானுனவர் பூஷணம், ஆடை,சுகந்தம்,புஷ்பம் ஆகிய இவை களைக்கொண்டு அலங்கரித்தார். பிராட்டியார் இந்த அலங்காரத்தைக் கண்டு நாமதேவருக்கு எல்லாராலும் கேரிட்ட திருஷ்டிதோஷம் கழியும்படி ஆலா த்திசுற்றினள். பிறகு, பகவான், நாம தேவரைத் தழுவிக்கொண்டு நின்றார். இப்படி யிருக்கையில் ஞான தேவரோடு நிவர்த்தி முதலிய நால்வரும் மற்று முள்ளகல்லோர்களும்கருணைநிதியாகியபகவான்செய்யும்செய்கைகளைக்கண்டு மகாமகிமையுள்ள நாமதேவரைநோக்கி,உம்மைப்போன்ற ஹரிதாசர்கள் இவ் வுலகத்தில் யாருளர்? ஒருவருமில்லையென மிகவும்புகழ்ந்துரைத்தார். பிறகு வேதியவருவங்கொண்ட திருமாலானவர், மறையோரெல்லாரையும் நமஸ்கரி

அழைத்து, ஒளிமிகுந்த ஆசனங்களில் இருத்தி, அவர்களுடைய பாதங்களை விளக்கிப் பூஜைசெய்து, ஸ்ரீ பாத தீர்த்தங்கொண்டு, அழகு மிகுந்து விளங்குகின்ற பட்டாடையால் நன்முகத்துடைத்து, நல்ல ஆசனங்களில் ஏற்றி, அதிக மதுரம்பொருந்தியமுக்கனி, சர்க்கரை, அப்பம், மிகுசுவையமைந்தகறிவகைகள், நெய், தயிர், பால் இவைகளால் நிறைந்த அன்னம்ஆதிய எல்லாவற்றையும முறைதவறுமற்படைத்து, அவ்வேதியர் உண்பதைநோக்கி, ஆசையோடு ஞானதேவர் சங்கல்ப ஜலத்தைத் தெளிக்குமபடி நியமித்து, அவர்கள் யாவருமு அமுது செய்யும்படி பிரார்த்தித்து, அவ் வேதியர் யாவரும் அமுது செய்து திருப்தியடைந்தபிறகு, அவர்களுக்குச் சந்தன புஷ்பதாம்பூலங்களைக் கொடுத்துபசரித்து, அவர் யாவரும் முன்னே யிருக்கச்செய்து, உங்களுக்கு முன்னே நான் அமுதுசெய்து உங்களுக்குத் தக்ஷிணைகொடுக்கிறேன் என்று சொல்லி, திருமகள் கொண்டுவந்து கொடுத்த ப்ரஸாதத்தை விருந்தோடிருந்து உண்ணுமபொருட்டு விருந்தினனைத் தேடிவந்து, வாசற்படியில் வந்திருக்கிற வசுதன் என்பவனைக் கண்டு அழைத்து வந்து ஆசனத்தில் இருத்தி, அவருடைய நிலைப்பை நீக்கினவுடனே, அதைக் கண்டு அவர் அழும்போது பகவானும குற்றமற்ற பகவத் தாசரே! அமுதுசெய் தருள்கவென்று ப்ரார்த்தித்து, அறு சுவையோடு கூடின அந்தரை வாயி லூட்டி, நாம தேவா! நீ ஏன் அழுகிறாய் என்று கேட்க, அவர், ஸ்வாமி! அடியேன் எத்தப்பிறவியாய்ப்பிறந்தாலும், உன் திருவடிக்கன்பு செய்தலில் வழுவாமலிருக்கும்படி எனக்கு அருள்புரியவேண்டும் என்று ப்ரார்த்திக்க, திருமாலானவர் மகிழ்ந்து, உன்னை யெக்காலத்திலும மறவேன் என்று சொல்லி அமுதுண்பிக்க உண்டு, நாமதேவர் மகிழ்ந்தபிறகு, பகவானும்நாமதேவருக்கு அமுதுண்பித்தகலத்திலே அமுது செய்தருளினர். இதைக்கண்ட வேதியர்கள், சூத்திரன் உண்டகலத்தில் வேதியரும் அசுத்தம் உண்பது தருதியோ? இவன் வேதியனே? இவன் தந்த அந்தத்தையுண்டு நாமும் இழிவடைந்தோம்; இந்தத்தோஷத்தை என்ன ப்ராயச்சித்தஞ் செய்து தொலைப்போ மென்று ஆலோசித்திருந்தார்கள். அப்போது நாமதேவரது பரிகலசேஷத்தை அமுதுசெய்தருளின பகவானுமவர், நாமதேவரை யழைத்துக்கொண்டு, பகவந்நாம ஸ்மரணைசெய்துகொண்டிருக்கிற வேதியர்க்கருகே வந்து, அவர்களுக்குத் தக்ஷிணை கொடுக்கும்போது, அவர்களுடைய முகவாட்டத்தைக் கண்டு, இதற்குக் காரணம் யாதென்று வினவ, அந்த மறையோர்கள், வேதியனுகிய நீ, ஒரு சூத்திரனுண்ட சேஷத்தையுண்டாய், ஆகலால், இழிந்த வுண்ணுல்தரப்பட்ட அந்தத்தையுண்ட எங்களுக்கு நேரிட்ட தோஷத்தை எப்படி நீக்கிக்கொள்வோ மென்று விசாரப்படுகிறோம் என்றார்கள். அதைக்கேட்ட பகவான், பொய், களவு, கள்ளுண்டல், காமம், கொலை என்பவையாகிய பஞ்சமஹாபாதகங்களை ஒருவன் செய்தாலும் அவன் பகவந்நாம ஸ்மரணை செய்வானுனால் அவன் புனிதனென்று சொல்லப்படுவான்; அவனுண்ட சேஷம் கிடைப்பது அருமையல்லவா? ஆகையால் சூத்திரன்உண்ட சேஷத்தை நான்உண்போமென்றேனென்றார்

அதற்கு வேதியர், பகவானே நோக்கி, நீ என்ன சமாதானம் சொன்னாலும் நான்கள் கேட்கமாட்டோம்; ப்ராஹ்மண க்ருத்யங்க ளெல்லாவற்றையும் விட்டு, ஹரிநாமஸ்மரணைசெய்பவனுகிய ஒரு சூத்திரனுடைய எச்சிலைப் புசித்த உன் தோஷம் நிவர்த்தியாகும்படி சந்த்ரபாகா நதிக்குப் போய் ஸ்நானம் செய்துவா வென்றார்கள். அதுகேட்ட எம்பெருமான், வேதியரே! எவர்களாயினும் பரிசுத்தமான ஹ்ருதயத்தை யுடையவர்களாகி, வைராக்யம், சாது சங்கம் என்பவற்றோடுகூடி, பக்தியுடனே ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்தால் அவர்களுடைய ஜன்மாந்தரபாபங்களெல்லாம் ஒருமிக்க நசிக்கும், ஆகையால், அது முதன்மையாகிய ஸ்நானம் என்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன், ஆனாலும நீங்கள் சொன்ன சொல்லையும தடுக்கமாட்டேன் என்று சொல்லி, நாமதேவர் கையைப் பிடித்துக் கொண்டுபோய்ச் சந்த்ரபாகாநதியில் மூழ்கிச் செய்யவேண்டிய க்ரியைகளெல்லாவற்றையும் செய்து, பிறகு அரையிலே பீதாம்பரத்தையுடுத்து, மிகுந்த அன்போடு அவ்வேதியர்க்குத் தானம் செய்யவேண்டியவற்றைத் தானம்செய்து, ஐயரே! என்னைப் பரிசுத்தனுகச் செய்துவிட்டீர்கள் என்று புகழ்ந்து வணங்கி, விடை பெற்றுத் தமதன்பரோடு கோயிலிலே ப்ரவேசித்து, அமுது செய்தபிறகு, அன்பர்க்கு விடைதந்தனுப்பினர். அப்போது நாரதமுனிவர் வீணையைக் கையிலேந்திக் கொண்டு, அவ்விடம்வந்து பகவானுடைய திருவடியைக் கும்பிட்டுப்புகழ்ந்து நிற்க, இறைவர் திருவுளமகிழ்ந்து, தமது திருத்தோளி லணிந்திருந்த மாலையைக் கழற்றி முனிவருக்குக்கொடுத்து, தமது திருமார்பிலுள்ள கௌஸ்துப மணி முதலானவை முனிவர் மார்பில் அழுந்தும்படியாகத் தழுவிக்கொண்டார். பிறகு முனிவர் விடைபெற்றுப் போய்ச் சத்திய பாமையைக்கண்ட போது, சத்தியபாமையார் முனிவரைவணங்கி ஆசங்கொடுத்து, அவர் இருந்த பிறகு, அவரை நோக்கி, இந்தவிட்டலப்பெருமான் தனக்கன்பராயிருப்பவர்கள் எத்தச்சாதியாயிருந்தாலும் அவர்களுடைய எச்சிலுக்குத்திரிகிறார், இது நன்றேவென்றுகேட்க, முனிவா, சத்தியபாமையை நோக்கி, உன் ப்ராணநாயகர் நிர்நாமராயும் அரூபியாயும இருப்பவராயினும், இவ்வுலகத்தார் உஜ்ஜீவிக்கும் பொருட்டு நாமரூபங்களோடு எழுந்தருளி இப்படி நடிக்கின்றார். ஆதலால் அவருக்கு ஒரு தோஷமும அணுகாது, நீ ஆலோசித்துப்பார் என்று சொல்லிப்போன பிறகு, சத்தியபாமையார் இறைவனே நோக்கி, நீர் இப்படி எச்சிலை அருந்துதல் உனக்குத் தகுதியாகுமோ வென்று கேட்க, பெண்ணே! என்னிடத்து அன்புள்ளவர்கள், தங்தை தாய் மனைவி மக்கள் முதலானோரை விட்டு எல்லாம் நானேயென்று என்னைப்பற்றிக்கொண்டு இகலோக பரலோக சுகங்களையும் வெறுத்திருப்பவர்களாகையால், நான் மன மகிழ்ந்து அவர் பெயரைச் சொல்லுதல் அவர் உருவத்தைச் சிந்தித்தல் அவர் இட்ட வேலை களைச் செய்தல், இவையாவும் எனக்கு மிகவும் இஷ்டமான தொழில்களாயிருக்கின்றன. இதுவே யென்றுணிவென்று பகவான் அருளிச்செய்த காலத்தில், சூரியோதயமாகவே, தொண்டரெல்லாரும் வந்து கோயிற்குள்ளே புகு

க்து, ஹரிபஜனே செய்து, விட்டலப்பெருமானுடைய திருவடியை வணங்க, பகவான் அவர்களைத் தம் பக்கத்தில் இருத்திக்கொண்டு பிராட்டியை நோக்கி, பெண்ணே! நேற்று நான் தோஷ நிவர்த்தியின்பொருட்டு ஸ்நானத்துக்குப் போனபோது, இன்று வேதியருக்கெல்லாம் அமுது படைப்பே னென்று நேர்ந்துகொண்டேன், ஆகையால் அந்தக்காரியத்தை நடத்தவேண்டுமென்று சொலல, அது கேட்ட பிராட்டியும் இசையவே, பகவான் வேதியரிடத்திற் போய், ஐயரே! நீங்கள் இன்றும் அமுது செய்ய வாருங்களென்று ப்ரார்த்திக்க, வேதியரும் அப்படியே வருவோமென்ன, பெருமானும் கோயிலைச்சேர்ந்தார். உடனே வேதியர் யாவரும் தீர்த்தமாடி வந்து கோயிலிற் பிரவேசிக்க, பகவானுனவர் ஒருப்ராஹ்மணவுருவங்கொண்டுவந்து அவ்வேதியரைவணங்கி, அழைத்துவந்து பொற்பீடத்தி லேற்றி, அடியேன் உய்ந்தேனென்று உபசார வசநங்கள் கூறி, அறுசுவை யுண்டி படைத்து, அவர்கள் உண்ணும்போது, ஒவ்வொரு பிடி சோற்றை யுண்ணுந்தோறும் ஸ்ரீ ஹரிநாமத்தை யுச்சரித்துக்கொண்டே உண்ணுங்களென்று சொல்லி, அவர்களும் அப்படியே யுண்ட பிறகு, சுத்தஞ்செய்து, சுகந்த புஷ்ப தாம்பூலங்கள் கொடுக்கப்பெற்று அவர்களிருக்க, பெருமானுனவர் வேதியரை நோக்கி, ஐயரே! உங்களைக் கண்டதனல் இது சுப திநமாகும்; உங்களைச் சேவித்தது நான் உஜ்ஜீவித்தேன் என்று பேராநந்தக்கடலில் மூழ்கி, அடியாரோடிருந்து யான் உண்ணுமளவும் நீங்கள் இவ்விடத்தில் எழுந்தருளி யிருக்கவேண்டும் என்று சொல்லி, அடியார்களுக்குப் பாதபூஜை செய்யத் தொடங்குதலும், நாமதேவர், ஸ்வாமீ! தேவரீர் எங்களைப் பூசித்தல் நன்றேவென்ன, பகவான் நகைத்து அன்பர்களே! எனக்கு உங்களையன்றி வேறொரு பெருமையுணடோவென்று சொல்ல, தொண்டர்கள் கேட்டு மகிழ்ந்து உண்ணும்போது, தமது திருக்கையால் ஊட்டி, எச்சில் தமதுமடியின்மேல்தெறிக்க, அவ்வெச்சிலே யுதறிவிட்டு, மறுபடியும் ஊட்டித் தெறித்த எச்சிலைத் துடைத்து, உபசரிப்பதைக் கண்ட சில வேதியர், இவர் கைஷ்டிகரு மல்லர், தபோநிஷ்டரு மல்லர், வேதியரு மல்லர் என்றும், வேறு சில வேதியர் சர்வாந்தர்யாமியாய் எங்கும் நிறைந்திருக்கிற விடோபாவாகிய பரம் பொருளே இவ்வாறு அடியார் பொருட்டு மாநுஷ வேஷம் பூண்டு பலவகையாய் நடிக்கின்றதன்றி வேறல்லவெனறும் பேசிக் கொள்வதைக்கேட்ட பண்டரிநாதர், மிகவும் நகைத்து, ஒளிவீசுகின்ற கிரீடமும், குண்டலங்களும், நான்கு திருத்தோள்களும், பஞ்சாயுதங்களும், பெரிய பிராட்டியும் கௌஸ்துபமணியும் பொலிந்துவிளங்குகின்ற திருமார்பும், திருமுகமண்டலமும், பிதாம்பரமும் தேஜோமயமாய் விளங்கும்படி எழுந்தருளி நிற்க, அந்தத் திவ்ய ரூபத்தைக்கண்ட வேதியரும் அன்பரும் பெருமகிழ்ச்சியடைந்து, வணங்கி, ஆநந்தக் கூத்தாடத் தொடங்கினர்கள். அவர்களைப் பகவான் பார்த்து! ஓ பாகவதர்களே! இந்த உலகமாயையை வென்று, தேஹாபிமாநத்தைவிட்டு, என்னையே பற்றுக அடைந்தவர்கள், தமது அன்பாகிய கயிற்றினுற் கட்ட, அந்தக்கட்டிலகப்பட்டு நான் அவர்கள் வசப்பட்டவனும்

இருக்கிறேன். எனக்கு ஸ்வாதீநம் ஒன்றுமில்லையென்றருளிச் செய்ய, வேதியர், ஸ்வாமீ! வேதங்களெல்லாம், உன்னைப் பதிதபாவநன் என்று முறையிடுவதை இன்று கண்டோம் என்றார்கள். மேலும், பரமபாவநனே! உன்னை இன்று கண்டுசேவித்ததுபோல என்றும் கண்டுசேவிக்கவும், தேவரீருடைய திருநாமத்தை உச்சரிக்கவும் எங்களுக்கு வரம் கொடுத்தருளவேண்டும் என்றும் ப்ரார்த்தித்தார்கள். அவர்களை விட்டலராஜரவர் நோக்கி நகைத்து, மார்பழுத்தத்தழுவிக்கொண்டு, ஞாநதேவருடைய திருவடியை ஆஸ்ரயித்து நீங்கள் உஜ்ஜீவிக்கக் கடவீர்களென்றருளிச்செய்ய, அப்படியே செய்கிறோமென்று, வேதியர் மேலுமேலும் வணங்கினார்கள். அப்போது ஸ்ரீ ஹரியாஜரவர் ஞாநதேவரை நோக்கி, நீர் இந்த மறையவர் எல்லாருக்கும் ஞாநோபதேசம் செய்தருள்வீராக என்று நியமிக்க, அப்படியே ஞாந தேவரும் பகவாநை வணங்கி, அவர் சட்டளையின்படியே வேதியரெல்லாருக்கும் ஸ்வரூபஸாக்ஷாத்காரத்தை உபதேசரூபமாக அருளிச் செய்து, நீங்கள் நாள்தோறும் ஹரி பஜநைசெய்து, நிர்மலராகிய பகவாநைச்சேவித்து, உங்கள் மநோரதங்களெல்லாம் நிறைவேறப் பெறுவீர்களாகவென்று ஆசீர்வதித்தருளினர். சில நாள் கழிந்தபிறகு, ஞாநதேவர் விட்டலபகவாநிடத்திற்போய் வணங்கி ஸ்வாமீ! எனக்குச் சமாதியை யருள் செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்க, பகவாநும் அப்படியே செய்கிறேனென்று சொல்லி, நலலசுபதிநத்தில் தமது அன்பரையெல்லாம் வரவழைத்து, அநேக ரீதிகளங்களேப் பாடுமபடி பெரியதிருவிழாவுண்டர்க்கி, தநீயாராதநமுதலியவுமசெய்து, சாதுக்களெல்லாருமவரது ஞாநதேவரைச் சூழ்ந்திருக்கும்படி நியமித்து, அவர்களோடு தாமும எழுந்தருளி, இந்திராயணி நதிக்கரையில் அளிந்தியென்கிற வூரில் வந்து சேர்ந்து, சித்தேசுவரர் எழுநதருளியிருக்குமோர்யிலின்பக்கத்தில், அஜாதவ்ருக்ஷத்தினடியில் நின்று, ஸ்ரீ லக்ஷ்மீ நாதராகிய பகவான் எல்லாரும அறியுமபடி சொல்லுகிறார்; கார்த்திகைமாசம க்ருஷ்ணபக்ஷத்தில் என் நிமமாகிய திருவோணநாளில் வருஷந்தோறும இவ்விடத்தில் நான் வருவேன்; அன்று இவ்விடத்தில் பெரிய தீர்த்தோத்ஸவ முண்டாகும் என்றருளிச்செய்ய, ஸநகாதி முனிவரோடு ஹரி பக்தரும் சூழ்ந்து, ஹரி நாம சங்கீர்த்தநம் செய்யவும், பலவகையாகிய வாத்யங்கள் முழங்கவும, தேவர்கள் பூமழை பொழியவும ஸ்ரீக்ருஷ்ண பகவாநுநவர் ஞாநதேவர்க்குச் சமாதிதாநது, நாதாள் அங்கே தங்கியிருந்து, பிறகு பண்டரிபுரத்தை யடைநதார். சிலநாள் சென்றபின்பு நாமதேவர் ஞாநதேவரது பிரிவினால் அல்லும பகலும் தூக்கித்தூக்கொண்டிருபபதை ஞாநதேவ ரறிந்து, ஒபபற்றவிமாநத்தில் ஏறிவந்து, விட்டலநேரேவணங்கி, நாமதேவரைக்கணடு, அவர் மநவருத்தத்தைநீக்கி, ஆறுமாசகாலம அங்கே தங்கி, அளவில்லாத பக்தருக்கு ஞாநோபதேசஞ் செய்துகொண்டிருநது மறைநதார். இவ்விதமாகவே சிவர்த்தி தேவர்க்கு த்ரியம்பகம் என்னும் ஊரிலும், சோபாந தேவர்க்கு ஸமவத்ஸரம என்னும் ஊரிலும் பாண்டுரங்க பகவான் சமாதிதந்தருளினார் என்று சொல்லி, மேலே கூர்மதாசர் வைபவத்தைச் சிவபெருமாநுநவர் பார்வதி தேவியார்க்குச் சொல்லத் தொடங்கினர்.

ஞாநதேவர் சரித்திரம் முற்றிற்று.

# எ-வது கூர்மதாசர் சரித்திரம்.

சூரியரதத்தைச் செலுத்துகிற அருணவாசகத்தரும், நிகரற்ற ஸ்ரீ ஹரி நாம தியாகத்தில் விருப்பமுள்ளவரும, ப்ரதிஷ்டாகம் என்கிற வூரில் வேதி யர்குலத்தில் அவதாரகாலத்திலேயே காப்பனில்லாமல் அவதரித்தவரும் ஆகிய கூர்மதாசர், தாய்தகதையர் அன்போடு வளர்க்க வளர்ந்து வருங்காலத் தில், அந்தவூரில் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்வோரிடத்துக்குத் தவழ்ந்தசென் று, உத்தமமாகிய ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தனத்தில் மிகவும் அன்புள்ளவராய்க் கேட்டுவந்தார். அப்படி கேட்குங்காலத்தில் பண்டரிபுரத்தின் மாஹாத்ம்யத் தைச் சொல்லுவோர்களால் கேள்விப்பட்டு, ஆசைதலைமேலிட்டு, அந்தப் பண்டரிபுரமிருக்கும் திசைநோக்கிக் கைகூப்பிச் சொல்லுகின்றார். ஹரிபஜனை செய்கின்ற தாசர்களே! முடவனுகிய நான் பண்டரிபுரத்துக்குப் போக முடி யுமோ? முடியாதே; இதற் கென்செய்வேன் என்று கேட்க, ஸ்ரீ ஹரிதாசர் கள், இவரை நோக்கிச் சரீரத்துடம் உள்ள நாகங்கள் போலேத அருமை. நீ போவது எப்படிசாத்தியப்படும என்று கணைத்தார்கள். அதைக் கண்ட கூர்ம தாசர் பண்டரிநாதனைத் தொழவேண்டு மென்கிற ஆசைசாதுரியால் மெல்ல நகர்ந்துபோய், ஆஞ்சநேயர் சஞ்சீவியை யடைந்து, பல தாழறங்களால் மனம் வருந்தி வீழ்ந்தார். வீழ்ந்து, பண்டரிநாதனைக் குறித்து, ஸ்வாமீ! என்னைக் காபபாற்றுவோர் உன்னையன்றி வேறொருவரும் இல்லை; ஆகையால் என்னை யன்போடு காப்பாற்றியருளவேண்டும் எனறு தோத்திரம் பண்ணி வணங்கு தலும், பண்டரிநாதன் மகிழ்ந்து, ஒரு ப்ராஹ்மண வேஷங்கொண்டு எழுந்த ருளி, கூர்மதாசரை நோக்கி, நீர் எங்கே போகிறீர் என்று வினவ, கூர்மதாசர் அடியேன் பண்டரிபுரத்துக்குப் போகவேண்டுமென்னுங் கருத்துடையவன், ஆதலால் பண்டரிபுரம் போகாதின்றேன் என்று சொன்னவுடனே, மேகவண் ணனுகிய பகவானும் நல்ல வழித்துணை கேரிட்டதென்று மகிழ்ந்து, காலில் லாத என் வழித்துணைவனே, உனக்குக் கிடைக்காத பொருள் ஒன்றுமில்லை யென்றுசொல்ல, கூர்மதாசர் வேதியரை நோக்கி உமதுபெயர் என்னென்று கேட்க, என் பெயர் விட்டலன் என்று பகவான் சொல்லியருளினர். மேலும் இன்னமும் பண்டரிபுரத்தில் கடைவைத்திருக்கிறேன், நான்மெல்லநடப்ப வன், ஆகையால் பண்டரிபுரம் போய்ச்சேருமளவும் போஜநம்சமைத்து உம க்கு ஊட்டிப்பிறகு நானுண்டு என்னிடம்சேர்கிறேன் என்றுசொல்லி, அன் றிரவில் கூர்மதாசரோடு தங்கியிருந்து, மறுநாள் சூர்யோதயத்தில், தாசரே! இதுதான் பண்டரி புரத்துக்குப் போகும் வழி யென்று சொல்லி, விட்டலப் பெருமான் மறைந்தார். தாசரும்தவழ்ந்துகொண்டே போய்ஒரிடத்தில் தங்கி னர், அது அஸ்தமகாலமாதலால் பகவான்வந்து தாசருக்கு இனிய உணவை யுண்பித்தார். இப்படியே பகவான் இரவும் பகலும் தாசருக்குவேண்டிய

உபசாரங்களைச் செய்துகொண்டும், பகவானும் நான்குமாசகாலத்தளவும்அவ ரோடு கூடவேயிருந்து தொண்டுசெய்தும்,லகுஸ்வையை யடைந்தார். அடைந்த அந்தகாள் கார்த்திகைகஷ்டரத்தோடுகூடிய தசமிதிதியாகையால் இந்தவழிச் செல்வோரெல்லோரும் ஹரி ஏகாதசிக்குப் பண்டரிபுரத்தையடைவார்களே, நான்போய்ச் சேர்வதெப்படியென்று மனங்கலங்கி, பண்டரிபுரத்தில் எழுந்த ருளியிருக்கும் விட்டலப்பெருமானே ! நாளைக்கும் உன்சேவை கிடையாது என்றுதோன்றுகின்றதே, என்செய்வேன்என்றுஇரண்டுகைகளையுங்குவித்து வணங்கி தமக்கெதிரே போகிறவர்களைபபார்த்து, புண்யாத்மாக்களே! நீங்கள் முன்னேபோகிறவர்களாகையால் என்னுடையநிலைமையைஎம்பெருமானுக்கு விண்ணப்பஞ்செய்து இங்கே யெழுந்தருளியாகிலும் அடியேனுக்குச் சேவை தந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து என் மநோரதத்தை நிறைவேற்று வீர்களாக என்று மிகவும் பிரார்த்திக்க, அவர்களும் அப்படியே யாகட்டுமென்றுபோனார்கள். ஞானதேவர் முதலிய நால்வரோடு நாம தேவரும், விசோப ரும், சங்கீதத்தோடு ஹரி பஜனை செய்தார்கள். அப்போது பாண்டு ரங்கன் அவர்களை நோக்கி, எனக்கு மிகுந்த அன்புள்ள பக்தர்கள் இந்த ஞானதேவர் முதலானோர்களேயென்று அருள்செய்தார். எனது நாமத்தைப் பாடம் பண் ணுகிறவர்களுக்குள்ளே, நாமதேவர் சிறந்தவரென்றும் அருள்செய்தார். அப் போது அன்பரெல்லாரும் அவரைத் தழுவிக்கொண்டு, லகுஸ்வயிற்றங்கி,அங் கிருந்து ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம செய்துகொண்டே கோயிலுக்குப்போனர் கள் .போய்ப் பகவானுடைய திருவடியைவணங்கி, அன்போடுதுதித்து, கூர்ம தாசர் முன்னே சொன்னதைப பெருமானுக்கு விண்ணப்பஞ் செய்தார்கள். அதைக்கேட்ட பகவான், தமதிடத்தில் நின்ற நாம தேவரையும் அன்போடு கடாக்ஷித்து அருள்செய்கிறார். கூர்மதாசன் என்னைக் காணவேண்டுமென்று மிகுந்த ஆசையுள்ளவனாயிருக்கிறான்,ஆகையால் நீங்களும் வாருங்கள்என்று சொல்லிக் கூடவேயழைத்துக்கொண்டு நாமதேவரைச்சேர்ந்து ஒரு லீலையாட லைச் செய்யநினைத்து, அந்த இருவரையும நோக்கி, எனக்கு அதிக தாகமா யிருக்கின்றது, நான் போய் நீருண்டு வருமளவும் நீங்கள் இங்கே நில்லுங்க ளென்றுசொல்லி, ஒருகொடிவழியாகப்போய்,சாவந்தியாமேலதாசர் ஸ்ரீஹரி நாம ஸ்மரணையோடு கண்களை மூடிக்கொண்டு, மெய்மறந்திருக்கிற அவ்விட த்திற்குப் போய், அவரை யெழுப்ப, அவர் விழித்து நோக்கி, பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தைச் சேவித்து, ஸ்வாமீ! தேவரீர் அடியேனிடத்து க்கு எழுந்தருளுதற்கு அடியேன் என்னதவம்செய்தேனே என்றுசொல்லித் தழுவிக்கொண்டு திருவடியைவணங்கி, மெய்யன்பாகியகடலில்அழுந்திநிற்பவ ராகியஅந்தத்தாசருடைய முகத்தைநோக்கிப் பகவான்சொல்லுகின்றார். தாச ரே! நான் வரும் வழியில் இரண்டு திருடர்கள் என்னைத் தொடர்ந்தார்கள், அவர்களுக்கஞ்சி உன்னிடம்வந்தடைந்தேன், நீ என்னை அவர்களுக்குக் காட் டாமல் மறைத்துவைக்கவேண்டுமென்றுசொல்ல, தாசரானவர் சிறிதுநேரம் ஆலோசித்து, ஸ்வாமீ ! சூரியனை எங்கே யொளித்து வைக்கிறது, ஒளித்து

வைக்கமுடியாமே, அதுபோல அண்டகோடிக ளெல்லாவற்றையும் திருவயி
ற்றிலடக்கியிருக்கிற தேவரீரை அடியேன் எங்கேமறைத்துவைப்பேன் என்
றார். அப்போது பகவானுனவர் தாசரை நோக்கி, தாசரே! இப்படிப்பட்ட
ஆபத் காலத்திலேதானே ஞானம் பேசுகிறது? அதை நிறுத்தி, விரைவாக
என்னை மறைக்கவேண்டு மென்றார். அதைக்கேட்ட தாசரானவர், இவரை
மறைக்கத்தகுந்த இட மில்லையென்று தமது மார்பையே பிளந்தார்; பிளந்த
வுடனே பகவானுனவர், அந்தப் பிளப்பில் நுழைந்து மறைந்திருந்தார். உட
னே தாசரானவர் கவசகொடிகளைக்கொண்டு மார்பைச்சுற்றிவரிந்துபட்டினர்.
உள்ளே மறைந்திருக்கும் பகவானுனவர், தாசரே! இந்த ஆபத்காலத்திலே
நீர் செய்த இந்த வுதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன் என்றார்.
அதற்குத் தாசர்எங்கும்நிறைந்திருக்கிற தயாநிதியே! என் உயிருக்கு ஆதார
மாயிருக்கும் பரம்பொருளே! என்மார்பை யிடமாகக்கொண்டு எழுந்தருளி
னதற்கு அடியேன் என்ன கைம்மாறு செய்வேன் என்று தியானித்துக்
கொண்டிருந்தார். இப்படியிருக்கும்போது, அங்கேயிருந்த காமதேவர், எம்
பெருமான் எங்கேபோயினரோ! போய் வெகுதூரமாயிற்றே யென்று அவர்
கடந்த அடிச்சுவட்டைப்பற்றிக் கொண்டேபோய், சாவர்ணியாமேளதாசர்
இருக்குமிடத்தை யடைந்து, பகவான் இங்குவரக்கண்டீரோவென்று கேட்க,
தாசர் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருக்க, வந்த பகவானே இவர் விழுங்கி
விட்டாரேபோலத் தோன்றுகின்றது, ஆனும நீரை விரும்பிவந்தவரை இவர்
எப்படி விழுங்கினரோ அறியேனென்று, எம்பெருமானே, எனக்குத் தோ
ன்றுமல் மறைந்திருப்பீரானால், என்னுயிரை இப்பொழுதே விட்டுவிடுவேன்
என்று சொல்லுதலும், பகவானுனவர், நான் இருதத்தாசருடைய மார்பினுள்
ளேயிருக்கிறேன், எப்படி வெளியே வருவேன் என்றார். அது கேட்ட காம
தேவர், மனம் புழுங்கிக் கதறி யழுதார். அப்போது பகவானுனவர் தம்மை
மார்பினுள்ளே மறைத்துவைத்திருக்கிற தாசரைநோக்கி, காமதேவன் என்னை
க் காணுமல் துன்பப்படுகிறான், ஆதலால் என்னை அவனுக்குக் காட்டினால்
அவன் துன்பம் நீங்கும் என்று சொல்ல, தாசரானவர் காமதேவரை நோக்கி,
நீர் வருந்தவேண்டாமென்று சொல்லி, தமது மார்பிற் சுற்றிக் கட்டியிருந்த
கொடிகளை அவிழ்த்தார். அவிழ்த்தவுடனே, பகவானுனவர் வெளியேவந்தார்.
அவரை காமதேவர் கண்டு, மனக் களிவோடு அவர் திருவடியைப் பற்றிக்
கொண்டு நிற்க, பகவான் அவரைத் தழுவிக்கொண்டு, கண்ணீர் துடைத்து
அருகில் இருத்திக்கொண்டார். அப்போது சாவர்ணியாமேளதாசரோடு, ஞான
தேவரும், காமதேவரும்கூட லகுளீயில் எழுந்தருளியிருக்கும் பகவானுன
வர் இவர்கள் எல்லாரையும் கொண்டு கூர்மதாசர் திருமாளிகைக்குப் போக,
அவர் எதிர்கொண்டுவந்து பணிந்து, அன்பு மிகுந்த தோத்திரங்கள் பலவும்
செய்து கொண்டாடினர். அப்போது பகவானுனவர் அவரைத் தமது நான்கு
திருக்கைகளாலும், அணைத்துக்கொண்டு உமக்குவேண்டிய வரங்களைக்கேளு
மென்று சொல்ல, தாசர் மகிழ்ந்து, ஸ்வாமி! தேவரீர் எக்காரணம் இவ்விடத்

தில் எழுந்தருளியிருக்கவேண்டும், அதுதான் எனக்குத் தேவரீர் கொடுக்க வேண்டிய கல்லவரம் என்றார். அதற்குப் பகவானுனவர் இசைந்து, தாசரே! அப்படியே செய்கிறேனென்று சொல்லி, அன்றுமுதல் பண்டரிபுரத்தில் எழுந்தருளி யிருப்பதுபோலவே இந்த க்ஷேத்ரத்திலும் எழுந்தருளியிருந் தார். வருஷந்தோறும் கார்த்திகை மாசம் ஏகாதசியில் இந்த லகுலீயிலும் அன்பரெல்லாரும் கூடிப் பாண்டுரங்கப் பெருமானை வணங்கித் தோத்திரம் பண்ணி, ஆநந்தக் கூத்தாடிக்கொண் டிருப்பார்கள். இதுதான் கூர்மதாசர் வைபவமென்று சொல்லி மேலே ராகாகும்பார் வைபவத்தைச் சிவபெருமா னுனவர் பார்வதீதேவியார்க்குச் சொல்லத்தொடங்கினார்.

கூர்மதாசர் சரித்திரம் முற்றிற்று.

## அ-வது ராகாகும்பார் சரித்திரம்.

வைராக்கியத்திற் சிறந்தவராகிய ராகாகும்பார் என்பவர், கூர்ஜர தேச த்தில், குயவர் குலத்தில் அவதரித்து, தமது குலத்தில், பாங்காபாய் என்ப வளை மணம் புணர்ந்து இல்லறம் வழுவாமல் நடத்திவருங் காலத்தில், இவர் மனைவி வயிற்றில் வங்க ளென்றொரு புதல்வி அவதரித்தாள். இம்மூவருமாக பண்டரிபுரத்தில், மட்கலங்கள் செய்துவிற்று ஜீவனம் செய்துகொண்டு, ஸ்ரீஹரிநாமசங்கீர்த்தநத்தை மறவாமல் நெடுநாள் வாழ்ந்திருந்தார்கள். இப் படி யிருக்குங் காலத்தில் ஒருநாள் இந்த ராகாகும்பார் செய்து காயவைத்த மட்பாண்டத்தில், ஒரு பூனையானது மூன்று குட்டிகளை யீன்று, இரவும் பகலுமாக அந்தக் குட்டிகளை அதிக ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வந்தது. ஒருநாள் அது, குட்டிகளுக்கு இரை கொண்டு வரும்பொருட்டுப் பிரிந்த காலத்தில், அந்த மட் பாண்டத்தோடு மற்றைய மட்பாண்டங்களையும் சேர் த்து ஒருமிக்கச் சூளையிலிட்டுச் சுடும்படி நேர்ந்தது. அப்படி நெருப்பிட்டு வேகும்போது, தாய்ப்பூனை வந்து, தன்குட்டிகளிருந்த பாண்டம் காணமை யால் மிகவும் துன்பமடைந்து, உரத்த சத்தத்தோடு அழத்தொடங்கின தது. இது அழுகின்ற சப்தமானது சூளையில் பாண்டத்துக்குள்ளே யகப்பட்டிருக் கிற குட்டிகளின் காதுகளில் பிரவேசிக்க, அவைகளும் கதறியழத் தொடங் கின. இப்படி தாய்ப்பூனையும் குட்டிப்பூனைகளும் அழுது கூக்குரலிடுவதைச் சூளைக்குத் தீமூட்டின ராகாகும்பார் அறிந்து, வயிற்றிலும் முகத்திலும் அறைத்துகொண்டு, மனைவியின் முகத்தைப் பார்த்து, பாண்டத்தில் குட்டிக ளிருப்பதை அறியாமல் நான் தீமூட்டினேன். தாய்ப் பூனையும் குட்டிப் பூனை களும் படுந்துயரத்தைப் பாண்டுரங்கப்பெருமான்தான் நீக்கி ரக்ஷிக்கவேண் டும் என்று சொல்லித் துக்கிக்கவே, எரிகிறசூளையைச் சுற்றிசுற்றி அழுகின்ற தாய்ப் பூனையின் சத்தத்தையும், சூளையினுள்ளே பாண்டத்திலிருந்து அழுகிற

குட்டிப்பூனைகளின் சப்தத்தையும் கேட்டும், தன் கணவன் படுகிற தயரத்தை நோக்கியும், பங்காபாயியானவள் நெருப்பில் விழுந்து கரிந்துபோன பூங்கொடிபோலக் கதறி யழுதுகொண்டே நிலத்தின்மேல் விழுந்து, பாண்டுரங்கன் திருவடியை நினைந்து அழுதாள். அப்போது ராகாகும்பாரும், பண்டரிநாதா! பக்தபாலநா! ருக்மிணீரமணா! அக்காலத்தில் பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் அகப்பட்டு இறவாமலும், பிரஹ்லாதாழ்வான் தன் தந்தையாகிய ஹிரண்யகசிபு மூட்டின தீயிலகப்பட்டு இறவாதிருக்கவும் அருள் செய்த செந்தாமரைக் கண்ணனாகிய பகவானே! இங்கே இந்தத் தீயில் அகப்பட்டு வருந்துகிற பூனைக்குட்டிகளையும் காத்தருளவேண்டும். அப்படிக் காத்தருள்வாயானால், இனி இந்தக் கடுங் தொழிலாகிய சுடுந் தொழிலை விட்டு விடுகிறேன் என்று சேதாத்திரம்பண்ணி, மனைவியும் தாமுமாகத் தூக்கசாகரத்தில் மூழ்கியிருந்தார்கள். இத்தப்பிரகாரம் தூங்கிக்கிற காலத்திலும் ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்ததனால், மூன்றுவது நாள் நெருப்பாறிக் குளிர்ந்தபிறகு குட்டிகள் கண்ணுக்குத் தெரியாமலிருந்து கத்துவதையும், தாய்ப்பூனை சூளையைச் சுற்றிச்சுற்றிக் கதறுவதையும் நோக்கி, ராகாகும்பாரும் மனைவியும் ஓடி, விரைவாகச் சூளையைக் கலைத்துப் பார்க்க, அதில் ஒரு பாண்டம் மாத்திரம் வேகாமல் பச்சையாயிருக்கக் கண்டு, அதை யெடுக்கும் போது, அதற்குள்ளே குட்டிகள் இறவாமலிருக்கக்கண்டு, மிகவும் மனமகிழ்ந்து, மூன்றுநாளாகப் பாலுண்ணக் கிடையாமல் வருந்தின குட்டிகளை நோக்கிப் பரிதபித்து, பாண்டுரங்கப்பெருமான் விசேஷக்ருபை செய்ததையும் நினைந்து, தமது துன்ப மொழிந்தார்கள். இந்த அதிசயத்தை அந்தவூரிலுள்ளாரெல்லாரும் கண்டு, இவர்களுடைய பரமபக்தியைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். பிறகு, ராகாகுமபார், நாம், பாண்டுரங்கப் பெருமானறிய இந்தத் தொழிலை விட்டுவிடுவதாகச் சொன்னபடியே, விட்டுவிடுவதே நலமென்று, குயத்தொழிலைவிட்டு, காட்டுக்குப்போய், உலர்ந்துகிடக்கிற விறகுகளைக் கட்டிக்கொண்டுவந்து ஊரில்விற்று, அதனால் கிடைக்கும் பொருளைக் கொண்டு ஜீவநஞ்செய்துகொண்டும், தம்மை நாடிவருகிற அதிதிகளை ஆதரித்தும், பண்டரிநாதனது திரு நாமத்தை மறவாமல் உச்சரித்துக்கொண்டும், கிழிந்து குப்பையில் கிடக்கிற துணிகளால் தமது மானத்தைக் காப்பாற்றிக் கொண்டும் வருவதை உலகத்தார் பார்த்து, இவர்கள் ஒரு உயிரின் பொருட்டுத் தமது குலத்தொழிலை விடுத்து வேறு தொழில் செய்து ஜீவிக்கிறார்கள். இவர்களுடைய ஜீவகாருண்யமும் பக்தி வைராக்யங்களும் ஆலோசிக்குமிடத்து, மிகவும் ஆச்சர்ய ஹேதுக்களாயிருக்கின்றன என்று மிகவும் புகழ்ந்து கொண்டாடிக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்க, ஒருநாள் இந்த ராகாகும்பார் புதல்வியாகிய, வங்கா, பீமரதிக்கரையை யடைந்து, அந்த நதியில் ஸ்நானம் செய்து பூஜைசெய்துகொண்டிருக்கும்போது, அந்த நதியில் வஸ்திரம் தோய்த்துக்கொண்டு போகவந்த நாமதேவர் மகள் அவசரமாய்த் தப்பும்போது தெறித்த நீர்த்துளிகளில் சில, இந்த வங்காமேல் தெறிக்க,

இவள், காமதேவர் மகளை நோக்கி, இப்படி நீ தூணி தப்புவது உனக்குத் தகுதியோ என்று கேட்க, அவள் வங்காவை நோக்கி, பாண்டுரங்கனை ப்ரார்த்தித்துக் காமியத்தில் மனம் வைத்து, குலத் தொழிலை விட்டு, தெறிதப்பி, அலைகிற குயச்சாதியார்க்கும் பூசைசெய்யுந் தொழில் தகுதியாமோ என்று கடுஞ் சொற்களைக் கூற, வங்கா, அந்த காம தேவர் மகளை நோக்கி, உன் தக்தை அழுது, விட்டலப் பெருமானைப் பிரார்த்தித்து, இறந்த பசுவைப் பிழைக்கச்செய்தது காமிய மல்லவோ? ஆலோசித்துச் சொல்லென்று கூற, இப்படி ஒருவரோடொருவர் வாதசெய்து, மிகவுங் கோபங்கொண்டு, தமது வீட்டுக்குப் போய்விட்டார்கள். பிறகு காமதேவர் பகவத் ஸங்நிதியிலிருந்து தமது திரு மாளிகைக்கு வந்தவுடனே, அவர் மகள் அவரை நோக்கி, ராகாகும்பார் புதல்வியாகிய வங்காவென்பவள், உம்மை மிகவும் தூஷித்தாளென்று சொல்ல, காமதேவர் சற்றுநேரம் யோசித்து, மேகவண்ணனுகிய பகவான் சந்நிதிக்கு மீண்டும் வந்து, ஸ்வாமீ, உன் அடியவராகிய ராகாகும்பார் உன்னிடத்தில் காம்யமோ, நிஷ்காமயமோ, அவர் கருத்தை எனக்குத் தெரியச் சொல்லவேண்டுமென்று கேட்க, பாண்டுரங்கபகவான், அவன் நிஷ்காமயனை என்று சுகைத்துக்கொண்டே சொல்லி யருளா, தாசர், அவர் பெருமையை அடியேனுக்குக் காட்டவேண்டுமென்று கேட்க, பகவான் ருக்மிணீ தேவியோடு இவரை யழைத்துக்கொண்டு, ராகாகும்பார் விறகொடிக்குங் காட்டிற்கு வந்து, அவரும் அவர் தேவியும் விறகொடிப்பதையும் கட்டுவதையும் காட்ட, தேவரும், இவரைச் சோதனை செய்யவேண்டுமென்று சொல்ல, அப்படியே சோதனை செய்கிறேனென்று, ப்ரார்ட்டியாருடைய கையிலுள்ள சங்கணத்தைக் கழற்றி ஒருபக்கத்தில் போட்டு, அதன்மேல் உலர்ந்த விறகை வைத்து மூடி, தூரத்தில் மறைந்திருந்து பார்க்க, ராகாகும்பாரும், விறகு தேடி வரும்போது இந்தக் கங்கணத்தைக் கண்டு அஞ்சி விலகி நின்று, சங்கணத்தையும் அதனை மறைத்திருந்த விறகையும தமது மனைவிக்குக் காட்ட, அவளும் ஏதோ தீமை யுண்டாயிற்று என்று மிகவும் அஞ்சி நெடுதூரம் விலகிப்போக, அதைக்கண்ட காமதேவர், பகவானைப் பணிந்து, கருணை நிறைந்து வழிதொழுகும் திருக்கண்களையுடையவனே! காகுத்தனே! ராகாகும்பார், உண்மையாகிய பக்தியுள்ளவரே; சந்தேஹமில்லை. அதற்கு, தேவரீருடைய சகுண ரூபத்தைக் காட்டி யருளவேண்டும் என்று ப்ரார்த்திக்க, ஸ்ரீலக்ஷ்மீகாதன், உலகத்து, இந்த ராகாகும்பார் கடமையை இன்னமும காணவிரும்புகிறாயோ! இப்போது காட்டினை சோதனையே போதுமோ என்று கேட்க, தாசர், இனி யொருசோதனையும செய்யவேண்டியதில்லை, இவருக்கு நிகரான பக்திமான்கள் உலகத்தில் ஒருவரு மில்லை யென்று சொல்லவே, பாண்டுரங்கப்பெருமானுனவர், ருக்மிணீ பிராட்டியோடும் காமதேவரோடும் கூடி, மூவருமாக, ராகாகும்பாருக்கு எதிரே வந்து அருள்செய்து நிற்க, ராகாகும்பார் தமது மனைவியோடும் வந்து அன்போடு இவர்களை அடிவணங்கித் தோத்திரஞ்செய்தார்.

ராகாதும்பார் சரித்திரம் முற்றிற்று.

# கூ-வது கோராகும்பார் சரித்திரம்.

எல்லாவூர்களிலும் சிறந்து விளங்குகின்ற தேரடோகி யென்னும் ஊரில் கோராகும்பார் என்பவர் ஒருவரிருந்தார். அவர் இல்வாழ்க்கை பூண்டு இனிதாய் நடத்திவருங் காலத்தில், அவருக்குப் பகவத்பக்தி அதிகரித்தலால், உண்ணும்போதும, நடக்கும்போதும், இருக்கும்போதும், எழுந்திருக்கும்போதும், லோகவிவகாரங்களே நடத்தும்போதும, மட்கலங்கள் வனையும்போதும், ஆயாசக் தீரும்போதும், பாண்டுரங்கப் பெருமானே மறவாமல் மனத்திலிருத்தி, பஜனையுஞ் செய்து வாழ்ந்திருந்தார். இப்படியிருக்கும்போது ஒருகாள், இவர் மனைவியானவள், தவழ்கின்ற தனது இளங் குழந்தையை, இவர்க் கெதிரே விட்டுத் தாக நீர்கொண்டு வரப்போனாள். அக்குழந்தையானது இவர் மண் மிதித்துக்கொண்டிருந்த இடத்திற்குத் தவழ்ந்து கொண்டு வந்தது. இவர் ஸ்ரீ ஹரிபாதத்தில் மனம் பதித்திருப்பவராதலால் இக்குழந்தை வந்ததை யறியாதவராய் மண் மிதித்துக்கொண்டேயிருந்தார். இக்குழந்தை பையத் தவழ்ந்துபோய், மண் மிதித்துக்கொண்டிருக்கிற இவருடைய காலின் கீழ் அகப்பட்டது; இவர் மண்ணோடு சேர்த்து மிதித்துக் குழைத்துவிட்டார். தண்ணீர்க்குப்போன இவர் மனைவிவந்து நீர்க்குடத்தை யிறக்கிவிட்டு, குழந்தை யெங்கே யென்று கேட்டு, இவர் வாய்பேசாமலிருப்பதைக் கண்டு, இங்கே நமது குழந்தைக்கு ஏதோ தீங்கு நேரிட்டதாய்த் தோன்றுகின்றதென்று சற்று நிதானித்து, இவர் மிதிக்கிற மண்ணைப் பார்த்து, அது உதிரத்தோடுகூடிச் சிவந்திருப்பதையும், குழந்தையின் சரீரத்துண்டையும் கண்டு, பயந்து, மார்பில் அறைந்துகொண்டு, பூமியின்மேல் விழுந்து, புரண்டு அழுது, ஐயோ, குழந்தாய், மண்ணிற் சிக்கி மடிந்தாயோ! கொஞ்சமேனும் இரக்கமில்லாமல் உன்தந்தை உன்னைக்கொன்றாரோ என்று சொல்லிப் புலம்பிப் பின்பு, கணவனை நோக்கி, கொஞ்சமும் நினைப்பில்லாமல் குழந்தையை மண்ணோடு சேர்த்து மிதித்துக் கொன்றீர்! நீர் இவ்விடம் விட்டு எங்கேயாகிலும் போய் பிறந் தொழியீராக வென்று கடுஞ் சொற்களைச் சொல்ல, இவர்க்குச் சற்றே நினைவு வந்து விழித்துக்கொண்டு, எதிரே நிற்கிற மனைவியை நோக்கி, என் மனத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வைகுண்ட நாதனை நீ விலகும்படி செய்தாயே! என்னடி பேதாய் என்று கோபங் கொண்டு, தம்கையிலிருந்த தடியாலடிக்கக் கிட்டி வரும்போது, மனைவியார், இவரை நோக்கி, விட்டலப்பெருமான் ஆணை என்னை நீர் தீண்டாதிருக்கக் கடவீர் என்ற வார்த்தையைக் கேட்டு, அவசரப்படாமல் பொறுத்திருந்தார். இந்தச் செய்தியை ஊராரெல்லாரும் கேட்டுத் திரண்டுவந்து, இங்கே நடந்த விருத்தாந்த முழுதும் தெரிந்துகொண்டு, இவருக்கு இப்படிப்பட்ட வெறிக்

குணம் எப்படி உண்டாயிற்றென்று சிலர் பேசிக்கொண்டார்கள். மனைவியை நோக்கி, உனக்கு நல்ல கணவன் வாய்த்தானென்று சிலர் சொன்னார்கள். ஸ்ரீஹரிபக்தி ஒருவனுக்குண்டானால் அந்த பக்தி ஒன்றையும் அறியாதிருக்கச் செய்யுமோ வென்று சிலர் சொன்னார்கள். இப்படிப் பலபல வகையாய்ப் பேசுவதை இவர் செவியிலேற்காமல்,ஸ்ரீபாண்டுரங்கப்பெருமானைச் சிக்தித்துப் பஜனை செய்துகொண்டிருந்தார், மறுநாள் அந்த மனைவியாரே, தாம் பேசின கடுஞ் சொற்களை நினைத்து மனமிரங்கிக் கணவனைத் திருவடி விளக்க நீர் கொண்டுவந்தாள். கோராகும்பார் அதை நோக்கி, பெண்ணே, நீ பண்டாரி நாதன்மேல் ஆணையிட்டு மேற்றுச் சொன்ன வார்த்தையை மறந்து, இப்பொழுது ஏன் என்னைத் தீண்ட வருகிறாய் என்று கோபித்துக்கொண்டார். கிட்டி வந்த மனைவியாரும் குழந்தை மீதுள்ள ஆலசயாலே, நமது கணவனுக்கு மற்றொரு விவாஹமாகிலும் செய்து அந்த மனைவி வயிற்றிலே ஒரு குழந்தை யுண்டாகப்பெறுவோமென்று நினைத்து, தமது தந்தையார் வாழ்கின்ற வீட்டுக்குப் போய் அவர்களை வணங்கி, என்னை என் கணவன் மறுத்ததனால் அவருக்கு என் தங்கையை மணமுடித்துக் கொடுக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அந்தத் தாய் தந்தையரும் அதற்கிசைந்து நல்லசுபமுஹூர்த்தத்திலெண்ணை விவாஹஞ்செய்துகொடுக்கும்போது எதிரேநின்ற கோராகும்பாரை நோக்கி, நீர்மூத்தபாரியாளைக் காப்பாற்றினதுபோல இந்த இளையபாரியாளையும் காப்பாற்றவேண்டுமென்று மணப்பந்தலிலிருந்த தாய் தந்தையர்முதலானோர் சொல்லிவிடுக்க, இவர் தம்வீட்டிற்கு அழைத்துவந்து அவரைத் தீண்டாமல் முன்போல விரதம் பூண்டிருக்க, அந்த இளைய பாரியையானவர், மூத்தாளைநோக்கி, உனக்கு எப்படியோ அப்படியே எனக்கும் முடிந்தது என்றார். பிறகு, பெரிய மனைவியார் இளைய மனைவியாரைத் தேற்றி, இருவருஞ்சென்று கணவன்தூங்குகிறபடிக்கையில் தாமும் இருபுறத்தும் படுத்து, கணவனது இரண்டு கைகளையுந் தூக்கித் தங்கள் மார்பின் மேல் வைத்துக்கொண்டு உறங்கினார்கள்.அப்போது கோராகும்பார் விழித்துப் பார்த்து, நமது விரதத்துக்குக் கெடுதி கேரிட்டதேயென்று அருவருத்து வாளால் ஒரு மனைவிகையை அறுத்து, பிறகு மற்றொரு மனைவிகையையும் அறுத்தபோது, மனைவியர் இருவரும் மனம் வருந்தி, நாம் இவரை மணஞ் செய்துகொண்டது குழந்தையின் பொருட்டோ! அதற்கு விரோதமாய்க் கையை யிழந்துபோதற்கோ! இனி யாம் செய்யத் தகுந்தது யாதோவென்று அலறியழுதுகொண்டிருப்பதை, அன்பரை யரதரிப்பவனுகிய பாண்டுரங்கன் இனிமையாய் உதவி செய்வோனுயிருக்க, நீங்கள் துன்பப்படுவது யாதுக்கு என்று கோராகும்பார் சொல்லி, மேலும் விட்டலன் திருநாமத்தை யுச்சரித்தால் எவ்வகையாகிய நோய்களும் நீங்கும் என்று அவரைத் தேற்றி, ஹரி பஜனை செய்துகொண்டிருந்தகாலத்தில் ஆடிமாசம் ஏகாதசி சேர்ந்தது. அப்போது கோராகும்பார் தம்மனைவியரோடு வந்து பாண்டுரங்கனைத் தரிசித்து, பேராநந்தங்கொண்டு, சந்திரபாகா நதியில் மூழ்கி, முன்னே புண்டலீகரைத்

தொழுது வாழ்த்தி, பண்டரிநாதன் எழுந்தருளியிருக்கிற கோயிலை வலம் வந்து, பெருமானையுஞ் சேவித்துத் தோத்திரம்பண்ணித் தழுவிநிற்க, நாம தேவர் தமதுகோஷ்டியோடு தாளம்,தம்புரு,மிருதங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்க, கையில் சுருடக்கொடியையேந்தி, பாண்டுரங்கனுடைய நாமவலங்கீர்த் தனம் பாடி ஆநந்தக்கூத்தாடினார்; அவர்களோடு கோராகும்பாரும் கூடி யாடினார்.அப்போதுமானவியர்இருவரும்கைத்தாளம்போட விருப்பமுள்ளவ ராயிருந்தும முன் கைகளில்லாமையால் மனம் வாடி ஸ்ரீ ஹரி நாமத்தை யுச்சரித்துக் கைகளை மூடிக்கொண்டு நாணிநின்றார்கள்.அப்போது இவர்களு டைய எண்ணத்தைப் பாண்டுரங்கன் அறிந்து கைகள்முன்போலவே வளரச் செய்ய, அவர்களும் அன்போடு கைகள் கொட்டிப் பாடித்தொழுது ஆடிமகி ழ்வதை எல்லாருமஅறிந்து அதிசயித்து நோக்கி, பரவசமடைந்து, இக்கக் கோராகும்பார்தொண்டர்களிற்சிறந்தவரென்று பலவகையாய்த் தோத்திரஞ் செய்து, நெருங்கியிருக்கக்கண்டு, மூத்த மானவியார், கைகூப்பிநின்று, பண் டரிநாதனே! பக்தபாலநானே! பத்மநாபனே! திருத்துழாய்மாலையை யணிந்த காமோதரனே என்று வாழ்த்தித் தொழுது, அன்பருக்குக் கைகள் வளரும் படி அருள்செய்த கமலக்கண்ணனே! நீலமேகவண்ணனே! மாயவனே! குழ ந்தையில்லாமல் வருந்துகின்றோம்! நாங்கள் வருந்துவது தேவரீர் திருவுளம் அறியாதோ! எங்கள்மீது கருணை யில்லையோ! ஸ்ரீ லக்ஷ்மீ நாதனே என்று இவ்வாறு தோத்திரம் செய்ததற்குப் பகவான் திருவுளமிரங்கி அருள்செய்ய, உடனே முன்னே இறந்த குழந்தையானது தவழ்ந்துகொண்டு எதிரே வருவ தைக்கண்டமூத்தமானவியார்,விரைந்துபோய்க் குழந்தையை எடுத்து மார்பி லணைத்துக்கொண்டு உச்சிமோந்து முத்தமிட்டு மனமகிழ்ந்திருக்கும்போது, பகவானுனவர் ப்ரத்யக்ஷமாகி, கோராகும்பாரை நோக்கி, இன்றுமுதல் உம் முடையமானவியர் இருவரோடுங்கூடி இனிதாகவாழ்ந்துகொண்டிருக்கக்கட வீரென்றருளிச் செய்தனர்; இந்த அதிசயங்களைக் கண்டஅன்பரெல்லாரும் பலவிதமாய்த் தோத்திரம் பண்ணி வணங்கிப் பாடியாடி மங்கள ஆலாத்தி சுழற்றி, மகிழ்ந்திருக்க, கோராகும்பார், அந்தத்தொண்டர்களை நோக்கி,நீங்க ளெல்லீரும் அடியேனுடைய குடிலுக்கு எழுந்தருளவே மென்று ப்ரார் த்திக்க, அவர்களும் அப்படியே இவரைத் தொடர்ந்து போய் இவருடைய வீட்டையடைந்து நிற்க, கோராகும்பார் அந்த அன்பர்கள் யாவர்க்கும் பாத பூஜைசெய்து, ஆசனங்கொடுத்து, எல்லாரும் அமைந்திருந்த பிறகு, அவர்க ளுக்கு அறுசுவையோடுகூடின உணவை யுண்பித்து, மற்றும் செய்யவேண் டிய உபசாரங்களெல்லாம செய்து முடித்தபிறகு, ஞானதேவர், கோராகும் பாரை நோக்கி, நீர் இங்கே யழைத்துக்கொண்டுவந்த அன்பராகிய பாண்டங் களில், சுட்டபாண்டம் இதுவென்றும், சுடாதபாண்டம் இதுவென்றும் பிரி த்தறியவேண்டுமென்கிற விருப்பம் எனக்கிருக்கின்றது என்று சொல்லு தலும், கோராகும்பார் எழுந்து தமது கையிலிருந்த தடியினால் ஒவ்வொருவ ரையும் தட்டினார். அவர்களெல்லாரும் மௌனமாயிருந்தார்கள்; பிறகு நாம

தேவர் தலையில் தட்டவரும்போது அவர்தடுத்தார். அப்போது இவர்பச்சைப் பாண்டமென்று சொல்லவே, முக்தாபாயியும் உமக்கு எவ்வாறு உண்மை தோன்றிற்றென்றும் நீர் மிகவும் சமர்த்தர் என்றும் சொல்லக் கேட்டவர் எல்லாரும் நகைக்க, நாமதேவர் நாணத்தோடும்எழுந்து, பகவான் சந்நிதியிற் போய்ச் சேவித்துக் கண்களில் நீரொழுக நின்று, எனக்கு இன்று அவமானம் நேரிட்டதனால் மிகவும் மனம் வருந்தினேன் என்று விண்ணப்பஞ் செய்யக் கேட்ட எம்பெருமான் இவரைத் தழுவிக்கொண்டு, உனக்கு யார் என்னசெய்தார்? நடந்த செய்தியைச் சொல்லும் என்று வினவ, இன்று கோராகும்பார் தமதுவீட்டுக்கு எங்களையழைத்துக்கொண்டுபோய்கல்லவணையுண்பித்து, நாங்கள் மகிழ்ந்திருக்கும்போது, தமது கைத்தண்டத்தால் ஒவ்வொருவரையும் தட்டிக்கொண்டேவர,அவர்கள் சும்மாவிருந்தார்கள்; என்தலையில் தட்டவரும்போது நான் கையினால் தண்டத்தைத் தடுத்தேன்; அப்போது இது பச்சைப்பாண்டமென்றார்; எல்லாரும் சிரித்தார்கள், முக்தாபாயியும் அதிகமாய்ப் பரிகஸித்தாள். இந்தச் செய்தியைத் தேவரிருக்குவிண்ணப்பஞ்செய்யவந்தேன் என்றார். இதை ஸ்ரீலக்ஷ்மீ நாதனுகிய பகவான் கேட்டுச் சிரித்து, நீ குருமுகமாக உபதேசம் பெறுமையால் உனக்கு இப்படிப்பட்ட அவமானம் உண்டாயிற்று. கோராகும்பார்சொன்னது உண்மையாமென்று சொல்ல, நாமதேவர் சொல்லுகிறார். பண்டரிநாதனே! என் துயரமெல்லாம் உன்னிடத்தில் விண்ணப்பஞ் செய்தால் அதைத் தீர்த்தருளாமல், நீயும் உன் அன்பர் சொன்னதுபோலவே சொல்வது தகுதியாகுமோ என்று சொல்லிக் கண்ணீர் ததும்பகின்றார். அதைக்கண்ட பண்டரிநாதர் நாமதேவா, உன்னை என் உயிர்க்குயிரா யெண்ணியிருக்க நீயிப்படி வன்சொல்வழங்குவதுதகுதியல்ல, உன்னுடைய துவிதபாவம் நீங்கும்படி குருவின் அருளைப்பெற்று, அதன் பிறகு என்னை யடையவேண்டும் என்று சொன்னவுடனே, நாமதேவர், குருக்களுக்கெல்லாம் பரம குருவாயிருக்கிற தேவரீரை யாசிரயித்த நான் வேறுகுருவைத்தேடுவது உசிதமல்லவேயென்றார்; அதற்குப் பகவான், நாமதேவா! நான் ஸ்ரீராமாவதாரத்தில் வசிஷ்டரிடத்திலும், க்ருஷ்ணவதாரத்தில் சாந்தீபரிடத்திலும் உபதேசம் பெற்றே ஆத்ம ஞானத்தை யடைந்தேன்; ஆகையால், நீ இப்போதே உபதேசம் பெற்று வருவாயானால், சாது ஜனங்களால் மதிக்கப்படுவாய்; தத்துவஞானமார்க்கமும் தோன்றும், போவென்று நியமிக்க, நாமதேவர் பகவானுடையதிருவடியை வணங்கி, நான் எங்கேபோய் எந்தக் குருவைத்தேடி அடைவேனென்று கேட்க, மேகவண்ணராகிய பண்டரிநாதர், குளிர்ந்த கங்கையைச் சடையில் தரித்திருக்கிற ஸ்ரீகாகைநாதர் எழுந்தருளியிருக்குங் கோயிலில், அறிவுருவாகிய விசோபாகேசரர் என்பவர் கண்வளர்ந்துகொண்டிருக்கிறார், அவரையடைவாயாகவென்று அருளிச்செய்தார். அப்படியே நாமதேவர் பகவானுடைய பிரிவை நினைத்து நினைத்து, மனத்தளர்ச்சியோடு நடந்துபோய்க் கோயிலை யடைந்து உள்ளேபிரவேசித்தவுடனே விசோபாகேசரர் தமதுசெருப்புக்காலைச்சிவலிங்கத்தின்மேல்நீட்டிக்

கொண்டு உறங்கக்கண்டு, திகைத்து, பகவானுணவர் எனக்கென்று தெரிந் தெடுத்துச் சொன்ன ஆசான் இவர்தானே? இப்படிப்பட்டபித்தரைக்காணவி லும கண்டறியேனேயென்று நினைத்துக்கொண்டே, அந்த விசோபாகேசர் ருக்கெதிரேபோய் நின்று, ஐயரே! உமது ப்ரபாவத்தைக்கேட்டு உம்மையாசி ரயித்து உஜ்ஜீவிக்கலாமென் றெண்ணி வந்தேன்; நீர் செய்த செய்கையை கோக்கினுல் தகாத செய்கையா யிருக்கின்றது. இதனுலேயே உம்முடைய பரிசுத்தஞானமும வெளியாகின்றது என்று சொல்லக்கேட்ட விசோபாகேச ர், அடடா, என்னேயறியாமல் தூக்கத்தில் கால் தவறிச் சிவலிங்கத்தின்மேல் விழுந்ததுபோ லிருக்கிறது; என்னுடம்பு மிகவும் அயர்ந்திருப்பதனுல், அவ யவங்களைப்பேர்த்து வேறொரு இடத்தில் வைப்பதற்கும் சக்தி யில்லாதவனு யிருக்கிறேன்; ஆதலால் சிவலிங்கத்தின்மேலிருக்கிற காலைத்தூக்கி வேறிடத் தில் வைப்பாயானுல் மிகுந்தபுகாரமாகுமென்றார்; அதைக்கேட்டநாமதேவர் விசோபாகேசரர் எனனும் அந்த மெய் ஞானியின் திருவடியைத் தமது கை யால் தூக்கிப் பக்கத்தில் வைக்க, அங்குமு ஒரு சிவலிங்கம் இருக்கப்பார்த்து, வேறோரிடத்தில் வைக்கபோய் அங்கும் சிவலிங்கம் இருக்கபார்த்தார். இப் படி எங்கேவைக்கப்போனுலும் அங்கே சிவலிங்கமிருப்பதைப்பார்த்து, இது என்ன புதுமை! எங்குமு சிவலிங்கமா யிருக்கிறதேயென்று ஆச்சரியப்பட்டு க் களர்ந்திருப்பவரை, விசோபாகேசரர் நோக்கி, நாம தேவரே! நீர் நெடு நேரம் என் காலைத் தாங்கி நின்றதனுல் எனக்கு மிகவும் விசனமாயிருக்கின் றது! ஆகையால் என் காலை வெற்றிடத்தில் வைத்துவிட்டு; நீர் கையாறுவீர் என்று சொல்ல, நாம தேவர், ஞானியாரை வணங்கி, ஐயரே, பார்க்கிற இட ங்களெல்லாம் சிவலிங்கமயமா யிருப்பதனுல் அடியேன் தேவரீருடைய திரு வடியை எந்த வெற்றிடத்தில் வைப்பேன் என்று தோத்திரம் செய்து நிற் கும்போது, ஞானியார், என் காலை விடுமென்று எழுந்திருந்து, தமது திருக் கையை நாமதேவர் சிரசின்மேல் வைத்து, காதில் உபதேச மொழியாகிய ஞானமிர்தத்தைப் புகட்டினவுடனே, ஸ்ரீலக்ஷ்மீ நாதனுகிய பகவான் அவரது இதயகமலத்தில் எழுந்தருளினர். அப்போது நாமதேவர், கரைகடந்த ஆநந்த சாகரத்தில் மூழ்கிய பரவசராய், குருமூர்த்தியை வணங்கித் தெளிவடைந் திருந்தார். பிறகுஒருநாள், பண்டரிபுரத்திற் போய், பாண்டுரங்களுக்கெதிரே, தொண்டரோடு கூடி ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தனம் செய்துகொண்டிருக்கும் போது, பாண்டுரங்கன் எழுந்தருளி இவரைத் தழுவிக்கொண்டு, எதிரே யிரு க்கிற வைஷ்ணவர்களை நோக்கி, இனி இந்த நாமதேவரை, சூடாத பாண்ட மென்று சொல்லுவீர்களா வென்று வினவ, ஹரிநாம சங்கீர்த்தனம் செய்து கொண்டிருந்த தாசரெல்லாரும இனி அப்படிச் சொல்லுதல் தகாத காரிய மென்று சொலலி, ஆசிரயிப்பவர் எல்லாருக்கும் பேரின்ப வாழ்வை யருள் செய்கிற பகவானுடைய திருவடியைத்தொழுது வாழ்ந்திருந்தார்கள் என்று சொல்லி, மேலும் பரிசாபாகவதர் வைபவத்தைச் சொல்லுகிறேன் கேளென னறு, பார்வதி தேவியாருக்குச் சிவபெருமான் சொல்லத்தொடங்கினர்.

கோராதும்பார் சரித்திரம் முற்றிற்று.

# க0-வது பரிசாபாகவதர் சரித்திரம்.

பண்டரிபுரத்தில், பத்மாலையாகிய பெரிய பிராட்டியினிடத்தில் மிகவும் அன்புசெய்வோராகியபரிசாபாகவதர்என்பவர்ஒருவரிருந்தார். அவர் ஒருநாள் கோயிலுக்குப் போய்ப் பிராட்டியை வணங்கி நிற்கும்போது, இவரது அன்புக்குத் திருவுள மகிழ்ச்சியடைந்த ருக்மிணீ தேவியார் எதிரே வந்து, க்ருபா த்ருஷ்டியால் நோக்கி, அப்பா குழந்தாய், உனக் கென்னவேண்டுமென்றுகேட்க, பாகவதர், பிராட்டியை நோக்கி, தாயே, நான் குடும்ப துக்கங்கள் ஒன்றுமில்லாமல், எப்போதும் உன்னையே மனமொழி மெய்களால் வழிபட்டிருத்தலாகிய நெறியை எனக்கு அருள் செய்யவேண்டும் என்று பிரார்த்திக்க, பிராட்டியார் தக்ஷணமே ஒரு ஸ்பரிச வேதிக் கல்லை இவர் கையிற் கொடுத்து, இந்தக் கல்லை எந்த லோகத்தில் தடவினாலும் அவைகள் பொன்னாகும், அந்தப் பொன்னைக்கொண்டு உன் குடும்ப துக்கம் தோன்றாமல் இல்வாழ்க்கையை நடத்திவாராய், இந்தக் கல்லை அதிக ஜாக்கிரதையாய்க் காப்பாற்றிக்கொள் என்று நியமிக்க, அப்படியே அந்தக் கல்லைப் பெற்றுக்கொண்டு வந்த பாகவதர் தமது மனைவியாரிடத்தில் கொடுத்து, அதின் வரலாறு முழுதும் சொல்ல, அந்த மனைவியும், பரிசக் கல்லினால் இரும்பு முதலான வைகளைப் பொன்னாக்கி, அதைக்கொண்டு தமது இல்வாழ்க்கையை இனிதாய் நடத்திவந்தார். இப்படி இந்தச் செய்தி ஒருவர்க்கும் தெரியாமல் இருவரும் மனமகிழ்ச்சியோடும் கூடிச் சுகமாய் வாழ்ந்திருக்குங் காலத்தில், ஒருநாள் இவர் மனைவியாராகிய கமலஜா என்பவள் சந்திரபாகா நதியில் போய் நீர்முகந்துகொண்டு மீண்டுவரும்போது, நாமதேவர் மனைவியாராகிய ராசாயி என்பவள் எதிர்ப்பட்டு, ஓ கமலஜா, நானும் நீர்முகந்து வருமளவும் இங்கே நிற்கக் கடவை யென்று இன்சொற் சொல்லி நிறுத்திவிட்டுப் போய் நீர்முகந்து வந்தாள்; அப்படி விரைந்துவந்த ராசாயியை, கமலஜா அன்போடு நோக்கி, என் அன்புக்குரிய சகியே, உன் வாழ்க்கை வளத்தைச் சொல்லுவாயானால் கேட்டு மகிழ்வேன் என்றாள், அதுகேட்ட ராசாயி, தனது சிறு வாழ்க்கையைச் சொல்ல காணி நிற்க, கமலஜா அறிந்துகொண்டு, மனங்கலக்தஸ்நேஹரிடத்தில் சொல்வதற்கு நாணவேண்டியதில்லை, உனக்குள்ள வுண்மையை எனக்கு மறைக்காமல் சொல்லலாம், ஆதலால், சொல்லென்று கேட்க, ராசாயி சொல்லுகிறாள் எப்படியென்றால், என் கணவரானவர், நாணத்தையும் மானத்தையும் விட்டு, குடும்பத்தைக் காப்பாற்றவேண்டுமென்கிற நினைவு சிறிதுமில்லாமல், வறுமையால் உண்டான துன்பத்தையும் நோக்காமல், ஸ்ரீபாண்டுரங்க பகவானுடைய திருவடி ஸ்மரணமாகிய கடலிலழுந்தி, அந்தவஸ்துரங்களையும் விரும்பாதவராய், ஹரிபஜனை செய்வதிலேயே விருப்பங்கொண்டு திரிகிறார். அவரது நடக்கையை என்னென்று சொல்வேன் என்று சொல்லக் கேட்ட கமலஜாவானவள், ராசாயி முகத்தை நோக்கி, இர

க்கத்தோடு சொல்லுகிறாள். உன் கணவனுடைய பசிக்கு, அந்தப் பகவான் க்ருபை செய்து, வறுமை தீரும்படி பொன் கொடுக்கவில்லையோ என்று கேட்க, அவள் இல்லையென்று சொல்ல, கமலஜா, அப்படிப்பட்ட கடவுளைப் பூஜைசெய்து என்ன ப்ரயோஜநம், என்கணவர், தாயான ருகுமாயியை வணங்கி வாழ்த்த, அதற்காக அந்த ருக்மிணித் தாயார், ஒரு ஸ்பரிசவேதிக்கல்லைத் தந்து எங்களுடைய மிடியைத் தீர்த்தருளினாள். காயாத மரத்துக்கு நீர் வார்த்து என்னபயன் அடையலாம் என்று சொல்ல, ராசாயி, கமலஜாவை நோக்கி, உமக்கு ருக்மிணீ தேவியார் தந்த கல்லை நான் பார்க்க வேண்டும் என்று ப்ரார்த்திக்க, அப்படியே உனக்குக் காட்டுகிறேன், எங்கள் வீட்டுக்கு வாவென்று அழைத்துக்கொண்டுபோய், அந்தக் கல்லைக் காட்டி, இதைக் கொண்டுபோய், உன்வீட்டிலுள்ள இரும்புதளிலெல்லாம் பரிசித்துப் பொன்னாக்கிக்கொண்டு, இந்தக் கல்லைக் கொண்டுவந்து ஒருவருக்குந் தெரியாமல் என்னிடத்தில் கொடுத்துவிடு என்று சொல்லித் தந்து அனுப்ப, ராசாயி அதனை வாங்கி வந்து, தமது வீட்டில் தேடி இரும்புத்துண்டுகள் கிடையாமையால், தாம் தொழில் செய்கிற ஊசி, கத்தரி, இவற்றில் பரிசித்துப் பொன்னாக்கி, அதை விற்றுப் பெற்ற பொருளைக் கொடுத்து, அரிசி முதலியவற்றைத் தருவித்துச் சமையல் செய்துகொண்டிருக்கும்போது, நாமதேவர் வந்து, தமது தேவியார் செய்யுஞ் சமையல் முதலியவற்றைக் கண்டு, எப்போது மில்லாத ஆடம்பரம் செய்கின்றாயே, இதற்குக் காரணம் யாதென்று வினவ, ராசாயியார் உண்மையைச் சொன்னால் இவர் கோபிப்பாரென்று நினைத்து, அஞ்சி, கணவரை நோக்கி, உண்மையாக இந்தக் காரியத்தை விசாரித்தறிந்து கொள்வதனால் உமக்கு என்ன ப்ரயோஜநம்! நாள்தோறும் இந்தப்படியே நீர் அமுதுசெய்து, ஸ்ரீஹரிநாமசங்கீர்த்தநம் செய்துகொண்டிரும் என்று சொல்லக்கேட்ட நாம தேவர், அதற்கு மன மகிழாமல், உள்ளபடி சொன்னாலல்லது நான் போஜநம் செய்யமாட்டேன் என்று சொல்ல, தேவியார் இவருடைய பிடிவாதத்துக் கஞ்சி, உள்ளபடி சொன்னாள், அப்போது நாமதேவர் அந்தக் கல்லை நான் பார்க்கவேண்டும், தடுக்காமல் காட்டுவாயாகவென்றார். தேவியார் அவர் சொல்லைத் தடுக்க அஞ்சி, அவர் காணும்படி காட்ட, அதை நாமதேவர் தமது கையில் வாங்கிப் பார்த்து, அதைச் சந்திரபாகாநதி ப்ரவாஹத்திலே எறிந்துவிட்டு, அந்த நதிக்கரைமேல் நின்று ஸ்ரீஹரிநாமசங்கீர்த்தநம் செய்தார். அதைக்கண்ட கமலஜாவானவர், ராசாயியை நோக்கி, நீ கேட்டதற்குத் தடைசொல்லாமல் நான் கொடுத்த கல்லை இப்படி நதிநீரில் எறியும்படி உன் கணவன் கையிற் கொடுத்தது சரிதானோவென்று கோபித்துக்கொள்ள, அவரை பாழைத்து வந்து தம் கணவரைக் காட்ட, பரிசாபாகவதரும் வந்து கேட்டு, இந்தக் காரியத்தை எப்படிச் செய்தீர் என்று சொல்லி வருத்தப்படுத்தி, ராசாயியையும் கடிந்துகொண்டார்கள். இப்படியிருக்க, கமலஜாவை வழியிலே எதிர்ப்பட்டவர்களுடைய முகத்தை நோக்கி, நான் கொடுத்த வொரு பொருளை யென்கையிற் கொடுக்காமல் நதிப்

பெருக்கில் எறிந்துவிடுவது நன்மைதானே என்று கேட்க, அவர்களிற் சிலர், ஸ்ரீஹரிபக்தருக்குப் பொன்னும் கல்லும் சமானமேயாமென்றார்கள். சிலர் எப்படியிருந்தாலும் இது நீதியல்ல வென்றார்கள். ஒருவர் பொருளை வாங்கிவந்து நதியி லெறிந்துவிடுவதுதானே தரும நீதி யென்று சிலர் பேசிக்கொண்டார்கள். இவ்வாறு பலவகையாய்ப் பேசிக்கொள்ள, பரிசாபாகவதர் காமதேவரை நோக்கி, எங்கள் பாக்கியமாயிருந்த கல்லை நீரி லெறிந்துவிடுவது தருமமோ வென்று கேட்டதுமன்றி, உம்மை இவ்வுலகத்தார் யாவரும் விரக்தர் என்கிறார்களே, விரக்தரானவர்க ளெல்லாம் இப்படிப்பட்ட அநியாயம் செய்ய வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றதோ என்று இப்படி பலவாறு நிர்ப்பந்திக்க, காமதேவர், பாகவதர் முகத்தைப்பார்த்து, பிராட்டியார்க்கு அன்பராயிருப்பவரே, உமதுமனம் அந்தக் கல்லை விரும்புமானால், இதோ இந்தமடுவில் அநேகங் கற்கள் கிடக்கின்றன, முழுகியெடுத்துக்கொள்ளும்என்றுசொல்லக் கேட்டவர்களெல்லாரும், ஆற்றின்மடுவிலே கிடக்கிற கற்களெல்லாம் பரிசக் கற்களோ என்று சொல்லிச் சிரித்தார்கள். அதைக்கண்ட காமதேவர், ஆற்று நீரில் முழுகி, அங்குக் கிடைத்த கற்களை யெல்லாம் கைநிறைய வாரியெடுத்து வந்து, உம்முடைய சிறந்த பரிசக் கல்லைச் சோதித்து எடுத்துக்கொள்ளுங்கள் என்றார். அப்போது பரிசாபாகவதர் அந்தக் கற்களைச் சோதித்து, எல்லாம் பரிசக் கற்களா யிருக்கக் கண்டு, பாகவதர் முதலிய யாவரும் அதிசயித்து, காமதேவரை வாழ்த்தி வணங்கினார்கள். பிராட்டிக்கு அன்பராகிய பரிசாபாகவதர், ஹரிதாசராகிய காமதேவரைத் துதித்து வணங்கிச் சொல்லுகிறார். ஸ்ரீஹரிபக்தியிற்சிறந்த காமதேவரே! உமது மஹிமையை நான் அறியவல்லேனல்லேன், பெரிய பிராட்டியாரைப் போற்றி ஒரு பரிசக் கல்லைப் பெற்றேன், அந்தக்கல்லைப்பெற்ற பெருமையால் உமது க்ருபைக்குப் பாத்ரனல்லாமற் போனேன்; ஆனாலும், இப்போது என் அபராதங்களை யெல்லாம் மன்னித்து எனக்கு ஞானோபதேசம் செய்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க, காமதேவர் அவர் ப்ரார்த்தனைக் கிரங்கி, அவர் கையிலிருந்த கற்களை நதியி லெறிந்துவிட்டு, அவர் சிரசின்மீது கையை வைத்து ஞானோபதேசம் செய்தருள, பரிசாபாகவதரும் அவ்வுபதேசத்தைப் பெற்று, காமதேவருடைய அடியார்களில் ஒருவராய்ச் சிறந்து விளங்கினர் என்று சிவபெருமான் பார்வதி தேவியார்க்குச் சொல்லி, மேலே ஜகந்மித்திரர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

பரிசாபாகவதர் சரித்திரம் முற்றிற்று.

# கக-வது ஜகமித்திரர் சரித்திரம்.

பரளி யென்னும் ஊரில், வேதியர் குலத்தில் ஜகமித்திரர் என்றொருவர் அவதரித்தார். அவர் வைஷ்ணவராகி, யாசித்துத் தானியங்களைச் சேகரித்து, அதைக் கொண்டு காள்தோறும் குடும்ப ரக்ஷணஞ் செய்து வருங் காலத்தில், பொருளில் விருப்ப மில்லாதவராய், ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தநம செய்தலேயே பரம புருஷார்த்தமாய்க்கொண்டு ஒழுகும் காளிலே, அந்த ஊரிலுள்ளவர்கள் இவருடைய மஹிமையைத் தெரிந்துகொண்டு, இவர் நீசகுலமாதட ஜாதியிற் சேர்ந்தவரல்லர்; எந்தத் தேவர் இந்த அவதாரம் செய்தனரோவென்று புகழ, சிலர் இவர் சாது சரிதரோ, அப்படியானால் இவரது சாமர்த்தியத்தையும், சாந்தகுணத்தையும யாம் காண்போமென்று வாதுசெய்யவந்து, தாம் கற்ற வற்றைச் சொல்லி, இவரை வருத்தி மாறபங்கம் செய்தும, அதைச் சற்றும் மதிக்காதவராய், ஞான வைராக்கியங்களால் விளங்குகின்றவரா யிருப்பதை, அவிவேகிகளாகிய சிலர் கண்டு, பொறுமை யுள்ளவர்களாய், இவருடைய மனம் நிலை கலங்குதற் குரிய காரியங்களைச் செய்ய நினைத்து, ஒருகாள் இவர் தமது திரு மாளிகையில் மனைவி மக்கள் முதலானோரோடு கண் ணுறங்கும் போது, அந்தத் திருமாளிகையில் தீமூட்டி விட்டார்கள். அந்தத் தீயானது வீடு முழுதும் எரிக்க, படுத்துக் கண்ணுறங்கின தாசர் கண் விழித்துப் பார்த்து, அந்தத் தீயை யவிப்பதற்கு ஒரு உபாயமும் தோன்றுமல், பண்டரிநாத னைத் தோத்திரம் செய்தார். இப்படித தோத்திரம் செய்கிற ஜகமித்திரரு டைய தன்பத்தைத் தணிக்கும பொருட்டு, பகவானவர், திரு வாழியை யேந்திவந்து உறங்குகிறவர் மீதைத் தீ வருதாமல் மூன்னேசக்கரத்தால் தடுத் தக் காத்தருளினர். அன்று இராக்காலத்தில் தீயானதுகொழுந்துவிட்டெரிவ தனால் அந்த வெளிச்சத்தை ஊராரெல்லாருங்கண்டு எழுந்து அவ்விடத்திற்கு வந்தார்கள். வந்து ஜகமித்திரர் குடும்பமுழுதும நெருப்புக்கு இரையாயிற்றே யென்று ஒருவரோடொருவர்சொல்லிக்கொண்டு துக்கித்திருக்க சூரியோதய மாகி, தீயும் தணிந்து, வீட்டுக்குள்ளே தூங்கிக்கொண்டிருந்த குடும்பமும் விழித்து, திருப்பாற்கடலில் அறிதுயிலமர்ந்த ஸ்ரீஹரியின் திருநாமஸங்கீர்த் தநம்செய்து கொண்டிருக்க, ஊரிலுள்ளவர் யாவரும் வந்து, இந்தக் குடும்ப முழுதும் தீயிலகப்பட்டும் வெந்துபோகாமலிருப்பதைக்கண்டு, இப்படியிவர் கள் இந்தப் பெரு நெருப்பில் வேகாதிருப்பதை நோக்குமிடத்தில், அன்று அரக்கு மாளிகையில் தீப்பட்டபோது பாண்டவர் இறவாமல் காத்தருளின ஸ்ரீகண்ணபிரானே இன்று இவர்களைக் காத்தருளினர் என்று தெளித்து, வண ங்கி, பிறகு எல்லாரும்கூடி, இவருடைய பெருமைக்கு என்ன எல்லைகூற க்கலாம. இவர் குடும்பத்தை நாம் காப்பாற்றுவதே நமக்கு நன்மையாகும் என்று நினைத்தவனுகிய வைத்தியநாதனிடத்தில் பலரும் வந்துசேர்ந்து, இவ

தது குடும்பப்பாதுகாப்பின்பொருட்டுச்சிறிதுநிலக்தருவோமென்று சொல்லி யாவரும் ஒருங்கு கூடி, தாசர் திருமாளிகையை யடைக்து, இக்தச் செய்தி யைச் சொல்லக்கேட்ட தாசர், இக்தஉலகங்களெல்லாவற்றையும் தன்குடும்ப மாகப்பெற்றவனுகிய பகவான் ஒருவ னிருக்கும்போதுஎனக்கு ஒருகுறையு மில்லையென்று சொல்லி: யாதொருபக்த மில்லாத என்னேப் பக்தத்தில அகப் படித்தும் பொருட்டு, நீங்கள் சொல்லுகின்றீர்கள் என்று சொல்ல, அவர்க ளெல்லாரும் கல்லது கல்லது என்று, பலாத்காரித்து, அவர் பேரால் ஒரு ஹுரையெழுதிக் கொடுத்தார்கள். தாங்களே அக்த நிலத்தினில் பயிர் செய்து கொடுக்கவும் இசைக்தார்கள்; அப்படியே சிலகாலங்கழிக்த பிறகு, அரசனுல் ஒரு துருக்கன் அவ்விடத்துக்கு வக்து அதிகாரியாய் நியமிக்கப்பட்டான். அப்படி நியமிக்கப்பட்டவன் வக்து எல்லாவற்றையும் விசாரித்து, வயித்திய நாதனுடைய சொக்த நிலமானது, ஊரிலுள்ள ஜக மித்திரருக்கு எவ்வாறு சொக்தமாயிற்று என்று,அரசனுக்கிசையும்படி சொல்ல, அவனும் முன்னே தக்தவரை யெல்லாம் தடிக்க, அவர்க ளெல்லாரும் முற் காலத்தில் நாங்கள் ஜகமித்திரர் என்னும் தபோதகர்க்குக் கொடுத்த தர்ம நிலத்தைத் தடுத்து, அரசனுக்கு உரியதாக்குதல் பொருத்த மல்லவென்று சொல்ல, அவ்வரசன் அடங்காமல் உலோபகுணத்தையே மேற்கொண்டிருந்தான். பின்னும் அக்த ஜகமித்திரர் பெருமையைக்கேட்டு வந்து அவர் வீட்டைச் சோதிக்கத்தொட ங்கி, அவரை நோக்க, நீர் ஜகமித்திரராஞல், இவ்வுலகத்தில் உமக்குப் பகை யானவர் ஒருவருமில்லையோ? அப்படி இவ்வுலகத்தார் பகை யில்லையானுல் என் மகளுக்கு மணம் நேரிட்டது; அதற்கேதுக, பரிசுத்தமான தேவபூஜை செய்யவேண்டும்; அதற்கு ஒரு புலி வேண்டும்; அதனே நீர் சேகரித்தருளு வீராக என்று ப்ரார்த்திக்க, அப்படியே யாகட்டுமென்று தாசருமெழுக்து, காட்டுக்குப்போய், ஒரு இடத்திலிருந்துகொண்டு, பண்டரிநாதனே கினைத்து அவரதுதிருநாமங்கள் பலவற்றையும் உச்சரித்து, பகவானே நீர் இன்றுபுலி யுருவங்கொண்டு எழுக்தருளவேண்டுமென்றுவேண்டிக்கொள்ள, அப்படியே பண்டரிநாதரும் புலியுருவாயெழுக்தருளி, தாசரே! உமக்கு என்ன நிமை நேரிட்டது சொல்லுவீராஞல், அகதத் நீமை செய்தவனேக்கொன்று புசித்து விடுவேனென்று சொல்ல, ஜகமித்திரர், நல்ல புலியுருவாய்வருகிற என் தலை வனே! உன்னையல்லாமல் எனக்கு வேறொரு ஆதரவுண்டோ என்று இவ் வாறு பலவிதமாகத் தோத்திரம்பண்ணி, ஓ பத்மநாபா! எம்மூரில் ஒரு அதி காரி, தன்மகளுடைய விவாஹத்துக்கு அதுகூலமாக, தேவதாபூஜைக்கு ஒரு புலி வேண்டியதாயிருக்கின்றது; தவருமல் அதைக்கொண்டு வாரும் என்ன னைக்கு நியமித்தான். ஆதலால் இந்தக் காட்டில்வந் திருந்துகொண்டு தேவ நீரை யழைத்தேன். நீர் அன்போடு வரவேண்டுமென்று சொல்லிப் புலியுரு வான அந்தக் கண்ணபிரானது கழுத்தில் தமது உத்தரியத்தை முறுக்கிக் கட்டி இழுத்துக்கொண்டு தாம் இருக்கும் ஊர்க்குள் பிரவேசித்தார். இவர் புலியைக் கைக்கொண்டு வருவதைக்கண்ட யாவரும்எதிரேநிற்கப்பயந்து ஓடி

இவரை ஊர்க்குள் வரவொட்டாமல், அரண்மனை வாசற்கதவை அடைத்தார்கள். அப்போதுஜகமித்திரருக்குச் சினேகராய் இருப்பவராகிய பலரும் உயர்ந்த மரங்களின்மேலேறிப் பார்த்து, தாமரைக் கண்ணனுகியபகவானுக்கு தாசராயுள்ளவரே! நீர் புலியைக்கொண்டு இங்குள்ளவரையெல்லாங் கொலைசெய்ய வோ வருகிறீர் என்று கேட்டார்கள். அதற்குத் தாசரானவர் அவர்களை நோக்கி, நீங்கள் அஞ்சவேண்டாம்; இது புலியல்ல. பாண்டுரங்கப்பெருமானே இவ்வாறு புலி யுருக்கொண்டு எழுந்தருளினர். இவ்வூர் அதிகாரியை மெய்ப்பிக்கவேண்டி இங்குவந்தேன் என்று சொல்ல, அதைக் கேட்டவர்கள் போய், விஷம்போன்ற கொடுமையையுடைய துருக்கனுக்கு இந்தச் செய்தியைச் சொன்னார்கள். கேட்ட அந்தத் துருக்கன், நடுங்கித் தன் வீட்டுக் கதவை மூடிக்கொள்ள, புலியைக்கொண்டுவந்ததாசர், மதிற்கதவடைத்திருப்பதை நோக்கி மயங்கி நிற்க, புலி வடிவாய் வந்த பகவானுனவர், தமது கையால் அந்தக் கதவை யறைந்து வழி யுண்டாக்கிக் கொடுக்க, அவ்வழியாகத் தாசர், உள்ளே நுழைந்து, அந்தத் துஷ்டன் வாழ்கின்ற வீட்டு வாசல் முன்னே நின்று நோக்கி, அந்த வீட்டுக் கதவும் மூடப்பட்டிருப்பதைப் பார்த்து, இதென்ன விபரீதம் என்று ஆலோசித்து, பல் லினைகளே! நீ முன்னே சொன்னபடிக்குப் புலியைக்கொண்டுவந்தேன் என்று சொல்லுமுன்னே, அப்புலியானதுஉறுமிக்கொண்டுவாலிலடித்திலையறைந்து ஓரவாரஞ்செய்ய, இத்தச்சத்தத்தைத் துருக்கன் கேட்டுப் பயந்து, பெண்டுபிள்ளைகளைத் தழுவிக்கொண்டு அழத் தொடங்கினன். அப்போது அவன் மனைவியானவள், அவனை நோக்கி, என் பிராணநாதா! நீ மிகவும் வயது சென்றவனுகையால் உன் மரணத்துக்குத்துக்கிப்பவர் இங்கே ஒருவரு மில்லை; ஆதலால் நீ வெளிப்பட்டு அத்தப்புலிக்கு இரையாய்விடுவையானுல் நாங்களெல்லாரும் பிழைப்போம் என்று சொல்ல, அந்தப் புலிக்குப்பயந்து ஒளித்துக்கொண்டதுஷ்டனுகிய அந்தத்துருக்கன் அதற்கு மூடனபடாமல் அழுதுகொண்டிருக்க, இவன் அழுகிற ஓலையை அவ்வூரிலுள்ளார்கேட்டு மனங்கனித்துலகக்கத் துருக்கன்மனைகலங்கி, தாசரே! என்னை இந்த ஆபத்தில் நின்றும் நீக்கி ரக்ஷித்தருளவேண்டும், நீர் ஜகமித்திரர் என்பதை நான் அவிவேகத்தால் அறியாதவனுகி இப்படிப்பட்ட அபராதத்தைச்செய்தேன், க்ஷமித்தருளவேண்டுமென்று ஸ்தோத்திரம் பண்ணி, கைகுவித்து அஞ்சலிசெய்து நிற்க, ஜகமித்திரரானவர், அவன்மீது அருள்சுரந்து, ஒப்பற்றதாகிய அந்தப் புலியைக்கொண்டு ஊரைக் கடந்து செலுத்துகாட்டிப்பிரவேசித்துஒருதனியிடத்தை யடைந்தவுடனே, ஸ்ரீகண்ணபிரான் காஞ்சி திருத்தலங்களோடு திருவருவுங்கொண்டு பிரத்தியக்ஷமாக ஜகமித்திரரானவர், அந்த பகவானுடைய பொன் னடியை வணங்குதலும், தேன் துளிக்கின்ற திருத்துழாய்மாலையணிந்தஸ்ரீகண்ணபிரான் இவ்வரத் தழுவிக்கொண்டு பரிபூரண கடாக்ஷம் பெற்றருளினன் என்று சிவபெருமான் உமாதேவியாருக்குச் சொல்லி, மேலே ஸ்ரீகாசபமாகாத்மியவைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

ஜகமித்திரர் சரித்திரம் முற்றிற்று.

# கூடவது ஜோகாபரமாநந்தர் சரித்திரம்.

சர்வாலங்காரங்களும் அமைந்த பாரசி என்னும் ஊரில் அவதரித்த ஜோகாபரமாநந்தர் என்கிற திருநாம முள்ளவர் ஒருவர் இருந்தார். அவர் பரம பாகவதரும், சிறிதுநேரமுமசோர்வில்லாமல் ஸ்ரீஹரிகாமலங்கீர்த்தநஞ்செய்பவரும், ராம நாமாம்ருத பாநம் செய்கின்ற திருநாவை யுடையவரும், சுத்த மற்றசற்குணங்களை யுடையவருமாய், யாசகஞ்செய்து தமதுகுடும்பபரிபாலநம் செய்துகொண்டு, எங்காலும் ஸ்ரீஹரியின் திருவடிகளுக்கு ஷோடசோபசாரங்களும் செய்து, முறைமையாய்ப் பூஜிக்கவேண்டிய நெறியாடு பூஜித்து அதன்பிறகு, எழுநூறு நமஸ்காரம செய்து, ஸ்ரீகண்ணபிரான் திருவாய்மலர்ந்தருளின ஸ்ரீபகவத்கீதையின் ஒரு சுலோகத்தை பாராயணஞ்செய்து அதன்பின்பு வந்து அமுது செய்வார். இப்படியே இவர் நாள்தோறும் செய்துவருவது வழக்கமாயிருந்தது. இப்படிச் செய்து வருவதில் எதாகிலும் பிசகு நேரிட்டால் அந்தத் தின முழுதும உபவாசமாயிருந்துவிடுவார். இவரைப் பார்த்து அருகே குடியிருப்பவர் இரக்க மடைவார்கள். இப்படியிருக்குங் காலத்தில், ஒருநாள் மழைபெய்து இவர் வாசல் முழுதும சேறுகிக்குழம்பாயிருக்க, இவர் தமது வழக்கம்போலத் தாம நமஸ்கரிக்கும் கொள்கையில் தவறுதவராய், சக்ரபாணியாகிய பகவானைத்தம மனத்திலிருத்திக்கொண்டு நின்றனர். இவ்வாறு ஸ்ரீ ஹரிபாததாசராகிய ஜோகாபரமாநந்தர் செய்யும்செயல்களெல்லாவற்றையும் அக்குடியானவர் அறிகிறது, ஸ்ரீலக்ஷ்மீ நாதனே இவர் என்று மதித்து, அவர்க ளுள் ஒருவன் விரைந்து கூடை மிதிக்குபோய், ஒரு பொன்னுடையை வாங்கிவந்து தாசர்கண்ணுக்கு நேராக்கும்படிகாட்டி, நீர் இதைப் பொன்னுடையைக் கைக்கொள்ளவேண்டுமாக எனறு பிரார்த்தித்தான். இந்தப் பகவத்தாசரானவர், அத்தப் பொன்னுடையை விரும்பாதவராகி, இது அதிக விலையுள்ளது, வேறே பழைதாகிய துணியிருந்தால் எனக்குக் கொடும் என்று சொல்ல, அவன் மிகவும் ஆச்சரியமும் இவர்மீது நம்பிக்கொண்டவனாய், இவரது அரையில் அந்தப் பொன்னுடையை அழகாக உடுத்திவிட்டுப் போயினன். அப்படால் மேகவண்ணனாகிய பகவானது இரண்டு திருவடிகளையும் எக்காலத்தும் மறவாதவராகிய தாசரானவர், தாம் தரித்தும கொளாமல் தமது அரையில் பொன்னுடையை உடுத்திவிட்டுப் போனவனது நற்குணத்தை நினைந்து, அந்த ஆடையை மிகவும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றி, அதில் சேறுபட்டால் பழுதாகுமென்று நீழேதாங்காமல் அரையில் உடுத்திக்கொண்டு, ஸ்ரீகண்ணபிரானைத் தேகாபிமானத்தைவிடமு முன்புவணங்குவதுபோல வணங்காமல் ஆடைமேல் மிகுதியாகிய அபிமானம்வைத்து நமஸ்கரித்தலால் சூரியாஸ்தமனம் ஆகியும எழுநூறு நமஸ்காரங்கள் முடியாமையால் மனத்தில் வருத்தமடைந்துபகவானைப் பூஜிக்குங்காலம் அதிகரித்ததற்குக்காரணம் இந்த ஆடையல்லவோவென்று மனத்தில் ஆலோசித்து, இந்த அநர்த்த ஹேது

வான அபராதம் நீங்குவதற்கு நித்தச் சரீரத்தை வாளினுல் பிளப்போமா, அன்றித் தீயில் அமிழ்த்தி விடுவோமா என்று பலவாறு நினைந்து அழுது செய்யாமல் தமது மணையைவிட்டு நீங்கி, மனத்துக்கிசைந்த வேறோரிடத் திற்போய்த் தங்கியிருக்குமபோது, அவ் வழியாக ஒரு உழவன் பொரிதாகிய ஒரு நுகத்தடியைக் கைக்கொண்டு இரண்டு காளைகளையும் ஓட்டிக்கொண்டு போனான். அப்படி நிலத்தை உழுதற்பொருட்டுக் காளைகளை ஓட்டிக்கொண்டு போகிற உழவனைத் தாசராணவர் பார்த்து, துன்பத்தோடு, ஓ உழவனே! உன் னுடைய இரண்டு காளைகளையும் எனக்குக் கொடுத்து அவற்றிற்கு உரிய விலைபொருளாக இதபர பரிதாபபரத்தை நீ கைக்கொண்டுபோ என்றார். அதைக் கேட்ட வுடனே அவ்வுழவன் மன மகிழ்ந்து, மாடுக ளிரண்டையும் கொடுத்தான். அப்படிக் கொடுத்தவுடனே தாசராணவர் அவ்வுழவனைநோக்கி, என் கால்களிரண்டையும் கயிற்றால் கட்டி நுகத்தில் எர்க்காலுக்கு நிகராக அதிக கயிறுகளைச் சுற்றிக்கட்டி, மாடுகளை ஓட்டிக்கொண்டு போவாயாக என்று சொன்னார். அது கேட்ட உழவன் இது செய்தற்கரிய செய்கையா யிருக்கிறதே யென்று அரிய தவஞானத்தால் இவர் தக்க பொன்னுடையைக் கைக்கொண்டு, இவர்சொன்னபடியேசெய்ய, அவ்வெருதுகளிரண்டும்நிழுத்துக்கொண்டு போகிற வழியில் உள்ள கல்லும் முள்ளுமாயுட்பி, உடம்பிலுள்ள சதை முழுதும் தெய்ந்து ரம்பும் எலுமபும வெளிபபட்டுத் தோன்றச் சரீர முழுதும உதிரம பெருகிவழிய, தாசராணவர் இன்னுகரம் செய்த பெரிய அப சாரம் நீருமபடி கோரிட்டது என்று, தமக்கு நேர்ந்த துன்பத்தை எள்ளளவும் மனத்திற்கொள்ளாமலும் ஸ்ரீ ஹரிகாம ஸ்மரணையை மறவாமலும் இருந்து கொண்டு மிருதியாய் நிலத்தில் தேய்க்கப்பட்டு உயிர் நீங்கும்படியான நிலை யையடைந்தார். அப்போது கணநேரதாழ்வுமுடைய மிக்க துன்பத்தை நீக்கி யருளின கருணைக் கடலாகிய ஸ்ரீபகவான், விரைவாக ஓடிவந்து, எருதுகளை நிறுத்தி, கட்டுகளை யவிழ்த்துவிட்டு, தாசருடைய சரீரமுழுதும் தமது திருக் கரத்தால் நீண்டித்தடவுதலும், தாசராணவர் தூப மெல்லாக நீர்ந்து சரீரம் முன்போலத் தேஜோமயமாய்ப் பிரகாசிக்க நின்றார். அப்படி நின்றவரைப் பகவானுணவர் கடாக்ஷித்து, போரறிவையுடைய தாசரே! உம்மிடத்தில் சிறி தகும் குற்றம் இலலாமலிருக்க உமது சரீரத்தை இப்படி என் வருத்தினீர், என் னடியார்கள் உண்பதே எனக்குக் கொடுக்கப்படுகிற கல்ல அவியுணவா கும், அவர்கள் பேசும் பேச்செல்லாம் எனது ஸ்தோத்திரங்களேயாகும், அவர் கள்செய்யும் கைத்தொழில்களெல்லாம் சிருஷ்டித்தலேயாகும், அவர்கள் கட பப்பதெல்லாம் என்னை வலம்வருவதேயாகும, அவர்கள் படுத்துறங்குவதெல் லாம் என்னை அன்போடு வணங்குதலேயாகும, அவர்கள் களிபபடைவது எனது இன்ப வருவாகும, இப்படி அவர்கள் சமபந்தமானவை யெல்லாவற் றையும் போக்கியமாகக்கொண்டு மகிழ்ந்திருப்பவனுதலால் அவ்வடியார்க ருள்ஒருவராகிய உம்மை நான் நோக்கிநிற்க,நீர் என் இப்படிச்செய்தீர்என்று இவ்வாறு அன்புருவமாய் எதிரே நிற்கிற பாண்டி ரங்கப்பெருமானை நிஜ

ரூபத்தைத் தாசரானவர் கண்டு, அவரது திருவடியில் வீழ்ந்தும், பலவாறு ஸ்தோத்திரம்பண்ணியும், ஒப்பற்ற கருணைக்கடலே இன்று அடியேனுக்குக் கிருபை செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தவுடனே, சார்ங்கபாணியான பகவான் அப்படியே அருள் செய்து, தமது திருக்கோயிலை யடைந்து, தாசர் செய்த செய்கையைத் தமது அன்பரெல்லாருக்கும் சொல்லக் கேட்டுகின்ற ஞானதேவர், பகவானை நோக்கி, ஸ்வாமீ! உமது அடியார்கள் செய்கை எக்காலத்தும் யாவராலும் சொல்லுதற்கு எளிதாகுமோ என்று புகழ்ந்து நின்றார் என்று சிவபெருமான் உமாதேவியாருக்குச் சொல்லி, மேலே நரஹரி பக்தர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

ஜோகாபாமாநந்தர் சரித்திரம் முற்றிற்று.

---

## கஉ-வது நரஹரிபக்தர் சரித்திரம்.

பரம்பொருளாகியதிருமால் நித்திய வாசம்பண்ணுகிற பண்டரிபுரத்தில் அவதரித்து, நரஹரியென்னும் பெயர்பூண்ட பொற்கொல்லர் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானுகிய மல்லிகார்ஜுநனை அன்பின் மிகுதியால் என்றும் மறவாமல் பூஜைசெய்து ஒழுகுவார். இவர் குடக்கூத்தனுகிய ஸ்ரீகண்ணபிரானது திருக்கோயிலுக்குச் சமீபமாயிருந்தாலும் அவ்வழியாக நடந்தாலும் சர்ப்பசயனனுகிய பகவானைக் கண்ணெடுத்துப் பாராமல் அடத்துடன் வாழ்ந்துவரும் காளிலே மிருந்தபொருளுடையவனுகிய ஒருவணிகன், தேவர்களெல்லாருக்கும் ஒரு கிட்சேபம்போல விளங்குகின்றவனும் திருத்துழாய் மாலையையணிந்தவனுமாகிய ஸ்ரீமந் நாராயணனது திருக்கோயிலில் வந்து தோத்திரஞ்செய்து, லோகநாதனே! அடியேனுக்கு ஒரு சற்புத்திரனைக் கிருபை செய்தருளவேண்டு மென்று சொல்லி, வணங்கித் தன்மனைக்குப் போயினன். போனபிறகு, சிலநாள்கழிய ஸ்ரீலக்ஷ்மீநாயகனை பகவானது கிருபாவிசேஷத்தால் ஒரு புதல்வன் தோன்றினன். அவனது பெளத்கரிய விசேஷத்தைக்கண்டு, அவ்வணிகன், திருமறுமார்பனுகிய ஸ்ரீகண்ணபிரானது கிருபையை மிகவும் வியந்து கொண்டாடி, பெருங்களிப்போடு அத்தக்கண்ணபிரானுக்கு நவரத்தினங்களிழைத்த அரைஞாண் ஒன்றுசெய்து சாத்தவேண்டுமென்கிற ஆசையுடன் கோயிலைச் சேர்ந்து எம்பெருமானைத் தொழுது, தோத்திரஞ் செய்து நின்று, அங்குள்ள அர்ச்சகரை நோக்கி, இவ்வூரில் நற்குணமுள்ளவனும் பொன்னரைஞாண் செய்யத் தகுந்தவனும் ஆகிய ஒருபொற்கொல்லன் இருந்தால் அவன் இன்னனென்றும், இன்ன இடத்தில் விருக்கிறனென்றும் எனக்குத் தெரிவிப்பீர்களானால், அவனைக்கொண்டு நவரத்தின கசிதமாகிய ஒரு பொன்னரைஞாண்செய்து இத்தக்கண்ணபிரானுக்குச் சமர்ப்பிக்கிறேன் என்று கேட்க, அவர்கள் இத்தக் கோயிலின் அருகே எல்லாரும் மெச்சத்

தகுந்த சமர்த்தனுகிய ஒரு பொற்கொல்லன் இருக்கிறான், நாம் விரும்பின படியே செய்வதற்கு அவனைப்போல வேறொருவருமில்லை என்று சொல்லக் கேட்ட வணிகன், அந்தக் கமலியனைக்கண்டு, லக்ஷ்மீகாதனுக்குரமணீயமான ரத்நகடி சூத்திரம் ஒன்று செய்து தரல் வேண்டுமெ என்று சொல்லுதலும், அக்கமலியன், அதைப் பகவானுடைய திருவரையின் அளவினை அறிக்துவந்து சொல்லும என்றான். வணிகன் அப்படியே அளவெடுத்துத் தர, கமலியன் வணிகன் விரும்பினபடியே கண்டோர்அதிசயிக்கும்படியான விசித்திரமான வேலைப்பாடமைந்த ரவரத்ந மயமான பொன் னரைஞாண் செய்துகொடுத் தான். வணிகன் அதனைவாங்கிக்கொண்டுவந்து, எம்பெருமானை அர்ச்சித்துத் தோத்திரமபண்ணி வணங்கித் திருவரையில் சமர்ப்பிக்க, அது எமபெருமா னது திருவரைக்குச் சிறிது பற்றாம விருக்கக்கண்டு, கமலிய னிடத்திற்குக் கொண்டுபோய், அவன மனமகிழுமபடி நின்சொற் சொல்லிச் சரிப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்றுவேண்ட, அவன் அப்படியேசரிப்படுத்தித்தந்தான். அதனைக் கொண்டுவந்து பெருமானுக்குச் சமர்ப்பிக்க, அது அதிக நீளமா யிருந்ததனால்மணிம்பம்பிக்குக்கொண்டுகம்பியனிடத்துக்குப்போய், இந்தச் செய்தியைச் சொல்ல, அவன் அதைச் சிறிது சுருக்கித்துக் கொடுக்க, வாங்கி வந்து சமர்ப்பித்தபோதும் பற்றாதிருப்பதைக் கண்டு, அழுதுகொண்டே மீண்டு, நீட்டினால் சுருக்கவதும் குறைத்தால் நீளுவதுமாயிருக்கிற இந்த அதிசயத் தை நோக்கி, நான் எவ்வளவோ போன்போடு மிருதியாகிய பொருள் செலவு செய்து சமர்த்தனுகிய கமலியனைக்கொண்டு செய்வித்தும, இவ் வரைஞாண் ஸ்ரீகண்ணபிரானுக்குச் சாத்தத் தகாததாய்ப்போவது என்னகாரணத்தினலே யோ! பகவானுக்கு இதனிடத்தில் விருப்பமில்லையோ! அடியேனிடத்தில் ஏதேனும் அபராதம் நிகழ்ந்ததுண்டோ! அறிந்திலேன் என்று மனம்வருந்தி மீளவும் வந்து கமலியனைப் பிரார்த்தித்து, நீயே அத்திருவரையின் அளவெடு த்துவந்து செய்வாயாஞல் சரியாகமுடியும் என்றுசொல்ல, அக்கமலியன், நீண்ட ஜடாபாரத்தையுடைய நிர்மலராகியசிவபெருமான் சகஸ்ரநிகேயன்றி சேஷசாயியாகிய ஸ்ரீவிஷ்ணுமூர்த்தியின் சகஸ்ரநிக்கு நான் வரமாட்டேன் என்று சொல்லினன். சொன்னவுடன், வணிகன் மிகுந்த துன்பத்தையடை ந்து, கமலியனை நோக்கி, ஐயா! நீ தயைசெய்து என்னுசையை நிறைவேற்ற வேண்டும,நிறைவேற்றினல் உனக்குப பெருமபுண்ணியமுண்டு என்று வாழ் த்தி வாவென்றழைத்துக்கொண்டு கோயிலையடைந்தனன். அடைதலும், வந்த கமலியன், தன் கண்கள் மறையும்படி வஸ்திரத்தால் கட்டிக்கொண்டு அளவு பார்க்கத் தொடங்க,முன்னிற்பவனுகியவணிகன், அவனது கையைப் பிடித்து த் திருவரையைத் தீண்டுதலும், அங்கிருந்த பார்த்தவர்களாகிய அர்ச்சகர் முதலாயினோர், எல்லாப்பொருள்களிலும் சிறந்த பரஞ்சோதி சொரூபமாகிய பகவானே உற்று நோக்குதற்கு ஆயிரங்கண்கள் வேண்டுமென்று நாங்கள் விரு மபுகிறோம். அப்படி யிருக்க, இக்கமலியன், தனது இரண்டு கண்களையும் மூடிக் கட்டிக்கொண்டு வந்தது யாது காரணமோ என்று கோபித்து, கண்க

ளில் நெருப்புப் பொறிசிதறநின்று, சாஸ்வதமாகிய பரமபதப்பிரதாநம் செய்கிற கற்பகத் தருவென்று சொல்லும்படி எழுந்தருளி யிருக்கிற ஸ்ரீ கண்ண பிரானது கட்டழகு இவன் கட்புலத்தால் தரிசிக்கத் தகாததே யாதலாலும் அவரது ஜ்ஞாநாநந்தமயமாகிய ஸ்வரூபம் கட்புலனுல் அறியப்படாததேயாதலாலும் நாம் பலபல வார்த்தைகளைச் சொல்லி என்ன பிரயோசநம் என்று கம்மியனை வைதுகொண்டிருந்தார்கள். அப்போது கம்மியன்வந்து நிர்மலராகிய பகவானுடைய திருமேனியைத் தீண்டுதலும், புலித்தோலும், யானைத் தோலும், நீண்டசடையும், நெருப்புருவமாகிய நெற்றிக்கண்ணும், மழுவும், துடியும், மானும் விளங்கித்தோன்ற, இவன் தனுக்கென்றஞ்சி, கண்களைத் திறந்து பார்த்து, தனக்கு எதிரே காணப்படுகிற திருத்துழாய் மாலையையும், திருவரையில் வைத்த திருக்கைகளையும், செங்கல்லின்மீது அமர்ந்து விளங்குகின்ற திருவடிகளையும், நீலமணிபோலும் திருநிறத்தையுடைய திருமாலின் உருவத்தையும் கண்டான். கண்டவுடனே முன்போலவே கண்களைமூடினான். அப்போது தீண்டின இவனது கைகளுக்கு அந்தச் சிவபெருமானது அவயவங்களாகவே காணப்பட, மறுபடியும் தன் கண்களைத் திறந்து, மாகதமலையை நிகர்த்த பசும்பொன்மயமான சோதி சொரூபனுகிய பகவானைக் கண்டு இதென்ன அதிசயம்! கண்களை மூடினால் சிவரூபமாயும், திறந்தால் விஷ்ணுரூபமாயும் காணப்படுகின்றதே என்று மிகவும் மயக்க மடைந்து, எதிர்நிற்க அஞ்சி, தன்து இரண்டு கண்களிலும ஆநந்தக் கண்ணீர் ததும்ப நோக்கி, திருத்துழாய் மணங் கமழ்கின்ற திருவடிகளை வணங்கி, அநேகவிதமாய் மனவுருக்கத்தோடு தோத்திரஞ்செய்து, சிவபெருமான் உன்னைவிட வேறுனவனென்று நான் நினைத்திருந்த நினைப்பானது பொய்யாகி, நீயே அவனுகவும் அவனே நீயாகவும் பிரத்தியக்ஷமாகக் காணப்பட்டதனுல் என் மனத்தில் நிலை பெற்றிருந்த சந்தேகமுழுதும் இன்று நீங்கிவிட்டது; ஆதலால், அவனே நீ, நீயே அவன் என்பதற்குச் சந்தேகமில்லை. ஸ்ரீமகாலக்ஷ்மியைத் திருமார்பிலேயுடைய பகவானே, சிவரூபம என்னுள்ளே அடங்கச் செய்வாயாஞல் இத்தப்புவநங்களெல்லாவற்றையும் உனது திருநாபீகமலமானதுதந்ததென்பதற்குச் சந்தேகமே யில்லை யென்று சொல்லித் தாழ்ந்து வணங்கினான். அப்போது பகவானுனவர் அவன் முகத்தை நோக்கி, ஓ அன்பனே! சிவபெருமான் என்னைவிடவேறுனவனென்று நீஎண்ணவேண்டாம், உன்னுல் தொழப்படுவோனுகிய சதாசிவமூர்த்தி என்னிடத்தில் காணப்படுவான், அவனை நீ கண்டு வணங்குவாயாக என்று சொல்ல, அப்படியே கம்மியன் உற்றுப் பார்த்துக் கண்ணபிரானது சிரத்தின்மீது சிவசிந்நங்கள் விளங்கக் கண்டு, பூமியின்மேல் விழுந்து வணங்கி, க்ஷீராப்திநாதனுகிய அந்தப் பகவானுடைய திருவடியை அன்று முதல் விடாமல் ஆசிரயித்து, உலையில் வைத்தருக்கப்பட்ட பொன்போல மனமுருகி, பகவத் விஷயத்தில் பற்றுள்ளவனுய் இருந்தான். அப்படியிருக்தவனை நோக்கி, குற்றமற்ற தபோராதநபராகிய காமதேவர், அந்தத் தபோடு பூமண்டலத்தை உண்ணக் கடவையென்று நியமிக்க, அவன், கற்றையாகிய

ஜடாபாரத்தையும் நெற்றிக்கண்ணையு முடைய சிவபெருமானேடும் வந்து அடியார்களோடு கூடியிருந்து அழுதசெய்த பிறகு, சக்திர சேகரராகிய சிவபெருமான், பொற்கொல்லனே நோக்கி, நீ பதுமகாபனுகிய பகவானுடைய தாசர்களோடு கூடி வாழ்வதே எனக்கு இஷ்டம் என்று சொல்லக் கேட்ட அந்தக் கம்மியனும், சிவபெருமானே நோக்கி, இன்றுதொட்டு உன் இஷ்டம் போலவே அடியேன் நடந்துகொள்வேன் என்றுசொல்லக் கேட்ட சிவபெருமானும், மற்றஅடியார்களும் ஓ நரஹரிதாசரே! நீர் நீடிழியாய் வாழக்கடவீ ரென்று சொல்லித் தத்தம் இடங்களுக்குப் போய்விட்டார்கள் என்று சிவபெருமான் ஸ்ரீபார்வதி தேவியார்க்குச் சொல்லி, மேலே, ஜநாபாயி வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

நரஹரிபக்தர் சரித்திரம் முற்றிற்று.

## நச-வது ஜநாபாயி சரித்திரம்.

முன்னொருகாலத்தில், உலகத்திலுள்ள எல்லாரும் நினைத்துப் புகழும் படியான பெருமைபொருந்திய ஸ்ரீபண்டரிபுரத்தில், கார்த்திகை மாசம் ஏகாதசி திதியில், யாத்திரைக்காரர் பலரும் வந்து சேர்ந்தார்கள். அதில் ஒரு கன்னிகையானவள், தன்னைப் பெற்ற தாய்தகப்பனையோடு வந்து, ஸ்ரீபண்டரிநாதனைச் சேவித்து, அப்பண்டரியின் மகிமையைப் புகழ்ந்து உரைத்து மனமகிழ்ந்து, தகப்பனையை நோக்கி, நான் இவ்விடத்தில் நிரந்தரவாசம் செய்ய விரும்பினேன், உங்களிடத்தில் விருப்பமில்லேன், ஆதலால், உங்களோடு வரமாட்டேன் என்றுசொன்னள். அதை அந்தத் தாய்தகப்பனையர் கேட்டு, இவருக்கு இந்தச் சிறுவயதில் ஸ்ரீஹரிபக்தி யுண்டானது எப்படி யென்று அதிசயித்து, இந்தக் கன்னிகையைத் தனியே விட்டுப் போவதற்குச் சம்மதமில்லாமல், மனவருத்தத்தோடு, மீண்டும் இவளைப் பலவிதமான இனிய சொற்களைச் சொல்லி அழைத்தும், அதற்கு உடன்படாமல் ஸ்ரீ ஹரியின் சரணரவிந்த மதுவைப் பருகி மகிழ்ந்து களித்து நிச்சலமாய் இருப்பதை நன்குணர்ந்து, அந்தக் கன்னிகையைத் திருமகள் கேள்வனுகிய ஸ்ரீபண்டரிநாதன் சந்நிதியில் விட்டுத் தமது ஊரை யடைந்தார்கள். பின்பு ஒருநாள், நாமதேவர், திரிவிக்கிரமனுகிய அந்தப் பகவானைச் சேவிப்பதற்குச் சந்நிதியை யடைந்து அவ்விடத்தில் உலாவிக்கொண்டிருந்த இக்கன்னிகையைக்கண்டு, அவள்மீது மிகுந்த கருணையுடையராய், அவளை நோக்கி, குழந்தாய்! தாய் தந்தையரை விட்டு நீ தனியாய் வந்திருக்கின்றனையே; நீ யார்? உன்பெயர் யாது? எனக்குத் தெரியச்சொல்லவேண்டும் என்று கேட்க, அந்தக்கன்னிகை, நாமதேவரை நோக்கி, என் பெயர் ஜநாபாயி, கருங் கடல் வண்ணனுகிய கண்ணபிரானே எனக்குத் தந்தை, அவன் தேவியாராகிய ரகுமாயியே எனக்குத் தாய், இந்தத் தாய் தந்தையரையன்றி எனக்கு வேறொரு தாய் தந்தையர் இல்லை. ஆத

லால், இவ்விடத்தில் இருக்கிறேன் என்று சொல்லக் கேட்ட காம தேவர் தமது இருதயத்தில் மிகவும் அன்புடையவராய் இருதக் கன்னிகையை யழைத்துக்கொண்டு தமது திரு மாளிகைக்குப் போய், குணியியை நோக்கி, இச் சிறுமியின் வரலாறு முழுதும் அறிவித்து, இவள் ஸ்ரீ கண்ணபிரானுடைய தாசியாகிய ஒருகூனி, இவள் இக்கலியுகத்தில் அவதரித்து, பண்டரிபுரத்தில் எழுந்தருளியிருக்கிற கருணாரூபியாகிய ஸ்ரீபகவானுடைய திருநாமஸங்கீர்த்தநத்தால் மகிழ்கின்ற மனத்தையுடையவள் என்று சொல்லுதலும், அதைக் கேட்ட குணியியானவள், இச்சிறுமியை மிகுந்த அன்போடு வளர்க்க, வளர்ந்து, பெரியவளாகியிருக்க, அயலா நீயார் என்று இவளை நோக்கிக் கேட்குந தோறும், நான் இந்திர குமாரனுகிய அர்ச்சுனனது தேர்ப்பாகனுகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய திருவடியை எகநாளும் இடைவிடாமல் ஸ்மரித்துக் கொண்டிருக்கிற ஸ்ரீ காம தேவருக்கு அடிமைக் குடியாகிய தாசி என்று சொல்லுவாள். இப்படி காம தேவர் திரு மாளிகையில் பல ஊழியங்கள் செய்துகொண்டு, மேகவண்ணனுகிய பகவானை காமதேவர் வாழ்த்துநதோறும் கேட்டு மனமகிழ்ச்சி யடைநது கொண்டிருப்பாள். இப்படி யிருக்கிற காலத்தில், ஒருநா ளிரவில், ஐநது காழிகைக்குமேல், மெய்யன்பராகிய காமதேவர் முதலானவர்கள் நித்திரை செய்ய, ஆபோது காற்றுமழை யடித்து, அதனுல் அசோகம் வீடுகள், மாடமாளிகைகள், யாவும் பலவகையாய்ச் சிதைநது அழிநதன. அப்பொழுது பகவானுனவர் காமதேவர் திருமாளிகையும் அழிவு பெறுமாயின் இவன் மனைவி மக்களோடு துன்பப்படுவானே, இந்த காம எப்படிப் பார்த்திருப்போம் என்று விரைநது எழுந்தருளி, தமது சக்ராயுதத்தால் அந்தக் காற்று மழையைத் தடுத்து, காம தேவர் திருமாளிகை மாத்திரம் விழாதிருக்கும்படி செய்தது மன்றி, காற்று மழையின் மிகுதியால் திருமாளிகையின் ஒவ்வொரு பக்கத்தின் சுவர் முதலானவை சரிநதிருக்கக் கண்டு மண் குழைத்து அந்தச்சுவர் முதலியவற்றை முன்போலத் திருத்திக்கொண்டிருக்கும்போது, காமதேவர் விழித்து வெளியே வநது, நிர்மலமாகிய பீதாம்பர ஹார கேயூர குண்டல மகுட கங்கண ! பாதாவலயங்களோடு கூடி விளங்குகின்ற ஸ்ரீகண்ணபிரானுடைய திவ்ய சௌநதர்ய விக்கிரகத்தைக்கண்டு வணங்கி, வாழ்த்தி, திருவடியைப்பற்றிக்கொண்டு, ஸ்வாமீ! இந்த இரவில் தேவரீர் இவ்விடத்திலெழுந்தருளிச் செய்யுங் காரியம யாது என்று வினவ, பக்தபரிபாலகனுகிய பகவான், காமதேவரை நோக்கி, அடிக்கின்ற காற்று மழையால் உன்வீடு அழிந்து வீழாமல் செல்வை செய்தேன், நீ உனது குடும்ப சம்ரக்ஷணத்தைவிட்டு என்னையே சரணடைநதிருக்கிறு யாதலால இப்படிப்பட்ட காலங்களில் உதவிசெய்வது என் கடமையா யிருக்கின்றது. இப்படி நான் செய்யாத பக்ஷத்தில், உன்னைப் பெற்ற தாயானவள் என்னை வைவாள். அந்தச் செய்தியை நீயும் அறிவா யல்லவா என்று பகவான் சொல்லிக்கொண்டிருக்கும்போது, குணியியானவள் வந்து, பகவானது திவ்ய ரூபத்தைக் கண்டு, திருவடியை வணங்கி, ஸ்தோத்ரம் பண்ணின பிறகு, மூவரும கூடி,

விட்டிற்குள்ளே பிரவேசித்துத் தங்கியிருக்குமபோது, ஜநாபாயி வந்து, மேக வண்ணனுகிய ஸ்ரீகண்ணபிரானுடைய திருவடியை வருடிப் பல உபசாரங்க ளையுஞ் செய்து கொண்டிருக்க, நாமதேவர், வந்து வணங்கி, ஓ ஸ்வாமீ! எம்மை யடிமைகொண்டவனே! எம்மோடு கூடியிருந்து அழுதுசெய்தருள வேண்டு மென்று பிரார்த்தித்துச் சொல்ல, அதற்குப்பகவான் இசைந்து, கோவிந்தன், விட்டலன், நாரணன், மகா தேவன் என்பவர்களாகிய நான்கு பிள்ளைகளுந நாமதேவரும், தாயாகிய குணையியாரும, அவர் மீதவியாரும் கூடி, ஓர் கலத் தில் அழுது செய்யும்போது, ஜநாபாயி பார்த்து, மிகவும் மனவருத்த மடை ந்து, பண்டரிநாதனே! என்னை மாத்திரம விட்டுவிட்டாயே, என்னை இப்படிக் ளைவிடுதல் உனக்குத் தகுதியாமோ? என்னை பரமதாசியாக எண்ணினீயை என்று பலவகையாய்ப் பிரலாபிக்கும் போது, நிர்மலனுகிய விட்டலப்பெரு மான், நாமதேவரை நோக்கி, நீ எனக்கு ஊட்டுகின்ற இவ்வமுது கன்றுயிரு க்கவில்லையென்று சொல்லுதலும, நாமதேவர், விட்டலப் பெருமானை நோக்கித் தேவரீரை எப்பொழுதும் ஸ்மரித்துக்கொண்டிருக்கிற ஜநாபாயியும்கூட இரு ந்து உண்ணுமையால இந்த அமுது உமக்கு ருசிக்கவில்லை யென்றார், என்று சொல்லுதலும், அமுது செய்துகொண்டிருந்த பகவான், தமது கைகளை யுத தரிகொண்டு எழுந்திருப்பதைக் கண்ட, ராஜாயி பண்டரிநாதனுடைய திருக் கைகளையும், திருவடிகளையும் சுத்திசெய்து பிறகு ஸ்வாமியானவர் ஒரு சயன த்தின்மீது சயநித்துக்கொண்டிருந்தார். அதன்பிறகு குணையியார், ஜநாயியை யழைத்து இதை வாங்கிக்கொள் என்று தாங்கள் அமுது செய்து மீதியா யிருந்த எச்சிலைக் கொடுக்க, அவள் தன பிரமமருத்திராதிகளுக்கும் கிடைத் தற்கரிய மஹாபிரசாதமென்று மனமகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு, அதனை த் தனது சிறு குடிலில் வைத்துவிட்டு, கமலாசனையாகிய பெரிய பிராட்டி யாருக்கு நாயகனே! உன்னை யாசிரயித்த எனது குடிசைக்கு எழுந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, பகவான் துயிலுணர்ந்து எழுந்து நாம தேவ ரோடுவந்து, அந்த ஜநாயியை நோக்கி, பெண்ணே! உண்ணும்போது நீ யில் லாமையால், நன்றாய் உண்ணவில்லை. இப்போது பசியெடுக்கின்றது, ஆகை யால் எனக்குச் சிறிது அன்ன மிடவேண்டுமென்று சொல்ல, ஜநாயி ஓ பக வானே! குணையி எனக்குச் சிறுதுமீதி அன்னத்தைத்தந்தாள், அது உனக்கு ஏற்குமோ என்று கேட்க, ஸ்ரீகண்ணபிரான், பெண்ணே! அந்த மிச்சிலானுல் எனக்கு மிகவும் பிரியமாயுண்டாகும், அதைத் தாருவாயாக என்று சொல்ல, ஜநாயி அப்படியே தருதலும், பகவான் வாங்கி, அவளோடு கூடியிருந்து உண்டு திருவுள்ளமகிழ்ந்தார். பிறகு திருக்கைகளையும் சுத்திசெய்துகொண்டு இருவரும நித்திரை செய்யுமபோது குணையியார் விழித்து வெளியே வந்து தன் புதல்வராகிய நாமதேவரை யழைத்து, நீயும் நானும் நித்திரை செய்த பின்பு ஸ்ரீகண்ணபிரான் ஜநாயி இடத்திற்குப்போய் மிச்சிலுண்டதையுண்டு அங்கேயே சயனித்துக்கொண்டார் என்றாள். அதைக்கேட்ட நாமதேவர், தாயே, யாருடைய மனமானது பரிசுத்தமாயிருக்கிறதோ, அவ்விடத்தில் பக

வான் எழுந்தருளுவதற்கு ஒரு காலநியதியில்லை, நினைத்தபோதே எழுந்தருளுதல் அவருக்கு இயற்கை, மிச்சி லுண்பதும் அவருக்கு இயற்கையே. என்று சொல்லக் கேட்டு, நித்திரைசெய்கிற பகவானுனவர், ஒரு ஜாம நேரம் இருக்க விடியற்காலத்தே யெழுந்து ஜநாயியை யெழுப்பி உன்வரவை யான் விரும்பி யெதிர்பார்த்திருக்கிறேன் என்று சொல்லவும், அவள் விழித்துக் கொள்ளாதிருக்க, எம்பெருமான் அவள் விழித்துக்கொள்ளும்படி அவளைத் தூக்கியெடுத்து கன்னத்தை உட்காரச்செய்து, ஒப்பற்றதிருக்காரத்தால் அவளது கூர்த்தலைச் சிக்கறத் திருத்தி உட்காரவைத்துவிட்டுத், தமது முன்னுனி முனையைச் சுற்றிச் சுமமாடாகத் தலை மீது அமைத்துத் தாமே ஒரு கூடையில் அரிசியைக் கொண்டுவந்து, நான் அரிசியை யரைத்து மா வாக்குகிறேன். நீ உனது அழகிய கையிலுள யந்திரத்தின் முளையைத் தீண்டிக்கொண்டு மதுரமான பாடல்களைப் பாடிக்கொண்டிருவென்று சொல்ல, ஜநாயி அப்படியே யந்திரத்தின் அச்சுமுளையைத்தீண்டிக்கொண்டுமம்மதுரமாகப்பாடிக்கொண்டு மிருந்தாள். அப்படி யிருக்கும் போது பகவான், அந்த மதுரமான பாடல்களைக்கேட்டுத் தலையசைத்துக்கொண்டு, பரவசமுங்கி, அரிசியரைக்கிற நிலையை யறிந்த குணியார், ஜநாயி பிடத்தில் வந்து, அரைப்பதற்கு உள்ளிடத்தில் அரிசிவந்த விதம் எப்படிச சொல்லக்கடவரியென்று வினவி, இவள் பேசாதிருப்பதைக் கண்டு கோபித்துப, பிரம்பைக் கையிற் கொண்டு, ஜநாயிவருந்தும்படி அடிதந, இப்பொழுது நீ யாரோடு பேசியிருந்துவந்தாய் சொல்லென்று வற்புறுத்திநிற்க, அவளடித்த அடி லக்ஷ்மீ நாதனுடைய திருமுடியில் பட்டவுடனே, பகவான், நான் விடோபா, பேரன்புடையவளாகிய இந்த ஜநாயியாரிடத்திற்கு அரிசி யரைக்கும் பொருட்டு வந்தேன், என்னை அடிக்க வேண்டாம் என்று சொல்ல, நாமதேவ தமது தாய்முகம நோக்கி, இவர் திருத்துழாய்மாலையை யணிந்த ஸ்ரீகண்ணபிரான் என்று நீ அறிகிலை, ஆதலால் வருவாயாக என்று அழைக்க, குணியாரும் மயங்கி, நாணமுடையவளாய், லோகநாதனுகிய பகவானை அடித்தேனே யென்று மனத்துயரத்தோடு தலை வளைத்துக்கொண்டு நின்று, ஜநாயியானவள், ஸ்ரீமந் நாராயணனை ஸ்மரித்துத் தன் வசப்படுத்திக்கொண்டாள், எனக்கு இவ்விடத்தில் யாதொருபெருமையு மில்லை என்று மௌனமா யிருத்தலும, ஜநாயியானவள் எம்பெருமானிடத்தில் தான் செய்த மிக்க அன்பென்கிற அசசாணியைத் தீண்டிக்கொண்டு, வைராக்கியமென்கிறதிரிகையில், சஞ்சிதமென்கிற அரிசியைப்பெய்து அரைத்தாள். அப்படி அவ்யக்தமாகிய தத்வத்தில் வெளிப்படையாய் அரைத்த அந்த மாவை யெல்லாம் ஸ்ரீ லக்ஷ்மீ நாதன் அன்போடு கூடையில் நிறைத்து வைத்து நித்திரை செய்ய, ஜநாயியார், விடியுமுன்னே துயிலுணர்ந்தெழுந்து, மாதவனையும் துயிலெழுப்பி, இவ்விடம் விட்டு உன் கோயிலே யடையாமல் இருப்பாயானால் கலகம் உண்டாகு மென்றாள். என்று சொல்லுதலும், நித்திரைசெய்துகொண்டிருந்த ஸ்ரீகண்ணபிரான், பொழுதுவிடிந்துபோயிற்றே என்று அவசரமாய் எழுந்திருந்து, நித்திரை மயக்கத்தால் தனது பீதாம்பரத்

தையும், பதக்கத்தையும் அவ்விடத்தில் போட்டுவிட்டு, ஜாயியாருடைய துணியைத் தான்உடுத்து, கோயிலுள்ளேபிரவேசித்து எழுந்தருளியிருந்தார். பொழுதுவிடிந்தபிறகு, கோயில் அர்ச்சகர்வந்து கதவைத்திறந்து கந்தையைப்போர்த்துக்கொண்டு செங்கல்மேல்நிற்கின்ற கருணைக்கடலாகிய ஸ்ரீகண்ண பிரானைக் கண்டு, எந்தையே! உனது பீதாம்பரத்தை எவர்க்குக் கொடுத்தாய்? இந்தக் கந்தைத்துணியை எங்கே தேடிப்பெற்றாய்? அதிக சௌந்தரிய விக்கிரகமாகிய உன் திருமேனிக்கு இந்தக் கந்தைத் துணி தகுவதோஎன்று சொல்லி, அதைநெகிழ்த்துப் பதக்கத்தையும் திருமார்பில்இருக்கக்காணுதவர் களாய் வெருண்டு அதிசயித்து, கதவு மூடினபடியே யிருக்க இந்தக்காரியம் எப்படி நிகழ்ந்தது என்று சொல்லிக்கொண்டு, கதவு மூடினபடியே யிருக்கவும் இந்தப் பண்டாரிநாதன் போகக் கூடுமான்தாலும் போவது யாரிடத்திற்கு என்று சொல்லி, இக்கந்தைத் துணி, நாமதேவர், தேடியமைத்துக்கொண்ட அடிமைக்காரியின் துணிபோலக் காணப்படுகின்றது, இதனுண்மையை அறிவோம் என்று நாமதேவர் வீட்டுக்கு வந்து, அவ்விடத்தில் ஜாயியைக் கண்டு, உன்னிடத்துக்கு ஸ்ரீ கண்ணபிரான் வந்ததனால், இந்தப்பொன்னுடை கிடைத்தது, ஆதலால், அவன் திருமார்பில் அணிந்திருந்த பதக்கமும் உன்னிடத்தில் இருக்கலாம, அதைக்கொடுப்பாயாகஎன்று கேட்டவுடனே,ஜாயி என்னிடத்தில இல்லை யென்று சொல்லுதலும், அர்ச்சகர், நீ அக்கண்ணனை இங்கே யாது காரணமாகத் தங்கும்படி செய்தாய் என்று சொல்லி, அவள் வஸ்திரத்தைச்சோதித்துப்பார்க்கும்போது, பதக்கம் அவளிடத்தில் இருக்கக் கண்டு, அவளை வெருட்டி வற்புறுத்தும்போது, ஊரிலுள்ளார் யாவருங் கூடி நாமதேவர் வீடு முன்போலக் காணப்படவில்லை, மேற்று அடித்த பெருங் காற்றினால் பறந்துபோன நமதுவீட்டின் கூரைகளெல்லாம் நம்மால் மூடப் படவில்லை, நமது வீடுகளோ புதுக்கப்படவில்லை, இப்படியிருக்க, பொழுது விடியு முன்னே மேற்று நம்முடைய வீடுகள்போல நீலைகுலைந்த இவர் வீடு மாத்திரம் புதிதாய்ச் சமைக்கப்பட்டிருப்பது என்ன அதிசயம்! இந்த நாமதேவர்க்கு ஸ்ரீகண்ணபிரானே இவ்வாறு அமையும்படி திருவருள் சுரந்திருக்கலாம் என்று சொல்லுவதைக் கேட்டோர்களிற் சிலர், அப்படியே ஸ்ரீகண்ண பிரானே அருள் செய்ததனால் பெரிய திருமாளிகையையும் பெரிய திரவியத்தையும் அமைத்துக் கொடுக்க அசக்தனே என்று சொல்லுவார்கள்; வேறு சிலர், செல்வம் அதிகமாகக் கொடுத்தால் செருக்கு மிகுந்து தன்னிடத்து அன்பு இல்லாதவராவார், ஆதலால் பகவான், தன் அன்பருக்குப் பெருஞ் செல்வத்தைக் கிருபை செய்யார்என்றுசொல்லுவார்கள். இப்படியே பேசிக் கொண்டிருக்க, முன்னே சோதித்தவர்கள் ஜனியியானவள் மோசக்காரி யென்று கோபித்து, இவள் சுவாமித் துரோகி யாதலால் இவளைக் கழுவி லேற்றுவோம் என்று தீர்மானித்து அவளை அழைத்துக்கொண்டு சந்திரபாகா நதியைச் சமீபித்தவுடனே, ஜனியியானவள், அமலனே! செங்கல்லின்மேல் நின்ற திருக்கோலமாயெழுந்தருளியிருக்கிற ஸ்ரீதரனே! இப்படிகடுங்கொலை

புரிதற்கு அடியேன் என்ன குற்றஞ் செய்தேன் என்றுசொல்லி, கைகளைத் தலைமேல் கூப்பிநின்று புலம்ப, அகாதரக்ஷகனுகிய ஸ்ரீகண்ணபிரானது திருவருளால் கழுமரமானது நீராய்க் கரைந்துபோய்விட்டது. ஜகாயியாருடைய துன்பத்தை நீக்கி ரக்ஷிக்கும் பொருட்டு நிர்மல ராகிய பகவான் விரைந்து ஓடிவந்தார். இதைக்கண்ட உலகத்தாரெல்லாரும் மனமகிழ்ந்து ஒருமிக்கக் கூடிநின்று பகவானை ஸ்தோத்திரஞ்செய்ய, ஜகாயியைப் பிடித்துச் சோதிக்க வந்த அர்ச்சகர்கள், அவளை நோக்கி, தாயே! உன் பொருட்டு பகவான், இவ்விடத்தில் எழுந்தருளினராதலால் நீயே தங்யை யென்று புகழ்ந்து அவளை நீங்கிப்போயினர். போனபின்பு, ஜகாயி தன் வீட்டிற்கு வந்த விமலனுகிய பகவானை முன்போல் பிரார்த்தித்து, அபங்கக் கவிகளை ஆரம்பித்துச்செய்து கொண்டிருக்கும் காலில், திருத்துழாய் மாலையை யணிந்த திருத்தோள்களையுடைய ஸ்ரீகண்ண பிரான், மைக்கூட்டையும், எழுது கோலையும், காயிதத்தையும் கைக்கொண்டு அவள் சொல்லுமவற்றை யெல்லாம் எழுதும்பொருட்டுத் திருக்கோயிலில்வந்து எழுந்தருளியிருக்க, ஞானதேவரும் அவ்விடத்திற்கு வந்தார். அவரைக் கண்டவுடனே ஸ்ரீ கண்ணபிரான் எழுதுவதற்குத் திருவுள்ளம் நாணி, மைக்கூடு முதலியவற்றை மறைத்து இருந்தபோது, அவர் வணங்கி, ஓ தேவகிருஷ்ணனே! ஏகாந்தமாயிருந்து நீ எழுதினது யாது சொல்லியருளவேண்டும் என்று கேட்க, ஸ்ரீ பண்டரிநாதன் கிருபையோடு அவரை நோக்கி, ஜகாயி சொன்ன அபங்கக் கவிகளை யெழுதினேன் என்று சொல்லக் கேட்ட ஞானதேவர் சிரித்து, அமலனே! இந்த ஜகாயி யானவள் சொல்லுவதெல்லாமுன்மகிமையேயன்றி வேறல்ல, அதுபிறராலே விரும்பத்தக்கதன்றி உன் புகழை நீயே யெழுதிக்கொள்வது சிறந்த காரிய மல்ல என்றுசொல்ல, ஸ்ரீலக்ஷ்மீநாதன் ஜகாயி சொல்லுவது என்செவிக்கு மிகவும் இனிமையாய் இருக்கையால் அதைக் கேட்க விரும்பினேன்; அன்றியும், அதை யெழுதிக்கொள்ளவும் விருப்பங்கொண்டேன் என்றருளிச்செய்தனர். அப்போது முன்போலவே எழுதத் தொடங்கின பகவானுனவர் ஞானதேவரை நோக்கி, அன்பனே, நான் எழுதுவதை மறைத்தேனென்பது பிரமதேவனுக்குந்தெரியாது, அப்படியிருக்க, உனக்கு எப்படித்தெரிந்ததென்று கேட்க, ஞானதேவர் பெருமானே நோக்கி, ஐயனே! உன் பெருமையானது உன் அடியார்களுக்கு மிகவும் எளிதேயாகும் என்று சொன்னர். அதைக் கேட்டவிட்டலப்பெருமானுன் சிரித்துக்கொண்டிருக்க, ஞானதேவர், அப்பெருமானை நோக்கி, பரிசுத்தனுன பகவானே! நாமதேவரைக் காணும்பொருட்டு நீர்எழுந்தருளும்என்று பிரார்த்திக்க, அப்படியே இறைவனும் ஞானதேவர் கையைப் பிடித்துக்கொண்டு நாமதேவர் இடத்திற்கு எழுந்தருளுதலும், அவர் எதிர்கொண்டு வந்து மார்போடு அணைத்து மன மகிழ்ந்தார். பிறகு வந்த இருவரையும் ஆசனத்தில் எழுந்தருளச் செய்ய, அப்போது அன்பர் எல்லோரும் வந்து சேர, அவர்கள் யாவரையும் பகவான் தழுவிக்கொண்டு உட்காரும்படிசெய்து, நாமதேவரை நோக்கித், திருமாலடியார்களைச் சேவிக்

கும்பொருட்டு ஜகாயியை இங்கேயழைத்துக்கொண்டு வாருமென்றுசொல்ல, அத்தச் சொல்லே அடியார்கள் கேட்டுத் தாய்க்குச் சொல்ல, அவள் மருமகளுக்குச் சொல்ல, அவள்வீட்டின் புறத்தில் சாணம் மிதித்துக்கொண்டிருக்கிற ஜகாயிக்குச்சொல்ல, ஜகாயியானவர், கால்கைகள் சுத்திசெய்துகொண்டு விரைந்து வந்து அவ்விடத்தில் அமர்ந்திருந்த அன்பர் கூட்டத்தின் கடையில் எழுந்தருளியிருந்த பக்வானைத் தரிசித்து வாழ்த்தி வணங்கினர். அப்படிப் பணிந்து நின்றபோது, ஞானதேவர், சம தமாதிகளான ஆத்மகுண பூர்த்தியுள்ள நாமதேவரைநோக்கி, இன்று உண்டான ஓரதிசயத்தைக் கேட்பீராக, அதுஎன்னென்றால், ஜகாயிபாடுவதை எமபெருமான் தானே எழுதிக்கொள்ளுகிறார், அதை நான் பிரத்தியக்ஷமாகக் கண்டுவந்தேன் என்று சொல்ல திருத் துழாய்மாலையை யணிந்த விட்டலப்பெருமான், நான் எழுதுவதனால் உண்டான குறை யாது என்றார். அன்றியும ஜகாயி சொல்வ தெல்லாம் எனக்குப் பேரின்பத்தைத் தருதலால், அப்படி எழுதவாயினேன், அதைச் சொல்லுவோர்களும, கேட்போர்களும் ஆகிய அவர்களின்மீது முன்னே அன்புடையேனுகிய பின்னே மோக்ஷலாபத்தையும் தருவேன்என்றுசொல்லக்கேட்டு அருகே யிருந்த தொண்டரெல்லாரும் தனித்தனியே நகைத்தார்கள். அப்போது ஞானதேவர், ஜகாயியை நோக்கி, இந்த நாமதேவர் முற்காலத்தில் இரணியனுக்குப் புதல்வராய்ப் பிறந்து, பிறகு, வாலிக்கு மகனாகி, அதன்பின்னே உததவராகஅவதரித்து, இப்போது பாண்டுரங்கப்பெருமானுக்குப் பெரிய அன்பராயினர். நீ இத்தப் பெருமானிடத்தில் மிக்க அன்புடையவளாய் இருப்பதற்குக் காரணம் யாது? நீ ஆதியில் இன்னள் என்று சொல்லக் கடவாய் என்று வினவினர். அதுகேட்ட ஜகாயி ஞானதேவரை நோக்கி, தசாவதாரஞ் செய்தவரான பகவான் தம்கொண்ட அர்ச்சாவதாரத்திலும சிறந்தவராகி யெழுந்தருளியிருத்தலால், நானும் அவரோடு கூடவே பிறந்து அவரையடைந்தேன். இதுதான உண்மையானசெய்தி என்று சொல்லுதலும், ஞான தேவர், அதைக் கேட்டு மன மகிழ்ந்தார். அதன் பின்னே பாண்டுரங்கப் பெருமானுனவர் தமது மெய்யன்பருக்குச் சொல்லுகின்றார். எப்படியென்றால். நீங்கள் யாவரும் பாடுகிற கவிகளை எழுதுவதற்குச் சமர்த்தரானவர்களை நான் வருத்தச் சொல்லுகிறேன் கேளுங்கள். ஞானதேவர் சொல்லும்கவிகளைச் சச்சிதாநந்தரும், நிவர்த்தி என்பவர் பாடும்பாட்டினைச் சோபாநதேவரும், முக்தாபாயி கவிகளை ஞானதேவரும் எழுதும்படி விதித்து, பரமாநந்தர் பாடலை விசோபாகேசரரும, சாவதியாமேளர் கவிகளைச் சிவாகுவரும், கூர்மதாசர் கவிகளைச் சுதேவரும், சோகாமேளர் பாட்டினை அநந்தபட்டரும் எழுதுமபடி நியமித்து, நாமதேவருடைய சிறந்த கவிகளையும் ஜகாயியுடையகவிகளையும் யானே எழுதுகிறேன் என்றருளிச்செய்தார். அப்போது அங்குள்ளவர்களான அன்பரெல்லாரும் ஜகாயியைப் புகழ்ந்து நிற்க, மிக்க பெருங்களிப்பைக் கொண்ட நாம தேவர் அடியார்களைப் பூஜை செய்து, பாண்டுரங்கப் பெருமானுக்கும் மங்களம்பாட, அத்தப் பெருமான் கோயிலுக் கெழுந்தருளி, ருக்மிணீபிராட்டியாருக்கு இங்கே நடந்த செய்தியெல்லாம் சவிஸ்தாரமாகச் சொல்லி மகிழ்ந்திருக்க, ஸ்ரீஹரிதாசர் எல்லாரும் தத்தம்இடங்களையடைந்து,ஸ்ரீஹரிநாமசங்கீர்த்தந பராராய் வாழ்ந்திருந்தனர் என்று சிவபெருமான் ஸ்ரீபார்வதீதேவியாருக்குச் சொல்லி, மேலே மச்சேந்திரநாதர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

ஜநாபாயிசரித்திரம் முற்றிற்று.

# கரு-வது மச்சேந்திரநாதர் சரித்திரம்.

கைலாசபதியாகிய ஸ்ரீ சிவபெருமான், ஒருநாள், திருப்பாற் கடற்கரையில் தேவியாரோடு கூடி மகிழ்ச்சியோடு எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ ராமபிரானது திவ்விய ரூபத்தைத் தனது இருதயத்தில் அமைத்து, அந்தப் பெருமானுடைய திருநாமங்களை உச்சரித்துக்கொண்டிருந்தார். அதை அறிந்த உமாதேவியார், தமது நாயகராகிய சங்கர சேகரரைப் பிரார்த்தித்து, தேவரீரைப் பார்க்கிலும் மேலான தெய்வம் யாது என்று வினவுதலும், அந்தச் சிவபெருமான், விரைவாக, ஸ்ரீரகுநந்தனருடைய ஜகத்காரணத்வத்தைச் சொல்லத் தொடங்கினர். எப்படி யென்றால், பிரம தேவன் முதலாகச் சொல்லப்பட்ட தேவர்களோடு ஹரன் என்று சொல்லப்பட்டுள்ள நானும் உண்டாவதும் அவனாலே, நாங்கள் நிலைபெற்றிருப்பதும் அவனாலே, ஆதலால், அந்த ஸ்ரீஹரியின் திருநாமத்தைஉச்சரிப்பேன், அவனது நீலமேக சாமள விக்கிரகத்தையும் என் மனத்தில் இருத்திக்கொள்வேன் என்று சொல்லக் கேட்ட பார்வதி தேவியார், ஆலோசித்து, அப்படிப்பட்ட மேலான தெய்வம் உமது மனத்தில் எழுந்தருளி யிருக்க, இதுவரைக்கும் அந்த ரகசியம் எனக்குத் தெரியாமல் மறைத்து வைப்பது உமக்குத் தகுதியாமோ? அதனை இன்று எனக்கு அருள்செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, கைலாசபதியாகிய சிவபெருமான், தம்மைப் பணிந்து எதிரேநிற்கிற பார்வதி தேவியாருடைய சிரத்தின்மீது, தமதுதிருக்கையை யமைத்து, உபதேசம் செய்யும்போது, இந்த உபதேசத்தில் மனமில்லாமல் மறந்து நித்திரையை யடைய, மணிகளைக் கொழிக்கின்ற கடலிலுள்ள மீன்களுள் ஒருமீன் குட்டியானது, சிவபெருமானருள் செய்கிற உபதேசமொழியை உம் என்று செவி கொடுத்துக் கேட்டு, அந்தப்புண்ணியத்தால், புதுமையான நர ரூபங்கொண்டு வந்தடைந்ததைப் பார்த்து, அதற்கு மச்சேந்திரன் என்கிற பெயர் சூட்டி யருளி, சிவ பெருமான் பார்வதி தேவியாரோடு தமது திருக்கைலாயத்துக்கு எழுந்தருளினர். அந்தக் குழந்தையானவர், சிவபெருமானது திருவருளால், வைராக்ய குணம் மேன்மேல் வளரப்பெற்று, ப்ரபஞ்சப்பற்றுகிய மயக்கம்நீங்கி, தமது திருநாவானது, ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தநம் செய்யா நிற்க, தாம் ஒருவராய்த் திரியத் தொடங்கினர். தாய் வயிற்றை விட்டு நில வுலகத்தில் அவதரிக்கும் போதே, "ஹம்ஸோஹம்" என்கிற மந்த்ரத்தை விடுகின்றிலர்; ஆதலாலே, மூக்கால வர்த்தமானத்தையும் அறியத் தகுந்தவரானர். இப்படியிருக்குங் காலத்தில், இவருக்குத் தீர்த்த யாத்திரையில் விருப்பம் அதிகரித்து, தாம் போகும் ஊர்தோறும் இரவில் மாத்திரம் உண்டு, ஆரண்யவாசமே தவமாகக் கொண்டு, பன்னிரண்டு வயது நிரம்பு மளவும், காலங் கழித்துக்கொண்டு வரும்போது, ஒருநாள், ஓரூரில், ஒரு தந வணிகன் வாழ்கின்ற வீட்டுக் கெதிரே நின்று, ஆலக்கென்று சொல்ல, அந்த அருமையாகிய ஒலியைக்

கேட்டு, அந்த வீட்டில் வாழ்கின்றவள், இரண்டு கையாலும் பிசைந் யேந்தி க்கொண்டு எதிரே வந்தாள். வந்தவள், தனக்கெதிரே நிற்கிற மாதவரை நோக்கி, பலவகையான உபசாரங்களைச் செய்து, அஞ்சலி பண்ணி, பழிக்கப் படாத உருவத்தை யுடையவரே, நீர் இவ்விடத்திற்கு வரும்படி, நான் எப் படிப்பட்ட தவத்தைச் செய்தேனோ என்று சொல்லி, அன்பு மிகுதியால் மன முருகினள். அப்படி மன முருகி, அன்பு மிகும்படி யெதிரே நிற்கிறீ ராதலால் அடியேனுக்கு ஒரு துன்ப மில்லை, ஆனால் குழந்தை யில்லா யென் கிற ஒரு துன்ப மாத்திரம் உண்டு, அத்துன்பம் நிவர்த்தியாக, ஒரு புதல் வன் உண்டாகும்படி க்ருபை செய்யவேண்டுமென்று அக்ஷயபாத்திரம் இட் டாள். அப்பொழுது அவள் சொன்ன அன்புமிகுந்த வார்த்தையைக் கேட்டு, நிலைபெற்ற தவத்தையுடையவராகிய மச்சேந்திரநாதர் அவள் முகத்தைப் பார்த்து, உன்னிடத்தில் ஒரு புதல்வன் உண்டாவான், நீ யிந்த வரத்தைப் பெற்றுக்கொள் என்று விபூதி கொடுத்துச் சொல்லுகின்றார். எப்படியென் றால், நீ இதை உட்கொள்வாயானால், ஸ்ரீ மஹா விஷ்ணுவின் அம்சத்தால் உன்னிடத்தில் ஒரு புதல்வன் உண்டாவான் என்று சொல்லி, அவர் நீங்கின பின்பு, அந்த மாதானவள், அயல் வீட்டிற்குப் போய், அவ்வீட்டுக்காரியைத் தன்வீட்டுக்கு அழைத்துவந்தாள். வருகின்ற அவளை நோக்கி, மான்போன்ற மருண்ட பார்வையை யுடையவளே, ஒரு துறவியானவர் இங்கே வந்தார், அவருக்குப் பிக்ஷை யிட்டு, ஒரு புதல்வன் உண்டாகும்படி தயை செய்ய வேண்டுமென்று ப்ரார்த்தித்தேன், அவர் திரு நீறு கொடுத்து, இதை உட் கொண்டால் புதல்வன் உண்டாவானென்று சொல்லிப்போனார், அந்தத் திரு நீற்றை நான் உட்கொள்ள விரும்புகிறேன், இந்த விஷயத்தில் உன் அபிப் பிராய மென்னவென்று கேட்க, அயல்வீட்டுக்காரி சொல்லுகிறாள். நீ திரு நீற்றை யுட்கொள்ளவேண்டாம், இப்படிப பரதேசிகளால் திருநீறு கொடுக்க ப்பெற்று, தம் நினைவு மாறி, அந்தப் பரதேசிகளின் வசப்பட்ட மாதர் அநே கருளர், இந்தச்செய்தியை நீயும்அறிந்திருக்கலாம்,உன் இஷ்டம்போலச் செய் வாயென்றாள். அதைக் கேட்டவள், அயல்வீட்டுக்காரி சொன்னபடியே திரு நீற்றை யுண்ணாமல் தீயில் இட்டு எரித்து, ஒரு மூன்று வருஷம் கழிய, மச்சேந்திரநாதர், அவ்விடத்திற்கு வந்து, எல்லா வீடுகளிலும் பிக்ஷாந்தத் தைப் பெற்று, இவள் வீட்டிலும் வந்து பிக்ஷை யிடவேண்டுமென்று எதிரே நின்றார். அப்படியே அவளும பிக்ஷாந்தம எதிவர, அவள்மு[illegible]க நோக்கி, பூர்வ நினைப்புண்டாகி, பெண்ணே, உன புதல்வன் எங்கே, எனக்கு க்காட்டவேண்டு மென்று சொல்ல, அவள் அஞ்சி, மறுமெ.மு சொல்லா மல் நின்றாள். அவளை மச்சேந்திரநாதர் நோக்கி, உண்மையைச் சொல் என் றார். அதற்கு அந்த மாது சொல்லுகிறாள். ஓ மாதவரே, நீர் கொடுத்த திரு நீற்றை உட்கொள்ள வில்லை, அயல்வீட்டுக்காரியின் வார்த்தையைக் கேட்டு, அதைத் தீயிலிட்டேன், அடியேன்மீது கோபம் கொள்ளவேண்டாம், அடி யேன் செய்த பிழை இதுவே யென்றாள். அதைக் கேட்ட துறவி சொல்ல

ஹத்ரூர். எப்படி யென்றால், நீ இந்தத் திரு நீற்றையிட்ட சாம்பலை எங்கே கொட்டிவிட்டாய், அந்த இடத்தைக் காட்டென்று சொல்லி யழைக்க, அவள் பன்னிரண்டு வருஷகாலமாகத் தான் சாம்பல்கொட்டுகிற இடத்தைக் காட்ட, மச்சேந்திரநாதர், அந்தச் சாம்பற் குழிக் கெதிரே நின்று, உரத்த சத்தத் துடன் ஆலக்கென்றார். அந்தச் சத்தத்தைக் கேட்ட வுடனே, முன்னே யிவர் கொடுத்த திருநீறுனது என் குருஸ்வாமீ என்று எதிரொலி கொடுத் தது. இதைக் கண்டு அவ்வூரிலுள்ள யாவரும் அதிசயித்தார்கள். அப்போது மச்சேந்திரநாதர், அந்த வணிகன் மனைவியை நோக்கி, இந்தச் சாம்பற் குப் பையை ஆள்விட்டு எடுப்பியும் என்று சொல்ல, அப்படியே அவளும் ஆட்க ளை விட்டு அந்தச் சாம்பற் குப்பையைக் கிளறி யெடுப்பிக்கவே, அடியில் ஒரு குழந்தையானது திவ்ய சௌந்தர்யத்தோடிருக்கக் கண்டார்கள். அது பன்னிரண்டு வயதுள்ளதாய், சிங்முதலிரை முதலான யோக சிங்ங்களோடுங் கூடி, பாதம் பூமியில் படாதிருக்கக் கண்டு, மச்சேந்திரநாதர் அந்தச் சிறு வரை வணங்க, அந்தச் சிறுமுனிவரும் குழியிலிருந்தெழுந்து வந்து மச்சேந் திரநாதரை வணங்கினார். அப்போது மச்சேந்திரநாதர் அந்தச் சிறுமுனிவர் சாம்பலிற் பிறந்ததனாலே அவருக்குக் கோரக்கர் என்று பெயரிட்டார். அதன் பிறகு அந்தக் கோரக்கநாதரை மச்சேந்திரநாதர் அழைத்துக்கொண்டு போகும்போது; பார்த்த வணிகன், தன் மனைவியை நோக்கி, நீ இந்த மச்சேந்திர நாதருடைய சொல்லைக் கடந்து, இப்படிச்செய்துகொண்டாயே, தெளர்ப்பாக்கிய முள்ளவளே என்று வெறுத்துக்கொள்ள, இதைக் கண்ட மச்சேந்திரநாதர், வணிகனையும், அவன் மனைவியையும் நோக்கி, நீங்கள் மனம் வருந்தவேண்டியதில்லை, உங்களுக்குக் குழந்தை யுண்டாகுமென்று, ஆசீர்வதித்துப்போனார். போகும்போது, கோரக்கநாதர், மச்சேந்திரநாதரை வணங்கி, ஸ்வாமீ, என் சிரசின்மேல் தேவரீர் திருக்கையை வைத்து, தாரக மந்த்ரத்தை உபதேசித் தருளி, அடியேனை உஜ்ஜீவிகசக் செய்ய வேண்டும் என்று ப்ரார்த்திக்க, மச்சேந்திரநாதர், உடனே, மறுமொழி கொடாதிருந்து, பிறகு, அப்பா, நீ குருகுலவாசம் செய்து வருவாயானால், அந்தச் சற்குரு நாதர், உன் பரிபக்குவமறிந்து உபதேசித்தருளுவார், அப்படிப் பெறவேண் டிய முறைப்படியே பெற்றுக்கொள்ளக் கடவையென்றருளினர். அதைக் கேட்ட கோரக்கநாதரும் அப்படியே செய்கிறேனென்று, மச்சேந்த்ர நாத ராகிய குருவின் திருவடியை வணங்கி, அவருக்கு வேண்டிய ஊழியங்கள் செய்து கொண்டு, தேச சஞ்சாரஞ் செய்கிற காலத்தில், ஒரு நாள், ஒரு நகர்ப் புறத்திலே, மச்சேந்த்ர நாதர் இருந்து கொண்டு, அப்பா, கோர க்கா, நீ போய்ப் பிக்ஷையேற்றுக்கொண்டுவாவென்று நியமிக்க, அப்படியே கோரக்கரும் அந்த நகருக்குள்ளே பிரவேசித்து, வீடுகள்தோறும், பிக்ஷாந்த தை யாசித்துக்கொண்டு, பிராமண போஜநம் நடந்துகொண்டிருக்கிற ஒரு வீட்டுக் கெதிரே போய் ஆலக்கு என்றுசொல்லிநின்றார். அந்த வீட்டுக்கு உடையவளாகிய பார்ப்பினி அந்த ஆலக்கு என்னும் சொல்லைக் கேட்ட

வுடனே, வடை, பேளி, அதிரசம் முதலிய சிறந்த வுணவுகளை, இவரது சோளிப்பை நிரம்பும்படி கொடுக்க, வாங்கிக்கொண்டுபோய், ஈசுர்ப்புறத்திலிருக்கிற தமது சற்குருநாதருக் கெதிரேவைக்க, அவர் உண்டு, சேஷத்தைக் கோரக்கருக்குக்கொடுக்க இவரும்உண்டு, இருவரும் சந்தோஷமடைந்திருந்தார்கள். இப்படி யிருக்கும்போது, மச்சேந்திரநாதர் கோரக்கநாதரைப் பார்த்து, அப்பா, இந்த வடை மிகவும் இனிமையாயிருந்தது, ஆகையால், எனக்கு நானூயத்தினமும் போய்க் கொண்டுவந்து கொடுக்கவேண்டும் என்றார். அப்படியே கோரக்கர்போய், அந்தப் பார்ப்பினியைக் கேட்க, அவள், இன்றைக்கு வடையேது? கிடைக்கமாட்டாது, அரிசிவாங்கிக்கொண்டுபோவென்றாள். கோரக்கர், எங்கள் குருவுக்கு அந்த வடையே இஷ்டமாயிருக்கின்றது, ஆகையால் அதையே நீ தரவேண்டுமென்றார். பார்ப்பினி, அதையொழிய வேறெந்தப்பதார்த்தம் வேண்டுமாயினும் தருகிறேனென்றாள்.இவரும் நான் எதையும் விரும்பிலேன், வடை கொடுத்தாலன்றிப் போகமாட்டேனென்று சொல்ல, பார்ப்பினி தவவேஷம பூண்டு வருவோருக்கு இது தெரியாதா? இல்லாத வொரு பொருள் எங்கேயிருந்து வரும் என்று கோவித்து, கோரக்கரை நோக்கி, உன் கண்ணை உன் குருவானவர் கேட்டால் தருவாயோ ? அப்படி தருவது உண்மையானால் நானும இப்போது வடை தரத்தகுந்தவளாவேன் என்று சொல்ல, அதுகேட்ட கோரக்கர், உடனே தமது கண்களிரணடில் ஒரு கண்ணைப்பறித்து, குருவுக்குக் கொடுப்பதை உனக்குக் கொடுக்கிறேனென்று கொடுக்க, அவள் பயந்து, இவர் கண்ணிலொழுகுகிற உதிரத்தைத் துடைத்து நின்றாள். அப்போது, தயை, சாந்தி, வைராக்கியம் முதலிய சிறந்த குணங்களை யுடைய கோரக்கர், அச்சத்தோடு தமக்கெதிரே நிற்கிற பார்ப்பினியை நோக்கி, நீ அஞ்சவேண்டாம், வடையை மாத்திரம் செய்து கொடுத்தாயானால் கொண்டு போய் எமது குருவுக்குத் தருவேன் என்றார். அப்படியேஅதுதப்பார்ப்பினி விரைவாகச்செய்துகொடுக்க, வாங்கிக்கொண்டு போய், மச்சேந்திர நாதருக் கெதிரே வைத்து வணங்கி நின்றார். அப்போது மச்சேந்திரநாதர் இவரைநோக்கி, உன் கண போனவிதம் யாதென்றுகேட்க, இவரும் உண்மையைச் சொல்லக்கேட்டு, இப்படிப்பட்ட தைரியகுணம் எனக்கில்லை, மற்றொரு கண்ணை எனக்குத் தாவென்றுகேட்டார்; அப்படியே கோரக்கர் மற்றொரு கண்ணையும் பறித்து எதிரே வைக்க, மச்சேந்திரநாதர் அதிசயித்து, தமதுதிருக்கையால் இவரைத்தடவி, திருகண்ணும் தந்தருளி, ஆத்மஞானத்தைஉபதேசித்த பிறகு,அழுதுசெய்து,மீதியைக் கோரக்கருக்குக் கொடித்து, உன்னைப்போன்ற சீடர்கள் இவ்வுலகத்தில் இல்லையென்றார். அதன்பிறகு, கோரக்கர், சாம்பவர், அத்துவயர், பிரபாவர், கைநியர், நிவர்த்தர், ஞானதேவர், விசேரபர், காமதேவர், ஜகாயி இவர்கள் ஒருவருக்கொருவர் உபதேசம் செய்யப்பெற்று, ஆத்மஞானமானது பூலோகத்தில் நிலைபெற்று விளங்கியது என்று சிவ பெருமான் உமாதேவியாருக்குச் சொல்லி, மேலே கோபீசந்தராஜனது வைபத்தைச் சொல்லத் தொடங்கினார்.

மச்சேந்த்ரநாதர் சரித்திரம் முற்றிற்று.

# ககூ-வது கோபிசந்தராஜன் சரித்திரம்.

உத்தரகண்டத்தில், கௌடபங்கால் என்னும் ராஜ்யத்தில், சித்திரகாஞ்சபுரி என்னும் பட்டணத்துக்கு அரசனுகிய திரிலோகசந்தன் என்பவன், மிகவும் ப்ரதாபசாலியாய் அந்த நகரத்தை ஆண்டுவந்தான். அவன் அப்படி ஆண்டுவருங் காலத்தில், அவன் மனைவியாகிய மைநாவதியின் கர்ப்பத்தில், அதிக ரூபலாவண்யங்களோடுகூடின புதல்வர் ஒருவர்பிறந்தார்; அவருக்குக் கோபிசந்தன் எனப் பெயரிட்டு அன்போடு வளர்க்க, வளர்ந்து பருவம் நிரம்பினகாலத்தில், இவர் தகுதையாகிய திரிலோகசந்தன் தேஹவியோகமடைந்தான். அடைதலும் இந்தக்கோபிசந்தராஜனும் முடிசூட்டப்பெற்று அரசாட்சியை நடத்திவருங்காலத்தில், ஆயிரத்திருநூறுமனைவியரை விவாஹம்செய்தும், ஆயிரத்தறுநூறு நாடகக் கணிகையரையும் அமைத்துக்கொண்டு, அல்லும் பகலும் விஷயாநுபவசாகரத்தில் மூழ்கியிருக்குங்காலத்தில், இவர் தாயாராகிய மைநாவதியார், தமது நாயக வியோகத்தால் மிகுந்த வைராக்யத்தையுடையவராய், ஒருநாள் மேல்மாடத்திலேறி, நான்கு திசைகளையும் நோக்கும போது, சகல சித்திகளையும்பெற்று, ஆசாபாசங்களைக் கனவிலும் நினைக்காத ஆத்மஞானியாயும், இடைவிடாத ஹரிநாமஸங்கீர்த்தநபராயும், பிக்ஷாந்நத்தால் தேஹயாத்ரையை நடத்துவோராயும், தயை, சாந்தி முதலாகிய ஆத்மகுண பூர்த்தியுள்ளவராயும் இருக்கிற ஜாலந்தரர் என்பவர், குளிர் காய்வதற்காகக், காட்டுக்குப்போய், உலர்ந்த விறகுகளைக் கட்டாகக் கட்டித் தலைமேல் வைத்துக்கொண்டு விரைந்து வருவதையும், அந்த விறகுக்கட்டானது அவர் தலைமேல் படாமல் ஒரு முழத்துக்கு மேலே அந்தரமாய் வருவதையும் நோக்கி, இது என்ன புதுமையாயிருக்கிறதென்று நிகைத்து, இவர் மனிதர் அல்லர், தெய்வமே யென்று நினைத்து, இவராலே என் பவரோகம் நீங்குமென்று மன வுறுதிகொண்டு, மாந வெட்கங்களை விட்டு, அவர் திருவடியை யடைந்து வணங்கி, உஜ்ஜீவிக்கலாம் என்னும் எண்ணத்துடனே, அவர்க்கு உபசாரஞ் செய்வதற்குரிய வஸ்துக்களை யெல்லாம் சேகரித்துக் கொண்டு அவரிருக்கும் மடத்துக்குப்போய், சதாகாலமும் ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தநபராய்ப்பரமாநந்தபரித ஹ்ருதயராயிருக்கிற அந்தஜாலந்தரருக்கெதிரேநின்று, கை கூப்பி வணங்கி, ஸ்வாமீ! அடியேனுக்கு ஞாநோபதேசம் செய்து அடியேனை உஜ்ஜீவிக்கச் செய்ய வேண்டும் என்று ப்ரார்த்திக்க, இதனைக்கேட்ட ஜாலந்தரர், அவளை நோக்கி நான் எளியவன், எங்கும் திரிந்துகொண்டிருப்பவன், நீயோ அரசனுக்குத் தாயாயிருப்பவள், உனக்குத் தகுந்த ஆசாரியரிடத்தில் உபதேசம் பெற்றுக்கொள்வது நன்மையாகுமென்று சொல்ல, மைநாவதியார், ஸ்வாமீ! உம்மிலுஞ் சிறந்த ஆசாரியரை எங்கே தேடுவேன்? உம்மைச் சரணமடைந்த அடியேனை எப்படியாகிலும் கடைத்தேற்றவேண்டும் என்று பலமுறை வணங்கிப் ப்ரார்த்திக்க, தபசியானவர், அவளுடைய

சித்தசுத்தியை யறிந்துகொண்டு சங்கோவித்து, அவளைச் சமீபத்தில் அழைத்து, அவள் தலைமேல் கையைவைத்து ஞானோபதேசம் செய்தருள, அவள் உபதேசம் பெற்ற வுடனே தன் மமதை முழுதும் நீங்கிப் பகவானே மகோசாக்ஷாத்காரமாகக் கண்டு, குருமூர்த்தியைத் தொழுது பேரானந்தக் களிப்பையடைந்து, விடை பெற்றுத் தமது அரண்மனைக்குப் போய், அவகாசம் கோரிட்ட காலங்களிலெல்லாம் சற்குருநாதரிடத்திற்கு வந்து வணங்கி, ஆத்மானுபவத்தைப் பேசிக்கொண்டு, மனைக்குப் போய்க்கொண்டிருந்தார். இப்படி மைநாவதியார், ஆத்மானுபவம் செய்து கொண்டு ஸ்ரீ ஹரிபக்தியிற் சிறந்து விளங்குகிற காலத்தில், இவர் புதல்வராகிய கோபிசந்தராஜர், ஒருநாள் தம்மீது அன்பிற்சிறந்தவளாகிய மூத்தமனைவியிடத்திற்கு வந்தார்; வந்தபோது அவள், கணவனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்து, சயனத்திற் பொருந்தியிருந்து, தாம்பூலங் கொடுத்து, என் ப்ராணநாதரே! நான் ஒரு வார்த்தை சொல்லுகிறேன், அதைக் கேட்டு அப்படியே எனக்குத் தயை செய்யவேண்டுமெ என்றுவேண்ட, அரசன் அது என்ன சொல்லென்றுகேட்க, உமது தாயார், யோகா ஒருபரமதேசியின்மடத்துக்குப்போய்உபதேசம்பெற்றுக்கொண்டு வந்தார். அப்படி வந்த நாள் முதல் அடிக்கடி அவரிடத்துக்குப் போவதும் வருவதுமாயிருப்பதைக் குறித்து நமது குடிக்குப் பழியுண்டாயிருக்கிறது என்றுசொல்ல, அரசன்கேட்டுக் கோபங்கொண்டு,நீசொல்வதை நானே உதயத்தில் அறிகிறேன் என்று சொல்லி, மறுநாள் உதயத்தில், தன் சபைக்குவருக்த மந்திரியை நோக்கி, நமது நகர்ப்புறத்தில் நெடுநாளாய் வசம் பண்ணிக்கொண்டிருக்கிற, ஜாலந்தரர் என்னும் ஸ்வாமியை நான் சேவிக்க விரும்புகிறேன், ஆகையால்அவரை நீங்கூட்டியழைத்து வாருமென்று சொல்ல, மந்திரியும் அப்படியே அவரை யழைத்து வருதலும், அரசன் எதிர்கொண்டு போய் அவரை வணங்கியழைத்து ஆசன தானது, இன்று நீர் எழுந்தருளினதனால் நான் புதிதன் ஆய்விட்டேன் என்று இன்சொற் கூறி உபசரித்து, அன்றிரவிலும அரசன் தன்னிடத்திலேயே தங்கியிருக்கும்படி ப்ரார்த்தித்து, அவரும் அப்படியே தங்கி நித்திரை செய்யுமபோது, அரசன் சிலரை யேவி அவரைக் கிணற்றில் தள்ளி விடும்படி செய்தான்; அவர்களும் அப்படியே செய்தார்கள். செய்தாலும், ஜாலந்தரர் அதைக் கிணற்றில் அழுந்திப்போகாமல் நீரின்மேல் மிதந்துகொண்டு, ஸ்ரீ ஹரி நாமஸங்கீர்த்தனபராயிருந்தார். இப்படி யிருக்க, சூரியோதயமானவுடனே, அரசன் தாயாராகிய மைநாவதியார் தமது குருமூர்த்தியை அவர் மடத்திற்சென்று தேடிக்காணுமல் திகைத்து, நீரில்லாமல் மயங்குகிற மீனைப்போலவும், தாயில்லாமல் தவிக்கிற குழந்தையைப்போலவும் தத்தளித்துப்புலம்பி, சற்குருநாதர் எங்கேபோனாரோவென்று மனம்வருந்தியிருக்கையில், ஜாலந்தர் சீடர்களில்சிறந்த காணேபா என்பவர், பல கோடிய யறுத்தவராகிய எழுநூறு பேருடன் உலகமுழுதும் தேடிக்கொண்டிருக்க, அரசன் ஒருநாள் தன் அரண்மனை முற்றத்தில்

அதேசமயத்தில் பூஜிச் சிகையை வாரியலங்கரித்து உபசரிக்க உலாவிக் கொண்டிருந்தான். அப்போது மேல் வீட்டி லிருந்து கீழே நோக்கித் தன் புதல்வனைக் கண்ட மைநாவதியார், இப்படிப்பட்ட போழ்துள்ள நமதுபுதல் வன் கடைசியில் ஒருநாளில் யமன்கையிற் சிக்கி வருந்துவானல்லவா? வினை வசத்தால் நேரிடுகிற மரணத்தையும் யம பாதையையும் நீக்க நம்மால் முடி யாதே, என்ன செய்வோமென்று கண்ணீர் சிந்தி யழுதாள்; அந்தக் கண்ணீ ரானது அரசன்மேல் விழ, அரசன் இந்த நீரை, மேலேயிருந்து யாரோ தெளித்தார்களென்று நினைத்து மேலே நிமிர்ந்து, பார்த்து, அழுதுகொண் டிருக்கிற தாயாரைப் பார்த்து, நீர் அழுதற்குக் காரணம் யாதென்று கேட்க, அவள் உண்மையான செய்தியைச் சொல்ல, அவன் கேட்டு வருந்துகையில் தாயார், அப்பா மைந்தனே, இவ்வுலகத்தில் காணப்படுவன யாவும் அழிந்து போவனவே யன்றி இருப்பன ஒன்று மில்லை; ஆகையால் நீ சற் குருவை யடைந்து அவரது அருள்பெற்று, உன்சரீரத்தைத் தெய்விகமாக்கிக்கொண் டால் நன்மையாமென்று சொல்ல, அரசன், அப்படிப்பட்ட சற்குரு நாதர் எங்கே கிடைப்பாரென்று கேட்க, மைநாவதியார், அப்பா, ஜாலந்தரர் என் பவர் ஒருவரிருந்தார், அவர் ஆசாரியலக்ஷணங்கள்யாவும்அமையப்பெற்றவர், அவரைப் பன்னிரண்டு வருஷமாகக் கண்டிலேன் என்று சொல்ல, அரசன் கேட்டு, ஒன்றும்சொல்லாமல்போய், ஸ்நாநமசெய்துபோஜநஞ்செய்தபிறகு, அநுதாபத்தோடு தாயாரிடம் வந்து நடந்த செய்தியைச் சொல்லி வருந்தி னன். இப்படியிருக்க, காணேபா எழுநூறு கிடரோடு பல இடங்களில தேடி யுங்காணுமல்,பரததேசத்தையடைந்தார். அங்கே,மச்சேந்திரரைத்தேடிவந்த கோரக்கர் காணேபாவைக் கண்டு, காடாலிங்கநம் செய்துகொண்டு, அங்கே தங்கியிருக்குங்காலத்தில், வந்த கோரக்கர்,அவர்களை நோக்கி, கோபிசந்தன், ஜாலந்தரரைக் கிணற்றிலே தள்ளிவிட்டான், இதனையறியாமல் ஏன் வருந்து கின்றீர்கள், வருந்தித்தேடினால் என்னப்பயோஜநம் என்றார். அதைக் கேட்ட காணேபா, குருவிருப்பிடம் தெரிந்துகொண்டு, கோரக்கரை நோக்கி, கோரக் கரே! மலையாளத்தில் உமமால் சங்கியாசம் பெற்ற குருக்களில் எத்தனேபேர் பெண்ணைசைகொண்டு குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு, அந்த மனைவி மக்களை நீங்காதிருக்கிறார்கள் என்றும், அதை யறியாமல் எம்மை யிகழ்ந்தீர் என்றும் வினையாட்டாய்ப் பேசிக்கொண்டு, எழுந்திருந்து, இருவருமாகப் போய், காஞ்சநபுரிச்சோலையில் மைநாவதியாரைக்கண்டு இந்தச செய்தியைச் சொல்லவேண்டுமென்றெண்ணிக் காத்திருந்து, பிறகு மைநாவதியார்க்குக் காணேபா, தாம் வருவதைத் தெரிவிக்கும்பொருட்டு முன்னே சிலரை யனுப்ப, அவர்களால் காணேபா வரவைக்கேட்ட மைநாவதியார் மகிழ்ந்தார். அப்போது காணேபா வந்து, மைநாவதியாரை நோக்கி, நீர் மனம் வருந்த வேண்டாம், இன்னம் ஏழுநாளில் ஜாலந்தரரைக் காண்பீர் என்று சொல்லக் கேட்ட மைநாவதியார், மனக் களிப்பு மிகுந்து, தமது புதல்வராகிய கோபி

சந்தராஜரிடத்திற்குப்போய், அவரை நித்திரை விட்டெழுந்திருக்கச்செய்து, தக்கமயக்கத்தைத் தெளிவித்து, இன்ன கம்முடைய குருநாதருடைய சீட ராகிய காணேபா என்பவர் வந்து சோலையிலிறங்கியிருக்கிறார், அவர் திருவடி யைக்கண்டு சேவித்தால் நீ எல்லாப்பாவங்களினின்றும் விடுபடுவாய், அன்றி யும் எல்லாப் பதங்களிலும் மேலான மோக்ஷபதத்தையும் அடைவாய்என்று செல்லுதலும், அரசன் என்தாயானவள் நான் நன்மையையடையச்சொன்ன வார்த்தையை நான் நெகிழவிடேன் என்று தாயார் திருவடியை வணங்கித் தமது சபையைச்சேர்ந்து, மந்திரியையும் சதுரங்கசேனையையும் அழைத்துக்கொண்டுபோய்க் காணேபாவைக் கண்டு, அன்போடு அவரது திருவடி யைப்பணிந்து தோத்திரஞ்செய்துநிற்க, அவர் நீயாரென்றுகேட்க அடியேன் கோபிசந்த ராஜன் என்று சொல்ல, அவர் இவனே இன்னனென் றறிந்து கொண்டு, அடாமூடா! கள்ளே அமுதென்றும், கழுதையைக்குதிரையென்றும் சொல்லுவதுபோல, உனக்கு இந்தப் பெயரிட்டவர் யாரோ அறிந்திலேன்! நீ பரமதுஷ்டன், அவிவேகியாகிய நீ மனையாள் வார்த்தையைக் கேட்டு, குரு நாதரைக் கிணற்றில் தள்ளினாய், தினையளவுஞ் சிந்திக்காமல் இப்படிப்பட்ட மஹா பாதகம் செய்தாய், ஆதலால் உனக்கு ஆசந்திரதாரார்க்கமாகிய கோர நரகப்ராப்தியுண்டு, இப்படியுஞ் செய்யலாமா என்று கோவித்துச் சொல்ல, கோபிசந்தராஜர் வெருவி, கால் கைகள் நடுக்க மடைந்து, அடியேன் செய்த பெரும்பிழையை மனங் கொள்ளாமல் பொறுத்து அடியேனே ரக்ஷித்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க, அந்தச்சமயத்தில் மைநாவதியார் எதிரேவந்து காணேபாவுக்கு ஆதேசு சொல்ல, அவர் மனமகிழ்ந்தலும், தம் புதல்வராகிய கோபிசந்தராஜரைப் பிடித்து அந்தக் காணேபா கையில் கொடுத்து, இவன் என்புதல்வனே, இவனுடைய பிழையைப்பொறுத்து ரக்ஷித்தருளவேண்டும் என்று வணங்க, காணேபா அது கேட்டு மன மகிழ்ந்திருக்க, மைநாவதியார் அவரை நோக்கி, ஸ்வாமீ! தேவரீர் எங்கள் நகரத்தில் வந்து எங்களுக்கு அபயம் தந்தருளவேண்டு மென்று வேண்ட, அந்தக் காணேபா முதலான எல்லாரும் வருதலும், அவர்களைக் கோபிசந்தராஜர் எதிர்கொண்டு பணிந்து, அழைத்து வந்து, ஆசநம் தந்து, பாதபூஜை செய்து, அமுது செய்தருளப் பண்ணி, புஷ்ப சந்தன தாம்பூலங்களையும் கொடுத்தபிறகு, காணேபா, அர சரை நோக்கி, சற்குருநாதரை எந்தக் கிணற்றில் தள்ளினாய், உண்மையாய்ச் சொல் லென்று கேட்க, கிணற்றைச் சுட்டிக் காட்டி, இந்தக் கிணற்றிலே வீழ்த்தினேன் என்று பயந்துசொல்ல, காணேபா, அரசரைநோக்கி, நீகடை த்தேறும் வழியிருக்கின்றது அஞ்சவேண்டாம்; இரும்பினலும், செம்பின லுலும், வெள்ளியினலும், பொன்னினலும் உன்னைப்போன்ற உருவங்கள் தனித் தனியாய்ச் செய்விப்பாயாக வென்று நியமிக்க, அரசனும் அப்படியே செய்வித்து, கிணற்றருகே வந்து, குருநாதர்மேல் மூடியிருந்த இலத்தியை யெடுப்பிக்கவே, சற்குருநாதரானவர், பூர்ணசந்திரன்போல விளங்கினர். எல்

ஸாரும் கண்டு சங்கலித்து அதிசயித்தார்கள். அப்போது காணேபா, சற்குருநாதர் திருவடிகளே மனத்திலிருத்தி, ஸ்வாமீ! இவ்வரசனுக்கு அடியேன் அபயங் கொடுத்திருக்கிறேனதலால், தேவரீர் இவன்செய்தபிழையைக் குறித்துச் சபிப்பதாயிருந்தால், அந்தச்சாபம் இவனுருவம்போலச்செய்யப்பட்ட பிரதிமைகள்மேல் வ்யாபிக்கும்படி க்ருபைசெய்து ரக்ஷிக்கவேண்டும் என்று மனத்தில் சிந்தித்து, கோபிசந்தனேகோக்கி, இருமபு முதலிய லோஹங்களால் செய்யப்பட்ட பிரதிமைகளே இந்தக் கிணற்றில்விட்டு, ஸ்வாமிக்கு ஆதேசு சொல்லக் கடவையென்று சொல்ல, அரசன் அப்படியே செய்ய, கிணற்றுக்குள்ளேயிருக்கிற குருநாதர், நீ யாரென்று அரசனைக்கேட்க, அடியேன் கோபிசந்தன்என்று அரசன்சொல்ல, நீசாமபலாகக் கடவையென்று குருநாதர் சபிக்க, அந்தச் சாபம் அரசனிடத்தில் அணுகாமல் பிரதிமைகள் மேலேவியாபிக்கவே, அவை நீறுயின; அப்போது காணேபா, அரசனைநோக்கி, நீ கிணற்றருகேயிருந்து குருவுக்கு ஆதேசு சொல், பயம் வேண்டாமென்று சொல்ல, அரசன், ஸ்வாமீ! இனிமேலும் என்ன விபரீயமோவென்று அஞ்சுகிறேன்; ஆதலால் நீரே கதி யென்று ஆதேசு சொல்லக் கேணியிலிருந்து கேட்டோராகிய குருநாதர், நீ யாரென்று கேட்க, அடியேன் மைநாவதியார் மைந்தனென்று சொல்ல, நீ அமரமாகக் கடவையென்று குருநாதர் வாழ்த்த, கேட்டவர் யாவரும் கைகொட்டி, ஆநந்த பரவசராஞர்கள். பிறகு அநந்தக் குருநாதரை வெளியே வரச்செய்து, மைநாவதியார் அவர் திருவடியைப்பற்றிக்கொண்டு, கடல்போலக் கண்ணீர் பெருக அவர்பாதங்களைக்கழுவிப் பாத பூஜையும் செய்து முடிந்தபிறகு, கோபிசந்தரும பாதபூஜை முதலானவைகளைச் செய்து வணங்கித் தன் மந்திரிசளோடு பார்த்து, எனது அரசாட்சியை என் புதல்வனுக்குக் கொடுத்துவிடுங்களென்று சொல்லி, சற்குரு நாதரை நோக்கி, ஸ்வாமீ! அடியேனுக்குத் தேவரீருடையதுறவறதர்மத்தைத்தந்தருள வேண்டும் என்று பிரார்த்திக்க, குருநாதர், ஓகோபிசந்தனே, நான் உனக்கு அமரமாக ஆசீர்வதித்திருக்கிறேன், அதைப்பெற்று அரசாட்சியை நடத்திப் போகசுகத்தை அநுபவியாமலவிட்டு, வைராக்யத்தை யடைந்து வீணாக உடம்பை வருத்துவதனால் என்ன ப்ரயோஜநம்? உலகத்தில் வைராக்கியம் பெறுவதிலும நஞ்சுண்ணலாம், ஆகாயத்தில் உலாவலாம், சப்தசமுத்திரங்களேயும் நீக்தலாம், மற்றுமுள்ள அருமையான காரியங்களேயுஞ் செய்யலாம், வைராக்யத்தைக் காப்பாற்றுதல் மிகவும் அருமையென்று சொல்ல, கோபிசந்தன் சற்குருநாதருடைய திருவடியைத் தாழ்த்து வணங்கி, ஸ்வாமீ! இதுவரைக்கும் அடியேன் அநுபவித்த விஷயாகந்தம்போதும், ஆதையால் தேவரீர் கட்டளைக்கேற்கும்படி செய்தருள வேண்டும் என்று ப்ரார்த்திக்க, குருநாதர் அரசன்விரும்பினபடியே துறவாசிரமத்தை அருள்செய்தார். செய்தவுடனே அரசன் லக்ஷாசி வேஷம் பூண்டு சோளிகையைத் தாங்கி, எல்லா வீடுகளிலும் பிச்சையேற்று வரும்போது, தம் வீட்டின் வாசற்படியில்வந்து நின்று

சற்றும் மனவருத்தமில்லாமல், ஆலக் தாயே என்றவுடனே, அந்தச் சத்தத் தைக் கேட்ட மனவியானவள் விரைவாய் வெளியே வந்து, தன் கணவரை நோக்கி அந்தோ, என் ப்ராணநாதரே! நீர் இந்தக் காரியம் செய்தது தகுதி யாமோ? என்னிடத்தில் ஏதோ குற்றங்கண்டு இப்படிச் செய்தீர்போலும் என்று சொல்லி, நாயகர் இந்தக் கோலங்கொண்டுவரப் பார்த்தால் இவ்வுலக த்தில் எந்த மாதர்களாயினும் பொறுப்பார்களா என்று புலம்பி யழுது ப்ர லாபிப்பதை அரசன்நோக்கி, அவளுக்குவேண்டிய புத்திமதிகளைச் சொல்லித் தேற்றி, மற்றவருடைய துக்கத்தையுமநீக்கி, தன்தாயினிடத்துக்குப்போய்க் கும்பிட்டு நிற்க, அந்தத் தாயாகிய மைகாவதியார் புதல்வனை அன்போடு அணைத்து, உச்சிமோந்து ஆதரிக்க, அவரை நோக்கி, தாயே! உன் கையால் பாற்சோறிடவேண்டும் என்றார். அப்படியேயிட்டு, அழுது செய்யும்போது, மைந்தனை நோக்கி, என் வயிற்றிற்பிறந்த நீ இப்படிப்பட்ட வைராக்யத்தை யடைத்து, என் குலமுழுதும் ஈடேறச் செய்தாய், இந்த ஆச்சிரமம் பூண்ட உன்னைப் பார்த்த என் மனத்துக்குண்டாயிருக்கிற பெரு மகிழ்ச்சிக்கு ஒரு அளவுண்டோ, இல்லை என்று வாழ்த்தி, குழந்தாய்! நீ உன் விருப்பத்தின் படியே திவ்ய தேசயாத்திரை செய்துகொண்டு, பன்னிரண்டு வருஷத்துக் கொருதரம் இங்கு வந்து நான் தருகிற பாற்சோற்றை யுண்டு என் மனத் தை மகிழச் செய்து போவென்று சொல்லவே, சோபிசந்தர், அப்படியே செய்கிறேனென்று தாயினிடத்தில் விடைபெற்றுப் போய், புண்ய தீர்த்த யாத்திரையும், புண்ய க்ஷேத்ரயாத்திரையும் செய்துகொண்டு பத்ராவதிநகரத்து க்குப்போய், அந்தப் பட்டணத்தில் சம்பாவதி என்னும் பெயரையுடைய தன் தங்கையிருப்பதை நினைத்து, அவள் வீட்டுவாசற்படியில் போய்நின்று ஆலக் என்று பிக்ஷை கேட்க, அவள் வீட்டு வேலைக்காரி யோடிவந்து இவரைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, வீட்டுக் குள்ளே வந்து, அம்மா! இங்கே பிக்ஷை யேற்க வந்தவரை நோக்குஞல், கோபிசந்தர் என்று எனக்குத் தோன்றுகின் றது, நீயும் வந்து பார்த்துநிதானித்தறியவேண்டும் என்றுசொல்ல, உடனே விரைந்து வந்து இவரைப் பார்த்து, தன் தமையனென்றறிந்து, இடி வீழ்ந்த மரம்போல் நிலத்தில் விழுந்து, அழுது தேம்பிக் கதறி, அண்ணரே! அரம் பையர்போன்ற பேரழகையுடைய அநேக மாதரையும், குபேரன் பட்டண மாகிய அளகை போன்ற பட்டணத்தையும், இந்திரனுடைய அத்தப்புரம் போன்ற அந்தப்புரத்தையும், அவனிடத்திலுள்ள நவநிதிகள்போன்ற செல்வ ங்களையும்விட்டு, இந்தக்கோலமாய் வரக் காரணம் யாதென்றுகேட்க, இவர், தங்கையை நோக்கி, தங்காய், நான் சற்குரு கடாக்ஷம் பெற்ற பிறகு, என் மனமானது, ஸ்ரீஹரியின் திருவடி த்யாகத்திலன்றி, வேறொன்றிலும் செல்ல வில்லை, ஆதலால், வெளிப்பட்டு வந்துவிட்டேன், அதைக்குறித்து நீ தூக்கி க்கவேண்டாம் என்று சொல்லி, அவளிடத்தில் விடை பெற்றுத் தீர்த்த யாத்திரை செய்துகொண்டு, பன்னிரண்டு வருடங்கள் கழியவே, தம் தாயினி

டத்திற்குவந்து, அவரைச் சேவித்து, அவர் தந்தபாற்சோற்றை யமுது செய்துபோயினர்.

அதன் பிறகு, மங்கையர்க்கரசியாகிய ப்ரேமளா என்பவள், அரசாட்சி செய்கிற மலையாள தேசத்துக்கு மச்சேந்திரநாதர் ஒருகாலத்தில் போக, அம் மங்கையர்க்கரசியானவள், இவருடையகட்டழகைக்கண்டு மயங்கினாள். அவள் அழகைக்கண்டு இவரும் மயங்கினர். இப்படி ஒருவரிடத்தில் ஒருவர் மோகங்கொண்டு, இருவருங் கூடி, விஷய போக சாகரத்தில் மூழ்கி யழுந்திக் கிடக்குங்காலத்தில், இந்த ப்ரேமளாவயிற்றில் ஒரு ஆண்குழந்தை பிறந்தது, அந்தக் குழந்தைக்கு மீநநாதன் என்று பெயரிட்டு, மிருதியாகிய அன்போடு வளர்த்துவருங் காலத்தில், ஒரு நாள், ப்ரேமளாதேவியின் முகத்தை நோக்கி, பெண்ணே, தீர்த்தயாத்திரை செய்யவந்து, உன்னுடைய மிக்ககாமத் தீயிற் சிக்கி, உன்னைப் பிரியமாட்டாமல் பரிதபிக்கிற என்னை அழைத்துப் போவதற்குக் கோரக்க நாதன் வருவான், அவன் என் மாணாக்கன், என்று சொல்லக்கேட்டு, அவள் மனவருத்தத்தோடு மந்திரிகளை நோக்கி, கம்முடைய நகரைச் சுற்றிலும் காவல் வீரரை அமைத்து, துறவிகள் யாவராயினும் வந்தால், நிர்த்தாக்ஷண்யமாய், அவர்களைச் சிரச் சேதம் செய்யும்படி கட்டளை பிறப்பியுங்கள் என்றாள். அவர்களும்அப்படியே நகரைச்சுற்றிலும் காவல்வீரரை யேற்படுத்தி இந்த ஏற்பாட்டையும் அவர்களுக்குச் சொல்லி வைத்தார்கள். இப்படி யிருக்க, கோரக்கர், தமது குருவாகிய மச்சேந்திர நாதரைத் தேடிக்கொண்டுவந்து, இந்த நகரத்தில் ப்ரவேசித்து, ஒரு வீட்டு வாசற்படியில் நின்று ஆலக் என்று சொல்ல, அந்த வீட்டுக்காரி வெளியே வந்து, இவருடைய வயது அழகு முதலியவற்றைக்கண்டு, இரக்கங் கொண்டு, நகரைச் சுற்றிலுங் காவல்வீரரிருக்கிறார்கள், அவர்கள் துறவியாகிய உம்மை ப்பார்த்தால் கொலை செய்வார்கள், இந்த ஊரையாள்கின்றவளாகிய ப்ரேமளா தேவியின் கட்டளை இப்படி யுண்டாயிருக்கின்றது, ஆகையால், நீர் இந்த நகரிலிருக்க வேண்டாம், தக்ஷணமே அவர்கள் கண்ணுக்குப் புலப்படாமல் வேறோரிடத்துக்குப் போய் விடும் என்றாள். அதைக் கேட்ட கோரக்கநாதர், அச்ச மடைந்து, நமது சற்குரு நாதரை எப்படித் தேடிக்காண்பது என்று மனத் துயரத்தோடு, ஒரு மரநிழலில் உட்கார்ந்திருந்தார். அப்போது அந்த வழியாகச் சில வேஷதாரிகள் வந்தார்கள். அவர்களை கோரக்கர் நோக்கி, நீங்கள் துன்பத்தோடு இங்கே வந்ததற்குக் காரணம் யாதென்றுகேட்க, அவர்கள் கோரக்கரை நோக்கி, ஸ்வாமீ! இந்த நகரத்தை யாள்பவரிடத்திற்குப் போய், எங்கள் கூத்தாட்டின் விநோதங்களைக்காட்டி, ஏதாயினும் லாபமடையலா மென்று எண்ணி வந்தோம், வரும்போது வழியில், மிருதங்கக்காரன் நோயாளியாகி விட்டான். இனி நாம் செய்வது என்ன வென்று எண்ணித் துன்ப மடைந்தோம் என்று சொல்ல, கோரக்க நாதர் அவர்களைப் பார்த்து, நான் மிருதங்கம் நன்றாய் வாசிப்பேன், என்னை அழைத்துக்கொண்டு போ

ங்கள் என்று சொல்லினர். அதனைக் கேட்டு அந்த வேஷதாரிகள் மனமகிழ்ந்து இவரையும்அழைத்துக்கொண்டு நகரத்தினுள்ளே போய், மச்சேந்திரநாதரும், ப்ரேமளாவும் சேர்ந்து ஒரே ஆசனத்தில் வீற்றிருக்கக்கண்டு, அவர்களுக்கெதிரே, விசித்திரமாய் நடனஞ் செய்ய, கோரக்கரும் அந்த நடனத்துக்கிணங்க மத்தளங் கொட்டினர். அப்போது, கோரக்கர், தாம் வந்ததைச் சற்குருநாதர் அறியும்படி, அந்த மத்தள வோசையால் தெரிவித்தார். உடனே மச்சேந்திரர் அறிந்துகொள்ளுவதற்கு முன்பே ப்ரேமளா அறிந்து, மனம் அஞ்சி,கையைநெரித்து,கோரக்கர்வந்துவிட்டாரென்றுமச்சேந்திரநாதருக்குத் தெரிவிக்கத் தெரிந்து கொண்டு, ஆசனம்விட்டெழுந்து வந்து, சீடனே அணைத்து, இன்சொற்கள் பேசியிருக்கும்போது, ப்ரேமளாவானவள், வேஷதாரிகளுக்கு வேண்டியபொருள்களைக் கொடுத்தனுப்பினபிறகு, தனதுநாயகரைக் கோரக்கர் அழைத்துக்கொண்டு போய் விடுவாரே யென்கிற ஏக்கத்தால், அங்கபாதகிகளையும் வெறுத்து, அல்லும் பகலும துக்கித்துக்கொண்டிருக்க, கோரக்கர், தகுதியான சமயம் பார்த்துக்கொண்டே யிருந்து, ஒருநாள், ஸ்வாமீ, தேவரீர் அடியேனுடு எழுந்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க, மச்சேந்திரநாதர், தமது ப்ரேமாதிசயத்தையுடைய நாயகியைப் பிரியமாட்டாதவராய், கோரக்கரை நோக்கி, அப்பா, நீர்வள முதலிய பல வளங்களும் அமைந்த இந்த நகரம்போல, உடலுயிர்களுக்கு இன்பஞ் செய்வதாகிய நல்ல நகரம் வேறொன்றில்லாமையாலும, பிறந்த புதல்வன் மிகவும் பிரியமுள்ளவன் ஆகையாலும, இவ்விடம் விட்டு வருவதற்கு வாய்ப்பில்லாமலிருக்கின்றது, நீ வாவென்று உன்னை யழைப்பதும் குற்றமாயிருக்கின்றது, ஆதலால் நான் ஒன்றுஞ் சொல்ல மாட்டேன் என்று மனம் வருந்துகிற சற்குருநாதருடைய துன்பத்தைக் கோரக்கர் பார்த்து, இதற்கு யாம் என்ன செய்வோமென்று, நினைத்துச் சிலகாள் அங்கேயிருக்க, ஒருநாள் ராத்திரியில், மனைவியோடு சயனித்துக்கொண்டிருக்கிற மச்சேந்திரருடைய குழந்தை, மென்மையாகிய சயனத்தின்மேல் ஜலமலங்களைவிட, அதனை யறிந்த மச்சேந்திரர், தமது பாணுக்காகிய கோரக்கரை யழைத்து, இக்குழந்தையை நீ கழுவிக்கொண்டு வாவென்று சொன்னவுடனே, எடுத்துக்கொண்டு போய், உதயகாலத்தில் ஆற்றிற்கழுவிக் கல்லின்மேல் மோதி, உடம்புமுழுதும்சிதைந்து துண்டுதுண்டாய்த் தெறிக்கும்படி துவைத்து வெயிலில் உலர்த்தினர். மச்சேந்திரர், கோரக்கரை நோக்கி, எங்கே குழந்தையென்று வினவ, அவர் நீரில் துவைத்து, வெய்யிலில் உலர வைத்தேன் என்று சொன்னவுடனே, மச்சேந்திரர், இவன் குழந்தையைக் கொலைசெய்தானென்றறிந்து, நிலத்தின்மேல் வீழ்ந்தலறி, மூர்ச்சித்தார். அப்போது, அவர் மனைவியாகிய ப்ரேமளா, வயிற்றிலும், மார்பிலும், முகத்திலும், தலையிலும் அறைந்துகொண்டு, கோவென்றலறிப் புரண்டு விழுந்தாள். குருநாதராகிய மச்சேந்திரர் மயக்கந்தெளிந்து கோரக்கரை நோக்கி, என் குழந்தையைக் கொன்றது உனக்கு அழகோ! அந்தக் குழந்தையாகிய நீநாதனே, இந்த க்ஷணத்தில்,

காண்பார்க்கும்படி வரவழைக்காமற் போனையானால், நீ கல்லமாணிக்க னல்லை யென்று சொல்லுதற்குமுன்னே, நூற்றெட்டு மீகாதார்களை புண்டபண்ணிக்காட்ட, ப்ரேமளா, இதைக்கண்டு, மிகவும் ஆச்சரியப்பட்டு, என் வயிற்றிற் பிறந்த புத்திரன் இன்ன னென்று காட்டவேண்டு மென்று வேண்ட, நூற்றேழு மீகாதார்களை மறைத்து, மீதியாயிருந்த ஒரு மீகாதானை, ப்ரேமளாவினிடத்திற் கொடுத்து, இதுதான் உன் குழந்தையென்று சொல்லி, பிறகு சற்குருநாதரை நோக்கி வணங்கி, ஸ்வாமீ! இவ்விடத்தில் நெடுகாளா யிருந்தீர், இப்போதாயினும் என்னுடை வாருமென்றுசொல்ல, மச்சேந்திரர், இவன் சொன்னபடியே, இவனுடை போகாதிருந்தால், இன்னம என்ன அநர்த்தம் நேரிடுமோவென் றெண்ணி, தமது நாயகியாகிய, ப்ரேமளாவின் முகத்தை நோக்கி, பெண்ணே, என் மாணாக்கராகிய கோரக்கர் அழைக்கிறதினால், நான் போய் வருகிறேனென்றுசொல்ல, ப்ரேமளாவானவள், நமது நாயகர், போகத்தில் மிகவும் இச்சையுடையவர், ஆனாலும் இவரை நிறுத்தினால் இன்னம் என்ன விபரீதங்கள் உண்டாகுமோ வென்று, அவருக்கு வழிச் செலவுக்கு உதவவேண்டுமென்று ஒரு தங்கப்பாளத்தைக் போரக்கருக்குத் தெரியாமல் சோளியிலிவைத்துக் கண்ணீர்விட்டழுதாள். பிறகு, உம்மை நான் இனிமேல எப்போது காண்பேன் என்று சொல்லி அனுப்ப, சீடராகிய கோரக்கரோடு, நகரத்தை விட்டு, ஒரு அரண்யத்தில் போகும்போது, ஒருவரும் நடவாமல் இருக்கிற இடத்தைப்பார்த்து, சீடரை நோக்கி, இவ்வழியில் திருடர் பயம் உண்டோவென்று கேட்க, சீடர், ஸ்வாமீ! எல்லாவற்றையும் விட்டவுமக்கு த்திருடர் பய மேனுண்டாயிற்றென்று கேட்க, இருவரும அங்குள்ள ஒரு தடாகக்கரையிற்போய்ச் சேர்ந்தார்கள். அப்போது குருநாதர் தமது சோளியைச் சீடரிடத்திற கொடுத்துவிட்டு, சௌச விதி செய்யப் போனபோது, கோரக்கா அந்தச் சோளியைப் பரிசோதித்துப்பார்த்து, அதனுள்ளே ஒரு தங்கப்பாள மிருக்கக் கண்டு, இதனாலல்லவோ நமது குருநாதர்க்கு அச்சமுண்டாயிற்று என்று ஆலோசித்து, அதை அந்தத் தடாகத்தில் எறிந்து விட்டு, பாளத்தின் பளு வெவ்வளவோ அவ்வளவு பருவுள்ள கற்களைச் சோளியில் நிரம்பத்துலவக்க, குருநாதர் தமது அநுஷ்டாநமுடித்து வந்து சோளியைத் தூக்கித் தோளில் மாட்டிக்கொண்டு, இருவருமாகக் கூடி வழிநடந்து போய், எதிரே ஒரு வனாந்தரத்தைக்கண்டு, சீடர் முகத்தைநோக்கி, இத்தவழியில் கள்ளர் பய முளதோவென்று கேட்க, சீடர், ஸ்வாமீ! திருடர்பயம முண்டே தீர்ந்து விட்டது என்றார். குருநாதர் இவன் இப்படிச்சொன்னதற்குக் காரணமென்ன வென்று அதிசயத்தோடு ஆலோசித்து, தமது சோளிகையிற் கையிட்டுப் பார்த்துத் தங்கப்பாளத்தைக் காணமல் கற்கள் நிறைந்திருப்பதைக் கண்டு, அவற்றை யெடுத்தெறிந்துவிட்டு, கோரக்கா, என் பிரியநாயகியானவள், நமக்கு வழிச்செலவுக்குக் கொடுத்த தங்கப்பாளத்தை யெறிந்துவிட்டுச் சோளியில் கற்களை நிறைத்துவைத்தாய், நீ செய்தகாரியம் மிகவும் கன்றுயிருக்கின்றது, உலகத்தில், சீடர்கள் தமது ஆசாரியர்களுக்கு உடல், பொருள், ஆவி

இம்மூன்றையும் கொடுப்பார்கள்; அப்படியிருக்க, நீ என் குழந்தை, பொன் எல்லாவற்றையும் நாசஞ் செய்தாய், ஆதலால், நீ யெனக்கு கற் சிடனல்லை, நீ என்னைவிட்டுப் போவென்று கடிக்துசொல்ல, சிடராகிய கோரக்கர், தாங் கள் போகும் வழியிலுள்ள மலையைப்பார்த்து,அதின்மேல் சிறுநீர்விட, அந்த மலைமுழுதும் பொன்னுய்விட்டது,அப்போது குருநாதரைப்பார்த்து, தேவரீ ருக்கு வேண்டிய பொன்னை எடுத்துக்கொள்ளலாமென்று பொன்மலையைக் காட்ட, குருநாதர்,நான் மாயையால் அறிவழிகதேன் என்றுசொல்லி, மனக் தெளிகதுஆராய்ந்து கோரக்கா,தேவர்களுக்கு அமிர்தங்கொடுத்த திருமாலே நீ என்பதைத் தெரிகதுகொள்ளாமற்போனேன் என்று சொல்ல, கோரக்க ரும் குருநாதரை நோக்கி, ஸ்வாமீ ! தேவரீர், சாக்ஷாத் சிவ பெருமானே யல்லவோ இப்படி அவதரித்து அடியேன் மஹிமை பெற்று விளங்கும் பொருட்டு, ப்ரபஞ்ச மாயையில் கட்டுப்பட்டு உழலுவோர்போல் கடிக்கிறீர் என்று பல தோத்திரம பண்ணிக் கொண்டாடி வணங்க, எல்லா வுலகத்தா ரும வணங்கத்தருகதவராகிய சற்குருநாதர் நகைத்து, பொன்மலையை மூன் போலக் கல்மலையாகசெய்து, திருவருள் வருது, புட்கரதீர்த்தத்தைக் கண் டார்கள். அவ்விடத்தில் காணபாவடனே நூலந்தரர் வருது கண்டு, ஆலி ங்கனஞ் செய்துகொண்ட பிறகு, இவர்களும் முகமன் வசனங்களைச் சொல்லி, ஆகந்தக்கடலில் ஆழ்ந்து, ஸ்ரீபகவத் குணுதபவஞ் செய்து சில நாள் கழிந்த பிறகு, ஒருவரிடத்தில் ஒருவர் விடைபெற்றுக்கொண்டு தத்தம் இடங்களுக்குப் போய்விட்டார்கள். இப்படிப்பட்ட பெருஞ்சிறப் பமைந்த இவர்களைத் தியானிப்பவர்களும், இவர்களுடைய வைபவத்தைக் கேட்பவர் களும் எல்லாச் சித்திகளையும் பெற்று, மெய்ஞ்ஞானத்தையும் அடைந்து, நித்திய வாழ்வினராய் உயர்வற வுயர்ந்த நிர்மலனுகிய பகவானுடைய ஸ்ரீ வைகுந்த பதவியையும் அடைவார்கள் என்று சிவபெருமான் உமாதேவி யாருக்குச் சொல்லி, மேலே சாங்கதேவரது வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

கோபிசந்தராஜன் சரித்திரம் முற்றிற்று.

---

## கஎ-வது சாங்கதேவர் சரித்திரம்.

ஒருநாள், ஞானதேவர், நிர்மலராகிய பகவத் சங்நிதி யடைந்து பகவானை வணங்கி, ஸ்ரீ லக்ஷ்மீநாதனே, அடியேன் அளகாபுரிக்குப் போகிறேன், விடை கொடுத் தருளவேண்டும் என்று ப்ரார்த்தித்து விடை பெற்றுப் போனர். போனவர், சர்ப்பாபரணனுகிய சிவபெருமானென்று சொல்லத் தகுந்த சித் தேசுவரனிடத்தில் வர, திருவாழியை யுடையவராகிய திருமாலின் உருவத் தையே கொண்ட ஞான தேவர் எழுந்தருளினதை, சாங்கதேவர் அறிந்து கொள்ள, அதற்குமேலே கடந்த செய்தியைச் சொல்லுவோம்; எப்படியென்

ரூல், பிரமதேவனுடைய ஒரு திருத்தின் முதற்சாமத்துக்குள்ளே பதினைஞ்சு இந்திரர்கள் பிறந்து, மயக்கத்தோடுகூடிய சருமத்தின் வசப்பட்டவர்களாய், பயங்கரமாகிய சிறையில் முற்காலத்தில் அடைபட்டார்கள். அப்போது, நாரதமுனிவர் அவர்களுக் கெதிரே வர, அவர்கள் அம் முனிவரை வந்தனை வழிபாடுகள் செய்து வணங்கித் தோத்திரம் பண்ணுதலும், முனிவரும் மன மகிழ்ச்சியோடு அவ்விடத்தில் ஸ்ரீ ஹரி நாம ஸங்கீர்த்தனஞ் செய்துகொண்டு எழுந்தருளி யிருக்க, மேலே சொல்லப்பட்ட பதினெல்வரில் ஒருவராகிய சாங்கதேவர், நாரதமுனிவர் முகத்தைப் பார்த்து, ஸ்வாமீ, இந்தச் சிறையி னின்றும் நீங்கும்படி அடியேனுக்குக் கிருபை செய்யவேண்டுமென்று வண ங்க, நாரதமுனிவர் நோக்கி, சாங்கதேவா, உன் எண்ணமானது விண்ணுலக த்தில் முடிவு பெறுது, மண் ணுலகத்தில், பண்டரி புரத்தில், போய்ச் சேர் வாயானால் உன் தீவினை தீரும். அந்தப் பண்டரிபுரம் என்பது இவ்வுலகத்தி லுள்ள ஒருவைகுந்தமென்று சொல்லத்தகுந்தது. அவ்விடத்தில் ஸ்ரீகண்ண பிராணுவர், செங்கல்லின் மீது இடுப்பிற் கையை வைத்துக் கொண்டு, நின்ற திருக் கோலமாய்ப் புண்டலீகர்க்குச் சேவை சாதித்தருளின திவ்ய வேஷத்தைச் சாதுக்கள் அநேகர் வந்து தரிசித்து ஸ்ரீ ஹரி பஜனை செய்து கொண்டு தங்கி யிருக்கிறதனாலே, நீ அந்த க்ஷேத்ரத்தை அடையவேண்டும் என்று சொல்லக் கேட்டுச் சம்மதித்த சாங்கதேவர், ஸ்வாமீ, துக்கரூபமாகிய இந்தச் சரீரத்தை விட்டு, அங்கே போகும்படியான உபாயமொன்றை அருள் செய்ய வேண்டு மென்று ப்ரார்த்திக்க, முனிவர் த்வாதசாக்ஷரி மந்த்ரத்தை உபதேசித்தருளினார். உபதேசம்பெற்ற சாங்கதேவர் தக்ஷணமே முன்னைய சரீரத்தை விட்டு, கங்கைக் கரையில் உள்ள ஒரு விருத்த வேதியனிடத்தில் அவதரித்தார். அவதரித்ததும் அவரது சௌகரியாதிகளைக் கண்ட தாய் தந்தையர் அளவற்ற மகிழ்ச்சியோடும் அன்போடும் வளர்க்க வளர்ந்து, எட்டு வயது நிரம்பின வுடனே உபநயனம் செய்வித்தார்கள். பிறகு, அவர் எங்கே போகவேண்டுமென்று நினைத்தாலும் அவ்விடத்துக்குப் போகும்படியான கமன சக்தியையும், சொன்ன சொற்க ளெல்லாம் சொன்ன வண்ணமாகவே பலிக்கும்படியான வல்லமையையும், சிறந்த அஷ்டமா சித்திகளையும், அறு பத்துநான்கு கலைஞானத் தேர்ச்சியையும், அஷ்டாங்கயோகப் பயிற்சியையும் பெற்று, ஆயுளை வளர்த்துக்கொண்டு வாழ்ந்திருந்தார். இப்படி ஆயிரத்து நானூறு வருடத்தளவும் இறவாமலும், முதுமையை யடையாமலும், பெரி தாகிய இந்த ப்ரபஞ்சத்தில் மிகுந்த ப்ரதாபசாலியா யிருந்தார். பிறகு, கான தேசத்தில், ஒரு மடவின் கரையில் உள்ள மடத்தில் வாசம் பண்ணுவோரா யிருந்தும், நாள்தோறும் கோதாவரி நதியில் வந்து மூழ்குவோரா யிருந்தார். இவர் ஆயிரத்து நானூறு சீடர்கள் சூழ்ந்து உபசரிக்க, யோகப் பயிற்சியிற் சிறந்தவராகி, இவருக்கு நிகராவார் இவ்வுலகத்தில் ஒருவருமில்லையென்னும் படி விளங்கினார். இப்படி யிருக்க, ஒருநாள், உன் ஆண்மையை அடக்கு தற்குரிய தத்துவ ஞானியார் ஒருவர், அளகாபுரியில் வந்து தங்கி யிருக்கிறார்,

அவரிடத்தில் போய் அவருடைய அருள் பெறுவாயாக வென்று ஒரு அசரீரி உண்டாயிற்று. அந்த அசரீரி வார்த்தையைக் கேட்ட சாங்க தேவர், இது மிகவும் ஆச்சர்யமா யிருக்கிற தென்று நினைத்து, அந்த அசரீரியால் தெரிவிக்கப்பட்ட அவருக்கு, ஒரு கடிதத்தை முன்னே யெழுதித் தெரிந்து கொள்ளுவோமென்று நினைத்து, பிறகு எழுதாம லிருந்துவிட்டார். ஏனென்றால், ஆசீர்வதித்து எழுதினால் ஆசாரியருக்குத் தகாது, தேவரீர் என்று எழுதுவேனென்றால், நான் முதியவனுகையாலே அதுவும் தகாது என்று ஆலோசித்து, தம் சீடரில் ஒருவனை யழைத்து அவன் கையில் வெறுங் கடிதத்தைக் கொடுத்து இதை அந்த ஞானதேவருக்குச் சேர்த்துவிடு என்று அனுப்ப, அவன், நல்லதென்று கடிதத்தை வாங்கிக்கொண்டு ஆகாசமார்க்கமாகப் போய், பண்டரிபுரத்தில் சேர்ந்து, எப்பொழுதும் பண்டரிநாதனை ஸ்மரித்துக்கொண்டே யிருக்கிற ஞானதேவரைக் கண்டு கடிதத்தைக் கொடுக்குமுன்னே, ஞானதேவர், அந்தச் சீடனை நோக்கி, அப்பா, இது சாங்கதேவர் கொடுத்த கடித மல்லவா என்று கேட்க, அவன் ஆம் என்று எதிரே வைத்தான். அந்தக் கடிதத்தை ஞானதேவர் உடைத்துப் பிரித்துப் பார்த்து, எழுதாமல் வெறுங் கடிதமாயிருக்கக்கண்டு, நீர் வெறுங் கடிதம் அனுப்பினதை நோக்குமிடத்தில், ஆயிரத்து நானூறு வயதும் பயனில்லாமலே கழிந்துபோயின வென்பதை அறிவித்தாற்போலக் காணப்படுகின்றது. இத்தனை வயது கழிந்தது, இன்னமும் உத்தமமாகிய ஞானநிலையை யறிந்தா யில்லையென்றும், சுத்த சைதன்யஸ்வரூபமான பரம்பொருள் எங்கும் வ்யாபித்து விளங்கும், அதற்குப்பெருமை சிறுமைகளும், இளமை முதுமைகளும், மற்றுமுள்ள விகாரங்களும் இல்லை, அது மாயாகாரியமாகிய இந்தச் சரீரத்திலுள்ளது, அதை இனியாகிலும் அறிந்துகொள்வாயாக என்றும் எழுதிக்கொடுத்தார். அதை வாங்கிக் கொண்ட சீடன் விரைந்து வந்து சாங்கதேவரிடத்தில் கொடுக்க, அவர் கடிதத்தைப்பிரித்துப் படித்துப்பார்த்து அதிலெழுதப்பட்டிருந்தசெய்திகள் எல்லாவற்றையுமறிந்து ஐயோ! நமது வாழ்நாள் வீணாளாகக்கழிந்துபோயினவே, இந்தக் கடிதத்தை யெழுதிவிடுத்த ஞானதேவரை இப்பொழுதே போய்த் தரிசிக்க வேண்டுமென்று ஒரு புலியின்மேல் ஏறிக்கொண்டு பாமபுசெலுத்தவந்தார். இவர் வருவதைச் சுவர்பீது உட்கார்ந்திருந்தவர் நோக்கி, சுவரைத்தெருவிற் போகக்கடவையென்றே, அந்தச்சுவரும் அப்படியே தெருவில் வரக்கண்ட சாங்கதேவர் விரைந்துகிட்டிவர, அவரை யெதிர்கொள்ளும்பொருட்டு ஞானதேவர் வந்தார். உயிரில்லாததாகிய சுவர்மீதேறி யிருந்தவரை, உயிருள்ளதாகிய புலிமீதேறிவந்தவர் கண்டு நாணி, புலியைவிட்டிறங்கி, அன்பு மிகுதியால் வணங்கி, அடியேனுக்கு ஞானத்தை அருள்புரியவேண்டு மென்று எதிரே நிற்க, இவர் பண்டரிநாதனுக்கு அடிமையாகிய என்னை நீரே யாண்டருள வேண்டுமென்று சொல்ல, ஆல நிழற்கீழே யெழுந்தருளியிருந்த தேசிகமூர்த்தியும் முந்தி வந்து, இருவரும் ஒரு மனமாகிக் கூடினபிறகு, ஞானதேவர்

சாங்கரை வாழ்த்தி நல்ல ஞாநோபதேசம் செய் தருளினர். செய் தருளின பிறகு, இந்த ஆலமரத்தி னடியில் நின்றவர்கள் மோக்ஷத்தை யடைவார்கள் என்று சொல்லி, சாங்கரை விட்டிற்குப் போக விடைகொடுத்தனுப்ப, அவர் போனபோது, ஞாநஜிரியர் தங்கை நிருவாணமாய் மங்கள நீராடிக்கொண் டிருக்கக்கண்ட சாங்கதேவர் ஒளித்துக்கொண்டார். அதையறிந்த முக்தாபாயி, மெய்ஞ்ஞாந ரூபமாகிய பரம பொருளை யடைந்தும், சுத்தமாகிய கல்லறிவு உனக்கு உதிக்கவில்லையே யென்று சொல்ல, சாங்கர் கேட்டு, உமது அறிவு இப்படி யிருக்குமென்று நானறிந்திலேன், அஜ்ஞாநாந்தகாரம் நீங்கப் பெற்ற தாயே என்று சொல்லிக்கொண்டுவந்து நமஸ்கரிக்க; ஞாநஜிரியர், சாங்கரை நன்றாக ஆசீர்வதித்தார். சாங்கதேவரும் அவர் சொன்னபடியே, சுற்ற மற்ற ஞாநம் வளர்ந்தோங்க, நீங்காதற் கருமையாகிய தேஹாபிமாநமும் நீங்கப் பெற்று, ஸ்ரீஹரிநாமஸ்மரணைசெய்ய விரும்பினர். அன்றிரவில் ஞாநதேவர் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்யத்தொடங்கி அந்தக்காலக்ஷேபகோஷ்டியில் கொடிதாகிய இந்தக் கலியுகத்தில், எல்லார்க்கும் ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணையை யொழிய வேறொரு தவமில்லையென்று ஸ்ரீ பாகவதத்தில் சுகப்ரஹ்ம ரிஷியா னவர் சொல்லியிருக்கிறார். ஆகையால் ஸ்ரீஹரியின் திருநாமங்களை உச்சரிப்ப வர்களுக்கு மோக்ஷசித்தியுண்டாகும். ஸ்ரீஹரிநாமத்தை உச்சரிப்பவருடைய ஸ்ரீ பாதரேணுவின் மஹிமையால் மூவுலகும் குற்றம் நீங்கி உஜ்ஜீவிக்கும். இந்த லக்ஷ்மீநாதனுடைய திருநாம மஹிமையை நாம் சொல்லி முடியுமோ என்று சொல்லி, உதயகாலத்தில் விட்டலப்பெருமானுக்கு ஹாரதி செய்து, வந்தவர்களுக்கெல்லாம் அவரவர்க ளிஷ்டப்பட்ட பிரசாதங்களையும் அருள் செய்து, சாங்கதேவரைநோக்கி, பண்டரிபுரத்தில்போய் மாதவனைத்தரிசியும் என்றார்; கேட்ட சாங்கதேவர் நன்று நன்றென்று சொல்லிப்போய்த் தரிசித் தவர்களுடைய பாவங்களை யெல்லாம் நீக்கி அவர்களைப் பரிசுத்தர்களாகச் செய்கிற பண்டரிபுரத்தில் வாழும் வாழ்வு மிகவும் சிறந்ததென்று, நால்வரு க்கும் வந்தநம் சொல்லி விடைபெற்று, தாளம், வீணை, மத்தளம் முதலான எல்லா வாத்யங்களும் முழங்க, ஸ்ரீஹரிநாமஸ்மரணை எல்லார்வாயிலும் நிறை ந்திருக்க, பாகவதகோஷ்டியோடு கூடி, ஆகந்தாவேசராய், பண்டரிபுரத்தைக் குறித்துப் போய், கோபுரத்தைப் பார்த்த மாத்திரத்தில், நமஸ்கரித்து, ஒரு வருக்கொருவர், இதிலும் சிறந்த நகரம் ஒன்றுமில்லையென்று பேசிக்கொண் டார்கள். இந்தப்பிரகாரமாக, நகரிலேசென்று அங்குள்ள சாதுக்களைக்கண்டு சேவித்து, சரீரநடுக்கத்தோடு தழுவிக்கொண்டு, சந்த்ரபாகா நதியை யடை ந்து அதில் நீராடி, புண்டலீகரைச் சேர்ந்து பூஜித்து, நகரத்தை வலம் வந்து கைகுவித்துக்கொண்டே கோபுரவாசலில் விழுந்து கும்பிட்டு, கருட கம்பத் தடியில் வீழ்ந்துவணங்கி, பாண்டுரங்கப்பெருமானைக்கண்டு வணங்கும்பொரு ட்டுக் கோயிலுக்குள்ளேபோய், பகவானைத்தழுவிக் கும்பிட்டு, தாயினும் மிகு ந்த அன்புள்ளவராகிய பெருமானுடைய நிஜரூபத்தை நேராகக்கண்டு, வாயார த்துதித்து, கண்ணீர் ததும்ப, வேதங்களாலும் அளவிடப்படாத பகவத்விஷய

த்தில் பற்பல தோத்திரங்கள்செய்து பிறகு திருமகள், சத்தியபாமை, ஆஞ்ச நேயர் என்னும் இவர்களுடைய கோயில்களிலும் போய்க் கண்டு சேவித்துத் தோத்திரஞ் செய்து, சபா மண்டப மடைந்து அநேக கீர்த்தனங்களைப் பாடி, சந்த்ரபாகா நதிக்கரையில், ஒரு புறத்தில், தபோசாலையொன் றேற்படுத்திக் கொண்டு, அதில் தவம் செய்துகொண்டிருந்தார். அப்படி யிருந்து பிறகு விட்டலப்பெருமானே நோக்கவேண்டுமெனகிற பேரன்பால் ஆஹாரநித்திரை களை யொழித்து, மூன்றுகாள் வரைக்கும் திருத் துழாய் மாலையை யணிந்த பண்டரிநாதனே மறவாமலிருக்க, இவரது திட வைராக்யத்தைப் பெருமான் அறிந்து, நடு ராத்திரியில் தமது நிஜரூபத்தோடு எழுந்தருளுதலும், சாங்க தேவர் பேரன்போடு எழுந்து வணங்கி வாழ்த்திப் பற்பல தோத்திரங்களைச் செய்தார்; அப்படிச்செய்து நின்றவுடனே, ஸ்ரீகண்ணபிரான், சாங்கதேவர் கையைப் பிடித்துக்கொண்டு நதிக்குள்ளே போயினர். அப்போது அவ்விடத் தில் ஒரு மணிமயமான ஒரு மண்டபத்தையும், அதில் அகிலகாரணனாகிய பகவான் ஸ்ரீபூமீளாசமேதரா யெழுந்தருளியிருப்பதையும், நித்யமுக்தர்கள் கோஷ்டியாயச் சூழ்ந்துகின்று வாழ்த்துவதையும் கண்டு, ஆநந்தபரிதப்ரு தயராய், ஆடிப்பாடிப் பரவசங்கொண்டு, கண்களில் ஆநந்தபாஷ்பங்கள் சிந்த நிற்கிற சாங்கதேவரைப் பகவானுனவர் நோக்கி, நான் இந்தச் செங்கலின்மே லிருந்துகொண்டு அவரவர் வேண்டிய வரங்களைக் கொடுத்துவருகிறேன். அன்றியும் தீர்த்தரூபமாகவும், க்ஷேத்ரரூபமாகவும் இருக்கிறேன். உன் கல் லொழுக்கத்தையும் பக்தியையும் கண்டு மகிழ்ந்தேன். உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள் ளென்று நியமிக்க, சாங்கதேவர், பகவானே நோக்கி, ஸ்வாமீ! எக்காலத்திலும் உமது திருவடியைத் தியாநித்துக்கொண்டிருக்கும் படி அடியேனுக்குக் கிருபைசெய்வதே எனக்குச் சிறந்தவரத்தைத் தேவரீர் கொடுப்பதாகும்; அதுவேயன்றி வேறு வரத்தை அடியேன் விருமப வில்லை யென்றார்; பகவானும் அப்படியே யாகட்டும் என்று அருளிச்செய்தவுடனே, கோயிலுக்குள்ளேபோய்ப் பாண்டுரங்கனைத் தரிசித்து, அதன்பிறகு திருகார ணபுரம வந்து சேர்ந்து அங்கு வாசம பண்ணிக்கொண்டிருக்குங்காலத்தில ஒருநாள், இவருடைய தியாநத்தில், செங்கலின்மேல் விளங்குகின்ற ஸ்ரீ பண் டரிநாதர் தோன்றினர். சாங்கதேவர், பகவானே நோக்கி, வணங்கி வாழ்த்தி நிற்க, பகவானும் இவரை நோக்கி, நீ போய்க் கோதாவரிநதிக்கரை யடைந்து கேசவமூர்த்திரூபமாய் விளங்குவதாகிய ஸ்ரீசாளக்கிராமத்தை வைத்துப் பூச னைசெய்து வாழ்வாயாகவென்று, சாளக்கிராமத்தையும் கொடுத்து மறைந்து போக, அதைப்பெற்றுக்கொண்ட சாங்கதேவர், கோதாவரிக்கரையை யடை ந்து அவ்விடத்திலுள்ள புண்ணிய தம்பம என்கிற ஊரில் எல்லாரும் வந்து சேரும்படியான மட மொன்றை யுண்டாக்கி, அதில் சாளக் கிராமப் பிரதி ஷ்டை செய்து, பூஜித்துக்கொண்டு, தமது சிடர்களுடனே கூடி வாழ்ந்து கொண்டிருந்தார். அப்படிப்பகவத்தியாநபராராய்அவ்விடத்திலிருக்கும்போது, கல்யாணபுரம் என்னும் ஊரில் வாழ்ந்திருந்த செல்வத்திற் சிறந்த ப்ராஹ்மண

ணன் ஒருவன் இருந்தான்; அவன் பேர் சங்கரன், அவன் தனது ஆயுள் முடிவு பெற்றமையால் மரணமடைந்தான், விதவையாகிய அவன் மனைவி ருதுவானாள். அதனைக் கண்டு அந்த வேதியன்தாயானவள் அழுது சோர்ந்து தங்களிடத்திலிருக்கிற தனத்தை யெல்லாம் தான தர்மங்களில் செலவழித்து, புதல்வனுடைய எலும்பை யெடுத்துக்கொண்டு போய், கங்கா நதியில் விட நினைத்து, மருமகளோடு கூடிக் காசியாத்திரை போகிறவள், சாங்க தேவர் வாசஞ்செய்கிறவூரில் வந்து தங்கினாள். வந்து தங்கினவள், சாங்கதேவருடைய மஹிமையைக் கேட்டு, அவரைச் சேவிக்கவேண்டுமென்று மனதில் நினைத்து, மருமகளும் தானுமாகச் சென்று, தான் முந்தி வணங்க, பிறகு மருமகளும் வணங்கி நின்றாள். அப்போது சாங்க தேவர் அவளை நோக்கி, உனக்கு நற்புதல்வன் உண்டாவானென்று ஆசீர்வதித்தார்; அதைக் கேட்ட பெரிய சோனக்காள், ஸ்வாமீ! விதவைக்குப்பிள்ளையுண்டாவதும் உண்டோ? இவளை மணஞ்செய்துகொண்ட என்புதல்வன் இறந்துபோனான், அவன் எலும்பைக்காசிக்ஷேத்திரத்திற் கொண்டுபோய்க் கங்காநதியில் விடவேண்டுமென்றெண்ணி நாங்களிருவருமாக போகிறோம், வழியில் தேவரீரைக்கண்டுசேவிக்க, குழந்தையுண்டாக ஆசீர்வதித்தருளினீர். ஆனால் தேவரீருடைய ஆசீர்வாதம் பொய்த்துப்போகுமோ என்று சொல்லி அழுதுகொண்டு நின்றாள். நின்றவளைச் சாங்கதேவர் கடாக்ஷித்து, என்சொல் பொய்க்காது, உன் மருமகளுக்கு நற்புதல்வனுண்டாவான், அவனால் உங்கள் குலமுழுதும் பிரகாசமடையும் என்று சொல்லி, அவர்கள் கொண்டுவந்த எலும்பைத் தமக்கு எதிரே வைக்கச் சொல்லி, அதின்மீது தீர்த்தத்தைப்ரோக்ஷித்து, அந்த எலும்பிற் பட்ட தீர்த்தத்தை, விதவையைப் பருகச்செய்தார். அந்ததீர்த்தமே அவள் வயிற்றில் கருவாயிருந்து பத்துமாத மானவுடனே குழந்தையைப் பெற்றாள். அந்தக் குழந்தைக்குப் பன்னிரண்டு நாள் கழிந்தவுடனே, சாங்கதேவர் பரிசுத்தஸ்நானம் செய்வித்து விட்டவன் என்று பெயரிட்டு ஆசீர்வதித்தருளினார். இதைக் கண்ட அந்த ஊரார் இகழ்வாய்ப் பேசிக்கொண்டிருக்கார்கள். இப்படியிருக்கக் குழந்தைக்கு ஐந்துவயது ஆனவுடனே, உபநயனம் செய்ய நிச்சயித்துப் பாண்டுரங்கன் சந்நிதிக்கு அழைத்துக்கொண்டுபோய்ச் சேவிக்கப்பண்ணின பிறகு, சுபமுகூர்த்தம் ஆராய்ந்து பார்த்து, வேதியரை யழைக்க அவர்கள் அந்தக் குழந்தையின் பூர்வோத்தரமறிந்து, நாங்கள் வரமாட்டோம் என்றார்கள். அவர்களைச் சாங்க தேவர் நோக்கி, இந்தக் குழந்தை ஸ்ரீகண்ணபிரானுடைய திருவருளாலே பிறந்தவனதலால் இதைக் குறித்து நீங்கள் சங்கிக்கலாகாது, அவசியம் நீங்கள் போய் உபநயனம் முடித்து வைக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவ்வேதியர், சாங்கதேவரை நோக்கி, இந்தக் குழந்தை அந்தக் கண்ணபிரானது திருவருளால் பிறந்தது மெய்யானால், அந்தக் கண்ணபிரானும் இந்த உபநயனத்தைக் காண வருவாரோவென்று கேட்க, சாங்கதேவர், வேதியரை நோக்கி, பகவான் அவசியம் வருவாரென்று சொல்லி, சந்த்ரபாகா நதிக்கரையில் போய், உணவு முதலிய

வற்றை யமைத்து வைத்துக்கொண்டு வேதியர்களை அழைக்க, அவர்கள் கண்ணபிரான் வந்தாரோவென்றார்கள். சாங்கதேவர், ஆம், பகவான் வந்தார் என்றார். இதைக்கேட்ட வேதியர்கள் இது உண்மைதானேவென் றறியும் பொருட்டுக் கோயிலுக்குள்ளே போய்ப் பார்க்க, பகவான் இல்லாமையால் மிகவும் ஆச்சரிய மடைந்து, நதிக்கரையில் வந்து பார்த்து, அவ்விடத்தில் பகவான் வந்திருக்கக் கண்டார்கள். கண்டு பேராநந்தத்தை யடைந்து, சாங்கதேவரைப் புகழ்ந்து, உபநயன விவாஹத்தை முடித்து, போஜநம் செய்து போய்விட்டார்கள். சாங்கதேவர், பெரியசோனக்காள், அவள் மருமகள், குழந்தை என்கிறமூவரோடுகோயிலுக்குப்போய்ப்பகவானைத் தரிசித்து விடைபெற்றுப் போய்த் தம்முடைய ஊரை யடைந்து, சுகமாய் வாழ்ந்திருக்குங் காலத்தில், ஊரிலுள்ளார் யாவரும் இவருடைய ப்ரபாவத்தைக் கேட்டு வந்து வணங்கினார்கள். பிறகு அந்தப்புதல்வனுக்குமணமுடித்து வருடந்தோறும் ஆடிமாசம், கார்த்திகை மாசம் இவ்விரண்டு மாசங்களிலும் பண்டரிபுரத்துக்குப் போய், குடக் கூத்தனுகிய ஸ்ரீகண்ண பிரானைச் சேவித்து வாவென்று நியமித்து, தமது சிடரோடு துவாரகைக்குப் போய்விட்டார்.

அப்படிப் போகும் வழியிலுள்ள தாருரில் வாழ்கின்ற யாதவ பண்டிதர், இவர் வருகிறரென்று கேள்விப்பட்டு எதிர்கொண்டுவந்து திருவடிபணிந்து, இவரது அருளைப் பெற்று, வைராக்யத்தையும் ஞானத்தையும் அடைந்து, ஸ்ரீ ஹரி நாம சங்கீர்த்தனஞ் செய்துகொண்டு இவருடன் போக முயன்றார். இப்படி இவர் போவதை யறிந்த இவர் மனைவியானவள், ஏழுமாச கர்ப்பவதியாயிருந்தும், கணவர் வரவேண்டாமென்று சொல்லியும், உறவினர் போக வேண்டாமென்று தடை செய்தும், கணவரது பிரிவைச் சகியாதவளாய், அவர்முன்னேபோக, இவரும்பின்தொடர்ந்து அவரறியாமல் போய்க்கொண்டிருக்கையில், மாசங்கள் நிறைந்ததனல் நடக்கச்சக்தியற்றவளாய் அயர்ந்து, சந்திரபாகா நதிக்கரையில் உள்ளப்ரஹ்மாரண்யத்தில் கர்ப்பவேதனைமிகுந்து உளைந்து, ஐயோ, பேறு காலத்தில் என் கணவர் அருகிலில்லாமல் சாங்கதேவரைப் பின்தொடர்ந்து போய்விட்டாரே, இவ்விடத்தில் எனக்கு ஒரு உற்றதுணையாவாரில்லையே, என் கணவருக்குக் குருவாகிய சாங்கதேவரே துணையாய் வந்து என் துயரை நீக்கவேண்டுமென்று தோத்திரஞ் செய்து அழுதாள். அந்த சமயத்தில், துவாரகையில் எழுந்தருளியிருக்கிற கண்ணபிரான் ஒரு பெண்ணுருக்கொண்டு இவளுக் கெதிரே வர, இவள் அம்மா! நீயார், எங்கிருந்து வருகிறாய் என்று கேட்க, பெண்ணுருக் கொண்டுவந்த சக்ரபாணியார், தாயே! உன் கர்ப்ப வேதனையைத் தீர்த்து வரும்படி சாங்கதேவர் என்னை யனுப்பினார், என் பேர் க்ருஷ்ணபாய் என்று சொல்லி, அந்த அரண்யத்தில், ஒரு ஊரை யுண்டாக்கி, அந்த ஊரிலுள்ள ஒரு வீட்டுக்குள்ளே யழைத்து வந்து, உபசாரஞ் செய்து, எளிதாகக் குழந்தை பெறும்படி செய்து, தாய்க்கும் குழந்தைக்கும் ஒரு துன்பமுமில்லாமல் உப

சாரஞ் செய்துகொண்டு ஒருமாத வரைக்கும் இருந்தார். இப்படி யிருக்கை யில், முன் னேபோன சாங்கதேவர் துவாரகையை யடைந்து, கோமதி நதி யில் மூழ்கி, ஸ்ரீகண்ணபிரானுடையசந்நிதிக்குப் போய், கை கூப்பி நமஸ் கரித்து, பிறகு சாஷ்டாங்கமாக நிலத்தில் வீழ்ந்து வணங்கி, அந்தக் கண்ண பிரானே தமது மனத்தில் சாக்ஷாத்கரித்திருந்து அறிவிக்க, அவன் செய்கை யை யறிந்துகொண்டு, என் பொருட்டாகப் பகவானுக்குப் பிள்ளை பெறுவிக் குந் தொழில் வாய்த்ததே யென்று துக்கித்து, பிள்ளை பெறுவித்த வீட்டு க்கு விரைந்துபோய், அந்த வீட்டு வாசற் சுற்பையை விளக்கிக்கொண்டிரு ந்த மாதவனுடைய மாதைக் கண்டார். கண்ட வுடனே அவள் சும்பிட்டாள். அவளை மாதவனென் றறியாமல், வீட்டுக்குள்ளே போய், மனைவியை நோ க்கி, உனக்கு இந்த ஆபத் காலத்தில் வந்து உதவி செய்த மாது எங்கே யென்று கேட்க, அவளும், வெளியில்வாசல் பெருக்கிக் கொண்டிருக்கிறவள் தான் என்று சொல்ல, உடனே வெளியே வந்து பார்த்து அங்கே யிருந்தவ ளைக் காணுமல் திகைத்து நின்றார். அப்போது மனைவியானவள், குழந்தை யைக் கொண்டு வந்து கணவருடைய திருவடியில் போட்டு வணங்கி நின்று, முன்னே நடந்த விருத்தாந்த முழுதும் சொல்லி, நீர் அனுப்பின க்ருஷ்ணை பாய் வந்து எனக்குச் சகலவித வுபசாரங்களுமை செய்தாள் என்று சொல்ல, சாங்கதேவர் கேட்டு, ஸ்ரீகண்ணபிரானே யெழுந்தருளி உனக்கு உதவிசெய் தார், உன் புண்ணியமே புண்ணியம் என்றுபுகழ்ந்து, பிள்ளையையும் தாயை யும் அழைத்துக்கொண்டு, வழி முழுதும் கண்ணபிரானையே கிர்னைத்துக் கொண்டு வந்து, துவாரகையைச் சேர்ந்து, கோயிலிற் போய், ஜகார்த்தக னைச் சேவித்து, அரவிந்தலோசநா, தீன தயாநிதி, ஸ்ரீலக்ஷ்மீநாதா, உன் அந ட்டிதகடநா சாமர்த்தியங்களை மநித்தறிய வல்லவர் யார் என்று தோத்திரம் செய்து, யாதவ பண்டிதரிடத்தில் தாயையும் பிள்ளையையும் ஒப்பித்து, நீர் இவரிடத்தில் மிக்க அன்புடையவராய் வாழ்வீர், ஹரிபஜனை செய்துகொ ண்டு, உன் மனைவி மக்கள் முதலிய யாவரும் ஸ்ரீஹரி பக்தியுள்ளவர்களாய்த் தொண்டு செய்து கொண்டிருப்பார்கள் என்று ஆசீர்வதித்து ஊருக்கு அனுப்பிவிட்டார்.

அதன்பிறகு சாங்கதேவர் நான்குமாச காலம் அங்கே தங்கி, ஸ்ரீலக்ஷ்மீ நாதனுடைய பகவானுடைய திருவடியை வணங்கி, சீடர்களுடனே அவ்விட த்திலிருந்து புறப்பட்டு, முன்னே யிருந்த இடத்திற்கு வந்து வாழ்ந்திருந் தார். அப்படி யிருக்கும் போது, பேதரி நகரத்தை யாள்கின்ற துருக்க அரச னுல் சிவாலயங்கள் விஷ்ணு-ஆலயங்கள் வேதியர் முதலானவர்கள் படுந் துன் பத்தை விட்டலப் பெருமான் அறிந்து இரக்கங்கொண்டு, சாங்க தேவரை நோக்கி, நீ பேதரி நகரத்துக்குப் போ வென்று சொல்லி விடை கொடுத்து அனுப்ப, அப்படியே சாங்கதேவரும் தமது சிடர்களோடு ஹரிநாமஸங்கீர் த்தநஞ் செய்து கொண்டு, பேதரி நகரத்துக்குப் போகும்போது, வழியில்

ஜங்கமர் தலிவனுகியும், குருவாகியும் இருக்கிற மல்லிகார்ஜுனன், தன் குரு வருளால் சில மந்திரங்களைக் கற்றிருப்பவன், இவன் ஒரு ஆசனம் பெற்று அதில் வீற்றிருப்பான், தன்னிடத்திற்கு வருவோரை அந்த ஆசனத்திலிருத்தி, அதில் அவர்கள் இருந்தபோது அந்த ஆசனத்தின் மகிமையால் அவர்கள் தலை கீழாய் விழுவதைப் பார்த்து நகைத்து அவமானஞ் செய்வான். தன் சீடரோடு கூடிக்கொண்டு இப்படிச் செய்பவனுகிய அந்த மல்லிகார்ஜுனன் இந்தச் சாங்க தேவருடைய பெருமையை யறிந்து, மனம் பொறுக்காதவனுகி, தன்னிடத்திலிருக்கிற நாய்க்கு இவர் பெயரை வைத்தான். அவனுடைய தீய செய்கைகளை இவர் அறிந்து அவனுடைய துரஹங்காரத்தை யடக்க வேண்டுமென் றெண்ணி, அவனது மடத்தில் நுழையவே, இதைக் கண்ட அந்த மல்லிகார்ஜுனன் எதிர்கொண்டு வந்து, இவரை ஆசனத்திலிருக்கும்படி ப்ரார்த்தித்தான். அந்த ஆசனத்தின் செய்கையை இவர் அறிந்து கொண்டு, அதை உற்றுப் பார்த்தவுடனே, அந்த ஆசனம் எரிந்து நீறுய்விட்டது. இந்த அற்புதத்தை அந்தக் கொடியோன் கண்டு மதி மயங்கி, வாய் பேசாமல், அச்சத்தோடிருந்து, சற்றுமேரம் கழித்து, இந்தச் சாங்கதேவரை நோக்கி, ஸ்வாமி, இந்த ஆசனத்தால் மிகுந்த மகிமையை யடைந்த நான் தேவரீருடைய பெருமையை அறியாமல் செய்த பிழையைப் பொறுத்தாண்டருள வேண்டுமென்று திருவடியில் வீழ்ந்து வணங்கினன். அவனுடைய சீடர்கள், ஆசனம் எரிந்து நீறுனதையும், தமது குருவாகிய மல்லிகார்ஜுனன் வணங்குவதையும் பார்த்து, இவர் யாரோ மஹாத்மாவாயிருக்கிறார், நமமுடைய குருவானவர் இவர் பெயரைத் தமது நாய்க்கு வைத்திருப்பதை இவர் அறிந்தால், என்ன அகந்தம் விளையுமோவென்று அஞ்சி, அந்த நாயை ஒரு சிறையில் அடைத்துவைத்துவிட்டு, ஐஞ்னூறுபேர்களும் அறுசுவையோடுகூடின அமுது ஆயத்தப்படுத்தி, உண்ணத்தொடங்குமபோது, சாங்க தேவரைத் துதிக்காமல், தாம பூண்டிருக்கிற லிங்கங்களை ஆராதிக்க நினைத்து, அவைகளைக் கட்டியிருந்த தணிகளை அவிழ்த்துப் பார்த்து, எல்லாரிடத்திலும் லிங்கங்கள் இல்லாமலிருக்கக்கண்டு, சாங்கதேவரைத் துதிக்காமல் நாம உண்ணத் தொடங்கினதனுல் இந்தஆபத்து நேரிட்டதென் றறிந்து, அவரை வணங்கித் தோத்திரம்பண்ணி, எங்கள் குற்றத்தைப் பொறுத்து ரக்ஷிக்கவேண்டும், எம்மிடத்தில் முன்போலச் சிற்பரக்குறியாகிய லிங்கங்கள் வரும்படி செய்யவேண்டும் என்று ப்ரார்த்தித்தார்கள். அப்போது சாங்கதேவர் அவர்களை நோக்கி, நீங்கள் உங்களை யடித்திருந்த நாயைப் பட்டினியா யிறக்கும்படி சிறையிலடைத்து வைத்துவிட்டு, உண்ணத் தொடங்கினீர்கள், அந்த நாய் தன் பசி பொறுக்கமாட்டாமல் உங்களுடைய லிங்கங்களை விழுங்கிவிட்டது என்றார். அதைக்கேட்ட ஜங்கமர், நாய், லிங்கங்களை விழுங்குமோ, இது என்ன அதிசயமா யிருக்கின்றது, அப்படி அந்த நாய் விழுங்கினது உண்மையானுல், அதின் வாயிலிருந்து அந்த லிங்கங்கள் வெளிப்படும்படி செய்யவேண்டுமென்று வணங்க, சாங்கதேவர் அந்தநாயை வெளியி

லழைத்து, அதை நோக்கி, நீ இரையாக விழுங்கின லிங்கங்களைக் கக்குவா யாக வென்று நியமிக்க, அப்படியே அது கக்கினதைக் கண்ட ஜங்கமர்கள் மிகவும் ஆச்சரியமும் அச்சமுங்கொண்டு, சாங்கதேவருடைய திருவடியில் வீழ்ந்து வணங்கி, எம்முடைய தீக்குணங்களை யொழித்து உம்மைச் சரண மடையும்படி செய்தீர், உமது பெருமையைச் சொல்ல வல்லவர் யாவர் ? எங்களைக் கடைத் தேற்றும் பொருட்டு ஸ்ரீ பகவானே இப்படி யெழுந்தரு ளினதாகப் பாவிக்கிறோம் என்று புகழ்ந துதிக்க, சாங்கதேவர், அவர்களை நோக்கி, நீங்கள் முன்போல இனி யாதொரு தீமையுஞ் செய்யாமல் ஸ்ரீஹரி பக்தி செய்து, அடியாரைப் பூஜித்துச் சுகமாய் வாழ்வீராக வென்று, ஆசீர்வதித்து, பேதரி நகரத்தை யடைந்தார். அடைந்து நீராடி, ஸ்ரீ ஹரி பூஜையும் செய்து, ஒரு ஏகாந்தமான இடத்திலிருந்து ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த் தநம் செய்துகொண் டிருக்குஞ் சமயத்தில், அந்தப பேதரி நகரத்தை யாருகின்ற துருக்க அரசனால் அதிகிக்கபபடுவோனுகிய ஒரு வேதியன், ஸ்ரீ ஹரி பக்தியிற் சிறந்தவனுதலால், இவர் ஹரிநாமசங்கீர்த்தநம் செய்வதைக்கேட்டு மிகுந்த அன்போடு வந்து வணங்கி, எங்களை யாட்கொள்ள எழுந்தருளினீர் ஸ்வாமீ, இங்நகர்க்கரசனுகிய துருக்கன் பரம துஷ்டன், வேதியர் முதலான வர்களுக்குத் தண்பத்தைச் செய்பவன், ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தநஞ செய்பவர்களைக் கண்டால் அவர்களுக்கு மிகுதியாகிய தண்பத்தைச் செய்வான், இப்போது நீவீர் எழுந்தருளினதை அறிந்தால் அவியம வந்து தீமை செய்வான், ஆனுல் அவன் மனைவியானவள் பாம்புகடித் திறந்துபோனுள், ஆகையால் வரமாட்டான், ஆனுலும் நீவீர் இங்கே தங்கி யிருப்பது நகா தென்று சொல்ல, சாங்கதேவர் அவ்வேதியனை நோக்கி, இரக்கத்தோடு, ஓ வேதியரே, அவன் மனைவியை எழுப்பித் தருகிறேன், இதைச் செய்தியை அரசனுக்குத் தெரிவிக்கக் கடவீர் என்று சொன்னவுடனே, வேதியன் அரசனிடத்துக்கு விரைந்து போய்ச் சொல்ல, அரசன், அப்படி எழுப்புவது உண்மையானுல் அவளை யிங்கே யழைத்துவாருமென்று சொல்ல, வேதியன் வந்து சாங்க தேவருக்கு அறிவிக்கவே, இவர் தமது சிடரோடு ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தநம் செய்து கொண்டி எழுநதருளினர். இவர் எழுநதருளுவதைக் கேட்ட அரசன் எதிர்கொண்டி வநது வணங்கி அழைத்துப் போய், ஒரு ஆசநம் தந்து, தோத்திரம்பண்ணி நின்று, ஸ்வாமீ, என் மனைவியானவள் பாம்பு கடித் திறந்துபோனுள், அவளைப் பிழைப்பிக்கும் பொருட்டு மஹா சமர்த் தர்களாகிய விஷ வைத்தியர் மாநதிரிகர் முதலானேர்களைக் கொண்டு செய்ய வேண்டிய உபாயங்களெல்லாம் செய்தும், அவள் பிழைக்கவில்லை, அவள் மரண மடைந்து நானுநாளானதனுல், இன்று வயிற்றைக் கீறி மணப்பொடி யை நிறைத்து வைத்தேன், நாளைக்கு மசிதில் கொண்டுபோய் வைக்க நினைக்கிறேன், இந்தச் சமயத்தில் நீவீர் எழுந்தருளினீர், நீர் இவளைப் பிழைக்கச் செய்தீரானுல், உமக்கு நிகரானவர் இவ்வுலகத்தில் ஒருவருமில்லை யென்று சொல்ல, சாங்கதேவர், ஒரு துளசி தளத்தை யெடுத்து அரசன்

கையிற் கொடுத்து, இதை அந்தப் பிணத்தின்மேல் வையென்று நியமிக்க, அப்படியே அரசனும் செய்ய, உடனே அவள் பிழைத்தெழுந்தாள். எழுந்து மிகவும் ஆரவாரம் செய்தலைக் கண்ட அரசன், இது என்ன, பிழைத்தெழுந்தும் இது ஒரு துன்பம் நேரிட்டிருக்கிறதே யென்று வெளியே வந்து சாங்கதேவரிடத்திற் சொல்ல, அவர், வேந்தனே, நீ அஞ்சவேண்டாம், போய் அவருக்கு என்ன வேண்டுமென்று கேட்பாயானால், அவள் கருத்து வெளியாகும் என்று சொல்ல, அரசனும்அப்படியே போய்க் கேட்க, அவள், ஓ ப்ராணநாதா, என்னைப் பிழைப்பித்தவரிடத்தில் நானும் நீயுமாகப் போய், அவரைச்சரணுகதி செய்து நின்று, இன்னும அவர் நியமிக்கிற நியமநப்படியே நடக்கவேண்டும, இப்படிச் செய்யாவிட்டால் நான் பிழைக்கமாட்டே னென்று சொல்ல, அரசன், அப்படியே செய்வோமென்று இருவரும் போய்ச் சாங்கதேவரைப் பணிந்து நின்றார்கள். அப்போது சாங்கதேவரானவர், அரசனை நோக்கி, உன்னுடனும் உன்னை யடுத்தோராலும், ஊரிலுள்ள பசுக்கள், வேதியர், சிவாலய விஷ்ணு ஆலயங்கள் என்பவைகளுக்கு ஒரு கெடுதியும் நேரிடாமலே நீதியோடிருந்து அரசு செலுத்துவது மல்லாமல், ஹரிதாசரை ஆராதித்துச் சுகநீவியாய் வாழ்க்கடவாயென்று ஆசீர்வதிக்க, அரசன் அந்தக் கட்டளையைச் சிரசா வஹித்துத் தன் மந்திரிக்குச் சொல்லி அப்படியே கடத்தும படி கட்டளையிட்டான் சாங்கதேவரும் அந்தத் தருணக வேந்தனைக் கர்வபங்கம் செய்து திருத்தி யாட்கொண்ட பிறகு, தமது பீடரோடு கூடிப் பண்டரிபுரத்துக்கு வந்து, விட்டலப் பெருமானைச் சேவித்து, ஓ பகவானே! அடியேன் சமாதியடைய விரும்பினேன், எந்த இடம் அதற்கிசைவானதோ, அதைத் தேவரீர் நியமிக்க வேண்டு மென்று விண்ணப்பஞ் செய்ய, பாண்டுரங்கப் பெருமானவர், சாங்கதேவா, நீ இப்போது தங்கியிருக்கிற புண்ணிய ஸ்தம்பத்தினிடத்திலேயே சமாதியடையக் கடவாய் என்று அருளிச் செய்தார். அன்றியும் ஆஷாட சுத்தத்தில் எகாதசிகள்தோறும நான் வருகிறேன் என்று வரமும் விடையுங் கொடுத்து நிற்க, சாங்கதேவரும் எம்பெருமானையும் எம்பெருமாட்டியையும் முறையே வணங்கிப் புண்டலிகரையும் வணங்கி, ஆருகத்தக் கண்ணீரோடு அந்த வூரை வலம் வந்து, புண்ணிய ஸ்தம்பத்தையடைந்து, மௌன நிலையை யுடையவராய்ச் சமாதியடையத் தகுந்த சுபமுகூர்த்தம் நோக்கி நிற்க, அப்போது இவர் புதல்வருள்ளே மூத்தவனுகிய கேசவனும், இளையவனுகிய விட்டலனும் வந்து வணங்கினார்கள், இவர் அவர்களுள் மூத்தவனுக்கு ஆறக்ஷர மந்திரத்தை யுபதேசித்து, நான் சமாதியடைகிறேனுகையாலே, சம்பிரதாயம் தவறுமல் என்னை யாராதித்து, கார்த்திகை மாசம் தோறும் பண்டரிபுரத்துக்குப் போய்ப் பண்டரிநாதனை வணங்கி வருவாயாக வென்று நியமித்து, பீடருக்கும் மற்றுமுள்ள யாவருக்கும் வேண்டிய புத்திமதிகளைச் சொல்லி, சகவருடம் ஆயிரத் திருநூற் றிருபத் தேழாவதாகிய ரூரோதக வருடம் ஆனிமாசம் சுத்த சப்தமி ஞாயிற்றுக்கிழமை இந்தச் சுபதினத்தில் பீடர் முதலிய எல்லாரும்கூட ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தனம்செய்து

கொண்டிருக்க, அரசடியில் பத்மாசநத்தில் எழுந்தருளி யிருந்து, தம்மை த் தோத்திரம் செய்வோருக்கு முறைமையாய் ஆசீர்வாதம் செய்து, விட்டல ப் பெருமானை வணங்கி நினைக்கவே, ஸ்ரீ கண்ணபிரான் எழுந்தருளி, எல் லாரும் காணும்படி இவரைத் தமது சொரூபத்தில் ஐக்கியம் செய்துகொ ண்டு, எல்லாரும் துதித்துக்கொண்டிருக்க மறைந்துபோனார். அதன்பிறகு, சேவித்து நின்ற தொண்டர் எல்லாரும் ஜயஜய கோஷம் செய்து ஹரிநாமங்க ளைப் புகழ்ந் துரைத்து, சமாதி பூஜையை விதிப்படி செய்து தங்கள் தங்கள் இருப்பிடம் சேர்ந்தார்கள். பிறகு பன்னிரண்டு வருடம் சென்றவுடனே சாங்கதேவர் தமது இளையகுமாரனுக்கு கெதிரேவந்து பெறுதற்கரிய வுபதேச த்தை அவனுக்குச் செய்து, விட்டலப் பெருமானுக்குள்ளே கலந்து ஐக்ய மானார்.

சாங்கதேவர் சரித்திரம் முற்றிற்று.

## கஅ-வது சோகாமேளர் சரித்திரம்.

பூலோக வைகுண்டமாகிய பண்டரிபுரத்தில், பஞ்சமகுலத்தில் அவதரி த்து, சோகாமேளர் என்னும் பெயர்பூண்டு விளங்குவோராகிய ஒருவர் இரு ந்தார். அவர் நாள்தோறும் சந்த்ரபாகா நதியில் மூழ்குவதும, ஹரிநாமஸங் கீர்த்தநம் செய்வதும், அவ்வூரிலுள்ள பகவத்ஸந்நிதியிற்போய் வணங்கிப் பல முறை தோத்திரஞ் செய்வதும் ஆகிய தொழில்களே முன்னே முடித்து, பிறகு தமது குடும்பவ்யாபாரத்தில் ப்ரவேசிப்பவரா யிருந்தார். அப்படி யிருக்க, ஒருநாள், ஞானசஞ்சீவியாகிய விடோபாவுக் கெதிரேபோன அன்ப ராகிய இவரை யெதிர்ப்பட்டவர் சிலர், கோயிலில் புகுதவும, மேகவண்ண னைக் கண்டு சேவிக்கவும் நீ தகுந்தவனல்லை, மாம்ஸத்தை விரும்புகிற காய் போலப் பலமுறை கும்பிடுதலால் என்னபயன் என்று கேட்க, இவர் அவர் களைப் பணிந்து சொல்லுகின்றார். கோயிலிற் பிரவேசிக்கவும் பகவானைத் தரிசிக்கவும் உரிமையில்லாத இழி குலத்தை யுடையேனுனும், சூரியன் கெடுந்தூரத்தி லிருந்தாலும் தாமரை மலரை மலர்விக்கும, சந்திரன் அந்தச் சூரியனைப் பார்க்கிலும அதிக தூரத்திலிருந்தாலும் சகோரப் பறவைக்கு இரைதரும். அதுபோல அடியேனுக்கும் பகவான் தமது திருவடியைத் தரு வர். ஆதலால், தூரமாய் நின்று கும்பிடுவது என் குலத்துக் கியற்கையே; அதைக் குறித்து நீங்கள் ப்ரஸ்தாபஞ் செய்வதில் ப்ரயோஜநமில்லை. போய் வாருங்களென்று சொல்லித் தமதிடத்தை யடைந்து, ஸ்ரீஹரிபாத த்யாநத் தை மறவாதிருந்தார். அன்றிரவில், பக்தபராதீநராகிய பகவானுனவர் வந்து இவரை யன்போடு கோயிலுக் குள்ளே யழைத்துப் போய், இரா முழுதும் உன்னை நாமதேவனுக்குச் சமாநமாக நான் நினைத்திருக்கிறேன். இன்று பக லிலும் உண்ணும்போது உன்னை நினைத்தேன் என்று இவ்வா று பேசிக்கொ

ண்டிருந்து, பொழுது விடியுஞ் சமயத்தில், பகவான் தக்தருளின ப்ரஸாதத்தை அழுதுசெய்யும்போது, அர்ச்சகர் வந்து கதவைத் திறந்து உள்ளே யிருந்த இவரைக் கண்டு, இது என்ன புதுமையாயிருக்கிறது! கதவு மூடினபடியே யிருந்து இப்போது எம்மால் திறக்கப்பட்டதே! இவன் எப்படி உள்ளே வந்தான் என்று சந்தேஹித்து, இவர்க்கருகில் வந்து உற்றுப்பார்த்துப் பஞ்சமரென்று அறிந்து, அடா புலையா! நீ எப்படி உள்ளே வந்தாயென்று அதட்டிக் கேட்க, இவர் எனக் கொன்றுந் தெரியாது, பகவான் என்னையுள்ளே கொண்டு வந்தார், நானென்ன செய்வேன் என்று சொல்ல, அந்த அர்ச்சகர்கள் இவரை நோக்கி, நீ இங்கிருக்கவேண்டாம், இவ்வூரைவிட்டு எங்கே யாகிலும போய் விடு, இருந்தாயானால் உனக்குத் தண்டனை கிடைக்கும் என்றார்கள். அதைக் கேட்ட சோகாமேளர் போய்த் தம் மனைவியை யழைத்துக் கொண்டு, சந்த்ரபாகா நதிக்கரையில் ஒரு குடிசை யேற்படுத்திக்கொண்டு அதில் வாழ்ந்திருந்தார். இப்படியிருக்குங் காலத்தில் ஒருநாள், காமதேவாபோலப் பாண்டுரங்கப்பெருமானை இடைவிடாமல் மனத்திலிருத்திக்கொண்டு, வேப்பமர நிழலிலிருந்து உண்ணும் பொழுது, ஸ்ரீருக்மிணீநாதனே, எனக் தெரிசனை வருகின்றிலை, என்மீது கோபமோ வென்று சொல்லி முன்னே, பகவானுனைவர் எழுந்தருளிச் சோகாமேளரோடு அழுதுண்ண, உடல் புளகித்து ஆநந்தக் கடலில் முழுகி யிருந்தார். அப்போது, அர்ச்சகர்கள் அவ்விடத்தில் வந்து இந்தச் செய்தியைக் கண்டார்கள். அந்தச் சமயத்தில் பரிமாறுகின்ற தமது மனைவியை நோக்கி, பகவானுக்கு இந்தத் தயிரைப் பரிமாறக் கடவை யென்று சொல்ல, அவரும் அப்படியே பரிமாறும்போது அது கிந்தி, பகவானுடைய திருவாடையின்மேல் தெறிக்கக்கண்டு, சோகாமேளர் தமது மனைவியை நோக்கி, பகவானுடைய ஆடையின்மீது தயிர்தெறித்து அந்த ஆடை நனைவது நன்றே வென்று கோபிக்கும்போது, மனைவியானவர், கணவனை நோக்கி, பகவான்மீது எச்சமிட்ட காகத்தை நீர் என்செய்தீர் என்று கேட்க, உடனே அந்த மரத்தின்மேலிருந்த காகத்தை ஒட்டினார். இப்படியிருக்கும் போது, அர்ச்சகர்கள் அங்கே வந்து, இப்படியுமுண்டோ? ஸ்ரீ கண்ணபிரான் காட்டில்வந்து உன்னோடிருந்து உண்பானோ? இது என்ன ஆச்சரியமென்று இவரைக் கன்னத்தின்மேல் அறைந்து, நீராடிக் கோயிலுக்குள்ளேபோய், பகவானது ஆடை முழுதும் தயிரா யிருப்பதையும், கன்னம் வீங்கி யிருப்பதையும், கண்கள் சிவந்திருப்பதையும் கண்டு அஞ்சி, ஒருவர்க் கொருவர் பேசிக்கொண்டு, வேப்ப மரத்தின் நிழலில் கண்டதெல்லாம் இங்கே காணப்படுவதனால், மனம் நடுங்கி, ஐயனே! ஸ்ரீலக்ஷ்மீநாதனே, புலையரும், காங்களும் உனக்குச் சமானமென்பதை யாம் அறிந்திலேம், எங்கள் பிழையைப் பொறுத்தருளவேண்டு மென்று ப்ரார்த்தித்து, பகவானைக் கோயிலில் விட்டு, தாசரிடத்தில் விரைந்து ஓடிவந்து, இவரைக் கண்டு, நீர் பகவத் பக்தியிற் சிறந்தவர், ஆகையால் பகவானை உமது வசப்படுத்திக் கொண்டீர். பகவனிடத்துக்கு வாரும் என்று அழைத்துக்கொண்டு போய்க் கோயிலில் விட, சோகா

மேளர் பகவானைக் கண்டவுடனே, டகவானிடத்தில் முன்னே காண்பட்ட குறிகளெல்லாம் மறைத்துபோயின. இந்த அற்புதமான செய்தியை எல்லாரும் அறிந்து, சோகாமேளரைப் புகழ்ந்து கொண்டாடினர்கள். அன்றுமுதல் சோகா மேளரும் பகவத் ஸந்நிதியில் முக்தியிருப்பவரானர் என்று சொல்லி மேலே பத்மநாபவேதியர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

சோகாமேளர் சரித்திரம் முற்றிற்று.

## காசீர்தாசர் சிடராகிய

# ககக-வது பத்மநாபவேதியர் சரித்திரம்.

காசீக்ஷேத்ரத்தில் செல்வத்தாற் சிறந்த ஒருவணிகனிருந்தான். அவன் தனது ஐந்து கன்மக்களோடும, அழகிற் சிறந்த மனைவியோடுங் கூடி, உற்றூர் முதலிய எல்லாரும் கொண்டாடும்படி வாழ்ந்திருந்தான். அப்படி யிருக்குங் காலத்தில், அவனுக்குக் குஷ்டநோய் உண்டாகி, ரணமும துர்க்கந்த முமா யிருத்தலல், சமீபத்தில் வரத் தகுந்தவர்களும் வராதிருக்க, நெடுங் காலம் துன்பத்தை யதபவித்துக்கொண்டிருந்தான். ஆனல், இவன் நற்குண நற்செய்கைகள் உள்ளவனையால், பல நல்லோர்கள் வந்து சொன்ன தாக தர்மங்களைச் செய்தான். அதனல் அந்த நோய் நீங்கவில்லை; வைத்தியர்கள் வந்து உயர்ந்த ஔஷதங்களைப் பிரயோகித்தும ப்ரயோஜநப்படவில்லை. இப் படிப் பலவகையாகிய பரிஹாரங்களைச்செய்தும் பிணி மேன்மேலும் அதிகரித்ததனல் துன்பம் பொறுக்க மாட்டாதவனய், சில பெரியோரை யழைத்து, ஐயரே! இந்தப் பிணியா லுண்டாகிற அபரத்தைச் சஹிக்க என்னல் முடிய வில்லை, என்னைக் கொண்டுபோய்க் கங்கையில் விட்டு விடுங்கள் என்று ப்ரார்த்திக்க, அவர்கள் இவனது துன்பத்தையும் மனத்துணிவையும் ஆலோசித்து, இவன் விரும்பினபடியே நாம் செய்யாமற்போனல் நமக்குப் பழி யுண்டாகு மென்று எண்ணி, இவனைக் கொண்டுபோய்க் கங்கைக் கரையில் வைத்து, நீரில் விட்டுவிட ஆயத்தப்படும்போது, ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தந பரராகிய பத்மநாபவேதியர் நீராட அவ்விடத்திற்கு வந்து, இந்தக் கூட்டத்தைப் பார்த்து, சமீபத்தில் வந்து, என்ன செய்தியென்று விசாரித்தார். அவர்கள், இவ் வணிகனுடைய வரலாறு முழுதும் சொன்னர்கள். அதைக்கேட்ட வேதியர், அவர்களை நோக்கி, அநேக ஜன்மங்களுள்ளும் இந்த நர ஜன்மம் சிறந்தது; இதைக்கொண்டு மோக்ஷலாபத்தை யடையலாம், அப்படி யிருக்க, அருமை யான இந்த ஜன்மத்தை வீணுக்கி, நீரில் வீழ்ந்து இறந்தால் நரகம் சித்திக்கும், அப்படிச் செய்யவேண்டியதில்லை,நான் இந்தநோய் தீரும்படியான சிறந்த பரிஹாரமொன்றுண்டு, அதைச் சொல்லுகிறேன், அப்படிச் செய்தீர்களானல், நோயும் தீரும், மோக்ஷ லாபத்தையும் இவன் அடைவான் என்று சொல்ல,

அந்தக் கூட்டத்தா ரெல்லாரும் அந்தப் பரிஹாரத்தைச் சொல்ல வேண்டு மென்று ப்ரார்த்திக்க, வேதியர், நீலமேக வண்ணனுகிய பகவானது திருநாம மாகிய ராம என்னும் த்வயாக்ஷரமந்த்ரத்தை மூன்றுதரம் உச்சரித்தால், தக்ஷணமே நோய் தீரும், நீங்கள் விரைவது இத்தப் பரிஹாரத்தைச் செய்யுங் கள் என்றார். அப்படியே அவர்க ளெல்லாரும மூன்றுதரஞ் சொல்லி, அவ ஹேக்கொண்டும் சொல்லுவித்தார்கள். உடனே அந்தநோய் நீங்கின வணிகன் அதிக தேஜஸோடு விளங்கினன். பிறகு அவனும் அவனைக்கொண்டு வந்த வர்களும் பத்மநாபவேதியர் திருவடியில் விழுந்து பணிந்து தோத்திரஞ் செய்து, காசிபட்டணத்துக்குப் போய்விட்டார்கள். அவர்களில் சிலர், கபீர் தாசர் திருமாளிகைக்கு வந்து அவரைப் பணிந்து, தேவரீருடைய பீடாகிய பத்மநாபவேதியர் தபோமஹிமையிற் சிறந்தவர், ராம என்னும் இரண்டெழு த்தினால் மஹா வ்யாதியைத் தீர்த்தருளினார். பிணியாளனேயே யன்றி இவ்வூரி லுள்ளார் எல்லாரையும் அந்த ராம நாம ஸங்கீர்த்தநபரராக்கினர் என்று சொல்ல, கபீர்தாசர் மிகவும் மனமகிழ்ந்து, அந்த ராம என்னும் இரண்டெழு த்தின் பெருமையை ஒருவராலுஞ் சொல்ல முடியாது, அந்த இரண்டெழுத் தாகிய தாரகமந்த்ரத்தை உச்சரித்து முற்காலத்தில் சிவபெருமான் நஞ்சுண் டதனாலுண்டாகிய துன்பம நீங்கினார். ஆகையால் அதுபோலச் சிறந்த மந்த் ரம வேறொன்றுமில்லை, அந்த ஒருதரம் சொன்னால் எல்லாவினைகளும் ஒரு மிக்க வொழியும், அப்படிப்பட்ட மந்த்ரத்தை மூன்றுதரம் சொன்னால் வணிக னுடைய நோய் நீங்காமலிருக்குமா ? அந்தப் பத்மநாபவேதியன், இந்த ராம மந்த்ரத்தின் அருமை பெருமைகளை அறியாமட்டான் என்று சொல்லுவதை பத்மநாப வேதியர் காதிற் கேட்டுக்கொண்டே வந்து தமது ஆசாரியராகிய கபீர்தாசருடைய திருவடிகளில் விழுந்து வணங்கி, எங்கோவும் ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டு போராகத்தை யடைந்து வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே ரோஹிதாசர் வைபவத்தைச் சொலலத்தொடங்கினர்.

பத்மநாபவேதியர் சரித்திரம் முற்றிற்று.

## 20-வது ரோஹிதாசர் சரித்திரம்.

பூர்வகாலத்தில், ஒருரில், சர்மகர்மஞ் செய்கிற சக்கிலியர்களுக்குள் உய ர்ந்தவர் ஒருவர் இருந்தார். அவர் சமதமாதி ஆத்மகுணங்களுள்ளவர்; வைஷ் ணவத்தில் அதிக விருப்பமுள்ளவர்; பரோபகாரம செய்வதே ஸ்வபாவமாக வுடையவர்; திருமாலுக்கு உயிர்போல்பவர்; எல்லா வுயிர்களின் மேலும் அரு ளுடையவர்; திருமாலடியாரைக் கண்டால் சாஷ்டாங்கதண்டம் சமர்ப்பிப்ப வர்; திவ்யதேச யாத்திரையாய்ச் செல்லுவோர்களைத் தமக்கிசைந்த வழியே உபசரிபபவர்; தினந்தோறும் விடியற்காலத்தி லெழுந்து முன்னே வயிற்றில் மூண்டெரிகிற உதராக்நியைத் தணித்து, பிறகு நீராடி, பகவதாராதநம் செய்

பவர். கலியுகத்தில் வருத்துகின்ற பசிநோய் அதிகரித்தால் மனம் சலிக்கும், அதனால் மெய்யுணர்வு கெடும, ஆகையால் இவர் முந்திப் பசியைத் தணித்துக் கொண்டு, பிறகு பகவதாராதநம் செய்வது வழக்கம். இவரை அவ்வூரார் யாவரும் ரோகிதாசர் என்று அழைப்பார்கள். இவர் ஒருநாள், அருத்தியில் நீரை நிறைத்துக்கொண்டு, மடி, ஆசநம் முதலிய யாவும் தோளினால் அமைத்துக் கொண்டு, பரிசுத்தமாகிய ப்ருந்தாவநத்திற்குப் போய், நான்கு வேதங்களாலும் அறியப்படாத திருமாலின் திருவடியைத் தோத்திரஞ்செய்துகொண்டிருந்தார். அப்போது, அவ்விடத்தில் ஒரு வேதியன்வர, அவனுக்குத் தம்மால் செய்யத் தகுந்த உபசாரங்களைச்செய்து, மிகவும் புகழ, அவன் இவரைநோக்கி,சாளக்ராம பூஜைசெய்தல் எல்லார்க்கும் மிகவுஞ் சிறந்தகாரியம், அப்படிப்பட்ட சாளக்ராமத்தைத் தோளின்மேல் வைத்துப் பூஜைசெய்வது நன்றோ? இப்படிச் செய்வது உனக்குத் தகுமோ? இத்தச் சாளக்ராமம் வேதியர் முதலானோர்களால் பூஜிக்கப்படுவதல்லவா என்று வினவ, இவர் அந்த வேதியனை நோக்கி, எப்போதும் எல்லாப் பொருள்களுள்ளும் நிறைந்திருக்கிற பகவானைத் தியாநமபண்ணுகிற மனம் இருப்பதற்கிடமாயிருப்பதேதோலே, அந்தப் பகவானைத் தோத்திரம் பண்ணுகிற நாவும தோலே, பரிசுத்தமான ஆத்மாதங்கியிருப்பதும் தோலாற் செய்யப்பட்ட வையே என்று சொல்லக்கேட்ட வேதியன், முப்புரிநூலையணிந்த வேதியரே யன்றி மற்றவர்கள் பகவதாராதநம் செய்யத்தகுந்தவர்கள் ஆகமாட்டார்கள். ஆகையால் நீ இப்படிச் செய்யவேண்டாம், உனக்குப் பாபம் சம்பவிக்கும் என்று சொல்ல, தாசர் வேதியனை நோக்கி, என்னிடத்தில் உபவீதமிருப்பதை நீ யறியமாட்டாய் என்று சொல்லித தமது நெஞ்சைப் பிளக்கவே, விளங்குகின்ற உபவீதம் வெளிப்பட்டது. அதைக் கண்ட வேதியன், இது என்ன ஆச்சரியம் என்று தாசரை வணங்கி, தாசரே, முப்புரி நூலால் என்ன ப்ரயோஜநம், பரிசுத்தமான மனத்தையுடையவர்கள் பகவதாராதநம் செய்யலாம், தடையில்லையென்று சொல்லித் தன் வீட்டுக்குப் போய்விட்டான். போனபிறகு, பகவதநுக்ரஹத்தாலே தாசருடைய மார்பு பிளப்புண்ட இடங்தெரியாமல் மறைந்து இருபிளவும் ஒன்றாய்ச் சேர்ந்துபோயின. தாசரும் பகவத்தியாகநிரதராய் எழுந்தருளியிருந்தார் என்று சொல்லி, மேலே பிம்பாஜிபக்தர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

ரோகிதாசர் சரித்திரம் முற்றிற்று.

## உக-வது பிம்பாஜிபக்தர் சரித்திரம்.

முற்காலத்தில், உலகத்தாரெல்லாரும் கடேமண்டலியென்று சொல்லுகின்ற சிறந்த நகரத்துக்குத் திலகம்போல் பவனகியும், பரிசுத்தனகியும், மேலான எல்லையில்லாத தர்மங்களையும் நடத்துவோனகியும், சாதுஜநங்களை

க்குத் தாசனுகியும், சௌரியபராக்ரமங்களிற் சிறந்தவனுகியும், உதாரசீலனுகியும், தைரியசாலியாகியும், புத்ர களத்ராதிகளாகிய செல்வத்தை யுடையவனுகியும், சக்தி யுபாசகனுகியும் இருந்த அரச னொருவன் பிம்பாஜி என்னும் பெயர் பெற்று விளங்கிக்கொண் டிருந்தான். அவன் காள்தோறும் விடியு முன்னே எழுந்து, பெரியோரால் விதிக்கப்பட்டிருக்கிற நித்ய கர்மங்களை முடித்து, நீராடி, பேரிகைமுழங்க, காளிகோயிலுக்குப்போய், ஷோடசோப சாரங்களும்செய்து, பூஜை முதலியவற்றை நிறைவேற்றி, தான்நிவேதிக்கிற நைவேத்யத்தைக் காளி உண்ணும்படிசெய்து, தன் அரண்மனைக்குவருவான். அப்படி அவன் ஒருநாளும் காளில், ஒருநாள், வைஷ்ணவர்கள் தீர்த்த யாத்திரை செய்வோர்களாய், அவ்வூருக்கு வந்தார்கள். இந்த அரசன் பூர்வ ஜன்மங்களில் யஜ்ஞாதிகள், ஏகாதசி விரதம், மாத்ருசேவை, பித்ருசேவை, தீர்த்த யாத்திரை, வாபீ கூப தடாக ஆலய பிரதிஷ்டை, அந்நதானம் முதலியவற்றைச் செய்திருந்தானுகையால், இவனுடைய நகரத்தில், ஸ்ரீ வைஷ்ணவர்கள் வந்துசேரும்படிகேரிட்டது. அதறச்செய்திலைய அரசன் தனசேவகர்களா லறிந்து, அவர்களுக்கெல்லாம் வேண்டியவற்றை யமைத்து, தான் நீராடிக் காளிகோயிலுக்குப்போய், பூஜை முதலியவற்றைச் செய்து நேர்த்திரம் பண்ணி நிற்க, காளி அவனுக்கு ப்ரத்யக்ஷமாகி, உள்ளன்போடு சொல்லுகிறாள். உன் நகரத்துக்குவந்த சாதுக்களை உன் அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போய், அவர்களுக்கு அமுது உண்பித்து வருவா யானுல், உன் பூஜையை நான் ஏற்றுக்கொள்வேனென்றுசொல்லி, மேலுஞ்சொல்லுகிறாள். ஸ்ரீவைகுண்டநாதனுகிய திருமாலே இக்கச் சகலமான லோகங்களுக்கும், பிரமருத்திரேந்திராதி தேவர்களுக்கும, மற்றுமுள்ள முனி கணங்களுக்கும் தலைவனுயிருப்பவன் என்று வேதங்கள் முறையிடுகின்றன. அப்படிப்பட்ட பகவானுக்கு அன்பராகிய ஸ்ரீ வைஷ்ணவர்கள் உன் நகரத்துக்கு எழுந்தருளினதனல் உன்னைப்போலப் புண்யவான்கள் ஒருவரு மில்லையென்று சொல்ல, அரசன் காளியை நோக்கி, தாயே, திருமால் உன்னைப்பார்க்கிலும் சிறந்த தெய்வமென்பதை நீ சொல்ல அறிந்துகொண்டேன். ஆனுல் அத்தத் தெய்வத்தை நான் காணும்படி அருள்செய்யவேண்டுமென்று பணிந்து கேட்க, காளி அரசனை நோக்கி, ஒப்பற்ற அத்தக்கடவுளை நான் காட்டவல்லேனே, அவனடியாரைப் பூஜித்தால் அவர்களை காட்டுவார்க ளென்று சொல்ல, அரசனும் அப்படியே அவர்களை வணங்கி யழைத்துப்போய், தன் அரண்மனையில் அமுது செய்வித்து, சந்தன புஷ்ப தாம்பூலாதிகளையுங் கொடுத்து, நேர்த்திரம்பண்ணிநின்று சொல்லுகிறான். ஸ்வாமிகளே, நீங்கள் ஸ்ரீ ராமபிரானை யறியும்படியான வழியை யெனக் கருள் செய்யவேண்டு மென்று ப்ரார்த்திக்க, அவர்கள் அரசனை நோக்கி, ராமாநந்த ஸ்வாமிகளிடத்தில்போய், அவரைச் சரணடைந்து, அவருடைய அருள் பெறுவையானுல், ஸ்ரீ ராமபிரானைக் காணலாம் என்றார்கள். அதைக்கேட்ட அரசன் மன மகிழ்ச்சியோடு லவராக்யத்தை மேற்கொண்டு, தனது அரசாட்சிக்குத் தன் மந்திரியை உரியவனுக்கி, உள்ளபொருள்களைப்

பலவகையாய் வழங்கித் தானும் தன் மனைவியுமாக வெளிப்பட்டு வந்து, ராமாநந்த ஸ்வாமிகளுடைய திரு வடியை வணங்கி, உடல், பொருள், ஆவி என்கிற மூன்றையும் அவருக்குத் தத்தஞ்செய்ய, அவரும் ராமதாரக மந்த்ரத்தை உபதேசித்தருளினர். உபதேசிக்கப் பெற்ற இவர்கள் குரு வருளால் சிறப்படைந்து, சிரவண மகநாதிகளில் காலங் கழிப்பவர்களாய், ஹரி பஜநத்தில் விருப்பமுள்ளவரா யிருந்தார்கள். இப்படி யிருக்கையில் ஒருநாள் ஆசாரியர் திருவடியை வணங்கி, துவாரகா நகரத்திற்குப்போய்க் கண்ணபிராநைத் தரிசிக்க விரும்பினேம்; விடை தரவேண்டுமென்று கேட்க, அவரும் அப்படியே விடை கொடுக்க, விடை பெற்றுப் போய்த் துவாரகையை யடைந்து கண்ண பிராநைச் சேவித்து, முகுந்தா, அச்சுதா, அமலா, பக்தவத்ஸலா என்று அநேகவிதமாக ஸ்தோத்ரங்கள் செய்து நின்றபோது, அந்தப் பகவானுவர், சங்கசக்ராதி திவ்யாயுதங்களோடும், கடக, கங்கண, கேயூர, குண்டல, கிரீட, நூபுராதிகளாகிய திவ்யாபரணங்களோடும், பீதாம்பரத்தோடும் இவர்களுக்கு ப்ரஸந்நமாய் எழுந்தருளி, அன்போடு தழுவிக்கொண்டு மகிழ்ச்சியடைந்திருக்க, இவர்களும் திருவடியில் வணங்கி நின்றார்கள். பிறகு இவர்களுக்கு இன் சொற்களைச் சொல்லி, பகவான் மறைந்தருளினர். அதன் பின்னே, அரசனும் அரசன் மனைவியும் அங்கே சில்சுமாசகாலம் தங்கியிருந்து, ஸ்ரீ ஹரி பஜனையால் மனமகிழ்ந்து, ஒருநாள் பகவானிடத்தில் விடைபெற்றுக் காட்டு வழியே போகும் போது, ஒரு புலியானது இவர்களுக்கு கெதிரில் விரைந்து வந்தது. அந்தப் புலியை அரசன் மனைவி கண்டு பயந்து, அரசனை நோக்கி, கோவத்தையுடைய புலியானது என்னைத்தின்னவருகின்றது என்று சொல்ல, அரசன், பெண்ணே, அந்தப் புலியினுள்ளும் பகவான் அமர்ந்திருக்கிறார், நீயேன் அஞ்சுகின்றாய், வாவென்று அருகே யழைத்துக் கொண்டு, அவளைத் தின்னவந்த புலியின் முகக்குறியை யறிந்து, தன் கழுத்திலிருந்த துளசிமாலையைக் கழற்றிப் புலியின் கழுத்தில் போய் விழும்படியாக எறிய, அது அப்படியே போய்ப் புலியின் கழுத்தில் விழுதலும், புலியானது தன் கொடுந் தொழிலை முழுதும் மறந்து எதிரேநின்றது; நின்ற அந்தப் புலியின் தலைமீது தமது கையை அமைத்து, ஸ்ரீ ராமநாமத்தை யுபதேசித்து, இன்று முதல் நீ கொலைத்தொழிலை யொழித்துவிடுவாயாகவென்றருளிச்செய்து, அவ்விடத்தைவிட்டு நீங்கினர். பிறகு புலியானது பேரருளை யுடையதாகிக் கொலைத்தொழிலைச் செய்து மாம்ஸாதிகளை யுண்கிற தனது பூர்வாசாரத்தை யொழித்து, அந்தக் காட்டில் உதிர்ந்து கிடக்கிற சருகுகளை யுண்டு, ஸ்ரீ ஹரிநாம த்யாநம் செய்துகொண்டு எழுநாளிருந்து, அவ்வுடம்பைவிட்டு வேறு சிறந்த வுடம்பிற் போய்ப் பிரவேசித்தது என்று சொல்லி, மேலே நரசிம்மமேதாவின் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

பிப்பாஜிபக்தரிசரித்ரம் முற்றிற்று.

# உ-வது நரசிம்மமேதா சரித்திரம்.

அழகிற் சிறந்ததாகிய கடேமண்டலியென்கிற வூரில் வாழ்கின்ற காசர வேதியருக்குச் சிவபெருமானுடைய அமிசமாய் ஒரு புதல்வர் அவதரித்தார். அவருக்கு நரசிம்மமேதா என்று பெயரிட்டு, அன்போடு தாய்தகதையரிருவரும் சூக்ரதையாய் வளர்க்க வளர்ந்து, தக்க பருவத்தில் உபநயகம் செய்யப்பெற்று, பிறகு தாய்தகதையர் இருவரும் சுவர்க்கலோகத்தையடைய, தமது சிறிய தந்தையார் முதலானேருடைய ஆசரயிலிருந்து செழிப்பாய் வளர்ந்து வருகிற காலத்தில், அந்த வூரிலுள்ள சிறுவர்களோடு கூடி விளையாட்டில் விருப்பம் அதிகரித்ததனால், கல்வியில் மனம் பொருந்தாமல் விளையாட்டிலேயே காலங்கழித்துக்கொண்டிருந்தார். ஒருநாள் வெகுநேரம் விளையாடினதனால் மிகுதியான தாகத்தினால் வருந்தித் தமது வீட்டுக்கு வந்து, தமது தமையன் மனைவியைநோக்கி, எனக்கு ஜலமிரைவாய்த் தாகத்துக்குக் கொடுக்க வேண்டுமென்றுகேட்க, அவள் கோவங்கொண்டு, இப்பொழுது என்னவேலை செய்து இளைத்தாய்? நீ மூர்க்கனுகிச் சிறுவர்களோடு கூடிக்கொண்டு இரவும் பகலும் விளையாட்டிலேயே காலங் கழிக்கிறாயே; கல்வி யிருந்தா லல்லவா உலகத்தில் பிழைக்கலாம்? சோற்றையுண்ணவும் விளையாடவும் கற்றுக்கொண்டாய்; இப்படித் திரிகிற உனக்கு மனைவி வந்துவிட்டால் அவளை எவ்விதமாய்அக்ஷ வஸ்திரங்கள்கொடுத்துக்காப்பாற்றுவாய்என்று சிலகடுஞ் சொற்களைச்சொல்ல, இவர் கேட்டு, ஆலோசித்து, வீட்டை விட்டுக் காட்டுக்குப் போய் ஆலோசிக்கிறார். எப்படி யென்றால், உலகத்தில் ஒருவன் பாலகனுயிருக்கும்போது,தகதை தாயரை யிழப்பதும், யவ்வன காலத்தில் மனைவியை இழப்பதும், முதுமைப் பருவத்தில் பிள்ளைகளை யிழப்பதும் ஆகிய இவையாவும் துவினைப்பயனேயன்றி வேறல்ல; ஆதலால் என் துவினை காரணமாக இளமையிலே என் தந்தை தாயரை யிழக்குமபடி நேரிட்டது என்று ஏங்கியழுதுகொண்டேபோய்,அங்குள்ள ஒருசிவாலயத்தைக்கண்டு, உள்ளே போய்ச் சிவ பெருமானைத் தோத்திரம செய்து, எழை பங்காளரா க்ருபை செய்து என்னை ஆண்டருளவேண்டும், எனக்கு உன்னையன்றி வேறொரு துணை யில்லையென்று சொல்லி, ஆவிடைமேல் சயநித்துக்கொண்டிருந்தார். இப்படியே உணவில்லாமல் ஏழுநாள் வரைக்கும் சயனித்திருக்கக்கண்ட சிவ பெருமானனவர், இவ்வுலகில், என் அடியார் மனங்கனிந்து, புண்யதீர்த்தம், பஞ்ச கவ்வியம், தேன், இள நீர் முதலியவைகளால் திரு மஞ்சனம் செய்து, சந்தனபுஷ்ப தாம்பூலாதிகள் கொடுத்து, ஆடையாபரணங்களால லங்கரித்து, என்னைப் பலவகையாய்த் தோத்திரஞ்செய்து தங்கள் அபிஷ்டங்களைப் பெறுவார்கள். அப்படி யிருக்க, இவன் என்மேல் சயனித்துக்கொண்டான். ஆனலும், இவன் முற்பிறப்பில் புலையா யிருந்து, ராம ராம உபதேசத்தால் புலி

யுரு மாறினவனுதலால் அந்தப்புண்ய விசேஷத்தையாகிலும் பார்க்கவேண்டு மேயென்று இவர்மீது அருள் மிகுந்து, தமது ஐந்து முகம், பத்துக்கை, சர்ப்பாபரணம் முதலிய குறிகளோடு இவர்க் கெதிரே யெழுந்தருளி, தூக்கத்தி லிருந்து எழுப்பி, அக்காலத்தில் பிம்பாஜியால், நான் செய்யும் ராமநாம ஜபத்தை நீபெற்றாய், ஆதலால் உனக்கெதிரே தோன்றினேன், உனக்கு வேண்டியதைக் கேட்டுக்கொள்வாயாக வென்றார். இதைக் கேட்ட நரசிங்கமேதா எழுந்து, சிவபெருமான் திருவடியில் வீழ்ந்து வணங்கித் தோத்திரம் செய்து, ஐயனே, நான் குழந்தையாகையால் சிறந்தபொருள் இன்னதென்று எனக்குத் தெரியாது, சிறந்த பொருள் எதுவோ அதனை நீயே யறிந்து அடியேனுக்கு அநுக்ரஹிக்கவேண்டும் என்று ப்ரார்த்திக்க, சிவ பெருமான் மகிழ்ந்து, தமக்கு விருப்பமுள்ள ஸ்ரீ கண்ணபிரானது திரு நாமத்தை உபதேசித்து, உனக்குக் கண்ணனைக் காட்டுகிறேன் என்று சொல்லி, வேண்டிய வுணவுகளைக் கொடுத் தருண்ணச் செய்து, கண்ணபிரானுனவர் யமுநா நதிக்கரையில், கோபிகைகளோடு கூடி நடநம் செய்வார், அவர் நடநம் செய்யும்போது நான் அந்த நடநத்துக் கேற்ற மத்தளம் கொட்டுவேன், அந்தக் கண்ணபிரானது சேவையே எனக்கு இஷ்டமென்றார். இவர் அந்தச் செய்தி துவாபர யுகத்தில் நடந்த தல்லவா? இந்தக் கலியுகத்திலும் காணப்படுமோ வென்றுகேட்க, சிவபெருமானுனவர், அன்பர்களுடைய கண்ணுக்கு அந்த வைபவங்க ளெல்லாம் இந்தக் கலியுகத்திலும் காணப்படுமென்றருளிச் செய்தார். பிறகு இவரைக் கோபிகைவேஷம் பூண்பித்து அன்போடு அழைத்துக்கொண்டு, யமுநா நதியை யடைந்து, அந்த நதிக்கரையில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ கண்ண பிரானைக் கண்டு வணங்கி நிற்க, ஸ்ரீ கண்ணபிரான் இவ்விருவரையும் தழுவிக்கொண்டார். பிறகு அநேக கோபிகைகளின் இடையில் தங்கி, ஆபரணலங்க்ருதராய், வேணு காநம் செய்து கொண்டு நிற்கிற கண்ண பிரானுடைய சௌந்தர்யத்தைக் கண்டு, சிலர் அதரத்தைச் சுவைக்க விரும்பவும், சிலர் தழுவுதற்கு அபேக்ஷிக்கவும், சிலர் கையைப்பிடிக்க விரும்பவும், சிலர் முத்தமிட விரும்பவும், இவ்வாறு பல வகையாய் விரும்பின கோபிகைகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கண்ணனுய் இடையிடையே அவரவர் விருப்பத்தின்படியே நின்று இன்பங் கொடுத்துக்கொண்டு, சிவபெருமானை நோக்கி, நீ பெண்ணுருவாக்கிக் கொண்டுவந்தது யாரையென்று கேட்க, சிவபெருமானுனவர் நகைத்து, நரசிங்கமேதாவுக்குக் கண்சாடைசெய்ய, அவரும் விரைவாய் ஓடிவந்து கண்ணபிரானை வணங்க, சிவ பெருமான் கண்ணனை நோக்கி, முற்பிறப்பில் இவன் புலியாய்ப் பிறந்து முடிவில் பிம்பாஜியின் அருகுக்குரியவனுய், எல்லாப்பாவங்களிலிருந்து விடுபட்டு வேதியர் குலத்தில் பிறந்தான். இளமையிலேயே தாய்தந்தையர் மரண மடைந்ததனுல் என்னிடத்தில் வந்தடைந்து ஏழுநாள் உபவாசமாயிருந்து வருந்துவதைக்கண்டு, நான் இவனுக்கு ப்ரத்யக்ஷமாகி, உனக் கென்னவேண்டுமென்று கேட்டேன், நான் குழந்தையாகையால் எனக்கு ஒன்றும் தெரியாது, சிறந்த பொருள் யாதோ அதனை

நீயே தெரிந்து எனக்கு அநுக்ரஹிக்கவேண்டு மென்றான், எனக்கு உன்னை யன்றி வேறொருவரு மில்லை யாகையால் உன்னிடத்துக்கு அழைத்துக்கொண்டு வந்தேன், இவனுக்கு நீயே அநுக்ரஹிக்கவேண்டும், ஸ்ரீகண்ணபிரானே யென்று ப்ரார்த்தித்து நிற்க, ஸ்ரீ கண்ண பிரான் மனமகிழ்ந்து, நரசிங்க மேதாவின் தலைமேற் கைவைத்து, உபதேசரூபமான அநுக்ரஹஞ்செய்து, நீ யிந்த நதிக்கரையில் என்னைக் கோபிகைகளோடிருக்கக்கண்டாய், ஆகையால் இந்த லீலையாட்டைப் ப்ரபந்தமாகச் செய்து, உலகத்தாரை மகிழ்விக்கக் கடவாய், அப்படிச்செய்வாயானால், உன் கண்களுக்கு எப்பொழுதும்இப்படி யே சேவைதருவேன், இதுதான் உனக்கு நான் கொடுக்கும்படியான சிறந்த வரம் என்று சொல்லிச் சிவ பெருமானுக்கும் விடை கொடுக்க, சிவ பெரு மானும் கண்ணபிரானை வணங்கி நரசிங்கமேதாவோடு, தான் அமர்ந்திருக்கிற கோயிலை யடைந்து, நரசிங்கமேதாவுக்குச் சொல்லவேண்டியதைச் சொல்லி யருள, நரசிங்கமேதாவும் பகவான் கட்டளையிட்டபடியே அமல லீலைகளைப் பாடலாகச் செய்து, ஞானச் சுடராகிய பகவானை மனக்கண்ணினால் கண்டு, ஆநந்தக்கூத்தாடிப்பாடி மகிழ்ந்திருந்தார். இப்படியிருக்க, இவர்விட்டிலுள்ள வர்கள் இவரைக் காணுமல், பல இடங்களில் தேடி யலைந்து, சிலரால் இந்தச் சிவாலயத்தி லிருப்பதை யறிந்துவந்து, இவர் பாடுகிற குஜராத்திபாஷைப் பாடலையும் கேட்டுச் சந்தோஷித்து, அழைத்துப்போய் வீட்டிற் சேர்க்க, இவர் பகவத் தியாநபராயிருப்பதை யறிந்த ஒரு வேதியன், தன் மகளை இவர்க்கு விவாகஞ்செய்துகொடுக்க, அந்தப்பெண்ணோடுகூடிச் சுகித்து வாழுங்கா லத்தில், ஒருமகளையும் மகனையும் பெற்று, ஊராரெல்லாரும் கொண்டாடும் படி ஸ்ரீகண்ணபிரானது அமல லீலைகளை மனக்கண்ணால் தினந்தோறுங் கண்டு சேவித்துப் பாடிக்கொண்டு, உஞ்ச வ்ருத்தி செய்து ஜீவநம் செய்து வருங்காலத்தில், அந்த ஊருக்குருகிலுள்ள சாமபுரத்தில், திரிபுராந்தகன் என் னும் பெயரையுடைய ஒரு வேதியன் பெற்ற கங்கிகைக்குவிவாஹத்துக்குரிய பருவம் நேரிட்டிருப்பதைப் புரோஹிதர்க்குச் சொல்ல, க்ருஷ்ணபட்டரானவர் மணமகனைத் தேடிக்கொண்டுபோய், அபித்தவூரை யடைந்து, நரசிங்கமேதாவென்கிற பரமபாகவதரைக்கண்டு, சுவாமீ! எங்கள் எஜமானுடைய பெண் ணைத்தேவரீருடைய புதல்வனுக்கு விவாஹஞ்செய்து கொடுக்கத் தீர்மானித் திருக்கிறோம்; தேவரீர் திருவுளத்தையறிய விரும்புகிறோமென்று சொல்ல, நரசிங்கமேதாவானவர், அப்படி யேயாகலாம் என்றுசம்மதிவார்த்தைசொன்ன வுடனே, கிருஷ்ணபட்டர் பொருத்த நிமித்தங்கள் முதலியவும் ஆராய்ந்து, முகூர்த்தகாள் நிச்சயித்துக்கொண்டு மீண்டு வந்து, தான்போய்வந்த செய்தி யெல்லாம் திரிபுராந்தகருக்குச் சொன்னார். அந்தச் சொல்லைக்கேட்ட யாவ ரும் சகைத்து, ஐயோ! நீர் நல்ல மணமகனைத் தேடினீர், நரசிங்கமேதா என் பவன் தரித்திரத்தால் பீடிக்கப்பட்டுக்கொண்டிருப்பவன், அவன் மகனுக்கா நமது பெண்ணைக்கொடுக்க இசைந்துவந்தீர்! கன்றுகன்று என்று சொல்ல, கேட்ட க்ருஷ்ணபட்டர் சொல்லுகிறார். மலையரையன், தன் பெண்ணை, எ

நாளும் சுடலையிலாடிக்கொண்டிருக்கிறவனுக்குக் கொடுத்ததைத் தடுத்தவர் யார் என்று சொல்லி, மேலும் இந்த மணம் நிச்சயமானபின்பு, உமது குலத்து முன்னோர்கள்செய்த ஏற்பாட்டின்படி, உங்கள் கைவிரல்மோதிரத்தைக் கொடுக்கத் தக்கதாகும் என்ற மாத்திரத்தில், பெண்பெற்றவனுகிய திரிபுராந்தகன், பட்டரைநோக்கி, மணமகனுடைய எமது செல்வப் பெருக்கத்துக்குத் தகுதியாக ஐஞ்ஞூறு யானை, ஐயாயிரம் புரவி, ஆயிரம் தேர், ஸ்த்ரீ புருஷ ஸமூஹம், பொன், பூஷணம், ஆடை, பஞ்சவாத்யம் முதலாகிய ஆடம்பரத்தோடு வரவேண்டும், அப்படி யில்லாத பக்ஷத்தில் வேண்டியதில்லை யென்று பெண்கொடுக்கமனமில்லாதவனுய்ப்பேசுகிறவார்த்தையைக்கேட்டு, வேதியர், அப்படியே மணமகன் காளைக்குவரும்படிசெய்கிறேன்என்றுசொல்லிவிட்டு, நரசிங்கமேதாவி னிடத்திற்குப் போய், காளைக்குப் பகல் மண மாகையால் மிகுதியான ஆடம்பரத்துடன் வரவேண்டு மென்று சொல்லி, மீண்டு வந்து திரிபுராந்தகனுக்குச் செய்தியைத் தெரிவித்தார். அதைக்கேட்ட திரிபுராந்தகன் சிரித்து, நீ சொல்லுகிறவன் தரித்திரனென்பது ப்ரஸித்தமாயிருக்க, அவனுக்கு நீபோய்ச்சொல்லி வந்தது புதுமையாயிருக்கிறதென்று சொல்லி, அவர்கள் எந்தவிதமாய்வருவார்களோ பார்ப்போம், போய் அழைத்துவாரும் என்று சொல்ல, பட்டரானவர் மிகவும் கோபங்கொண்டுபோனார். மறுநாள் உதயத்தில், நரசிங்கமேதா வானவர், எழுந்து, நித்திய கர்மங்களை முடித்து, ஸ்நாநம்செய்து, துவாதச நாமங்களும் தரித்து, துளசி மாலையைக் கழுத்திற் பூண்டு, வீரவைஷ்ணவர்களோடுகூடி, மனைவியும் மகனும் கூடவர, ஸ்ரீஹரி பஜனை செய்துகொண்டு விவாஹத்துக்குப் புறப்பட்டார்; அப்போது திருத்துவாரகையில் எழுந்தருளியிருக்கிற சக்ரபாணியாகிய பகவான் இவரது செய்தியை ஸ்ரீருக்மிணீபிராட்டிக்குத் தெரிவித்து, நீயே முன்னின்று இந்த விவாஹத்தை முடிக்கவேண்டுமாகையால் நீ உன் கூட்டத்தோடு வரவேண்டு மென்று சொல்லி, உத்தவர், அக்ரூரர், சுகர், ப்ரஹ்லாதர், நாரதர், வால்மீகர், தும்புரர், புண்டலீகர், பராசரர், சௌநகர், விபீஷணர், விதுரர், ஆஞ்சநேயர், பீஷ்மர், சுதாமர் என்பவர்களை நிகர்த்தவராகிய கோவலர், தமது கூட்டத்தோடு சேர்ந்துவரவும், நால்வகைச் சேனைகள் சூழ்ந்து வரவும், பல வகையான வாத்யவிசேஷங்கள் முழங்கவும் மணஞ்செய்யப்போகிற ஊருக்கு வந்தார்கள்; வந்தவர்கள் நகர்ப்புறத்தில் தங்கி, திரிபுராந்தகனுக்கு ஒற்றாலே செய்தியைத்தெரிவிக்கஅவனும்மனக்திகைத்து,கருடனுக்கு முன்னே கொசுபோல நமக்கெதிரேவரத்தகாதகலியிலிருபபவன், இவ்வளவுஆடம்பரத்தோடுவந்தது ஆச்சர்யம்! மணமகன் வந்த சம்ப்ரமமோ சொல்லமுடியாதென்று ஒற்றர் சொல்லுகிறார்கள். இது என்ன புதுமையென்று நாணமடைந்திருந்தான். க்ருஷ்ணபட்டர், இவைகள் யாவும் பகவானுடைய கருணாவிசேஷத்தாலே நிகழ்வதாகத் தோன்றுகின்றது என்று தமக்குள்ளே மகிழ்ச்சியடைந்திருந்தார். பிறகு விசுவக்ஸேநர்வந்து விவாஹமண்டபத்தை விநோதமாயலங்கரித்தான். அதில் ரம்பை மேநகை முதலான தெய்வகணிகைகள் வந்து நட

ங்செய்ய, தேவரும் முநிவரும் ஆகாயத்தில் நின்று வேடிக்கைபார்க்க, ருக்மிணீ தேவியார் முதலான ஸ்த்ரீ ஜநங்கள் விவாஹமண்டபத்தில் நிறைந்து சூழ்ந்திருக்க, ஸ்ரீகண்ணபிரானுடைகோபாலரெல்லாரும்வந்துகூடியிருக்க, இத்தச்சமயத்தில், பெண்ணைப்பெற்றவனுகிய த்ரிபுராந்தகன் தன் பெண்ணைச் சுற்றத்தாரோடு அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தான். அப்போது ஸ்ரீகண்ணபிரான் எழுந்து அவனை உபசரிக்க, அவன் அதிசயித்துக் கண்ணனை நோக்கி, உம்மை நான் இதுவரையில் கண்ட தில்லை, நீர் யார்? உமது பேர் யாது? உம்மூர் யாது? சொல்லவேண்டுமென்று கேட்க, ஸ்ரீகண்ணபிரான், எமது ஊர் துவாரகை, எமது பேர் சாமளாசுரம்பி, இந்த நரசிங்கமேதா எனக்குச் சிநேகிதன் என்று சொல்ல அந்தக்ஷணத்தில் மாப்பிள்ளையானவன் கோபாலரெல்லாரும் முஹூர்த்தத்தில், பெண்ணுக்கு மங்கலநாண் பூட்டினான். உடனே வேதியர் ஆசீர்வதித்தார்கள். யஜ்ஞமுமசெய்து முடிந்தபிறகு, ஊர்க்கோலம் வந்து, பிறகு ஐந்து நாட்களும் செய்யவேண்டிய சடங்குகளெல்லாவற்றையும் முறையாய்ச் செய்து, இரவலர்க்கும் மறையோர்க்கும் தாநம் செய்து முடிந்தபிறகு, பந்துபோஜநமுஞ்செய்து தீர்ந்தது; பிறகு பெண்ணைப்பெற்றவனுகிய த்ரிபுராந்தகன், கண்ண பிரானை நோக்கி, என பொருள் முழுதும் இவரது பொருளுக்கு உறையிடவும் பற்றாது என்று சொல்ல, கண்ணபிரான் அவனை நோக்கி, ஹரிதாசருக்கு உன் பெண்ணைக் கொடுத்ததனால் நீமிகவும் பாக்யவானென்றுபுகழ்ந்து, பிறகு நரசிங்கமேதாவை மணமகனெனும் மணப் பெண்ணெனும்அழைத்துக்கொண்டு புறப்பட த்ரிபுராந்தகன்வழியனுப்பினான். கண்ணபிரான் நரசிங்கமேதா முதலானோரை அவர்களுடையஊரில் கொண்டு போய்ச் சேர்த்து, நரசிங்கமேதாவை நோக்கி, நீ நினைக்கும்போது நான் வருகிறேன்என்று சொல்லிவிட்டுத் துவாரகாநகரத்தையடைந்தார். இப்படிப் பகவான் போனபிறகு, நரசிங்கமேதாவானவர் அநுதப் பகவானுடைய வைபவங்களெல்லாவற்றையும் நினைந்து, நாள்தோறும் ஏறிபஜனை செய்துகொண்டிருந்தார். இப்படியிருக்குங் காலத்தில், துவாரகா யாத்திரை போவோர்களில் ஒருவராகிய கேசவபட்டர் என்பவர் அவ்வழியில் திருடர் பய முண்டென்று கேள்விப்பட்டு, நாம் போகிறவழியில் இந்தப் பொருளைத் திருடர் பறித்துக் கொண்டுபோனால் நாம் என்செய்வோம்! அங்கே போய், யாரிடத்தில் கேட்கிறது? ஆகையால் இங்கே நமதுபொருளை வாங்கிக்கொண்டு அங்கே நமக்குச் சேருமபடி செய்வோர் யாராகிலும கிடைத்தால் நன்மையாகுமென்று ப்ரஸ்தாபிக்க, அவருடைய மாணாக்கர் ஒருவர், சுவாமீ! இங்கே நரசிங்கமேதா என்பவர் இருக்கிறார். அவர் தேவரிருடைய விருப்பத்தின்படியே செய்வார் என்று சொல்ல, கேசவபட்டர் நரசிங்கமேதாவினிடத்திற்குப்போய், ஐயரே! நான் உம்மிடத்தில் அறுநூறுவிராகன் கொடுக்கிறேன், அந்தத் தொகை நான் துவாரகைபோய்ச் சேர்ந்தவுடனே எனக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று சொல்ல, அப்படியே வாங்கிக்கொண்டு, துவாரகையிலுள்ள சாமளாசுரம்பிக்குச் சீட்டுக்கொடுக்க, வாங்கிக்கொண்டு கேசவபட்டர் போய்விட்டார்.

அவர் தந்த பொருளைக்கொண்டு, ஹரிதாசராகிய நரசிங்கமேதாவானவர், தம்மிடத்திற்குவருகிற வைஷ்ணவர் மனமகிழும்படி தாநஞ்செய்து, ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்தார். இங்கே இவர் இப்படியிருக்க, துவாரகையை நோக்கிப்போகிற கேசவபட்டர், நாம் பொருள் கொடுக்க வாங்கிக் கொண்டவர் என்னசெய்வாரோவென்று ஆலோசித்துக்கொண்டே போய், வழியிலுள்ள கோமதிநதியில் முழுகிச்சென்று, துவாரகையை யடைந்து, ஸ்ரீகண்ணபிரானது திருவடியை வணங்கிப் பலதோத்திரம் செய்து, அர்ச்சகர்களைநோக்கி, ஸ்வாமீ! இவ்வூரில் சாமளநம்பி யென்பவர் எங்கேயிருக்கிறார் என்று கேட்க, அவர்கள் இந்தப் பெயருள்ளவர் இவ்வூரில் இல்லை யென்றார்கள். கோயிலுக்கு வெளியே வந்து வேறு சிலரைக் கேட்க, அவர்களும் அப்படியே சொன்னார்கள். இதைக்கேட்ட கேசவபட்டர், நாம் இனி யென்ன செய்வோமென்று துக்கித்துக்கொண்டிருக்கும்போது, இவரைக்கண்ட சிலர், எதைக்குறித்து நீர் இப்படி துக்கிக்கிறீர் என்றுகேட்க, இவர் நடந்த செய்தியைச்சொன்னர்.கேட்டவர்கள்,நரசிங்கமேதா என்பவன்பரமதரித்திரனல்லவா? அவனிடத்தில் கொடுத்த பொருள் இனி வரப்போகிறதோ? என்றுக்கிக்கிறீர் என்று சொன்னார்கள். அதைக்கேட்ட கேசவபட்டர் மிகவும் துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தார். இப்படியிருக்கும்போது, சாமளநம்பியானவர் ஒருதேர் மேல் ஏறிக்கொண்டு இவரிருக்குமிடத்தில் வந்திறங்கி, நீர் யார்? என்ன காரியத்தைக் குறித்து இங்கேவந்தீர் என்று கேட்க, கேசவபட்டர், நடந்தசங்கதிகளையெல்லாம சொல்லி, நீர் எங்கிருந்து வந்தீர் என்றுகேட்க, பகவானுனவர், சாமளநம்பியென்பவன் நான்தான். இனிஉமதுபொருள்முழுதும் நீர் பெற்றுக்கொள்ளலாம்,சந்தேஹமில்லை,என்னஜமாநன்கொடுத்தபொருளாதாவு எங்கே காட்டுமென்றுசொல்ல,பட்டர்சீட்டைக்காட்டினர்,அந்தச்சீட்டைநம்பிபெற்று அருகிலிருந்த உத்தவர் முதலியோரைநோக்கி, இது என்னஜமாநன்அனுப்பினது என்று சொல்லிக் கண்ணில் ஒற்றிக்கொண்டார். அதைக்கண்டவர்கள் உம்முடைய மாயாவிசித்திரத்தைக் கணிக்கவல்லவர் யாவர் எனக்கொண்டாடினர்கள். பிறகு கேசவபட்டருக்குச் சேரவேண்டிய தொகையாகிய அறுநூறு வீராகனும் அவருக்குக் கொடுக்கப்பெற்றுக்கொண்டு, கண் இழந்தவன் மறுபடியும் கண் பெற்றதுபோல, மிகவும் மகிழ்ந்து,இதுசார்வேசுவரனுடையக்ருபையேயன்றி வேறல்லவென்று நினைத்துச்சொல்லத்தொடங்கினர். உன்னஜமானைப் பார்த்தால் மிடியிற்சிறந்தவனுயிருக்கிறான், உன்னைப்பார்த்தால் ராஜகுமாரன்போலிருக்கிறாய், இது புதுமையாயிருக்கிறதே என்று சொல்லினர். இதைக்கேட்ட சாமளநம்பியானவர், கேசவபட்டரை நோக்கி, என் எஜமாநர் இந்தப் பொருளில் இச்சை யில்லாதவரும், ஸ்ரீஹரி பக்தியுள்ளவரும் ஆகையால் அவர் ஆடை முதலியவற்றால் ஏழைபோலக் காணப்படுகிறார். தந்தையானவன் குழந்தையை அலங்கரித்து வைப்பதுபோல, என்னை யலங்கரித்து இங்கே வைத்திருக்கிறார். அவருடைய தயையினாலேதான் இங்கே கான் சுகித்திருக்கிறேன் என்றுசொல்லி, தன்னுடி வந்தவர்களுடனே கூடிப்

போய்விட்டார். போனபிறகு, கேசவபட்டர், தமக்குக் கிடைத்த பொருளை யெண்ணிப்பார்த்து, அது தொலையாதிருக்கக்கண்டு, அந்தப்பொருளைத் தானம் செய்து, பிறகு கோயிலையடைந்து, பகவானை வணங்கி, மகிழ்ச்சியோடுமீண்டு வந்து, நரசிங்கமேதாவைக்கண்டு, அங்கே துவாரகையில் நடந்த செய்தி முழுதும் சொல்லி, சாக்ஷாத் பகவானை உமது கடனைக் கொடுக்கும்படி செய்தீர், உமக்குச் சமானமானவர்கள் இவ்வுலகத்தில் யாரிருக்கிறார்கள் என்றுபுகழ்ந்து போனார். பிறகு நரசிங்கமேதாவானவர் பகவத்கல்யாண குணங்களை நினைத்து ஆநந்தக்கண்ணீர் பெருக நின்று தோத்திரம் பண்ணி, ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்தார்.

இப்படியிருக்குங் காலத்தில், இவர் மகள் மாமி வீட்டில் தெருண்டாள் என்னுஞ் செய்தியை ஒருவன் வந்து இவர் மனைவியார்க்குச் சொல்ல, அவர் இவரிடத்தில் வந்து நமஸ்கரித்து நின்று, ஸ்வாமீ, நமது பெண்ணுக்கு மேலான வரிசை யெடுக்கவேண்டும், நீர் வாயார உத்திரவு கொடுக்கவேண்டு மென்று சொல்ல, நரசிங்கமேதாவானவர், நாம் என்ன செய்ய வல்லோம்! ஸ்ரீராமகிருஷ்ணன் நமக்கு எல்லா நன்மைகளையும் அருள்செய்யவேண்டும் எனறார். என்று சொல்லி எழுந்து மகள் வீட்டுக்குப் போகவே, புதல்வியார் இவரை நோக்கி, நகைத்து, என் தகப்பனாரே, தளிகமாலையும், நாமமும், ஜபமாலையும் தரித்து, மகள் சோபக கல்யாணத்துக்கு வெறுங் கையோடே வந்தீர், வீரவைஷ்ணவரே, இது லோக மரியாதைக்கு அழகோ என்று சொல்ல, நரசிங்கமேதாவானவர், புதல்வியாரை நோக்கி, அம்மா, உனக்குச் செய்ய வேண்டிய வரிசைக்குச் சிறந்த பொருள்க ளெல்லாவற்றையும் ஒரு எட்டி லெழுதித் தாவென்று சொல்ல, புதல்வியார் நகைத்து, ஒரு குடிலனைப் பார்த்துத் தமக்கு வேண்டிய ஆடை யாபரணாதிக ளெல்லா வற்றையும் அவனிடத்தில் சொல்லி எழுதுவித்த பிறகு, நரசிங்கமேதாவானவர் அவனை நோக்கி, உன்னுடைய இஷ்டத்தையும் எழுதித் தாவென்று சொல்ல, அந்தக் குடிலன் மண்ணுங்கட்டியென்றொரு பொருளையும் எழுதிக்கொடுக்க, வாங்கிக் கொண்டு, துவாரகையில் எழுந்தருளி யிருக்கிற பகவானை நினைத்தார்; குடிலனும இவரை நோக்கி, இதில் எழுதின வஸ்துக்களோடன்றித் தனியே வரவேண்டாமென்று பலபேருக் கெதிரே சொல்லினன். உடனே பக்தவத்ஸலனான பகவான், ஒருசுமையாளோடு வேதிய வடிவமாய் வந்து, மணமகள் வீட்டு வாயிலுக் கெதிரே நின்றார்; அங்குள்ளார் அவரை நோக்கி, நீ எந்த ஊரென்று கேட்க, வேதிய வுருவங் கொண்ட பகவானவர், நான் நரசிங்க மேதாவுக்கு ஏவற்பணிவிடை செய்பவன், அவர் தமது மகளுக்கு வரிசைச் சாமான்களை ஒரு பெட்டியில் வைத்துக் கொடுக்கக் கொண்டு வந்தேன், அதிலுள்ள பொருள்களின்சாபிதா இதோ பாருமென்று கொடுக்க, வாங்கினவர்கள் அதிலுள்ள பொருள்களெல்லாம் பெட்டியிலிருக்கக் கண்டு, ஒரு மண்ணுங் கட்டியும் இருப்பதைப் பார்த்து, இது உன் தலையில் மோதிக்கொள்ள வாவென்று நகைக்க, கொண்டுவந்த சுமையாளானவன் நாணி நின்றான்.

பொருள்களைப் பெற்றுக் கொண்டவர்கள் நரசிங்கரைப் புகழ்ந்து, அவரிடத்தில் வந்து வணங்கி, நீர் பகவானுடைய அருள் பெற்றவர், உமது பெருமையை யறியாமல் நாங்கள் இகழ்ந்தோம் என்று சொல்லி, பெண்ணுக்குச் சோபந விவாஹம் நடத்தினார்கள். பிறகு நரசிங்கர், கண்ணபிரானேடு தம் மூர்க்குப் போகும்போது பகவானே என்பொருட்டு மிகவும் சிரமமெடுத்துக் கொண்டீர் என்று சொல்ல, பகவான் மகிழ்ந்து, உமது புதல்விக்கு வேண்டுவன யாவும் அமைத்தேன், உமது தோளுக்கும் ஒரு ஆபரணம் அணிகிறேனென்று, தமது கழுத்திலிருந்த துளசி மாலையைக் கழற்றி, நரசிங்கர் கழுத்தில் தரித்து, அவரிடத்தில் விடை பெற்றுப் போய்விட்டார். அன்று முதலாக அந்தத் துளசிமாலையே அவர் கழுத்தில் விளங்கிக்கொண்டிருக்கும். அதை யறிந்த மண்டிகன் என்னும் ஓர் அரசன், மிகவும் ஊஹித்து, இது மோஹந வித்தையா யிருக்கலாம் என்று நினைத்து, அதைச் சோதனை செய்யும் பொருட்டு, கோயிலுக்குள்ளே வந்து பகவானுடையதிருக்கழுத்திலிருக்கிற மாலையை, கவசத்தோடு சேர்த்து வரிந்து கட்டிவிட்டு, பூஜை செய்துகொண்டிருக்கிற நரசிங்கமேதாவை நோக்கி, நீர் உலகிலுள்ள எல்லாரையும் மயக்குகற்குக்கற்றிருக்கிறீர், பகவானுடைய கழுத்திலிருக்கிற மாலையானது இன்று உமது தோளில் விழுவதை நான் அறிகிறேன், அப்படி விழாத பக்ஷத்தில், உமமை மிகவும் வருத்துவேன் என்றுசொல்ல, தாஸரானவர் ஸ்ரீபகவானைத் தோத்திரம் செய்தார். அப்படித் தோத்திரம் செய்தும் நான் தோறும் இவர் கழுத்தில் வந்துவிழுகிறமாலைஅன்று வந்து விழாமலிருந்தது. தாஸரானவர் மறுபடியும் அதிகமாய் ஸ்தோத்திரம் செய்தனர்; செய்தும், விழாமலே யிருந்தது. அப்போது பகவானை நோக்கி, இன்று மாலையைப் பிரசாதித்தால் உமக்கு என்ன குறைவு நேரிடும் என்றார்; அதைக் கேட்டவுடனே, அரசன் வரிந்து கட்டின கட்டானது அப்படியே யிருக்க, மாலை மாத்திரம் தாஸருடைய கழுத்தில் வந்து விழுது பிரகாசித்துக்கொண்டிருந்தது. இதைக் கண்ட அரசன், பகவானை நோக்கும்போது, அவர் கழுத்தில் தான் கவசத்தோடு சேர்த்துக் கட்டின கயிறுமாத்திரம் பிரகாசக்கண்டானேயன்றி மாலையைக் காணுமையால், ஆச்சரியமும் பயமும் கொண்டு, தாஸர் திருவடிகளிலே விழுந்து வணங்கி, இவர் தேவரே யன்றி நரரல்லர் என்று உட்கொண்டு, ஜயஜயவென்று புகழ்ந்து இன்சொற் கூறி, உமதுபெருமையை யறியாமல், என் துரஹங்காரத்தால் உம்மை மிகவும் வருத்தினேன், இந்த அபராதத்தை க்ஷமித்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, தாஸரானவர் அரசன் பிரார்த்தனைக்கு மனமிரங்கி அவனை ஆசீர்வதித்து அனுப்பிவிட்டு, தாம் ஸ்ரீ ஹரி சரண தியாநபராராய்ச் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தார் என்று சொல்லி, மேலே இராமதாஸர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

நரசிம்மமேதா சரித்திரம் முற்றிற்று.

# உருவது ராமதாசர் சரித்திரம்

மேலான சற்குணத்தை யுடையவருமாய், பக்தருக்குள்ளே திலகம்போல் விளங்குவாரும், பிராமணகுலத்தில் பிறந்தவருமாய், ராமதாசர் என்னும் பெயரையுடையவருமாய் டாங்கூர் என்னும் ஊரில் வாழ்பவரும், தாம் போய் யாசித்துக்கொண்டு வருகிற பிக்ஷைச் சோற்றால் குடும்பத்தைப் பாதுகாப்பவருமாய், ராமநாமத்தை இடையறாமல் உச்சரிக்கிற காலையுடையவருமாகிய ஒருவர் இருந்தார். இவர், மாமரத்தைக் கூடாக்கி, அதில் துளசிகையைப் பரிச் செய்து வளர்த்து, ஏகாதசி தினந்தோறும் நியமமாய் அதை யெடுத்துக்கொண்டு, தூற்றுமடுது போக தூரத்திலிருக்கிற கோவாகைக்குப்போய், அங்கே யெழுந்தருளியிருக்கிற கண்ணபிரானுக்குச் சமர்ப்பித்து, தரிசனஞ் செய்து மீண்டுவருவார். இப்படி நாடோறும் நடந்தே வருஷகாலம் கடத்தி வந்தார். இவர் போகுமபோதும் வருமபோதும் வழியிலிருக்கிற ஸ்ரீராமாலயங்களிலே தரிசனம் செய்து கொண்டும், அங்கங்கே கூத்தாடிக்கொண்டும் வருவார். சரீரசாமர்த்தியம் சிறிதுமில்லாதவர்; தேகாபிமானத்தினால் ஸ்ரீகிருஷ்ணனுடைய திருவடியில், தாம கொண்டுபோகிற துளசியை யர்ப்பித்து, நாதா, பகவானே, தங்கள் ஸ்வரூபமான பிறப்பிறப்புக்கள் இனி யெனக்குண்டாகாமலிருக்கக் கருணை செய்யவேண்டும் என்று பிரார்த்திப்பார்; மறுபடியும் தமது ஊருக்கு வருவார். இப்படிக் காலங்கழித்து வருகையில், ஏகாதசி உபவாசத்தினால் ஒருநாளாகாமல் போகாமல் நித்தம்படி போயிட்டது; அபரத் தமிழ் மிகவும் தளர்ந்து தூரவாகத்தை நடக்கமாட்டாமல் கண்ணபிரானைச் சேவித்து, பதிதபாவனனே, கருடவாஹனனே, பரமனே, நெஞ்சிலிருக்கிறவனே, எனக்கு ஸ்வரூபவுத்தியை வருவிட்டதனால் உன்னைத் தரிசித்தது வரும நியமத்தில் தவறினேன், மேலும் அசக்தி பண்டாயிருப்பதனால் இனி உன்னைத் தரிசிக்க வரமாட்டேன், அப்படி அடியேன் வராவிட்டாலும என்மீது உன் கிருபை மாத்திரம குறையாதிருக்கும்படி க்ருபைசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்து நிற்பார். மேலும், அழுத கண்ணீர் சோடும் சுவாமீ, இனி உன்னை யெக்காலத்தில் காணப்போகிறேன், நிதானம் முடிவாகிய சேவை யென்று பகவானுடைய திருவடியைப் பிடித்துக்கொண்டார். அப்பொழுது பகவானவர் இவரது துன்பத்தைக் கண்டு சகிக்கமாட்டாமல் பதைபதைத்து, தமது கன்னத்திருத்தோள்களும் பீதாம்பரமும் பரகாசிக்கும்படி தாசருக்கெதிரே யெழுந்தருளி, இவரை மார்போடணைத்துத் தூக்கி, என்னிடத்தில் மிகுதியாகிய அன்புடையவனே, நெடுகாலாக என்னைச் சேவித்து வந்தாய், ஆகையால் உனக்கு நான் கடன்காரனானேன், இந்தக் கடனை எப்படித் தீர்ப்பேன்? நான் உன்னைத் வருகிறேன், கொண்டுபோவென்று சொல்ல, ராமதாசர், சுவாமீ, தேவரீரை அடியேன் எப்படிக் கொண்டு போவேனென்று சொல்ல, ஸ்ரீலக்ஷ்மீநாதன், என் தேர் வரும், அதில் பரன்


க்கொண்டு இன்றிரவில் உன்னூரை யடைவாயாகவென்று சொல்லி, தேர் வரும்படி திருவுளத்தில் நினைத்தவுடனே, தேர் வந்து எதிரே நிற்கக் கண்ட தாசர், பகவானைத் தூக்கியெடுத்து அத்தத் தேரி லேற்றிக்கொண்டு தமது ஊரை யடைந்த பிறகு, சுவாமீ, தேவரீரை எங்கே யெளித்துவைப்பேன்! என் வீட்டில் நீரிருந்தால், அவ்விடத்தில் உன்னைக் காணுதவர்களாகிய அர்ச்சகர் முதலானோர்வந்து என்னை வருத்துவார்களே; தேவரீர் திருவுள மெப்படியோ அறிந்திலேன் என்று சொல்லி, மனத்தளர்வோடு இங்கே யிருக்க, பொழுது விடிந்தபிறகு, துவாரகையில் அர்ச்சகர் கோயிலினுள்ளே பிரவேசித்துக் கண்ணனைக்காணுமல் திகைக்கும்போது, அவர்களில் ஒருவர், நேற்று இராமதாசர்வந்திருந்தார்; அவர்தினந்தோறுமபூஜிக்கவேண்டுமென்றெண்ணித் தமது வீட்டுக்குக் கொண்டுபோனாரோ ஏதோ அறிகதிலோம் என்றார். கேட்ட மற்றவரெல்லாரும அப்படி யிருக்கலாமென்று, தாசரிருக்கிற டாங்கூருக்குப் போனார்கள். இவர்கள் வருவதை முன்னுகத் தெரிந்துகொண்ட தாசர் கண்ணபிரானைநோடி விண்ணப்பஞசெய்ய, அவர் ஒன்றுஞ் சொல்லாமல் மௌனமா யிருக்கக் கண்டு, நமக்கு அவசியம் தண்டனை கிடைக்கும என்று நிச்சயித்து, கண்ண பிரானை அங்குள்ள ஒரு கிணற்றில் கிடத்தி வைத்தார். வந்த அர்ச்சகர் இவர் வீடு முழுதும் தேடிக் காணுமல் கிணற்றிற் போட்டிருந்தாலும இருக்கலாமென்று கிணற்றில் ஆராய்ந்து, கண்ணபிரானை மேலே யெடுத்துத் தேரிலேற்றிக்கொண்டு ஊருக்குப் போகும்போது, தாசரானவர் என்னை விட்டுப் போகிறீரோவென்று தன்பத்தோடுஞ் சொல்ல, பகவானுனவர், தாசரே, நீர் துக்கிக்க வேண்டாம், புண்டலீகா வீட்டில் காணிருப்பது போல உன்வீட்டிலு மிருபபேன் என்றுசொல்ல, தாசர், சுவாமீ, தேவரீரை அர்ச்சகர்கள் தேர்மீதேற்றிக்கொண்டு போகிறார்களே, அவர்களினின்றும எப்படி விடுபட்டு வருவீர் என்று கேட்க, பகவானுனவர், தாசரே, அர்ச்சகரிடத்தில் என் நிறையளவாகிய பொன்னைக் கொடுத்து என்னை வாங்கிக்கொள்வீராகவென்றார். தாசர், சுவாமீ, தேவரீருடைய நிறைக் கீடான பொன் அடியேனிடத்திலில்லையே யென்றார். அதற்குப் பகவானுனவர், தாசரை நோக்கி, உன் மனைவியின் மூக்குத்தியை வைத்து நிறுத்தால் அது என் கனத்துக்குச் சரியாயிருக்கும்படிசெய்கிறேன்என்றார். அப்படியேஅர்ச்சகர்களிடத்திற் போய்ச் சொல்லிப் பிரார்த்திக்க, அர்ச்சகர் நகைத்து, இவன் பரம தரித்திரனு யிருந்தாலும பேச்சுமாத்திரம் விசேஷமாயிருக்கிறதென்று பேசிக்கொள்வதை அவ்வூரிலுள்ளார் அறிந்து, இந்தத் தாசர் பொன் கொடுப்பதை நாம் பார்ப்போமென்று கூட்டங் கூடினார்கள். அவர்களைத் தாசரானவர் பார்த்து, இந்த அர்ச்சகர்கள் பகவான் நிறை யுள்ள பொன்னைக் கொண்டு, பகவானே அடியேனுக்குக் கொடுப்பதாகச் சம்மதித்தார்கள். இந்த விஷயத்தில் இவர்கள் தவறக்கூடாது, உங்களுக்கு எதிரே பொன்னை நிறுத்துத் தருகிறேன், இவர்கள் வாங்கிக்கொண்ட பிறகு கண்ணனைக்கொடாவிட்டால் நான் இவர்களை விடமாட்டேன் என்று சொல்லி நிற்க, அவர்கள் அர்ச்சகரை நோக்கி,

உங்களுக்கு அவர் பொன்கொடுத்து விட்ட பிறகு, அர்ச்சா விக்ரஹமாகிய இந்தக் கண்ணனைக்கொடுக்க உங்களுக்குச் சம்மதியோவென்று கேட்க, அர்ச்சகர்கள், அப்படியேயாகட்டும், அது எங்களுக்குச் சம்மதிதானென்று சொல்லி, கண்ணனை ஒரு தூலியி லேற்றி, மற்றொரு தூலியில் பொன்னைக் கொண்டு வந்து வையும் என்று தாசரை நோக்கிச் சொல்ல, தாசர் வீட்டுக் குள்ளேபோய் மூக்குத்தியைக் கைக்கொண்டு வெளியே வர, அங்கே யிருந்த வர்கள், நீர் வீட்டுக்குள்ளே போய்க்கொண்டு வந்தது யாதென்று கேட்க, தாசர் தம் கையிலிருந்த மூக்குத்தியைக் காட்டினார். அது கண்டு அவர்கள் நகைத்து, இது கண்ணன் விக்ரஹ நிறைக்குச் சரியாய் நிற்குமோ வென்று கேட்க, தாசரும், சரியாய் நிற்குமென்று சொல்லி, பகவானே, உன் வார்த்தையை நம்பினேன், என்னை அவமானப்படுத்த வேண்டாமென்று ப்ரார்த்தித்து மூக்குத்தியைத் தூலியிட்ட மாத்திரத்தில், இதினுடைய நிறைக்குக் கண்ணனுடைய நிறை சுறைபடாது மூக்குத்தி தூலி தாழ்ந்தி ருக்க, கண்ணனிருக்குந் தூலி மேலே யுயர்ந்து நிற்கிறதை, சூழ்ந்து நின்ற வரெல்லாரும் பார்த்து, அதிசயித்து நின்றார்கள். தேவர்கள் பூமழை பொழி ந்தார்கள். முன்னே பரிஹஸித்து நகைத்த அர்ச்சகர்கள் யாவரும் ஆலோ சித்து ஸ்ரீலக்ஷ்மீநாயகன் இவர்க்கு இப்படி க்ருபைசெய்தால் நமது எண்ண ங்கள் எப்படி நிறைவேறும் என்று இவரைப்புகழ்ந்து கொண்டாடி, கண்ண பிரானையும் தாசர் வீட்டில் ஸ்தாபித்து, விடைபெற்றுப்போய், அவ்விட த்தில் வேறொரு விக்ரஹத்தைப் பிரதிஷ்டை செய்தார்கள். இன்னும் இத்தத் துவாரகா யாத்திரையாய் வருவோர், டாங்கூரில் எழுந்தருளியிருக்கிற கண்ண பிரானைக் கண்டு வணங்கிப் போவார்கள் என்று சொல்லி, மேலே பிரமசாரி வைபவத்தைச சொல்லத் தொடங்கினர்.

ஶ்யாமதாஸரிசரித்திரம் முற்றிற்று.

---

# உ சவது பிரமசாரி சரித்திரம்.



ஆதிசேஷனால் தாங்கப்பட்ட இந்தப் பெரிய நிலவுலகத்தில், பலவளங்க ளும் நிறைந்திருக்கிற ஹரித்துவாரம் என்கிற ஒரு பட்டணமுண்டு. அதில் இந்த வுலகத் தாசை சிறிது மில்லாத ஒரு வேதியர் கலியாணசுவாமி யென் னும் பெயர்பெற்று விளங்கிக்கொண்டிருந்தார். அவர் இரவும் பகலும் ஸ்ரீஹரி காமஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்தார். இப்படி யிருக்கையில் ஒருநாள் அவர்க்குத் தீர்த்த யாத்திரை செய்யவேண்டுமென்கிற விருப்ப முண்டாகிப் புறப்படும்போது, பரிசுத்தராகிய ஒரு பிரமசாரி அவரைத் தொடர்ந்தார். இவ்விருவருமாகப் புறப்பட்டு, சதாகாலமும் ஸ்ரீராம நாம பாராயணஞ் செய்துகொண்டு பற்பல தீர்த்தங்களில் மூழ்கி, ஸ்ரீ விஷ்ணு க்ஷேத்திரங்க ளெல்லாம் சேவித்துக்கொண்டு, ஆத்மாநந்தத்தை யடைந்து, திருமாலின்

இரங்கி, அன்பனே, உன் பின்னே வருகிற என்னைத் திரும்பிப் பாராமல் நீ முன்னேபோ, திரும்பிப் பார்த்தாயானால் உன்னோடு வரமாட்டேன், அவ்வி டத்திலேயே நின்றுவிடுவேன் என்று சொல்லக்கேட்ட பிரமசாரி திரும்பிப் பாராமல் போனார். அப்படிப் போகிறவராகிய பிரமசாரியானவர், ஸ்ரீலக்ஷ்மீ காத ரானவர் தமக்குப் பின்னே வருகிற ரென்பதை அவர் திருவடிச் சிலம் போசையாலே அறிந்துகொண்டேபோய், ஹரித்வாரத்தைக் கிட்டி, இன்னம் ஊர் ஒன்றரைக் கோசு தூரத்தி லிருக்கிற இடத்தில், பகவா னுடைய சிலம் போசை கேட்காமையால் திரும்பிப்பார்த்தார். திரும்பிப் பார்த்த அந்த இட த்திலேயே பகவான் நின்றுவிட்டார். நின்ற பகவா னுவர், பிரம சாரியை நோக்கி, நான் முன்சொன்னபடியே நீ போகாமல் திரும்பிப்பார்த்தா யாகை யால் இவ்விடத்தில் நின்றுவிட்டேன், அரசனிடத்துக்கு வரமாட்டேன், அர சனே இங்கே யழைத்து வாவென்று சொல்ல, பிரமசாரியும் இந்தச் செய்தி யை அரசனுக்குத் தெரிவிக்க, அரசன் ஆச்சரியம் அடைந்து, சிங்காதனம் விட்டிறங்கிப் பிரமசாரியை வணங்கி, தன் சதுரங்க சேனைகளோடும் புறப் பட்டு வந்து பகவானே வணங்கி, இன்பக் கடலில் மூழ்கி, இதோ இங்கே யெழுந்தருளி யிருக்கிற மூர்த்தி மதுராபுரியி லெழுந்தருளி யிருந்த மூர்த்தி யோ அன்றேவென்று போய்த் தரிசித்து வந்தவர்களைக் கேட்க, அவர்களும் மதுராபுரி மூர்த்தியே இவர், சந்தேஹ மில்லையென்று சொல்ல, அரசனும் வந்த தொண்டர்களோடு பகவானே வணங்கி ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்து மகிழ்ந்தான். பிறகு வேதியரைக் கொண்டு சுப முகூர்த்த மமைத்து, ஐந்து கோசு எல்லையாக மணப்பந்தல் போடுவித்து, மணத்துக்கு வேண்டியபொருள் கள் யாவும் அமைத்து, பெருஞ் சிறப்புற்று விளங்காநின்ற கலியாண சுவாமியின் புதல்வியை அலங்கரித்து, பல மங்கல வாத்தியங்களும் முழங்க, பிரமசாரிக்கு மண முடித்து, தம்பதிகளுக்கு ஆடையாபரணங்களை விசேஷ மாகக் கொடுத்தான். தேவர்களெல்லாரும், மதுராபுரியி லெழுந்தருளி யிரு க்கிற ஸ்ரீகண்ணபிரானே இவ்விடத்திற் பெழுந்தருளிச் சாக்ஷி சொன்னரை என்று புகழ்ந்து புஷ்ப வர்ஷம் பொழிந்தார்கள். மதுராபுரியில் மற்றொரு மூர் த்தியை ப்ரதிஷ்டைசெய்து, இவ்விடத்தில் நூதகமாக ஒரு ஆலயம் அமை த்து அரசனவன் மனமகிழ்ந்திருந்தான். அன்று முதல், பகவான் உத்த ரதிசையில் ஹரித்வாரத்திலும், தக்ஷணதிசையில் பண்டரிபுரத்திலும், மேற்கு த் திசையில் துவாரகையிலும், கீழ்த்திசையில் ஜகந்நாதத்திலும் எல்லாத் திக்கிலுள்ளவர்களும் வந்து வணங்கித் துதித்து உஜ்ஜீவிக்கும்படி எழுந்தரு ளியிருக்கிறார் என்று சொல்லி, மேலே சூரதாசர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

பிரமசாரி சரித்திரம் முற்றிற்று.

# உ-வது சூரதாசர் சரித்திரம்.

ஸ்ரீதுவாரகாபுரியில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீகண்ணபிரானுடைய திருவள்ள முகக்குறிப்படியான நல்லமுகம் பூண்ட அக்ரூர் ஒருநாள் ஸ்ரீ சத்தியபாமையார் வீட்டுக்குவர, சத்தியபாமையார், வந்த அக்ரூர் இருக்கும்படி ஆசனம் கொடுத்து, அவர் முகத்தைக் கோக்கி, ஸ்ரீ கண்ணபிரான் என்னிடம் வருவதாழிகதார்; நீர் போய், அவர், முன்போல என் வீட்டுக்குவகது என்னை யதரிக்கும்படி விண்ணப்பஞ செய்து, என் மநோரதத்தை நிறை வேற்ற வேண்டு மென்று பிரார்த்திக்க, அக்ரூர் மன மிரங்கி, அடிதோ, ஸ்ரீ கண்ண பிரான் நினை வாதிருபபாரானால் நீதம் சத்தியபாமையாருடைய உயிர் நீங்குமென் றெண்ணி, தாயே, நீர் லவலேச மில் மனம வருந்தாமல் இரும், ஸ்ரீகண்ணபிரானை கான் இக்க க்ஷணமே யழைத்து வருகிறேனென்று சொல்லி, அகதக் கண்ணபிரானுடைய லேவஷத்தைக்க தாம் பூணடு எதிரே நிற்கக் கண்ட சத்தியபாமையார், மன வருத்த ம மிகழ்ச்சியை யடைகதபிறகு, அக்ரூர் போய்க் கண்ணபிரானுக் தெரி ரிய, அவரைக் கண்ண பிரான் கோக்கி, ர ர் நிலவிடகதில் நீர்பெறவிருகும்போது நீ யென்னைபோல லேவஷ மொண்டுவகதா யாகலால், நீ கலியுகதில் அகதகனுய்ப் பிறக்கக் கடலவ யென்றுசொல்லி மேலே சத்தியபாமையை கோக்கி, கலியுகத்தில் நீ ஒரு தாசியாய்ப பிறக்கக் கடலவை யென்று கூ யதும், அப்படியே குருட்டுத் தனமாகய மடைந்த அக்ரூர், ஸ்ரீ லக்ஷ்மீ தேவியினை, தேவரீருடைய திருவருள் நிதநாசமே என்று கைகுவித்து வணங்கி, அடியேனுக்த தேவரீர் அறியீரோ, சத்தியபாமையார் தயாத்தைத் தணிக்கும பொருட்டு, இந்த லேஷம பூண்டீர், நினைத்த கண்டு, தேவரீர் எனபோல லேஷம பூண்டு வகதா யென்று கோவித்து, இதகக் கொடிய சாபம் தபீர, அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டு மென்று பல நின்சொற சொலலி வணங்குதலும், பகவானுனவர், ஓ அக்ரூரே, நான் நீர் கொண்ட லேஷத்தின் காரணமாகிய உண்மையை அறிவேன், மான கோபமெகாள்ளவில்லை, இதத லகத்தார் நன்மை யடையும்பொருட்டு உமமை யிவ்வாறு சபித்தேன் என்றார். அதைக் கேட்ட அக்ரூர், அப்படியானால், கலியுகத்தில் தாய் வயிற்றில் பிறவாமையாகிய அயோநிஜத்வத்தை எனக்குக் கிருபைசெய்வதுமல்லாமல், தேவரீர் இந்தத் திருக்கோலத்தோடு அடியேனுக் கெதிரே நிற்கவேண்டுமென்று ப்ரார்த்தித்து வணங்கினர். அப்போது பகவானுனவர் திரு வுள முகங்கி, அக்ரூரே, நீர் அஞ்சவேண்டியதில்லை, என்பிரிவாற்றமல் வருந்துகின்ற சத்யபாமையானவள், கலியுகத்தில் ஒரு தாசியாகப் பிறப்பாள், யேம் வருவாய், அக்காலத்தில், உங்களை யென்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன் என்று சொல்ல, அப்படியே கல்லதென்று, கண்ணெனியை யிழந்து மதுராபுரியை யடைந்த அக்ரூருடைய செய்கையைச் சொல்லுவோம். எப்படி யென்றால்,

சூரதாசர் என்னு பெயர்பெற்ற ஒருவர், ஸ்ரீ ஹரிகாம ஸ்மரணையே செய்துகொண்டிருக்கிற மேன்மையாகிய நிலையை யடைந்திருந்தார். இவர் மிகவும் தெளிவுள்ளவராய், நன்மையைத் தருகிற பிரபந்தங்கள் பலவற்றையும திருமாலையே பாட்டுடைத்தலைவ னமைத்துச் செய்து, ஸ்ரீ வைஷ்ணவகுல திலகராய் விளங்கிக்கொண்டிருந்தார். இவர் ஒருநாள், புருஷோத்தமராகிய ஸ்ரீ கண்ண பிரானுடைய திருப்பணி செய்யும் போது, இதற் பிறவிக்குக் காரணமாகிய சாபத்தைத் தந்தருளின கண்ண பிரானை நினைத்து, அன்போடு எதிரேவர விரும்பி, பகவானுடைய சந்நிதியையடைந்து, வணங்கித் தோத்திரஞ்செய்து, இதற் பிறவிகிடைத்த வரலாற்றைச்சொல்லி, ஸ்ரீஹரி காம ஸ்மரணை செய்துகொண்டிருக்குங் காலத்தில், பெரும் புகழையுடைய ஜயவர்திகரத்துக் கரசனொருவனிருந்தான். அவனது பெரியசபையில் வந்து கூடுவோராய்ப் பாடுந் தொழிலில் மஹா சமர்த்தர்களாகிய ஐஞ்ஞூறு பேருண்டு; அவர்களுக்குள்ளே, மிகவும சூக்ஷ்ம புத்தி யுள்ளவரும், யாவரும் வியக்கும்படி பாடுவோரும் ஆகிய ஒருவ னுண்டு. அவரைத் தானசேன் என்பவன் நாடிவந்து, எதிரே நின்று,நீர் பெருஞ் சிறப்படைந் திருக்கிறீர்,உமக்குச் சமமானவர் இவ்வுலகத்தில் ஒருவரு மில்லை என்று புகழ்ந்து சொல்லுதலும், இவர் அவனை நோக்கி, ஐயா, என்னிலும் சிறந்தவர்கள் இவ்வுலகத்தில் அநேகம்பேரிருக்கிறார்கள், பெரியதென்று எல்லாராலும சொல்லப்பட்ட கடலும் அகஸ்தியமுனிவருடைய அங்கையி லொடுங்கி நின்றது. லோக ஸ்ருஷ்டியாகிய மஹாப்ரபாவமுள்ள பிரமதேவனும் விசுவாமித்திர முனிவருக்கெதிரே நிற்கமாட்டாமல் தோற்று ஓளி குறைந்தான், ஆருடகையருடைய அங்கையால் கருடனும் ஒளி மழுங்கினன், இப்படி உலக மெங்கும ஒருவருக்கொருவர் உயர்வதும் தாழ்வதும இயல்பாய்ப் பகவானால் அமைக்கபட்டிருக்கின்றன. ஆகையால், என்னை யானை சிறந்தவனென்று எப்படி நினைப்பேனென்று சொல்ல; அரசன் இவரை நோக்கி, அப்படிச்சிறந்தவர்களில் ஒருவரை இப்போது எனக்குத் தெரியும்படி காட்டும என்றான். அப்போது இவர், மதுராபுரியில், ஸ்வரவிசாரத்தில் சிறந்த சூரதாசர் என்னினும் மேலானவரென்றார். அதைக்கேட்ட அரசன், அப்படியானால், அவர் எத்தனைராகங்களில் சமர்த்தர் என்றுகேட்க, இவர், அரசனே, அவர் எல்லாராகங்களிலும் வல்லவர் என்றார், என்று சொல்லுதற்கு முன்பே, அரசன் ஆநந்தமடைந்து, சிவிகை அனுப்பி அவரை வரவழைத்து, அவரது திருவடியை வணங்கி, ஆசநம் தந்து திருக்கச்செய்து, பூசனை செய்து, அன்பு பாராட்டிக்கொண்டிருக்க, பாடகரெல்லாரும் ராஜ சபையில் வந்து சேர்ந்தார்கள். தானசேன் என்னும் அரசன், ஸ்ரீஹரிதாசராகிய இவரை, அன்போடு நமஸ்கரித்து, தாசரே, உமது சிறந்த ஞான கீர்த்தனங்களை நாங்கள் யாவரும் கேட்க விரும்பியிருக்கிறோம, ஆகையால் நீர் அருள்செய்யவேண்டு மென்று ப்ரார்த்திக்க, தாசரானவர் அரசன் முதலானோரை நோக்கி, நான் பாடுவது ஸ்ரீஹரியின் விஷயமாகிய பாடல்,அது உங்கள் செவிக்கேற்குமானால் பாடுகி

றேனென்று சொல்லி, வீணையைக் கைக்கொண்டு ஸப்த ஸ்வரங்களும் பொருந்த அமைத்து, அங்குள்ளவரெல்லாரும் ஆநந்திக்கும்படி திருமாலின் விஷயமாகிய கீர்த்தநங்களைப் பாடினர். அவைகளைக் கேட்டவர் யாவரும் ஆநந்த சாகரத்தில் மூழ்கினர்கள். இப்படியே அரசனது முயற்சியால் ஒரு மாசம் வரைக்கும் கடந்து வருகையில், அரசன் தேவிமார் ஐஞ்ஞூறு பேரும் இவரது பெருஞ்சிறப்பைக் கேள்விப்பட்டு, அரசனை நோக்கி, இவர் பாட்டில் தமக்குள்ள விருப்பத்தை யறிவித்துப் பிரார்த்திக்க, அரசன், இவர் கண்ணில்லாதவராகையால் நமதுடைய தேவிமார் இவர்க் கெதிரே வரலாம் என்று ஆலோசித்து, அவரைச் சபைக்கு வருவித்துக் கேட்கச் செய்தான். அப்போது, பூர்வத்தில் கண்ணிழந்தது சாபத்தால் அந்த அரசன் வீட்டு வேலைக்காரியாய்ப் பிறந்திருந்த சத்தியபாமையை, இவர் கண்ணால் நோக்கி, நான் பாடுங் காலத்தைத் தப்பிக்கொண்டு மௌனமா யிருக்கிறா யென்று சொல்லவே, அரசன் மனைவிமார், இவர்க்குக் கண்ணில்லை யென்றல்லவா இங்கு வருகிறோம்? இவர்க்குச் சன்மனிருக்கின்றதே யென்று காணி, திரையிட்டுத் தமமை மறைத்துக்கொண்டார்கள். பிறகு இவ்விருவரும் கலந்தபோது ஸ்ரீகண்ணபிரான் அங்கே யெழுந்தருளி, அந்நாரையும் சத்யபாமையையும் அவர்களுடைய பூர்வ ரூபங்களை யடையுமாறு செய்து, தமது ஒளி யுருவத்திற் சேர்த்து, தாமும் பரஞ்சோதியாய் விளங்கினர். அரசனோடு சேர்ந்தவர் எல்லாரும் இந்த அதிசயத்தைக் கண்டு, இவர் மஹாப்ரபாவரான தேவர் என்று புகழ்ந்து கொண்டாடினர்கள் என்று சொல்லி, மேலே சேனநாயிகர் வைபவத்தைச் சொல்லத் தொடங்குகிறார்.

சூதாசரிசரித்தரம் முற்றிற்று.

## ஸ்ரீ-வது சேனநாயிகர் சரித்திரம்.

பலவகைவளங்களும் நிறைந்த ஓரூரில், குருக்கர் மிகுதியாய் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அதைத் துருக்கருக்கு நாவிதரா யிருப்போர்களுடைய குலத்தில் ஒருவர் அவதரித்திருந்தார். அவர் பெயர் சேனநாயிகர் என்று சொல்லுவார்கள். அவர் வீட்டில் நாள்தோறும் ஸ்ரீ கண்ணபிரானைப் பூஜை செய்து வணங்கி வாழ்த்தி வருவார்கள். இதைச் சேனநாயிகர், அவ்வூரை யாளுகின்ற அரசனிடத்தில் வேலை செய்வோரா யிருந்தார். ஆனால், அந்த வேலை, நாம் ஸ்ரீ ஹரி பூஜை செய்வதற்குத் தடையா யிருக்கிறதே யென்று அந்த வேலையையும் செய்வதற்கு மனமில்லாதவரா யிருந்தார். அப்படி யிருக்க, ஒருநாள் இவர் நீராடி ஸ்ரீ ஹரிபூஜை செய்துகொண்டிருக்குங் காலத்தில், அரசனுடைய பரிசாரகர்கள் வந்து அரசன் அழைக்கிறானென்று அழைக்க, இவர் தமது மனைவியை யழைத்து, பெண்ணே, நான் வீட்டில்லில்லை யென்று சொல்லி யனுப்புவாயாக வென்று சொல்ல, அவளும் அப்படியே சொல்லி யனுப்ப, அவர்கள் அரசனிடத்திற் போய், அந்த நாவிதன் வீட்டிலிருந்துகொண்டே, இல்லையென்று சொல்லும்படி மனையாளே யேவினா

னென்று சொல்ல, அரசன் கோபங்கொண்டு, தனக்கெதிரே நிற்கிற சில வீரரை நோக்கி, நீங்கள் இந்த க்ஷணமே போய் அவனைக் கட்டி யிழுத்துக் கொண்டு வாருங்கள் என்று நியமிக்க, ஸ்ரீபக்தபராதீநஜன பகவானுனவர் இதற்கு மனம் பொறுதவராய், தாம் ஒரு நாவித வேஷம் பூண்டுவந்து அரசனுக் கெதிரே நிற்க, அரசன் கோபந் தணிந்து, எனக்கு முக வேலே செய்யென்று சொல்ல அப்படியே செய்தார். இவர் செய்த முகவேலையால் மிகவும் சந்தோஷித்து, நாவிதனே, இவ்வளவு காலம் நீ செய்த வேலையைப் பார்க்கிலும் இன்று நீ செய்த வேலே மிகவும் நன்றாயிருக்கின்றது என்று சந்தோஷித்து, உன்கையால் எண்ணெயிட வேண்டுமென்று, ரத்நமயமான பொற் கிண்ணத்தில் வார்த்து வைத்திருக்கிற எண்ணெயை யெதிரே வைத்து, அரசன் தன் ஆசநத்தின்மேலிருந்தான். அப்படியே யாகட்டுமென்று சேனுநாபிகர் உருவங் கொண்டு வந்த பகவானுனவர், தலேக் கெண்ணெ யிடும்போது, குண்டலம், கிரீடம், சதுர்ப்புஜம், பீதாம்பரம், நீலமேனி இவையாவும் அப்பொற் கிண்ணத்தில் தோன்ற, அதை அரசன் உற்று நோக்கி, மெய்மறந்து விழுதலும், அந்தப்புரத்தில் உள்ளவரெல்லாரும் வந்து சூழ்ந்துகொண்டு, அரசனே நோக்கி, இரண்டு ஜாமமாகியும் ஸ்நாநத்துக்கு வராம லிருக்கிறீரே யென்று கேட்கும் சப்தத்தைக் கேட்டு, அரச னெழுந்து குற்ற மற்ற நாபிதரைப் புகழ்ந்து, இங்கே நீயிருக்கக் கடவையென்று ஒரு ஆசநத்தைக் கொடுத்தலும், அந்த ஆசநத்தில் நாபிதர் இருக்காததைக் கண்ட அரசன், நீ இந்த ஆசநத்திலிருக்காமற் போனுல், என் உயிர் நிற்காது என்று சொன்னன். அப்போது, நாபிதர், ஓ அரசனே, நான் வீட்டுக்குப்போய் ஸ்நாநம்செய்து வருகிறேன் என்று விடை கேட்க, அரசன் அப்படியே விடை கொடுத்தான். அப்போது, நாபிகர்வீட்டுக்குப் போய், அடப்பத்தை முளையிலே மாட்டிவிட்டு, ஸ்ரீ கண்ண பிரான் எழுநதருளின பிறகு, அரசன் ஸ்நாகஞ் செய்து வந்து சபையில் வீற்றிருந்து, ஏவலாளரை நோக்கி, நமது நாவிதன் இப்பொழுது இங்கே வர வேண்டும், அவனே வர வழையுங்கள் என்று சொல்ல, உடனே ஏவலாளர் போய், நாபிதனைத் நோக்கி, அரசன் உன்னே வரச் சொன்ஞனென்று சொல்லுதலும், நாபிதரானவர், அரசன் கட்டளேக் குட்பட்டு நடப்பது நமது கடமை யாருமென்று, அடப்பத்தைத்தோளில் மாட்டிக்கொண்டு அரசன் கோபங் கொண்டிருக்கிறானே யென்று, நடு நடுங்கி, ஸ்ரீ ஹரி நாம ஸ்மரணையோடும் அரசனதுசபைக்கு வந்தார். இவரைக் கண்டவுடனே அரசன் எழுந்து நின்றான்; அதைக்கண்டவரெல்லாரும் கல்லென்று நகைத்தார்கள். அவர்கள் நகைத்ததை அரசன் மனத்திற் கொள்ளாமல், நாபிதர் முகத்தை நோக்கி, இன்று உதய காலத்தில் காட்டின உமது முகத்தை இப்பொழுதும் காட்டவிரும்புகிறேன், அருள் செய்யவேண்டுமென்று ப்ரார்த்தித்து, இவரது பாதத்தைக் கையினுல் பிடிக்க, இவர், திகைத்து, ஐயோ, நமக்கு ப் பாவம் நேரிட்டதே யென்று நிற்க, அரசன், வட்டிலிலுள்ள எண்ணெயில் இவருடைய திருவுருவ முழுதும் தோன்றக் கண்டவுடனே, எழுந்து

நின்று, ஸ்ரீலக்ஷ்மீநாதனே, ஏழை பங்காளா, இழிந்தவனுகிய என்னிடத்தில் வந்து, இழிந்த தொழிலைச் செய்த கண்ணபிரானே என்றுசொல்லி இரங்கி, நாபிகருடைய சேவடியைப் பிடித்துக்கொண்டு வணங்கி, இன்று உம்மால் ஸ்ரீலக்ஷ்மீநாதனைத் தரிசித்தேன் என்று சொல்லி, பிறகு ஸ்ரீ ஹரிநாமத்தை அன்போடும் உச்சரித்து நிற்க, நாபிதரும் அரசனைப் புகழ்ந்து, தமது அடப்பத்தைத் திறந்து பார்த்து, அதில் ஸ்ரீகண்ணபிரானுல் வைக்கப்பட்டிருந்த பொருளைக் கைக்கொண்டு, வேதியரெல்லார்க்கும் அவர்கள் விருப்பத்தின் படியே தானஞ் செய்து, அரசனுக் கெதிரே நின்று பகவானைத் தோத்திரஞ் செய்ய, அரசனும் கருட வாஹநரகிய பகவானைப் பலவகையாய்த் தோத்திரம்பண்ணினன். அந்த நாள் முதலாக அரசன், சகல ஜகத் காரணராகிய ஸ்ரீ ஹரியின்நாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டு இனிதாய் வாழ்ந்திருந்தான். சேனாபிகரும் அரசனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு தமது வீட்டுக்கு வந்து பகவந் நாம ஸங்கீர்த்தன பராராய் வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே சாத்விகராஜன் பவபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

சேனாபிகர் சரித்திரம் முற்றிற்று.

## உ எ-வது சாத்விகராஜன் சரித்திரம்.

சர்வாலங்காரங்களும் நிலைபெற்ற ஜகந்நாதம் என்னும் நகரத்தை யாளுகின்ற சாத்விகராஜன் என்பவர் ஸ்ரீ ஹரிபக்தியிற் சிறந்தவரும், ஹரி பூஜாதுரந்தரரும், த்ரிகாலத்திலும் ஹரிபூஜைசெய்து திருத்துழாய்த் தீர்த்தத்தை ஸ்வீகரிப்பவரும், அதிதி பூஜைசெய்து பிறகுதான் உண்ணுதலாகிய விரதம் பூண்டவரும், விஸ்தாரமாக அன்ன சத்திரமுதலான தர்ம கைங்கரியங்கள் செய்துகொண்டிருப்பவரும், சகல ஜீவராசிகளின்மீதும் மிகுந்த தயையுள்ளவரும, பகைவருக்குச் சிங்கம் போன்றவருமா யிருந்தார். இவர் ஒரு நாள், சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கிற சமயத்தில், அந்த நகரத்திலுள்ள ஸ்ரீவிஷ்ணுவாலய ப்ரஸாதத்தை அர்த்தக் கோயில் ஸ்சகர்கள் கொண்டுவந்து அரசருக்குக் கொடுக்க, இவர் வலக்கை ஆட்டத்திற் குபயோகமா யிருந்ததனுல் இடக் கையை எந்தினர். அர்ச்சகர்கள், பகவத் ப்ரஸாதத்தை அரசர் இடக்கையால் வாங்கப்படாது, நாமும்கொடுக்கப்படாது, மஹாபாபமென்று கொடாமல் போய்விட்டார்கள். பிறகு அரசர், சொக்கட்டான் ஆடி முடிந்தவுடனே வந்த அர்ச்சகர்கள் எங்கேயென்று எதிரேயிருந்தவர்களைக்கேட்டார். அவர்கள் பெருமானுக்கு நிவேதித்த ப்ரஸாதத்தை இடது கையில் கொடுப்பது பெரும் பாவமென்று சொல்லித் திருமபிப் போய் விட்டார்கள் என்று சொல்ல, அரசர், மிகவும் மனம் கலங்கி, நாம் என்ன அபசாரம் செய்துவிட்டோம,இந்தஅபசாரத்தை எப்படித் தீர்த்துக்கொள்ளப்போகிறேமென்றும், கள்ளை விரும்பிப் பாலை விலக்குகிற கீழ்மக்களைப்போல, ஆட்டத்தில் மனம் வைத்து, ஹரி ப்ரஸாதத்தை அகற்றினேனே யென்றும், இப்படிப் பகவத்

ப்ரஸாதத்தை யேற்றுக்கொள்ளாத இந்தக் கையை அறுத்தெறிவதே தகுதியான தண்டனையென்றும் ஆலோசித்து, மந்திரியை யழைத்து, அவன் முகத்தை நோக்கி, நான் வாசஞ் செய்கிற இந்த மாளிகையின் சாளர வழியாக ஒரு பேயானது இராக் காலங்களில் வந்து என்னை அச்சுறுத்துகின்றது; அந்தப் பேயின் கையை நீ யறுக்கவேண்டுமென்று சொல்ல, மந்திரியும் அப்படியே செயகிறே னென்று சொல்லிப் போய் அன்றிரவில் வந்து அந்தச் சாளர வாயிலே யடைத்து, பேயின் வரவு பார்த்திருந்தான். அரசர், அந்த மந்திரிக்குப் பின்புறமாய் உரு மாறி வந்து, சாளர வழியில் கையை நீட்டினர். அதைக் கண்டவுடனே மந்திரியானவன் அது பேயின் கையென்று நினைத்து அதைத் தன் வாளினால் வீசி அறுத்துத் துண்டாக்கி வீழ்த்தினான். கையறுபட்டவுடனே அரசர் துடிதுடித்துக் கீழே விழுந்து மூர்ச்சித்துக் கிடக்க, மந்திரியானவன் பதறி வந்து அரசரைக் கண்டு, மிகவும் நடுக்கித்துச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்து, மூர்ச்சை தெளிந்த வுடனே அரசர் மந்திரியை நோக்கி, நீ யேன் துக்கிக்கிறாய்? என் கை செய்த பிழையை நீக்கினாய், அதனாலே உனக்கு ஒரு தோஷமுமில்லையென்று மந்திரியைத்தேற்றி, விடியற்காலத்திலே, தமது வெட்டுப்பட்ட கையைச் சிவிகையின்மேல் ஏற்றி, பகவானே! அடியேனுடைய கை செய்த அபராதத்தின் பொருட்டு அதை வெட்டிச் சிக்ஷை செய்தேன். இதைவிட மேலானவகையாகிய சிக்ஷையிருந்தால் நியமித்தருளவேண்டும் என்று சொல்லித் தோத்திரம் பண்ணி, அந்தச் சிவிகையோடு நிலவரச் சேர்த்துக் கோயிலுக் கனுப்பினர். அவர்களும சிவிகையைக் கொண்டுபோய்க் கோயிலில் இறக்கி, அகருள்ளஅர்ச்சகர் முதலானோர்க்கு அறிவிட்ட கையைக் காட்ட, அவர்கள் யாவரும மிகவும் துக்கித்து, தெய்வச் செயல் இப்படியாய் முடிந்தது என்றும, மேலவரசர் ஸ்ரீஜகந்நாத பெருமான் திருவடியின்மீது தன் மனமுழுதும் பதிய வைத்து, இகபர பிரபஞ்சத்தில் வெறுப்புள்ளவர், அன்றியும் சரணமே தேறுமாபோல் இல்லாதவர் என்றும மிகவும் மனங்குலைந்து, கொண்டுவரப்பட்ட கையின்மேல் ஜயஜய வென்னும் கோஷத்துடனே கதறிப்பொழுதய மிறைத்தார்கள். கதறிப்பொழுது மாத்திரத்தில் அதுதக் கையானது தவருருபமாய்விட்டது. அதைக்கண்ட அர்ச்சகர் முதலானோர் ஆச்சரியமடைந்து, அந்தத் தவருருவத்தை ஸ்ரீஜகந்நாதஸ்வாமியின் திருவடியில் சமர்ப்பித்து எடுத்து, முந்தின கால்போலவே ப்ரஸாதத்தோடு சேர்த்து அனுப்பினார்கள்; அப்படி அவர்களால் அனுப்பப்பட்ட ப்ரஸாதங்கள் வருவதைக் கண்ட அரசன் மிகு மகிழ்ச்சியோடு கையேந்தி, இறைவனது திருவருள் அறுபட்ட கையும் வளர்ந்ததனால் இரண்டு கைகளாலும் ஏற்றுக்கொண்டு, தவருருவத்தைக் கண்ணி லொற்றிக்கொண்டு, பிறகு சிரசில் சூடிக்கொண்டார். ப்ரஸாதத்தைப் பவித்ரமாகத்தை நீக்குதற்குரிய பரமௌஷதமாக மதித்து ஸ்வீகரித்துச் சுகமாய் வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, கருமாபாயி வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

சாந்விகாஜன் சரித்திரம் முற்றிற்று.

# உ அ-வது கருமாபாயிசரித்திரம்.

ஸ்ரீ ஜகந்நாதம் என்னும் திவ்யதேசத்தில் கருமாபாயி என்றொருவர் இருந்தார். இவர் ஒருகாலுக்கொருகால் குணம் வேறுபடாமல் நிலைத்திருந்து பல தானதர்மங்களைச் செய்பவர், கல்வி முதலிய குணங்களையுடையவர், பூததயையுள்ளவர், எல்லாச் சீவர்கள் மேலும் கருணையுள்ளவர். இப்படியிருக்க, இவர் திருவயிற்றில் கருத்தரித்திருக்குங்காலத்தில், இவர் கணவன் தேஹவியோகமடைந்தான். பிறகு ப்ரஸவித்திருந்த காலத்தில் ப்ரஸவித்தார். ப்ரஸவித்தது ஆண்குழந்தையாலகையால், அவனை மிகவும் அன்போடு வளர்த்துவந்து, அவனுக்குப பருவம் நிறைந்தவுடனே, மணமுடித்து வைக்க, அவனுக்கு ஒரு புதல்வனுண்டாகித் தவழ்ந்து விளையாடுங்காலத்தில், தமது புதல்வன் இறந்தான். கருமாபாயியானவர் தமது புதல்வனிறந்ததைக் குறித்து மிகுதியாய்த் துக்கித்து, ஓ பகவானே, என்னகன் இறந்து போகச் சங்கல்பித்த நீர் அவன் குழகனதையாகிய இவனையாகிலும நீக்காயுவாகக் கிருபைசெய்யவேண்டுமென்றும், இவனுகிலும எனக்கு குதவுவானென்றும, நீரேயென்னை ரக்ஷிக்கவேண்டும, எனக்கு வேறுதிக்கில்லையென்றும் ப்ரார்த்தித்து, தமது பேரனைத் தமது மகனுகவே பாவித்து வளர்த்துவருகார். அவன் கன்றாய் வளர்ந்து வருங்காலத்தில் நோயணுகி யிறந்தான். அவனிறக்கவே, மகனுக்குத் துக்கித்தலைப் பார்க்கிலும் அதிகமாகத் துக்கித்து, மனநிலை கலங்கி, ஸ்ரீலக்ஷ்மீரமணனே, என்னை இந்தத் துன்பக்கடலில் முழுகி வருந்தும்படி செய்வது தேவரீருடைய திருவருளுக்குத் தகுதியாமோ என்று இப்படிப் பலவகையாய்த் தோத்திரித்துப் புலம்பும்போது, ஸ்ரீ ஜகந்நாதக்ஷேத்ரமலையத் தரிசிக்கவந்த பாகவதருள் சிலர், இவர் வீட்டுக்குவந்து, இவர் துக்கிப்பதைக்கண்டு, உன் துக்கத்துக்குக் காரணம் யாதென்று கேட்க, இவரும் தமது துக்கத்துக்குக் காரணமான செய்தி முழுதும சொல்லவே, வந்த பாகவதர்கள், இவரை நோக்கி, அம்மா, இதகச் சம்ஸார வாழ்க்கையில் ஒரு அணுவளவும் இன்பமில்லை, இதி விருந்துகொண்டு துகதிபடுதலால் என்ன பிரயோஜனம்! இதை விட்டு ஸ்ரீ கண்ண பிரானது திருவடியைப பற்றினால் உமக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும் என்று சொல்ல, இவர் அப்படியே செய்யத் துணிந்து, ஸ்ரீ தரணிய பகவானுடைய திருவருளுக் குரியவராகிய ஓ பாகவதர்களே, பேதையாகிய அடியேன், ஓரே நிலைமையில் நிற்கும்படியான உபாயம் சொல்லியருளவேண்டுமென்று வேண்ட, அந்த பாகவதர்கள் இந்தக் கருமாபாயியாரை நோக்கி, இவ்வுலகத்திலுள்ள சாராசாரவஸ்துக்களின் நிலைமையைச் சொல்லி, ஸ்ரீஹரிநாமத்தை உபதேசித்து, ஸ்ரீகண்ணபிரானுடைய விக்ரஹத்தைக்கொடுத்து, மகன், பேரன் என்பவரிடத்தில் வைத்த அன்பை இந்தப்பகவத்விஷயத்தில்வைக்கக்கடவையென்று நியமித்தார்கள். கர்மாபாயி

யாரும் அப்படியே செய்கிறேன் என்று மன மகிழ்ச்சியோடும் அன்போடும் உபதேசம் பெற்றுக் கொண்டு, அந்தப் பாகவதர்களைப் பலவகையாய்த் துதித்து வணங்கி உபசரித்து, அவர்கள் போன பிறகு, அன்று முதலாக இடையறாமல் பகவத்பாகவதாராதநங்களில் மனவிருப்பமுள்ளவராய் வாழ்ந்திருந்தார். இப்படி யிருக்கும் போது, கருமாபாயியார், அந்தப் பாகவதர்களால் கொடுக்கப்பட்ட கண்ணன் விக்ரஹத்தோடு பேசியும், விளையாடியும், அப்யஞ்சநஞ் செய்வித்தும், முன்னூனையால் ஈரத்துடைத்துத் தமது தொடையில் படுக்கவைத்தும், ஔஷதம் புகட்டியும், பாலூட்டித் தொட்டிலில் கிடத்தி ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டே தாலாட்டியும், கண்மூடி யுறங்கி விழித்தபிறகு எடுத்து மார்போடணைத்து முத்தமிட்டும், இப்படி ப்ராக்ருத சிசுக்களை வளர்ப்பதுபோலவே, அசடிதகடநா ஸமர்த்தனை ஸ்ரீகண்ண பிராநை வளர்த்து வந்தார். வளர்த்த பிறகு ஆடையாபரணாதிகளால் அலங்கரித்து, அந்தமுண்ணும் பருவம் வந்தவுடனே, அந்நப்ராஶநம் செய்து அந்தமுண்பித்து, வயிறுகுழையாமல் அடிக்கடி பார்த்து, அந்தமூட்டி வருவதையும், எல்லாலோகங்களையும் அமுது செய்தவனே, யான் உண்பிக்கும் இந்தப் பாலன்னத்தையும் அமுதுசெய் தருள்வாயாக வென்று உபசரித்து வருவதையும் கண்ணபிரான் கண்டு, திருவுளங் களிக்க, இவர் விருப்பத்தின்படியே வயிறு நிறைய வுண்டு, இவர் கண் களிகூரக்கண்டு மனமகிழுமபடி செய்தார். இப்படிக் கருமாபாயியார், தாயைப்போல உபசரித்து வருவதனால், ஸ்ரீகண்ணபிரானுனவர் நாள்தோறும அமுதுசெய்து வளர்த்துவரும் காளில், ஒரு வேதியன் அந்தக் கருமாபாயியார் வீட்டுக்கு வந்தான். இவன் கந்தன் மனையை விட்ட குறை நிறையும்படி இந்தக் கருமாபாயியார் மனையை யடைந்து பெரு மகிழ்ச்சியோடு தங்கி யிருப்பவராகிய கண்ண பிரானை அறியாதவனுய், அங்கே வாசம் பண்ணிக்கொண் டிருந்தான். அந்தகா ளிரவு கழிந்து விடிந்த வுடனே, தாயாகிய கருமாபாயியார், கண்ணபிரானை யெழுப்பி, ஐயனே, உன் பசியைத் தணிக்கும்பொருட்டு நான் வைத்த அமுதை விரைவாக உண்ணக் கடவை யென்று சொல்லக் கேட்ட வேதியன், கருமாபாயியாரை நோக்கி, நீ யாரை அமுதுண்ணச் சொல்லுகிறு யென்று கேட்க, மேகவண்ணனுகிய கண்ண பிரானை யென்று சொல்ல, வேதியன், ஸ்நாநம் செய்யாமலா கண்ணனுக்கு அமுதூட்டுவது ? அப்படிச் செய்தல் தகாத காரியமாகும் என்று சொல்ல, கருமாபாயியார், நான் அப்படியே செய்கிறேனென்று சொலலி, மறுநாள் விடியமுன்னே யெழுந்திருந்து, நீராடி, புதுநீர் கொண்டு வந்து, வீடு முழுதும் மெழுகிச் சமையல் செய்தார். இப்படி நாள்தோறும் நீராடிப் புது நீர் கொண்டு வந்து வீடு மெழுகிப் பிறகு சமையல் செய்யத் தொடங்குவதனால், உண்ணுங் காலத்துக்கு மேற்பட்டுப் போக, கண்ணன் பசி பொறுக்காமல், கோயிற் பணிவிடை செய்துகொண் டிருப்பவனுகிய ஒருவன் கனவில் வந்து, நான் அமுதுசெய்யுங் காலமறிந்து விரைவாக ஒருவன் சமையல் செய்து வந்தான்; அவனை விட்டுக் கருமாபாயியார்

தாமே நீராடிப் புது நீர் கொண்டு வந்து வீடு மெழுகிச் சமையல் செய்யத் தொடங்குவதனல், உண்ணுதற்கு நெடு நேர மாகின்றது, எனக்கோ பசி பொறுக்கக் கூடவில்லே. ஆகையால் முன்னே சமையல் செய்தவனேக் கொண்டே இனிமேல் சமையல் செய்ய நியமிக்கும்படி கருமாபாயியாரிடத்தில் சொல்லக் கடவீர் என்று சொல்ல, அக்கக் கோயில் அர்ச்சகன் உடனே விழித்து, பொழுது விடியு முன்னே, யசோதாபிராட்டியார்போலக் கண்ணனே வளர்த்து வருகிற கருமாபாயியா ரிடத்திற்கு வந்து, கருணேக் கடலாகிய பகவான் என்னவில் வந்து, முன்னே தளிகை செய்தவனே விலக்கி, நீசீர மிவரும் நேரஞ் செல்லத் தளிகை செய்வதாகவும், அதனல் தமக்குப் பசி பொறுக்கக் கூடவில்லே யென்றும் சொன்னர். ஆகையால் இனி இப்படிச் செய்வதை நிறுத்தி, முன்போலவே விரைவாய்த் தளிகை செய்யும்படி யேற்பாடு செய்தால் கணமையாயிருக்கும், புறச் சுத்தியால் சிறிதும் பயனில்லே, அகச்சுத்தி யிருந்தால் அதுவே சிறந்தது என்று சொல்லக் கேட்ட கருமாபாயியார் முன்போலவே விரைவாய்த் தளிகை செய்து சமர்ப்பிக்க, சர்வ சக்தனுகிய பகவானுனவர் இனிதா யமுது செய்து வந்தார். இதைக் கண்டவர்கள் யாவரும், பரிசுத்தமாகிய யாகம் ஹோமம் யோகம் முதலிய வற்றைச் செய்வோர்க ளிடத்திலும் அணுகாத பரம பொருளாகிய கண்ணனேத் தாய்போல வளர்த்து வருகிற கர்மாபாயியாருடைய புண்ணியமே புண்ணியம் என்று புகழ்ந்து கொண்டாடினர்கள். மேலும் அவர் திருவடியில் வீழ்ந்து வணங்கித் தோத்திரம் செய்தார்கள். அன்று முதல் ஸ்ரீ ஜகந்நாதத்தில் ஸ்ரீ கண்ணபிராணுக்குக் கிச்சடி செய்து சமர்ப்பிப்பது வழக்கமா யிருக்கிறது என்று சொல்லி, மேலே ஜயவந்த பக்தர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

கருமாபாயிசரித்திரம் முற்றிற்று.

# உகூ-வது ஜயவந்தபக்தர் சரித்திரம்.

வடதேசத்தில் ஓரூரில் ஜயவந்தர் என்றொரு வணிகரிருந்தார். அவர்க்கு ஐந்து புதல்வருண்டு. இந்த ஜயவந்தர், ஸ்ரீ ராமோபாசகராகவும், ஹரி பக்தர்களேப பூஜிப்பவராகவும் இருந்தார். அன்றியும் தம்மிடத்திற்கு வருகிற சாதுஜனங்களுக்கும் அதிதிகளுக்கும தவறுமல் ஸ்வயம்பாகம் கொடுத்து வருவார். இப்படி யிருக்குங் காலத்தில், புதல்வராகிய ஐவரும் வளர்ந்து பருவம் நிறைந்தபிறகு, இவர் இப்படிச் சாதுஜனங்களுக்கும் அதிதிகளுக்கும் ஸ்வயம்பாகம் கொடுத்து வீணுகப் பொருளேச் செலவிடுகிறூர் என்று மனம் பொறுக்காதவர்களாய், இவரைப் பல வகையாய் நிந்தித்து, பரமதுஷ்டர்களாயும், துராசாரத்தை யுடையவர்களாகியும் பிரமகுலத்தில் உற்பவித்த நாவணுனே நிகர்த்தவர்களானர்கள். பிறகு ஒருநாள் தந்தையின் தர்ம மார்க்கத்து

க்குத் தாம் சம்மதிக்காதவர்களாய், இக்கக் கிழவனுக்குப் பித்தம் பிடித்தாற் போல் தோன்றுகின்றது. நமது குலத் தொழிலாகிய வியாபாரத்துக் குதவுகிற பொருளே யெல்லாம் இப்படிச் செலவு செய்கிறானே, இதற்கு என்ன செய்யலாம் என்று ஆலோசித்துச் சிலபொருள்களைத் தக்தைக்குத் தெரியாமல் மறைத்து வைத்துவிட்டு, இவரை வருத்தப்படுத்த வேண்டுமென்று நினைத்து அரசனிடத்தில் வந்து சொன்னார்கள். அரசன் இந்த ஜயவர்தரைக் கூவி, உமது பொருளேயெல்லாம் இப்படி வீண் செலவு செய்தால், உமக்குப் பிறந்த பிள்ளைகள் ஐவரும் எப்படி ஜீவிப்பார்கள்? அவர்கள் வியாபார ஜீவனம் செய்வதற்கு ஆதாரமாகக் கொஞ்சமும் வைக்காமல் பொருள் முழுமையும் இப்படிச் செலவு செய்தால் அவர்கள் என்ன செய்வார்கள் என்று கேட்க, இந்த ஜயவர்தர் அரசனே நோக்கி, தேவரீருக்குத் தெரியாததொன்றுமில்லை; பொருள், புத்திரர் முதலான எல்லாம் அழிந்து போவனவே, தரும மொன்று மாத்திரமே நிலையா யிருப்பது, ஆகையால் நான் தர்ம மார்க்கத்தில் பொருளைச் செலவு செய்கிறேனேயன்றித் தீயவழியில் செலவு செய்யவில்லை என்று சொல்லக் கேட்ட அரசன், இவர்க்குப் பித்து முதிர்ந்தது, இவரை மிகுதியாக வருத்தப் படுத்துவதைப் பார்க்கிலும் கொலைசெய்வதே உத்தம மென்று தீர்மானித்துக் கொண்டு, புதல்வரை யழைத்து, இவரைக் கொலைசெய்யத் தீர்மானித்தேன், உங்கள் சம்மதம் என்னவென்று கேட்டான். அதற்குப் புதல்வர், இவன் எங்களுக்குத் தக்தையல்ல, பகைவனுவான், இவனை ஒரு மரப்பெட்டியிற் போட்டுக்கட்டி நீரில் அமிழ்தி போகும்படி செய்வதே நன்மையென்றார்கள். அரசனும் அப்படியே செய்ய நினைத்து, இவரை யொரு மரப்பெட்டியிற் புகுத்திக் கமிற்றால் வாயை வரிந்து மிகவாதிருக்கும்படி பலவான கல்லை அதற்குப் பையோடு சேர்த்துக் கட்டி நீரில்விடச் சிலரை யேவினான். அவர்களும் ஆழ்ந்த நீரில் கொண்டுபோய் விட்டு வந்தார்கள். இவர் நீரில் அமுங்கிப் போவதற்கு முன்பே பரமகாருணிகரான பகவானுவர் பூர்வகாலத்தில் திருப்பாற் கடல் கடையுமபோது மந்தரகிரியானது நீரிலமுந்தாமல் மிதக்கும்படி ஆமை யுருவாகித் தாங்கினதுபோல, இவரையும தாங்கிக்கொண்டு நிற்க, ஜயவர்தர் மேலே மிதத்துகொண்டிருப்பதை வேந்தன் பார்த்து, சர்வாந்தர்யாமியாகிய பகவானே யிவர்க்கு உதவியாயிருக்கும்போது, எம்போல்வார் செய்யும் தீமைகு இவரை யென்ன செய்யும்? இவரைக் கொல்ல எண்ணினது நமக்குத் தகாத செய்கையென்று பயந்து, விரைத்துவருது இவரைக் கரையேற்றிக் கட்டவிழ்த்து விட்டு, மிகவும் உபசரித்துத் திருவடியில் வீழ்ந்து வணங்கி நிற்கக் கண்ட புதல்வரும் வந்து திருவடியில் வீழ்ந்து வணங்கினார்கள். பிறகு அரசனும் புதல்வரும் நாங்கள் செய்த பிழையைப் பொறுத்து எங்களை ரக்ஷிக்கவேண்டுமென்று தோத்திரமபண்ணி நிற்க, ஜயவர்தர், அரசனையும் புதல்வரையும் வாழ்த்தினார். அரசன் அன்று முதல் இந்த ஜயவர்த பக்தருக்கு அடியவனுகித் தொண்டு செய்து வாழ்ந்திருந்தான். புதல்வரும் தக்தையைப் பூஜித்து இனிதாய் வாழ்ந்திருந்தார்கள் என்று சொல்லி, மேலே சூதாசர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

ஜயவர்த பக்தர் சரித்திரம் முற்றிற்று.

# ஈ0-வது சுரதாசர் சரித்திரம்.

முற்காலத்தில் அத்திக புரியை யாண்டுகொண்டிருந்த அகபர அரசனை அடித்து அவனுக் கிதமாய் உடனே கொண்டு, அவனது தலையைச் சம்பாதித்து, மதுராநகரத்துக்குத் தலைவராயிருந்த சுரதாசர் என்பவர் மதுரை, கோகுலம, பிருந்தாவனம இவை யாவும் புண்ணிய ஸ்தலங்களாகையால், அந்த ஸ்தலங்களுக்கு வருகிற சாது ஜங்கமங்களுக்குத் தகுதியாகிய உபசாரங்கள் செய்து, சுவை மிகுந்த திவ்யாகங்களை வழங்கிவந்தார். இப்படித் தினமும் தானும் செய்து வருவதனல் தாம் சுலபவழியிற் சம்பாதித்த பொருள் களெல்லாம செலவாய் விட, மேல்ல செலவு செய்வதற்குப் பொருளில்லாமல், இனி வருகிற சாது ஜங்கமங்களின் தரியாதாகத்துக்கு என்னப் பொருளை உபயோகிப்போமென்று வருந்தி, நமமை நாடி வருகிறவர்களுக்குக் கொடாத பொருளினல் பய னென்ன? நமது அரசனுடைய பொருளை உபயோகிப் போம், அரசன் அடித்து தண்டித்தாலும் தண்டனையை யேற்றுக்கொள்வோ மென்று தீர்மானித்துக்கொண்டு, தம்வசத்திலிருந்த ராஜ தனத்தையெல்லாம் எடுத்து, அதைக்கொண்டு சாது ஜங்கமங்களை யுபசரித்தும், தர்மசாலைகளுக்கு உதவியும, தர்மசாலைகள் கட்டுவித்தும், தாம் வாசம் பண்ணுகிற மதுராபுரியில், திருத்துழாய் மாலையை யணிந்த திருமாலே, மதன மோஹனன் என்னும் பெயரால் பரதிஷ்டை செய்தும், அந்த பிரதிஷ்டையின் விஷயமாக என்பதலக்ஷத்துப் பதினறாயிரம வராகன் செலவு செய்தும், இன்னம் அநேக தர்ம கைங்கரியங்கள் செய்யாநினைத்துக்கொண்டும் இருந்தார். இப்படி இவர் செலவு செய்வதைக் கண்டவர்கள், அத்திக புரிக்கு அரசனுகிய அகபரிடத்தில் வந்து, வேந்தனே! சுரதாசர் என்பவர் உமது பொருள் முழுதும் வீண் செலவு செய்கிறார் என்று சொன்னர்கள். அதைக்கேட்ட அரசன், தன்சேவகரைநோக்கி, அங்கே நீங்கள்விரைந்துபோய்ப் பொக்கசத்தில் உள்ளபொருள் களோடு சுரதாசரையும் தக்கணமே கொண்டுவாருங்களென்று நியமித்தான்; அன்றியும் தன் கைத்திட்டங்கிய திருமுகத்தையும கொடுத்தனுப்பினன். சேவகர்கள் உடனே புறப்பட்டு விரைந்துபோய் மதுராபுரியை யடைந்து, பகவத் பக்தராகிய சுரதாசரைச் சேர்ந்து, அரசன் கொடுத்த திருமுகத்தைக் கொடுத்து, அத்திக புரியில் நடந்த செய்தியையும் சொன்னர்கள். சுர தாசர் அந்தத் திருமுகத்தை வாசித்து, அதிலெழுதப்பட்டிருந்த சங்கதிகளெல் லாம் தெரிந்துகொண்டு, அஞ்சாமலிருந்து, அரசன் என்மேல் வீணகக் கோபங்கொண்டான், அரசன் கொடுத்த பொருள் முழுமைக்கும் ஈடான மாணிக்கங்கள் சேகரித்து வைத்திருக்கிறேன், அந்த மாணிக்கங்களை அரசன் கண்டால் என்மீது மிகவும் அன்பு செய்வான், நீங்கள் இந்த ரத்ன மண்டபத்தில்


இருங்களென்று சொல்லிவிட்டுத் தமது வீட்டுக்குள்ளேபோய், தகுதியாகிய ஒரு பெட்டியில் மாணிக்கத்துக்குப் பதிலாகப் பரற்கல்லை நிறைத்து, வேந்தனே! உன்பொருள் முழுதும் வந்தகல்லோர்களுக்கும, தர்ம சாலைகளுக்கும், கோயிலுக்கும் உபயோகித்து உன் புகழை ப்ரகாசிக்கச் செய்தேனேயன்றி வேறே வீண் செலவு செய்திலேன், உன்பொருள் உன்னிடத்தில் வந்து சேரவில்லை யென்று கோவங் கொள்ளவேண்டாம், நீ கோவிப்பாயென் றஞ்சியே இன்றிரவில் எங்கேயாகிலும் போய் மறைந்திருக்கலாமென் றெண்ணி யிருக்கிறேன்என்று ஒரு கடிதத்தில்எழுதி அதையும்அந்தப் பெட்டியில்வைத்து மூடி, அரசனுல் அனுப்பப்பட்டவர்களிடத்தில் கொடுத்து, நான்வரலாமென் றெண்ணி யிருக்கையில் நீங்கள் வந்துவிட்டீர்கள், மிகவும் கன்மையாயிற்று என்று சொல்லி, அவர்களுக்குப் பொன், ஆபரணம், ஆடை முதலியவற்றை மிகுதியாகக் கொடுத்து, அவரோடு கூடியுறங்கி, நடுராத்திரியில் அவர்களறியாமல் எழுந்து போய் ஒரு காட்டை யடைந்து, ஸ்ரீ ஹரி நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்தார். இங்கே, சூரியோதய மானவுடனே சேவகர்கள் எழுந்து பார்த்து, சுரதாசரைக் காணுமல் நாம் போய் நமது அரசனுக்கு என்ன சொல்வோம் என்று பயந்து, அந்த வூரிலும அடுத்த வூர்களிலும தேடிக் காணுமையால் அரசன் கோவிப்பானே, என் செய்வோமென்று கவலைகொண்டு, பெட்டியைத் தலைமீது சுமந்து வந்து அரசனுக்குத்தெரிவதற்கு முன்னே செய்தியைச் சொன்னார்கள். அரசன் தன் மந்திரியாகிய பிரபலனை வரவழைக்கொண்டு பெட்டியைத் திறக்கச் செய்து, அதில் பரற் கற்கள் நிரப்பியிருப்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டு, பிறகு கடிதத்தைப் பிரித்துப் படித்துப் பார்த்து, முன்னே கோள் சொன்னவன்மேல் கோபங் கொண்டு அவனை நோக்கி, தாஸர் வீண் செலவு செய்கிறார் என்று நீ சொன்னது பொய்தானே! அவர் வீண் செலவு செய்யவில்லை, என் பொருளை நல்ல விஷயத்தில் உபயோகப்படுத்தி யிருக்கிறார். உண்மையை யெழுதி வைத்து விட்டு மறைத்துபோகும்படி செய்தாயல்லவா? நீ வைஷ்ணவத்ரோஹியென்று மிகவும் கோவித்துக்கடிந்துபேசி, கடிதத்தை கன்ருய்ப் பார்த்து, இது சுரதாசர் கை யெழுத்தே, சக்தேஹ மில்லை யென்று துணிந்து, கண்ணீர் பெருகச் செய்து, கல்ல மந்திரியாகிய ஒருவனை நோக்கி, மூன்றுலகங்களிலும் தேடிப் பார்த்தாலும் சுரதாசரைப்போல ஒருவரைக் காணக்கூடுமோ? என் மதத்தினல் அவர் அஞ்சும்படி கோவித்தெழுதினேன்என்று மிகவும் மனம்வருந்தி, அவர் எங்கே யிருந்தாலும் தேடி யழைத்து வந்து என் இரண்டு கண்ணும் களிக்கும்படி யெனக் கெதிரே விட்டாலன்றி நான் உயிர் தாங்கி யிருக்கமாட்டேன் என்று சொல்ல, மந்திரியானவன், உடனே எங்கேயிருந்தாலும் தேடிக்கண்டு அழைத்துவரத் தகுந்த சமர்த்தர்களாகிய சில தூதர்களை யனுப்பினன். அப்படியே அவர்களும் பல இடங்களில் தேடிக்காணுமல், முடிவில் ஒரு பசுமையாகிய வனத்தில் ஹரிபஜனைசெய்துகொண்டிருந்த சுரதாசரைக் கண்டார்கள்; கண்டு, நீர் செய்த தர்ம கைங்கர்யத்துக்காக அரசன் சந்தோஷி

த்து, உம்மைக் காண விரும்பி, எம்மை உம்மிடத்துக் கனுப்பினான் என்று சொல்ல, சுரதாசர் தெளிந்து நினைக்கலுற்றார். எல்லா விடத்திலும் நிறைந்திருக்கின்ற எம்பெருமானுடைய செயல் இதுவென்றும், சஞ்சலமில்லாத மனத்தை யுடையவராய்த் தூதரோடு வந்து, அத்திகபுரியை யடைந்து, அரசனைக்கண்டு, சலாம்செய்ய, அரசனும் இவரைக்கண்டு, ஆசனத்திலிருந்து இறங்கிவந்து இவரைத் தழுவிக்கொண்டு, அன்பு மிகுந்தவனாய், உமக்குச் சமானமானவர் ஒருவருமில்லை, என்பொருளை கல்லவழியில்உபயோகித்து என்னை ப்புனிதனுக்கிவிட்டீர், நீர் செய்த வுதவிக்குக் கைம்மாறுக யாது செய்வேன்? உமது பெருமையை யறியாத ஒரு உன்மத்தன் சொல்லுக்கேட்டு, உமது மனம் வருந்தச் செய்தேன், என் பிழையைப் பொறுத்து ரக்ஷிக்கவேண்டும் என்றுப்ரார்த்திக்க, சுரதாசர், உலகவாழ்க்கை துக்கரூபமாயிருக்கிறதென்று அதனை யொழித்திருந்த என்னை இன்னமும் அரசியலுக்கிழுக்க நடந்ததெகாள்ளும்படி நியமிக்கலாமோ என்று சொல்லுகிற சுர தாசரை, அரசன் இனிதாய் நோக்கி, நீர் மனம் வெறுத்து இந்த ப்ரபஞ்சவாழ்வை விட்டிருக்கிறீர் என்கிற உமது பெருமையை யறிந்திருக்கிறேனாயினும், உம்மை விட நினைத்திலேன், முன்னை நீர் செய்துகொண்டிருந்தபடியே இன்னமுஞ் செய்யலாம், நீதி மார்க்கத்தால் நீர் அவ்விடத்தில் சம்பாதிக்கும் பொருள், ஸாது ஸஜ்ஜநங்களுக்கும் தர்மங்களுக்கும் போதாதானால் என்னிடத்துள்ள பொருளையும் எடுத்துச் செலவிடலாம், அடியேனையும் ஸ்ரீ லக்ஷ்மீ நாதனுக்கு அடிமையாகச் செய்துகொள்ள வேண்டுமென்று ப்ரார்த்திக்கக் கேட்ட தாசரானவர், அரசன் மனத்தையும், அவன் தம்மிடத்தில் வைத்திருக்கிற அன்பையும், அவன் சொல்லும் இனிய சொற்களையும் ருசித்து மிகவும் சந்தோஷித்து, இவனை ஸ்ரீவைஷ்ணவனாகச் செய்துகொண்டால், நாம செய்கிற ஸாது ஸஜ்ஜந சமாராதனை முதலானவைகளுக்கு இவனால் பேருதவியைப் பெறலாம் என்று நிச்சயித்து, அரசனை நோக்கி, ஸ்ரீ ஹரி தாசர்களுக்குத் தினந்தோறும் யான் செய்துவருகிற தளியாராதன முதலானவை தடையில்லாமல் நடக்கும்படி தயைசெய்ய வேண்டுமென்று சொல்ல, அரசன் தருக்கனையிருந்தானும், இவரது வேண்டுகோளுக்கு இரங்கித் திரிதண்ட சுத்தியாய் அப்படியே செய்கிறேனென்றான். அதன் பிறகு அவன் இதச் சுர தாசர் மூலமாகக் கண்ணபிரானுக்கு அன்பனாகி, மனமகிழ்ச்சியோடு கொடுத்த திரவியத்தைக் கைக்கொண்டு, மதுராபுரிக்குப்போய், கருணைக் கடலாகிய மதுரமோஹநப் பெருமானைத் தரிசித்திருந்தார். அன்று முதலாக, ஹரி தாசருக்கும், அடித்தவர்க்கும், மற்றெல்லாருக்கும நல்ல போஜநம், ஆடை, ஆபரணம் முதலானவைகளை அவர்கள் விரும்பினபடியே நிர்ப்பயராய்க் கொடுத்து, பரமாத்மனாகிய ஸ்ரீகண்ணபிரானைப் பூஜனைசெய்துகொண்டு, அவனது திருவுருவை யிடைவிடாமல் மனத்தில் அமைத்துக்கொண்டு வாழுங்காலத்தில், திருமாலடியார்க்குத் தொண்டு செய்வதில் இவர்போலச் சிறந்தவர் ஒருவருமில்லை யென்று எல்லாரும அறிந்துகொண்டாட, ஒருநாள், இவர்,

ஸ்ரீகண்ணபிரான் கோயிலுக்குச் சிவிகைமேலேறிப் போகும் வழியில் செரு ப்புக்காலோடு ஒரு பாகவதர் வந்து, தாசரைக் கண்டு, நான் கோயிலுக்குப் போய்க் கண்ணபிரானைச் சேவித்து வருமளவும், இந்தச் செருப்பைக் காத்து க்கொண்டு இங்கே யிரும் என்று சொல்ல, தாச ரானவர் உடனே சிவிகை விட்டிறங்கி, செருப்பை வாங்கித் தமதாடையால் மூடி மார்பில் அணைத்துக் கொண்டு நின்றார். அந்தப் பாகவதர் கோயிலுக்குப் போய்ச் சூரியாஸ்தமநம் வரைக்கும் வராதிருந்தார். இவரும் மனஞ் சலிக்காமல் அந்த இடத்திலேயே நின்றார். பிறகு பாகவதர்வந்து இவராதுலாதுசேவைக்கு மனமகிழ்ந்து செரு ப்பை வாங்கிக்கொண்டு போய் விட்டார். இவரும் கோயிலுக்குப் போய் ஸ்ரீ கண்ணபிரானைச் சேவித்து மீண்டு மனைக்கு வந்து இனிது வாழ்ந்திருந்தார் என்றுசொல்லி, மேலே ரசிகமுராரிபக்தர் வைபவத்தைச் சொல்லத் தொட ங்கினர்.

சூதாதார் சரித்திரம் முற்றிற்று.

# நக-வது ரசிகமுராரிபக்தர் சரித்திரம்.



உலகத்தா ரெல்லாரும் புகழ்தற்குரிய பெருஞ் சிறப்பமைந்த மதுரா புரிக் கருகில் சாயம் என்னும் ஊரில், ஸ்ரீ ஹரி பக்தியிற் சிறந்தவராகிய முராரி பக்தர் என்பவர் ஒருவர் இருந்தார். இவர் தினமோதாறும் காளிந்தி நதியில் மூழ்கி ஸ்ரீ ஹரிபூஜைசெய்து, ஸ்ரீ வைஷ்ணவராகிய பாகவதருடைய திருவடிகளை விளக்கி ஸ்ரீ பாத தீர்த்தத்தை ஸ்வீகரித்த பிறகு, மிக்க சுவை யமைந்த பதார்த்தங்களோடு கூடிய போஜநத்தை அவர்கள் அமுதுசெய்யப் பண்ணி அவர்களோத் திருமா லுருவாகவே பாவனை செய்து அவரிடத்தில் மிக்க அன்பு பாராட்டி வந்தார். அவர்க்கு அநேகமான அடியார்க ளுண்டு; அவர்களும் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநத்திலேயே காலங் கழிப்பவர்கள். இப் படியிருக்குங் காலத்தில், ஒருநாள், ஹரிதாசர் பலர் இவரிடத்துக்கு வந்தார் கள். அவர்களைக்கண்டவுடனே, அவர்கள்யாவருக்கும் ஆசநங்கொடுத்து இரு க்கச் செய்து, தமது அடியார்களில் ஒருவரை யழைத்து, இந்தத் திருமா லடியாரைத் திருவடி விளக்கி ஸ்ரீ பாததீர்த்தம் கொண்டுவாரு மென்று கியமிக்க, அப்படியே அந்தச் சீடர் அவர்களைத் திருவடி விளக்கி வரும் போது, அவர்களில் ஒரு வேதியனுக் கிருக்கிற பிணியைக் கண்டு, அருவரு த்து, அந்த வேதியனை யொழித்து மற்றவர்களுடைய திருவடிகளை விளக்கி ஸ்ரீ பாததீர்த்தத்தைக் கொண்டுவந்து, தமது குருவுக்கு எதிரேவைக்க, அதை க் குருவாகிய முராரிபக்தர் ஸ்வீகரித்து, இதில் ருசியில்லையே, அப்படி ருசி யில்லாதிருத்தற்குக் காரணம் யாதென்று அந்தச் சீடரைக் கேட்க, அவர் சொல்லுவதற்கு நாணி நிற்க, பக்தரானவர் உண்மையைச் சொல்லுமென்று

கேட்க் சிடர், ஐயனே, வகதவர்களில் ஒரு வேதியன் அசுத்தமான சரீரத்தை யுடையவனுகவும், கால்கள் வெடித்துப் புண்ணுகிக் கனிரீ ரொழுகப் பெற்றவனுகவும் இருப்பதைப் பார்த்து அவனைத் தொடவும் என் மனம் இசையாமையால், அவ்வொருவனே யொழித்து மற்றவருடைய திருவடிகளை விளக்கி ஸ்ரீ பாத தீர்த்தம் கொண்டு வந்தேன்; இதுதான் அடியேன் செய்த பிழை யென்ருர். அதைக் கேட்ட முராரிபக்தரானவர், அப்படியா வென்று சொல்லி விட்டு,விரைந்து போய்,அந்தப் பிணியாளனுகிய வேதியன் பாதங்களைப் புது நீராற் கழுவி, அந்தத் தீர்த்தத்தைக் கங்கா தீர்த்தத்திலும் பிறந்ததாகப் பாவித்து உட்கொண்டு அதிக மாதூர்யமா யிருக்கின்றதென்று சொல்லிக் களிப்பதை, மற்ற வேதியர்கள் பார்த்து அதிசயித்து, இவரது மன நிலையைக் கண்ணபிரானே யறிய வல்லனன்றி, இவ்வுலகத்தில் வேறொருவரும் அறிய வல்ல ரல்லர் என்று புகழ்ந்து, இவர், பாகவதர்களுடைய ஸ்ரீ பாத தீர்த்தத்தின் சுவையை யறிய வல்ல ராதலால் இவர் பெயர் இன்று முதல் ரசிகமுராரி பக்தர் என்று சொல்வது தகுதியா யிருக்கும், இவர்க்கு ஸ்ரீ கண்ணபிரான் க்ருபை செய்து இவரது மநோரதங்களெல்லாவற்றையும் முற்றுவிக்கக் கடவரென்று வாழ்த்திப் போன பிறகு: இந்த ரசிகமுராரி பக்தர் துதிக்க அவ்விடத்துக்கு வந்த தயார்ணவ யோகி, ஸ்ரீ ஹரிபூஜை செய்து கொண் டிருக்கையில், ஒரு அரசன் வந்து அவர் திருவடியை வணங்கி,அவர் செய்யும் பூஜையை நோக்கி மகிழ்ந்து, அவர்க்கு நான்கு கிராமங்களைத் தந்து, இந்தக் கிராமங்களின் வருமாநத்தைக் கொண்டு, உமது ஹரிபூஜை முதலான வைகளைக் கிரமமாய் நடத்தி வாரும் என்று சொல்லிப் போன பிறகு, தயார்ணவ யோகியானவர், இது ஸ்ரீ கண்ண பிரானது திருவருளே யென்று களித்து, நாள்தோறும் தாம் செய்யவேண்டிய ஹரி பூஜை முதலானவைகளைக் குறைவற நடத்தி வந்தார். இப்படி யிருக்கையில், அந்தச் சமயம் என்னும் ஊருக்கு ஓர்திகாரி நூதனமாய் வந்து குடிகளை வருத்து மியல்புள்ளவனு யிருந்தான். அவன் இவருடைய நான்கு கிராமங்களின் பொருள் வரவைத் தான் கைக்கொண்டு, இந்தக் கிராமங்கள் இவர்க்குச் சும்மா கிடைத்ததனுல் இவர்க்குக் கொடே னென்று அநியாயரு செய்ய, அந்த ஊரா ரெல்லாரும் கூடி வந்து, அந்தக் கிராமங்கள் நான்கும் இந்தத் தயார்ணவ யோகிக்கு ஒரு அரசனுல் கொடுக்கப்பட்டன, அவற்றின் வரவுப்பொருளை அவருக்கே கொடுப்பது தர்மமாகு மென்று பலவிதமாகச் சொல்லியும், சிரித்துக்கொண்டே இவர்க்கு யான் கொடுக்கவே மாட்டே னென்ருன். இப்படி அதிகாரியான வன் சொல்லிவிட்டுப் போன பிறகு, தயார்ணவரானவர் தமது சிடராகிய முராரி பக்தருக்கு ஒரு திருமுக மெழுதி ஒரு ஆளிடத்தில் கொடுத்து அனுப்ப, அவன் கொண்டு வந்து, பக்தர் அமுது செய்துகொண் டிருக்குங்காலத்தில் கொடுக்க, இடது கையினுல் வாங்கித் தலைமீது வைத்துக் கொண்டு, பிறகு கண்களி லொற்றி, விரைத்தெழுந்து, உண்ட கை கழுவாமல் ஓடிக் குருவின் திருவடியை வணங்கி நிற்க, அவர் இது என்ன அலங்கோலமெ

ன்று கேட்க, பக்தர், ஸ்வாமீ, தேவரீருடைய திருமுகம் பார்த்த வுடனே கை கழுவாம லோடி வந்தேனென்று சொல்ல, தயார்ணவர் மகிழ்ந்து உம் மைப் போலக் குரு பக்தியிற் சிறந்தவர் ஒருவரு மில்லை யென்று சொல்லிக் கொண்டேயொழுத்து பக்தருடைய வாலையுங்கையையும் கழுவிவிட்டபிறகு, தமக்கு மேலிட்ட சங்கடத்தைச் சொல்லி, அதிகாரியினிடத்திற் போய், ஸத் கைங்கர்யத்தில் உபயோகப்படுவதாகிய தமது நிலத்தை மீட்டுக் கண்ண பிரான் திரு காமதத்துக்கே நிலச் சீட்டு முதலிய ஏற்பாடுகள் செய்து வருவ தற் குரியவர் நீரே யன்றி வேறொருவரு மில்லையென்று சொல்ல, அப்படி யே யாகட்டுமென்று அந்த ஊருக்கு வருதலும், அவ்வூரா ரெல்லாரும் வருது இவரைச் சூழ்ந்துகொண்டு, இங்கே தேவரீர் எழுதருளுவதற்குக் காரணம் யாதென்று கேட்க, பக்தரானவர் தமது ஆசாரியருடைய குறை யைச் சொல்ல, அவ்வூரார் எல்லாரும் மனம் நொந்து, இவ்வூர்க்கு அதிகாரி யாயிருப்பவன் துஷ்டன், மிகுந்த துர்மார்க்கன், ஸ்ரீ வைஷ்ணவத்ரோஹி, மிடுக்கன், காதகன், இரக்கமில்லாதவன், மிகுந்த கோபி, கடுஞ் சொல்லன், இப்படிப் பலதுர்க்குணங்களுள்ளவனுக்குத் தேவரீர் போய்ச்சொல்லும் வார் த்தை செவிக் கேறுமா? ஏறாது, ஆகையால் அவனிடம்போகலாகாது என்று சொல்லக்கேட்டு, பக்தரானவர், அவர்களை நோக்கி, அவன் குணங்களைக் குறித்து யோசிக்கவேண்டியதில்லை, குருவாக்ய பரிபாலநம் செய்வதே எனக்குச் சிறந்த தர்மம் என்று சொல்லிவிட்டு, அவனிடத்தை நாடிப் போகிற போது வழியில் கண்டவர்கள் அதிகாரியிடத்தில் இவர் வருஞ் செய்தியைச் சொல்ல, அவன் ஒரு யானைப் பாகனை யழைத்து, நீ யானையை யோட்டிக் கொண்டுபோய், எனது நாடி வருகிற அந்த ஸ்ரீவைஷ்ணவன்மேற் செலுத்திக் காலினால் தலையிற்பித்து உயிர் நீக்கி வருவாயாஞல், உனக்கு வேண்டிய பொருள்களைக் கொடுப்பேன் என்றான். அப்படியே அந்த யானைப்பா கன் யானையை யூர்ந்து வருமபோது கண்ட சிலர் ஓடி, சிஷ்யகோஷ்டியோடு கூடி ஸ்ரீஹரி பஜனை செய்துகொண்டு வருகிறவராகிய முராரி பக்தருக்கு இந்த ச் செய்தியைச் சொல்ல, பக்தரும் கேட்டு, குரு கார்யத்திற் பிரவேசித்து நாம் இறப்பதும் நன்மையையே தரு மென்று சிறிதும் அஞ்சாதவராய் விரைந்து யானைக்கெதிரே வர, சீட ரெல்லாரும் பயந்து ஓடத் தலைப்பட் டார்கள். அதைக்கண்ட பக்தர், சீடர்களை யழைத்து, நீங்கள் உடல்பொருள் ஆவி மூன்றையுங் கொடுத்து என்னிடத்தில் உபதேசம் பெற்றீர்கள், இப் போது தேஹாபிமானிகளாய் இப்படி யோடுவீர்களானால், உங்கள் கழுத்தி லணியப்பட்டிருக்கிற துளசிமணிமாலை நீங்கும்படி நேரிடும் என்றார். இதை க்கேட்ட சீடர்கள், உயிர் பிழைத்தால் போதும் என்று துளசி மணி மாலைக ளைக் கழற்றிக் குருவுக்கெதிரே வைத்துவிட்டு, இந்த மாலைகள் எங்கள் கழு த்தில் இருந்தாலல்லவோ யாங்கள் உமது சீடரென்று சொல்லப்படுவோம்? உமக்கு நாங்கள் சீடரா யிருக்கவும் வேண்டாம், எங்களுயிர்களை இழக்கவும் வேண்டியதில்லை யென்று ஓடினார்கள். பிறகு, முராரி பக்தர் தனியராகி

ஸ்ரீ ஹரியை உட்கொண்டு வர, ஓடிவா சீடரும் அவ்வூராரும் காணும்படி அந்த யானையானது வந்து இவருடைய திருவடியை வணங்கி நின்றது; இதைக் கண்ட யாவரும் அதிசயித்தார்கள். அப்போது பக்தரானவர் தமது கையிலிருந்த மாலைகளே யெல்லாம ஒரே மாலையாய்ச் செய்து, யானையின் கழுத்திற் போட்டு, அதின் செவியில் ஸ்ரீ ஹரிநாமத்தை உபதேசித்து, இனி உன் மதச் செருக்கு நீங்கி, கல்லோர்களுக்கு நிகரங்க கடவதெகெள்வாயாக வென்று சொல்லி, பிறகு அந்த அதிகாரியினிடத்துக்குப் போகும்போது, இவரால் கடந்த அற்புதங்களை முன்னே யோடிச் சொல்லக் கேட்ட அந்த அதிகாரியானவன், பயந்து, எதிர்கொண்டு வந்து, ஐயனே, உம்முடைய மஹிமையை யறியாமல் புரிக்கருதிய தான் செய்த அபராதத்தைப் பொறுத் தருளவேண்டுமென்று பிரார்த்தித்து, மேலும் ஸ்வாமீ, தேவரீருக்கு எது வேண்டுமோ அதும் தருகிறேன், கேளுமென்று சொல்லுதலும், பக்தரானவர், எனக்கு ஆசாரியர் கிலத்தையும் என்னுடன் வந்திருக்கப் பெற்ற யானையை யும் கொடுத்து, யாம் என்னிடம் செருக்குபடி செய்யக்கடவை யென்று சொல்ல, அதிகாரியும் அப்படியே கிலச்சிட்டு முதலியவும் யானையும் கொடுக்கப் பெற்றுக்கொண்ட பக்தரானவர் தமது குரு இருக்கு மிட த்தை யடைந்து, அவர் திருவடியை வணங்கி, அதிகாரி யிடத்துக்குப் போனபோது கடந்த செய்திகளையெல்லாம் சொல்லி, கிலப் பத்திரத்தையும் யானையையும் கொடுத்தார். அந்த யானையானது அன்றுமுதல் ஸ்ரீமஹரியின் திருநாம ஸங்கீர்த்தனங்களைக் காதாரக் கேட்டுக் கொண்டு தயார்ணவரிடத் தில் வாழ்திருந்த நாளிது பகுமாளதில் காட்டுக்குப்போய் இலைகளையும், மடததுக்கு வேண்டிய விறகு முதலியவற்றையும் கொண்டு வந்து குவித்து விட்டு, ஸ்ரீ நாத உண்டை சேஷத்தைத் தின்று வாழ்திருப்பதைக் கண்டவர் யாவருங் கலித்து அதிசயிக்க, யானையானது தான் பெற்ற பேற் றைக் குறித்து, யான் முற்காலத்தில் என்னதவஞ் செய்திருந்தேனோ, இப் படிப்பட்ட ஸ்ரீநாதசருடைய சேவையில் என்னும் இருப்பதும, இவர்க்கு ஊழியஞ் செய்வதும், இவர் உண்ட மிச்சில் தின்பதும், சதா காலமும் ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தனத்தைக் காதாரக் கேட்பதும் ஆகிய இவை யாருக்குக் கிடைக்கும் என்று மிகுதியாய்க் களித்திருந்தது. இப்படிப் பலகாள் கழிந்தபிறகு ரங்கமுராரிபக்தர், தமது ஆசாரியரிடத்தில் விடைபெற்றுப் புண்ணிய தீர்த்தங்களில் நீராடும் பொருட்டு, அந்த யானையின் மீது தீர்த்த யாத்திரைக்கு வேண்டிய பொருள்களைச் சமத்திக்கொண்டு, அடியார்க ளோடு கூடி, ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டு போனார். போகும் வழியில் திருடர்கள் வந்து துன்பஞ் செய்யக் கண்ட இந்த யானையானது அநேகந் திருடர்களை உற்று நோக்கி அவர்கள் வாயில் ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணை யில்லாமலும், அவர்கள் கழுத்தில் திருத் துழாய் மாலை யில்லாமலும் இருப்ப தைக்கண்டு, இவர்களைக் குறித்துத் தாக்ஷண்யஞ் செய்ய வேண்டியதில்லை யென்று கோவங்கொண்டு அவர்களைக் குத்திக் கொன்றது. பிறகு, பக்தரா

னவர் அநேக புண்ய நதிகளில் ஸ்நாநம்செய்து குருக்ஷேத்ரத்துக்குப் போக நினைத்துப் போகும் வழியில், அருணுவதி நகரத்தைக் கண்டு, அவ்விடத்தில் தங்கியிருந்தார். மூன்று நாள் அங்கே தங்கி யிருக்கையில், சிலர் விரைந்து போய் அந்த நகரத்தை யாளுவோனுகிய துருக்க வேந்தனிடத்தில், இந்தப் பக்தர் அடியார்களோடும், உத்தம லக்ஷணங்க ளுள்ள யானையோடும் வந்து தங்கி யிருப்பதைத் தெரிவித்தார்கள். அந்த அரசன் இந்த யானையின் மேல் விருப்பங் கொண்டு, வந்து செய்தி சொன்னவரை நோக்கி, நீங்கள் போய் இந்த யானையை எங்கள் அரசன் விரும்பினதனால் கொடுத்து விடுங்கள் என்று சொல்லுங்கள், அவர்கள் கொடுக்காத பக்ஷத்தில், அவர்களைத் தண்டப் படுத்துங்கள் என்று சொன்னன். அந்தத் தூதர்கள் அப்படியே போய்ச் சொல்ல, பக்தருடைய அடியார்கள் அந்தத் தூதரை நோக்கி, இந்த யானை வைஷ்ணவரிடத்தி லன்றி மற்றவரிடத்திற் போகாது என்றார்கள். இவர்கள் சொன்ன சொல்லே உண்மையென்று நினையாமல் தூதர்கள் அதைப் பிடிக்க நெருங்கினர்கள். அப்போது அவர்களிடத்தில் வைஷ்ணவ சிந்நங்கள் ஒன்றுங் காணப்படாமையால், கோபித்துச் சீறுதலும், கண்டபயந்து அரசனிடத்திற் போய்ச் சொன்னர்கள். அரசன் ஒரு யானைப் பாகனை யழைத்து, நீ வைஷ்ணவ வேஷம் பூண்டு போய் அந்த யானையை வசப்படுத்திக்கொண்டு வந்து நமது யானைச் சாலையிற் கட்டவேண்டுமென்று கட்டளையிட, அவனும் அப்படியே வைஷ்ணவ வேஷம் பூண்டு வந்து யானைக் கெதிரே நின்றன். அவன் பூண்டு வந்தது கபட வைஷ்ணவ வேஷம் என்றறிந்தும், அவனிடத்திலுள்ள வைஷ்ணவ சிந்நங்களைப்பார்த்து அவனுக்கடங்கி நிற்க, அவன் அதைப் பிடித்துக்கொண்டு போய் அரசனுக் கெதிரே விட, அவன் யானைப் பாகியிற் கட்டச்சொல்லி நியமித்தான்; பாகனும் அப்படியே செய்தான். பிறகு அந்த யானையானது சாது ஜனங்களுடைய சஹவாசம நீங்கி இங்கே வந்திருக்கும் படி நேரிட்டதே யென்று அவர்களுடைய பிரிவுக்குச் சகிக்காமல், ஊண் உறக்கங் கொள்ளாம விருந்து ஏழு நாளில் ஸ்ரீவைகுண்ட பதவியை யடைந்தது. இதைக் கேள்விப்பட்ட பக்தரானவர் இனியிங்கே யிருக்கலாகாதென்று புறப்பட்டு ஹரிபஜனை செய்துகொண்டேபோய்ப் பல புண்ய தீர்த்தங்களாடி இனிதாய் வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே, மீராபாயி வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

நரசிகமாரி பக்தர் சரித்திரம் முற்றிற்று.

# நூ-வது மீராபாயி சரித்திரம்.

இந்துஸ்தான தேசத்தில் பெரியவுதேயபுரம் என்று சொல்லப்பட்ட ஓர் ஊருண்டு. அந்தச் சிறந்தநகரத்திற்கு அரசனுயிருப்பவன்போ ராணுவா என்றுசொல்லுவார்கள். அவன் விஷ்ணு பக்தியுள்ளவனும், அதிதிகளே ஆதரிப்பவனும், தன்னிடத்திற்கு வருகிற சாதுஜனங்களே எதிர்கொண்டழைத்துப் பூஜிப்பவனும், ஸ்ரீகோபால மூர்த்தியைத் தனது இதயத்தில் வைத்துச் சகலமான வுபசாரங்களும், தூப தீப நைவேத்தியங்களும் செய்து நிவேதித்த ப்ரஸாதத்தை உட்கொள்வானுமாகி வாழ்ந்திருந்தான். இப்படி யிருக்கையில், அவனுக்கு ஒரு மகள் அதிக ரூபலாவண்யத்தோடு பிறந்தாள். அவளுக்கு மீராபாயி என்று பெயரிட்டுத் தந்தை தாயா ரிருவரும் அந்தப் புதல்வியை மிகவும் அன்போடு வளர்த்து வரும் காலத்தில், ஒரு நாள் அந்தக் குழந்தையை ஸ்ரீ கண்ணபிரான் சகஜமாக கெடுத்து வந்து, அந்தக் கண்ணபிரானுடைய திவ்ய சௌந்தர்யத்தைச் சேவிக்கப் பண்ணிக்கொண்டு போனர்கள். அன்று முதலாகத் தினந்தோறும் அப்படியே செய்து வருகையில், அந்தப் பெண்ணவள் கண்ணபிரானுடைய திவ்ய சௌந்தர்யத்தில் ஈடுபட்டு, கார் காலத்து மேகத்தைக் கண்டு களிக்கின்ற மயில் போலக் கண்ணனைக் காணுந்தோறும் களிக்கின்ற மனமுடையவளா யிருந்தாள். இப்படியிருக்கும்போது அந்தப் பெண் பருவ நிரம்பினவளானதைக் கண்ட தந்தையானவன், மணவினையை நோக்கி, நமது பெண் பருவ மடைந்திருப்பதை நீ கவனிக்காமலிருப்பது தகுதியல்ல. அவளுக்குத் தகுந்த மணவாளனைத் தேடவேண்டுமென்று சொன்னான். அப்படிச் சொல்லிக்கொண்டிருப்பதைக் கேட்ட மீராபாயி, தந்தையிடத்தில் வந்து, தகப்பனே, நீங்கள் தினந்தோறும் போய்த் தரிசித்து வருகிற ஸ்ரீ கோபாலன்வாமியை யன்றி வேறொரு மணவாளனை நான் விரும்பமாட்டேன், அவனுக்கே என்னைச் சமர்ப்பியுங்கள் என்றாள். அதைக் கேட்ட தந்தையானவன், புதல்வியை நோக்கி, உன் விருப்பத்தின்படியே யாங்கள் செய்யத் தடையில்லை, கோபால மூர்த்தி அர்ச்சாரூபியா யெழுந்தருளி யிருக்கிற ஞாகையால் உன்னெழிலணங்கமாட்டான், உனக் கிஷ்டமான ராஜ குமாரனுக்கு மணஞ்செய்து கொடுக்கிறோம் என்று சொல்ல, மீராபாயி, தந்தையை நோக்கி, அர்ச்சா ரூபியா யிருக்கிற பகவானவர் நாம தேவருடைய நிஜ பக்தியின் வசப்பட்டவராய், அவர் வாவென்றால் வருவதும, போவென்றால் போவதும், உண் என்றால் உண்பதும் இப்படிச் சகலவிதங்களாலும் உபயோகப்பட்டு வருகிறாரல்லவா? அன்றியும்இந்தக் கலியுகத்தில் அர்ச்சா ரூபமும் விபவரூபமாகும் என்பதையும நீர் அறிந்திரீர்போலும்! என்னே யாதொரு தடை சொல்லாமல் அந்தக் கோபாலனுக்கே சமர்ப்பித்து விடுங்களென்று சொன்னாள். அதைக் கேட்ட தந்தையா

னவன், இவளுக்கு இத்தச் சிறுவயதில், ஹரிபஜனை, புராணசிரவணம், திவ்ய ஞாநம் இவைகளில் விருப்பமுண்டா யிருக்கிறதைக் குறித்து அறிசயித்து, தன் திருவாராதநத்தி லிருந்த கோபால ஸ்வாமி விக்ரஹத்தைக் கொடுத்து, இந்தக் கோபாலனை உண்ணிஷ்டப்படியே ஆராதித்து உன் மநோரதத்தை நிறைவேற்றிக் கொள்வாயாக வென்று சொன்னன். அப்படியே மீராபாயி யும் கோபால விக்ரஹத்தைப் பெற்றுத் தன் மனையில் வைத்துக்கொண்டு, தினந்தோறும் விடியற்காலத்தில் எழுந்து நீராடி நித்யகர்மங்களை முடித்து, புண்ய தீர்த்தத்தைக் கொண்டு திருமஞ்சநம் பண்ணி, வஸ்த்ராபரணாதிக ளால் அலங்கரித்து, சகலமான உபசாரங்களும் செய்து, பஜித்து, வீணை யைக் கைக்கொண்டு, பகவத் குணங்கள் பலவற்றையும் புகழ்ந்து பாடிச் சாதுக்களை வருவித்து, ப்ரஸாதத்தை நிவேதித்து, பிறகு உண்டு, புராண சிரவணம் செய்தும், ஆத்ம ஞாந நூல்களை வாசித்தும், பகவத் குணாநுபவ ப்ரபந்தங்களை யுண்டாக்கிக்கொண்டிருக்குங் காலத்தில், அவ்வூரிலுள்ள சில துஷ்டர்கள், இந்த ராஜகுமாரியானவள் புருஷர்களுக்கெதிரே இப்படி ஆடு வதும் பாடுவதுமா யிருப்பது, இந்த அரசனுக்கு அவமாநத்தை யுண்டா க்குமே, இதை அரசன் அறியவில்லையே யென்று போய் அரசனுக்கு அறி வித்த, அவனுக்கு இந்தப் பெண்ணின்மீது கோப முண்டாகி, மனைவியை நோக்கி, இந்தப்பெண் இதுவரையில் சிறுவயதா யிருந்ததனால் வைஷ்ணவர்க ளோடு கூடியிருக்கச் செய்தேன், இப்பொழுது தருணியான யௌவந பருவம் வந்திருப்பதனால் இவள் எவ்வளவு ஞாநமுள்ளவளா யிருந்தாலும் புருஷர்க ளோடு இனிக் கூடி யிருக்க லாகாது, ஊரார் இந்தச் செய்கையை யறிந்து என்னை யிகழ்ந்தார்கள். ஆதலால் உன் மகளுக்கு வேண்டிய புத்திசொல்லி, ஒரு மனவாளனை மணம்புணர்விப்பது கர்மமென்று சொன்னன். மனைவி யானவள் அரசனை நோக்கி, ஓ பிராணநாதா, இவள் கண்ணனை யன்றி வேறொருவனை மணஞ்செய்துகொள்ள மாட்டேன் என்கிறாள், இதற்கென் செய்யலாம் என்றாள். அதுகேட்டஅரசன், அப்படியானால் இவளைக் கொல்லு வதே தகுதி, இல்லாவிடின் எனக்கு மிகுந்த அவமாநம் உண்டாகும் என்றுசொல்லி, விஷங் கலந்த அந்தத்தை உன்மகளுக்குக் கொடுத்து அவளை க் கொல்வாயாகவென்று சொல்ல, மனைவியும் அரசன் வார்த்தையைத் தடுக்க அஞ்சி, அப்படியே விஷங் கலந்த சோற்றைக் கொண்டுபோய் மகளுக்குக் கொடுத்து, இது உன் தந்தையால் கொடுக்கப்பட்டது, இதை உண்பாயாக வென்றாள். அதைக் கேட்ட மீராபாயி அந்த அந்தத்தை வாங்கிக்கொண்டு, ஸ்ரீ கண்ண பிரானுக்கெதிரே நின்று, ஓ பகவானே, நான் உன் பக்திசெய்து அது காரணமாக இறந்து படுவேனுனால் இனி உன்னை யார் வழிபடுவார் கள்? அடியேன் செய்யும் பூஜையில் உனக்கு விருப்ப முண்டானால், முற் காலத்தில் தந்தையாகிய இரணியன் எவின சர்ப்பங்களின் கொடிய விஷத் தால் ப்ரஹ்லாதாழ்வான் இறவாதிருக்கும்படி செய்தாற்போல, என்னையும் இறவா திருக்கச் செய்வாயாக வென்று சொல்லி, அந்த விஷாந்தத்தை

யுண்டாள். உடனே ஸ்ரீகண்ணபிரான் பச்சை வடிவங்கொண்டான். விஷாங்க க்தை யுண்டும், மகள் சாணதிருப்பதையும், கண்ண பிரான் பச்சை நிறங் கொண்டதையும், அரசன் தேவி அரசனுக்குச் சொல்ல, அரசனும் இது உண்மைதானே வென்று வந்து பார்த்து, அப்படியே உண்மையாயிருக்கக் கண்டு அதிசயித்து, ஓ பகவானே, உன்னை விஷ முண்ணச் செய்தேனே என்று அநுதபித்து, சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பித்து, தன் மகளுடைய பக்திக்கு ஆச்சரியமடைந்து, அவளையும் வணங்கித் துதித்து, உன் மஹிமை யையறியாமல் நான் செய்த பிழையைப் பொறுக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்க, மீராபாயியும் தகப்பனையும் வணங்கி, உன்னால் நான் கண்ணபிரானு டைய கருணைக்குரியவளானேனென்று சொல்லிதிற்க, அரசன் மீராபாயியை நோக்கி, உன்னால் கண்ணபிரான் அடைந்த பச்சை நிறம் மாறும்படி நீயே செய்யவேண்டுமென்று சொல்ல, மீராபாயியானவள், கண்ணபிரானை நோக்கி, ஸ்வாமீ, முற்காலத்தில் பூதனையின் விஷப்பாலைக் குடித்த நீ, இன்னும் உன் பச்சை நிறத்தை மாற்றி, முன்போலவே நீல நிறங்கொண்டு அரசனு க்குச் சேவை சாதித்தருளவேண்டும் என்று ப்ரார்த்தித்தலும், ஸ்ரீ கண்ண பிரானுனவர் இவளது ப்ரார்த்தனைக் கிரங்கி, கண்டத்தில் மாத்திரம் கொஞ் சம் பச்சை நிறமும, மற்றத் திருமேனி முழுதும் முன்போல நீல நிறமும் கொண்டு, கண்டோ ரெல்லாரும அதிசயிக்கும்படி எழுந்தருளி யிருந்தார். ராணு வேந்தனுடைய புதல்வியின்பொருட்டுக் கண்ணபிரான் இந்த லீலை யைச் செய்யக் கண்ட தர்ஜகர் ஸந்தோஷர் என்கிற திருநிறத்தாரும் அதிசயித் துத் துதிக்க, அக்காலத்தில் விளங்கினது போலவே, இன்னும் விளங்கிக் கொண்டிருக்கிறார். சொல்லப்பட்ட கதாநாயகானவள், ஆத்மகோடிகளி யெல்லாம் ஆண்டருளுகிற கண்ணபிரானது கருணை விசேஷத்தால் ஆத்ம ஞானம விளங்கப்பெற்று இனிதாய் வாழ்ந்திருந்தாள் என்றுசொல்லி, மேலே தாசிகான்ஹேபாத்ரா வைபவத்தைச் சொல்லத்தொடங்குவோர்.

மீராபாயி சரித்தியம் முற்றிற்று.

## ஈஎ-வது தாசிகான்ஹேபாத்ரா சரித்திரம்.

பண்டரிபுரத்துக்குத் தென்திசையில், எழு கோசு தூரத்திலுள்ள, மங் கள வேஷம் என்கிற ஊரில் வாழ்பவளாகிய ஒரு தாசியானவள், சாமா என் னும் பெயர் பூண்டு விளங்கினாள். இவள் வயிற்றில் ஒரு புதல்வியார் அவதரி த்து, கண்டவர் ஆச்சரியப்படத்தகுந்த சௌந்தரியத்தோடு கூடி வளர்ந்து வருங் காலத்தில், அவருக்கு, கான்ஹேபாத்ரா என்று பெயரிட்டு அன் போடு காப்பாற்றிவர, தெய்வப்பெண்களும் நாணமடையும்படியான ரூபலா வண்யங்கள் விருத்தியடைந்தனவென்றால், இவ்வுலகத்துப் பெண்கள் நாணு

வார்களென்பதற்குச் சந்தேஹமுண்டா? இவர் பரதசாஸ்திரம் முழுதும் கற்றுத் தெளிந்தார். இளமைப் பருவத்திலேயே இவர் பாடியாடும் விதமெல்லாம் கேட்டறிந்த தெய்வப்பெண்களாகிய அரம்பை முதலானோர்கள் மெச்சிக்கொண்டாடினார்கள். இப்படியிருக்கும்போது, மயிற்சாயலையுடைய அந்தக் கந்நிகை யெளகப்பருவமடைய, தாயானவள், அந்தக் கந்நிகையாரை நோக்கி, மகளே, நீ ஒரு அரசனிடத்தில் சேர்வாயானால், அவன் உன் ஆடல் பாடல்களை விரும்பி, உனக்கு வேண்டுமவற்றை யெல்லாம் கொடுப்பான், ஆதலால், நீ வா, அரசனிடத்துக்குப் போவோமென்று சொல்ல, கந்நிகையானவர் அதற்கு மன மிசையாமல், தாயை நோக்கி, அம்மா, என்னுடைய அழகினுஞ் சிறந்த அழகுள்ள புருஷனை நான் விரும்புவேனையன்றி மற்றொருவனையும் விரும்பமாட்டேன் என்று சொல்லி வாழ்ந்திருக்குங் காலத்தில், சூரியன் தேர்ப்பாகனுகிய அருணனுக்குத் திருவிழாக்காலம் நேர்ந்தது; அப்போது அதிகமும் ஹரிதாசர்கள் தாளம், மிருதங்கம், வீணை, தடாரி, கருடக்கொடி முதலியவற்றோடு நிர்மலராகிய ஸ்ரீஹரியின் திருநாமங்களைப் பாடிக் கொண்டு, ஸ்ரீ கண்ணபிரான் எழுந்தருளி யிருக்கிற பண்டரிபுரத்துக்குப் போனார்கள். அந்த ஹரிதாசர்களை இருதக் கான்ஹோபாத்ராவானவர் கண்டு, ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தநபரராகிய நீங்கள் எங்கே போகிறீர்கள் என்று கேட்க, அவர்கள் ஸ்ரீபாண்டுரங்கப் பெருமான் புண்டலீகர்க்கு அருள்செய்த க்ஷேத்ரமாகிய பண்டரிபுரத்துக்குப் போகிறோமென்று சொல்ல, கான்ஹோபாத்ரா வானவர், அவர்களை நோக்கி, நீங்கள் சொல்லுகிற அந்தப் பாண்டுரங்கனுடைய அழகின் பெருமையை யெனக்குச் சொல்லவேண்டுமென்று வேண்ட, அந்த ஹரிதாசர்கள், அந்தப் பத்மநாபனுடைய அழகைச் சொல்வதற்கு வேதங்களுக்கும், வேதாதிகாரியான ப்ரஹ்மதேவனுக்கும் சாத்தியப்படாது என்றார்கள். அதைக்கேட்ட கான்ஹோபாத்ராவானவர், அந்த ஹரிதாசர்களைநோக்கி, ஐயோ, நீங்கள் கொண்டாடுகின்ற பாண்டுரங்கப்பெருமானுரை அடியேன் சரணமடைந்தால், அவர் அடியேனை விரும்புவாரோவென்று கேட்க, தாசர்கள், அந்தப் பாண்டுரங்கப் பெருமானுனவர் மதுராபுரியில் ஸ்ரீகிருஷ்ணவதாரஞ் செய்தபோது அவ்விடத்தில் ஒரு கூனிக்கு அருள் செய்தார்; அன்றியும், ஹீநராகிய சோகாமேளர் முதலானவர்களை க்ருபை செய்து காத்தருளினர். அப்படிப்பட்ட பாண்டுரங்கப்பெருமானுனவர், உன்னைக் காத்தருள்வது அருமையல்லவென்றார்கள். அப்படிச் சொல்லக்கேட்ட கான்ஹோபாத்ராவானவர் ஞாநத்தையடைந்து, தாம் வாழ்கின்ற வீட்டிற்கு விரைவாகப் போய், தமது தாயை நோக்கி, அடியேன் பண்டரிபுரத்திற்குப் போய் மீண்டு வருவேன், நீர் இவ்விடத்திலிருமென்று சொல்லிவிட்டு, சாதுக்களோடு கூடி, வீணையைக் கைக்கொண்டு ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டும், ஆநந்த நர்த்தநம் செய்துகொண்டுமே போய் ஸ்ரீபண்டரிபுரம் சேர்ந்து, சங்நிதிக்குள்ளே பிரவேசித்து, ஸ்ரீ பாண்டுரங்கப்பெருமானை, தரிசநம் செய்து, துதித்து, தாமரை மலர்போன்ற திருவடிகளில் வீழ்ந்து, தீர்க்க

தண்டம் சமர்ப்பித்து, ஹோமுகுந்தா, கோவிந்தா, உன்னுடைய பிரபாவத்தை ப்பெரியோர்கள் சொல்லக்கேட்டு, அடியேனது ஜாதிக்தொழிலே விட்டு உன் திருவடியை நம்பி வந்து, உன்னே ஆசிரயித்தேன்; ஆதலால் அடியேனே அங்கீகாரஞ் செய்தருளவேண்டும், நீ தயாநிதியல்லவா என்று நிர்மலராகிய பகவானுடைய திருவடிமீது தனது தலையைத் தாழ்த்திக் கண்களில் ஆநந்தபாஷ்பம் துளிக்க நின்று, அகேகவிதமாய் ஸ்தோத்திரஞ் செய்து, அவ்விடத்திலேயே தங்கி யிருந்தார். அப்படி யிருக்கிற காலத்தில் ஒரு நாள், துராசாரன் ஒருவன் அங்கே வந்து இவளது அழகைக் கண்டு ஆச்சரிய மடைந்து, இப்படிப்பட்ட கட்டழகியை இவ்வுலகத்திலும மற்றெந்த வுலகத்திலும் காண்பது மிகவும் அருமையாரும் என்று, உடனே புறப்பட்டுப் பேதரி நகரத்தையாளுகிற மிலேச்ச ராஜனிடத்திற் போய், மஹாராஜனே, பண்டரிநாதன் சந்நிதியில் ஒரு பெண் வந்திருக்கிறாள்; அவளது பேரழகை யென்னென்றெடுத்துச் சொல்வேன்? அவளுடைய சௌந்தரிய சாகரத்தில் வீழ்ந்தவன் நீந்திக் கரையேறுதல் அருமையாமென்று சொன்னான். அதைக் கேட்ட அரசன், அதிசயித்து, சிலதூதரை யனுப்பி, நீங்கள் போய் அந்தப் பெண்ணை இந்த க்ஷணமே கொண்டுவாருங்களென்று அனுப்ப, அவர்களும் அப்படியே போய்ப் பண்டரிநாதன் சந்நிதியின் கருட ஸ்தம்பத்தினருகே ஸ்ரீ பகவந்நாமஸங்கீர்த்தநம செய்துகொண்டிருப்பவராகிய காண்ஹோபாத்ரா என்பவரை நோக்கி, உன்னை எங்கள் அரசன் அழைத்துவரச் சொன்னான், உடனே வா, வராவிட்டால், உன்னை வலிதாய் பற்றிக் கொண்டுபோய் அவ்விடத்திற் சேர்ப்போம என்றார்கள். அதைக் கேட்ட பாத்ராவாளர், அப்படியே யாகட்டும், இதோ பகவானை வணங்கி வருகிறேன் என்று சொல்லி, பகவத் ஸந்நிதியின் கர்ப்ப க்ருஹத்திலுள்ளே பரவேசித்து, பகவானை வணங்கி, சிரசின்மேல் கைகளைக் கூப்பி அநுசலி செய்து, புண்டலீக வரதனே, முற்காலத்தில் கஜேந்திராழ்வானது துன்பத்தை நீக்கி யருளின கருணைக் கடலே, தேவரீருடைய திருவடித் தொண்டு செய்ய வந்து அமைந்திருக்கின்ற அடியேனை அரசனிடத்துக்குப் போக விடுவீராஞல், தேவரீரை ஆசிரயித் திருக்கிற சாதுக்கள் சிரிப்பார்களே! இதை நீர் அறியீரோ என்று ஸ்தோத்திரஞ் செய்து நிற்பவரது இன்சொற்களைக் கேட்டு, கருணாசாகரமாகிய பகவானவர், அவர் கண்ணுக் கெதிரே தோன்றி அவரது உயிரைத் தமது திருத்தொடையிற் சேர்த்துக்கொண்டார். அருகே யிருந்த இந்த அதிசயதைக் கண்ட சாதுக்களும் அர்ச்சகர்களும் வியந்து, மனமுருகி, ஜயஜயவென்று புகழ்ந்து கொண்டாடினர்கள்; அன்று முதல் இன்றளவும் பாண்டுரங்கப் பெருமானது திருத்தொடையில் அந்தக் காண்ஹோபாத்ரா என்னுங் கங்கைகையார் சேர்ந்திருக்கும் குறியைச் சேவிப்போர்க ளெல்லாம் கண்டு களிக்கின்றார்கள். இப்படி அவரையிரைப் பகவானுனவர் தமது திருத்தொடையில் சேர்த்துக்கொண்ட வுடனே, அர்ச்சகர்கள் அவரது உடலைக் கொண்டு போய்த் தெற்கு வாசலின் ஒரு புறத்தில் புதை

த்து நின்று துதித்தார்கள். உடனே அந்தப் புதைத்த விடத்திலே ஒரு மரம் முளைத்துத் தழைத்து நின்றது. இப்படி யிருக்க, வெளியே நின்ற தூதர்கள் உள்ளே ப்ரவேசித்து அர்ச்சகர்களை நோக்கி, இங்கே வந்த பெண் எங்கே யென்று கேட்க, அவர்கள், அவருயிரைப் பகவானுனவர் தமது திருத் தொடையில் சேர்த்துக் கொண்டார், அவருடலைக் காட்டலா மென்றாலும் புதைத்த அவ்விடத்தில் அவ்வுடலே ஒரு மரமாய் முளைத்துத் தழைத் திருக்கிறதென்றார்கள். இந்தச் செய்தியைக் கேட்ட தூதர்கள், இது என்ன ஆச்சரிய மாயிருக்கின்றது! அந்தப் பெண்ணை நீங்கள் மறைத்து வைத்துக்கொண்டு பொய் சொல்லுகிறீர்கள், நீங்கள் எங்கள் அரசனிடத்துக்கு வாருங்களென்று அழைத்துக்கொண்டு போனார்கள். போன அர்ச்சகர்கள், கந்தபொடியையும் ப்ரஸாதத்தையுங் கொண்டு போய் அரசனுக்குக் கொடுக்க, அவன வாங்கி, அதில் ஒரு மயிரிருக்கக் கண்டு, இதென்ன வென்று அவர்களைக் கேட்க, அவர்கள் பயந்து இது பகவானுடைய தலை மயிரென்று சொன்னார்கள். வேறொரு மயிரென்று சொன்னால், அரசன் தண்டிப்பா னென்று இவ்வாறு சொல்லக் கேட்ட அரசன், உங்கள் சாதிக்கு மயிருண்டோ, உங்களைக் கொல்லுவதற்கு மூன்றே உண்மையைச் சொல்லிவிடுங்க ளென்றான். அப்போது, அர்ச்சகர்கள் அரசனை நோக்கி, ஐயா, நீர் கோயிலுக்கு வந்து உண்மையை அறிந்து கொள்ளலா மென்றார்கள். அப்படியே அரசனும் அவர்களோடு விரைந்து போய்க் கோயிலை யடைந்து நின்ற வுடனே, அர்ச்சகர்கள் பகவத் ஸந்நிதி கெதிரே நின்று, ஸ்வாமீ, தேவரீர் உரோமத்தோடு கூடிச் சேவை சாதிக்கா விட்டால், இன்று யாங்கள் மடிவது நிச்சயம் என்று சொல்லித் துதித்து நிற்க, அரசனும் சகநிதியிற் போய்ப் பகவானை உற்றுப் பார்க்குமபோது, அவரது திருமுடியின் மீமேல் சுருண்டு தொங்குகிற மயிரையும், அவரது திருத் தொடையில் காண்டீஹபாத்ராவின் உயிரிருக்கிற அடையாளத்தையும் கண்டு பயந்து, பிறகு மனமகிழ்ந்து, பகவானைப் பலவகையாய்த் தோத்திரம்செய்து அர்ச்சகர்களை நோக்கி, நீங்கள் சொன்னபடியே யிருக்கக் கண்டேன் என்று அவர்களையும் வணங்கி, ஆநந்தக் கண்ணீ ரொழுக நின்று, இந்தப் பெண்ணை னவள் பகவானுடைய திருத் தொடையில் இடம பெற்றிருக்க என்ன தவஞ் செய்திருந்தாளோ என்று வியந்து, பகவானுடைய திருவடியை ஆலிங்கனஞ் செய்து துதித்துக் கொண்டாடி, அந்தப் பெண்ணிலுடலே மரமாக முளைத்துத் தழைத்திருப்பதையும் கண்டு, பிறகு, அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டு மென்று, பாண்டிராஜாப் பெருமானைத் தோத்திரம் பண்ணித் தன் ஊரை யடைந்து வாழ்ந்திருந்தான். காண்டீஹபாத்ராவின் உடல் மரமாய் முளைத்துத் தழைத்திருந்த தென்றா னில்லவா? அந்த மரம் இன்று வரைக்கும அவ்விடத்தில் உள்ளது; அன்றியும தேவர்கள் பலர், ஏதோ காரணத்தால் மரங்களாகவும் கற்களாகவும் அவ்விடத்தில் தோன்றியிருக்கும் தன்மையைச் சொல்லச் சேடனாலும் முடியாது என்று சொல்லி, மேலே தாமாஜி பண்டிதருடைய வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

காண்டீஹபாத்ராவின் சரித்திரம் முற்றிற்று.

# நூற்றி-வது தாமாஜிபண்டிதர் சரித்திரம்.

பேதரிமாநகரத்தை யாளுகின்ற துருகசேவகன், பலவளங்களும் நிறைந்திருக்கிற மங்களவேஷம் என்னும் நகரத்தைத் தன் அரசாட்சிக் குட்படுத்திக்கொண்டு, அந்த நகரத்துக்கு, ஸ்ரீவரிபாஜனையிற் சிறந்தவராய், ப்ரபஞ்ச விஷயத்தில் விரக்தராய் விளங்குபவராகிய தாமாஜி பண்டிதரை அதிகாரியாக்கிவைக்க, அந்தத் தாமாஜி பண்டிதர், தமது குடும்பத்தோடு அவ் வூரிலிருந்து, தமது அதிகாரத்தை நீதியாய நடத்திக்கொண்டும், தினந்தோறும் வருகிற தொண்டருக்கும் அதிதிகட்கும் பூஜை, அன்னதான முதலாகிய வ்யபசாரங்களைச் செய்துகொண்டும், ஸ்ரீஹரிபாஜனை செய்துகொண்டுமே வெகு காலங் கழித்துக்கொண்டிருக்கும்போது, பஞ்சகாலம் நேரிட்டு, சிவராத்ரி யெல்லாம பசிபொறுக்காமல் மாண்டு போவதையன்றி, உண்ணச் சோறு கிடையாமல் மிகுந்த துன்பத்தை யநுபவித்துங் காலத்தில், ஒரு வேதியன் பண்டரி புரத்திலிருந்து, இந்த தாமாஜி பண்டிதர் வீட்டுக்கு வந்தான். அவனைக் கண்டவுடனே, பண்டிதர் மிகவும் உபசரித்து, அந்த வேதியனை நோக்கி, நீர் பசியால் மிகவும் அயர்ந்திருக்கிறீர், போய் நீராடிவாரும், போஜனம் செய்யலாமென்று சொன்னார். அப்படியே அவ்வேதியன் போய் நீராடி வருதலும். அவனைத் தமது பக்கியில் வைத்து, சிறந்த போஜனம் படைத்து, புரோஹிதர் சங்கற்பஞ்சொல்ல, வேதியர் யாவரையும் நோக்கி, நீங்கள் போஜனம் செய்யுங்களென்று பண்டிதர் சொல்லும்போது, பண்டரிபுரத்திலிருந்து வந்த வேதியன் கண்ணீர் பெருக்கிப பரிதபிப்பதைக் கண்ட மற்ற வேதியர்கள் திகைக்கக் கண்ட பண்டிதர் அவ் வேதியனைக் கிட்டி நீர் ஏன் அழுகிறீர்என்று கேட்க, அவன் என்மனைவி மக்கள் காஹாளாய்ப் பட்டினியிருக்கிறார்கள். இங்கே நான் உண்ணப் போகுஞ் சமயத்தில் அவர்களை நினைத்துகொண்டு அழுகிறேன் என்றான். அதைக்கேட்ட பண்டிதர், மிகவும் மன முருகி, ஐயரே, நீர் போஜனம செய்யும், உம்முடைய குடும்பத்துக்கு வேண்டிய அரிசி முதலிய சாமக்கிரிகள் வேண்டுமட்டும் கொடுக்கிறேனென்று சொல்லி, அவ்வேதியனைப போஜனஞ் செய்யும்படி செய்து, எல்லாரையும் மகிழ்வித்து, தக்ஷிணை தாம்பூலம் பெற்று எல்லாரும் ஆசீர்வதித்துப் போனபிறகு, பண்டரிபுரத்திலிருந்துவந்த வேதியனுக்குத் தாம் சொன்னபடியே,பொதிகளில் தானியத்தை நிரப்பி, அவைகளை அவ்வேதியன் வீட்டிற்சேர்த்து வரும்பொருட்டுச் சில வூழியரையேவ, அவர்களும் அப்படியே கொண்டு போய்ப் பண்டரிபுரத்தை யடையவே, அங்குள்ளவரெல்லாரும் வந்து வளைந்துகொண்டு, சூறையிட்டுத் தானியத்தைச் சுமந்து சென்றார்கள். அப்போது அவ்வேதியன் கூகூவென்றலறி யழுதான். அதைக்கண்ட அந்த வூரெல்லாரும்ஒருமிக்கக் கூடிவந்து வேதியனை நோக்கி, உனக்கு இத்தத்தானியத்தைக் கொடுத்தவர் யார் என்று கேட்க, வேதியன், தாமாஜி பண்டிதர் கொடுத்தா

சென்று சொல்லி, நான் செய்த பாபத்தாலே எனக்குக் கிடைத்த தாநியங்க ளெல்லாம் கொள்ளேபோயினவேயென்றுமனம்வருந்தி, மறுபடியும் தாமாஜி பண்டிதரிடத்துக்குப் போகும் போது, அந்த ஊரிலுள்ள மற்ற வேதியரெ ல்லாரும் இவரைப் பின்தொடர்ந்து போய்த் தாமாஜிபண்டிதருடைய வீட் டை வளைத்துக்கொண்டார்கள். அப்படி வந்து வளைத்துக்கொண்டவர்களைப் பண்டிதர் பார்த்து வணங்கினமாத்ரத்தில், வேதிய ரெல்லாரும் பண்டிதரை ஆசீர்வதித்து, பண்டிதரே, நாங்கள் சிறுவிலைக் காலத்தால் அநுபவிக்கிற துன்பஞ் சொல்லி முடியாது, இப்படிப்பட்ட காலத்தில உமது உதாரகுண த்தையும், சமாராதநச் செய்கையையும் கேள்விப்பட்டு, உமமைவந்தடுத் தோம், ஆதலால் எங்களுடைய பசிநோயைத் தீர்த்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்தார்கள். அவர்கள் சொல்லுகிற தீநவசநங்களைப பண்டிதர் கேட்டு மனமிரங்கி, வேதியரே, நீங்கள் வருந்தவேண்டாம, உமது பசிநோயைப் பண்டரிநாதர் தீர்த்தருளுவாரென்று சொல்லித் தமதுவீட்டுக்குள்ளேபோய் த் தமது தர்ம பத்நியை நோக்கி, பண்டரி புரத்திலிருந்து அநேக வேதியர் பசியால் வருந்தி வந்து நமது வீட்டைச் சூழ்ந்திருக்கிறார்கள், அவர்களுக் கெல்லாம பண்டரிநாதர் உங்கள் பசித்துன்பத்தை தீர்த்தருளுவாரென்று சொல்லி வநதேன், அவர்க ளெல்லார்க்கும அநமிட்டு உபசரிக்காமற் போ னால், அவர்களெல்லரும் பிறகதிபோவார்கள். ஆதலால் அவர்களுக்குக் கொடுக்கலாமென்னுலோ, நமதிடத்தில் தாநியங்கள் ஒன்றுமில்லை, இதற் கென்ன செய்வோம என்று கேட்க, சற்பிற பிறநத அவர் மநைவியார், கண வநது முகத்தை நோக்கி, பராணநாதரே, எநதவிதத்தாலாயினும வநதடை ந்தவர்களுடைய துன்பத்தை தீர்த்தலபுவதே நன்மையென்று சொல்ல, பண்டிதர் மநைவியை நோக்கி, நமதிடத்தில் நமமுடையபொருள் ஒன்று மில்லையாயினும, அரசனுடையபொருளிருக்கின்றது, அதை யெடுத்தாகி னும்கலாம், அதையறிநது அரசன் தண்டித்து என் னுயிரை வாங்கினலும் இவர்களெல்லாம உயிர்பிழைப்பார்களே அதுவே போதும, இவர்கள் பொரு ட்டு என் உயிரை விடுதல் மிகவுநு சிறநதகாரியமென்று நீனைகிறேன், நீ இங்கேயிரு, நான்போய் அவர்களைத் திருபதிசெய் தனுபபிவிடடு வருகிறே னென்று வெளியே வநது அரசனது தாநியகளஞ்சியக்காரநது, வேதி யரை யழைத்து, உங்களுக்கு வேண்டிய தாநியங்களை யெடுத்துக் கொண்டு போகலாமென்று சொல்ல, அவர்களும அபபடியே தமக்கு வேண்டிய மட் டும் கொள்ளைகொண்டு,பண்டிதரை வாழ்த்தி,ஒரு மாசகாலமவரைக்குமபித மில்லாமல் தானியகளைக் கொண்டு போய்க் கொண் டிருநதார்கள். அவர்க ளுடைய வறுமையும்நீகிறறு;பண்டிதரும திருநோறறும ஸ்ரீஹரிபஜநைசெ ய்துகொண்டு வாழ்நதிருநதார். இப்படி யிருக்கும்போது, அரசன் பொருள் முழுதும் கொள்ளை விட்டவராகிய பண்டிதருடைய செய்கை முழுதும் இவரிடத்தில் வேலைக்காரனு யிருந்த ஒருவன் எழுதி அரசனுக் கறிவித் தான். அதை யறிந்த அரசன் மிகவும் கோபித்து, என் பொருளை என் கட்

டனே பெருமல் இவன் எப்படிச் செலவிடலாம்? இவனைக் கொலை செய்வதே தகுதியென்று தீர்மானித்து, சில வீரரைத் தன்கைச் சிட்டோடு பண்டிதரிடத்துக் கனுப்ப, அவர்கள், பண்டிதரிடத்திற்கு விரைந்து வந்து, அரசன் கண்டித் தெழுதின சிட்டைக் காட்டி, நீர் விரைந்து வந்து அரசனிடத்திற் சேர வேண்டு மென்று கோபித்துச் சொல்லவே, பண்டிதரும் அப்படியே அரசன் கட்டளைப் படியே நீங்கள் செய்வது உங்களுக்குத் தகுதியான காரியமென்று, அவர்களோடு விரைந்து போய்ப் பண்டரி புரத்தை யடைந்து, வீரரை நோக்கி, ஸ்வாமியை வணங்கி வருகிறேன் என்று இனசொற் சொல்லி, சந்தரபாகையில் நீராடிக் கோயிலே யடைந்து, சந்நிதியிலுள்ள கருட ஸ்தம்பத்தின் அருகே நின்று வணங்கி, செங்கல் மேல் நின்ற திருக் கோலமா யெழுந்தருளி யிருக்கிற பாண்டுரங்கப் பெருமானே அஞ்சலி செய்து தோத்திரித்து, திருமேனியைத் தழுவிக் கொண்டு, இன்று உன் சேவை முடிந்தது, அடியனை பரிசுத்த ஞனேன் என்று சொல்லி, பெருமானது திருவுரு முழுதும் விருப்பத்தோடு நோக்கி, அன்பு மிகத் தமது மனத்தில் அமைத்துக் கொண்டு, கண்களில் நீர் ததும்பத் திருவடி வணங்கி, போய் வருகிறேன் என்று விடை கொண்டு, சீதேவி பூதேவி முதலான தேவிமார்களுடைய சந்நிதிக்கெதிரே நின்று, பெரிய பிராட்டியாரைத் தொழுது தோத்திரித்து, பிறகு மற்றப் பிராட்டி மாரையும் வணங்கி, பிறகு கருட பகவானையும் வணங்கி, உன் திருமேனி முழுதும் வேத ரூபமாயிருக்கின்றது, உன் மீது எழுந்தருளுவோன ஸ்ரீ க்ஷீராப்தி நாதன், ஆதலால் உன் பெருமையைச் சொல்ல யாவரால் முடியும்? உன்னை யல்லது என் மனத்துக் கிசைந்த பொருள் வேறுளதோ மிலேலே யென்று வாழ்த்திப் புகழ்ந்து, அவ்விடம விட்டு ஆஞ்சநேயர் சந்நிதிக்கு வந்து அவரை வணங்கி, உயிருக்குயிராய் நிறைந்திருக்கிற பகவானுனவர், எல்லாருடைய வுயிர்களையும் தரவல்ல சமர்த்தன் என்றல்லவோ, உனக்கு சஞ்சீவியையும் சிரஞ்சீவியையும் கொடுத்தருளினர் என்று தோத்திரம் பண்ணி, வெளிப்பட்டு, வீரரோடு போகலுற்றார்; இப்படி வீரரோடு கூடிப் போகிற பண்டிதரை அந்த நகர ஜனங்கள் கண்டு, மனமவருந்தி, கண்களில் நீர் ஆறுபோலப்பெருகுகின்று, எங்களுடைய உயிர்க ளெல்லாம் அழியாமற் காப்பாற்றின இந்த மஹாத்மாவுக்கு இப்படியும் கேடிலாமோ? இதைக்குறித்துப் பாண்டுரங்க பகவான் என் செய்யத் திருவுளங்கொண்டிருக்கிறாரோ, அறியோம் என்று பற்பல வகையாய்ப் பேசிக்கொண்டு சூழ்ந்துவர, பண்டிதரும் ஸ்ரீ கண்ணபிரானைத் தமது திருவுளத்தமைத்துக்கொண்டு அரசனிடத்துக்கு வந்தார்.

இப்படி இவர் போய் அரசனை யணுகு முன்னே, ஸ்ரீபண்டரிநாதர் விரைந்து இவரது துன்பத்தை நீக்காமற்போனால், பக்தபரிபாலகன், தீனரக்ஷகன் என்னும் பெயர்கள் எனக்குத் தகுமோ, தகாமற் போவதேயன்றி அப்பெயர்களுக்கும் தாழ்வு வரும் என்று திருவுளமபற்றி, ஜீர்ணவஸ்திரம் தரித்து, தலையை மூடின கம்பளியின் கயிறுகள் கழுத்தில் தொங்கவும், கோவணம்

தொங்கவும், ஒரு கடியானது கையில் விளங்கவும, பாதங்களில் செருப்பு விளங்கவும், பண்டிதர் எழுதிக்கொடுத்த பத்திரம் ஒரு கையில் விளங்கவும், நீல நிறமாகிய திருமேனியோடு, வெட்டியானென்று கண்டோர் சொல்லும் படி வேஷம் பூண்டு புறப்பட்ட ஸ்ரீபாண்டுரங்கப் பெருமானே, ஸ்ரீ பெரிய பிராட்டியார் கிட்டி நின்று, அருளே திருவுருவாகப் பெற்ற பகவானே! இப் படி காணம்விட்டு,நீயிர்க்கோலங்கொள்வதற்குக்காரணம யாதென்றுவினவ, தேவராஜனுகிய பகவான் திருமகளை நோக்கி, மேல்விளையத்தக்க காரியத்தை நீ சிறிதும் அறிந்திலை, நமமூரிலுள்ளார் சிறுவிலக்கலத்தால் வருகின வருத்தத்தை நீக்கிக் காபபாற்றினஎனது அன்பராகிய தாமாஜி பண்டிதரைக் கொலை செய்வதற்காக அரசன் ஏவின வீரர்கள் அழைத்துக்கொண்டு போகி றார்கள். அந்தப் பண்டிதர் தம்மை எமது வசத்தில் ஒப்புவித்து இருப்பவரா கையால் அவருக்கு நேரிட்ட இந்த ஆபத்தை நீக்கும்பொருட்டு நான் இந்த வேஷம் பூண்டதனால் எனக்கு ஒருதாழ்வும்காணாமல இல்லை என்றுசொல்லி ஒருபெரிய பணப்பையைத்தமதுகையிலீதுவைத்துக்கொண்டுபோய்,பேதரிமா நகரத்தை ஆள்கின்ற அரசனுடைய அரண்மனை வாயிலை யடைந்து, தமது வரவை அரசனுக்கு அறிவிக்கும்படி வாயில் காவலரோடு சொல்ல, அவர்க ளும் அப்படியே போய் அரசனுக்குத் தெரிவிக்க, அரசனும உள்ளே வரும் படி கட்டளையிட, அழைக்கவந்தவரோடிகூடிச் சென்று அரசனுக்கு எதிரில் நின்று சலாம் செய்தார். அவரைக்கண்ட அரசன் நீ யார் என்று கேட்ட வுடனே, சர்ப்பசயனனுகிய ஸ்ரீபாண்டுரங்கப் பெருமான் அரசனை நோக்கி, நான் ஒரு வெட்டியான், என் பேர் விடோபா நாகன், என் கையில் உள்ளது தாமாஜி பண்டிதர் கொடுத்த பத்திரம என்று சொன்னர். உடனே அரசன் அந்தப் பத்திரத்தை வாங்கிப் பிரித்து அருகில் இருப்போரைக் கொண்டு வாசிப்பித்து, அதில் பண்டிதர் இப்போது நேரிட்ட பஞ்சகாலத்தில் தானி யங்கிடைக்காமல் உயிர்கள் வருந்தி இறப்பதைக் கண்டு அவர்களின் துன்ப த்தை நீக்கும்பொருட்டு நமது களஞ்சியத்திலிருந்த தானியங்களை எல்லாம அவர்களுக்கு விற்று, வந்த பணத்தை எல்லாம் ஒரு பெரிய பையில் நிறை த்துக் கட்டி என் வெட்டியான் வசமாக அனுப்பியிருக்கிறேன, ஆதலால் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டு ஒரு ரசீது எழுதி அனுப்பவேண்டும என்று எழுதி யிருப்பதை அரசன் அறிந்து, பணம முழுதும் தருவாயாக என்று கேடக, வெட்டியான் வேஷம் பூண்டுவந்த பகவானுனவர் அரசன் கேட்டபடியே பணப்பையை அவனுக்கு எதிரேவைத்து அவிழ்த்துக்கொட்டி எண்ணிக்கொள்ளும்என்றார். அப்போது அரசனைக்கிட்டி நின்றவர்கள் அந்த ப் பணத்தை எண்ணி இலக்ஷத்து ஐம்பத்து நாலாயிர வராகன் என்று தொகை செய்து, அதற்கு மேலும் உள்ள பணத்தை எண்ணி எண்ணிக் கைசலித்து,எண்ண முடியாமல்அதே பையிலேயே போட்டுக்கட்டி பொக்கி ஷத்தில் கொண்டுபோய் பத்திரப் படுத்தினர்கள். ஆனல் இவர்கள் பகவா னுடைய மாயா விசேஷத்தால் இவ்வளவு தொகையுள்ளபொருள் இந்த ஒரு

பையில் அடங்குமோ என்று யோசிக்கவில்லை. இது இப்படியிருக்க, அரசன் கீழ்க் கணக்கனுகியஒருவன் எழுதின சொல்லே மதித்துத் தூதரை அனுப்பினேன், இப்படி கன்மையாக நீர் அனுப்புவதை அறிந்திலேன்என்று இனிய சொற்களை எழுதி அதற்கு மேல் எனக்குச் சேரவேண்டிய பொருள் எல்லாம்சேர்த்தனு, ரூபாயும் அனுப்பியிருக்கிறேன்,பெற்றுக்கொள்ளுகவென்று எழுதிக் கொடுத்து, பல்லக்கும பலவகையான செல்வமும் பண்டிதருக்குக் கொடுக்கும்படி வெட்டியான் வசத்தில் ஒப்புவித்து வெட்டியானுக்கும் வேண்டும பொருள்களைப் பரிசு கொடுத்து, நீ மங்களவேஷம் என்னும் ஊரை அடைவாயாகவென்று விடைகொடுத்து அனுப்ப, ஸமாதானகர ஹிதராகிய பகவானுனவர் திருஉள்ளமகிழ்ச்சியோடு பண்டிதர் வீட்டுக்குப்போய்அரசன் தந்த பொருள்களைஎல்லாம்அவர் வீட்டில் வைத்து ரூபாயும் அவர் மனைவியார் கையில் கொடுத்து மறைத்தருளினார். அதன்பிறகு பண்டரி புரத்திலிருந்துவந்த பண்டிதர், கொலைவிரோடுவர, அவரையெதிர்கொண்டுபோய்த் தழுவிக்கொண்டு, நீர் அனுப்ப, பெரும்பொருள் கொண்டுவந்த வெட்டியான் என்னிடத்தில் பொருள் கொடுத்து ரூபாயும் பெற்று வந்தான், அவன் வழியில் எதிர்ப்பட்டவிலேயோவென்று சொல்லி, பணமிதமே, எனக்குக்கொடுக்க வேண்டிய பொருளுக்காக நீர் எழுதின பத்திரங்களைப் பாரும் என்று கொடுக்க, பண்டிதர் அதை வாங்கிப் பார்த்து, இதைச் செய்தி முழுதும் ஸ்ரீ பண்டரிநாதனது பெருங்கருணையால் நிகழ்ந்ததாகத் தெரியவருகின்றது. என்று ஆலோசித்து, பகவானைக் குறித்து, உலக முண்ட பெருவயினே! பொன் மகுடம் ஆணியத்தகுத்த உன் சிரசில் பறவகளையைத் தரித்துப் பணிப்பையைச் சுமந்தாய்,பத்தஹாரம் தரித்து விளங்குகிற திருக்கழுத்தில் கம்பளக்கயிறு விளங்கப் பூண்டாய்; சங்க சக்கரங்கள் விளங்குகிற திருக் கரத்தில் தண்டத்தைத்தரித்தாய், பட்டுவஸ்திரமுடுத்து விளங்கும்திருவரையில் அழுக்கு மிகுந்த கோவணத்தை யுடுத்தாய், தேவர்கள் எல்லாரும் தாழ்ந்து வணங்குகின்ற திருவடியில் செருப்புத் தரித்தாய், என்பொருட்டாகப் பேசத்தகாத தாழ்ந்தவார்த்தைகளை அரசனிடத்திற் பேசினுய், என்பொருட்டாகத் தலை கடுக்கப் பணப் பையைச் சுமந்தாய், திருப்பாற்கடலில் ஓராவிலேயில் அறிதுயிலமர்ந்தவனே! புருஷோத்தமனே ! பத்மநாபா! பக்தபரிபாலகா! பண்டரிபுரத்தில் நீலிபெற்ற கற்பகக் கனியே! என்று இவ்வாறு பலவிதமாய்ப் புலம்பிக் கண்ணீர் பெருகிக், திருத்துழாய் மாலையை யணிந்த பகவானைக் கருத்திற் பதித்து மயங்கி நின்றார். இவருடைய கருத்தைக் கண்டுகொண்ட அரசன் முதலாகிய எல்லாரும் ஆச்சரிய மடைந்து, பொன் கொண்டுவந்தவன் மாதவனே யென்று முன்னமே யாம் அறியாமற் போனேம்; அவ்வளவு தொகையை ஒருபையேற்குமோ? அவ்வளவு பெரும் பளுவை ஒரு கழுதான் சுமக்குமோ? இப்படி. இவ்விடத்தில் நடந்த அற்புதங்கள் யாவும் பண்டிதர் செய்த தவப்பயனலேயே நிகழ்ந்தனவாகவேண்டும் என்று தெளிந்து, அவரை வணங்கித் தோத்திரஞ்செய்து நிற்க, பண்டிதரும், என்

பொருட்டாக பகவான் இப்படி செய்யத் தகாத காரியத்தைச் செய்தாரே என்று பரிதபித்து, பிறகு வேத்தினை நோக்கி, எனக்கு விடை கொடுக்க வேண்டுமென்று கேட்க, அரசன் பண்டிதரை நோக்கி, கேளும் பண்டிதரே! ஸ்ரீலக்ஷ்மீநாதனுகிய பகவான் உமக்கு ஆளாகவந்தார். அந்த அவாங்மாநஸ கோசராகிய பகவானை நாங்க ளெல்லாருங் கண்டு கடைத்தேறச் செய்தீர்; ஆதலால், எம்முடைய பணிவிடைகளை யேற்றுக்கொண்டு இவ்விடத்திலே யெழுந்தருளி யிருக்கலாமென்று சொல்லிப் பிரார்த்திக்க, பண்டிதர் அவ்வரசனது வேண்டுகோளுக்குடன் படாமல் பண்டரிபுரத்துக்குப் போய், பகவானைக் கண்களிகூரக்கண்டு சேவித்து, தேவதேவனே! பாபியாகிய என்பொருட்டு ஓரரசன் சபைக்கெழுந்தருளி, அவனுக்கும் அவன்சபையிலுள்ள எல்லாருக்கும் சேவை கொடுத்தருளினாய், அந்த சௌலப்யத்தை அடியேன் கண்டு களிக்கப் பெற்றிலேன் என்று கண்ணீரால் திருவடி விளக்கி, மூன்றடி மண்ணை மஹாபலியினிடத்தில் யாசித்துக்கொண்ட வாமந மூர்த்தியே! உன்னை எப்பொழுதும் மறவாதிருக்கிற எனக்கெத்தனை நீலமேக வண்ணனாகி, என் எழுந்தருளுகிறதில்லை என்று சொல்லித் தோத்திரஞ் செய்துகொண்டிருக்கிற பண்டிதருடைய உண்மை நிலையை யறிந்த அவ்வரசனை, பண்டரிபுரத்துக்கு வந்து இவ்வரசைக் கண்டு, பரமாத்மனுகிய பண்டரிநாதனை இன்னம் ஒருதரம் எமது கண்களிக்குக் காணும்படி க்ருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, தீபமானது தூண்டுகோலால் மிகவும் சுடர்விட்டு விளங்குவதுபோல அரசன் பிரார்த்தனையால்தமக்குமதிகப்பண்டரிநாதன் அரசனுக்குப் பொன்கொண்டுவந்து கொடுத்த திருக்கோலத்தைச் சேவிக்க வேண்டுமென்கிற விருப்பம் மிகுதியாக வுண்டானதனால், அன்பு மிகுந்து, செந்தாமரை மலர்போலுங் கண்களையுடைய ஸ்ரீமந்நாராயணனை பலமுறை வாழ்த்தி வணங்கவே, பக்தவத்ஸலராகிய பகவானுனவர், முன்னை அரசனிடத்துக்குப் பொருள் சுமந்து போன திருவுருவோடு எழுந்தருளி, பண்டிதருக்கும அரசனுக்கும காட்சி கொடுத்தருளினார்; அக்கத் திருக்கோலத்தைப் பண்டிதர் கண்டு, ஸ்ரீகண்ண பிராமான! உன் திருவருளின் தன்மை யிதுதானென்று திருவடியில் வீழ்ந்துவணங்குகையும, அதைப் பகவான் அவரைத் தழுவிக்கொண்டு அன்புபாராட்டித் தமது திருபபதியாகிய பண்டரிபுரத்தைக் கெழுந்தருளினார். பிறகு அரசன் பண்டிதரை வணங்கி அவரை ஞானகுரியாகக் கொண்டு அவரிடத்தில் மேன்மையாகிய பொருளை யடையும்படியான நற்புத்தியில்லாமையால் தன் ஊர்க்குப்போய்விட்டான். அதன்பிறகு பகவத் தாஸராகிய பண்டிதர், தமது குடும்பத்தையும உடன்கொண்டு பண்டரிபுரத்துக்குப்போய், அவ்விடத்திலுள்ளாரெல்லாரும இவரது வைபவத்தை யறிந்து துதிக்க, இடையறாமல் ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டு வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே ம்ருத்யுஞ்சய பக்தர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

தாமாஜி பண்டிதர் சரித்திரம் முற்றிற்று.

# நூறு-வது மிருத்யுஞ்சய பக்தர் சரித்திரம்.

சாந்தபமணி யென்னும் பெயர்பெற்ற ஒரு குருக்கள் பேதரி நகரத்துக்கு அரசனாகி அரசாட்சி செய்து வருங் காலத்தில், ஒரு நாள் தன் மனையாளோடு மாளிகைமேல் ஒப்பரிகையிற் போய்ப் பரிமள த்ரவ்ய மணிந்து, சரசசல்லாபமா யிருந்து, வாழைக்கனியை யுரித்துச் சர்க்கரையில் தோய்த்துத் தானும் அருந்தித் தன் மனையாருக்குங் கொடித்து, அக் கனிகளின் தோலைச் சாலரவழியாகக் கீழேயெறிய, அங்கே ஒரு வறியவனிருந்து, அத்த் தோலை யெடுத்து வாயிலிட்டு மென்று, இது மிகவும் சுவையாயிருக்கிற தென்று உண்பதை அரசன் மனையியானவள் பார்த்து, அரசனுக்குக்காட்ட, அரசன் கோவங் கொண்டு, இத்தக் காவலோடு கூடிய அரண்மனைக் குள்ளே இவன் எப்படி வந்தானென்று சில காவல் வீரரை யழைத்து, இவனை யார் உள்ளே விட்டது என்று தண்டித்தலும்; அவர்கள் அந்த வறியவனைக் கை சலிக்க அடித்தார்கள். அந்த அடிகளைப் பொறுத்துக்கொண்டு அவன் சிரிப்பதை அரசன் பார்த்து, ஆச்சரியப்பட்டு, அவனைத் தன் னிடத்திற்கு வர வழைத்து, அவனை நோக்கி, நீயிவ்விடத்தில் வந்ததற்காக உன்னைப்பிடித்து நன்றாயடிக்கும்படி காவல்வீரரை யேவினேன், அவர்களும் அப்படியே செய்தார்கள், அவர்கள் அடித்த அடிகளுக்காக நீ வருந்தாமல் சிரிக்கிறாய், இது என்னவென்று கேட்க, அவ் வறியவன் அரசனை நோக்கிச் சொல்லுகிறான். எப்படி யென்றால், உரித்தெறிந்த பேதாலின் சுவையை யநுபவித்த எனக்கு உண்டான பயன் இந்த அடிகளாலும், அந்தப் பேதாலினுள்ளே யிருந்த கனியின் சுவையை யநுபவித்த வுனக்குண்டாகும பயன் யாதோவென்று சிரித்தேன், மேலும, உன் மனைக்கு வெளியே யிருந்த எனக்குங் கிடைத்த பயன் இதுவானால், மனைக்குள்ளே யிருக்கிற வுனக்குக் கிடைக்கும பயன் யாதோ வென்றும சிரித்தேன் என்று சொல்லுவை. இவைதைக் கேட்டவுடனே, அரசன் மிருதியாகிய விரக்தியை யடைந்து, அரண்மனையையிட்டு வெளியேவந்து அரசாட்சியையும், மனைவி மக்களையும் வைத்துக் காட்டுக்குப் போய், ஒரு பக்கத்திலிருந்துகொண்டு, தெய்வத்தை பரிசோதிப்பதிலம் யாது? ஜகத சாகரத்தைக் கடந்து மோக்ஷ நீரத்தை யடையும் விதம் யாது? எனக்குக் கடைத்தேறும் வழியை யுபதேசிக்கிற ஆசிரியனை யடையும் விதம் யாது? என்று இப்படிப் பலவிதமா யெண்ணி, அந்தக் காட்டில் திரிந்துகொண்டிருக்குங் காலத்தில், பண்டரிபுரத்தில் ஆடிமாசத்து ஏகாதசியாகிய விசேஷதினத்தில் பண்டரி நாதரைச் சேவிக்கவேண்டுமென்று அநேகம் பாகவதர்கள் தாளம், ம்ருதங்கம் முதலாகிய வாத்ய விசேஷங்களோடு ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு கருடக்கொடிபிடித்து அவ்வழியாய்வருவதை அரசன்கண்டு, அவர்களெதிரில் வீழ்ந்து வணங்கி, எழுந்து நின்று, அவர்களிடத்தில் அன்பு மிகுந்தவனாய், இவர்கள் இவ்வழியாய் வந்ததனால் இது சுதிநமாகுமென்று

மகிழ்ந்து அவர்களைத் தொடர்ந்து பண்டரிபுரத்தை யடைந்து, சக்ரபாகா நதியில் முழுகி, புண்டலீகரை வணங்கி, அந்த க்ஷேத்ரத்தை வலம் வந்து, ஸ்ரீ கோபாலஸ்வாமி எழுந்தருளியிருக்குங் கோயிலுக்கெதிரே நின்று, சாது ஜநங்கள் செய்கிற ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநத்தைச் சிரத்தையோடு கேட்டு, பந்தங்களைச் சேதித்தவர்களாகிய அடியார்களைப் பணிந்து, ஆநந்தக் கடலில் முழுகி, பெருமகிழ்ச்சியினால் சொல்லுகிறான். எப்படியென்றால், இவ்வுலகத்தில் அநேக தீர்த்தங்களையும், க்ஷேத்ரங்களையும், தெய்வங்களையும் கண்டேன், ஆயினும் இந்தப் பண்டரிபுரம்போல நன்குமில்லை, இந்தச்சந்த்ரபாகா நதியில் ஒருதரம் மூழ்கினவன் எல்லாப் பாபராசிகளையும் நீறுக்குவான், எப்படிப்பட்ட துர்ப்புத்தியுள்ளவனாயினும் இந்த க்ஷேத்ரத்தை யடைந்து ஒருநாள் வாசம்பண்ணினால் அவன் புத்திதெளிவிடுவான், இவ்விதம் நன்மை யமைந்த தீர்த்த க்ஷேத்ரங்களின் மஹிமைகளைச் சொல்ல வல்லவர் யாவர் என்று சொல்லி, சரீரம் புளகமகொண்டு, கருட ஸ்தம்பத்தினருகே வந்து தலை தாழ்த்தி வணங்கி, அவ்விடத்திற் கூடியிருந்த சாதுக்களை வணங்கித் தழுவிக்கொண்ட பிறகு, திவ்ய ரூபத்தோடு செங்கல்லின் மேலெழுந்தருளியிருக்கிற பரஞ்சுடராகிய ஸ்ரீ கண்ணபிரானைக் கண்களிகூரக் கண்டு தழுவி, இரண்டு திருவடியின் கீழே விழுந்து, வாமநா, பதிதபாவநா, புருஷோத்தமா, ஹே கோபாலா, ஹ்ருஷீகேசா, பரந்தாமா, பாண்டுரங்கா, கருணாகரா, உன் வைபவத்தைக் கேட்டு வந்து உன் திருவடியிற் சரண்புகுந்தேன், உன் திருவுருவம் என் மனத்தில் விளங்கித் தழைக்கச் செய்வோரைப் பெருமையால் அலங்கரிப்பன், ஆகையால், போதகர் கிடைத்து என் மநோரதம் நிறைவேறும்படி கருணை செய்யவேண்டும், நீ இந்த வரத்தை எனக்கு அருள் செய்கிற வரைக்கும் உன் கோயில் வாயிலை விட்டு நீங்க மாட்டேன் என்று ப்ரார்த்தித்து, நிலத்தில் விழுந்து, ஜலபாகம் முதலானவையில்லாமல் கிடக்க, கருணைக் கடலாகிய பகவானுனவர், மூன்றாநாள் ராத்ரியில் அவன் கனவில் வந்து, கல்யாணபுரத்தில் வாழ்கின்ற ஸஹஜாநந்த ஸ்வாமிகளிடத்திற் போய், உபதேசம் பெற்றுக்கொள்ளக் கடவை யென்று சொல்லிப் போயினர் போன வுடனே, அரசன் கண் விழித்து அருகேயிருந்த புத்தகத்தை நோக்கி, ஜ்ஞாநவிவேகசிந்து என்பது இதுதானே வென்று வியந்து, பாண்டுரங்கப் பெருமானுகிய நீதயாளன், தன்கருணையால் என்னைப் பரிபாலநஞ் செய்தானென் றெண்ணி, அந்தப் புத்தகத்தை ஏகாந்த ஸ்தலத்தி லிருந்துகொண்டு படித்து மநநம் செய்கிற காலத்தில் தான் கண்ட கனவை நினைத்துக் கல்யாணபுரத்துக்குப் போய்க் கண்ணபிரானது திருவடியை வணங்கி, விடைபெற்று, குருவினிடத்தை யடைந்தானேட, அவர் அங்கே யில்லாதிருக்கக் கண்டு, மீண்டு, பண்டரிபுரத்தில் தங்கியிருக்கும் நாளில், கார்த்திகை யேகாதசி நேரிட, அந்தக் காலத்தில் குருவானவர் பண்டரிபுரம் வந்து சேர்ந்தார். அந்தக் குருநாதரை அரசன் கண்டு, தான் கண்ட கனவின் செய்தியைச் சொல்ல, குருநாதரும் மன மகிழ்ந்து,

அரசனுக்கு உபதேசம் செய்து, மிருத்யுஞ்சயர் என்கிற பெயரையுஞ் சூட்டினார். அப்படி உபதேசமும மிருத்யுஞ்சயர் என்கிற பெயரும் பெற்ற அரசன், காரணபுரத்தில் வந்து, கேட்டதை மகஞ் செய்துகொண்டிருந்து தெளிந்து சாஸ்திரகார மடைந்து, விஜ்ஞான நிலையோகூடி விளங்குங் காலத்தில், அந்த ஊரிலுள்ள பவராயர் என்னும் பெயரையுடைய ஒரு ஜங்கமர் வந்து இவரிடத்தில் உபதேசம் பெற்றார். இந்த ஜங்கமர்களிற் சிறந்த சமூச்சி யென்பவனொருவன், தன் ஜாதியானுகிய பவராயன் ஒரு துருக்களிடத்தில் உபதேசம் பெற்றான். இது என்ன புதுமை! செருப்புப் புதியதென்றும் தலைமேலேற்றிக் கொள்ளலாமா? இவ்வளது கடத்தை கூடாததா யிருக்கின்றதென் றிகழ்வதைக் குறித்து, அந்தப் பவராயன் என்னும் ஜங்கமன் தனது ஆசிரியராகிய மிருத்யுஞ்சயரிடத்திற் சொல்ல, அவர், இந்தச் சீடனது மனம் திடப்படும்படி சொல்லுகிறார். அப்பா, மதமீபதியானவன் சொல்லுவதை நீ மனத்திற் கொள்ளவேண்டாம்; நீ என் சொல் வழியில் நின்று, காள் தோறும் ஸ்ரீராம நாமஜபஞ் செய்துகொண்டிருக்கக் கடவாயென்று நியமித்து மென்னும் சொல்லுகிறார். வெண்ணீறணிந்த ஜங்கமர்களுக் கரசனுய்க் காசிபதி யென்னும பெயருள்ளவன் ஒருவனிருந்தான். அவன் காள்தோறும் பதினாயிரம் ஜங்கமரைக் கூடவைத் தூண்பவனு மிருந்தான். அப்படி யிருக்கையில், ஒரு காள் ஜங்கமரெல்லாரும மாதண்ணும பொருட்டு அகம், கறி வகைகள் யாவும் இலைகளிற் பரிமாறினபிறகு, அந்தக் காசிபதி யென்னும் அரசன் அந்தப் பந்தியில் உட்கார்ந்திருந்திற ஜங்கமரை நோக்கி, நீங்கள் யாவரும் சதாகாலமும் ஸ்மரித்துக்கொண்டிருக்கிற தெய்வத்துக்குப் பூஜை செய்யுங்களென்று சொல்ல, அவர்களெல்லாரும தமது கழுத்திலணிந்திருந்த லிங்கமுழுகளையும பெட்டிகளையும அவிழ்த்தும் திறந்தும் பார்த்து, லிங்கங்கள் முல்லாதிருக்கக் கண்டு திகைத்தார்கள். அப்படித் திகைத்து அமுது செய்யாது வருந்துங காலத்தில், அரசன் கண்டு, என்ன செய்தியென்று வினவ, அவர்கள் லிங்கங்கள் காணப்படாத செய்தியைச் சொல்ல, அவன் இது சாது தூஷணத்தால் நேர்ந்ததே யன்றி வேறென்றினுமும் உண்டான தல்லவென்றான். அப்போது சமூசி யென்னும் ஜங்கமன், தனுக்களிடத்தில் பவராயன் உபதேசம் பெற்றானென்று நான் சொன்னே னென்றான். அதைக் கேட்ட ஜங்கமரெல்லாரும், பவராயனுக்கு ஆசிரியரா யிருக்கிற மிருத்யுஞ்சயரிடத்திற் போய், நடந்த செய்தியைச் சொல்லி வணங்கினார்கள். அந்தத் தேசிகோத்தமர், இந்த மடத்தில் வேதாந்தம், சித்தாந்தம் என்னும் இரண்டு நாய்களுண்டு; அவையே இந்த லிங்கங்களை யெல்லாம் திருடிக்கொண்டு வந்து விழுங்கி விட்டன வென்று நினைக்கிறேன் என்று சொல்லி, அவற்றை யமழைக்க, அவற்றில் ஒன்று வந்து எதிரே நிற்க, அதை நோக்கி, நீ யுண்ட லிங்கங்களைக் கொடுவென்று நியமிக்க, அந்த நாய், ஐயாயிரம் லிங்கங்களைக் கக்கி நின்றது. மற்றொரு நாயை யமைத்து நியமிக்க, அதனும் அப்படியே ஐயாயிரம் லிங்கங்களைக் கக்கி நின்றது. அப்போது ஜங்

கமரெல்லாரும், தத்தம் இலிங்கங்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளமாட்டாமல் மயங்கித் தேசிகோத்தமரை ப்ரார்த்திக்க, அவர் தமது, ஜ்ஞாநக்கண்ணினால் தெரிந்தெடுத்து அவரவர்களுக்கு அருள் செய்தார். அவைகளைப் பெற்றுக்கொண்ட ஜங்கமரெல்லாரும், தேசிகோத்தமருடைய திருவடியை வாழ்த்தி வணங்கி, அவருக்கு ஜ்ஞாநாசாகர் என்றொரு சிறப்புத் திருநாமஞ் சூட்டின பிறகு, அரசனும் அவரை வணங்கி விடை பெற்றுத் தன் வீட்டுக்குப் போய், சிவலிங்கத்தைப் பூசித்து, அமுதுண்டு இனிது வாழ்ந்திருந்தான் என்று சொல்லி மேலே பாநுதாஸர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

மிருத்யுஞ்ஜய பக்தர் சரித்ரம் முற்றிற்று.

## நூறு-வது பாநுதாசா சரித்திரம்.

எல்லாராலும் புகழப்பெற்ற பைடணபுரி யென்னும் பட்டணத்தில் வசிப்பவரும், திருத்தோறும் சூரிய பூஜை செய்பவரும், வேதியரில் சிறந்தவரும் ஆகிய ஸுஜ்ஞாநர் என்றொருவரிருந்தார். அவருக்கு ஒரு ஸுபுத்திரர் பிறந்து வளர்ந்து வருங்காலத்தில், அந்தத்தப் பருவங்களுக்கேற்க, அந்த ப்ராசநம், சௌளம், உபநயநம், வேதாத்யயநம முதலிய எலாவற்றையுங் கிரமமாக நடத்தி வந்தார். ஆனால் வேதாத்யயநம் மாத்திரம் தந்தையே செய்வித்து வருவதில், ஒருநாள் அந்தப் பாட விஷயத்தில் சிறிது கோவங்கொண்டார். புதல்வர் அந்தக் கோவத்துக் கஞ்சி, வீட்டை விட்டு வெளிப்பட்டு, எங்கே போய் ஒளித்துக்கொள்வோம் என்று ஊருக்குருகே யிருக்கிற ஒரு காட்டை யடைந்து, அவ்விடத்தில் மண்ணிற் புதைந்திருந்த சூரிய நாராயணன் கோயிலைக் கண்டு, அதற்குள்ளே புகுந்து, சூரிய நாராயணப் பெருமானை மிகுந்த அன்போடு வணங்குதலும், அந்தச் சூரிய நாராயணன் ப்ரத்யக்ஷமாகி, உன் அன்புக்கு மகிழ்ந்தேன், நீ முகுந்தனை த்யாநித்துக் கொண்டிருவென்று சொல்லி, பாலைத் தங்கவட்டிலில் கொண்டுவந்து அந்தப் பாலகர்க்கு அருத்தி, மைந்தனே! உனக்கு யாதேனும் இடையூறு நேர்ந்தால் அதை நானே வந்து நீக்குவேன் என்றுசொல்லி மறைந்தார். பிறகு அந்தச் சிறுவருடைய தாய்தந்தையர்கள் ஏழுநாள் வரைக்கும் ஊர்முழுதும் தேடிக் காணமல் மனந்தளர்ந்திருந்தார்கள். அந்த ஏழாநாள் இந்தச் சிறுவர் கோயிலினுள்ளே யிருந்து வெளியே வரக்கண்ட ஒரு வேதியன் போய்க்கிட்டி இவரையழைக்க, இவர் விரைந்து போய்க் கோயிலினுள்ளே ப்ரவேசித்தார். அந்த வேதியன் உடனே போய்த் தாய்தந்தையர்க்கு இந்தச் செய்தியைச்சொல்ல, அந்தத் தாய்தந்தையர் சிலரை அழைத்துக்கொண்டு விரைந்துபோய் அந்தக் கோயிலுகருகே இருள் நீங்கும்படி தீவர்த்திகள் கொளுத்திக்கொண்டு, உள்ளே ப்ரவேசித்துப பார்த்து, சிறுவர் சூரிய நாராயணன் திரு வடியில் தலை வைத்துப்படித்திருப்பதைப் பார்த்து, ஆச்சரியப்பட்டு, புதல்வரையெடுத்து மார்போடணைத்து, பாலகனே! நீ தனியே யிங்குவந்து தங்கியிருக்கக்காரணம்

யாது ? ஏழு காளாய் உணவில்லாமல் எப்படி யிருந்தாய்? உன்னை யிக்கே காப்பாற்றினவர் யார் என்று கேட்க, சிறுவர் இங்கே ஒரு வேதியர் தினந் தோறு மதுரமான பாலைத் தங்கவட்டிலிற் கொண்டுவந்து கொடுக்க, உண்டு பசியாறி யிருந்தேன் என்று சொல்லக் கேட்ட தாய்தந்தையர் முதலானோர் அதிசயித்து, ஆலோசித்து, இந்தச் சிறுவனது நற்குணத்தைப் பார்த்து, சூரிய நாராயணனே பால் கொண்டுவந்து கொடுத்துக் காப்பாற்றினன் என்று நிச்சயித்து, இவருக்குப் பாதுதாசர் என்று பெயரிட்டு, அழைத்துக் கொண்டு தமதுவீட்டுக்குவந்து சேர்ந்தார்கள். சேர்ந்த தாய்தந்தையர்கள் இச் சிறுவனைச் சூரிபகாராயணனேநமக்குக்கிருபைசெய்தாரென்று அந்தச் சூரிய நாராயணனைத் தோத்திரம்பண்ணிக் கொண்டிருக்க, தந்தையானவர் இந்த மைந்தனுக்கு வேதாத்யயநம் செய்விக்கத் தொடங்கினால், முன்போல கேரிட்டால் என்ன செய்வோமென்றும், விதிப்படி. யாகக்கடவதென்றும் நிச்சயித்துக்கொண்டு, அந்தச் சிறுவனுக்கு மணமுடித்து வைத்தார். பிறகு அந்தச் சிறுவர் ஸ்ரீ பகவானுடைய ஸ்மரணேயே மேலிட்டு, ப்ரபஞ்சப்பற்று முழுதுமற்றிருக்கக் கண்ட தந்தை தாயர்கள் ஸ்ரீவைகுண்டாதாராகிய ஸ்ரீகண்ண பிரானுடைய க்ஷேத்ரமாகிய பண்டரி நகரத்தை யடைந்தார்கள். பிறகு சிறுவராகிய பாதுதாசர் ஒரு தொழிலையுஞ் செய்யாதவராயும் வறுமையால் அங்க வஸ்திரமில்லாதவராகியும் நிர்மலனுகிய பகவானுடைய திருவடியை மறவாமல் ஸ்ரீஹரி பஜனே செய்துகொண்டிருந்தார். இவர் இப்படி யிருப்பதை இவருடைய பந்துக்கள் அறிந்து வந்து, இவரை நோக்கி, ஐயா! நீர் யாதொரு தொழிலுஞ் செய்யாமல் இப்படி ஹரிபஜனே செய்துகொண்டே யிருந்தால் குடும்ப ஸ்மரக்ஷணம் எப்படி நடக்கும்? இதுவரையில் உமது தாய் தந்தையர் நடத்திவந்த குடும்ப ஸ்மரக்ஷணத்தை இனிமேல் நீரல்லவோ நடத்த வேண்டியிருக்கிறது? ஏதேதா ஒரு வர்த்தகம் செய்து குடும்ப ஸம்ரக்ஷணத்தைச் சுலபமாய் நடத்தலாமே, அதற்குப் பணமில்லை யென்பீரானுல், நாங்கள் நூறு வராகன் தருகிறோம், அதைத் திரவியத்தைக்கொண்டு, வஸ்த்ர வ்யாபாரம் செய்து அந்த வ்யாபாரத்தால் வரும லாபத்தை நீர் குடும்பச் செலவு செய்துகொண்டு சுகமாயிரும், முதற்பொருளை மாத்திரம் எங்களுக்கு வேண்டும்போது கொடுக்கலாம் என்றார்கள். அவர் சொல்வதற்கு இவர் கொஞ்சம் சம்மதித்தவுடனே, இவருக்காகத் தங்கள் கடைக்குச் சமீபத்தில் ஒரு கடையமைத்து, இவருக்கு அந்த வஸ்த்ர வ்யாபாரிகள் பேசுகிற பரிபாஷையையுங் கற்பித்து, நாலுபேர் விற்கும் விலையையும் அறிவித்து, வர்த்தகஞ் செய்பவர் பொய் சொன்னுல் அதிக லாபமுண்டாகும, மெய் சொன்னுல் சொற்ப லாப முண்டாகும் என்று இவ்வாறு பற்பல வுபாயங்களையும் கற்பித்தார்கள். அதைக்கேட்ட பாதுதாசர் அவர்களை நோக்கி, நீங்கள் சொன்னபடியே செய்கிறேன், ஆனுல் என் தலை போனுலும் பொய் சொல்லமாட்டேன், பொய் சொல்ல நினைக்கவும் மாட்டேன், மெய் சொல்லிச் செய்யும் வர்த்தகத்தால் ரும் ஊதியம் மிகவும் அற்பமானுலும், என் குடும்ப ஸம்ரக்ஷணத்துக்கு

அது போதும் என்று சொல்லுதலும், அந்த வுறவினர் இவர் சொன்னதைக் கேட்டு நகைத்து, இவனுக்குப் பிசகூ யேற்பதிலேயே த்ருஷ்டியாசையால் இவன் நமது சொல்லைக் கேட்கமாட்டான், இவனுக்கு நாம் சொல்லுவதில் ப்ரயோஜநமில்லை யென்று சொல்லுமபோது, அவர்களில் ஒருவன் மற்றவர் களை நோக்கி, இவன் முன்பின் வர்த்தகஞ செய்தவனல்லாமையால் அப்படிப் பேசுகிறான். நம்மோடுகூடி வர்த்தகஞ செய்வதில் சிலகாள் பழகுவானானால் பொய் சொல்லுதல் முதலான விஷயங்களில் நமக்குக் குருவாய் விடுவானென் றும் சொல்ல, கேட்ட மற்றவர்கள் ஆம், ஆம், அது சரிதான் என்று ஒத்துக்கொண்டு, இவரை அந்த வ்யாபாரத்தில் அமைத்துவைத்தார்கள். அன்று முதல் இவர் வர்த்தகஞ செய்யத் தொடங்கினர். தொடங்கி, தமமிடத்தில் ஆடை வாங்கவருவோர்களுக்கு இந்த ஆடையை நாங்கள் வாங்கினது இந்தத் தொகைக்கு, அதற்குமேல் லாபம் இவ்வளவு பெறுக்க வேண்டும, இஷ்டமானால் வாங்கிக் கொள்ளலாம், இஷ்டமில்லாதபக்ஷத்தில் வேறு கடையில் வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்லி, அதற்குச் சமமதிக்கு வாங்குவோருக்கு மாத்திரம் விற்பனைசெய்துகொண்டு ஸ்ரீராமநாம ஸ்மரணையை மறவாதிருந்தார். இப்படி யிருக்க ஆடை வாங்க வருவோரெல்லாரும் இவர் பொய் சொல்லமாட்டாரென் றறிந்து, இவர் சொல்லும விலையைக்கொடுத்து வாங்கிக்கொண்டுபோகும வழக்கமுண்டாய்விட்டது. ஊரிலுள்ளோர்எல்லாரும இவரிடத்தில் வாங்குவதனால் மற்றக் கடைக்காரர்களுக்குக் கொஞ்சமும வ்யாபாரம் நடவாமலிருந்தது. அதனால்அவர்கள் கஷ்டமடைந்து வருந்தவும, இவரது வ்யாபாரம் மாத்திரம் நாளுக்கு நாள் அபிவ்ருத்தியடையவும சம்பவித்தன. இதைக்கண்டு மற்றக் கடைக்கார ரெல்லாரும இவர் விஷயத்தில் பொறாமை கொண்டு, நாமும மெய் சொல்லுவோ மென்றாலும, முன்னே நாம பொய் சொல்லி யிருப்பதை யறிந்த இவ ஊரார் யாவரும அவரை நமபுவதுபோல நம்மை நம்பமாட்டார்கள், புலியானது சாந்த குணத்தை யடைந்தாலும் கண்டவர்கள் இது மனிதரை வஞ்சித்துக்கொல்வதற்கே இந்த வுபாயமெடுத்தது என்பார்கள்; ஜாரன் யாத்திரை செய்யபோனால், இவன் பரதாரகமநத்தின்பொருட்டேயாத்திரையை மேற்கொண்டான்என்பார்கள். ஆதலால் உண்மையைச் சொன்னாலும நமக்கு ப்ரயோஜந மில்லை, இவனுக்கு உபகாரஞ் செய்த நமக்குத் துன்பமு மிவனுக்கு இன்பமும, நமக்கு நஷ்டமு மிவனுக்கு லாபமும் கோரிட்டதனால், இனி நாம் செய்யவேண்டிய வுபாயம் ஒன்றும தோன்றவில்லையென்று எதிரிலிருக்கிற கோயிலிலேபோய்த் தங்கிப் பார்த்துக்கொண்டிருக்க, இவர் கடையொன்றில் மாத்திரம் விசேஷமாய் வர்த்தகம் நடத்து வந்தது. இப்படி யிருக்குங் காலத்தில், ஒரு நாள் அந்த வூரில் ஹரிதாசர்கள் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் விசேஷமாய்ச் செய்யப் போகிறார்களென்று கேள்விப்பட்டு, அதற்குப் போகவேண்டுமென்கிற விருப்பமுள்ளவராய், கோயிலில் கூட்டமாய்க் கூடியிருப்பவர்களை நோக்கி, இன்று ஏகாதசி ஹரிதிநமாகையால் விசேஷமாய் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் நடக்கப்போகிற

தாம், அந்தப் பாகவதகோஷ்டிக்குப் போய் அவர்கள்செய்யும் ஹரிகாமலங்கீர்த்தகம் கேட்டு வருகிறேன், தான்வருமளவும் என்கடையைப் பார்த்துக்கொள்ளுங்கள் என்றுப்சார்த்திக்க, அவர்கள், போ! போ! பொருள்கொடுத்துஉனக்குக் கடை வைத்துக்கொடுத்தது மல்லாமல் உன் கடையைக் காத்துக்கொண்டிருக்கவும நாங்கள்ஆட்களோ! நீ உன் இஷ்டத்தில்படியே போ! உன்கடையிலுள்ள வஸ்த்ரங்கள் போனால் எங்களைக் கேட்க வேண்டியதில்லை யென்றார்கள். அதைக்கேட்டபாதுதாசர், துணிகள் போனலென்ன? திருத்தாலென்ன வென்று சொல்லிவிட்டுப் பாண்டுரங்க பகவானுடையதிருவடியை நினைத்துத் தோத்திரஞ் செய்துகொண்டுபோனார். பிளவர் அவின்யூவில் கடக்கிற ஸ்ரீஹரிகாமலங்கீர்த்தகத்தினுல் ஆகத்பரவசராயிருக்கையில், இங்கேயிருந்த கடைக்காரர்கள் இவர்விஷயத்திலுள்ளபொறாமையால், தாசருடைய குதிரையை அவிழ்த்து ஓட்டி விட்டு, இவர் கடையி லிருந்த புடவைக ளெல்லாவற்றையும ஒரு மடியில் போட்டு அமிழ்த்தி விட்டு, மருந்தில்லாமல் பிணி நீங்கினதுபோல நமக்கு இத்தச் சமயம் வாய்த்ததென்று மேலும் ஆலோசித்து, பாதுதாசன் வந்து, தன் புடவை முதலானவைகளைக் காணுமல் கொந்து போன பிறகு, மடியிற் போட்ட புடவைகளை யெல்லாம் நாம் சொந்தமாக்கிக் கொள்ளுவோ மென்று எண்ணிக் கொண்டும், இவரைத் தூஷித்துக் கொண்டும் இருந்தார்கள். அந்தச் சமயத்தில் ஸ்ரீபாண்டுரங்கப் பெருமானுளவர், எல்லோடத்தில் அப்பு பிருந்த பாதுதாச னென்பவனுடைய குதிரையை இந்தக் கடைக்காரர்கள் அவிழ்த்து ஓட்டி விட்டதுமல்லாமல் அவன் கடைத் துணிகளையும் மடியிற் போட்டுவிட்டார்களே; இது என்ன அநியாயம் என்று தாசர் பொருட்டு அநுதபித்து, விரைந்து வந்து, மேய்ந்துகொண்டிருந்த குதிரையைக் கண்டு, தமது பீதாம்பரத்தை முறுக்கி அதின் கழுத்தில் மாட்டி, இழுத்துக்கொண்டு வந்து, பாதுதாசர் வரும் வழியில் நின்று தாசர் வரவை எதிர்பார்த்திருந்தார். அப்படி யிருக்கும் போது, கடைக்காரர்கள் செய்த பொல்லாங்குகளைத் திருவுளம்பற்றிச் சிறிது கோபங்கொண்டு, அவர்களுடைய குதிரைகள், பொருள், புடவை மூட்டைகள் ஆகிய எல்லாம் கொள்ளை போகுமபடி சங்கற்பித்தவுடனே, திருடர்கள் வந்து அவர்களுடைய புடைவை முதலானவைகளைக் கொள்ளையடித்து, அவர்களையும் நன்றாய்ப் புடைத்துவிட்டுப் போனார்கள். அதின் பிறகு, கடைக்காரர்க ளெலலாம் ஒருமிக்கக் கூடி, நாம் பாதுதாசருக்குச் செய்த தீமை நமக்கு உடனே தீமையை யுண்டாக்கி விட்டதென்று பேசிக்கொண்டு சிலர் வருந்தினார்கள்; நமக்கு இதைத் தீங்கு நேரிடுவதற்கு முன்னே அறிகுறியாகத் தூர்ப்புத்தி நேரிட்டது என்று சிலர் சொல்லித் தூக்கித்தார்கள்; ப்ரபஞ்சத்தில் பற்றில்லாதவனும், ஸ்ரீஹரி பக்தியிற் சிறந்த வனுயுமிராகின்ற பாதுதாசனுக்கு நாம் செய்த கஷ்டத்துக்கு எதிர் கஷ்டம் நமக்குண்டானது மன்றி, அதற்குமேல் திருடர் அடித்த அடியும் உதையும் பெற்றோமே, அது ஒரு லாபம் என்று சிலர் சொல்லி அயர்ந்தார்கள்; திரு

டர் கம்மைப் புடைக்கும்போது நாம் விலாவறக் கத்தியும் இவ்வூரிலுள்ளார் ஒருவரும் ஏனென்று கேட்க வில்லீயே, இது என்ன அதியாயம் என்று சிலர் மனம் நொந்தார்கள்; அவர்களுக்குக் காது கேளாதிருக்கும்படி இந்தப் பாண்டுரங்கன் செய்திருக்கலா மென்று சிலர் சொல்லி வாடினார்கள். இப்படி யிங்கே யிருக்க, ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தந காலக்ஷேபத்துக்குப் போன பாது தாசர், அன்று ராத்திரி இருபத்தாறு நாழிகை வரைக்கும் ஸ்ரீ ஹரி நாமஸங் கீர்த்தநம் கேட்டுக்கொண் டிருந்து, முடிவில் பகவானுக்குக் கர்ப்பூரஹாரதி சமர்ப்பித்து, பகவத் ப்ரஸாதமும் பெற்று, ஹரி தாசரை வணங்கித் தமது வீட்டுக்கு வரும் வழியில், ஒரு வேதியன் ஒரு குதிரையைக் கையிற் பிடித்துக்கொண்டு நிற்பதைக் கண்டு, சமீபத்திற் போய், அந்தக் குதிரையானது தம்மதென் றறிந்து நின்ற வுடனே, அதைப் பிடித்து நின்ற வேதியன் மறைந்து போக, இவர், குதிரையைத் தாம் பிடித்துக்கொண்டு, இதைப் பிடித்துக்கொண்டு நின்ற வேதியன் யாரோ தெரியவில்லீயே யென்று ஆலோசித்துக் கொண்டு வர, இவரைக் கண்ட துஷ்டர்களாகிய கலடக்காரர்கள் விரைந்து வந்து, இவரைச் சூழ்ந்துகொண்டு கதறி யழுதார்கள். தாசர், அவர்களீ நோக்கி, நீங்கள் அழுதற்குக் காரணம் என்னென்று கேட்க, அவர்கள், நடந்த செய்தியெல்லாம் மறைக்காமல் சொன்னார்கள். அதைக்கேட்ட தாசர் கருணாமூர்த்தி யாதலால் தமது கஷ்டத்தைச் சிந்திக்காமல், அவர்கள் படுந் துன்பத்துக் கிரக்க மடைந்து, குதிரையைப் பிடித்து நாம் வரும் வழியில் நின்றவன், ஸ்ரீ கண்ணபிரானே, அவன் மெய்பொருட்டு இந்தத் தொழில் செய்தது தகுதியோ! அப்படி அந்தப் பகவான் செய்ய நான் இந்த வர்த்தகத் தொழில் செய்வது தகாதென்று சொல்லி, மடியில் அமிழ்ந்திருந்த தமது புடவை மூட்டைகளீ யெல்லாம் வாரிக்கொணர்ந்து வரச்செய்து, அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து, பொருள்களீயும் அப்படியே வழங்கி, குதிரையையும் அவர்களுக்கே கொடுத்து, தமது மனைக்கு வந்து ஸ்ரீ ஹரிபஜனை செய்துகொண் டிருந்தார். சாதுக்கள் புலம்பக் கண்டு திரங்கிக் கொடுக்கும் பொருளைக் கொண்டு குடும்ப ரக்ஷணம் செய்துகொண்டு, ஆடி, கார்த்திகை இந்த இரண்டு மாசங்களின் மத்தியில் வீணை, தாளம், மத்தளம் முதலிய வாத்யங்களோடு பண்டரிபுரத்துக்குப் போய் ஸ்ரீ ஹரிபஜனை செய்து ஆனந்தக் கூத்தாடுவார்; பாலைரெங்கப் பெருமானைத் தரிசித்து, கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருக நின்று தோத்திரஞ்செய்து நிற்பார். இவரது நிலீமையை அவ்விடத்தில் வந்திருப்பவர்கள் கண்டு புகழ்ந்து கொண்டாடுவார்கள். இப்படி யிருக்குங் காலத்தில், பண்டரி புரத்தில் வாழ்கின்ற ஒரு வேதியன் அதிக திரவியம் சம்பாதிக்க வேண்டுமென்கிற எண்ணத்துடனே புறப்பட்டுப் பல தேசங்களிலும் சஞ்சரித்து, முடிவில் ஒரு கல்ல நகரத்தை யடைந்தான். அந்த நகரத்தை வித்யா நகரம் என்று சொல்லுவார்கள். அந்த நகரத்துக்குள்ளே ப்ரவேசித்து, அதற்கு அரசனு யிருப்பவனது அரண்மனை வாசலில் போய் நின்று, அரசனுக்குத் தன் வரவை வாசற் காப்பாளரால்

அறிவித்தார். அரசனும் இவ்வேதியனை உள்ளே வரும்படி கட்டளையிட்டு, வந்தவுடனே அன்போடு பூஜித்து, எங்கேயிருந்து எதைக் குறித்து வந்தீர் என்று வினவ, வேதியன், அரசனே, நான் பண்டரிபுரத்தில் வாழ்பவனுகிய ஒரு வேதியன், உன்னுடைய உதார குணத்தைக் குறித்து அதிகமாய்க் கேள்விப்பட்டு வந்தேன் என்றான். அதைக் கேட்ட அரசன் வேதியனை நோக்கி, நான் நீராடி, நான் வழிபடுகிற தெய்வமாகிய காளி கோயிலுக்குப் போகிறேன், நீரும் அங்கே வாரும் என்று சொல்லிவிட்டு, பூஜா திரவியங்களெல்லாம் சேகரித்தமைத்துக் கொண்டு காளி கோயிலுக்குப் போனான்; வேதியனும் கூடவே போனான். கோயிலில் நடத்தவேண்டிய பூஜா காரியங்கள் எல்லாம் நடத்தி முடிந்த பிறகு, அரசன் எல்லாருக்கும் ப்ரஸாதம் கொடுப்பித்துத் தானும் ஸ்வீகரித்து ஒரு ஆசனத்தில் வீற்றிருந்து, பண்டரி புரத்திலிருந்து வந்த வேதியனை நோக்கி, நான் ஆசரித்திருக்கிற இந்தக் காளியாகிய பெரும் தெய்வத்துக்கு நிகரான தெய்வத்தை வேறெங்கும் கண்டதில்லை, உம்முடைய ஊரிலுள்ள தெய்வத்துக்கு இப்படிப்பட்ட கோயிலும் பெருமையும் உண்டோ? ஏழை வேதியராகிய நீர் உமது அதிருஷ்ட வசத்தால் இவ்விடம் வந்து இந்த மஹா ப்ரபாவமுள்ள தெய்வத்தை தரிசித்தீர். இன்னம் சில நாள் தரிசனம் செய்யும் என்று சொல்ல, வேதியன், ஓ மஹாராஜனே, நீ அநுதப் பண்டரி நாதனது திவ்ய சௌந்தரியத்தைச் சேவிக்காமையால் இப்படிச் சொன்னாய், அன்றியும், இதைக் காளி கோயிலில் தரை வெள்ளித் தகட்டால் மூடப்பட்டிருக்கிற தென்றாய், எமது பண்டரிநாதன் கோயிலில் தரை பொற்றகட்டால் மூடி மணிகள் பதிக்கப்பட்டிருக்கின்றது, நீ வந்து பார்க்கலாம் என்று சொன்னான். அன்றியும் அவ்விடத்திலுள்ள மரங்களெல்லாம் பஞ்சதருக்களே, பறவைகளெல்லாம் சிந்தாமணிகளே, பசுக்களெல்லாம் காமதேநுக்களே, வனங்களெல்லாம் துளசி வனங்களே, சாது ஸஜ்ஜனங்களாகிய ஹரி தாசர்கள் கூடி எக்காலமும் கருடக் கொடியைக் கையிற் பிடித்துத் தாளம் மிருதங்கம் முதலிய வாத்யங்களோடு ஹரிபஜனை செய்து கொண்டிருப்பார்கள். அங்கே, சந்த்ரபாகை யென்றொரு நதியுண்டு, அதில் மூழ்குவோர்களுடைய பாபராசிகளெல்லாம் பஸ்மமாய்ப் பறந்து போகும். க்ஷீராப்தி நாதனான பகவான், புண்டலீகருடைய ஜ்ஞான பக்திகளைக் கண்டு, அவ்விடத்தில் ஒரு கல்லின் மேல், இடையிற் கையை வைத்துக் கொண்டு நின்று, தன் அடியார்க்கு வரும் துன்பங்களை யெல்லாம் நீக்கியருளி, அவர் விரும்பினவற்றைக் கிருபை செய்கிறார். அந்தத் திவ்யமங்கள விக்ரஹ சௌந்தரியத்தைத் திருமகளும் கண்டு நாணமடைகிறாள். அந்தப் பகவானது திருமுடியின் ப்ரகாசத்துக்குக் கோடி சூரிய ப்ரகாசமும் நிகராகமாட்டாது, அந்தக் கண்ணபிரானது தரிசனத்துக்கு வருகிற தேவர்கள் சமயம் பார்த்திருப்பார்கள், அவனுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளைப் புகழ்ந்து சொல்லத் தொடங்கினால் ஆதிசேஷன் நாக்கள் இருபினாலானதனால் தானே நிற்கிறான். வேதங்களாலும் வேதாதிகாரியான ப்ரஹ்மாவாலும் அவன் மஹிமை சொல்ல

ப்படாது, இப்படிப்பட்ட பாண்டுரங்கன்போல ஒரு தெய்வத்தையும், பண்டரி புரம்போல ஒரு நகரத்தையும், சந்த்ரபாகாநதிபோல ஒரு நதியையும் பதினாலுலகத்திலுந் தேடிக் காண்பது அருமையாகும். உன்னால் ஆராதிக்கப்படுகிற இந்தக் காளியும் அந்தப் பண்டரிநாதன் கோயிலில் பணிவிடை செய்கிறாள். அதைக் காணுமையால் நீ பிரதக் காளியைப் புகழ்கின்றாய். நீ வந்து அந்த க்ஷேத்ர தீர்த்த மூர்த்திகளைத் தரிசித்தால் இப்படிப் பேசமாட்டாய் என்றான். அதைக் கேட்ட அரசன் கோபங் கொண்டு, ஓ வேதியனே, நீ யிப்படிப் பேசினதற்கு உன்னை உயிர்க்கொலை செய்யவேண்டும், உன்னைக் கொன்றால் ப்ரஹ்மஹத்தி யென்கிற தோஷத்துக் கஞ்சினேன் என்று சொல்லி, மேலும், பண்டரிபுரம் பொன்மயமா யிருக்குமென்றும், காளி அவ்விடத்தில் தாசிவேலை செய்கிறாளென்றும பொய் சொன்னாய் என்று கோபிக்க, வேதியன், அரசனே, நீ கோபிக்கவேண்டாம், அந்த க்ஷேத்ரத்தை வந்து பார்த்த பிறகு உன் இஷ்டமபோலப் பேசுவாயாக வென்றான். அதைக் கேட்ட அரசன், வேதியனே, நீ சொல்லியதெல்லாம் உண்மையானால் நான் பண்டரிபுரத்துக்கு வருகிறேன், பொய்யா யிருக்குமானால் உன்னைத் தண்டிக்காமல் விடமாட்டே னென்று சொல்லி, மகதிரியைப் பார்த்து, நான் பண்டரிபுரத்துக்குப் போகவேண்டி யிருக்கிறது, நீ சேனைகளோடு முன்னே போவென்று நியமிக்க, அப்படியே மகதிரி முன்னே பிரயாணபட, அரசன் பின்னே புறப்பட்டான். அப்போது வேதியனும பண்டரிபுரத்தில் எழுந்தருளி யிருக்கிற ஸ்ரீ கண்ணபிரானைக் குறித்து, ஓ பாண்டுரங்கப் பெருமானே, இந்த அரசனுக்கு நான் சொன்னபடியே இவ்விடத்தில் காணப் படாவிட்டால நான் கடுந்தண்டனைக் குள்ளாக வேண்டி வரும, உனது கீர்த்தியாளத்வத்துக்கும பங்கமுண்டாகும என்று சொல்லி, பண்டரி நாதனை மனத்தி லிருத்தி பூஜித்துக் கொண்டே வந்தார். அப்போது சர்வாந்தர்யாமியாகிய பகவானுனவர், அரசன் சோதனார்த்தமாய் வருவதையும், தம்மை ஆசிரயித்த வேதியன் அவனிடத்தி லுகப்பட்டு வருத்தத்தோடு வருவதையும் அறிந்து, ஸ்ரீ கமலவாஸினியாகிய திருமகளை நோக்கி, வித்தியா நகரத்தை யாளுகின்ற அரசன், நம்மூர் வேதியன் சொன்னது உண்மைதானென வென்று சோதிக்கும் பொருட்டு வருகிறான், ஆகையாலே, அவ்வேதியன் வார்த்தையை உண்மையாக்க வேண்டும அப்படிச் செய்யாமற்போனால் எனக்கு நிலையாயிருக்கிற பக்தபாலகன் என்னும் பெயர்க்குப் பழுது நேரிடும், வேதியனுக்கும தண்டனை கிடைக்கும், புராண வசனங்களும பொய்யாகும், நம்மை ஆசிரயித்திருக்கிற அன்பர்களும் நகைப்பார்கள் என்று சொல்லுதலும, லோக மாதாவாகிய பெரிய பிராட்டியும் பகவானுடைய பாதாரவிந்தங்களை வணங்கி, ஸ்வாமீ, மஹாபாக்யம், அப்படியே யாகட்டுமென்று திருவுளத்தில் சங்கற்பித்தாள். உடனே முன்னோர் சொன்னபடியே பண்டரிபுரமானது பொன்மயமாய் விளங்கிற்று, அரசனுடைய ராமராஜன் அவ்வூர்க் கருகே வர வர, வேதியனுக்கு அச்சம் அதிகரித்துக் கொண்டே வர, அவரும் அந்த அச்சத்தை லக்ஷ்யம் பண்ணமல், ஸ்ரீ ஹரி

காம ஸ்மரணை செய்துகொண்டே வந்தார். யாமை யேறி வந்த ராம ராஜன் ஊர்க்கருகே வர வர, பண்டரி நகரமானது வேதியன் சொன்னதைப் பார்க்கிலும் ஏண்மடங் கதிகமென்று சொல்லும்படி பொன்மயமாயும், ரத்நமயமாயும் கெடுத்தாரம் வரைக்கும் ஒளி வீசுவதைக் கண்டு, யாமை மேலிருந்திறங்கி, தன்னை யழைத்துவந்த வேதியன் பாதத்தை வணங்கி, முன்னே நீர் சொன்னது உண்மைதானென்று சொல்லி, உமது மஹிமையைத் தெரிந்துகொள்ளாமல் கோபங் கொண்ட என் பிழையைப் பொறுத்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க, வேதியனும், அரசனே கோக்கி ஓ மன்னா ராஜரே! இந்த நகரம் உம்மைப் போன்ற விவேகிகளுக்கு மாத்திரம் ப்ரகாசகங்களாகச்சொல்லப் பட்டிருக்கிறபடியே பொன் மயமாய்க் காணப்படும், மற்றவர்க்கு இக்கலியுகத்தில் இப்படிக் காணப்படாதுகாணும் என்னுரை செய்தாரென்று மகிழ்ந்து, தாளம் மத்தளம் வீணை முதலிய வாத்யங்களோடு கூகம் கொண்டு, மனிதாசர்களோடு கூடி, மெதுவாய் மெய்துதி கொண்டு வர, பாடலும் கூட வந்தார். வெவ்வேறு த்திலும் பாடுகருள் சேர்ச்சேரவே யிருபாடலையும், அந்தக் ப்ரதேசங்களில் தங்கியிருக்கும் பாடலர்களெல்லாம் பண்டரிநகரப்பெருமானது திருநாமத்தையே சொல்லிக்கொண்டாடுவதையும், மயில்கள் கூடலாய் செய்வதையும், இத்தா மணிகளின் ஒளியைக் கண்டு அன்னப் பறவைகள் பெருமையுள் தருகி வயல்களை கொத்தி யோடுவதையும், காமதேநுக்கள் பசுமபுல்லைக் கறித்து மேய்வதையும், இவைபோன்ற பல விசித்திரங்களையும் கண்டு அதிசயித்து, நகருக்குள்ளே ப்ரவேசித்தனர். அறிய மானிடர்கள் பொன்னும் செய்யப்பட்டும், ரத்நக்கள் இழைத்தும் திருப்பதையும் அரசன் கண்டு மகமபடி ஒளி பரப்புவதையும், ஒரு பக்கத்தில் வேதம் கோஷித்ததையும், ஒரு பக்கத்தில் விமலீர்த்த வோசையையும், ஒரு பக்கத்தில் ஆடல் பாடல்களையும், ஒரு பக்கத்தில் கருடக்கொடிகள் நெருங்கியிருப்பதையும், மத்ரபாகா நதியில் தீர்த்தமாடி தற்குவந்து நெருங்கியிருக்கிற தேவர் கூட்டத்தையும் கண்டு ஆச்சரிய மடைந்து நின்றான். பிறகு, அந்த நெருக்கத்தில் நுழைந்து அரம்பைப் பெண்கள் ஆடல் பாடல் செய்துகொண்டிருக்கிற கருடஸ்தம்பத்தின் சமீபத்தில்வந்து வணங்கி, சந்நிதிக்குள்ளே போகுமபோது, அந்தடமாசித்திகளும் பெண் ணுருக் கொண்டு ஊழியஞ் செய்து கொண்டிருப்பதையும், அவர்களோடு தான் வழி படுகிற காளியும் சேர்ந்து ஊழியஞ் செய்துகொண்டிருப்பதையும் கண்டு, இதென்ன புதுமை யென்று காளியை நோக்கி, என்னால் பூஜிக்கப்படுகிற நீயும் இங்கே வந்து ஊழியஞ் செய்கிறாயே! இதற்குக் காரணம் யாதென்று கேட்க, காளி அரசனை நோக்கி, என்னும் எனக்கு இங்கு வந்து பணிவிடை செய்வதே தொழிலாகும், இவ்விடத்தில் இந்தப் புண்டரீகருடைய ஆசிரமத்தில் கங்கை, யமுனை, சரசுவதி முதலான புண்ய நதிகளும் பெண் ணுருவாய் வந்து ஊழியஞ் செய்து தங்களுடைய பாபங்களினின்றும் விடுபடுவார்கள்; இந்த க்ஷேத்ரத்தின் மஹிமையைச் சொல்ல என்

னல் முடியாதென்றாள். இதைக்கேட்ட அரசன் மகிழ்ந்து சங்கிதிக்குள்ளே போய், தும்புரு நாரதர் இசைபாடி நிற்கிற வாயிலில் காவலராயிருக்கிற ஜய விஜயர்களைக் கண்டு வணங்கி, அதன்பிறகு பகவான் சங்கிதிக்குப்போய், அவரது திவ்ய மங்கள விக்ரஹ தேஜோராசியைக் காணவே கண்கள் கூசி மூடிக் கொள்ளுதலும், தன்னை அழைத்துவந்த வேதியன் கையைப் பிடித்துக்கொண்டு நின்று கண்களை மெல்லத் திறந்து பார்க்கப் பகவானுனவர் தமது திருமேனியின் தேஜோ ராசியை மறைத்து, தமது முன்னைய திருவுருவங் கொண்டு சேவை சாதிக்க, அரசன் கண்களை நன்றாய் விழித்து ஸ்ரீலக்ஷ்மீநாதனைக் கண்களிகூரச் சேவித்து ஸ்தோத்ரஞ செய்து, திருவடி மீது வீழ்ந்துவணங்கி ஆநந்தசாகரத்தில் மூழ்கி, உடல்புளகிக்க, ஆநந்தக் கண்ணீரொழுக நின்று பகவானுடைய திருவுருவை பூலிங்கரூம செய்து, துதித்து, தன்னருகேயிருக்கிற வேதியரை நோக்கி, ஸ்வாமீ! அடியேனைப் புநிதனாகச் செய்தாண்டருளினீர், உமது க்ருபா விசேஷத்தால், சமாராதிகாஹிதனுகிய பண்டரிநாதனைச் சேவித்து என் பவரோகத்தை நிவர்த்தித்துக்கொண்டேன், இப்படி நீர் செய்த நன்றிக்கு அடியேன் என்ன கைம்மாறு செய்வேன் என்று மிகவும் தோத்திரம் செய்து திருவடியில் வீழ்ந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து நின்று, நீர் சொன்னதைப் பார்க்கிலும் இக்க்ஷேத்ரமானது அநேக கோடி பங்கு சிறநதிருக்கவும கணடு களித்தீதன் என்று பலவாறு துதித்து நின்றான். அப்போது, அரசன் பொருட்டுத் தேஜோ மயமாய் விளங்கின பொருள்களெல்லாம் கலிகாலத்துக்கேற்க முன்னிருந்தபடியே ஆய்விட்டன. அதையும் அரசன் கண்டு அதிசயித்து, இதுவும இநதப பகவானுடைய லீலையேயாமென்று நினைத்து, கற்பக மாமிருக்கக் கள்ளியை விரும்புவார்களோ? காமதேநு விருக்க ஆட்டை விரும்புவார்களோ? சூரியன் வீட்டி லேயிருக்க விளக்கைத் தேடுவார்களோ? இவ்வுலகத்தில் ஒருவரும் அப்படி செய்யார். அதுபோல இநதப் பண்டரி நாதனுகிய பெருந்தெய்வமிருக்க, வேறுன அற்ப தெய்வங்களை நான் மனத்தினுலும் இனி ஸ்மரிக்க மாடடேன் என்று மனவுறுதிகொண்டு குன்றமேறநிக் குளிர்மழை காததவனே! திருத்துழாய்மாலையை யணிந்த ஸ்ரீதரனே! திருமறு மணிமார்பனே என்று துதித்து, ஸ்வாமீ! தேவரீரிடத்தில் அடியேன் ஒரு வரம் கேட்டுக் கொள்ளுகிறேன், அதனைக் கருணை செய்ய வேண்டும், என்னென்றால், தேவரீர் இநதத் திருக்கோலத்தோடு எனது பட்டணத்துக் கெழுந்தருளி, அவ்விடத்தில் நிலைபெற்றிருந்து என்னைப் புநிதனகச் செய்தருளவேண்டும என்று ப்ரார்த்தித்தலும், ஸ்ரீபண்டரிநாதன், அரசனே! உன் விருப்பப்படியே நான் வருகிறேன், வரும வழியில் என்னைக் கீழே வைத்தாயானால், நான் உன் பட்டணத்துக்கு வரமாட்டேன், அங்கேதானே நிலைபெறுவேன், அவ்விடத்திலும் உன்னால் ஏதாகிலும் குற்றம் நேரிட்டால் உடனே இந்த க்ஷேத்ரத்துக்கு வந்துவிடுவேன என்று சொல்ல, அரசனும் அப்படியே யாகட்டுமென்று, பகவானைத் திருக்கீதர் மேல் எழுந்தருளச்செய்து, ஆயுதபாணிகளாகிய வீரரைக் காவலராகச் சூழ்

ந்துவரச்செய்து, கொண்டுபோய்த் தன் நகரத்தில் ப்ரதிஷ்டை செய்து சகல விதமான உபசாரங்களோடும் பூஜித்தான். இந்த அரசன் செய்யும் பூஜையை விரும்பி, பண்டரிநாதன் இங்கே சன்நிதி செய்திருக்க, ஆடிமாசத்து ஏகாதசிக்குப் பண்டரி புரத்துக்கு வந்த ஹரிதாசர்களும், மற்றவர்களும் பகவான் சன்நிதியில் இல்லாதிருக்கக் கண்டும், அரசன் கொண்டுபோன னென்று கேள்விப்பட்டும் மனந்தளர்ந்து, உயிர் நீங்கின வுடல்போலச் செயலற்றவராய்த் துன்பக்கடலில் மூழ்கி, கருடஸ்தம்பத்தினருகே வந்துசேர்ந்து, இந்தத் தலத்தை நீங்கேன் என்று புண்டலீகர்க்குத் தக்கவரம் பொய்த்துப்போகும்படி யார் என்ன தீமை செய்தார்களோ! விதியா நகரத்துக்குப் போய்ப் பகவானே இங்கே கொண்டுவரத் தகுந்தவர் யார்? பகவானுக்குப் புண்டலீகர் மேல்கோபமுண்டாயிற்றோ? சாதுஸஜ்ஜநங்கள்மேல் கோபமுண்டாயிற்றோ? பகவான் இந்த க்ஷேத்ரத்தை விட்டு நீங்குவதற்குக் காரணம் யாதோ அறிகிலேம என்றும், விதியா நகரத்துக்குப் போய்ச் சேவிக்க வேண்டுமென்றெண்ணினாலும, அரசன் காவலுக் குட்படிருக்கிறதால் சேவிக்க வொண்ணாதென்றும், இவ்வாறு பலவிதமாய்ப் பேசித் துக்கித்துக் கொண்டிருக்கும் போது, பாரத தாசரானவர் அவர்களை நோக்கி, நீங்கள் மனம் வருந்தவேண்டியதில்லை; நான் விதியாநகரத்துக்குப்போய், ஸ்ரீலக்ஷ்மீநாதனைக் கொண்டு வருகிறேன், அப்படிக் கொண்டு வருவதற்குச் சாத்தியப்படாத பக்ஷத்தில் அவ்விடத்தில்உயிரை விட்டுவிடுகிறேனென்றுசொல்லிப் புறப்பட்டுப்போய், விதியா நகரத்தை யடைந்து, அங்கிருப்பவரை நோக்கி, அரசன் பண்டரிநாதனைக் கொண்டுவருது எங்கே வைத்திருக்கிறனென்று கேட்க, அவர்கள் அரசனுடைய பயத்தினால் சொல்லாதிருந்தார்கள். தாசரானவர் அவர்களிற் சிலரை யேகாந்தமாக அழைத்து இனிய வசநங்கள் சொல்லி, ரஹஸ்யமாய்க் கேட்க, அவர்கள் அரசன் தன் அரண்மனைக் குள்ளே வைத்துப் பூஜித்துக் கொண்டிருக்கிறன், அன்றியும் பூஜை முடிந்தபின் அங்கே ஒருவரும் போக வொண்ணாமல் காவல் வைத்திருக்கிறனென்று சொல்லக் கேட்டு, மனமகிழ்ந்து, அன்றிரவில் எல்லாரும் நித்திரை செய்தபிறகு அரண்மனைக் குள்ளே போக நினைத்துப் போகும்போது, பூட்டப்பட்டிருந்த கதவுகள் பூட்டவிழ்ந்து வழி கொடுக்கப் போய், பாண்டுரங்கனிடத்தை யடைந்து, அந்தப் பெருமானைக் கண்டு வணங்கி, அன்போடு தழுவிக் கொண்டு அழுது, பல வகையாய்த் தோத்திரஞ் செய்து, புண்டலீகர்க் கருள்செய்த ஸ்ரீவைகுண்ட நாதனே, பூர்வ அன்பர்களைவிட்டு நீங்கி இந்த அரசன் மனையில் எழுந்தருளியிருப்பதற்குக் காரணம் யாதோ? புண்டலீகர்க்கு அக்காலத்தில் சொன்ன சொல் பொய்யாய்விட்டதோ? அன்றி, எளியேமாகிய எங்கள் பூஜையை விட்டுச் செல்வனுகிய அரசன் பூஜையை விரும்பி வந்தாயோ, இந்த அரசன் பூஜையில் விருப்பம் அதிகரித்துத்தானே, திரு மகள் முதலாகிய எம்மை யெல்லாம் நீங்கி இங்கே வந்து அமர்ந்திருக்கிறாய் ? நாங்கள் செய்கிற உன் நாம சங்கீர்த்தநம் உன் காதைத் தொளை செய்ததோ ? இரவிலும் நாங்கள்

செய்யும் பஜனையாரவாரத்தால் கண்வளர்தற் கிசையாமல் இங்கே கண்வளர வந்தாயோ? அங்கே வருகிற அன்பரெல்லாரும் உன்னைத் தழுவுவதனால் திருமேனி வருந்தின வருத்தம் நீங்கி இளைப்பாறவோ இங்கே யெழுந்தருளினாய்? என்று இப்படிப் பலவாறு புலம்பக் கேட்ட பண்டாரிகாதன், தாசரை நோக்கி, நான் இங்கே வருவதற்குக் காரணம் நீர் சொன்னவைகளில் ஒன்று மல்ல, இந்த அரசன் அன்பினால் என்னைக் கவர்ந்து வர, அந்த அன்பிற் கிசைந்து வந்தேன் என்று சொல்லி, மேலும், இவ்விடத்தில் என்னைத் தனியே வைத்து இவன் பூஜிப்பதில் எனக்குச் சிறிதும சந்தோஷமில்லை, பண்டாரி புரத்துக்கு எப்பொழுது போவேனென்கிற கவலையதிகரித்து இந்தச் சிறையிலிருக்கிறேன், இங்கு வந்தகாலம் முதல் என் உயிர் உருகுகின்மை யிருக்க, நீங்கள் என்னை நினைத்து முருகி வாதிருந்தீர்கள், நீங்கள் அங்கே வந்து என்னைச் சேவித்துத் தழுவிக்கொள்வதற் கிடமில்லாமல் இங்கேவந்து விட்டேனென்று என்மேல் வெறுப்புண்டானதனாலே வாரா தொழிந்தீர்களாகவேண்டும் என்றுசொல்லிக் கண்ணீர் பெருக்குதலும், பாகதாசரான வர் தாமும் கண்ணீர் பெருகி, பகவானைத் தழுவிக்கொண்டு, என் பின்னே வாருமென்றழைக்க, பகவானுரைத்தான், அப்படியே நானுனக்கு நான் வருகிறேன் என்று சொல்லி, தானது திருக்கழுத்திலிருந்த ரத்ன மாலையைத் தாசர் கழுத்திற் சூட்டி, உன்னிடம் போய்ச் சேர்வாயாகவென்று ஏவினார். தாசரும் அப்படியே யாகட்டுமென்று பகவானை வணங்கி, மனந்தினஞ் ஸ்மரித்துக்கொண்டே வெளியே வந்து தமதிடத்தை யடைந்தார். இவர்வெளியே வந்த வுடனே, கதவுகள் எல்லாம் முன்போலவே பூரணமாய் பூட்டப்பட்டிருந்தன. பிறகு சூரியோதயமாகவே, அரசன் எழுந்து நீராடி வந்து பகவானைப் பூஜித்து, கற்பூரதீபாராதி செய்யுமபோது, இம்மகவன் அருமை முழுதுமிருந்த மணிமாலையைக் காணாமல், வாயிற்காப்பாளரை நோக்கி, பகவானுடைய ரத்ன ஹாரத்தைத் திருடிக்கொண்டு போனவர் யார் சொல்லுங்களென்று கோபிக்க, அவர்கள், யாரெடுத்துக்கொண்டு போனார்களோ எங்களுக்குத் தெரியாதென்றார்கள், அரசன் அவர்களை நோக்கி, நீங்கள் உள்ளே வந்து திருடிக்கொண்டுபோனவனைப் பார்க்காமல் என்ன காவல்செய்தீர்கள்? திருடிக்கொண்டுபோனவன் எங்கே யிருந்தாலும் அவனைத் தேடிக் கண்டுபிடித்துக்கொண்டு வாருங்களென்று கட்டளை யிட, அவர்களும் அப்படியே புறப்பட்டுத் தேடி வந்து, கங்கா ஸ்நானம் செய்து அதின் கரையி லிருக்கிற பாகதாசர் கழுத்தில் மணிமாலை யிருக்கக் கண்டு, அவரை யடித்துப் பிடித்துக் கொண்டு வந்தார்கள். வரும்போது, சிலர், தாசரைப் பார்த்து, இப்படிச்சாது வேஷந் தரிப்பது திருடுதற்கோ என்பார்கள், சிலர், பகவான் திருக்கழுத்தின் மாலையைத் திருடுகிறவன் வேறெருதத் தீமையைச் செய்ய மாட்டான் என் பார்கள். இப்படி வழியிலுள்ளோர் பேசுகிற பலவகையான நிந்தனை வார்த்தைகளைக் கேட்டும் அவற்றைச் சற்றும் மனத்துட் கொள்ளாமல், பகவந் நாம ஸ்மரணை செய்துகொண்டே காவல் வீரர் பின்னே போய் அரசனிடத்

தை யடைந்தார். அரசன் இவரிடத்தில் மணி மாலையைக் கண்டதனால் இவரைக் கழுவேற்றும்படி கட்டளையிட்டான். அரசன் சற்றும் ஆராயாமல் சொன்ன தீர்ப்பின்படி, காவல்வீரர் இவரைக் கழுவேற்றக் கொண்டுபோகையில், இவர் அவர்களை நோக்கி, காவல் வீரரே, என் உயிர் நீங்கவேண்டிய காலம் நேர்ந்தமையால், நான் பகவானைச் சேவித்து வருகிறேன், நீங்கள் அரசனிடத்தில் உத்தரவுபெற்று வாருங்கள் என்று சொல்ல, அவர்களுக்குள்ளே சாதுவாயிருப்பவனொருவன், அரசனிடத்திற்குப் போய், தாசர் சொன்ன செய்தியை யறிவித்து விடைபெற்று, பகவத் ஸந்நிதிக்கு இவரை யழைத்துப் போய் விடுக்க, இவர் பகவானைக் கண்குளிரச் சேவித்து வணங்கி, ஓ பண்டரி நாதனே! நான் ஸ்நாநியாய் உனதினப் பண்டரிபுரத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கலாமென்று எண்ணினேன் என்று அரசனைக் கொண்டு என்னைக் கழுவேற்றுமபடி செய்தாய், இன்னமும் உன்னைக் கொண்டு போக முயல்பவர்களோடு கொன்று இங்கே யிருக்க நினைத்தாயோ என் கழுத்தில் மணிமாலையை யிட்டாய்? உன் நாநிதம் பிரபஞ்சம் நன்றாயிருக்கின்றது, நீயெப்படி செய்தாலும் சரிதான், உனது கிருபை, நீ என்னைத் துக்கமடையாமலிருக்கும் பிறவிகள் எத்தனை யெடுக்கச் செய்தாலும், நான்மாத்திரம் உன்னிடத்தில் அன்பாயிருக்க விடவேண்டுமென்றார். அதன்பிறகு சாஷ்டாங்கமாக தண்டம் சமர்ப்பித்துக் காவல்வீரரோடு வெளியே வந்து கழுமரமிருக்கும் இடத்துக்குப் போகும்போது, அந்த நகரமெல்லாரும் இவரைக் கழுவேற்றுவதைப் பார்க்க வந்தார்கள். காவலரும் இவரைக் கழுமரத்தின் சமீபத்தில்கிடுத்தி ஏற்றுவதற்கு ப்ரயத்நம் செய்யும சமயத்தில், இவர் பகவானைக் குறித்து, ஓ ஜகந்நாதனே! என்னைக் கழுவிலேற்றினதும், என் தலைமேல் இடிவிழச் செய்தாலும், இன்னமும் எப்படிப்பட்ட தண்டங்கள் நேரிடச் செய்தாலும், உன்னை நான் மறக்கமாட்டேனென்று சொல்ல, தயாசாகரமாகிய பகவான் இவரது மனவுறுதியை யறிந்து இவர்க்குக் கருணை செய்யவேணுமென்று திருவுளங் கொண்டு, அந்தக் கழுமரத்தை நோக்க, அது பச்சென்று தளிர் அரும்பித் தழைத்துச் செழித்தது. இதைச் செய்தியைக் காவலரோடி அரசனுக்கு அறிவித்தார்கள். அவன் தக்ஷணமே விரைந்து வந்து கழுமரம் செழித்திருப்பதைக் கண்டு அதிசயித்து, இந்த மஹாதாசரை நாம் நியாயமல் செய்த தண்டனையைப் பொறுக்காமல் ஸ்ரீகண்ணபிரானே இப்படிச் செய்தாரென்று நினைந்து, தாசரை வணங்கி, தேவரீர் விஷயத்தில் அடியேன் பெரும் பிழை செய்தேன், அந்த அபராதத்தைப் பொறுத்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்து அவரைத் தன் அரண்மனைக்குள்ளே யெழுந்தருளி யிருக்கிற பண்டரி நாதன் ஸந்நிதிக்கு அழைத்துவந்தான். வருதலும், ஸ்ரீலக்ஷ்மீநாதனுடைய பண்டரிநாதனது திருவடியில் வீழ்ந்து வணங்கினார். பகவானும் இவரைத் தழுவிக்கொண்டு, ஓ பாகுதாசரே, என்னால் நீ மிகுந்த துன்பமடைந்தாய், இப்பொழுதே என்னைப் பண்டரிபுரத்துக்குக் கொண்டுபோ வென்றார். அதைக் கேட்ட அரசன், அவலோடு வந்து பகவானைத் தொழுது இங்கே அடியே

ஜல் பூஜிக்கும் பூஜையை விரும்பாமல் பண்டரிபுரம் போகத் திருவுளங் கொண்டாய், இதுதானேஉன்திருவுளமென்று சொல்லியழுதான். அவனைப் பகவான் கடாக்ஷித்து, உன்னிடத்தில் எதாயினுங்குற்றம் கேரிட்டால் நான் இங்கே யிருக்கமாட்டே னென்று முன்பே நான் சொல்லியிருந்ததை நினைத்துப் பார், அந்த ஏற்பாட்டின்படியே இப்பொழுது ஹரி தாசனிடத்தில் ஆராயாது செய்த உன்குற்றத்தை க்ஷமாக்கிக்கொண்டு நான் பண்டரிபுரத்துக்குப் போகிறேன்? இதுவரைக்கும் என்னையிவ்விடத்தில் வைத்து ஆராதரம் செய்ததனாலும், எனது நாம ஸ்மரணஞ் செய்ததனாலும் ஒரு துன்பமுமில்லாமல் நீ சுகஜீவியாய் நிர்வாழ்வாயாக வென்று சொல்ல, பாநுதாசர், பகவானே நோக்கி, ஸ்வாமீ, உன்னை நான் எப்படிக் கொண்டு போவேன் என்று கேட்க, ஸ்வாமியும், ஒரு சிறு செப்புக் கொண்டு வாரும் என்று சொல்லி வரவழைத்து, அதில் ப்ரவேசித்தடங்கி இப்போது சுளுவாய்க் கொண்டு போகலா மென்று சொல்ல, தாசரானவர் உலகமுண்ட பெருவாயனுகிய இத்தப் பண்டரி நாதன் இதச் செப்புக்குள்ளே யடங்கின விதம் யாதென்று ஆராயாமல், செப்பை யேந்திக் கொண்டு போகையில், பகவான் தாசரை நோக்கி, பாநுதாசரே, உம்மால் முன்புபோல, பாகவதர் முகம் பார்க்கும்படியான பாக்யம எனக் குண்டாயிற்று, இதுவே சுகமம, எனக்கு எப்பொழுது இன்ப முண்டாகு மென்று நினைத் திருந்தேன், பண்டரி புரத்தி லிருந்து இனி யொரு க்ஷண காலமும பிரியமாட்டேன் என்று சொல்லிக் கொண்டு வரும் வழியில், பத்மாளம் என்னும் ஊரை யடுத்து வரும்போது, தாசரானவர் செப்பைக் கீழே வைத்துவிட்டு, நீராடிக் கொண்டிருந்தார் அப்போது அவர் நீராடிக் கொண்டிருந்த அந்த மடுவின் கரையில் செப்புக் குள்ளே தங்கியிருந்த பாண்டுரங்க பகவானுனவர், அந்தச் செப்பை உடைத்துக் கொண்டு தமது பூர்வ ரூபங் கொண்டு நின்றார் தாசர் நீராடி வந்து, செப்புக் குள்ளே யிருந்த பகவானுனவர் வெளிப்பட் டிருப் பதை நோக்கி, ஸ்வாமீ, இந்த ரூபங் கொண்டதற்குக் காரணம் என்ன வென்றுகேட்க, பகவானுனவர், தாசரை நோக்கி, நீர் பண்டரி புரத்துக்குப் போய், அங்குள்ள சாதுக்களுக்கு இந்தச் செய்தியைத் தெரிவித்தால் அவர்கள் வந்து என்னைத் தேர்மேலேற்றிக் கொண்டு, வாத்ய கோஷத் தோடு போவார்கள் என்று பாண்டுரங்க பகவான் சொல்ல, பாநு தாசர் அப்படியே போய், பண்டரி புரத்திலுள்ள சாதுக்களுக்குச் சொல்ல, அவர்கள், தக்ஷணமே பல வகை வாத்ய கோஷத்தோடும ஸ்வர்ண ரத்ந மயமான தேரோடும் வந்து பகவானைக் கண்டு தழுவிக் கொண்டு, பரமாநந்த பரிதஹ்ருதயராய், பகவானைத் தேர்மேலேற்றிக் கொண்டு, வாத்ய கோஷத் தோடும், ஹரிநாம ஸங்கீர்த்தநத் தோடும் பண்டரி புரத்தை யடைந்து, சந்த்ர பாகா நதியில் நீராட்டி, வேத முழக்கத்துடன் எல்லாச் சடங்கு களுஞ் செய்து, பகவானைத் தேரிலிருந் திறக்கிப் பல்லக்கில் ஏற்றிக் கொண்டு போய்க் கோயிலில் ப்ரதிஷ்டை செய்து, திரு மஞ்சநம் செய்து,

ஆடையாபரணங்களால் அலங்கரித்து, சர்வோபசாரங்களும் செய்து பூஜித்து, ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்து, சாமகானமுழங்க, மங்களாரதி செய்து வணங்கி நின்றார்கள். அப்பொழுது அங்கு வந்திருந்த கல்லோர்க ளெல்லாரும், இந்தப் பாநுதாசரலல்லவோ பாண்டுரங்க பகவான் இங்கே யெழுந்தருளின தென்று அவரைக் கொண்டாடி, அவர் பக்தியைப் புகழ்ந்து, தாம் கொண்ட பெரு மகிழ்ச்சிக்கு அறிகுறியாகச் சர்க்கரை வழங்கி, திவ்ய ப்ரஸாத வகை, பலகார வகை முதலியவைகளையும் ஸ்ரீ கண்ணபிரானுக்குச் சமர்ப்பித்து, பாகவத கோஷ்டிக்கு விநியோகித்து, தாங்களும் ஸ்வீகரித்து, ஸ்ரீலக்ஷ்மீநாதனது திருவடியை வணங்கி நின்றார்கள். அந்தப் பண்டரிபுரத்தி லுள்ளவர் யாவரும், பதினைந்து வருஷம் அரண்யவாசம் செய்து வந்த சக்ரவர்த்தித் திருமகனாகிய ஸ்ரீ ராமபிரானைக் கண்டு திருவயோத்தியை யுள்ளார் சந்தோஷித்தாற்போலப் பாண்டுரங்க பகவானைக் கண்டு சந்தோஷி த்தார்கள் என்று சொல்லி, மேலே, ஏகநாத ஸ்வாமிகளுடைய வைபவத்தை ச் சொல்லத் தொடங்கினர்.

பாநுதாசர் சரித்திரம் முற்றிற்று.

## ஐ-வது ஏகநாத சுவாமிகள் சரித்திரம்.

முற்கதையிற் சொன்ன பாநுதாசர் புதல்வர் சக்ரபாணியார், அவர் புதல்வர் ஞானப்ரகாச சூரியநாராயணர், அவர் மனைவியார் ருக்மிணீ தேவி யார், அவர் திருவயிற்றில் ஒரு புதல்வர் அவதரித்தார். அவர் சாக்ஷாத் ஜகத் குருவாய் விளங்கத் தகுந்தவர், அவருக்குத் தாய் தகுதையர்கள், ஏகநாதர் என்று நாமகரணம் செய்து, அன்போடு வளர்த்து, தகுந்த பருவத்தில் உப நயநமும், விவாஹமும் முதலியவும் முடித்து வைத்து, மிகவும் மன மகிழ்ந்திருந் தார்கள். இப்படி யிருக்குங் காலத்தில், பைடணபுரத்தில், ஞானக் கடலா யிருப்பவரும், தத்தாத்ரேயரை ப்ரஸந்நமாகப் பெற்றவரும், ஜனார்த்தந பண்டிதர் என்னும் பெயருள்ளவருமாகிய ஒரு வேதியரிருந்தார். அவரிட த்துக்கு இந்த ஏகநாதர் போய் அவரை வணங்கி நின்றார். அந்தப் பண்டிதர் இவரைநோக்கி நீ யாரென்றும், இங்கேயென்ன நிமித்தமாய் வந்தாயென்றும், ஒளிக்காமல் உண்மையைச் சொல்லென்றும் கேட்க, இவர், பண்டிதரை நோக்கி, ஸ்வாமீ, அடியேனுக்கு, இந்த ப்ரபஞ்ச விஷயத்தில் சிறிதும் பற்றில்லையாகையால் பரம புருஷார்த்தத்தை விரும்பித் தேவரீருடைய திருவடியை வந்து அடைந்தேன், அடியேனை யாண்டருள வேண்டுமென்று ப்ரார்த்தித்து நின்றார். அப்படி ப்ரார்த்தித்து நின்ற இந்த ஏகநாதரை ஜனார்த்தந பண்டிதர் பார்த்து, இவன் வயது கொஞ்சமாயிருந்தாலும் ஞானம் பெரிதாயிருக்கின்றது என்று ஆச்சரியப்பட்டு, இவருக்கு அபயமதத்து சுக மாக என்னிடத்தில் இருக்கக்கடவாய் என்று நியமித்தருளினர். அவரது

கட்டளையை இந்த ஏகநாதர் சிரஸாவஹித்து, பூர்வகாலத்தில் நாரதமுநிவரு டைய அருளைப் பெறுவதற்கு, தருவர் முயன்றும்போல இரவும் பகலும் இடைவிடாமல் அவர் ஏவின பணிவிடைகளைச் செய்துகொண்டும், உறங் கும்போது கால்வருடிக்கொண்டும், தாம்பூலம் மடித்துக்கொடுத்தும், அவர் உமிழும்போது படிக மேந்தியும், பூஜா த்ரவ்யங்கள், அமைத்தும், அவரு ண்டு சேஷித்த ப்ரஸாதத்தை யுண்டும், இன்னும் பலசுற்றேவல்களைச் செய் தும், குருகுலவாசம்செய்து உடற் குயிர்போலவும் கண்ணுக்கிமை போலவும் அவரதுஉடற் காப்பில்நோக்கம் வைத்தும், அவர் சஞ்சரிக்கும் திடந்தோறும் ஊசியை நூல்தொடர்வதுபோலத் தொடர்ந்துசென்று, அநேகபரத்தையோடு காலங்கழித்தும் வரும்காளில், இவருடைய கல்லொழுக்கம் முதலியவைகளைக் கண்ட ஜநார்த்தந பண்டிதர் மிகவும் சந்தோஷித்து, இவன்மநுஷ்யனல்லன், சிறந்த தேவனே யாமென்று இவர்மீது மிகவும் கருணைசெய்து, ஏக நாதா, இங்கே வா வென்றழைத்து, கால மெல்லாம் எனக்குப் பணிவிடை செய்து கொண்டே யிருந்தால், உன் தாய் தந்தையர்கள் மூபபிறவும் வறுமை யிலும் மனஸ்தாபத்தும் துக்கிப்பார்கள். ஆகையால் அவர்களுக்கு அக்ர வஸ்திரங்கள் கொடுத்துக் காப்பாற்ற வேண்டும் என்றுசொல்ல, அப்படியே, தாய் தந்தையரைக் காப்பாற்றுவதிலும், குருசேவை செய்வதிலும் சோர் விலா திருப்பதைக் கண்ட சற்குரு நாதர், இவரைத் தமது மடத்தில் ஒரு கணக்குவேலை பார்க்கும்படி நியமிக்க, அப்படியே ஒவ்வொரு நாளும் வரவு செலவு கணக்குகள் முறையே பதிவுசெய்து ஆசிரியருக்குக் காட்டி அவரை மனமகிழ்வித்துக் கொண்டு வருங் காலத்தில், ஒருநாள், கணக்கில் ஒரு காசு வித்தியாசமாயிருக்க, அதைக்கண்டு சரிபடுத்த வேண்டுமென்று தீபம் வைத்துக் கொண்டு கணக்கை ஆராய்ந்து கொண்டிருந்தார், அன்சமயில், வெளியே சயனித்துக் கொண்டிருந்த பண்டிதர், கம்பராத்தினிலில் விழித்து, தமக்குச் சமீபத்தில் சயனித்துக்கொள்பவராகிய ஏகநாதரைக் காணுமல் எழு ந்து, இவர் தீபம் கையத்துக்கொண்டு கணக் காரையுமிடத்திற் போய், இவரமி யாமல் இவர்க்குப் பின்புறத்தில்நின்று பார்த்திருந்தார். பிறகு இவர்கணக்குச் சரிப்பட்ட வுடனே, சிரித்துக்கை கொட்டி மகிழ்ந்தார். அதைக் கண்ட ஜநா ர்த்தந பண்டிதர் இவர்க் கெதிரே வந்து நின்று, எதைக் கண்டு நீ சிரித்தா யென்று கேட்க, தலை நிமிர்ந்து குரு நாதரைப் பார்த்து, எழுந்து வணங்கி, கணக்கில் பிசகாயிருந்த ஒரு காசு சரிப்பட்டுவந்த சந்தோஷத்தால் சிரித் தேன் என்றார். இதைக்கேட்ட ஆசாரியர் ஏகநாதர் முகத்தை நோக்கி, ஒரு காசு விஷயத்தில் உன் சித்தம் லயித்ததுபோல ஸ்ரீகண்ணபிரான் திருவடி யிலே லயித்தாலுல், நீ ஜன்ம சாகரத்தைக் கடக்கலாம் என்று சொல்ல, இவர் குருநாதரை நோக்கி, ஸ்வாமீ! இத்தக் கண்ணபிரான் திருநாமத்தைத் தேவரீர் திருவாக்கினுல் கேட்டுக் கிருதார்த்தனுனேன் என்று ஸ்ரீ க்ருஷ்ண நாமத்தில் பதிந்த மனத்தையுடையவராய், ப்ரபஞ்ச விவகாரங்களை மறந்து அத்தச் சற்குருநாதரிடத்தில் உண்மையாய்க் கணக்கை ஒப்பித்தார். அதைக்

கண்டு, குருநாதர், இவன் மனநிலை யுள்ளவனென்றும், இவனுக்குச் சொல்லுவது பயன்படுமென்றும் நிச்சயித்து, இவர் காதில் தாரகமந்திரத்தை உபதேசித்தார். அன்று முதலாக ஏகநாதர் அந்த மந்திரத்தை யநுசந்தித்துக்கொண்டும், குருசேவையும் செய்துகொண்டும் வருவாராயினர். அதைக்கண்ட ஜகார்த்தக பண்டிதர் இவனுக்கு நமதுகுருசேவை செய்விக்க வேண்டுமென் றெண்ணி, இவரை நோக்கி ஏகநாதா! நீ என் குருசேவை செய்யச் செய்வேன், ஆனல் அவர் தமது உரு மாறி வருவார், நான் பேசும் விதத்தினலே நீ அவரைத் தெரிந்துகொண்டு பேதமில்லாமல் வணங்கு, அவர் சாதேஷித்துக் கொடுப்பது எதுவாயிருந்தாலும், அதனே நீ கையா லேற்று அன்போடு உண்ணக்கடவாய் என்று சொன்னர். அதைக்கேட்ட இவர், பாக்யம் என்று சொல்லி வணங்கினர். பின்பு ஒரு தினத்தில் குருநாதர் இவரை யழைத்துக்கொண்டு காட்டுக்குப்போனர். அவ்விடத்தில்தத்தாத்திரேயர் பட்டாணி யுருவங்கொண்டு குதிரைமேலேறிவந்தார். அதை ஜகார்த்தகர் கண்டு, தமது சீடராகிய ஏகநாதரை நோக்கி, என்குருநாதர் வருகிறார், நீபோரென்று சொல்ல, ஏகநாதர் பார்த்து, குதிரைமே லேறிக் கையில் வாள் பிடித்துக் கொண்டு வருகிற ஒரு துருக்கனேத் தமதுகுருவென்று சொல்லுகிறார், இது என்ன புதுமையென்று எண்ணிக்கொண்டே யிருக்கும்போது, அவரும் கிட்டி வந்துவிட்டார்; இவர் அவரைக் கண்டும் வணங்காமல் அவமதித்திருந்தார். பண்டிதர் மாத்திரம் வந்தவரைத் தாழ்ந்து வணங்கினர். வணங்கின ஜகார்த்தகரோடு அருகுயை புத்திரராகிய தத்தாத்திரேயர் மிலேச்ச பாஷையிற் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்த பிறகு, தத்தாத்திரேயர், ஜகார்த்தகரைநோக்கி, எனக்குப் பசியாயிருக்கிறதென்றார். ஜகார்த்தகர், தக்ஷணமே தமது தபோ மஹிமையால் யாகம் செய்த அறு சுவையோடு கூடிய திவ்யான்னத்தை, ரத்ன பாத்திரத்தில்சேர்த்து, குருசிஷ்யர்களாகிய, இருவரும்உண்டார்கள். உண்ணும் போது, ஜகார்த்தகரை நோக்கி, நீதச் சிறுவனுக்கும் நம்மோடுண்ண விருப்ப முண்டானல் அழைக்க லாமே யென்று சொல்லக் கேட்டுக் கொண்டிருந்த ஏகநாதர், இந்தத் துருக்கனேடு எப்படி யுண்பது என்று விசாரித்து விலகிப்போக, த்ரிமூர்த்தி ஸ்வரூபராகிய தத்தாத்ரேயர் உண்டு மறைந்து போனர். மறைந்த பிறகு, ஏகநாதர் தமது குருவினிடத்திற்கு வந்து வணங்கி, குருநாதரே, குதிரைமேலேறி வந்தவரைக் குருவென்றீர், சமீபத்தில் வந்த பிறகு பார்த்தால் அவர் துருக்கர் போலக் காணப்பட்டார்; அவரை வணங்கி அவரோடு உண்டீர், இது என்ன புதுமையாயிருக்கின்றது என்றவுடனே, ஜகார்த்தகர், ஏகநாதா, என் குருநாதர் உருவமாறி வருவா ரென்று முன்பே சொல்லி யிருந்தேன், அதை மறந்து விட்டாய், அவர், அத்திரிப் புதல்வர் அவரைத் தரிசிப்பது யாவருக்கும் துர்லபம்; அப்படி அருமையானவர்வர, அம்ருதத்தைக் கழுதேரென்று நினேப்பதுபோல அவரைச் சாமாந்யராகநினேத்தாய், பலவகையாகிய யோகாப்யாஸம் செய்யலாம், எல்லாப்ராணிகளுடைய ஹ்ருதயத்தையும் அறியலாம், சப்த சமுத்ரங்களே

யும் க்ஷணப்பொழுதில் நீங்தலாம், த்ரிகால வர்த்தமாநத்தையும் அறியலாம், த்ரிமூர்த்தி ஸ்வரூபராகிய தத்தாத்ரேயரைக் காண்பது மிகவும் அருமை. அப்படியிருக்க, அந்த மஹாத்மாவானவர் நமக்கு எளிதாய்க் காட்சிகொடுத்தும், நீ அவரை வணங்கிஉஜ்ஜீவிக்காமல் அவமதித்திருந்தது உனக்குத் தகுதியாகுமோ? இனி யாகிலும் அவர் வந்தால் அவரை வணங்கி அவர் அருள் செய்யப் பெற்றுக்கொள் என்று சொல்ல, இவர் அதற் கிசைந்து, ஜகார்த்தர பண்டிதரோடு மடத்துக்குப் போய் வசிக்குங் காலத்தில், மற்றொரு நாள், பண்டிதர், ஏகநாதா, நீ யின்றைக்கும் என்னோடு காட்டுக்கு வா, என் குரு நாதர் எந்தரூபங் கொண்டுவந்தாலும் நான் எச்சரிக்கிறேன், நீ கண்டுகொள் என்று சொல்லி அழைத்துக் கொண்போனார். போன அத்தக்காட்டில், தத்தாத்ரேயர், பக்கிரிரூபங் கொண்டு, காமதேநுவோடு வந்து சேர்ந்தார். அவரைக் கண்ட ஜகார்த்தர், எதிர் கொண்டு வணங்கதும், அவர் இவரைத் தழுவிக்கொண்டு, உணவு கொடுக்கவேண்டு மென்று கேட்க, இவர், அவர் கொண்டுவந்த காமதேநுவின் பாலிக்கறந்து, அதில் பாகஞ்செய்தஉணவைக் கொடுக்க, அவர் இவரைக் கூடவைத்துக்கொண்டு உண்ணும்போது, இந்தச் சிறுவனைச் சேர்த்துக்கொண்டு உண்போம, அவனையழையும் என்றுசொல்ல, ஜகார்த்தர ஏகநாதரை நோக்கி, நான் என்குருவென்று முன்னேசொன்னவர் இவர்தாம் என்று குறிப்பா யறிவிக்க, ஏக நாதர் நெருங்கி வந்து நிற்க, தத்தாத்ரேயர், இவரை நோக்கி, உண்ண வா வென்றழைத்தார், அப்போது இவர் அஞ்சி நின்று, ஸ்வாமீ, தேவரீர் ஸ்ரீ ஹஸ்தத்தால் ப்ரஸாதம் தந்தருளுவீர் என்று சொல்ல, அப்படியே தமது செவ்வாயிற் பரிசித்த வுணவைத் தமது திருக்கையாலேந்தித் தருகையும், ஏகநாதர் அன்போடு முன்றானையில் வாங்கிக்கொண்டார். பிறகு இருவருமுண்டு முடிந்தது. அப்போது தத்தாத்ரேயர், இந்தச் சிறுவன் யாரென்று ஜகார்த்தரைக் கேட்க, அவர் இந்த ஏகநாதரை அருகேயழைத்து, குருநாதர் திருவடியில் கிடத்தி, இவன் என்னை ஆசரயித்தவன் என்று சொல்ல, தத்தாத்ரேயர் இவரைக் கடாக்ஷித்து, அருளோடு சொல்லுகிறார். எப்படி யென்றால், வேத சாஸ்த்ரங்களாகிய பாற் கடலைக் கடைந்தெடுத்த ஸாராம்ஸமான வெண்ணெயென்று சொல்லத்தகுந்த ஸ்ரீ பாகவதத்தின் அர்த்தம் ஆழமா யிருப்பதனால், அதை ப்ராக்ருத பாஷையில் தெளிவாய்ச் செய்யவும், ஸ்ரீ ராமயணத்தையும அப்படியே செய்யவும், ஸ்ரீ ஹரிகீர்த்தநங்கள் செய்யவும் இவன் சமர்த்தனாகக் கடவனென்று இவர் தலைமேல் கையை வைத்து ஆசீர்வதித்துப் போனார். அதைக் கண்ட ஜகார்த்தர் ஏகநாதரை நோக்கி, என் குரு நாதர் கொடுத்த ப்ரஸாதத்தை யென்ன செய்தா யென்று கேட்க, நிலத்தின்மே லெறிந்து விட்டேனென்று சொல்ல, ஜகார்த்தர் மனம் வருந்தி, தமது திருவாயிலிருந்த தம் பலத்தையுமிழ்ந்துகைக்கொண்டு ஏகநாதர்வாயிலிட்டுக்கைப்பற்றிக்கொண்டு மடத்துக்குப் போய், ஹரி நாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டு, இருவரும் மிகவும் ஒற்றுமையா யிருக்குங் காலத்தில், ஒரு நாள் ஜகார்த்தர், இனி

இவனிடத்தில் நாம் வேலை வாங்குதல் தகாதென்று ஆலோசித்து, சீடரை நோக்கி, இனி உன் ஊருக்குப் போய் இல்லறத்தில் அமர்ந்திருந்து, நீராடல் முதலிய நித்ய கர்மங்களை நடத்திக்கொண்டு, மெய்ஞ் ஞானத்தையடைந்தாலும், நித்ய கர்மத்தையும் ஹரி பூஜனையையும் விடாதிருப்பாயானால், ஸ்ரீ கண்ணபிரான் உனக்கு ப்ரத்யக்ஷமாய் வந்து க்ருபை செய்வார் என்று அனுபோடு வாழ்த்தி அபயங் கொடுத்து அநுக்ரஹஞ் செய்து அனுப்ப, ஏகநாதர் தமதுவூரில் வந்து சேர்ந்து தமது மனைவியிற் பரிவேஷித்துத் தாய்தக்கையரை வணங்க, அந்த பூதுலமைப் பருவமுள்ள தாய் தக்கையர் இவரை வாரி மார் போடணைத்து, உச்சி மோந்து பேராசுக்த மலடங்கிருந்தார்கள். பிறகு இவர் தமது ஆசாரியர் சொன்னபடியே, மாதா பிதாக்களுடைய சேவை, நித்ய கர்மானுஷ்டானம், சர்வ பிராணிகளிடத்திலும் அருளுடைமை முதலிய சற் குணங்களோடு கூடி, தம தகத்தி லெழுந்தருளி யிருக்கிற பாண்டுரங்க பகவானைப் பூஜித்துத் தோத்திரம் செய்து வலம்வந்து, துளசி தீர்த்தத்தை யெல்லார்க்கும் கொடுத்துத் தாமும் ஸ்வீகரித்து, பிறகு வேதியரோடிருந்து அமுது செய்து முடிந்த பிறகு, புராண காலக்ஷேபமும் ஹரிகாமலைகீர்த்தனமும் செய்து, கண்ணுறங்குவார் ராயினர். இப்படி நடக்குங் காலத்தில், இவருடைய செய்கையை யறிந்தவரெல்லாரும், இவர் அவதார புருஷரே யன்றி சாதாரண மனிதரல்லரென்றுசொல்ல, சற்குருநாதருடைய திரு வருளால் அநேக கவிகளைபுனைந் செய்தார். அவற்றைக் கண்ட கேட்ட சாதுக்களெல்லாரும் மிகவும் புகழ்ந்து கொண்டாடினார்கள். இப்படியிருக்க, ஒரு நாள் ஸ்ரீ ராமபிரான் இவருடைய கனவில் வந்து, வால்மீகி முனிவர் வட மொழியில் செய்த ஸ்ரீ ராமாயணம விரிவாயும் பொருளறிதல் அருமையாயும் இருப்பதால், அதை உலகுத்தார் எளிதி லறியுமபடி ப்ராக்ருத பாஷையிற் செய்யக்கடவா யென்று நியமித்து மறைய, உடனே கண்விழித் தெழுந்து, வடமொழி இராமாயணத்தின் பொருள் முழுதும் ஆராய்ந்து மனத்திலமைத்துக்கொண்டு, ப்ராக்ருத மொழியிற் செய்துவருங் காலத்தில், இவர் வீட்டிற்கு அயல் வீட்டுக்காரன், வடமொழி இராமாயண மிருக்க, இவன் இப்படிச் செய்வதில் என்ன ப்ரயோஜநமென்று இகழ்ந்து வருவானாயினன். இப்படி யிருக்க, இவர் செய்யும் ப்ராக்ருத ராமாயணத்தில் பகவானவர், மிகவும் விருப்பங் கொண்டு, பின்னும் ஒரு நாள் இவரது கனவில் வந்து, இவரைத் துயிலெழுப்பி, இராமாயணத்தைப்பாடிமுடிக்கக்கடவா யென்றும், உன் மதுரமொழிகளைக் கேட்க விருப்பமுடையேன் என்றும் சொல்லி மைக்கூடும், எழுதுகோலும் அருகில் வைத்து மறைய, ஏகநாதர், அருகிலிருந்த எழுது கருவிகளைக் கண்டு, இவற்றைக் கொண்டு வந்து இங்கே வைத்துப் போனவர் பகவானே யாகவேண்டு மென்று நிச்சயித்து, இராமாயணத்தை யெழுத முயலுங் காலத்தில், மஹேந்திரகிரியிலிருந்து ஸ்ரீ ஹநுமசேயர் கடலைத் தாண்டுகிற கதா சந்தர்ப்பத்தில், அவரது வேகத்தை மனத்திற் கொண்டு அவசரமாய்ப் பாய்ந்து, அயல் வீட்டின் முற்றத்தில் விழுந்தார். இவர் விழு

ಕ್ತ ಲೀಲೆಯೈ ಕೇಟ್ಟು ಅಯಲ್ ವೀಟ್ಟುಕ್ಕಾರನ್ ಎಳುನ್ತು ವನ್ತು ಇವರ್ ಮೂರ್ಚ್ಚಿತ್ತು ಕ್ ಕಿಟಪ್ಪತೈಕ್ಕಣ್ಡು, ಇವರ್ ಕೈಯಿಲಿರುನ್ತ ಕಾಕಿತತ್ತೈಪ್ ಪಟಿತ್ತು, ಅತುಮಾನ್ ಕಟಲೈತ್ ತಾಣ್ಟುತಟ್ಕಾಕಪ್ ಪಾಯ್ನ್ತ ಸನ್ತರ್ಪ್ಪ ಮಿರುಕ್ಕಕ್ ಕಣ್ಟು, ಇವರ್ ತಮ್ಮೈ ಅತುಮಾನುಕಪ್ ಪಾವಿತ್ತುಪ್ ಪಾಯ್ನ್ತಾರೆನ್ರರಿನ್ತು, ಇವರೈ ನೋಕ್ಕಿ, ನೀರ್ ಇಙ್ಕೇ ವನ್ತು ವೀೞುನ್ತತಟ್ಕುಕ್ ಕಾರಣಂ ಯಾತೆನ್ರು ಕೇಟ್ಕ, ಇವರ್ ಮಱುಮೊೞಿ ಸೊಲ್ ಲಾತಿರುಕ್ಕ, ಅವನುಕ್ಕು ಇವರ್ಮೀತು ಇರಕ್ಕ ಮುಣ್ಟಾಕಿ, ಇವರ್ ಅವತಾರ ಪುರುಷ ರೆನ್ ರರಿನ್ತುಕೊಣ್ಟು,ಇವರೈ ಈಙ್ಕ ನಾಂ ಇಕೞ್ನ್ತೋಮೆನ್ರು ಪರಿತಪಿತ್ತು ಇವರೈ ಯೆಟುತ್ತು ಮಾರ್ಪೋ ಟಣೈತ್ ತಕ್ ಕೊಣ್ಟು ವನ್ತು ಇವರ್ ವೀಟ್ಟಿಟ್ ಸೇರ್ ತ್ತಾನ್. ಸಱ್ಱು ನೇರತ್ತಿಲ್ ಇವರ್ ಮೂರ್ಚ್ಚೈ ತೆಳಿನ್ತಿರುನ್ತಾರ್. ಅತೈ ಯಱಿನ್ತ ಅಯಲ್ ವೀಟ್ಟುಕ್ಕಾರನ್ ವನ್ತು ಇವರೈ ವಣಙ್ಗಿ, ಅಱಿ ವಿಲ್ಲಾತವನುನ ಎನ್ನು ಟೈಯ ಪಿೞೈಯೆಪ್ಪೊರುತ್ತರುಳವೇಣ್ಟುಮೆನ್ರು ಪ್ರಾರ್ತ್ತಿತ್ತುತ್ ತನ್ವೀಟ್ಟು ಕ್ಕುಪ್ ಪೋಯ್ವಿಟ್ಟಾನ್. ಪಿಱಗು ಕೊಞ್ಚ ಕಾಲಙ್ ಕೞಿತ್ತು, ಒರು ನಾಳ್ ಇವರಿಟ ತ್ತಿಲ್ ಉಪದೇಸಂ ಪೆಱವೇಣ್ಟುಮೆನ್ ರೆಣ್ಣಿ, ಇವರ್ ತಿರುವಾರಾತನೞ್ ಸೆಯ್ ಯುಙ್ ಕಾಲತ್ತಿಲ್ ವನ್ತು, ತೇವಿರ್ ನುಟೈಯ ಮಹಿಮೈಯೈ ಯಱಿಯಾಮಲ್ ಇಕೞ್ನ್ತಿರು ನ್ತ ಕುಱ್ಱತ್ತೈಪ್ ಪೊರುತ್ತ, ಎನಕ್ಕು ಉಪದೇಸಂ ಸೆಯ್ತರುಳವೇಣ್ಟುಮ್ ಎನ್ರು ಪ್ರಾರ್ತ್ತಿಕ್ಕ, ಇವರ್ ಸಱ್ಱುನೇರಂ ಮೌನಮಾ ಯಿರುನ್ತ, ಅವನೈ ನೋಕ್ಕಿ, ಉನಕ್ಕುತ್ ತಕುನ್ತ ಕುರುವೈ ಯಟೈನ್ತ ಉಪದೇಸಂ ಪೆಱಕ್ಕಟವಾ ಯೆನ್ರಾರ್. ಅಪ್ಪಟಿಚ್ ಸೊಲ್ಲಿಯುಂ ಅವನ್ ಕೇಟ್ಕಾಮಲ್ ಉಮ್ಮಿಟತ್ತಿಲಲ್ಲಾಮಲ್ ವೇರೊರುವ ರಿಟತ್ತಿಲ್ ನಾನ್ ಉಪದೇಸಂ ಪೆಱಮಾಟ್ಟೇನ್ ಎನ್ರು ಪಿಡಿವಾತನ್ ಸೆಯ್ವತೈಕ್ ಕಣ್ಟ ತಾಸರ್, ಇವನ್ ಕಲ್ಲವ ನಲ್ಲವೆನ್ ರುಟ್ಕೊಣ್ಡು, ಕಾಳೈಕ್ಕುಚ್ ಸುಧಿಕ ಮಾತಲಾಲ್, ನೀ ನೀರಾಡಿ ವಾ ವೆನ್ರಾರ್. ಅವನ್ ಅಪ್ಪಟಿಯೇ ಯಾಕಟ್ಟು ಮೆನ್ರು ಪೋನ ಪಿಱಗು, ತಮತು ವೀಟ್ಟಿ ಳುಳ್ಳವರ್ಕಳೈಪ್ ಪಾರ್ತ್ತ, ಕಾಳೈಕ್ಕು ಶ್ರೀಲಕ್ಷ್ಮೀ ಕಾತನುಕ್ಕುತ್ ತಿರುಮಞ್ಚನ ತೀರ್ತ್ತಮ್ ಕೊಣ್ಡುವಾ ವೇಣ್ಡಿಯತಿಲ್ಲೈ, ನಾನ್ ಸೊ ನ್ನನುಮ್ ನೀಙ್ಕಳ್ ಕೊಞ್ಚಂ ತಾಮತಪ್ಪಡುತ್ತುಙ್ಕಳ್ ಎನ್ರು ವಱ್ಪುಱುತ್ತಿಚ್ ಸೊ ಲ್ಲಿ, ಮಱು ನಾಳ್ ಕಾಲೈಯಿಲ್ ಎೞುನ್ತಿರುನ್ತು, ನೀರಾಡಿ, ತಿರುವಾರಾತನಂ ಸೆಯ್ಗಿಱ ಪೋತು, ಅಯಲ್ ವೀಟ್ಟುಕ್ಕಾರನ್ ವನ್ತು ವೀಟ್ಟಿ ಳುಳ್ಳವರ್ಕಳೈ ನೋಕ್ಕಿ, ಇನ್ನ ಮುಂ ಪಕವಾನುಕ್ಕುತ್ ತಿರುಮಞ್ಚನ ತೀರ್ತ್ತಮ್ ಎನ್ ಕೊಣ್ಡುವರಾಮ ಲಿರುಕ್ಕಿನ್ರೀರ್ ಕಳ್? ಕೊಣ್ಡುವಾರುಙ್ಕಳೆನ್ರು ಸೊಲ್ಲ, ಅವರ್ಕಳ್ ಕೊಣ್ಡುವರಾಮ ಲಿರುನ್ತು ವಿಟ್ಟಾರ್ಕಳ್. ಪಿಱಗು ಪಕವತ್ ತಿಯಾನತ್ತಿಲಿರುನ್ತತಾಸರ್ ಕಣ್ಡಿಱನ್ತ,ಎತಿರೇಱಿಪ್ಪ ವನೈಪ್ ಪಾರ್ತ್ತು, ಇವನತು ನಟ್ಕುಣತ್ತೈ ಯಱಿವೋಮೆನ್ರು ನಿನೈತ್ತು, ಇಙ್ಕೇ ಪುಣ್ಣಿಯ ತೀರ್ತ್ತಙ್ ಕೊಣ್ಡುವರುವೋರ್ ಒರುವರು ಮಿಲ್ಲೈಯೋ ವೆನ್ರು ಕೇಟ್ಕ, ವೀಟ್ಟಿ ಳುಳ್ಳವರ್ಕಳುಮ್ ಅಯಲ್ ವೀಟ್ಟುಕ್ಕಾರನುಕಿಯ ಇವನುಮ್ ಸುಮ್ಮಾ ಇರುಕ್ಕ, ತಾಸರ್ ತಾಮೇ ಒರು ಸೆಪ್ಪುಪ್ ಪಾತ್ತಿರತ್ತೈ ಯೆಟುತ್ತುಕ್ ಕೊಣ್ಡು ಪೋಯ್ ನೀರ್ ಕೊಣ್ಡು ವನ್ತು ಪೂಜೈ ಸೆಯ್ಯತ್ ತೊಟಙ್ಗುಮ್ಪೋತು, ಅವನ್ ವನ್ತು, ಸ್ವಾಮೀ, ಅಟಿಯೇನುಕ್ಕು ಉಪದೇಸಂ ಸೆಯ್ತರುಳ ವೇಣ್ಡು ಮೆನ್ರುನ್. ಅಪ್ಪೋತು ತಾಸ ರಾನವರ್ ಅವನೈ ನೋಕ್ಕಿ, ತಿರುಮಞ್ಚನ ತೀರ್ತ್ತಙ್ ಕೊಣ್ಡುವರುವೋ ರಿಲ್ಲಾಮೈ ಯಾಲ್ ನೇರಮಾಯಿಱ್ಱು, ಉಪದೇಸತ್ತುಕ್ಕೆನ್ರು ನಿಚ್ಚಯಿತ್ತು ವೈತ್ತ ಸುಪಮುಹೂರ್ ತ್ತಮುಂ ಪೋಯ್ವಿಟ್ಟತು, ಇನಿ ಯೆನ್ನಸೆಯ್ಯಲಾ ಮೆನ್ರು ಸೊಲ್ಲ, ಅವನ್

வீட்டுக்குப் போய்விட்டான். பிறகு ஏகநாதர் தமது பூஜையை நிறை வேற்றினர்.

இப்படி யிருக்கும் காலத்தில், ஜகார்த்தக பண்டிதர் இவரை யழைத்து முகத்தை கோக்கிச் சுலீபமலையென்று ஒன்றுண்டு, அதன் பக்கத்தில் சூரிய தீர்த்தமென்று ஒரு தீர்த்த முண்டு, அதனருகே மகோஹரமான மார்க்கண்டேயாசிரமமென்று ஒன்றுண்டு, அங்கே அநேகம் சாதுக்கள்வந்து திருமாலே வணங்கி மோக்ஷ மடைகிறார்கள். அத்தப் புண்ய க்ஷேத்ரத்தை யடைந்து, அத்தச் சூரிய தீர்த்தத்தில் நீராடி, பாண்டு ரங்கனே த்யாநித்துக்கொண்டிருப்பாயாஞல், அந்த விட்டலப் பெருமானுடைய சேவை உனக்கு எளிதாகக் கிடைக்கும், அப்படி அந்தவிட்டலப்பெருமானுடைய சேவைகிடைத்த பிறகு என்னிடத்திற்கு வாவென்று சொன்னர். அப்படியே இந்த ஏகநாதர் சுலீப மலையை யடைந்து சூரியதீர்த்தத்தில் மூழ்கிக் கிழக்கு முகமாயிருந்து, ஏகாக்ரசித்தராய்ப் பகவத்யாகம் செய்துகொண்டிருக்கும்போது, அத்தமலையிலுள்ள ஒரு பாம்பு வந்து இவரைச் சூழ்ந்த கொண்டு, இவரது திருமேனி ஸ்பரிசத்தால் அதன்கொடுமை நீங்கி, இவருக்குத் தன்படம்விரித்துக் குடைபிடித்துக்கொண்டிருந்து, இவர் த்யாகம் விட்டெழுந்தவுடனே போய்விட்டது. அது முதலாகத் தினந்தோறும் அப்படியே செய்து வந்தது. இப்படியிருக்க, அந்த மலையின் அடிவாரத்தி லிருப்போனொருவன், அவ்விடத்தில் வந்து தவஞ் செய்வோ ரெல்லாருக்கும் தன்னு யிரன்ன வுதவிசெய்வோனதலால் இந்த ஏகநாதருக்குத் தினந்தோறும் பால் கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருக்க, இவர் வாங்கியுண்டு தாமதம் தணிந்திருப்பார். ஒருநாள் இவர் யோக நிஷ்டையிலிருக்குமபோது பால் கொண்டு வந்து இவர் எழுந்திருக்குமளவும் காத்துக்கொண்டிருந்தான். அப்போது, வழக்கம் போலப் பாம்பு வந்து தன் படத்தை விரித்துக் குடையாகப் பிடித்துக்கொண்டிருப்பதை அவன் கண்டு பயந்து, ஐயோ, இந்தப் பரம சாதுவைத் தீண்டித் தீங்கு செய்யுமே யென்று அநுதபித்து, பகவானே ப்ரார்த்தித்து, இந்தச் சாதுவுக்குத் தீங்கு நேரிடவொட்டாமல் காத்தருளவேண்டுமென்று முறையிட்டலறினன். இந்தச் சதத்தத்தைக் கேட்ட தாசர் அவனே நோக்கி, நீ யேன் கூவினை யென்று கேட்க, அவன் பாம்பின் வரலாற்றைச் சொல்ல, தாசர், இது ஒரு ஆச்சரியமோ! ஸ்ரீஹரிபாத த்யாகம் செய்வோரைக் கண்டால் யமனும் அஞ்சுவான் என்று சொல்லி அவனே யனுப்பி விட்டு, பகவானே ஸ்மரித்து, ஓ பண்டரி நாதா, உன்னுடைய திருவருளுருவத்தைக் காணவேண்டுமென்கிற எண்ணங் கொண்டு இங்கே வந்து தங்கி யிருக்கிறேன்; என் எண்ணம் நிறைவேறும்படி க்ருபை செய்யவேண்டும் என்று பல வகையாய்த் தோத்திரம் பண்ணி, அனலி லிட்ட வெண்ணெய்போல மன முருகி நிற்க, விட்டலப் பெருமானவர், இவரது வேண்டுகோளுக் கிரங்கி, சகுண ரூபங் கொண்டு, பஞ்சாயுதம் பீதாம்பரம் முதலியவற்றோடும் இவருக்கெதிரே யெழுந்தருள,

இவர்எழுந்து பகவானைத் திருவடி தொழுது நின்றார். அப்படி நின்றவரைப் பகவானவர் எடுத்து மார்போடணைத்துத் தழுவி, உன் விருப்பத்தின்படியே உனக்கு ப்ரத்யக்ஷமானேன். இதுவுமன்றி, உன்னை எந்தக் காலத்திலும் ஒரு துன்பமு முண்டாகாமல் காப்பாற்றுவேனென்று சொல்லியதை, பால் கொண்டு வந்து அயலில் நிற்பவன் கண்டு, தவயோகங்களில் ஒன்றுஞ் செய்யாமல் ஏகநாதருக்குப் பால்கொண்டு வந்து கொடுத்துக்கொண்டிருந்த புண்ணிய விசேஷத்தால், வேதங்களாலும் அளவிடப்படாத பகவானைக் கண்டு களிக்கலாயிற் றல்லவாவென்று, அன்போடு பகவானை வணங்கித் தோத்திரிக்க, பகவானும் அவனைக் கடாக்ஷித்து மறைந்து போனார், பிறகு பால் கொண்டு வந்தவன், பாலை ஏகநாதருக்குக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான். பிறகு ஏகநாதர் பேராசுத்த மடைந்து, தமது ஆசிரியராகிய ஜனார்த்தன பண்டிதரிடத்திற் போய், அவருடைய திரு வடியை வணங்க, அவரும் இவரை மார்போடணைத்துத் தழுவினார். தழுவின பிறகு, வீடுக்குப் போய்வாருமென்று விடை கொடுக்க, இவர் தமது ஊருக்குப்போய் ஸ்ரீஜநார்தாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருக்குங் காலத்தில், பண்டரிபுரத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீகண்ணபிரான் இவரிடத்திற்குப் போகவேண்டுமென்று திருவுளங் கொண்டு, ஒரு வேதியனுருவங் கொண்டு வந்து, தேவகிரியி லுள்ளோரை நோக்கி, ஒரு வேற்றூரிலிருந்து வேதியர் வந்தால் அவர்களுக்கு அகமிடத்தகுந்தவர்களாய் இவ்வூரில் யாரிருக்கிறார்கள் என்று கேட்க, அவர்கள் ஏகநாதரைச் சுட்டிக் காட்ட, அவரிடத்திற்குப் போய், ஸ்வாமி, எழுபது யும் பரதேசியாயிருக்கிற நான், இவ்வூரில் ப்ரபலமான அக்ரஹாரஞ் செய்வதில் நீர் மிகவுஞ் சிறந்தவ ரென்று கேள்விப்பட்டு வந்தேன், எனக்கு அக்ரஹ வஸ்திரங் கொடுத்துக் காப்பாற்றினால், எப்பொழுதும் பணிவிடை செய்துகொண்டு இங்கேதானே யிருந்துவிடுவேனென்றார். அது கேட்ட ஏகநாதர், நீர் எங்கேயிருந்து வந்தீர், உமது பெயர் யாது என்று வினவ, அந்த வேதியர், எனக்கு ஒரு ஊரென்ப தில்லை, என் பெயர் கண்டியா, என் மனத்துக் கினைந்தவர் யார் என்று தேடிவந்தேன்; தேடின விடங்களில், ஹரிபக்தராகிய வும்மைப்போலப் பெருங் குண முடையா ரொருவரையுங் கண்டிலேன் என்று சொல்லக் கேட்ட ஏகநாதர், பகவானுகிய வேதியரை நோக்கி, உமக்கு இங்கே யிருக்கச் சம்மதமானால் இருக்கலாமென்று சொல்ல, ஸ்ரீகண்ண பிரான் அதற்கினைந்து அவர் வீட்டு வேலைகளைச் செய்ய விருப்பங்கொண்டு அவர் வீட்டிற் பிரவேசித்து, தினந் தோறும் காலையி லெழுந்து கோமயம் கொண்டு வந்து குவித்தல், குப்பையை விளக்கி யகற்றுதல், மெழுகுதல், பாத்திர வகைகளைச் சுத்தி செய்தல், வஸ்திரங்கள் துவைத்தல், காவடிநீர் கொண்டு வருதல், சந்தன மிழைத்தல், மலர் தொடுத்தல், விளக்கேற்றல், இவரது தேவியாரிடும் பணிவிடைகள் செய்தல், தயிர் கடைதல், வெண்ணெய் திரட்டி யெடுத்தல், போஜன வகைகளை யன்போடு செய்து நிறைத்தல், போஜன சாலையைச் சுத்தப்படுத்துதல், தாசரது தேவியரை இன்ன

மென்ன வேலை செய்ய வேண்டு மென்று கேட்டல், பூசை முடிந்த பிறகு வருகிற வேதியரோடு கூடியிருந்து தாசரு முண்ணும்படி அமுது பரிமாறுதல், உண்ட பிறகு வாய் பூசும் நீர் முதலியவை கொடுத்தல், சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் கொடுத்தான பின்பு, எச்சிலிலைகளைக் கொண்டுபோய் வீட்டுக்கு வெகு தூரத்திற் சேர்த்தல், உண்ட விட மெல்லாஞ் சுத்தி செய்தல், இந்த வேலைகளெல்லாம் முடிந்தபிறகு, தமது கால் கைகளைச் சுத்திசெய்து கொண்டு, தாமும் அமுது செய்து, பிறகு இரவில் நடக்கவேண்டிய புராண காலக்ஷேபம் ஸ்ரீஹரி பஜனை முதலியவைகளுக்கு வேண்டியவற்றையும் அமைத்து, அவை முடிந்த பிறகு படுக்கை யமைத்து, இன்னமும் வேண்டுவனவாகிய குற்றேவல்களையுமசெய்து, தாசர் கண்ணுறங்கின பிறகு தாமும் உண்டு உறங்க விரும்புவார். இந்தவிதமாகத் தினந் தோறும் செய்து வருங் காலத்தில், தாசருடைய தாய்தகப்பனையர் பரமபதமடைந்தார்கள். அவர்களுக்குச் சரம கைங்கர்யங்க ளெல்லாங் குறை வற நடத்தி, ஒரு வருடம் கழித்து, பிதிர்த்தினம் வர, தாசர், அவ்வூரிலுள்ள வேதியரிடத்திற் போய் நாளை எமது வீட்டில் சிரார்த்த மாயையால், போஜனத்துக்கு வாருங்கள் என்று சொல்லி விடை வந்து சேர்ந்திருந்தார். மறுநாள் விடியற்காலத்தில் எழுந்து தோடி, நித்திய கர்மங்களை முடித்து, பூஜையையும் நிறைவேற்றி, மேலுப்பரிகையி லிருந்தார். அப்பொழுது வீதியில் ஒருபுலையனும், புலைச்சியும் வந்து குப்பை கூட்டும்போது, இவர் வீட்டில் வேதியர் பொருட்டுச் சமைக்கிற அக்காரம், பதார்த்த வகைகள் இவற்றின் நறுமணத்தைப் புலைச்சியறிந்து தன் கணவனுக்குச் சொல்ல, அவன், பெண்ணே, அந்த அக்காரங்கள் வேதியர்க்கல்லது நமக்கெப்படி கிடைக்கும்? கிடைத்தாலும் உண்ணத்தகாது, வேதியருண்ட எச்சிலாயினுங் கிடைத்தால் நாம செய்த புண்ணியம் என்று சொல்லி, அந்த எச்சிலும் சிரார்த்த தினத்திலல்லது மற்ற நாட்களில் கிடைப்பது அருமை, அந்தஎச்சிலிலைகளையும் கண்ணுக்குத் தெரியாமல் நிலத்திற் குழி தோண்டி, அதிற் கவிழ்த்து மூடுவார்கள், நீ யேன் வீணாகப்படுகிறாயென்று சொல்லுவதை உப்பரிகையிலிருந்தவர் கேட்டார். கேட்டுக் கீழே யிறங்கி வந்து தமது மனைவிக்கு இதைச் செய்தியைச் சொல்லி, அவர்களுக்கு இப்போது சமைத்த அந்தத்தை யிட்டால் நலமா என்று சொல்ல, தேவியாரும், அப்படியே செய்யலாம், ஆனால் அவ்விரு வருக்கு மிட்டு மிருந்ததை வேதியர்க் கிடலாகா தாகையால் அவரது சுற்றத்தா ரெல்லாரையும் வரவழைத்து இப்பொழுது சமைத்ததை யெல்லாம் அவர்களுக்குக் கொடுத்து விட்டு, வீடு முதலானவற்றைச் சுத்தி செய்து, புதிதாகச் சமைத்து வேதியர்க்குப் படைக்கலாம் என்று சொல்ல, அது சரியான காரியம் என்று ஏகநாதர் அப்படியே நடத்திவிட்டார். உண்ட புலையர்கள் மிகுதியாய்க் களித்து வாழ்த்திப் போனார்கள். பிறகு வீடுவாசல்முழுதும் சுத்திசெய்து, முன்போலவே புதியதீர்த்தம் கொண்டுவந்து சமையல் செய்வித்து அமைத்துவைத்துக்கொண்டு, வேதியர்க்காக எதிர் பார்த்திருக்கையில், வேதியர் வந்து இப்படி யெங்களை வரச்

சொல்லி, எங்கள் பொருட்டுச் சித்தப்படுத்தின போஜநத்தைப் புலையர்க் கிடுவது நீதியோ? அந்தப் புலையர்தாமோ உன் பிதிரர் என்று பலவகையாய்க் கடிந்து பேச, ஏகநாதர் அவர்களை நோக்கி, உங்களுக் கென்று சமைத்த போஜந வகைகளின் நறுமணத்தை வீதியிற் குப்பை விளக்குகிற புலையனும் புலைச்சியும் கந்தித்து, இந்தப் போஜந வகைகள் நமக்கெப்படிக் கிடைக்கு மென்று பேசிக் கொண்டார்கள். அதை நான் கேட்டு, இந்தப் புலையர் கந்தித்த இந்த போஜந வகைகளை வேதியர்க்குப் படைப்பது தரும மல்லவென்று அவர்களுக்கே உபயோகப்படுத்தி விட்டு, முன்போலவே வீடு வாசல்களைசுத்திசெய்து, நூதந நீர்த்தங்கொண்டுவந்து சமையல்செய்து சித்த மாயிருக்கின்றது. இப்படிசெய்ததிலும் குற்றமிருந்தால் க்ஷமித்துச்சிரார்த்த கர்மத்தை நிறைவேற்றி யருளவேண்டுமென்று சொல்ல, வேதியர்கள் ஏகநாதர் முகத்தை நோக்கி, யாகாமிர்தத்தை நாய்க்கிடுவது போலவும், திருத்துழாயை மசிதிற் கொண்டுபோய் வைப்பதுபோலவும், எங்களுக்கு உபயோகிக்கத் தகுந்தவைகளைப் புலையருக்கு உபயோகித்தது மல்லாமல், சமாதாநமும் சொல்லவந்தாய்; உன்வீட்டில் நாங்கள் உண்ணமாட்டோ மென்று சொல்லிப் போய்விட்டார்கள். அதன்பிறகு ஏகநாதர், மனம் வருந்தி, தமது வீட்டில் வேலை செய்கிற கண்டியாவி னிடத்திற்கு வந்து, நீர் என் விசன மடைந்தவர்போலிருக்கிறீர் என்று கேட்க, அந்தக் கண்டியா சொல்லுகிறார். பிதிர்த்திரத்தில் விசநமடைந்திருப்பது நன்மையல்ல, நீர் விரும்பினால் பிதிர்க்க ளெல்லாம் வரமாட்டார்களோ? வந்து சிரார்த்த திரமாகிய இன்று இங்கே சம்ப்ரமாகப் புசித்துப் போவார்கள் என்று சொல்ல, போறிவை யுடையவராகிய ஏகநாதர் அறிந்து, இந்தக் காரியம் முடியவேண்டுமென்று நினைத்தார்; நினைத்து, இது கல்லதென்று சொன்ன அவனை நோக்கி, இவ்விடத்தில், நீ பிதிரருக்கு உணவு கிடைக்குமபடி, இலைகளை விரித்து, அமுது பரிமாறக் கடவாயென்று சொல்லி, துன்பத்தை யெல்லாம் நீக்கத் தகுந்த ஸ்ரீகண்ணபிரான் திருவுருவை மனத்திற் பதித்து, தென்புலத்தாராகிய பிதிரர் இக்கேவந்து அமுதுசெய்து த்ருப்தியடையும்படி கருணைசெய்யவேண்டும் என்று ப்ரார்த்திக்க, அப்படியே பிதிரரெல்லாரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு அர்க்கியபாத்தியாசமநங்களுந் தந்து, ஆசநங் கொடுத்து, ஜகார்த்தநரையும் ஆராதித்து, ஸ்ரீ கண்ணபிரானுக்கு அர்ப்பணமென்று சங்கற்பமுஞ் சொல்லி நீர் வார்த்த வுடனே, பிதிரரெல்லாரும த்ருப்தியாயுண்டு களித்தார்கள். பிறகு அவர்களைநோக்கி, மிகுதியாயிருக்கிற அமுதை யென்ன செய்யலாமென்று கேட்க, நீங்கள் உம்முடைய இஷ்டர்களோடு கூடி உண்ணக்கடவீர்கள் என்று சொன்னார்கள். அதைக்கேட்ட வேதியர், உள்ளேவந்து பேசுகிறவர் யாரென்றுநோக்க, பிதிரர்கள் மறைந்துபோனார்கள். அதைக் கண்ட வேதியர்கள் வெளியே வந்து, இவர் மனிதரல்லர், திருமாலே இப்படி அவதாரம்செய்ததுபோ லிருக்கிறது, ஆதலால் இவர் விரும்பினதுபோல எந்தக்காரியமும் முடிகின்றது, நாமெல்லோரும் கர்மாபிமாநி

களா யிருப்பதனால் அவமானத்தை யடையும்படி அவரது பிதிரர் வந்து உண்டு போனார்கள், நமக்குக் கிடைக்கத் தகுந்த தக்ஷிணாமுதலான வைகளையும் இழக்கிதாம், நாளையத்தினம் வந்து இவரை உறவாக்கிக் கொண்டாலல்லது நமது மானம் நிலைபெறாது எனறு பேசிக்கொண்டு போனார்கள். அவர்கள் போனபிறகு ஏகநாதர் தமது இஷ்டதேவதையுடன் கூடியுண்டார். மறுநாளுதயத்தில் நேற்று வந்து அவமான மடைந்து போன வேதியர்கள் ஒரு மிக்கத் திரண்டு வந்து, சங்கதிரஞ் சேர்ந்து ஏகநாதரை யழைக்க, இவர் போய் வேதியர்களை வணங்கினர். வணங்கி என்னை யழைத்த காரிய மென்ன வென்று கேட்க, அவர்கள், நேற்று நீ செய்த பிழைக்காகப் பிராயச் சித்தஞ் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்ல, இவர், விஷ்ணு பக்தனாகிய எனக்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டிய அவசிய மில்லை யென்றார். அதைக் கேட்ட வேதியர்கள் மறுபடியும் இவரை நோக்கி, நீர் சொல்லும் வார்த்தை உண்மையாயானாலும், எங்கள் வார்த்தையை மறுக்காமல் செய்து கொள்வீரானால் நேற்ற சுத்தி யுண்டாகுமென்று வற்புறுத்திப் பிராயச் சித்தம் செய்து கொள்ளுவதற்கு இவரை உடம்படச் செய்து, ஸ்நானம் செய்வித்து, பிராயச்சித்தம் நடத்திக்கொண்டிருக்குங் காலத்தில், திரியம்பகத்திலிருந்து ஒரு வேதியனை வருது, இவ்வூரில் ஏகநாத ரென்பவர் யார் என்று கேட்க, இங்கிருந்த வேதியர்கள் அவனை நோக்கி நீ யேன் கேட்கிறாயென்று விரவ, அவன் தன் வரலாற்றைச் சொல்லுகிறான். எப்படி யென்றால் நான் திரியமபகம் என்னும் ஊரினிருப்பவன், எனக்குக் குஷ்டநோய் உண்டாகி அதனால் மிகவும் வருந்தி, திரியமடேசுவரனை வணங்கி, இந்த நோய் நீங்குமாறு க்ருபை செய்யவேண்டுமென்று ப்ரார்த்தித்துக் கண்ணுறங்கினேன், அந்தச் சிவபெருமான் என் கனவில் வந்து, தேவகிரியில் ஏகநாதர் என்று ஒரு விஷ்ணுபக்த ரிருக்கிறார், அவர் தமது பிதிர்த் திதத்தில் அளவற்ற புலையருக்கு அன்னதானஞ் செய்தார், அதனால் அவர்களுள் ஒருவனுக்கு அந்த மிட்ட புண்ணியத்தை உனக்குத் தருவாரானால் உனது நோய் நீங்குமென்று சொல்லி மறைந்தார். ஆகையால் அவரைக் கண்டு வணங்கி, எனது நோயை நீக்கிக்கொண்டு போகலாமென்கிற ஆவலினாலே வந்தேன் என்று சொன்னான். அதைக் கேட்ட வேதியர்கள் அதிசயித்து, வேதியர் பொருட்டு அமைத்த உணவை புலையருக்கிட்டால் புண்ணியம் உண்டாகுமென்று எந்தச் சாஸ்திரத்திற் சொல்லுகிறதோ, அவன் சொன்னது வெறும் பொய் யென்று சொல்ல, அவர்களுள் சில சிலர், நைப் புணர்க்குக் கண்ணுடி வேண்டுமோ? பிதிரர் வந்து அமுதுசெய்து போனதை நாம் கண்ணாரக் கண்டோமே, இன்னமும் அவர் மஹிமைக்கு வேறு சாக்ஷி வேண்டுமோ, இவர்கள் என்னை நிந்தப் பொறாமை கொள்ளுகிறார்கள் என்று சொல்லி, வந்த வேதியனுக்கு, ஏகநாதர் இவரே யென்று சுட்டிக் காட்டினார்கள். உடனே அந்த நோயாளியானவன் நேராடி வந்து இவரை வணங்கி, ஸ்வாமீ, தேவரீர் பிதிர்த்திதத்தில் புலையருக்கு அன்னதானஞ் செய்தீரல்லவா? அவர்களுள் ஒரு புலைய

ணுண்டதனுல் உமக்குண்டான புண்ணியத்தை எனக்குத் தந்தால், எனது நோய் நீரும் என்று திரியம்பகேசுவரன் சொன்னதனுல் தேவரீரை வந்தடைந்தேன், கருணை செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்க, ஏகநாதரும் அப்படியே கொடுத்தேனென்று சொன்னவுடனே, வேதியன் குட்டநோய் நீங்கிப் பொன் மேனியனுய் நின்றன். இவனைக் கண்ட வேதியர்கள், நாமெல்லாம் கர்மாசாராபிமாநங்களை யுடையவர்களாயிருப்பதனுல் பயன் யாதுமில்லை, இந்த ஏகநாதர் மெய்ஞ்ஞானியா யிருக்கையா லல்லவோ, அவருக்கு எந்தக் காரியமும் எளிதாய் முடிகிறது என்று, ஏகநாதரை வணங்கி, நீர் ஸ்ரீ லக்ஷ்மீ நாதரே யன்றி நர மனிதரல்லீர் என்று புகழ்ந்து, உமது பெருமையை இப்போது நாங்கள் கண்ணு யறிந்துகொண்டோம, குளிர்ச்சியிற் சிறந்த பனிமலைக்குக் குளிர்ச்சியை யுண்டாக்கும் பொருட்டு விசிறிகொண்டு விசிறுதலும், இனிமையிற் சிறந்த அமிர்தத்துக்குச் சர்க்கரை, கற்கண்டு, தேன் முதலியவற்றல் இனிமையை யுண்டாக்குதலும் ஆகிய தொழில்கள் செய்பவர்போல், சுத்த சாத்விக குணமும் மெய்ஞ்ஞானமு முள்ள உமக்கு நாங்கள் பிராயச்சித்தம் செய்து உமமைப புநிதராக்க வகுதாம, நீர் உமது பிதிரர்களை யழைத்து அமுதுசெய்யச் செய்ததும், குஷ்டநோய் தீர்த்ததும் ஆகிய அற்புதச் செய்கைகளை உம்மிடத்திற் கண்டோம், உமது மஹிமையைப் புகழ்ந்து சொல்ல எங்களால் முடியாது என்று தோத்திரித்து அனுப்பத்துக்கொண்டு போய் வீடு சேர்ந்து, இவர் கொடுத்த தக்ஷிணை முதலானவைகளைப் பெற்றுத் தமது இடங்களை யடைந்து, இந்த ஏகநாதர், ப்ராஹ்மணபக்தியிலும், ஹரி பக்தியிலுஞ் சிறந்தவர் என்று மதித்துப் புகழ்ந்துகொண்டிருந்தார்கள். இப்படி யிருக்க, நவாகாபுரியில் வாழ்கின்ற ஒரு வேதியன், நீலமேகவண்ணனுகிய ஸ்ரீ கண்ணபிரானது சேவை கிடைக்காமல் அநுதபித்துத் தவஞ் செய்துவருங் காலத்தில், ராமை, ருக்குமணி என்னும பிராட்டிமார நிருவரும் அந்த வேதியன் மனத்தில் தோன்றி, நீ விரும்புகிற ஸ்ரீ கண்ணபிரானுனவர், தேவகிரியில் வைஷ்ணவ சிரோமணியாய் வாழ்கிற ஏகநாதர் வீட்டில், கண்டியா என்னும பேர் பெற்றுப் பன்னிரண்டுவருஷ காலமாய் ஊழியஞ்செய்து கொண்டிருக்கிறார். நீ அங்கேபோய், எங்களை முழுதும் மறந்திருக்கிற அந்தக் கண்ணபிரானை அழைத்து வாவென்று சொன்னவுடனே, வேதியன் புறப்பட்டுப்போய், தேவகிரியில் ஏகநாதர் வீட்டில் புகுதலும், ஏகநாதர் இந்த வேதியனை வணங்கி, ஆசநத்தது, எங்கிருந்து வந்தீர், வந்தகாரியம் யாதென்று கேட்க, வேதியன், நான் கண்டியாவைக் காணவந்தேனென்று சொல்ல, கண்டியா நீர் மொள்ளப்போனுன், இன்னம் ஒரு க்ஷணநேரத்தில் வருவானென்று ஏகநாதர்சொன்னர். அப்படிச்சொல்லிக்கொண்டிருக்கும்போதே கண்டியாவும் நீர்க்காவடியைத் தோளிற் சுமந்துகொண்டு வந்தான்; வந்து தன்னைத் தேடிவந்திருப்பவனைப் பார்த்து நாணி, ஏகநாதர் வீட்டுக்குள்ளே போய், பன்னிரண்டு வருஷகாலமாய் ஒரு துன்பமு மில்லாமல் இங்கே யிருந்தேன், இந்தக் கடன்காரன், எங்கே யிரு

க்தோ இக்கு ரானிருப்பதை யறிந்து வந்துவிட்டானென்று மனம் வருந்த, ஏகநாதர், வந்த வேதியனை யழைத்து, கண்டியா இதோ வந்தான் என்றார். உடனே வேதியன் விரைவாயடிவந்து கண்டியானவை வணங்க, அவன் பேசாமல், திருவாராதன அறைக்குள்ளேபோய்க் காவடியை யிறக்கி வைத்து விட்டு மறைந்து போனான். வந்த வேதியன் சற்று நேரம் பார்த்து, உள்ளே போனவன், என் இன்னம் வெளியே வர வில்லை யென்று உள்ளேபோய்ப் பார்த்துக் கண்டியானவைக் காணாமையால் திகைத்து, பகவானுனவர் அடியே னுக்கு அருள்செய்யாமற் போனதே யென்று துக்கித்து நிலத்தின்மேல் விழுந் தனர், கோவென்று அலறுவதைக் கேட்ட ஏகநாதர் வந்து, என் கதறுகிறீர் என்று கேட்க, வேதியன் தான்வந்த வரலாற்றைச் சொல்ல, ஏகநாதர் அந்த வேதியனை நோக்கி, நீர் செய்த தவமே தவம், நமது பவரோகத்தை நீக்கத் தகுந்த பரவான் இவன் என்றறிந்து வணங்கினார், தான் அந்தப்பகவானே யாரோ ஒரு வேலைக்காரனென்று நினைத்து, அவரிடத்தில் வேலை வாங்கினேனே, என்னைப்போல அறிவிலிகளுண்டோ வென்று இரக்க மடைந்து, ஓ பக வானே, பன்னிரண்டு வருஷகாலமாக அடிமை ஒழியங்களை நீ செய்ய ஏற்று க் கொண்டீர், வேலைசெய்து உன் திருகரங்கள் காய்ப்பேறியே போயின, உன் திருவடிகள் கன் முமடி தேனின்மேல் நீர்க்காவடி சுமந்துவரப் பார்த் திருக்கிறேன், சர்வ லோக பரண்யருனிய உன்னை யறியாது கொள்ளாத வீண ரானேனென்று பலவிதமாய்ப் பரிதாபித்துப் புலம்புவதைக் கண்ட இவர் தேவியார், மிகவு மனங கலங்கி யழுது சோர்ந்து, கோவிந்தா, உன்னை யறி யாது அபராதமாய் உன்னிடத்தில் பணிவிடையை யேற்றுகொண்டோமே என்று புலம்பினார். இந்த திரு மாதுடைய நிலைமையைக் கண்ட வேதியன் இவர்களிடத்தில் விடைபெற்றுப் போய்விட்டான். பிறகு ஏகநாதர், தமது தேவியாரோடுங் கூடிக் கண்ணபிரானையே நினைவிடாமல் நினைத்துக்கொ ண்டு வாழுங் காலத்தில், ஒரு நாள் இவர் கனவில் ஞானதேவர் தோன்றி, அளகாபுரிக்கு வருது என் சமாதியையுக் தரிசித்து, என்னை யடைந்திருக்கிற அரசு மரத்தின் வேரை ஒரு புறத்தில் ஒதுக்கி, சமாதியை வன்றாய் மூடி வாவென்று சொல்லிப் போய்விட்டார். ஏகநாதரும் அப்படியே அளகாபுரிக்கு ப்போய், இத்தராயணி நதியில் மூழ்கி, சாத்யாகால கர்மங்களை முடித்து, சித்தேசுவரனை வணங்கி, விஜரசமாதியிற படுத்திருக்கிற ஞானதேவரைக் கண்டு வணங்கி, அவரை யலுவி யிருக்கிற மர வேரையும் ஒதுக்கி, பிறகு சமாதிக்கதவை மூடிக் கல்லடுக்கிச் சாதுசெய்து முன்போலவே செய்து வைத்தார். இப்படிச் செய்த பிறகு தாசரும், கூட இருப்பவரும் பகியோடு தங்கியிருக்க, பாண்டுரங்கப் பெருமான் இவர்களுடைய பசித் துன்பத்தை நீக்க நினைத்து, ஒரு வணிக னுருவங்கொண்டு, சமையலுக்குரிய பொருள்க ளாகிய அரிசி முதலிய எல்லாவற்றையும கொண்டுவந்து கடைத்தெருவில் வைத்துக்கொண்டிருக்க, ஏகநாதர், இரண்டு வேதியரை யனுப்பி அவ்வணிக னிடத்தில் தமக்கு வேண்டிய பொருள்கள் யாவையும் வாங்கிக்கொண்டு

வரச் சொன்னர். அப்படியே அவர்கள் போய், வேண்டியவற்றை வாங்கிக் கொண்டு, சற்றேயிரும், விலைப்பணம் கொண்டுவருவோமென்றார்கள். அதற்கு அவ்வணிகர், அவசரம் வேண்டாம, இன்று முழுதும் இங்கேயிருப்பேன், நீங்கள்போய்ச் சமையல்செய்து புசித்த பிறகு, பணம் கொண்டுவரலாம், ஏகநாதரையும் நானறிவேன், அவ ரென்னை யறியார், அவர் இங்கே வந்திருக்கிற செய்தியைக் கேட்டுப் பல சரக்குகளை யெடுத்துக்கொண்டு வந்தேன் என்று சொல்ல, வேதிய ரிருவரும் இரண்டடி பெயர்த்து வைத்துத் திரும்பிப் பார்த்து, வணிகரைக் காணுமல் அதிசயித்து, ஏகநாதரிடத்தில் வந்து, இத்தச் செய்தியைச் சொல்ல, அவர், வணிகனுய் வந்தவர் பகவானே யென்றறிந்து, இவர் நம் பொருட்டு அதிக விதமான தின்பங்களை யடைகிறரே யென்று மனம் வருந்தி யிருக்க, வேதியர்கள், கொண்டுவந்தவற்றைச் சமையல் செய்தார்கள். பிறகு காசரும வேதியரும் உண்டு, அன்றிரவில் அங்கே தங்கி, ஹரி நாம ஸங்கீர்த்தநம செய்துகொண் டிருந்து, பொழுது விடிந்தவுடனே, சமாதியை வணங்கி, அங்கிருந்து புறப்பட்டு வந்து தம் மூரை யடைந்து, ஹரிபஜனை செய்துகொண்டு, எப்பொழுதும் தமது குருவையே நினைத்து இருந்தனுல், நீரோடு நீர் சேர்ந்தாற்போல, ஜநார்த்தநர் தாமாக வாழ்ந்திருந்தார். இப்படி யிருக்குங் காலத்தில், ஜநார்த்தநர், இவ்வுலகத்திலுள்ள மூடரை யெல்லாம் ஸ்ரீ ஹரி பக்தர்களாக்க வெண்ணி, ஏகநாதரை நோக்கி, நீ தீர்த்தயாத்திரையாய்ப் புறப்பட்டுப்போய் அங்குள்ள சமஸ்தஜநங்களுக்கும் உபதேசம் செய்து, அவர்களை ஸ்ரீஹரிதாசர்களாகச் செய்யவேண்டும் என்று நியமிக்க, அப்படியே ஏகநாதர் புறப்பட்டுத் தீர்த்த யாத்ரை செய்துகொண்டும், அங்கங்கே வருகிற தம்மை ஆசிரயிப்பவர்களுக்கு உபதேசித்துக் கடைத்தேறப் பண்ணியும் வருகிற காலத்தில், ஒருநாள் கோதாவரி நதிக் கரையி லுள்ள பிரதிஷ்டாந நகரத்தை யடைந்து, அங்கே தங்கி யிருக்கையில், இவர் ஹரிபஜனை செய்வதும், கீர்த்தனைகள் நூதநமாய்ச் செய்வதும் ஆகிய தொழிலையே இடைவிடாமல் மேற்கொண்டொழுகுதலால் இவர் அவதார புருஷ ரென்று கொண்டாடுவார்கள். இப்படி யிருக்க, இவர் தனிமை சஞ்சரிப்பதற்கு விட்டலப்பெருமான் பொறுக்காதவராய், இவரோடு கூடவிருந்து உதவியாய்ப் பாடினல் இவர்க்குக் கொஞ்சம் இளைப்பாற்றிக்கொள்ள அவகாசமிருக்கும் என்று, தாம் ஒரு சங்கீதபாடகராகிய வேதியவேஷங்கொண்டு, தாளத்தைக் கைக்கொண்டு, ஏகநாதர் முதுகின் புறத்திலிருந்து, அவர் சொல்லுக் கவிகளை அவரோடுகூடிப் பாடுவாரா யிருந்தார். இப்படி யிருக்கையில், ஒரு நாள் ஸ்ரீக்ருஷ்ணஜயந்தி வர, அந்த உத்ஸவத்தை விசேஷவைபவமாய் நடத்தவேண்டு மென்று எண்ணி, அவ்வூரி லுள்ள தநவான்களுக்கு அறிவிக்க, அவர்களும் உத்ஸவத்துக்கு வேண்டிய பொருள்கள் யாவுஞ் சேகரித்திருந்தார்கள். இந்தச் செய்தியைத் தமது ஆசாரியராகிய ஜநார்த்தநருக்கு ஒரு வேதியன் மூலமா யறிவிக்க, அவரும் மனமகிழ்ந்து, குடும்பத்தோடு வேண்டிய பொருள்களைக்கொண்டு புறப்

பட்டு ஏகநாதரிருக்கிற நகரத்தைச் சமீபித்து வரும்போது, தத்தாத்ரேயர் எதிர்ப்பட்டார். அவரை வணங்கிப் புகழ்ந்து நிற்க, இவரை, தத்தாத்ரேயர் மார்போடணைத்து, ஓ ஜனார்த்தனரே, உமது சிடன் ஒப்பற்றவன், அவனது ஞானவொழுக்கங்களைக்குறித்துச் சகதேவஜித்து நானும் அவனது மடவாசலிலிருந்து அவன் பாடுகிறத்தங்களைக் கேட்டு ஆநந்திக்கிறேன் என்று சொல்லி, ஏகநாதரிடத்துக்கு விஜயத்தீபாய், உமது சற்குருநாதர் வந்தாரென்று சொல்ல, அந்த ஏகநாதர் எழுந்து வந்து குருநாதர் திருவடியை வணங்கி, இத்தனை தூரம் தேவரீர் எழுந்தருளும்படி அடியேன் என்ன தவஞ் செய்திருந்தேனோ என்று தோத்திரஞ் செய்து ஆசநத்திருத்தி, திருவடியை விளக்கி, ஸ்ரீ பாத தீர்த்தங்கொண்டு, பிறகு, உத்ஸவ காரியத்தை விசேஷ வைபவமாய் நடத்தி, தாமும் ஹரிநாமஸங்கீர்த்தனம் செய்யும்போது, விட்டலப் பெருமான் கைத்தாளங்கொண்டு பின்னின்று உதவியாய்ப் பாடுவதைக் கண்டவரெல்லாரும், இவர்க்கு இசைவான உதவி பாடகர் அமைந்தார் என்று வியந்து கொண்டாடினார்கள். பிறகு பகவானுக்கு ஹாரதி சமர்ப்பித்து ப்ரஸாதம விநியோகித்து இப்படி யெட்டுநாள் வரைக்கும் பகல் முழுதும வேதியரை யுண்பிப்பதும், இரா முழுதும ஹரிபஜனை செய்வதுமாகிய தொழிலே செய்து, ஒன்பதாவது நவமிநாளில், ஸ்ரீ பாகவதத்தில் சொல்லப்பட்ட ஸ்ரீ கண்ணபிரானுடைய லீலைகளெல்லாவற்றையும் செய்து, தசமிநாளில் வாதய விசேஷங்கள் யாவையும முழங்கச் செய்து, ஊர்வலம் வந்து, ஸ்ரீகண்ணபிரானே மடத்திற் கொழுந்தருளச் செய்து, ஹாரதி சமர்ப்பித்து, எல்லாருக்கும ப்ரஸாத விநியோகம் கடத்தின பிறகு, ஜனார்த்தனர் ஏகநாதரை நோக்கி, உனக்குத் தகுதியான உதவி யொன்று கிடைத்ததைக் குறித்துச் சந்தோஷிக்கிறேன; ஆனால் அவர்க்கும் உனக்கும் பிரிவு நேரிடாமலிருக்கப் பண்டரங்கப் பெருமானே ப்ரார்த்திக்கிறே னென்றார். அப்போது, ஏகநாதர் தன் ஸ்நாபாடியை நோக்கி, உமது ஊர் யாது, பேர் யாது என்று வினவ, ஸ்நாபாடியானவர் எனக்கு ஊரென் றொன்றில்லை யாதலும் கல்லவரிருக்கு மிடமே யெனக்கு ஊராகக்கொண்டு வாசம் பண்ணுவேன், என்பேர் விட்டலன், உம்மைப்போன்ற சாதுவை யெங்குங் கண்டிலேன், ஆகையால் உம்மை யடுத்திருக்கிறேன் என்று சொன்னவுடனே, ஏகநாதர், மட்டில்லாத பெரு மகிழ்ச்சியை யடைந்து, அப்படியே உமது விருப்பம் போல எண்ணிடத்தில் எங்குளும் இருக்கக் கடவீர் என்று சொல்ல, நாலு நாள் தங்கியிருந்து, ஏகநாதரை இங்கே யிருக்கும்படி நியமித்து ஜனார்த்தனர் போய்விட்டார்.

அப்பால் ஏகநாதர், நிரந்தோறும் ஹரிகீர்த்தனங்களை விரும்பிப் பாடி அன்போடு பகவானைத் தோத்திரம பண்ணிக்கொண்டிருக்குங் காலத்தில், பண்டரிபுரத்திலுள்ள ஒரு வேதியன் விடோபாவாகிய பகவானது சகுணவுருவைக் காணவேண்டு மென்கிற எண்ணத்தோடு நிரந்தோறும் சக்கரபாகா நதியில் நீராடி, ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்து வந்தான். அவனு

டைய பக்திக்குப் பாண்டு ரங்கப் பெருமான் மகிழ்ந்து அவன் கனவில் தோன்றி, ஓ வேதியனே, நீ என் அருளுருவைத் தரிசிக்க விரும்புவாயானால், ப்ரதிஷ்டாந நகரத்தை யடைந்து, ஏகநாதர் ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்யும் போது, ஸஹபாடியாய் அவருக்குப் பின்பு நிற்பேன், அங்கே வந்து என்னைக் காணக்கடவாயென்று சொன்னார். அவ்வேதியன் விழித்து, ஆச்சரியப் பட்டு, அந்த ப்ரதிஷ்டாந நகரத்தை யடைந்து, ஏகநாதர் கதை செய்யுங் காலம் சம்பவித்தவுடனே, அவ்விடத்திற் போய், ஏகநாதருக்குப் பின்னே நின்ற ஸஹபாடியைக் கண்டு வணங்கி, அவருடைய வலது கரத்தில் சங்கசக்ராதிகளைத் திருக்கரத்தில் உடையவனுகிய பகவான் எழுந்தருளி வந்து நின்றார். நின்ற பகவானை, ஏகநாதரும், அவர் கதாகாலக்ஷேபத்துக்கு வந்த மற்றவர்களும் கண்டு, ஜய ஜய வென்கிற பேரொலியோடு சாஷ்டாங்கமாக வணங்கித் தோத்திரம் பண்ணினார்கள்; உடனே பகவானும் மறைந்து போனார். வந்த வேதியனும் மற்றவர்களும் ஏகநாதர் திருவடியை வணங்கி, விடைபெற்றனர். பன்னிரண்டு வருஷகாலமாக உமமிடத்தில் வந்து, சதுரபாடியாய்ப் பாடிக் கொண்டிருந்தா ரென்றால், உமது மஹிமையைச் சொல்ல வல்லவர் யார் என்று புகழ்ந்துரைக்க, ஏகநாதரும், ஆம்! ஆம்! பாண்டுரங்கப் பெருமானவர் நம் மிடத்தில் வந்து அதிக வேலை செய்து திரு மேனி வாடினார் என்று அநுதபித்து, அதின் பிறகு தமதுரை யடைந்து வாழ்ந்திருக்குங் காலத்தில், ஒரு நாள் உதயவர் என்னுமை யெயருள்ள ஒரு வேதியர், ஏகநாத சிடத்துக்கு வந்து வணங்கி நிற்க, இவர் அவ் வேதியரைத் தழுவிக் கொண்டு, வந்த காரியம் யாதெனறு கேட்க, அவர், ஏகநாதரை நோக்கி, நீர் உமது வாக்கால் பாகவதஞ் சொல்லக் கேட்கவேண்டு மென்னும் விருப்பத்தால் உம்மிடத்துக்கு வந்தேனென்று சொல்ல, ஏகநாதரும் அப்படியே யாகட்டு மென்று, சுபதிகம் பாகவத ஆரமபித்து, நித்ய நைதாநமும் நியமமாய்ப் பாகவதத்தைப் படித்து, எல்லாருக்கும் விளங்குமபடி அர்த்தம் சொல்லிக் கொண்டு வருகிற காலத்தில், ஒரு நாள், பாண்டுரங்கப் பெருமான் ஒரு வேதியனுய் வந்து, ஏகநாதரைக் குறிபபிட்டு நிற்க, இவர் அப் பெருமானை நோக்கி, உமது ஊர் யாது, பேர் யாது என்று விஜ்ஞவ, பெருமான், தாசரை நோக்கி, நான் ஓரூரில் நிலையாயிருக்கிற தில்லை, என் பேர் கேசவன், திருத்துழாய் மாலையை யணிந்த ஸ்ரீ லக்ஷ்மீ கதனது வைபவத்தை விஸ்தாரமாகச் சொல்லுகிற ஸ்ரீ பாகவத புராணத்தை வாசித்து அர்த்தம் சொல்லுகிறீரென்று கேள்விப்பட்டு, அதைக் கேட்க வேண்டு மென்று வந்தேன் என்று சொல்ல, ஏகநாதர், சரிதான் என்று நித்ய நைதாநமும் பாகவத புராணபடநம் செய்து வந்தார். அப்படி யிருக்குங் காலத்தில், ஒருநா ளிரவில், இரண்டு சாமத்துக்கு மேலே, தேசாந்தர வேதியர் நாலுபேர் வந்து, ஏகநாதரைக் கண்டு, எமது மிகுந்த பசியைத் தவிர்க்க வேண்டுமென்று ப்ரார்த்திக்க, இவர் தமது தேவியாகிய கிரிஜாபாயியை நோக்கி, இந்த வேதியர் பொருட்டு விரைவாகச் சமையலாக வேண்டும் என்று சொல்ல, தேவியார், வருத்தத்

துடனே சமைக்க விறகில்லை யென்று சொல்ல, தமது இடத்தில் லிருக்கிற உத்தவர் என்னும் வேதியரை யழைத்து, இந்த வீட்டைப் பிரித்து இவளுக்கு வேண்டிய விறகு கொடுக்கக் கடவை யென்றார். அவர் வீட்டைப் பிரிக்க நெடுநேரஞ் செல்லுமே யென்றார். பிறகு ஏகநாதர், விசாரக் தெழுந்து தாம் தூங்குகிற கட்டிலில் பிளந்து கொடுத்துச் சமைக்கக் கடவா யென்றார். தேவியார் அந்த விறகைக் கொண்டு, கணவர் சொற்படியே சமையல்செய்து, வந்த வேதியரை யுண்பித்து, தாம்பூல தக்ஷிணைகளோடுங் கொடுத்து, திருப்தி செய்ய, அவர்கள் ஏகநாதரிடத்திற்கு வந்து வார்த்தி வணங்கி விடைபெற்றுப் போனார்கள். சிலகாள் கழிந்த பிறகு, இவர் மனைவியில் சிரார்த்தம் ஒன்று கோரிட்டது. அதற்கு அநேக மறையோர்கள் வந்து உண்ணும்படியான ஏற்பாடு செய்திருந்தார். அப்போது இவருடைய மனைவி சொல்லிக்கும்பொருட்டுத் திரிமூர்த்திகளும் பக்கீர்கள் போல வேஷம் பூண்டு வந்து, எமது மிருந்த பசியைத் தீர்க்கவேண்டுமென்று பார்த்திக்க, உடனே இவர் தமது மனைவியை யழைத்து அவர்களுக்கு விளாவாக அதாகமிடச் சொல்ல, அவரும் அப்படியே யிட்டு அவர்கள் பசியை யகற்றி, தாம்பூல தக்ஷிணைகளோடுங் கொடுத்து உபசரிக்க, அவர்கள் மகிழ்ந்து, இவர் ஜாதிபேதம் நோக்காத பெருந்தன்மை யுள்ளவர் என்று சொல்லித் தமது உருவங்களை ஏகநாதருக்குக் காட்ட, அவரும் அவர்களை வணங்கித் துதித்தார். துதிக்கும்போது, அவர்கள் பக்கீர்களாகி, யவன பாஷையில் தமக் கருளிட்டதைக் குறித்துப் புகழ்ந்து பேசிக்கொண்டு, தமது பலவளவாய்ச் சிவாபேறுண்டு தாம்பூலந் தரித்து, அங்கிருக்குஞ் சமயத்தில், இவர் வீட்டில் உண்ணும் பொருட்டு வந்த வேதியர்கள் இவர்களைக் கண்டு, நிதென்ன அநியாயம், இன்று தாழ்ந்த ஜாதியாருக்கு அகமிட்டாய், நீ வேதியருகமாட்டாய் என்று கோபத்தோடு கூடின வன் சொற்களை வழங்கிப் போய், அந்த அபர் காட்டாண்மைக்காரனிடத்தில் இதைச் செய்தியைச் சொன்னார்கள். அந்த அதிகாரியானவன் ஏகநாதரை யழைத்து, சாதிபி லிழிந்த பிராமணருக்குச் சிரார்த்த நிகழ்ந்தில் அன்னமிடலாமோ, இது தருமோ என்று கேட்க, இவர், நான் என்செய்வேன், பஞ்சாயத்தார்கள் அவர்கள் பரி வருத்தத்தைப் பார்த்துச் சஹிக்க முடியாமையால் அன்னமிடும்படி கோரிட்டது என்று சொல்லி, வேதியரை நோக்கி, என் பிழையைப் பொறுத்தருளி, வேற்று சுபியாராச் சமையலாகிக் கொண்டிருக்கிற வுணவைச்சுத்தாஷமா யுண்டருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவர்கள் இவரைநோக்கி, உமது பிதிரர் வந்து உண்டால் யாமும் வந்து உண்போமென்றார்கள். அப்படியே செய்கிறேன் வாருங்களென்று அழைத்துக் கொண்டு தமதுவீட்டில் ப்ரவேசித்து, இலைகளில் அன்ன முதலான வைகளைப் பரிமாறிப் பிதிரரை வேண்டுதலும், பிதிரர் வந்து, திருப்தியா யுண்டார்கள். அதைக்கண்டவேதியர்கள், அதிசயித்து, இந்த ஏகநாதரை ஸ்ரீமந்நாராயணனே இப்படி அவதரித்தாரென்று புகழ்வதன்றி வேறு விதமாய்ப் புகழ்வது தகாதென்று அஞ்சி, தாமும் உண்டு தாம்பூல தக்ஷிணைகளைப் பெற்றுப்போய்

விட்டார்கள். அன்றிரவில், ஸ்ரீ ஹரி பஜனை செய்து கர்ப்பூரஹாரதி சமர்ப்பித்து, வந்தவர்களுக்கெல்லாம் ப்ரஸாதம் கொடுத்தனுப்பினர். பிறகு, ஒருகாலத்தில், அவ்வூரில் வாழ்வோனுகிய க்ருஷ்ணதாசன் என்னும் ஒரு வேதியன் காளியை யாராதிப்பவனுமும், அவளுடைய வர ப்ரஸாதத்தால் அற்புத கவிகளைச் செய்பவனுமும் இருந்தான். அவன், ஸ்ரீவால்மீகிபகவான், ஸம்ஸ்க்ருதத்திற் செய்த ஸ்ரீராமாயணம்போல, ப்ராக்ருதத்திற் செய்து யுத்தகாண்டம் வரைக்கும் நிறைவேறினதைச் சில வேதியர் அறிந்து வியந்து, அந்தச் செய்தியை ஏகநாதருக்கு வந்து சொல்ல, இவரும், அவன் ஸ்ரீஹரியின் ப்ரபாவத்தையே புகழ்ந்து சொல்லுவது மிகவும் நல்ல காரியந்தானென்று சொல்லி, மனமகிழ்ந்திருக்க, ஒருநாள், நடுராத்ரியில், க்ருஷ்ணதாசன் கனவில் காளியானவள் வந்து, நாளை உதயத்தில் உனக்கு மரணமுண்டாகுமென்று சொல்லி மறைய, உடனே க்ருஷ்ணதாசன் விழித்தெழுந்து, காம ஹோமபித்துச் செய்து வருகிற கிரஹதம முடிவதற்கு முன்னே நமக்கு மரணம் நேரிடுவதற்குக் காரணம் யாதோ, அதைக் கண்டறிய வேண்டும், இந்த விஷயத்தில் ஏகநாதரிடத்திற்போய்க் கலந்து யோசிப்பதே நல்ல காரியமென்று தீர்மானித்து, தான் செய்யும் கிரஹத்தை யெடுத்துக்கொண்டுபோய், நித்தித்துக்கொண்டிருக்கிற ஏகநாதரை யெழுப்பி, நடந்த செய்தியைச் சொல்லி, இந்தக் கிரஹத்தை நீரே முடித்தருள வேணுமென்று ப்ரார்த்திக்க, இவர் அந்த க்ருஷ்ணதாசன் கொண்டுவந்த கிரஹத்தை வாங்கிப் பார்த்து, கவிசள் மிகவும் கோர்த்தியா யிருக்கின்றன, முழுதும் ஒருவர் வாக்காகவே யிருந்தால் அழகா யிருக்கும், ஆகலால், நீரே பூர்த்தி செய்யக் கடவீர், இந்த க்ரந்தம் பூர்த்தியாகிற வரைக்கும், உமக்கு மரணபயம் வேண்டியதில்லை, போம் என்று சொல்ல, அவன் மிகவும் மனமகிழ்ச்சியோடு இவர் திருவடியை வணங்கி விடைபெற்றுத் தன் வீட்டுக்கு வந்து, விடியுமுன்னே கிரந்த பூர்த்தி செய்து மகிழ்ந்திருந்தான்.

அப்பால், கருநாடக தேசத்தில், மிகுந்த தனவானுகிய ஒரு வணிகன், பண்டரிநாதனுக்கு அன்பனுகியும், மிகுந்த தருமாத்மாவாகியும் இருந்தான், அவன் விடோபாவுக்குச் சமாநமான சுவர்ண விக்ரஹத்தைச் செய்து, ப்ரதிஷ்டை செய்யத் தகுந்த சுபமுஹூர்த்தமும் பார்த்து அமைத்திருந்தான். அக்காலத்தில், ஒருநாள், இரவில், அந்த வணிகன் கனவில், விடோபாவானவர் எழுந்தருளி, தேவகிரியில் விருக்கிற ஏகநாதரிடத்தில் போய், இந்த விக்ரஹங்களை அவரிடத்தில் கொடுக்கக் கடவை. அப்படிச் செய்யாத பக்ஷத்தில் உனக்கு மிகுந்த துன்பங்கள் உண்டாகும் என்று சொல்ல, வணிகன் விழித்தெழுந்து, துன்பமடைந்திருந்து, விடிந்த பிறகு தனது கனவில் நிகழ்ந்த செய்தியை வேதியர்க்குச் சொல்ல, அவர்கள், இதைக் கனவின்படியே மூன்று தினமும் நிகழ்ந்ததானால் அந்த ஏகநாதரிடத்தில் சேர்த்துவிடக் கடவீர் என்று சொன்னார்கள். அப்படியே மூன்று தினமும் கனவு நிகழ்ந்தும், விக்ரஹத்தை யெடுத்துக்கொண்டு ஏகநாதரிடத்துக்குப் போய், செய்தியைச்

சொல்லி பெதிரே வைத்து, மூன்று காளுங் கண்ட கனவைச் சொல்ல, ஏக நாதர் மிகவும் சந்தோஷித்து, அந்த விக்ரஹத்தின் சௌந்தரியத்தை நோக்கி, அன்போடு அதனை மார்பிலணைத்துக்கொண்டு சொல்லுகிறார். ஓ பாண்டு ரங்கப் பெருமானே, உன் பெருமையைப் புகழ்ந்து பேச வல்லவர் யாருளர் என்று தோத்திரித்து, கல்ல முஹூர்த்தமாராய்ந்தமைத்துக்கொண்டு, அவ் வூராருக்கு அறிவித்து, வர வழைத்து, அந்த விக்ரஹத்தை ஒரு பக்கத்தில் ப்ரதிஷ்டைசெய்து, வெண்ணெயைக் கையிலேந்தி, விட்டலப் பெருமானே, நீ இதனை யமுது செய்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்தவுடனே ஸ்ரீகண்ண பிரானுனவர் தமது செவ்வாய் திறந்து உண்ணக் கண்டவர் யாவரும் வியந்து, ஜயஜய வென்று தோத்திரம்பண்ணி, ஏகநாதரையும் புகழ்ந்து நின் ரூர்கள். பிறகு எல்லாருங்கூடிப் பகவானை வலம்வந்து போற்ற, ப்ரஹ்மமண சந்தர்ப்பணம் செய்து தக்ஷிணை தாம்பூலங்களைக் கொடுத்து அனுப்பினர். இவை யாவும் வணிகன் கண்டு, விட்டலப் பெருமான் ஒருதரமாகிலும் தன் னூர்கெழுந்தருளி மஹோத்ஸவங்கண்டருள நினைத்து, தன் எண்ணத்தை ஏகநாதருக்கு அறிவிக்க, இவரும் அதற்கு இசைந்த வுடனே, வணிகன் தன் னூருக்குப் போய் உத்ஸவத்துக்கு வேண்டியவைகளைச் சித்தப்படுத்திக் கொண்டு ஏகநாதருக்கு அறிவிக்க, உடனே இவர், கண்ணபிரானை யெழுந் தருளப் பண்ணிக் கொண்டு, மங்களவாத்ய கோஷத்தோடு வணிகனிருக்கு மூருக்கு வந்தார். இவர் வரவை யெதிர்பார்த்திருந்த வணிகன் எதிர்கொண்டு வந்து சகல மரியாதைகளுஞ் செய்து அழைத்துப்போய், தான் தூதகமாகச் சித்தப்படித்தி வைத்திருந்த ஸ்ரீருக்மிணீ பிராட்டியாருக்கும் ஸ்ரீகண்ணபிரா னுக்கும் விசேஷவைபவத்தோடு விவாஹமஹோத்ஸவம் நிறைவேற்றி, ப்ரா ஹ்மமண சந்தர்ப்பணம செய்து, ஒரு மாசத்தளவும் இடைவிடாமல் ஸ்ரீ ஹரி நாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்து, வணிகன், ஸ்ரீ கண்ண பிரானும் ஸ்ரீருக்மிணீபிராட்டியும் ஆகிய தம்பதிகளுக்குச் சீதன முதலியவைகளைக் கொடுக்கப் பெற்றுக்கொண்டு, அத்தம் தம்பதிகளைத் தேரின்மே லேற்றிக் கொண்டு, தம்மூர்க்கு வந்து, அவர்களை அவ்விடத்தில் ப்ரதிஷ்டை செய்து ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டு வாழ்ந்திருந்தார்.

ஏகநாதர் இப்படி வாழ்ந்திருக்குங் காலத்தில், ஒருநாள் உத்தவரை நோக்கி, நான் பண்டரிபுரம் போய் விட்டலப் பெருமானைச் சேவித்து வர வேண்டும், நான்போய் வருகிற வரைக்கும், இவ்விடத்தில் தூதகமாகப் பிர திஷ்டை செய்யப்பட்ட விட்டலப் பெருமானைப் பூஜித்துக்கொண்டிரும் என்று சொல்லிப் புறப்பட்டு ஹரிதாசர்களோடுங் கூடி ஸ்ரீஹரிநாம ஸங்கீர் த்தனம் செய்துகொண்டேபோய், சந்த்ரபாகாநதியில் நீராடுமபோது, பாண்டு ரங்க பகவானுனவர், அர்ச்சகர்மேல் ஆவேசித்து, எனக்கன்பரான ஏகநாதர் என்னைக் காணவேண்டுமென்று வந்து, சந்த்ரபாகா நதியில் நீராடுகிறார், அவரை நீங்கள் யாவரும் எதிர்கொண்டு, நான் புறப்பட்டால் என்னவித மாய் மரியாதை செய்கிறீர்களோ அவ்விதமாகவே அவருக்கு மரியாதை

செய்து அழைத்து வாருங்களென்று, கோயிலிலுள்ள வேதியர்களுக்கு நியமிக்க, அவர்களும் அப்படியேபோய் ஏகநாதரைச் சகல சம்பிரமத்தோடும் அழைத்து வந்து கோயிலிற் சேர்க்க, இவர் ஹரிநாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டே கருட ஸ்தம்பத்தினருகே வந்து நின்று பகவானைச் சாஷ்டாங்கமாக வணங்கித் தோத்திரஞ் செய்து தழுவிக்கொண்டு, பேராநந்த மடைந்து, காலுநாள் வரைக்கும் தங்கி, பகவத் தரிசனம் செய்துகொண்டிருக்க, பகவானுவர் சதுர்த்தசி திதியில், அர்ச்சகமுகேன, ஏகநாதரை நோக்கி, நீர் இன்று பாநுதாசர் சரித்திரத்தைக் கீர்த்தநரூபமாக விரைந்து செய்து, அந்தக் கீர்த்தநங்களை என் சந்நிதியில் பாடக் கடவீரென்று நியமிக்கக் கேட்ட ஏகநாதர், மஹா பாக்யமென்று, அன்று அஸ்தமநத்துக்குள்ளே அந்தப் பாநுதாசர் சரித்திரகீர்த்தநங்கள் செய்து, அன்றிரவில், பகவத் ஸந்நிதியில் பாடி, பகவானை மகிழ்வித்து, கீர்த்த ப்ரஸாதங்களும் லபித்துக்கொண்டு, தமது ஊருக்குப் போய் விட்டார்.

அதன்பிறகு, தமதூரில் நாள்தோறும், பகல்முழுதும் ஸ்ரீ பாகவதபுராண படநத்தையும், இரவில் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநத்தையும் இடைவிடாமல் நடத்திவந்தார். இப்படி யிருக்குங்காலத்தில, ஒருநாள் விட்டலப்பெருமான் கேசவன் என்னும் பெயருள்ள ஒரு வேதிய ரூபங்கொண்டு, இவரிடத்துக்கு வந்து, நான் இவ்விடத்தில் பன்னிரண்டு வருஷகாலமாய்த் தங்கியிருந்தேன், இனித் தீர்த்தயாத்திரை செய்யப்போகிறேன் எனக் கேட்டு, எங்கே போனாலும் மறுபடியும் நான் கண்டு சேவிக்கும்படி சேவை சாதித்தருளவேண்டும் என்று ப்ரார்த்திக்க, அப்படியே யாகட்டுமென்று போய்விட்டார். பின்பு தினந்தோறும் இந்த ஏகநாதர் செய்யும் புராண படநத்தையும், ஹரிநாமஸங்கீர்த்தநத்தையும் கேட்டுக் கொண்டு வெளியே யிருந்து, சத்பாவிகனுயும், புலையனுயு மிருக்கிற ராணு என்பவனும், அவன் மனைவியும் இவரைப் பின் தொடர்ந்து, இவர் போகும் வழி முழுதும் குப்பை போக்கிச் சுத்தப்படுத்தி, அழிவற்ற பரம்பொருளே யிவரென்று மனத்திற்கொண்டு, நாள்தோறும் இவரைத் தரிசித்துவந்தார்கள். இப்படியிருக்குங் காலத்தில் ஒருநாள், அந்த ராணு என்னும் புலையன் மனைவியானவள் ராணுவை நோக்கி, இந்த ஏகநாதர் சாக்ஷாத் பகவத் அவதாரமாதலால் ஒருநாள் இவரை நம் வீட்டில் அமுது செய்வித்தால் நாம் மோக்ஷபதத்தையடையத் தகுந்தவர்களாவோம் என்று சொல்ல, அவனும் அப்படியே செய்யலாம் என்று உடன்பட்டு, இவர் தனியாயிருக்குமபோது, வணங்கி, ஸ்வாமீ, ஒருநாள் அடியேன் குடிசைக்கு எழுந்தருளி அமுது செய்தருள வேண்டு மென்று ப்ரார்த்திக்க, அப்படியே செய்கிறேனென்று இவர் ஒத்துக் கொள்ள, ராணு வென்பவன் தன் மனைவியிடத்தில் இந்தச் செய்தியைச் சொல்ல, அவள் மிகவும் சந்தோஷத்தோடு சமையல் செய்து சித்தப்படுத்தி வைத்துக்கொண்டு, ஏகநாதரை யழைத்துக் கொண்டு வாரும் என்று கணவனிடத்திற் சொல்ல, அவன் போய் இவரை வணங்கி யழைக்க, அவன் பின்னே வந்துகொண்டிருக்கும்போது, பின்னே

வருகிற வேதியர் மனம் பொறுக்காமல், இவரை நோக்கி, நீர் புலையன் வீட்டில் உண்ணத்தகுமோ? இதைக் குறித்து உமக்குத்தண்டனை விதிக்கப்படும் என்றார். அதைக்கேட்ட ஏகநாதர், வேதியரை நோக்கி, காமாதிகளாகிய அரிஷட்வர்க்கத்தை வென்ற ஸ்ரீஹரிபக்தியிற் சிறந்த இவனைப் பறையனென்று சொல்லத்தகாது, நேற்றிரவில் என்னைக் கண்டு கேட்டுக்கொண்டான், அதற்கு நானும் ஒத்துக்கொண்டேன், இந்தக் குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும் என்றார். அதற்கு அவ்வேதியர் இசையாமல், நீர் தண்டனை பெற்றுக்கொள்ளாத பக்ஷத்தில் உம்மைச் சாதியினின்றும் நீக்கிவிடுவோமென்று சொல்லி, இவரை யழைத்துக்கொண்டு போய், நதிக்கரையில் வைத்துப் பிராயச்சித்தம் செய்துகொண்டிருக்கக் கண்ட ராணி வென்பவன், மனம் வருந்திப் போய்த் தன் மனைவியோடு இச்செய்தியைச் சொல்ல, அவள், இன்று ஏகநாதர் வந்து நமது வீட்டில் உண்ணுமட்டும்போனால் உயிர்விடுவேன் என்றாள். அதைக் கேட்ட ராணி வென்பவன், மனைவியை நோக்கி, ஏகநாதர் கருணைக்கடலாகையால் நமது வேண்டுகோளை மறுக்க மாட்டார், அப்படி ஒருவேளை மறுத்தால் நாம் இருவரும் உயிரை விடுவோம் என்று சொல்லி, ப்ராயச்சித்தமசெய்வித்துக்கொண்டுநதிக்கரையிலிருக்கிறஏகநாதரிடத்திற்குப்போய்,தேவரீர் வரவேண்டுமென் றழைக்க, அவரும் வருகிறேனென்றுசொல்ல, அவன் இவர் வருவாரென்னும் மனவுறுதியோடு வீடு சேர்ந்து இவர்வரவை யெதிர்பார்த்திருக்க, இதையறிந்த வேதியர், நீர் முன்பு சொன்னதற்கு இப்பொழுது ப்ராயச்சித்தம் நடந்திருக்க, இன்னமும் அப்படியே சொல்லுகிறீரோ யென்று இவரை இவர் வீட்டுக் கழைத்துக்கொண்டுபோய், இவரை யென்ன செய்தாலும் இவர் பொய் சொல்ல மாட்டார், புலையன் வீட்டுக்குப் போவார் என்று துணிந்து, இவரை வீட்டிலடைத்துக் காவல்காத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது இந்த ஏகநாதர் தேவதார்ச்சனை செய்து, வேதியருக்கு அமுதூட்டி, தாமும் அமுதுசெய்து, பாகவத புராண காலக்ஷேபத்தைத் தொடங்கும்போது, ராணுவானவன் வந்து அழைக்க, நீ முன்னே போ, நான் உன் பின்னே வருகிறேனென்று அவனுக்குத் திடஞ் சொல்லியனுப்பினர். அவன் போனபிறகு விட்டலப் பெருமானைத் தியானித்து, பகவானே, அந்தப் புலையனுடைய மனோரதத்தைச் சீக்கிரத்தில் நிறைவேற்ற வேண்டுமென்று ப்ரார்த்திக்க, ஸ்ரீலக்ஷ்மீ நாதராகிய விட்டலப்பெருமானுனவர் ஏகநாதருடைய ரூபத்தைக்கொண்டு, புலையன் வீட்டுக்குப் போக, அவனும் அவன் மனைவியுமாக இவர்க்குச் சகலவிதமான உபசாரங்களையுஞ் செய்து அமுதூட்ட வுண்டனர். இங்கே காவல் காத்திருக்கும் வேதியர்கள், இத்தச்செய்தியைக்கேள்விப்பட்டுப்புலையன்வீட்டிற்போய்ப் பார்த்து, அங்கே ஏகநாதர் அமுதுசெய்து கொண்டிருப்பதையும், இங்கே வந்து பார்த்து,பாகவத புராண காலக்ஷேபம் செய்துகொண்டிருப்பதையும் கண்டு, அதிசயித்து, அங்கே ஒரு ஏகநாதரும் இங்கே ஒரு ஏகநாதரும் காணப்படுகிறார்கள், ஸ்ரீ ஹரிபக்தர்களுடைய பெருமையை யறிய எமக்குச் சாத்தியப்படாது

ಎಂದು ವೇಶ್ಯಸ್ತ್ರೀಯರೆಲ್ಲರೂ ಇವರ ವಣಂಗಿತ್ ತೋತ್ರಂಗಳ್ ಸೆಯ್ದುಪೋನ್ರ್ ಕಳ್.

அதின் பிறகு, ஒரு நாள் அவ்வூரில், தனக்குக் கிடைத்த ஸ்பரிசவேதிக் கல்லினால், இரும்பு முதலானவைகளைப் பொன்னாகிக் குடும்ப ஸம்ரக்ஷணஞ் செய்து வருகிற ஒரு வேசியன், தன் மனைவியும் புதல்வனும் இறந்து போனதனால், இனி யிங்கே யிருப்பதனால் என்ன ப்ரயோஜனமென்று, காசி யாத்திரை போகத் துணிந்து, இந்த ஸ்பரிசவேதிக் கல்லைக் களங்க மில்லாத கல்ல ஹ்ருதயத்தை யுடையவர்களிடத்தில் கொடுத்துவைத்துப் போக வேண்டுமென்றெண்ணி, யோசித்து, இந்த ஏகநாதர் நிர்மல ஹ்ருதயர், இவரிடத்தில் வைத்துப்போவோமென்று நிர்மானித்து இவரிடத்தற்கு வந்து, நான் காசி யாத்திரை போய் வருமளவும் இந்தப் பரிசவேதிக் கல்லைப் பத்திரப்படுத்தி வைத்திருந்து, நான் வந்த பிறகு எனக்குத் தரவேண்டுமென்று சொன்னான். அவனை இந்த ஏகநாதர் இந்தக் கல்லின் பெருமை யென்னவென்று கேட்க, அவன் இரும்பு முதலானவைகளைப் பொன்னாக்குவது இதன் பெருமை யென்றான். அப்படியானால் இருக்கட்டும், நீ யாத்திரை போய் வாவென்று சொல்லி, அந்தக் கல்லை, அவன் கண் காணுமபடி நிருமாலியக் குப்பையிற் போய் விழும்படி எறிந்தார். அவன் இதைக் கண்டு, அதைக் கல் காணுமற் போனால் நீர்தான் தரவேண்டுமென்று சொல்லித் தீர்த்த யாத்திரை போய்த் திரும்பி வந்து, ஏகநாதரைக் கண்டு வணங்கிக் கல்லைக் கேட்டான். இவர், உன் கண் காண நான் குப்பையி லெறிந்தேனே, அது உனக்குத் தெரியுமல்லவா? அதைக் குப்பையில் தேடிக் கண்டெடுத்துக்கொள்ளக் கடவா யென்றார். அப்படியே அவன் அந்தக் குப்பையில் தேடித் தன் கல்லைக் காணுமல் மனம் வருந்தும் போது, நீர் போன பிறகு, நாள்தோறும் சேர்கிற நிருமாலியக் குப்பையை நதியிற் கொட்டிவிடுகிறோம், நதியில் போய்த் தேடினால் கிடைக்கும், போவோம வாருமென்று அவ்வேசியனை யழைத்துக் கொண்டுபோய் நதியிற் குளித்து, ஒரு மணிமுறையக் கற்களை வாரிக்கொண்டு வந்து, இவற்றுள்ளே உமது கல்லைத் தேடியெடுத்துக்கொள்ளுமென்று சொல்ல, அவ்வேசியன் ஒவ்வொரு கல்லாக இரும்பில் பரிசித்துப் பொன்னானதைக் கண்டு, எல்லாம் பரிசவேதிக் கற்களாகவே யிருக்கின்றனவென்று வியந்து, ஸ்ரீவிட்டலபெருமானே ஏகநாதராய் அவதரித்திருக்கிறாரென்று மனத்திற்கொண்டு, தனக்கு வேண்டிய ஒரு கல்லை யெடுத்துக்கொண்டு, இவரைப் புபழ்ந்து தன்னீட்டுக்குப் போய்விட்டான். இவர் மற்றக்கற்களை நதியி லெறிந்துவிட்டு நீராடித் தமது மனையை யடைந்தார்.

அப்பால், ஒருநாளிரவில் நான்கு திருடர் வந்து மடத்திலிருந்த சில பொருள்களைத் திருடிக்கொண்டு போக வுத்தேசித்த வுடனே, கால்வருக்கும் கண் தெரியாமல் போய்விட்டதனால், தடவிக்கொண்டே, ஏகநாத ரிருக்குமிடத்துக்கு வந்து, கண் பெற்று, ஏகநாதரைக் கண்டு வணங்கி நிற்க, இவர் அவர்களை நோக்கி, நீங்கள் என்னகாரியமாயிங்கே வந்தீர்களென்று கேட்க,

அவர்கள், ஸ்வாமீ! திருடும்பொருட்டு நாங்கள் இங்கே வந்தோம், வந்த மடத்துப் பொருளைத் தொட்டவுடனே கண் தெரியாமற் போயிற்று, இப்போது தேவரீர் சந்நிதியைச் சேர்ந்தவுடனே கண் பெற்றோம், உம்மைப்போலப் புண்யாத்மாக்கள் இவ்வுலகத்தில் ஒருவருமில்லை, நாங்கள் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க, ஸ்ரீலக்ஷ்மீநாதராகிய பகவானுக்கு அன்பராகிய ஏகநாதரானவர், அவர்களை நோக்கி, நீங்கள் அஞ்சவேண்டாம், நீங்கள் விரும்பும் பொருள் எதாயினும் இங்கே யிருந்தமாஞல் எடுத்துக்கொண்டு போகலா மென்று சொல்ல, இவர் சொல்லும வார்த்தையின் தன்மையை நோக்கி, எங்களுக்கு இந்த நகராத்தியில் பசி மிகவும் உண்டாயிருக்கின்றது, ஆகையால் எங்கள் பசியை நீக்கியருள வேண்டு மென்று வேண்ட, உடனே இவர் தமது தேவியாரைத் தூண்டிலெழுப்பி, இவர்களுக்கு அந்த மிட வேண்டுமென்று நியமிக்க, அப்படியே நானாகமாகச் சமையல் செய்து அவர்களுக்கிட்டு, அவர்கள் பசியை நீக்குதலும், அவர்கள் இவரைப் புகழ்ந்து கொண்டாடிக்கொண்டு போய்விட்டார்கள.

மற்றொருகாலிரவில் ஒரு பலறையன் களவு செய்ததனால் சிறை செய்யப்பட்டு உணவில்லாமல் வருந்தி, வெளிப்பட்டு வருமபோது, பசியினால் வருந்தி நடக்கச் சக்தியில்லாதவனாய் இவர் மடத்துக்கு நேரில் வந்து கனத்த விழக் கண்டு, இவர் இது என்ன வென்று கிட்டி வந்து பார்த்து, மனிதனுயிருக்கக்கண்டு, நீ எனிங்கு வந்தாய் என்று கேட்க, அவன் பசிக் கனியால் வாய் திறவாமல், கையினால் பசியென்று குறிப்பித்துக் காட்டினான். இவர் அவன் குறிப்பைப் புரிந்துகொண்டு, இவன் முடையுதல் தொண்டையளவும் உலர்ந்திருக்கும், இப்போது அதை முண்பித்தால் தொண்டையில் விக்கி யிறந்து போவான் என்று, சர்க்கரை சேர்ந்த பாலே வட்டிலில் வார்த்து அவனைப் பருகுவித்தார். உடனே அவன் சோர்வு நீங்கி வல்லமையும் பெற்று, ஏகநாதரை நோக்கி, நான் பலறையன், களவு செய்த குற்றத்தால், ராஜ தண்டனைக் குட்பட்டு வருந்தி யிளைத்து உயிர் நீங்கத் தருணத சமயத்தில் இங்கு வந்துவிழுந்தேன், என் சோர்வை நீக்கிக் காப்பாற்றினீர், இன்னம் என் உடம்பு தேறுகிறவரைக்கும் காப்பாற்றினால் உமக்குப் பெருமை புண்ணியமுண்டாகும் என்று ப்ரார்த்திக்க, அப்படியே இசைந்திரு என்று சொன்னார். இவைதக் கண்ட வேதியரெல்லாரும், இவர் பலறையனுக்கு உபசாரம் செய்வதைக் குறித்துப் பொறுதவர்களாய், இவரை நிந்தித்துப்போனார்கள். அந்தப் பலறையன் தெருவாள் இனிடத்தில் தங்கியிருந்து, இவரது சேவையில் மண்டி, உடம்பைத் தேற்றிக்கொண்டு, விடைபெற்று யாத்திரையாய்ப் போய்விட்டான்.

மற்றொருநாள் இவர் நீராடிவரும வழியிலுள்ள ஒரு அரச மரத்திலிருந்த ஒரு ப்ரஹ்மரக்ஷஸு, இவருக்கெதிரே வந்து நின்று வணங்கி, நீர் செய்த அந்த தானத்தின்பலன் மலைபோலக் குவிந்திருக்கிறது, அதில் ஒரு பதையலுக்குச் செய்த அந்ததான பலத்தை யெனக்குத் தந்தால், நான் என் பூர்வரூபம் பெறுவேன் என்று ப்ரார்த்திக்க, அப்படியே தந்தேனென்றார். உடனே

அந்த ப்ரஹ்மராக்ஷஸ¨ தன் பூர்வரூபம் பெற்று ஏகநாதரை வணங்கிச் சென்றது. மூன்னே யிவரை நிந்தித்துப் போன வேதியர்கள் இந்தச் செய்தியைக் கண்டு, அஞ்சிவந்து இவரைத் தோத்திரஞ்செய்துபோனர்கள்.

அதின் பிறகு, வடமொழிப் பாகவதத்தை ப்ராக்ருதத்தில் உரையோடும், ஹஸ்தாமலகம் என்னும் நூல் அப்படியே உரையோடும், சுகாஷ்டகத்தை அப்படியே உரை யோடும, இன்னம அநேகமான அபங்கக் கவிகளும் கீர்த்தநங்களும செய்து உலகத்தில் பரவச் செய்ய, இவரது ப்ரபாவத்தைக் கேட்ட அநேகமான அதிஸர்கள் மிகவும சந்தோஷித்தார்கள். ஒரு வேதியன், இவர் செய்த பாகவதமூகாவைப் பெற்றுத் திருத்தோறும பாராயணஞ் செய்பவனுயிருந்து, பிறகு காசி யாத்திரை போனன். அவவிடத்தில் கங்கா ஸ்நாநமசெய்து மணிகர்ணிகா கட்டத்தில் உட்கார்ந்து பாராயணஞ செய்து கொண்டிருக்க, அங்கே, மஹாவித்வானுகிய ஒரு சந்நியாசியின் சீடரிருவர் நீராடவந்து இதைக்கேட்டு, இது மிகவுஞ சுவையுடைத்தா யிருக்கின்றது, இது யார்செய்த தென்று கேட்க, வேதியன், தேவகிரியிலுள்ள ஏகநாதர் என்னும் மஹாத்மா செய்ததென்று சொல்ல, அநதச் சீடர்கள், இது உலகில் பரவுமானல், வடமொழிப் பாகவதத்தை ஒருவருந தேடமாட்டார்களென்று நிர்மாநித்துக்கொண்டு, தமது ஆசானுகிய சந்நியாசியினிடத்திற்போய் இநதச் செய்தியைச் சொல்ல, அவன் கோவங கொண்டு, அநத க்ரந்தம செய்த வனை யழைத்து வாருங்களென்று ஒரு கடித மெழுதி யனுப்ப, அநத இரண்டு சீடரும கொண்டுபோய்க் கொடுக்க, ஏகநாதர் படித்துப் பார்த்துக் கொண்டு, தமது சீடராகிய உத்தவரை யழைத்து, நான் காசியாத்ரை செய்து வருமளவும, நீர் தேவதார்ச்சனை முதலியவறை நடப்பித்துக்கொண்டிருக்கக் கடவீரென்று சொல்லிப் புறப்பட்டுப்போய், கங்கையில் நீராடி, பகவதாராதநம் செய்து யோக நிஷ்டையில் எழுநதருளி யிருநதார். கடிதங காட்டி இவரை யழைத்துவநத சீடர்கள் மடதநிற் போய்த் தமது ஆசானுக்கு இவரது வரவைத் தெரிவிக்க, அவன், இவரை மடத்திறகு அழைத்துக்கொண்டு வந்து வைத்திருங்கள் என்று சொல்லிவிட்டு, முநதூறு சீடரோடு பிச்சை பெற்று வரப்போனன். சீடர் இருவரும் ஏகநாதரை யழைத்து வந்து மடத்தில் வைத்துக்கொண்டிருந்தார்கள். பிறகு சந்நியாசி வரும் வழியில் எதிரே போய்ச் சொல்ல, அவன், சீடர் முகத்தை நோக்கி, முன்னோர் க்ரந்தத்தின் மஹிமையைக் கெடுத்தவனை, ஒவ்வொருவரும் ஐயைந்து குத்தாய் ஓங்கிக் குத்துங்கள், நான் இதோ உங்கள் பின்னுலே வருகிறேன், நீங்கள் முன்னே போங்கள் என்று சொல்ல, அப்படியே செய்வோமென்று போகிறவர்களில் சிலர், நமது ஆசான் சொன்னபடியே செய்வோமானல் அவனுயிர் நீங்கும், அதனல் நமக்குக் கொலைப்பாவம் சம்பவிக்கும், ஆதலால் அவனுடைய தன்மையை யாராய்ந் தறிந்து, பிறகு செய்யத் தகுந்ததைச் செய்வோமென்று ஏகநாதரிடத்துக்குப்போக, அவர் இவர்கள் கண்களுக்கு, சாக்ஷாத் விட்டல பகவானுகவே தோன்றக் கண்டு, திகைத்து, பயபக்தியோடு ஏகநாதரது தி

வடியை வணங்கித் தோத்திரம்பண்ணி, ஸ்ரீவிட்டலப் பெருமானையும் பல வாறு புகழ்ந்து நின்றார்கள். இந்தச் செய்தியைச் சிலர் போய்ச் சங்கியாசிக்குச் சொல்ல, சங்கியாசி முன்னிலும் கோபம் அதிகரிக்கப் பெற்றவனுய், தனது ஆசனத்துக்குத் திரையிட்டு மறைக்கச் சொல்லி, ஒருவனே யனுப்பி, மறைத்த பிறகு, அந்த ஆசனத்தில் தான்போயிருந்து, அதட்டி, ஏகநாதா, உத்தமமான மறையோர் குலத்துதித்து, சங்கியாசமடைந்த நான், உன் கபட வித்தையையச் சீரழித்துத் தண்டிக்தோட்ட வந்தேன் என்று சொல்ல, ஏகநாதர், ஸ்வாமீ, அடியேன் சிறு பாலகன், அடியேனே யழைத்து முகங் காட்டாமல், திரைக்குள்ளே யிருந்து, கோபித்துப் பேசும்படி, யான் செய்த குற்றம யாதாயினும் உளதானுல் பொறுத்தருளவேண்டும், தேவரீருடைய திருமுகத்தைக் காண விரும்புகிறேன் என்று சொல்லக் கேட்ட சங்கியாசி, சாத்தகுணத்தையடைந்து, திரையை நீக்கிப்பார்த்து, இந்த ஏகநாதர் ஸ்ரீகண்ணபிரான் வடிவமாய்த் தோன்றக் கண்டார். கண்டு, மிகவும் பயந்து, ஆச்சரியமடைந்து, ஏகநாதரை வணங்கி, ஸ்ரீகண்ணபிரானே, அடியேனைத் தொண்டு கொள்ளவோ வந்தாய் என்று துதித்து நிற்க, ஸ்ரீகண்ணபிரான் உருவம் மாறி, முன்போல ஏகநாதராய் விளங்கக்கண்டு, ஸ்ரீபரந்தாமனே இப்படி உலகத்தார் ஈடேறும்பொருட்டு அவதரித்தாரென்று நிச்சயித்து, அருகில் வந்து திருவடியைப் பிடித்துக்கொண்டு, அவிவேகியாகிய அடியேனுடைய குற்றத்தை மன்னித்தருள வேண்டுமென்று நிலத்தின்மேல் கிடக்க, ஏகநாதர் அருகச் சங்கியாசியைத் தூக்கி யெடுத்து, ஆசிரமத்தால் உயர்ந்த நீர் என்னைப் பணியத்தகுமோ வென்று உபசாரவார்த்தைகள் சொல்லி, இருமென்று சொன்னர். அப்போது சங்கியாசியானவன் இவரை நோக்கி, ஸ்வாமீ, தேவரீர் திரு வாக்கினுல் ஸ்ரீ பாகவதத்தைக் கேட்க விரும்புகிறேன் என்று ப்ரார்த்திக்க, அப்படியே ஏகநாதரும் ஸ்ரீபாகவதத்தைப் படித்து வ்யாக்யானம் செய்ய, சங்கியாசி கேட்டு ஆநந்த பரவசனுய், தேவரீர் சில நாள் இவ்விடத்தில் என்னுடனே கூடியிருக்கவேண்டுமென்று வேண்ட, ஏகநாதரும் அவன் வேண்டுகோளுக்கு இசைந்து அவ்விடத்தில் இருக்கும்போது, இவரது ஸ்ரீபாகவதத்தை அரங்கேற்ற வேண்டுமென்று சங்கியாசியானவன் ப்ரயத்நம் செய்யக்கண்ட அவனது சிடர்கள் அவனை நோக்கி, ஸ்வாமீ, இந்த ஏகநாதன் செய்த பாகவதத்தைத் தேவரீர் அங்கீகரிக்கலாமா? உம்மை யொத்தவர்களெல்லாம் இதைச் சிறப்பித்தீர்களானுல், வடமொழிப பாகவதத்துக் கென்ன மஹிமையுண்டு என்று கேட்க, சங்கியாசி அவர்களை நோக்கி, நானும் உங்களைப்போலவே அதை அநாதரித்து, நீரி லெறியலாமென் றெண்ணி யிருந்தேன். அவரைக் கண்டபோது, அவர் ஸ்ரீகண்ண பிரானது திருவுருவாகவே சேவை தந்தருளினார். ஆகையால் சாக்ஷாத் பகவதம்ஸமே யென்று தணிந்து அவரை வணங்கினேன், நீங்களும் அவர் விஷயத்தில் அபசாரப்படவேண்டாம் என்று சொல்ல, அவர்கள் அவன் சொல்லையும் லக்ஷ்யம் பண்ணுமல் ஏகநாதரிடத்தில் இருந்த புத்தகத்தை வலிந்தெடுத்துக் கொண்டுபோய் நதியிலெறிந்து விட்

டார்கள். அப்போது அத்தப் புத்தகம நீரில் வீழ்வதற்கு முன்பே, கங்கா தேவியானவள் தனது கய்கணக் கையை நீட்டி அன்போடு ஏற்றுக்கொண் டாள். எதிர்த்த வேதியர்கள் அதைக்கண்டு பயந்து, நமது ஆசாரியர் சொன் னது மெய்யே, நாம் செய்தது பிழையே யாமென்று, ஏகநாதரை யடைந்து அவர் திருவடியை வணங்கி, மூர்க்கராகிய எங்கள் பிழையைப் பொறுத் தருளவேண்டு மென்று ப்ரார்த்தித்தார்கள். அப்பால் இவர்களிற் சிலர், ஆற் றில் நீந்திக்கொண்டுபோய் கங்காதேவியின் கையிலிருந்த புத்தகத்தைத் தக் கொண்டு சங்கியாசியினிடத்தருகு வந்து புத்தகத்தைக் கொடுத்து, ஸ்வாமீ, தேவரீர் சொன்ன சொல் வேத வாக்கியமே யென்று கொண்டாட, அவன், நீங்கள் ஏகநாதருக்கு அடிமைப படுங்களென்று சொல்ல, அப்படியே அந்த வேதியரெல்லாரும் ஏகநாதர் திருவடியை வணங்கி, எங்களை யீடேற்ற வேண்டுமென்றார்கள். அப்போது ஏகநாதர், சங்கியாசியையும் அவ்வேதி யரையும் நோக்கி, நீங்கள் எனக்குச் செய்யுஞ் சிறப்புக்களெல்லாவற்றையும் இதைக் கிரந்தத்துக்குச் செய்யுங்களென்று சொல்ல, அதற்கு அவர் யாவ ரும் மகிழ்ந்து, அந்தக் கிரந்தத்தை யானை முதுகிலேற்றி, பலவாத்தியங்களும் கோஷிக்கவும், பக்தர்கள் ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டு சூழ் ந்து வரவும், சுகந்த பொடி, புஷ்பம் முதலிய பரிமள திரவியங்களை அன்பர் கள் தூவிக்கொண்டு வரவும், வழியிலிருப்பவர்கள் கர்பூரஹாரதி முதலிய உபசாரங்களைச் செய்யவும், ஏழுநாள் வரையும் ஊர்க்கோலம வந்து, பட்ட ர்கள் மடத்தைச் சேர்ந்து, ப்ராஹ்மண சந்தர்பண முதலியவும் செய்து மகிழ்ந்திருந்தார்கள் அன்று இரவில், ஏகநாதர் ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தனம் செய்யக்கேட்டவர் எல்லாரும் ஆநந்தமடைந்து, ஹாரதி செய்து, பரமாநந்த மபிவ்ருத்திக்கொண்டு, காலுநாளளவும் ஸ்ரீ பாகவத விஷயமாக உத்ஸவம் நட த்தி, எல்லாரும் ஏகநாதர் செய்த ஸ்ரீ பாகவநத்தையே படித்து ஆநந்திக்க லானார்கள்.

அதன்பிறகு, ஏகநாதர், சங்கியாசி முதலியோரிடத்தில் விடைபெற்றுத் தமதூருக்கு வரும்வழியில், தாசோபண்டிதர் என்னும பெயருள்ள வேதியர், இளமைப பருவத்திலே தத்தாதேரியமூர்த்தி கண்டு வணங்கினேனத்து, உறவி னர் முதலியோரை விட்டு ஒரு காடடுக்குப் போய், சருகு முதலியவற்றைப் புசித்து, தேஹாபிமாநத்தை விட்டு, இருபது வருஷகாலம வரைக்கும் அவரை த்யாநம் பண்ணிக்கொண்டிருக்க, அவர் இவர்மீது இரக்கங்கொண்டு தமது அருளுருவைக் காட்டியருளக் கண்டு, திவ்ய சரீரம் பெற்று, அநேக மான கவிகளைச் செய்து ப்ரபலராயிருந்தார் அவர் ஏகநாதரது வைபவத் தை, முன்பே கேட்டறிந்திருப்பவராதலால் வந்து இவர் திருவடியை வண ங்க, இவரும் அவர் திருவடியை வணங்கி, இருவரும் ஒருவர்க்கொருவர் தழுவிக்கொண்டார்கள். பிறகு அவ்வேதியர் இவரைத் தமது பாணசாலைக்கு வரும்படி ப்ரார்த்தித்து, அழைத்துப் போய், சகல உபசாரங்களும் செய்து அமுதருந்தச் செய்து, பிறகு ஸ்ரீபாகவதம ஏகநாதர் திருவாக்கால் கேட்டு

அன்றிரவில் ஹரிகாமஸங்கீர்த்தனமும் கேட்டு மகிழ்ந்தார். இப்படி ஒருமாச காலம் வரைக்கும் இவரை வைத்துப் பூஜித்துக்கொண்டிருக்க, இவர், க்ருஷ்ண ஜயந்தி நெருங்கிவிட்டபடியால் ஊர்க்குப்போகவேண்டும், நீரும் அக்கச் சமயத்தில் அங்கு வரவேண்டு மென்று சொல்லிப் போயினர்; போய் ஊரையடைந்திருக்க, தாசோபண்டிதரும் ஸ்ரீஜயந்திக்கு முன்பே வந்து சேர்ந்தார். சேர்ந்து, யகநாதர் மடத்து வாசற்படியருகே, தத்காத்சேயர், சூலத்தைக் கையிலேந்திக்கொண்டு நிற்கக்கண்டு, வியந்து வணங்கி, ஐயனே, இங்கே யெழுந்தருளி யிருப்பதற்குக் காரணம் யாதென்று கேட்க, அவர் இதைப் பண்டிதரைத் தழுவிக்கொண்டு, இந்த யகநாதர் பகவதம்ஸமாய் அவதரித்தவர், இவரது அன்புக்காக, இவர் மடத்து வாசற்படியி லிருந்து, இவரைச் சேவிக்க வருவோரை நெருங்குந் தெரிவித்துக்கொண்டிருப் பேன், இவருடைய தபோ மஹிமையைச் சொல்ல வல்லவர் யார்? அநேக ஜகமங்களில் செய்த தவப்பேற்றை யுடையவர்களுக்கே யன்றி, மற்றவர்க ளுக்கு இவர் தரிசகம் கிடைப்பது துர்லபம் என்று சொல்லி, பண்டிதரை வாசற்படியில் நிறுத்திவிட்டு, உள்ளே போய் யகநாதருக்கு அறிவிக்க, அவர் உடனே யெழுந்து வந்து பண்டிதரைத் தழுவிக்கொள்ள, இவரும் யகநாத ரைத் தழுவிக்கொண்டு அநேயோக்ய சமாசாரணம் செய்த பிறகு பண்டிதரை உள்ளே அழைத்துக்கொண்டு போய்ச் சகல உபசாரங்களோடும் அமுதுசெய் வித்து, புராண காலக்ஷேபம் கேட்பித்து, அன்றிரவில் ஸ்ரீ ஹரிகாமஸங்கீர்த் தனஞ் செய்ய, பண்டிதர் கேட்டு மகிழ்ந்திருந்தார். இப்படி ஸ்ரீஜயந்தி உத்ஸ வம் முடிந்தவுடன் அங்கிருந்து, பிறகு யகநாதரிடத்தில் விடை பெற்று, தமதுஜன்மராயடைந்து யாவருக்குமுபகாரமுடைய வைபவத்தைச் சொல்லி க்கொண்டிருந்தார். யகநாதரும், தமது மடத்துக்கு வருகிற சாதுக்களுக் கெல்லாம், அன்னம் வழங்கி, பகற்காலங்களில் ஸ்ரீபாகவதபுராண காலக்ஷேப மும், இராக்காலங்களில் ஸ்ரீ ஹரிகாமஸங்கீர்த்தனமும் செய்துகொண்டிருக் தார். இப்படியிருக்குங் காலத்தில், ஒருநாள் இவர் கோதாவரிக்குப் போய் நீராடி வரும் வழியில், துர்மார்க்கனான ஒரு துருக்கன் இவரை மதிக்கா மல் எச்சில் உமிழ்ந்தான். அது இவர்மேல் படாது விழுந்ததைக் குறித்துக் கோபங்கொள்ளாமல், அவன் செய்த பாவபலனை பொருட்டுப் பரலோகத்தில் தண்டிக்கப்படுவானே என்று அவனது துர்க்கதிக்குத் தாம் மனம் வருந்தி, இவனை எப்படியாகிலும் பரிசுத்தனுக்கவேண்டுமென்று எண்ணி, மறுபடி யும் போய் ஸ்நானஞ் செய்து வந்து, தமது நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்தபிறகு, ஓர் ஆளிடத்தில் பிரசாதத்தைக் கொடுத்து அவனோடுகூடத் தாமுமாய்ப் அந்தத்துருக்கன் வீட்டையடைந்து, இந்தப்பிரசாதம் ஸ்ரீபகவ தர்ப்பணஞ் செய்யப்பட்டது, ஆதலால், இதனை உன் எல்லாப பாபங்களும் நசிக்கும் பொருட்டு, உட்கொள்வாயாக என்று சொல்ல, அந்தத் துருக்கனு க்கு இவரது தரிசன மாத்திரத்தால் ஞானோதய மானதனால், இவர் பரிசுத் தாத்மா என்று மனத்திற்கொண்டு, இன்று உதயத்தில் இவர்மீது காம எச்

# ஸ்ரீ பக்தலீலாம்ருதவசநம்

இலே உமிழ்ந்ததை மறந்து, நம்பொருட்டு, அமுதேதந்திக்கொண்டு வந்து கொடுத்து, நமக்கு ஹிதமான வார்த்தைகளுஞ் சொல்லுகின்றீரே, இவரைப் போல் பரமசாதுக்கள் மூவுலகங்களிலும் கிடைப்பது அருமை என்று தீர் மானித்து, இவரது திருவடிகளில் விழுந்து வணங்கி, அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளல் வேண்டுமென்று பிரார்த்திக்க, ஏகநாதரும் அவனே கோக்கி, உன் குற்றத்துக்காக நீ யஞ்சவேண்டியதில்லே, இப்போது நான் கொடுத்த பகவத் பிரசாதத்தால், உன பாப முழுதும் நசித்துப்போயி ற்று என்று அபயங்கொடுத்துத் தமது மடத்தை யடைந்தார். அதத் துரு க்கன் இதப் பகவத்பிரசாதத்தைஉட்கொண்டுஅதனுல் மனம் தெளிவடைய ப் பெற்று ஸ்ரீஹரி பக்த ஞனன். பிறகு ஒரு நாள் மத்தியான காலத்தில் இவர் கோதாவரி தீர்த்தமாடி வரும்போது, இவருக் கெதிரே மிகவும் சூடே றின மணலின்மேல் வீளேயாட வந்த ஒரு குழந்தை அகப்பட்டு, ஓடவுஞ் சக்தியில்லாமல் பதைத்து, வாய்விட்டு அழுது வருதுவதைக் கண்டு, அந்த க் குழந்தையைக் கிட்டி, அதை எடுத்து அணைத்துத் தமது ஆடையால் வேர்வை துடைத்து, அந்தச் சிசுவை நோக்கி, அப்பா குழதாய், உன் வீடு எங்கே என்று கேட்க, அந்தச்சிறுவன், தன் வீடு இருக்குந் திசையைக் கையினுல் காட்டினுன். உடனே அந்தச்சிறுவனே எடுத்துக்கொண்டு, அவன் காட்டினதிசையைக் குறித்துப்போய் எதிரே தேடிக்கொண்டு வருகிற அந்த க் குழந்தையின் தாயைப்பார்த்து அவள் கையில் கொடுத்து அவள் பூரிக்கி என்பதை யறிந்து, மறுபடியும் நீராடி வந்து மடத்தைச் சேர்ந்தார்.

பின்பொரு காலத்தில், திரியம்பகம் என்னும் ஊர்க்கு அயலில் உள்ள ஒரு சிறு கிராமத்திலிருப்பவனுகிய ஒரு வேதியன், குஷ்ட நோயால் மிகவும் வருந்தி, பலவிதமான பரிஹாரங்களாலும் அது தீராதிருக்கக் கண்டு, இதற்கு யாம் என்செய்வோம்! நமக்குச் சிவபெருமானே யன்றி வேறொரு துணையுமில்லேயென்று துணிந்து, பகிரங்க கந்த மூலபலாதிகளே உண்டு, பன் னிரண்டுவருஷகாலங் கழித்து வந்தான். அப்படியிருக்குங் காலத்தில், ஒரு நாள் சிவபெருமான் அவனது கனவில் வந்து, கோதாவரி நதிக்கரையில் உள்ள தேவகிரி என்னும் ஊரில், ஏகநாதர் என்னும் ஒரு ஹரிபக்தரிருக்கி றார், அவரிடத்தில் போய், அவர் மனையில் அடைப்பட்டுப் பசுங்கத்த ஒரு குழந் தையைக் காப்பாற்றின புண்ணியத்தைத் தர வேண்டியாயாகுல், உடனே உன் பிணி முழுதும் நீங்கிப்போகும என்று சொல்லி மறைந்தார். உடனே வேதியன் நித்திரை விட்டெழுந்து, தேவகிரியில், ஏகநாத ஸ்வாமிகளின் திருமாளிகைக்குப் போய், அவ்விடத்தில் அவரைக் காணுமல் தேடிக் கொண்டு கோதாவரி நதிக்கரையில் வருதுநின்று, அந்நதியில் நீராடுவோரைப் பார்த்து, ஏகநாத ஸ்வாமிகள் என்பவர் யார் என்று கேட்க, அவர்கள், இவ ரைச் சுட்டிக் காட்ட, வேதியன், சமீபித்து, ஏகநாதரது திருமுகத்தை நோக்கி, மனமுருகி, பலவகையாகத் தோத்திரஞ் செய்து வணங்கி, சிவபெரு மான், தன் கனவில் வந்து சொன்னதையும, தான் படுகிற துன்பத்தையும்,

விண்ணப்பஞ் செய்ய, ஸ்வாமிகள் திருவைகூர்க்கு, தாம், மணலிலகப்பட்டு வருந்தின குழந்தையைக் காப்பாற்றினதனால் உண்டான புண்ணியத்தை வேதியனுக்குத் தாரைவார்த்துக் கொடுக்க, உடனே அவன் பிணி நீங்கி, தேஜஸும் ஒளியோடு கூடிப் பிரகாசிக்கப்பெற்று, ஸ்வாமிகளை வாழ்த்தி வணங்கினன். இதைக் கண்ட வேதியரெல்லாரும், ஜயஜய கோஷஞ் செய்து, இவருக்கு நிகராவார் பொருவருமில்லையென்று புகழ்ந்துகொண்டாடினார்கள். ஏகநாத ஸ்வாமியும் தமது மடத்தையடைந்து இனிதாக வாழ்ந்திருந்தார்.

அதனபிறகு ஒருநாள், உத்தரவர் என்னும் வேதியர் முதலானோர் வந்து ஏகநாதரை வணங்கி, நீர் செய்த பாகவதத்தை யாங்கள் கேட்க விரும்புகிறோம் என்று அன்போடு வேண்ட, அப்படியே ஏகநாதர் பாகவதஞ் சொல்லத் தொடங்கினார். அப்படித் தொடங்கின காலில், கோதாவரி யென்னும் நதி, தன் பெண் ரூபங்கொண்டு, கால க்ஷேபம் நடக்கும் இடத்தின் ஒரு பக்கத்தில் வந்திருந்து, நித்ய தானும் காலக்ஷேபங் கேட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்து, அங்குவரும் பாகவதரெல்லாரும் இந்த பெண் யாரோ, அறிவிலேமென்று, காலக்ஷேப முடிவில் அவள் போகுமபோது கூடவே தொடர்ந்து போய், அவள் கோதாவரியில் முழுகக் கண்டு, தங்கள் மனத்தில் அதிசயித்து, இதற்குப் பெண் ரூபங்கொண்டவரது புராண காலக்ஷேபங் கேட்டது கோதாவரி நதியே யென்று துணிந்து போய், ஏகநாத ஸ்வாமிகளிடத்தில் இக்கச் செய்தியைச் சொல்ல, அவர் பாகவதரைத் நோக்கி, உங்கள் புண்ணியவசத்தால் கோதாவரியின் நிஜ ரூபத்தைக் கண்டீர்கள் என்று சொல்ல, அவர்கள், எல்லாம் உமது பாகவத காலக்ஷேபத்தின் பிரபாவமே யல்லது வேறல்ல வென்று புகழ்ந்து, பாகவத பாராயணஞ் செய்துகொண்டிருக்குங் காலத்தில், ஏகநாதரது படித்துக்குருவில் குடியிருப்பவனுயிருந்தும், ஸ்ரீஹரிநாமத்தை ஒருகாலத்திலாகிலும் சங்கீர்த்தனம் செய்யாதவனுயிருக்கிற ஒரு குடியானவனை ஏகநாதர் பார்த்து, ஐயோ, இவன் கிடைத்தற்கரிய மானுட தேகத்தைப் பெற்றும் அதை வீணுக்குகிறானே யென்றும், நமது மடத்தருகிலிருந்தும் கர்மமாடி கலவாமல் இப்படி வீணாய் கழித்துப் போகிறானே யென்றும் நினைத்து, அன்பு பிறந்து, அவனைத் திருத்தும்பொருட்டு, அவனை ஒருநாள் வழியிலே கண்டு, குடியானவனே, உன் குடும்பத்தோடு நீ சுகமாயிருக்கிறாயா என்று விசாரிக்க, அவன் எல்லாரும் சுகமாயிருக்கிறார்க ளென்று தன் குடும்ப க்ஷேம லாபங்களைச் சொல்ல, கேட்ட ஏகநாதர், உன் குடும்ப வாழ்க்கையைக் கழிக்குங் காலத்தில், ஒரு கடிகைப்போதாயினும் சக்ரபாணியாகிய பகவான் கதையைச் சிரவணஞ் செய்ய வேண்டும் என்று வலித்து சொல்லக் கேட்ட அவன், எனக்கு ஒரு க்ஷண காலமாயினும் ஒழிவில்லையென்று சொல்ல, இவர் அவனை நோக்கி, நீ இதே வேலையாயிருக்காமற்போனாலும், வேலை செய்கிற காலத்திலாகிலும் ஸ்ரீஹரியின் திருநாமத்தை மறவாமல் ஸ்மரித்துக்கொண்டிரு, அப்படி வேலைக் காலத்தில் ஒருவேளை இசையாமற் போனாலும் போகட்டும் என்று சந்தோஷ

க்தோடு, ஒரு கடிதமெழுதி, அந்தக் கடிதத்தில் ஒருசுலோகத்தை யெழுதி, அவன் முகத்தைக்கையினல் தடவி, நீ இந்தச் சுலோகத்தையாயினும் தெளிந்தறிவாயாக என்று சொல்லித் தமது மடத்திற் சேர்ந்திருந்தார். அவன் அந்தச் சுலோகத்தைப் படித்து அதின் அர்த்த சாரத்தை யறிந்து, அது மிகவும் இனிமையா யிருக்கக் கண்டு, மறு நாள் வந்து மற்றொரு சுலோகம் எழுதித் தரவேண்டு மென்று வேண்ட, அப்படியே யெழுதிக் கொடுத்தார். அதையும் படித்து அதின் சாரத்தை யறிந்துகொண்டு, மிகவும் ஞானவானகி நாள்தோறும் பகலில் யாகவத காலக்ஷேபத்திலும், இரவில் ஹரிநாம ஸங்கீர்த்தநத்திலும் விருப்பமுள்ளவனு யிருப்பதை யறிந்த ஏகநாதர், ஸஹஸ்ரநாமத்தை யெழுதிக்கொடுத்து, இதைத் தினந்தோறும்ரோடி, நியமமாய்ப் படநம் பண்ணக் கடவா யென்று கொடுக்க, அவன் அப்படியே செய்து ஹரிதாசன் ஆனன்.

இது நிற்க, ஏகநாத ஸ்வாமிகள் இவ்வாறு பகவத் நியாநபராய்க காலங் கழிக்கையில், இவருக்கு ஒரு மகள் பிறந்தாள். அவளுக்குக் கோதாபாயி யென்று பெயரிட்டார். அதின்பிறகு ஒரு மகன் பிறந்தான், அவனுக்கு ஹரி யென்று பெய ரிட்டார். அதின்பிறகுஒரு மகள் பிறந்தாள், அவளுக்குக் கங்காபாயி யென்று பெய ரிட்டார். இவர்களை அன்போடு வளர்த்து வந்து, பெண்க ளிருவருக்கும் பருவம் வந்த வுடனே, அவர்கள் தகுதிக்கேற்ற மணவாளர்களைத் தேடி மணமுடித்துக் கொடுத்தார். பிறகு ஹரியென்னும் புதல்வர் சகல சாஸ்த்ர பண்டிதராய் பாகாசிக்க, அவருக்கும் மணமுடித்து வைத்தார். அவருக்கு மூன்று மக்கள் பிறந்தார்கள். அவர்களில் இளைய பிள்ளையாகிய ராகவனை இங்குவிட்டு, மற்ற இரண்டு பிள்ளைகளையும், தேவியையும் அழைத்துக்கொண்டு காசிக்குப்போய் அவ்விடத்தில் வாசம் பண்ணிக்கொண்டிருந்தார். ராகவன் எல்லாம் இளையபிள்ளையானவர், பாட்டனருக்கு எவற் பணிவிடைகள் செய்துகொண்டும, இவர் செய்த கீர்த்தகங்களைப் பாடும்போது அதற் கிசையத் தாளங் கொட்டிக் கொண்டும் இவர்க்கு மிகவும் அநுகூலரா யிருந்தார். இந்தச் சிறுவரது செய்கையைக் கண்டோரெல்லாரும் இவர் தமது பாட்டனாராகிய ஏகநாத ஸ்வாமிகளுடைய பெயர் விளங்கச் செய்தற்குத் தகுந்தவரே யென்று புகழ்ந்திருந்தார்கள். இப்படி யிருக்குங் காலத்தில் ஒரு நாள், இளையவராகிய ராகவ பண்டிதர், பாட்டனாராகிய ஏக நாதர் திரு வடியை வணங்கி, அடியேனுக்கு ஞானோபதேசம்செய்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்கஇவருடைய பரிபக்குவத்துக்கு ஏகநாத ஸ்வாமிகள் சந்தோஷித்து, இவருக்கு ஞானோபதேசம் செய்தருளினர். அதற்குமேல் சிலநாள் கழிந்தபிறகு, ஏகநாதஸ்வாமிகள், நமக்கு மூப்பு வந்துவிட்டது, இனி நமது புதல்வர் நம்மிடத்தில் இல்லாதிருப்பது தகுதியல்ல வென்று ஆலோசித்து, காசி க்ஷேத்ரத்துக்குப் போனர். இவர் வரவை யறிந்த ஹரி பண்டிதர் வந்து இவரது திருவடியை வணங்கி, தமது இருப் பிடத்துக்கு அழைத்துக்கொண்டுபோய்ச் சகலவிதமான வுபசாரங்க

ரும் செய்து, அழுது செய்வித்து இவர் மன மகிழும்படி திருப்திசெய்ய, இவர் சிலகாள் அவ்விடத்தில் தங்கியிருந்தது, ஒருகாள் புதல்வர் முகத்தைப் பார்த்து, அபாய, எனக்கு வார்த்திகப் பருவம் வந்துவிட்டதனால், இக்கச் சமயத்தில் நீ என்னைப் பிரியலாகாது, எனனிடத்திலேயிருக்கவேண்டும், ஆதலால் உன் புதல்வர் இருவரையும் நேத்ர க்ஷேத்ரத்தில் இருத்தி, நீ என்னுடன் வருவாயாக, எனக்கு உன்னையன்றி வேறு புதல்வர் இருக்கிறார் என்றார். அதைக்கேட்ட புதல்வர், என்னிடத்தில் பிரபுவுள்ள தன்மையை, என் விருப்பத்தின்படியே நீ செய்தால் அடியேன் உமமோடு வருவேன் என்றார். ஏகநாதர் அது என்ன சொல்லென்று வினவ, புதல்வர் சொல்லுகிறார். நீர் பிறருடைய அகந்தையை புசித்ததும், ப்ரக்ருத பாலஷ யிலுள்ள கிரகதங்களை உமது வாயினும் செல்லுதலும் ஆகிய இச் செய்கைகளை விட்டுவிட்டால், அடியேன உமமோடு கூடியிருக்கத் தடையில்லை யென்றார். அதைக்கேட்ட ஏகநாதர் மனகத்து, அபபடியே உன் இஷ்டம்போல தான் நடந்துகொள்ளுகிறேன் என்றுசொல்ல, உடனே புதல்வராகிய ஹரி பண்டிதர் இவரை யமுனைத்துக்கொண்டு தீர்த்த தமமூரை யடைந்து, ஆசரமத்தில் இருத்தி, வடமொழியிலுள்ள ப்ரபந்த வகைகளை விளவ, அவர் விளவுக்குத் தக்க விடை சொல்லிக்கொண்டு வந்தார். காள்தோறும் இவ்வாறே நடந்துகொண்டிருக்க, விதிவகிலெல்லாமும் இதைக்கண்டு, இவர் தமது கொளகை மாறியிருப்பதற்குக் காரணம் யாதென்று ஆலோசித்துக் கொண்டிருந்தார்கள். இப்படி யிருக்குங் காலத்தில், அவ் வூரிலுள்ள ஒரு எழைப் பார்ப்பிரியானவள், தன் கோய் நீங்கும்பொருட்டு, தன் குருவின் சொற்படியே, ஆயிரம் ப்ராஹ்மணருக்கு அகமிட்டாள். உடனே அந்த கோய் தீர்ந்து விட்டது. சிலகாள் கழித்து மறுபடியும் அப்படியே செய்ய நினைத்துப் பொருளில்லாமையால் வருந்தி, சற்குருஸ்வாமிகளிடத்தில் வந்துவணங்கி, ஸ்வாமீ, பொருளில்லாமையால் என் விரதத்தற்குப் பங்கம கேரிட்டிருக்கின்றது என்று விண்ணப்பஞ்செய்ய, சற்குருவானவர் கருணைகூர்ந்து, பெண்ணே, வேதத்தில் சொல்லப்பட்ட உபாய மொன்றுண்டு, அது யாதென்றால் சொல்லுகிறேன் கேள். ஒரு வேதபாடகன் நாறுபண்டிதர்க்குச் சமானனவான், ஒரு யாக கர்த்தாவானவன் ஆயிரம் வேதபாடகனுக்குச் சமானனவான், ஒரு ஜிதேகத்ரியன் ஆயிரம் யாக கர்த்தாக்களுக்குச் சமானனவான், த்ரிவிக்ரமனகிய ஸ்ரீ பகவானுடைய தாசனயிருப்பவனொருவன் ஆயிரம் ஜிதேகத்ரியர்களுக்குச் சமானனவான், அந்தத் தாசர்களிற் சிறந்தவராகிய ஏகநாதஸ்வாமிகளை யழைத்து அவரொருவருக்கு மாத்திரம் அகமிட்டால் உன் மநோரதங்கள் எல்லாம் நிறைவேறுமென்றுசொல்ல, அப்படியே அந்தப் பார்ப்பிகி, ஏகநாதர் மடத்திற்கு வந்து அவரை வணங்கி, தனது விரதத்தின் வரலாற்றைச் சொல்ல, இவர் அவளைநோக்கி, என் புதல்வராகிய ஹரி பண்டிதரிடத்தில் உதரவு பெற்று வந்தால் நான் வருவேன் என்றார். அப்படியே அவள் ஹரி பண்டிதரை வணங்கி உத்தரவு கேட்க, அவர் என் தந

தையானவர் சிலகாளாகப் பராக்கம் உண்டாகில்லையென்று ப்ரதிஜ்ஞை செய்து கொண்டிருக்கிறார் என்றார். பார்ப்பிநியும்படியும் சகாதரிடம் வந்து வணங்கி, தேவரீருடைய புதல்வர் இவ்வளவில்லை, நீரே யென் எண்ணத்தை முடித்தருளவேணுமென்று வேண்டினள். அதற்கு சகாதர் மனமிரங்கி, தமது புதல்வர் முகத்தைநோக்கி, அப்பா, நீயும் பார்ப்பிநியின் எண்ணத்தை முடித்தால் நலமென்று சொல்ல, புதல்வர், காரீகூஷத்ரத்தில் செய்த ப்ரதிஜ்ஞை வீணாயிற்றே யென்று வருந்தினார். அதைக் கண்ட சகாதர், புதல்வரை நோக்கி, நீயே போய் அவள் கொடுக்கிற அரிசி முதலிய பொருள்களையெல்லாம் வாங்கிக்கொண்டு அவ்விடத்திலேயே சமையல் செய்தால் அவள் கருத்தும் நிறைவேறும், நமது ப்ரதிஜ்ஞையும் பிழைக்கும் என்று சொல்ல, புதல்வருக்கு இந்த ஏற்பாடு உசிதமாய்க் காணப்பட்டதனால் அப்படியே அவள் வீட்டுக்குப் போய், அவள் கொடுத்த பதார்த்தங்களைக் கொண்டு சமையல் செய்து சித்தப்படுத்தி வைத்துக்கொண்டு, சகாதரை யழைத்துவாவென்று பார்ப்பிநியை யனுப்ப, அவள்போய் சகாதரிடம் ஸ்வாமிகளை யழைத்துவருகிற வழியில் ஸ்வாமிகளைநோக்கி, அடியேன் உயர்ந்த பலகாரங்களெல்லாம் செய்வித்து வைத்திருக்கிறேன், என் கையிலுலே காணோமே, நீர் உண்டால் என் பிணி தீரும் என்று சொல்ல, ஸ்வாமிகளும் அவளைநோக்கி, பெண்ணே, நான் உண்ணுஞ் சமயத்தில் பலகாரங்களைப் போடக் கடவாயென்று சொன்னர். பிறகு ஸீடு சேர்ந்தவுடனே இவர்க்குச் சிறந்த ஆசனமிட்டு, சகலமான உபசாரங்களும் செய்து முடிந்தபிறகு, ஸரிபண்டிதர், தாமே எல்லாக் கறி வகைகளும் அக்காரமும் தாமதக்காப் பரிமாற, இவர் அழுது செய்திருக்குங் காலத்தில், பார்ப்பிநி, பலகாரங்கள் பரிமாற, அவற்றை இவர் விலக்கிவண்டார். அதைக்கண்ட புதல்வர் சோபித்து அவளைப் பார்க்க, ஸ்வாமீ, நீர் தயை செய்து க்ஷமித்தருள வேண்டுமென்று வேண்ட, ஸரிபண்டிதர், பிதாவின் செய்கையைக் குறித்து அப்பால் விசாரிப்புக்கொள்ளலாமென்று அடங்கியிருந்தார். ஸ்வாமிகளும் அழுதுசெய்து முடிந்தது. இவர் கை கால்கள் சுத்தி செய்துகொண்டபிறகு, புதல்வர் இவர் உண்ட எச்சில் இலையை யெடுத்துப்போய் வெளியிலெறிந்து வந்து சுத்திசெய்யப் போய் அவ்விடத்தில் முன்போல இலையிருக்கக்கண்டு, அதையும் எடுத்தெறிந்து வந்து வேறோரிலையிருக்கக்கண்டார். இப்படி யெடுத்தெறிந்து வருந்தோறும் இங்கே இலை இருக்கக்கண்டு, பயந்து, நமது தந்தையாரைப் பகவதம்ஸமென் றறியாமற் போனேன், உலகமெல்லாம் இவரைப் புகழ்வதையும் யோசிக்காமற்போனேன் என்று தமது குற்றத்தைக்குறித்து, அநுதபித்து, தந்தையாருடைய திருவடியை வணங்கி, இதுவரைக்கும் கல்விச் செருக்கால் தேவரீரை மதியாமலிருந்த குற்றத்தை க்ஷமித்தருள வேண்டுமென்று வேண்ட, ஸ்வாமிகள் கிருபைகூர்ந்து, இந்த இலையை யெடுத்தெறிந்தால் இனி வேறே இலையிருக்காது என்று சொல்ல, அப்படியே யெடுத்தெறிந்து, அவ்விடத்தில் வேறிலையில்லாதிருக்கக் கண்டு அதிசயித்தார். பிறகு அந்தப் பார்ப்பிநி,

புஷ்பசுத்த தாமபூலாதிகளைக் கொடுக்கப் பெற்றுக்கொண்டு தமது மடத்துக்கு வருமபோது, வெரிபண்டிதர், ஸ்வாமிகளைநோக்கி, ஐயரே, நீர் முன்னே யெனக்குச் சொல்லிய பரதிஜ்ஞை வார்த்தையை விட்டு, தேவரீர் திருவுள்ளபபடியே முன்போல வர்த்திக்கலாமெனறு பரார்த்திக்க, அப்படியே ஸ்வாமியும பரார்த்த பாகவத காலட்சேபத்தைப பண்ணியும், ஸ்ரீராம ஸங்கீர்த்தனத்தை நிசியும நடததிவர, வெரிபண்டிதர் பெரிதும மகிழ்ந்திருநதார்.

இபபடிச் சிலகாள் கழிநதபிறகு, அவருருக்குள்ள ஒரு கிராமத்தில் ஒரு வெதியனிருநதான். அவனுக்கு ஒரு ஆணமபிள்ளை பிறநது ஒன்பதவருஷம வரைக்கும வாய் பேசமலிருபபதைக் கண்ட தாயானவள மிகவுமமன வருநதத்தோடு அநதச் சிறுவனை யெடுத்துக் கொண்டு ஏகநாத ஸ்வாமிகள் சந்நிதியை யடைநது, காவ்வி என்னும அநதச் சிறுவனை அவர் திருவடியில் கிடத்தி, நவனை வளரபபகருடி யெங்களுகரு ஒரு பரமேசுவரனுமாய் இரே. நவனை நீரே வளரத்தால், உமமருப புண்ணியமும பிரமபுரமுண்டாகுமெ என்று சொல்லி விட்டு விட்டபோனாள். அபபடியே ஸ்வாமியும அநதச் சிறுவனிடதது அனபு செய்து, அவனும நிராடல் முதலிய ஒழுக்கங்களிற் சிரதையுடையவனாய் மடத்துத் திருபபணிவிடைகள் யாவும செய்து முடித்து, சாயங்காலம ஒரு வேளை போஜநம செய்துகொண்டிருநதான். இபபடி பிருத்துகாலத்தில், ஸ்ரீராமபிரான் ஏகநாத ஸ்வாமியின் ஏகாநதத்தில் பரத்யக்ஷமாகி, நீ ஸ்ரீராமாயணத்தை ப்ராக்ருத பாஷையில் செய்து முடிக்கக்கடவாயென்று சொல்லி மறைநதார். அபபடியே ஸ்வாமிகள் செய்ய தொடஙகி, யுத்த காண்டத்தில் காற்பாத பிரண்டத்தியாயம வரைக்கும் செய்து முடிதபிறகு, மனமபிள்ளையாகிய காவ்வி யென்பவரைநோக்கி, வேதியரெல்லாரையும் வருவித்து வைத்துகொண்டு, எனக்குப் பரமதாமத்தை அடைதற் குரியகாலம நேரிட்டது, ஆகையால், நீ யுத்தகாண்டத்தின் குறைவாய முழுபபதல்லாமல், உத்தர காண்டமதையும செய்து முடிக்கக் கடவை யென்று நியமித்து, எழுதுமிகரணமும மைக்கூடுமை கொடுத்தருளினார்; அனறியும தம்மீது கை யமைத்து அபயம் தநதருளினர். அவன் தஞ்ஞணமே ஸ்ரீஹரிநாம ஸ்மரணை செய்து, சுவாமிகளுக்கு நெறிதீர யிருநது கொண்டு, மேலை ஒரு அத்தியாயஞ்செய்து முடித்துக் காட்ட, அதைக் கேட்டவர் யாவரும அதிசயித்து, இநத ஊனமைச் சிறுவனும, ஸ்வாமிகள்போலவே பாடுகிறான், இது புதுமையாயிருக்கிறதென்று சொல்லி மகிழ்ந்தார்கள். ஸ்வாமிகளும தாம பரதாமமடையப போகிறோமென்று சொன்ன ப்ரஸ்தாபத்தைக்கேட்ட சாது ஜநஙகளெல்லாரும வநது கூடினார்கள். ஸ்வாமிகளும வழக்கமபோலவே ஹரிநாம ஸங்கீர்த்தநம செய்து, பகவானுக்குக் கர்பூர ஹாரதி சமர்ப்பித்து, ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநமே வேதசாரம், ஜீவகாருண்யமே சிறந்த தவம என்று எல்லார்க்கும சொல்லி, கோதாவிரி நதிக்கரையில் அக்நிகாரியம் செய்துகொண்டிருக்கிற வேதியரை வணங்கி, நதி ஜலத்தில் இடையளவாகிய ஆழத்திலிறங்கி நின்று, ஸ்ரீபகவானே ஹ்ருதயத்திலிரு

த்தி வணங்கி, வாய் பகவந்நாமஸ்மரணை செய்துகொண்டே யிருக்கப் பரத்தா மத்தை யடைந்தார். உடனே சாதுஜநங்க ளெல்லாரும் கூடிப் பரிதபித்து, வேதத்திற் சொல்லப்பட்டபடியே, இவரது திருமேனியைக் கோதாவரி நீரத்தில், ஹரிபண்டிதரைக்கொண்டு தஹநம் செய்வித்து மேலும் செய்ய வேண்டிய க்ரியைகளெல்லாம் செய்து முடித்துப் போய், மறுநாள் வந்து ஹஸ்திகிரி யெடுக்க, அந்த ஹஸ்திகளின் அடியில் ஒரு அரசமரம் முளைத் திருப்பதைப் பார்த்து, ஸ்வாமிகளே அரசமரமாய் முளைத்தாரென்று ஆலோசித்து, அவ்விடத்தில் ஒரு கோயில் கட்டி, அதில் ஸ்வாமிகளின் திருப்பாது கையைப் பிரதிஷ்டை செய்து, பூஜித்து, இரவும் பகலும் புராண காலக்ஷேபத்தையும் ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தநத்தையும் செய்துகொண்டு இனிது வாழ்ந் திருந்தார்கள் என்று சொல்லி, மேலே மாண்கோஜிபோதலே வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

ஏகநாதசுவாமிகள் சரித்திரம் முற்றிற்று.

# நூ-வது மாண்கோஜிபோதலே சரித்திரம்.

தாமணம் என்னும் பாலேகாட்டு நகரில், கான்காவது வருணத்தில் அவதரித்து, மாண்கோஜிபோதலே யென்னும் திருநாமம் பூண்டு, ஸ்ரீஹரி பக்தியிற் சிறந்து வீளங்குவோர் ஒருவரிருந்தார். அவர் குடிப்பேர் ஜக்தாப் என்று சொல்லுவார்கள். அவர் தேவியார் திருநாமம மமதாயி. இவர் திருவயிற்றில் ஏமாஜி யென்னும் புதல்வர்ஒருவர் அவதரித்தார். அவர்க்குத் தகுந்த பருவத்தில் மண முடித்துவைத்தார்கள். அத்தப் பெண்ணின் பெயர் பாகீரதி யென்பார்கள். இந்த தம்பதிகளும், உலகவாழ்வில் மிகவும் விரக்தர்களாய் இரவும பகலும், பாண்டுரங்கப்பெருமானுடைய திருவடியை த்யாநிப்பவராயிருந்தார்கள். இவர்கள் தமது வீட்டுக்கு வேண்டியமட்டும் தந தாந்யாதிகளைக் குயவல்களாகச் சேகரித்து வைத்திருப்பார்கள். இவர்களில் மாண்கோஜிபோதலே யென்பவர் பகாதசிகள் தோறும் ஸ்ரீ பண்டரி புரத்துக்குத் தவறாமற் போய், ஸ்ரீ கண்ணபிராஜைத தரிசித்து, தோத்திரஞ்செய்து, கண் விழித்து, மறுநாளாகிய துவாதசி யுதயத்தில், வேதியர்க்கு அந்நமிட்டு, பிறகு வரியவர்க்கும் அப்படியே செய்து, மறுநாள் பாலேகாட்டில் வந்து சேர்ந்து வாழ்ந்திருப்பார். இப்படி கெடுநாள் வரைக்கும் நடநதுவருங் காலத்தில், மேகம் காலமழை பெய்யாமையால் சிறுவிலைக் காலம் வந்து உயிர்களை வருத்த, பசிப்பிணியால் உயிர்கள் வருநதுவதை, போதலே யானவர்கண்டு, தமது தேவியாரை நோக்கி, உலகத்துள்ள உயிர்களெலலாம் பசிப்பிணியாவிறந்தொழிய, நாம் மாத்திரம் சுகமாயிருப்பது அழகோ! ஆதலால்க்குச் சாலி, அறுசமயத்தார்க்குண்டி, ஓதுவார்க்குணவு, ஆவுக்குவாயுறை, சிறைச் சோறு, ஐயமிடல், நின்பண்டம் கல்கல், அறவைச் சோறிடுதல், மகப்பெறு

வித்தல், குழந்தையை வளர்த்தல், குழந்தைக்குப் பாலுண்பித்தல், அற வைப் பிணஞ்சுடல், அறவைத்தூரியம், சுண்ணமபு, கோய்மருந்து, வண் ணான், நாவிதன், கண்ணடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகந் தரல், பிறர்தூயர் காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடங்கட்டுவித் தல், சோலை வைத்தல், வாவி வெட்டுதல், ஆவுறிஞ்சு தறிநடுதல், விலங்கித் குணவு, ஏறுவிடுத்தல், விலைதந் துயிர்மீட்டல், கயாதானம் இந்த முப்பத்தி ரண்டு தர்மங்களுள்ளே கம்மா லியன்ற வளவு செய்வ தல்லவா இல்லறவாழ் க்கைக்கு அழகு? அப்படிச் செய்பவர்களுடைய பாவங் குறைந்து மெய்ஞ் ஞானம் வளரும்; வளரவே, பிறவிதோய் நீங்கி, பாண்டுரங்க பகவானுடைய க்ருபைக்குப் பாத்திரராகலாம் என்று சொல்லக்கேட்ட மனோவியார், அப்படி. யே அந்தானம் செய்தானேயன்றி, கோதானமும செய்து, யாவரையும் மகிழ் வித்து, பகவத்யானம் செய்துகொண் டிருக்குங் காலத்தில், மாண்கோழி போதலே யென்கிற இவர்க் கெதிரே ஸ்ரீ கண்ண பிரான் ப்ரத்யக்ஷமாகி நின் றார். கண்ட தாசரானவர், பாண்டுரங்கபகவானுடைய ஸ்ரீபாதங்களே வணங்கி னார்; பகவானும் இவர்க்குக் கிருபைசெய்து போய்விட்டார். பிறகு தொண்ட ரோடு கூடி, ஹரிநிருத்தில் பாண்டுரங்க பகவானைச் சேவிக்கும் பொருட்டு ப் பச்சடரிபுரத்துக்குப் போகும்போது, இவர் தேவியார் செலவுக்குப் பொ ருள் சிறிது மில்லையே யென்று மனம் வருந்தி, ஜீர்ண வஸ்திரத்தை யுடுத்து, வித கொடித்து விற்றுக் கிடைக்கும் பொருளைக் கொண்டு நாளை த்வாதசி யை நடத்துவோம் என்றெண்ணிக் கொண்டுபோகும் வழியில், விறகுகள் பொறுகளிச் சுமையாகக் கட்டித் தலைமேற் சுமந்துகொண்டுபோய், பண்டரி புரத்து வீதியில் விற்று, அதனால் கிடைத்த பொருளைக் கைக்கொண்டு, கணவரும் தாமுமாகப் பகவானை வணங்கி வாழ்த்தி, சந்த்ர பாகா நதியில் நீராடி, ஒரு வேதிபனுக்கு ஒரு காசு கொடுத்துச் சங்கற்பஞ் செய்வித்து, திருத்துழாய் முதலியவை ஒரு காசுக்கு வாங்கிக்கொண்டு, சங்கிதிக்கு வந்து, விட்டலப்பெருமானைப் பூஜித்துத் தாழவிக்கொண்டு சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பித்து, அன்றிரா முழுதும கண்விழித்து ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்து கொண்டிருந்து, விடியற்காலத்தி லெழுந்து சந்த்ரபாகையில் நீரா டின பிறகு, நாசரானவர், தமது தேவியாரை நோக்கி, இன்று தனியாராதனத் துக்குப் பொருளில்லையே, என்ன செய்யலாமென்று கேட்க, தேவியார் விறகு விற்ற பொருளில் செலவழிகதது போக மிச்சமாயிருக்கிற பொருளை க்கொண்டு, அரைச்சேர் அரைத்த மா வாங்கித் தணியில் முடிந்து கணவர் கையிற் கொடுக்க, அதை அவர் கைக்கொண்டு, அறுசுவையோடு கூடிய வுணவை யுண்ணுகின்ற வேதியர்கள் இந்த அற்பமாகிய மாவை யுண்பார்க ளோ வென்று சிந்தித்துக் கொண்டிருக்குமபோது, இவரது கருத்தை யறி ந்த பாண்டுரங்க பகவான் ஒரு விருத்த வேதிய வுருவங் கொண்டு, தலையில் பழைய குல்லாவும், கையில் தடியும், அரையில் கோவண வுடையுமாகஇவர் க் கெதிரில் எழுந்தருளி, இவரை நோக்கிச் சொல்லுகிறார். நீர் நெடுநாளாக

க் கொடுக்கிற அந்தத்தை யுண்டு உம்மை யாசீர்வதித்துக் கொண்டு ஜீவித் திருக்கிறேன். இந்த ஊரிலுள்ளவர்கள் செல்வருக்குக் கொடுப்பதன்றி, என் னைப் போன்ற எளியவர்களுக்கு அந்தமும் கொடுப்பதில்லை. ஆகையால் உம் மிடத்தில் எவ்வகையான உணவிருந்தாலும் ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று சொல்ல, தாசராவர், சுத்தோஷித்து, இந்த அற்ப மாவை வாங்கி யுண்ணத் தகுந்தவர் இவ்வுலகில் யாருளர்? ஸ்ரீ லக்ஷ்மீ நாதனே இதுக் கிழ மறை யோன் வடிவங்கொண்டு வந்ததாகக் காணப்படுகின்றதென்று நிர்மானித்து, துணியில் மூடிக்கிருந்த மாவை நாணத்தோடு அவிழ்த்து வேதியர் கையில் கொடுத்துக் கைகூப்பிச் சொல்லுகிறார். இந்த மாவையன்றி உமக்குக்கொடு ப்பதற்கு என் னிடத்தில் வேறு பொருளில்லை, இந்த மாவை விருப்பத் தோடு அமுது செய்தருளவேண்டும் என்று ப்ரார்த்திக்க, அந்த வேதியர் தாசரை நோக்கி, நீர் மனம வருந்தவேண்டியதில்லை, நீர் அன்போடு கொடு த்த இந்த மாவானது தேவாமிர்தத்தினும் சிறந்தது என்று சொல்ல, தாச ராவர், இந்த வெறுமாவை இவ்வேதியர் எப்படி யுண்பாரென்று ஆலோசி க்கையில், மறையோர், இவரை நோக்கி, இந்த மாவை அடை சுட்டு உண் ணுகிறேன் என்றார். அதைக்கேட்ட தாசராவர் மகிழ்ச்சியுற்று, அடுப்பில் கொஞ் சம் மூட்டுதலும், வேதியர், சுதந்ரபாலையில் நீராடி, நாவல்நிரத்தோடு வந்து, அந்த மாவைப் பிசைந்து அடைதட்டிக்கொண்டிருப்பதை யறிந்த ருக்மிணீ பிராட்டியார், இந்த வ்ருத்த வேதியர்க்குத் தகுதியான ஒருகிழவி யாகி, நடை தளர்ந்து, கையில் ஒரு கழி பிடித்துக்கொண்டு வந்து, இவர் பக்கத்தில் நின்று, இவர் அடை சுட்டுவைப்பதை பார்த்து ரசித்து, என்னும் என்னைவிட்டுப் பிரியாத நீர் இன்று பிரிந்துவந்து இந்த அடை சுட்டுகிறீரே, இது என்ன புதுமை! இங்கே கொடும, நான் அடை சுட்டுக் கொடுக்கிறேன் என்று சொல்ல, அப்படியே கொடுத்துவிட்டு, அருகே யிருந்து பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது தாசராவர், இந்த மாவானது ஒருவர்க்கே பற்றாது, அப்படியிருக்க, இவ்விருவர் எப்படி யுண்பார்கள் என்று ஆலோசி த்துக்கொண்டிருக்க, அந்த வேதியக் கிழவி அடைசுட்டு வைக்க, அதைக் கண்ட வேதியர், எம்மோடு நீரும் உண்ணவாரும் என்று தாசரை யழைக்க, இவர், ஸ்வாமீ, நீங்களிருவரும் உண்டு மிச்சமான உச்சிட்டத்தைத் தருவீ ரானால் உண்பேன் என்றுசொல்ல, வேதியரும் தமதுதேவியாரோடு அமுது செய்யும்போது, ஆகாசவீதியில் சித்தர், முனிவர், தேவர் எல்லாருந் திரண்டு நின்று வாழ்த்தி, யோகம்முதலியவற்றைச் செய்வேர் அமுதுண்ணக் கடவீ ரென்று ப்ரார்த்தித்தால், சுத்தோஷித்து அமுது செய்யாத பகவான், ஒரு அன்பர் வீட்டில், சிறிதும் உப்பில்லாத அடைசுட்டுத் தமது தேவியாராகிய ருக்மிணீ பிராட்டியாரோடு உண்டு அன்பரை மகிழ்விப்பதைப் பார்த்திரோ வென்று ஒருவரோ டொருவர் பேசிக்கொண்டிருக்க, ஈடும் எடுப்பும் இல் லாத பகவான், பிராட்டியாரோடு அமுதுசெய்த பிறகு, சேஷத்தைத் தாசர் கையிற் கொடுத்து மறைய, இவர் அந்தச் சேஷத்தைத் தமது தேவியாரோ

டருந்தின பிறகு, சகரிதிக்குவகை, பகவான் உல்லாசமாய் நிற்பதைக்கண்டு வணங்கி, எல்லாதரும பார்களும்படி வெந்நி அதுவை கொண்டு, மூ பெரிய பிரேடி தேரோடியுகையி னி, வரி யின் கர வெயுமாஸ்வி அடை சுட்டி அழுது செய்துணரி மய ரூ, பிரசாரை யெனத்துக் கொடுத்துக் கேள்வா றலம செய் ந பொஞ் ய் எ பாகபிமே பாதகிமா! மெனி யெனக் கெங்கு குயறபு மிஸ்ரி யென்று சொலவ, பகவானுனவர், அதிக கர வார்கள் தந்தி யாசாதகம் செய்ய காலததில் காசும் போவதுண்டு, எனினை அவர்கள் மதி க்கிறதில்லை, அவை நீ காண வேண்டுமானால் காட்டுகிறேன் என்று சொல்லி, தாசர் சேட்டி, அபாய யோ காண விருமாரி யெனை ரூ சொல்லி யிருந்தார். அன்றைக்கு, ஒரு தெவ்வை, மூரிம பார் ரிமணருக்கு நின்று அந்தாசம் செய்கிறவளென்று சொல்ல, பார ரிமணர் திரண்டுவருகை அவள் வீட்டிற்கு வெளியே யிருகை, பண்டரி காதரும வருவ பார்த்த வேலையாளை இத்தச் தாசை யையும் அழைதுகொண்டு அவ்விட தருபர போனார். போய் அத்தச் செல்வை மூரிம ரெ பாரையும் எல்லாரிக்கு யாளரி ருக்குமபோது, தாசர்கள் வெளியிலிருந்தபடி, ரிவரிட த்திலி டதாரிபர ரிமணரை யெல்லாம பார்த்துக் கொணடிருகும என்ன சொல்லி முத சாமி வீட்டுக்குள்ளே போய், செல் வரின் கோக்கி, என் பதிதருத தகாரிட்டவேண்டுமென்றார். அதற்கு தகவதன், உனகரு அதரா கிடையாது, நீ வெளி ரிபோவென்றான். பகவானுகிய வ்ரு தகவேஷியா, மூரிம பெருகு அதாம பொருந்திய பிடத்தில், எனக்கு அதிக மரிதை யெ ரு பொருவரும தருவோ வெளி ருர். மூரிட்ட தகதச் செல்வ வன, நீ ரிம் போ ய வெளணனிலிபாளை பாறகு நீ வாசாய், நின்னாம் உன்ன சாபபோ ஏதகதின போன் வருவார்கள அவரகளை வாங்கும் மீண்டக்குமா? மூரிமரிபருகு மூருமு டியான அதாம கித்தமாயிருக்கிறது, அதிகாம வெளிகே பிரா ரு வாருமே நீ வெளிரிபோ வென்றார். அப்படிச்சொல்லியும், இதகப் பிறு வேறுயா போகாமல, ரவ ம ரு பவன, மிகவும பதிதிருக்கிறான் என்று சொல்லி, ஒரு நிமிஷ மட்காமலிருந்தார். நிதைக் கண்ட அதகத் தகவதன், தன்னவர்களாயுள்ள போரி, மூ தகவரியன் மிஸ்டு செய்கிறான், இவனை உடியாலடிதது வெளியே தள்ளிவிடுவகள் என்றான். அதைக்கேட்ட வேஷக்காரர்கள் அபபடியே இவனை வாய், கை, கிலக மன்பிலவகளோடு சேர்த்தபு பிடிதிருந்து தரதரக்கொணடு போய வெளியே விட்டார்கள். பிழு வேதியர் மெல்ல எழுதது உடல் வாடி ர தன்னாடிக்கொண்டு கடதது போய் விட்டார். அதின் பிறகு ஆயிரம பார ரிமணருக்கும இலைகளில் அதம், பல் கார வகை, பதார்த்தவகை முதலானவை பரிமாறி, உண்ணுங்களென்று தந்தி கன் சொல்ல,அவர்கள் உண்ணத்தொடங்குமபோது, ஒரு பெருங்காற்றுண் டாகி மண்ணை வாரிக்கொண்டு வநது அதம முதலானவைகளிற் கொட்டி ஸ்லாவறறையும் கெடுத்துவிட்டது. நிதைக் கண்ட வேதியர் எல்லாரும் ஏழுந்துபோய்விட்டார்கள். இவை யெல்லாம் பார்த்துக்கொண்டிருநத தாச ரது முகத்தைப் பகவானுனவர் நோக்கி, இங்கேகடநத செய்தியைப் பார்த்தீ

ர்ல்லவா? உலக முழுதும் ஆரவார ஈடத்தையை யுடையதேயன்றி, ஏழை களை ஆதரிப்பவரில்லை, நீ யன்புள்ளவனுகையால், உன் அன்பின் பொருட்டு உமது மாவை வாங்கி அடை சுட்டு உண்டேன் என்று சொன்னதைக் கேட்ட மாண்கோஜிபோதலே யானவர், பகவானே, உமது மஹிமையைத் தெரிந்துகொள்ள வல்லவர் யார் என்று கைகூப்பி வணங்கித் தோத்திரஞ் செய்து, விடைபெற்றுத் தாமணத்துக்குப்போகப்புறப்பட்டு, ஒருவனத்தில் போகும்போது, அதிக தாகமுண்டாகி, நீர் கிடைக்காமல் வருந்துவதை யறிந்த ஸ்ரீகண்ணபிரான், ஸ்ரீருக்மிணீ பிராட்டியாரோடு, இந்தத் தாசர் குலத் தார்போல வேஷம்பூண்டு, இவர்வரும்வழியில் ஒரு வீடுண்டாக்கிக்கொண்டு, இருவரும் தயிரையும் அடையையும் அமைத்து வைத்துக்கொண்டு, தாசர் தேவியாரோடு வருவதைக் கண்டு, நீங்கள் பண்டரி புரத்துக்குப் போய் மீண்டு வருகிற ஸ்ரீஹரிதாசர்களாதலால், எமது சிறு குடிலில் எழுந்தருளி, யாம் கொடுப்பதை யுண்டு, எம்மைப் புனிதராக்கி, உமது ஊருக்கு எழுந் தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க, அந்தச் சொல்லைப் போதலே யானவர் கேட்டு, இவ்விடத்தில் மநுஷ்ய சஞ்சாரமே யில்லை, இவர்கள் இவ்விடத்தில் எதிர்ப்பட்டது புதுமையா யிருக்கின்றதென்று, அவர்களைத் தொடர்ந்து அவர்கள் குடிலுக்குப் போய் அவர்கள் கொடுத்ததை யுண்டு, அயர்வு தீர்ந்து, தமதூருக்குப் போகப் புறப்பட்டுத் திரும்பிப் பார்க்கும்போது, அவர்களில்லாமல் மறைந்து போனதனால், போதலே யானவர், நாம் தாஹத் தால் வருந்தி வருகிறோமென்பதை யறிந்த பகவானே இப்படி வந்து நமது தாகத் துன்பத்தை யொழித்துப்போனரென்று மன மகிழ்ந்து, தாமும் நமது தேவியாருமாகக் கூடி, அந்த வழி முழுதும் ஸ்ரீபகவந்நாமஸங்கீர்த்த நம் செய்துகொண்டே போய்த் தமது ஊராகிய தாமணத்தை யடைந்து இனிதாய் வாழ்ந்திருந்தார்.

இப்படி யிருக்குங்காலத்தில், ஒருநாள், இவர் தமது சோளக் கொல்லை யைக் காத்துக்கொண்டிருக்கும்போது, பறவைக் கூட்டங்கள் வந்து சோளத் தைத் தின்ன, அவற்றை யோட்டாமல், அவற்றினுள்ளே பகவான் நிறைந் திருக்கிறரென்பதை யறிந்தவ ராகையால் அவைக ளுண்டு பசியாறுவதே நன்மையாமென் றிருப்பவராயும், அவ்விடத்தில் வருவோர்களுக்குக் கதிர் களைத் தாமே பறித்துக் கொடுத்து அவர்களை மகிழ்வித்துக்கொண் டிருப்ப வராயும், இடையறுமல் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருப்பவ ராயும் இருக்கும் போது, இவரது தேவியார் அந்தச் சோளக் கொல்லையைக் காவல் காக்கிற இவருக்கு உணவு கொண்டுபோய் இவரை யுண்பித்த பிறகு, பறவைகள் சோளத்தைத் தின்பதையும் இவர் அவற்றை யோட்டாமல் மன மகிழ்ந்திருப்பதையும் நோக்கி, கணவரைப் பார்த்து, ஐயரே, நீர் இங்கு விளை வதை யெல்லாம் பிறர்க்குக் கொடுத்துப்பாழாக்கினுல்செங்கோல் செலுத்து கிற அரசனுக்கு எப்படி இறைப்பொருள் செலுத்துவீர்? நம்முடைய மனை

வாழ்க்கை யெப்படி கடக்கும்? இனி இங்கே யிருந்துகொண்டு இப்படி உமது கையினால் கொடுப்பீரானால் பாண்டுரங்கன்மே லாணையுண்டு என்று சொல்லி, தமது வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய், வீட்டில் அமைந் திருக்கும்போது கடந்ததைச் சொல்லுவோம்.

ஒருகால், பண்டரிபுரத்துக்கு யாத்திரையாகப் போவோர் சிலர் அங்கே வர, இவர் அவர்களை கோக்கி, இவர்கள் ஸ்ரீஹரிதாசர்கள் என்று அன்புமிகு த்து, அவர்களை வணங்கி வாழ்த்தி, நீங்கள் இவ்விடத்துக்கு வர அடியேன் என்ன தவஞ் செய்திருந்தேனெனவென்று சொல்ல, அந்த வேதியர்களில் ஒரு வர் வந்து இவரைக் கிட்டி நின்று, நீர் வினைக்கும் சோளக்கதிர்களில் கொஞ் சம் கொடுத்தால் தின்று பசியாறுவேன் என்றார். அதற்குப் போதலே யான வர் அந்த வேதியரை நோக்கி, ஐயரே, என் மனைவி யாணையிட்டிருக்கிறு ளாதலால் என் கையால் கொடுக்கக் கூடாது, உமது கையால் வேண்டிய மட்டும் ஒடித்துக்கொள்ளும் என்று சொன்னார்; அவர் அப்படியே செய் தார். அவரைக்கண்ட மற்ற வேதியரும் மற்றவரும அவ்வாறே வந்துகேட்க இவரும் அபபடியே ஒடித்துக் கொள்ளும்படி உத்திரவு கொடுக்க, அவர்க ளும் அப்படியே ஒடித்துக் கொண்டுபோக, இப்படி யெல்லாரும் மனமகிழு ம்படி யிவர் உத்திரவு கொடுத்ததனால், சோளக் கொல்லையானது, முற் காலத்தில் வாகர வீரர்களால் மது வகம அழிந்தாற்போல அழிந்தது. வந்து கேட்பவர்களுக் கெல்லாம் இவர் உதிரவு கொடுத்ததையும், அவர்கள் கதி ரொன்றையு மில்லாமல் ஒடித்துப் பாழாக்கினதையும் கண்டோர் யாவரும் இவருக்கு உணர் வழிந்து போயிற்று என்று பேசிக் கொண்டார்கள்; சிலர் இவர் ப்ரபஞ்சவிஷயததில் விரக்தராளென்றார்கள். இப்படிப் பலவாறுகப் பேசிக்கொள்ள, இவரும், மனைவி மகன் முதலானவர் கடிந்து பேசுவார்க ளென்றஞ்சி, வீட்டுக்கு வராமல் கொல்லையை யடுத்திருக்க, அப்போது இவர் புதல்வர் வந்து சோளக் கதிர்களை யாராய்ந்தெடுக்கும்போது, அவரை நோக்கி, அப்பா குழந்தாய், ஈக்கள் தாமுண்ணவேண்டு மென்கிற எண்ணத் தோடு சேர்த்து வைத்த தேனைப் பிறர் கைக்கொண்டு உண்பதுபோல, சத் விஷயத்தில் உபயோகிக்காத பொருளைப் பிறர் அபஹரிப்பார்கள். ஆகை யால், நமது பொருள்கள் யாவும் ஸத்பாத்திரத்தில் உபயோகித்தால் ஸ்ரீஹரி யாகிய பகவானுடைய க்ருபைக்குப் பாத்திரராகலாம், இதைத் தீர்க்கமாய் ஆலோசித்து, நீ விசாரப்படாம லிருக்கக் கடவாயென்று சொல்லக் கேட்ட புதல்வர், சற்று நிதானித்து, இவர் சொன்ன சொற்களின் சாரத்தை யுட் கொண்டு, மனத்தெளி வடைந்தார். பிறகு பிதாவின் திருவடியில் வீழ்ந்து வணங்கி, அவரை வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய், முன்பு போலவே அவரிடத்தில் அன்பு பாராட்டி, தாயார்க்கும் ஹிதவசனங்களைச் சொல்லி அவருடைய கோபத்தைத் தணிவித்தார். பிறகு மனைவியார், பாண்டுரங்கன் மீது ஆணையிட்டிருந்தும் இவர் இப்படிச் செய்தாரே, இனி வாய்தாக்காரரு க்கு ஏழு வீராகன் கட்டவேண்டுமே, என்செய்வோ மென்று மனம் வருந்தி

யிருக்கும்போது, மறுநாள் வாய்தாக்காரரும் வந்து பணம் கேட்டார்கள். அப்போது, போதலே யானவர் வீட்டிலிருந்த மூன்று ரூபாய்களைக் கொடுத்து, மற்ற நாலு ரூபாய்களும் நாளைக்குக் கொடுக்கிறேனென்று சொல்ல, அவர்கள் போய் விட்டார்கள். போனபிறகு போதலே யானவர், அந்த வூரிலிருக்கிற நாகாயியென்னும் பெயருள்ள பாப்பிரிபிடத்திற்குப் போய், எனக்கு நாலு ரூபாய்கள் வேண்டும், கொடுத்தாயானால், வட்டியுடனே செலுத்துவேன் என்றார். அவள் நாளைக்குக் கொடுக்கிறேனென்றாள். அதைக் கேட்ட தாசரான்வர் மனங்கலங்காமலிருக்கார். இவருடைய குணாதிசயங்களெல்லாம் அதைப் பார்ப்பினியானவர் பிறரால் கேள்விப்பட்டு, இவர்க்குக் கொடுக்கும் பணம் மீண்டும் நம்மைக்கு வராதென்று ஆலோசித்துக் கொடாமலிருப்பதே உத்தமமென்று நினைத்தாள். மறுநாள் இவர் அவளிடத்துக்குப் போய்க் கேட்க, அவள், ஒருவனை எனக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை இன்று கொடுக்கிறேனென்று சொல்லி யிருந்தாள், அவனே கபடி உனக்கு நான் கொடுப்பதாகச் சொன்னால் அவன் போய்த்தான் போனான், நான் என்செய்வேனென்றாள். அதைக் கேட்ட தாசர் திருப்பிவந்து விட்டார். வந்து, மனைவியாரிடத்தில், பணங்கிடைக்காத செய்தியைச் சொல்லி விட்டு, மற்றொரு ஊருக்காகிலும் போய்ப் பணம் கொண்டு வருகிறேனென்று புறப்பட்டுப் பணம் கிடைக்கத் தூரத்த ஊருக்குப் போனார். இவர் போன பிறகு நிலவரியுள்ளாரெல்லாரும், வாய்தாப்பணம் செலுத்தாமல் பயந்து எங்கேயோ போய்விட்டான் என்று பேசிக்கொண்டார்கள். இப்படியிருக்க, வாய்தாக்காரர் வந்து இவர் வீட்டு வாசற் கதவை மூடி, ராஜ சிகமாகிய மூங்கிலையிட்டு, நீர், நெருப்பு முதலியவை உள்ளே போவதற்காகாமற் செய்து வருந்தினார்கள். இதைச் செய்தியை யறிந்த பலராமரிய ஸ்ரீகண்ண பிரான், வெட்டியான் வேடமபூண்டு நாலு ரூபாய்களை யெடுத்துக்கொண்டு, வாய்தாக்காரரிடத்தில் வந்து, இது போதலே யானுடையதென்று கொடுத்து விட்டுப் போய்விட்டார். போதலே யானவர் தாம் போனவூரில் பணம் கிடைக்கப்பெறாது மறுநாள் வந்து, வாய்தாக்காரரிடத்திற்றுபோய், உமது பணம் இதோ, வாங்கிக் கொள்ளுங்களென்று சொல்லுதலும், அவர்கள், உமது பணத்தை உமது வெட்டியான் கொண்டுவந்து கொடுக்கப் பெறாதுக்கொண்டோம் என்றார்கள். இவர் விட்டிலே வந்து வெட்டியானிடத்தில் பணங் கொடுத்தது யாரென்றார். அவர்கள், நாங்கள் கொடுக்கவில்லை யென்றார்கள். பிறகு அவ்வூர் வெட்டியானைக் கண்டு கேட்க, அவனும் எனக்கு ஒன்றும் தெரியாதென்றான். பிறகு தாசரான்வர், வெட்டியானுருவங் கொண்டு வந்து பொருள் கொடுத்துப் போனவர் பண்டரிநாதரே யென்று அறிந்து, என் பொருட்டுப் பகவான் இப்படி வருவதற்கு, நான் எப்படிப்பட்ட தவத்தைச் செய்திருக்கிறேனோ என்று சொல்லி, பக்வானுடைய க்ருபாவிசேஷத்தைக் குறித்துப் புகழ்ந்து, ஸ்ரீபகவத் ஸ்ரீமஸ்ங்கீர்த்தனம் செய்து, என் பொருட்டு, நீ புலியன் வேடம் பூண்டு வீதிதோறும், ஓ க்ருஷ்ணக் கிட்டலே யென்று தோத்திரம் பண்ணிக்கொண்டு நடந்

கும்போது, ஸ்ரீபகவானுனவர் இவருக்கு ப்ரத்யக்ஷமாஞர்.தாசரானவர் அந்த ப் பகவானைத் தரிசித்து வணங்கி வாழ்த்தினதலும், பகவானுனவர் இவரைத் தழுவிக்கொண்டார். பிறகு தாசர், பகவானே, உமக்கு இந்த காலுவிராகன் எவ்வே இவ்விடத்தை என்று கேட்க, பகவானவர், உனக்குப் பொருள் கொடுப்பேனென்று சொல்லித் தவறினவருடைய பொருளை வசூல்செய்து கொண்டு வருவேனென்று சொல்ல, தாசர், கல்லனை நு லகத்து, இப்படிச் செய்யலாமா? அந்த எழுப்பு பார்ப்பினியர் ம் பொருளை ஏன் வசூல் செய்தீர்? நான் கொண்டுவந்த பொருளை அவருக்குக் கொடுத்து விடுகிறேன் என்று சொல்ல, பண்டரிநாதர், சாதுக்க நுக்கு பொய்சொல்லாதவனுடைய பொருளை நீர் கொடுத்தால் நான முழுதும் கயிற்கு விலை வென் என்று சொல்ல, தாசர், அதற்குத் தலைசொல்ல அறியாது மௌன மிருந்தார். இவர் அஞ்சித் தளர்வதைக்கண்ட பகவானுனவர் ஆ பா கோல்லியிலுள்ள சோளத்தை நன் றாய் விளையும்படி செய்தார் .ராக விளைவுக்கண்ட .அவ்வூரார்எல்லாரும் இவரை மதித்தார்கள் மதித்துக்கையளவி யறுத்து மோன சோளக் கொல்லை இப்படி விளைந்தது என்ன புதுமை யென்னு ம, ரமா பகவதபக்தராகையால் இவர்க்கு எல்லாம் லகுவழி வரும் எ ம்பும் யாவரும் சொல்லி மகிழ்ந்தார் கள். போதலே யானவர் தம் எளுதுகையாக ர்பில் சேர்ந்திருந்கிற காரியங் களை முழுதும், கேட்போ ரெல்லோர்க்கும் .அவர்களிஷ்டப்படி கொடுத்து மகிழ்வித்து, பின்னும் அதரச் சொல்லுகையை ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணை செய்து கொண்டே காலம் செய்திருந்தார். இப்படி யிருக்குங்காலத்தில், ராமேஸ்வரத என்னும் ஊரை யாள்வோரும், இவருக்கு அமைமாதனும் ஆகிய ஒருவரிருந்தார். அவர் தமது மனைவியாகிய ஸ்வாக்கியமாக கலந்த யலடைந்த பிறகு, அவர் புதல்வரிருவரும் தாமாக்கர்களாய், தமது குடும்பஸம்ரக்ஷணம் செய்யாமல் யதேச்சையாய்த் திரிந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் அப்படித் திரிவதனுல், அவர்களுடைய ஊழியக்காரர்களும், ஹாசி யென்னும் பெயருள்ளவரும் ஆகிய அம்மையார் அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். அந்தக் குடும்பத்துக்கு ஒரு குறைவில்லாமற் காப்பாற்றி வருபவ ராகிய இந்த அமைமையார், ஸ்ரீ ஹரி நாம ஸங்கீர்த்தனத்தை நிதமும் பகலும் இடைவிடாமற் செய்பவராயிருந்தார். இவர், சோளக் விகர்ல்லையைக் காவல் செய்துகொண்டிருக்கிற போதலே யானவர் செபகிற ஸ்ரீஹரிபஜனையை காள்தோறுமபோய்க் கேட்டு வருவார். ஒருநாள் இவர் போதலேயின் முதுகுத் தை நோக்கி, ஐயரே, அடியேன் ப்ராத்மையாயிருக்கவும், ஸ்ரீ ஹரியின் திருவடி யை யடையும்படி நீர் அடியேனுக்குத் திருத்தி யருளவேண்டும் என்று ப்ரார்த்திக்க, போதலே யானவர், ப்ராத்மையா யிருக்கிற இவள் எந்த ப்ரகா ரம ஸ்ரீஹரியின் திருவடிக்குரியவளாவாள் என்று யோசித்து, அந்த அம்மை யாரை நோக்கி, நீ, நினைந்தோறும் ஸ்ரீபகவந்நாமஸ்மரணை செய்துகொண்டும், ஏகாதசி விரதத்தை அநுஷ்டித்துக்கொண்டும், என்னிடம் வந்து ஸ்ரீஹரி பஜனை செய்வதைக் கேட்டுக் கொண்டும் இருக்கவேண்டும்; இப்படி நீ செய்

வத்தற்குத் தடை கேரிடா திருக்கும்படி உன்னை யேவல் கொள்ளுகின்ற எது மாகருணாடய உத்திரவு பெற்றுக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்து வரு வாயானால், நீ ஸ்ரீலக்ஷ்மீகாதராகிய பகவானுடைய திருவடிக்கு உரியவனா வாய் என்று சொன்னார். அதைக் கேட்ட அம்மையார், அப்படியே செய்கி றேனென்று சொல்லித் தம் வீட்டுக்கு வந்து, இடைவிடாமல் ஸ்ரீஹரிநாம ஸ்மரணை செய்துகொண்டும், வீட்டு வேலைகளைத் தடையில்லாமற் செய்து கொண்டும், ஏகாதசி விரதத்தை விடாமல் அநுஷ்டித்துக்கொண்டும், யஜமா னர் உத்திரவு பெற்றுப் போதலே யானவர் வாழ்கின்ற ஊருக்குவந்து, ஏகா தசி ராத்திரிகளில் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநத்தைக் கேட்டுகொண்டும் இருக் கிறார். இப்படி யிருக்குங்காலத்தில், ஒருநாள் மாயபுரத்திலிருந்து வருகிற வர்களில் ஒருவன் பாமபுகடித்திறந்தான். அதைக் கண்டவர் யாவரும் ஒரு மிக்கக் கூடி அவனைத் தூக்கிக் கொண்டுவந்து, போதலே யானவர் ஸ்ரீஹரி பஜனை செய்துகொண்டிருக்கிற இடத்தில் கிடத்தி, இவர் செய்கிற ஸ்ரீஹரி பஜனையின் மஹிமையால் இவன் பிழைத்தாலும் பிழைக்கலாமென்று நம்பி யிருந்தார்கள். போதலே யானவர் அவர்களை நோக்கி, ஸ்ரீஹரிநாமம அமுதி னும சிறந்தது, ஆதலால் நீங்களெல்லாம கைகொட்டிக்கொண்டு, ஸ்ரீ ஹரி நாமத்தைச் சொல்லுங்கள் என்றார். அப்படியே அவர்கள் கைகொட்டிக் கொண்டு ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தநம் செய்கிற காலத்தில், சவமாய்க் கிடக்கிற இவனும் நமமோடு கூடிக் கைகொட்டாமலும் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்யாமலும இருக்கிறானேயென்று பேசிக்கொண்டார்கள். அதைக்கேட்ட போதலே யானவர், அந்தப் பிணத்தை நோக்கி, மனிதராகப் பிறந்தவர்கள் ஸ்ரீ ஹரி நாமங்களைக் கை கொட்டிக்கொண்டு பாடுதல் சிறந்தது, இதிலும் சிறந்த பொருள் வேறொன்று மில்லையென்று உயிருள்ளவர்களுக்குச் சொல் லுவதுபோலச் சொன்னார். இவர் இபபடிச் சொன்னதைச் சர்வாந்தர்யாமி யாகிய பகவான் அறிந்து, இந்தச்சவம பிழைத்துப பேசாமற்போனால், என் பேருக்கும் என் அடியார்க்கும் தாழ்வு நேரிடும் என்று திருவுளங்கொண்டு, யமனை நினைக்க, உடனே அவன் வந்தான். அவனை நோக்கி, இந்தச் சவத்தி னுள்ளே யிருந்த உயிரை முன்போலிருக்கச் செய்யென்று நியமிக்க, அப்படி யே, யமனுனவன் அந்தச் சவத்துக்கு உயிரைக் கொடுக்க, அந்தச் சவமா யிருந்தவன் பிழைத்தெழுந்து, தாசருக்கெதிரே, தன் நாவினால் பகவந்நாமங் களை யுச்சரித்துக் கைகொட்டி ஆநந்தக் கூத்தாடினான். அதைக்கண்ட யாவரும் கைகொட்டி ஆநந்தக் கூத்தாடினார்கள். இதைக்கண்ட போதலே யானவர், பகவானைக் குறித்து, சவமா யிருந்ததை யறியாமல் தூங்குகிறவ னென்று நினைத்து, ஸ்ரீஹரிநாமங்களைச் சொல்லென்றேன், அப்படி அடி யேன் சொன்னசொல் பழுதாகாமல், அவனைப் பிழைக்கச் செய்தருளினாய், ஒருபோருட்டன்மை யில்லாத என்னையும் ஒருபொருளாக்கி உனக்காட்பட் டிருப்பாய், உன்பேரருளிருந்தவா றென்னென்று ஆநந்தக் கண்ணீர் தளும்ப நின்றார். பிறகு சூரியோதயத்துக்கு முன்னே விட்டலப்பெருமானுக்கு

ஹாரதி செய்து, பிரஸாதம் கொடுக்க யாவரும் பெற்று மகிழ்ந்து, திருமாலே இந்த அவதாரமாய் வந்தாயென்று தாசரைப் புகழ்ந்து கொண்டாடித் தங்கள் தங்களிடங்களிற் போய்ச் சேர்ந்தார்கள்.

இப்படி பிருகே நடந்த செய்திகள் யாவுங் கண்ட ஹாஜி யென்பவர் ஸ்ரீஹரியின் சரணாரவிந்த த்யானம் செய்துகொண்டு இருந்தார். இப்படி மூன்று வருஷ காலஞ் சென்ற பிறகு, முஸ்தபா என்பவர் பெற்ற புதல்வரிருவரும் காளைப்பருவ மடைந்து, தமமிடத்திலுள்ள பொருள்களை யெல்லாம் பாகித்துக்கொள்ள விரும்பி, வேலைக்காரியை ஒரு பொருளாதலால் இந்த ஹாஜியையும் விற்றுப் பொருளாக்க நினைத்தார்கள். இவர்களுடைய எண்ணத்தை யறிந்த ஹாஜி யென்பவர் ஸ்ரீஹரியை த்யானித்து ஸ்வாமி, இவர்கள் என்னை விற்றுவிட்டால் பிறர் வாங்கக்கூடுமே; அப்போது அடியேன், தாசரைப் பிரியவேண்டிவருமே என்று நடுங்க, இதைத் தாசரறிந்து, நீயென் துக்கிக்கிறாய் வருத்தகாலத்தில் எது கடக்கவேண்டி யிருக்கிறதோ அந்தக் காலத்தில் அது கடந்தே தீரும், அதைத் தடுக்க முடியாதவனாநீர். அதைத் தெரிந்த ஹாஜியானவர், அடியேனை நீரே விலைக்கு வாங்கிக் கொண்டால் தேவரீருடைய ஊழியம் செய்துகொண்டு காலங் கழிப்பேனென்று விண்ணப்பித்திக்க, அப்போது போதலே யானவர், என்னிடத்தில் பொருளில்லையாதலும், ஸ்ரீபண்டரிநாதருடைய திருவடியைப் பற்றியிருக்கிற எனக்கு ஒரு குறைபாடில்லை, என் கொல்லையை விற்றாயினும் உன்னைக் கொள்வேன், நீ யழுச்சவேண்டியதில்லை, நீ உன்னூருக்குப்போ, நான் உன் பின்னே வருகிறேன் என்று சொல்லக் கேட்ட ஹாஜியானவர், மனமகிழ்ச்சியோடு விட்டுக்குப்போனார். அதன்பிறகு ஸ்ரீஹரிதாசராயபோதலேயானவர் தமது மைத்துனரிருக்குமூருக்குப்போய் அவர்களைக் கண்டு, நீங்கள் ஹாஜியை விறகப்போகிறதாகச் சொல்லிப்பட்டி அவரை நான் விலை கொடுத்து வாங்க வந்தேன் என்றார். அவர்கள் அதைக்கேட்டவுடனே மிகவும் சோகங்கொண்டு, அயலார்க்குச் சுமார் கொடுத்தாவது கொடுப்போம், நீர் விலை கொடுத்தாலும் உமக்குக் கொடுக்கமாட்டோம என்றார்கள். இதை வீட்டுக்குள்ளிருந்து கேட்ட ஹாஜி, இப்படி யெல்லாம் கடப்பதற்குக் காரணம் என்னழிவினையாமென்று மனம்வருந்துவதைத் தாசர் அறிந்து, நீ வருந்தவேண்டியதில்லை யென்று சொல்லி, மேலும் பலபேருக் கெதிரே நின்று, நான விடோபாவவ யனுபாபி உன்னை வாங்குமபடி செய்கிறேன் என்று தம தூருக்குப்போனார். இவர் சொன்னதைக் கேட்டவர்கள் யாவரும் இவர்க்கு ஸ்ரீபண்டரிநாதர் வசீப்பட்டிருக்கையால் இவர் சொன்னபடியே நடக்குமென்று பேசிக்கொண்டார்கள். இப்படி யிருக்க, இதைத் தாசருடைய மைத்துனர் இருவரும், இந்த ஹாஜியைத் தாசர் விலைகொடுத்து வாங்குவதற்கு முன்பே நாம் பிறர்க்கு விற்றுப் போடுவோ மென்று தீர்மானித்து, வாங்குவோரைத் தேடினார்கள். அப்போது ஒருவன் இருபத்தைந்து விராகன் கொடுத்து வாங்குவதற்குச் சம்மதித்து வந்தான். அப்போது ஹாஜியா